தமிழின் மறுமலர்ச்சி

நூற்களஞ்சியம்: தொகுதி-2.

வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்

பேராசிரியர்

எஸ்.வையாபுரிப் பிள்ளை

வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம்

இரண்டாம் தொகுதி

தமிழின் மறுமலர்ச்சி

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

நூற்றாண்டு நினைவு வெளியீடு-2

வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1989

உரிமை பதிவு

விலை : ரூ. 42/-

கிடைக்குமிடங்கள் :

1. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், 'ஸ்வப்னகம்', 2, 4-வது குறுக்குச் சாலை இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028

2. தமிழ்ப் புத்தகாலயம்
58, T.P. கோயில் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-600 005

3. பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை
சென்னை-600 108

இத்தொகுதி மைய அரசின், கல்வித்துறை (மொழிகள் பிரிவு) வழங்கிய நிதி உதவி பெற்று வெளியிடப் பெறுகிறது.

Published with financial assistance from the Government of India, Department of Education, vide, sanction No. F-4 — 35/87 - L.G. cell dated 11-2-88 and copyright vests with the Society·

தமிழ்நாடு அரசும், சென்னை பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் நிதி உதவி அளித்துள்ளன.

அச்சிட்டோர் : ரெக்ஸ் பிரிண்டர்ஸ், சென்னை-4

முகவுரை

தமிழாய்வுலகில் ஒரு புது யுகம்

தமிழாய்வுலகில் ஒரு புதுயுகத்தைத் தோற்றுவித்தவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அறிவியல் வழி ஆய்வுமுறையில் இவர் முன்னோடியாக விளங்கியவர். விஞ்ஞான அடிப்படையிலான அணுகுமுறையை மேற்கொண்டு பரந்து கிடக்கும் நம் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்துவந்தவர்.

தமிழ்ப்பேரகராதியின் (லெக்ஸிகன்) பதிப்பாசிரியராக அமர்ந்து (1926-36) சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சிறப்பான அகராதியைப் பிறமொழியாளரும் போற்றும் வகையில் வெளிக்கொணர்ந்தார். பின்னர், இப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராகவும் (1936-46), திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1951-54) பணிபுரிந்து கணக்கற்ற ஆய்வுநூல்களைத் தமிழ்-உலகிற்குத் தந்துள்ளார். இவர் சம்ஸ்கிருதம், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற பல மொழிகளையும் கற்றறிந்தவராகையால் உலக இலக்கியங்களிலுள்ள தலைசிறந்த நூல்களையெல்லாம் ஆய்ந்து தெளிந்து ஆழ்ந்தகன்ற புலமை பெற்றவர்; அயராது, உண்மை காண முயல்வதனையே தம் வாழ்க்கையில் பெரு நோக்கமாகக் கொண்டவர். விருப்பு-வெறுப்பு இன்றி, உள்ளதை உள்ளபடி ஆராய்வதற்கான துறவு மனப்பான்மையும் உடையவர். இத்தகைய சிறப்பியல்புகளுக்கு இருப்பிடமாகத் திகழ்ந்த பேராசிரியர் தம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்குச் செய்துள்ள தொண்டு மகத்தானது. இவர் பதிப்பித்த மனோன்மணீயம், புறத்திரட்டு, நாமதீப நிகண்டு முதலிய பல நிகண்டுகள், சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி மூலம் முதலான 40-க்கும் மேற்பட்ட நூல்கள் பேராசிரியர் தலைசிறந்த பதிப்பாசிரியர் என்பதை விளக்கவல்லன. இவர் பழமை மட்டும் போற்றியவரல்லர். சிறுகதை, நாவல் எனப்படும் நவீனம் என்னும் புதுமை இலக்கியங்களையும் படைத்தவர். மரபுவழிச் செய்யுட்களை இயற்றுவதிலும் இவர் வல்லவராயிருந்தவர்; பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந்தவர்.

இப்போது இவர் இயற்றிய நூல்கள் கிடைக்கப் பெறாத ஒரு சூழலில் அவற்றை வெளிக் கொண்டுவரும் முயற்சி இப்பொழுது தொடங்கியிருக்கிறது. இதற்கான குழு ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பேராசிரியரின் நெருங்கிய நண்பரும் ஆங்கிலப் பெரும் பேராசிரியராகப் புகழ் பெற்று விளங்குபவருமான பத்மபூஷன் கே. சுவாமி நாதன் தலைமையில், 'பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்' பதிவு செய்யப் பெற்று 1987 ஆம் ஆண்டு இறுதியில் நிறுவப் பெற்றிருக்கிறது. பேராசிரியரின் நூல்களைப் பதிப்பிப்பதற்குப் பேராசிரியர் மு. அருணாசலம், பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, திரு. ஆர். திருமலை, I.A.S. (ஓய்வு) ஆகிய மூவரும் அடங்கிய பதிப்பாசிரியர் குழுவும் அமைந்துள்ளது. ஆராய்ச்சிப் பேரறிஞராகிய பேராசிரியர் எழுதிய நூல்களினின்றும் கட்டுரைகளைப் பொருள் அடிப்படையில் அடைவு செய்து, 'வையாபுரிப்பிள்ளை நூற் களஞ்சியம்' என்னும் வரிசையில் முதல் தொகுதியாக, 'இலக்கியச் சிந்தனைகள்' என்பதும் இரண்டாம் தொகுதி யாகத் 'தமிழின் மறுமலர்ச்சி' என்பதும் பதிப்பிடப்பெற்று இப்போது வெளிவருகின்றன.

இரண்டாம் தொகுதி : ஐந்து பகுதிகள்

காலந்தோறும் தமிழில் புதுமைகள் மலர்ந்து பெருகி வருதலைத் தெரிவிக்கும் மொழி வரலாறு தொடர்பான கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. இத்தொகுதிக்குப் பேராசிரியர் தம் முதல் கட்டுரைக்குச் சூட்டிய 'தமிழின் மறுமலர்ச்சி' என்னும் பெயரே வைக்கப்பெற்றுள்ளது. இத்தொகுதியில் தமிழின் மறுமலர்ச்சி, சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம், நிகண்டுகள், அகராதி என ஐந்து பகுதிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனித்தனித் தலைப்புப்பக்கம் பெற்றனவாய் தனிநூல் போலவே காட்சி யளிக்கின்றன.

மறுமலர்ச்சி

''ரிநேஸான்ஸ்' (renaissance) என்னும் ஒரு பிரெஞ்சுப் பதத்தை ஆங்கில இலக்கிய நிபுணர்கள் வழங்கி வருகிறார்கள். இதனையே 'மறுமலர்ச்சி' எனத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இச்சொல் குறித்துப் பேராசிரியர் பிள்ளையவர்கள் 'மறுமலர்ச்சியும் கவிமணியும்' என்னும் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

''இதனை மொழிபெயர்த்தவர் இன்னாரென்று தெரிய வில்லை. யாராயிருந்தாலும் அவர் கவித்துவ உணர்ச்சி யுடையவர். சுமார் 1920-ல் இப்பெயரை எனது நண்பர் பி.ஸ்ரீ. ஆச்சார்யா வழங்கியுள்ளார் என்று தெரிகிறது. பெரும்பாலும் இப்பெயரை அமைத்தவர் காலஞ்சென்ற தேசபக்தர் வ.வே.சு. அய்யராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.''

இச்சொல் நம் பேராசிரியர் பதிப்பித்த தமிழ் லெக்ஸி கனில் இடம் பெறாத ஒரு புதுச்சொல். பேராசிரியர் இக்கட்டுரைத் தொகுதியை வெளியிட்ட பின்னர் இப் பெயர் பிரசாரம் எய்தியது. 'மறுமலர்ச்சித் தமிழ் வாசகம்' என்னும் பெயரில் ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தார் பாடநூல் வரிசை ஒன்றும் பின்னர் வெளியிட்டனர்.

பேராசிரியர் தரும் விளக்கம்

இனி, மறுமலர்ச்சி என்பது குறித்துத் 'தமிழின் மறு மலர்ச்சி' நூலின் முன்னுரையில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள விளக்கங்களை நோக்கு வோம்.

''குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில், குறிப்பிட்ட ஒரு பெயரைச் சூட்டி ஒவ்வோர் இயக்கம் இப்போது தொடங்குவதை நாம் பார்க்கிறோம். இது போன்றதன்று மறுமலர்ச்சி. வெகுகாலமாக வெளியிற் புலப் படாதேயிருந்து அமைதியாய்ப் பரவி, சமுதாயத்தை உள்ளூர இயக்கிவரும் பலசக்திகள், சிற்சில காரணங்களால் திடீரென்று வேகங் கொண்டு எழுந்து முழுவன்மையோடு சிலர் வாயிலாக வெளிப்பட்டு, சமுதாயம் முழுவதும் அதிர்ந்து எதிரொலிக்கச் செய்து, மேற்கதியில் விரைந்து பாயும் நிலைமையே மறுமலர்ச்சி.

''தமிழுலகில் இந்த மறுமலர்ச்சி சென்றுள்ள நெறி கவனித்தற்குரியது. வெகுகாலமாக, பல நூற்றாண்டுகளாக ஜீவநதியாய் ஓடிக்கொண்டிருந்த தமிழ் கம்பன் காலத்தில் பெருக்கெடுத்துப் பாய்ந்து தனது பூரண எல்லையை அடைந்தது. பின்னர் சிற்றாறாகவும், வாய்க்கால்களாகவும் ஓடி உயிர் வாழ்ந்து வந்தது.

''இதன் பின்னர், சேற்று நிலங்களில் இறங்கித் தேங்கி, அங்கங்கே கட்டுக்கிடையாய் நின்றது. பௌராணிக சமயமே நான் இங்கே கருதிய சேற்று நிலம். இச் சமயமும், பிற்காலச்

சமய நெறி நூல்களும், இவை பற்றி எழுந்த வாதப் பிரதி வாதங்களும், இலக்கணங்களும், உரைகளும், கண்டனங்களும், இவற்றிற்கு இடங்கொடுத்துவந்த மனப்பான்மையும் தமிழை நசித்துக்கொண்டிருந்தன. வடமொழியும் இந் நாசத்துக்குத் துணைபுரிந்தது. அறிவு சுதந்திரமாக இயங்க இடமில்லை. சுமார் 100 வருஷங்களுக்கு முன்வரை, கட்டுக்கிடை வாழ்வில் தமிழுலகு பிணிப்புண்டிருந்தது.

''இவ்வாறு அசைவின்றிக் கட்டுக்கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர்பெற்று, புதிய நெறிகளில் செல்வதற்கு நமது கலைப் பண்பாடுகளினின்றும் முற்றும் வேறுபட்ட ஒரு கலைப் பண்பாட்டின் தூண்டுதல் அவசியமாயிருந்தது. ஆங்கிலேயரது கூட்டுறவினால், இத் தூண்டுதல் நமக்குக் கிடைத்தது. புதிய விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் புகுந்து, தமிழுலகை உள்ளும் புறமும் புதைத்திருந்த இருட்படலத்தைக் கீறி நீக்குவதாயிற்று. புதிய இலக்கிய முயற்சியும் தலைகாட்டத் தொடங்கிற்று. ஆனால், பழைய எமன் போய் புதிய எமன் வந்துதோன்றிய கதையாய் முடிந்தது.

''ஆங்கிலேயரது கூட்டுறவு வரவர நெருங்கி, முடிவில் அவர்கள் நமக்கு எஜமானராகவும் நாம் அவர்களுடைய அடிமைகளாகவும் ஆகிவிட்டோம். இந்த அடிமைத்தனம் நம்மைக் கீழ்நிலையில் தள்ளி நமக்குக் கேடுதருவதாயிற்று. கல்வி போலிக்கல்வியாயிற்று. அறிவு போலியான பகட்டு அறிவாயிற்று; கலைப் பண்பாடு போலிக் கலைப்பண்பாடு ஆயிற்று; தமிழும் போலியாயிற்று. நமது வாழ்வும் போலியாய் முடிந்தது.

''அடிமைத்தனம் ஒழிந்தாலன்றி நமக்கு உய்தியில்லை என்பது தெளிவாயிற்று. இவ் உணர்ச்சியின் விளைவாகத் தேசியக் கிளர்ச்சி தோன்றிற்று. ராஜபக்தி, தெய்வ பக்தி, குரு பக்தி முதலியன எல்லாம் தேச பக்தியில் அடங்கிவிட்டன. 'வந்தே மாதரம்' என்பதே நமது தாரக மந்திரமாகக் கொள்ளப்பட்டது. இத் தேசிய மறுமலர்ச்சியில் ஈடுபட்டு, தேசிய ஸேவையில் பேரார்வம் கொண்டு பெரு முயற்சி செய்து வந்தவர்களுள் ஒருவர் பாரதி. ஆனால், வாய்ப்பூட்டு கைப்பூட்டு முதலியன பூட்டி, அடக்குமுறை அமுலினால் நம் அடிமைத் தனத்தை நமக்கு அடிக்கடி உணர்த்தி, ஆங்கில அரசு நிகழ்ந்து வந்த காலம் அது. பாரதியின் முயற்சி தடைப்பட்டது; ஆனால்,

ஆர்வம் சிறிதும் தளரவில்லை. இந்த ஆர்வம் அவருடைய ஆத்மசக்தி முழுவதும் பெற்றுத் தமிழின் மீது சென்றது. தமிழ் புத்துயிர் பெற்றது. சங்க காலத்திற்குப்பின் இது வரையில்லாத தன் மதிப்போடும் ஆண்மையோடும், ஊக்கத் தோடும், தலை நிமிர்ந்து பெருமிதத்துடன் செல்வதாயிற்று.

''இப் பெருமிதம் அகங்காரத்தால் வந்ததன்று. நீண்ட காலமாய் 'ஏமப் பெருந்துயில் மந்திரத்திற்' பட்டுக் கிடந்த தமிழ் விழித்துக் கொண்டது; தன்னை உணர்ந்தது. விஞ்ஞானப் புத்தறிவினால்தான் உரம் பெறுதல் வேண்டும் என்ற கடமையையும் உணர்ந்தது. தமிழின் மறுமலர்ச்சி வெளிப்படையாகத் தோன்றிற்று. தேசம் உதயசூரியனைக் கண்டு ஏற்றெழுந்த சமயத்தே தமிழும் புதிதாக மலர்ந்து இனிய மணம் கமழ்வதாயிற்று.''

தமிழின் மறுமலர்ச்சி

நம் தமிழ் மொழி காலந்தோறும் புதுப்புதுக் கோலம் பூண்டு வளர்ந்து வந்துள்ள வரலாறுகளை விளக்கும் கட்டுரைகள் அடங்கிய தொகுதியைத் 'தமிழின் மறுமலர்ச்சி' என்னும் பெயரில் 1947-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பேராசிரியர் முதன் முதலில் வெளியிட்டார். இதன்பின் 1953ஆம் ஆண்டு இம் முதற்பதிப்பிலுள்ள மூன்று கட்டுரைகளை நீக்கியும் மறுமலர்ச்சியோடு நேரடியான தொடர்புடைய நான்கு கட்டுரைகளைச் சேர்த்தும் இரண்டாம் பதிப்பினைப் புதுக்கி அமைத்தார்.

இந்த இரண்டாம் பதிப்பில் இடம் பெற்றிருந்த நவீன கவிதை, புதிய இலக்கிய முறை, புதிய இலக்கணம் என்னும் மூன்று கட்டுரைகளும் இப்பொழுது இப்பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவது 'தமிழர் பண்பாடு' என்னும் தொகுதியிலும், இரண்டாவது கட்டுரை. இப்பொழுது வெளிவந்துள்ள இலக்கியச் சிந்தனைகள் நூலின் முதற்பகுதியிலும் இடம் பெற்றுள்ளன. 'புதிய இலக்கணம்' என்பது ஏற்கனவே 'இலக்கணச் சிந்தனைகள்' என்னும் தனிநூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இம் மூன்றும் தவிர ஏனைய 12-ம் முதற்பகுதியில் இடம் பெற்றுள்ளன. கவிதை, கதைப் பாட்டு, சிறுகுழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள் என்னும் மூன்றும் முன்பு வெளிவந்த 'தமிழர் பண்பாடு' நூலிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. 'புதிய முயற்சி' என்னும் இறுதிக்கட்டுரை 'இலக்கிய விளக்கம்'

என்னும் நூலிலிருந்து எடுத்துக் கொள்ளப் பெற்றது. எனவே, இப்பொழுது 17 கட்டுரைகள் இம் முதற் பகுதியில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

இவற்றுள் முதல் மூன்று கட்டுரைகள் குறித்துப் பேராசிரியர் முன்னுரையில் தெரிவித்த கருத்துரை வருமாறு:

''பூர்வ வாசனை எளிதில் நீங்குவதில்லை என்று கூறுவர் நமது தேசத்து ஞானியர்கள். இதற்கு ஓர் உவமானமும் கூறுவார்கள்.

''இங்குளி வாங்கும் கலம்போல ஞானியால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்'

என்று சிவஞான போத வெண்பா கூறும். 'இங்குளி' என்ற வட சொல்லுக்குக் காயம் என்று பொருள். காயம் வைத்திருந்த பாண்டத்தில், அக்காயத்தை எடுத்துவிட்ட போதிலும் அதன் மணம் இருப்பதுபோல் பூர்வ வாசனையும் ஞானியரிடத்து நிற்பதாகுமாம். இதுபோல, தமிழின் பூர்வ வாசனை அதன் முற்போக்கிற்கு இடையூறாய் அமைந்து, மறுமலர்ச்சியின் மணத்தைத் தடைபடுத்தி வந்தது. இப் பூர்வ வாசனை இரண்டு வகை: ஒன்று கொள்கை; பிறிதொன்று செயல். பழந்தமிழ் வாதம், இலக்கண வாதம், வடமொழி வாதம் முதலாகிய பல கொள்கைகள் தமிழுலகில் புகுந்து தமிழுக்குப் பிணியாயுள்ளன. இவ்வகைக் கொள்கைகள் ஒழிந்து நல்லறிவு உதயமாய்த் தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியைப் போற்ற வேண்டும் என்பதுதான் முதற்கட்டுரையின் பொருள்.

''இனி, கொள்கையளவில் நில்லாது, செயலிலும் புகுந்து தமிழுக்குக் கேடுபயக்கும் சில முறைகளைக் கூறி, அவற்றினின்றும் தமிழ் விடுதலை பெற வேண்டும் என்று இரண்டாவது கட்டுரையில் வற்புறுத்தியிருக்கிறேன். பாரதியும் ஏனைய தேச பக்தர்களும் கனவு கண்டு கொண்டிருந்த சுதந்திரம் கிடைத்துள்ள நிலைமையில் தமிழுக்கு வேண்டும் சுதந்திரத்தைப் பற்றியது மூன்றாவது கட்டுரை. இம் மூன்று கட்டுரைகளும், பாரதியின் மறுமலர்ச்சிக்குப் பூர்வாங்கமாக வைக்கப்பட்டுள்ளன.''

இவற்றின் பின், 'பாரதியுகம்', 'பாரதியும் தமிழும்' என்னும் இரண்டு கட்டுரைகளும் பாரதியின் மறுமலர்ச்சித் தமிழ் குறித்து அமைகின்றன. அடுத்துவரும் 'தாய்மொழிப்

பற்றும் பிறமொழி வெறுப்பும்' என்பது, உலகெங்கிலுமுள்ள மொழிப் பற்றாளர்களிடத்துக் காணப்படுதலை விளக்குகிறது.

இவற்றை அடுத்து மறுமலர்ச்சியில் உடனே செய்ய வேண்டும் சீர்திருத்த முறைகளை விளக்கும் கட்டுரைகள் தொடர்கின்றன. ஏழாவது கட்டுரை எழுத்துப் பற்றியது; எட்டாவது கட்டுரை சொல் பற்றியது; ஒன்பதாவது கட்டுரை வசனம் பற்றியது. வசன நடைக் கருத்தோடு பெரிதும் ஒத்தியைந்து செல்வது. பத்தாவது மறுமலர்ச்சித் தமிழில், வளரும் மொழி: உரைநயம் என்னும் கட்டுரை.

வசன நடை வளர்ச்சியை அடுத்து செய்யுள் தொடர்பான நான்கு கட்டுரைகள் வைக்கப்பட்டுள்ளன. மறுமலர்ச்சியின் ஒரு கூறாகக் கருதத்தக்க இசைக்கலை வளர்ச்சி தமிழ்ப்பாடலுக்கு உதவியுள்ள முறைமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. மறுமலர்ச்சியும் கவிமணியும், என்னும் கட்டுரை குறித்துப் பேராசிரியர் பிள்ளையவர்கள் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார்கள்:

''மறுமலர்ச்சியின் ஒரு பகுதி புத்தறிவும் சுதந்திர உணர்ச்சியும், அயல் நாடுகளுடன் தொடர்புகொண்டு உலகெங்கும் சமாதானம் நிலவ வேண்டும் என்ற பேரவாவுமாம். காலம், இடம் முதலிய தொடர்பு யாதுமின்றி, மனிதனை மனிதன் என்ற நிலையிற் கொண்டு அவனது நலத்தைப் பேணுதல் மறுமலர்ச்சியின் மற்றொருபகுதியாம். மக்கள் நலம் பேணும் இக் கொள்கையைப் புத்த சரித்திர வாயிலாகவும், பிற நூல்களாலும் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்து, அதில் ஈடுபட்டுக் கனியும்படி கவிகள் இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.'' இவருடைய பணிகளின் சிறப்புக் குறித்து அமைந்தது 15-வது கட்டுரை.

'தமிழும் எதிர்காலமும்' என்னும் ஈற்றயல் கட்டுரையும் 'புதிய முயற்சி' என்னும் இறுதிக் கட்டுரையும் தமிழ் மறுமலர்ச்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பது குறித்துப் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள கணிப்புரையாகும்.

சொற்கலை விருந்து

இரண்டாவது பகுதி முதல் உள்ளவை சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம், இலக்கிய மணிமாலை,

இலக்கியச் சிந்தனைகள், அகராதி நினைவுகள் என்னும் நூல்களிலிருந்து எடுக்கப்பெற்றனவாம். இவற்றுள் 'சொற்கலை விருந்து' இரண்டாவது பகுதியாக அமைகிறது. இதில் ஏற்கனவே தொகுத்து வெளியிடப்பட்டிருந்த 17 கட்டுரைகளில் 'இலக்கியத்தில் மொழிவழக்கு' என்னும் கட்டுரை தவிர ஏனைய 16-ம் இடம் பெறுகின்றன. இப்பொழுது விடுத்த இந்தக் கட்டுரை 'இலக்கியச் சிந்தனைகள்' என்னும் முதல் தொகுதியில் முதற்பகுதியிலே 12 ஆவதாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

சொற்கலை விருந்தின் 16 கட்டுரைகளுள் முதல் 5 கட்டுரைகள் மொழியாராய்ச்சிபற்றியன. மனிதன் பேசக் கற்றுக் கொண்ட அதியற்புத இயல்பினை முதல் கட்டுரை விளக்குகின்றது. அடுத்து வரும் கட்டுரைகள் பேச்சுப்பிறந்த காலத்தோடுதான் நாகரிகமும் பிறந்தது என்பதனைப் புலப் படுத்துகின்றன. பேச்சும் மொழியும், சொல்லும் மொழியும், சொல்லின் வளர்ச்சி, சொல்லும் பொருளும் என்னும் கட்டுரைகளில் சொல் வளர்ச்சியுற்ற முறையையும், சொற்கள் பொருள் பொதிந்தனவாக அமைதலையும் பேராசிரியர் எடுத்துரைக்கின்றார். ஒருவனுடைய தாய்மொழி எதுவென் பதை நிருணயித்தல், சொல்லாராய்ச்சியில் நடைபெற்ற விநோதங்கள் பற்றியெல்லாம் தொடர்ந்து காணலாகும்.

'தமிழும் வைதிக வார்த்தைகளும்' என்னும் கட்டுரை சமயவளர்ச்சிக்கு வடமொழிச் சொற்கள் உதவியமை குறித்து விளக்குகின்றது. சங்க காலத்தில் வழங்கிய சொற்களோடு பாலிமொழி தொடர்புற்றிருந்ததைப் 'பாலிமொழியும் தமிழும்' என்னும் கட்டுரை தெரிவிக்கின்றது. 'தமிழும் மலையாளமும்' என்னும் கட்டுரை மலையாள மொழி தோன்றிய காலத்தை அறுதியிடுகின்றது.

சொற்களின் சரிதம்

மூன்றாவது பகுதியான 'சொற்களின் சரிதம்' முன்பு இப்பெயரில் வெளியிடப் பெற்ற தனிநூல். இது சிறிதும் மாற்றமின்றி அப்படியே எடுத்துக்கொள்ளப் பெற்றது. இதில் கழகம், களம், கண்வட்டம், பொழுது, முன்னிலைப் பெயர், தோடு, விருந்து, கந்தருவர், பஞ்சம், சாதுகை மாந்தர் என்பன ஆராயப்பட்டுள்ளன. காலங்காட்டுங் கண்ணாடியாக இச் சொற்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைச் சான்று காட்டிப் பேராசிரியர் தெளிவு படுத்து கின்றார். சொல்லாராய்ச்சி, நூல்களின் காலம் துணிவதற்

குரிய ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுதலைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுக்களால் நன்கு விளக்கியுள்ளார். இது குறித்துப் 'பொழுது' என்னும் சொல்லாராய்ச்சியின் முடிவுரையில் கூறும் கருத்து ஆய்வாளருக்கு ஒரு வழித்துணை. பேராசிரியரின் உரை வருமாறு :

''பொழுது என்ற சொல்லாராய்ச்சியினால் இலக்கியங்கள் தோன்றிய காலம் வரையறைப்பட்டு, இலக்கிய சரிதம் நமக்குப் புலப்படுகின்ற முறையை மேலே விளக்கினேன். இது முதற்படி, ஒரு மொழியில் மாத்திரம் ஒரு சொல் அடைந்துள்ள உருவ வேறுபாடுகளைக் கால முறையில் ஆராய்வதுடன் இம் முதலாராய்ச்சி நின்று விடுகிறது. இதற்கு மேலாக இம் மொழியின் கிளை மொழிகளிலே இச் சொல் வழங்கு மாற்றையும் அதன் உருவ வேறுபாடுகளையும் அறிதல் வேண்டும். இது இரண்டாவது படி. இவ்வாராய்ச்சியில் இச் சொல்லின் பூர்வ சரித்திரம் நுண்ணிதின் விளங்குதலோடு கிளை மொழிகளின் சரித்திரக் கூறுபாடுகள் சிலவும் புலப்படுவனவாம். இங்ஙனமே சொல்லாராய்ச்சி மேலும் மேலும் செல்ல வேண்டுவதாயுள்ளது. தமிழறிஞர்கள் இந் நெறியில் ஆராய்ந்து உண்மை காண முயல்வார்களாயின் தமிழாராய்ச்சி மிக்க பயன் விளைப்பதாகும்.''

நிகண்டுகள்

நான்காம் பகுதியும் ஐந்தாம் பகுதியும் சொற்பொருள் விளக்கம் தரும் நூல்களைப் பற்றிய வரலாறுகள் ஆகும். நிகண்டுகள் பற்றிய நான்காம் பகுதிக் கட்டுரைகள் 'இலக்கிய மணிமாலை' என்னும் நூலில் நான்காம் பகுதியாக ஏற்கனவே அறிமுகமானவையே. யாருமே சிந்திக்காத காலத்தில் ஆராய்ச்சிப் பேரறிஞராகிய பிள்ளையவர்கள் நிகண்டுகளின் ஆராய்ச்சியை மேற்கொண்டார். தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராகப் பணியாற்றியகாலத்தில் புதியசொற்களை எடுத்தாளும் நிலையிலும் சொற்பொருள் துணிகின்ற நிலையிலும் நிகண்டுகளின் பயன்பாட்டை உணர்ந்தார். வெளிவந்தனவும் வெளிவராதனவுமான நிகண்டுச் சுவடிகளையெல்லாம் பல இடங்களிலும் தேடித் தொகுத்தார். 'தமிழகராதியின் ஆதார நூற் தொகுதி' என்னும் வரிசையில் நாமதீப நிகண்டு முதலிய நான்கு நிகண்டு நூல்களையும் வெளியிட்டார். நாமதீப நிகண்டையும் பொதிகை நிகண்டையும் தமது சொந்தச் செலவிலேயே முதலில்

வெளியிட்டார். பின்னர் 'கயாதர நிகண்டை' சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழிப் பதிப்பித்து வெளி வரச் செய்தார். 'அரும்பொருள் விளக்க நிகண்டு' மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளிவந்தது. இந் நிகண்டின் முன்னுரையில் தமிழ் நிகண்டுகளைக் குறித்து விரிவான வரலாறுகள் தரப்பட்டுள்ளன. நிகண்டுகளைப் பற்றி எவருமே இத்துணையளவாக ஆழ்ந்து ஆய்வு செய்யவில்லை என்றே துணிந்து கூறலாம். திவாகரம், பிங்கலம், கைலாச நிகண்டு என்பவற்றைச் சுவடிகளுடன் ஆராய்ந்து அச்சிடும் நிலையில் படிகள் எடுத்தும் வைத்திருந்தார். நிகண்டுகளைப் பதிப்பித்தலும் அவற்றை ஆராய்தலும் மிக மிக இன்றியமையாதவை என்பதனைப் பேராசிரியர் அவர்கள் மிகவும் வற்புறுத்தியுரைத்துள்ளார்கள்.

''அரும்பொருள் விளக்க நிகண்டு'', தவிர இன்னும் பல நிகண்டுகள் வெளிவர வேண்டியனவாயுள்ளன. நிகண்டுகளனைத்தையும் பயன்படுத்தித் தொகுக்கப் பெற்ற அகராதி இதுவரை வெளிவரவில்லை. பல வகையானும் நிரம்பிய பேரகராதி வெளிவருதற்குரிய பெரு முயற்சியைத் தமிழ் நாடு முழுவதும் ஒரு முகப்பட்ட உள்ளத்துடன் மேற்கொள்ளும்படி இறைவன் அருள்புரிக .... ..நூதன ஆங்கிலப் பேரகராதியோடு எவ்வகையால் நோக்கினும் ஒத்து நிற்கக்கூடிய அகராதிப் பொருள்கள் நமது தமிழன்னையிடத்தே உள்ளன. அவற்றையறிந்து பயன்படுத்தும் மக்களை அவள் பெற்றிலள் என்று உலகம் பழியாமைப் பொருட்டுத் தமிழ் மக்களாயுள்ளோர் அனைவரும் ஒரு முகமாக உழைத்தல் வேண்டும். இப் பெரு முயற்சியில், எனது ஆற்றலுக்கேற்றபடி உழைத்து வருகிறேன். தமிழகராதிக்குரிய மூல நூல்களை ஒவ்வொன்றாக வெயியிடக் கருதுகிறேன் ''

இதனால் நிகண்டுகளின் ஆய்வில் பேராசிரியர் அவர்கள் எத்துணை ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வரும்.

அகராதி

அகராதிக் கலைபற்றியது இத் தொகுதியின் ஐந்தாவது பகுதி. இதில் இடம் பெற்றுள்ள முதல் மூன்று கட்டுரைகளும் 'இலக்கியச் சிந்தனைகள்' என முதன் முதலில் 1947-ல் வெளியிடப் பெற்ற நூலிலிருந்து எடுத்து இங்குச்

சேர்க்கப் பெற்றன. அடுத்து வரும் இரு கட்டுரைகளும் 'அகராதி நினைவுகள்' என்னும் நூல் தொகுப்பில் முதல் இரண்டு கட்டுரைகளாக வெளியிடப் பெற்றனவாம். அகராதிக்கலை தொடர்பான பல்வேறு செய்திகளையும் இப்பகுதியில் காணலாம்.

தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராக விளங்கிய பேராசிரியர் அகராதிகளைப் பற்றி விளக்குகின்றார். ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனத் தமிழில் வெளிவந்த அகராதிகளின் வரலாறுகள் எல்லாம் விளக்கமாகத் தந்துள்ளார். அகராதி ஒன்றனை வெளியிடுவதின் அருமைப்பாட்டினை 'நூதன ஆங்கிலப் பேரகராதி'யில் உணர்த்துகிறார். அகராதி நினைவுகள் பற்றிய கட்டுரைகள் அவர் தமிழ்ப் பேரகராதியைப் பதிப்பித்த காலத்தின் நினைவலைகளாக மலர்கின்றன. தமிழ்ப் பேரகராதி (தமிழ் லெக்ஸிகன்) எவ்வகையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பல்வேறு வகையான இடர்ப்பாடுகளைக் கடந்து உருவாக்கப் பெற்றது என்பதை விளக்குகின்றார். குறுகிய காலத்தில் அகராதியை வெளிக்கொணர்ந்த பாங்கினையும் அவர்தம் அனுபவ வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

அகராதி வேலை ஒரு மொழியில் எப்பொழுது தொடர்ந்து நடந்து வரவேண்டிய ஓர் இன்றியமையாத பணி என்பதனைப் பேராசிரியர் அறிவுறுத்துகின்றார்:

''மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது. இம் மொழி வளர்ச்சிக்கு, சொல்லின் வளர்ச்சி ஓர் சிறந்த அறிகுறியாயுள்ளது. நமது வாழ்க்கை வளமுறுவதானால் சொற்கள் பெருகிக்கொண்டு தான் செல்லும். அகராதி வேலைக்கும் முடிவில்லை. குறைபாடுகளைத் திருத்துவதும், சொற்களுக்கு ஜாதகம் கணிப்பதும், புதுச் சொற்களைச் சேர்ப்பதும், சாஸ்திர சங்கேத மொழி-அகராதிகளையும், கொடுந்தமிழ் திசைச்சொல் பற்றிய அகராதிகளையும், சொல்-உற்பத்தி அகராதிகளையும் இயற்றுவதும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்களாகும். இவ்வேலைகள் இடையீடின்றி நடைபெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உள்ளம் இதிலே செல்வதாக!''

ஆராய்ச்சி நெறி

பேராசிரியர் பிள்ளையவர்களின் ஆராய்ச்சி நெறி பற்றிச் சில சொல்லியாக வேண்டும். ஆராய்ச்சியுலகில் புதிய சான்றுகள் கிடைக்கும் போது ஏற்கெனவே கொண்ட முடிபுகள் மாறுவதும் புதிய முடிபுகள் ஏற்படுவதும்தான் அதன் நியதி. இவ்வுண்மையை நன்கு உணர்ந்திருந்த ஆராய்ச்சிப் பேரறிஞராகிய பேராசிரியர் கால வரையறை செய்யும் போது சில இடங்களில், ''மறு ஆராய்ச்சி வரும் வரை இம் முடிபு களை ஏற்றுக் கொள்ளலாம்'' என்று முன்னெச்சரிக்கையுடன் எழுதுவார். அறிவியல் வழி அவர் செய்துவந்த ஆய்வுமுறை ஆய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். 'திராவிட மொழிகளில் ஆராய்ச்சி' என்றும் நூலில் பேராசிரியர் நமது மொழிகளில் ஆராய்ச்சிகள் செய்துள்ள போக்கினையும் இனிமேல் ஆராய்ச்சி நடத்த வேண்டும் பொருள்கள் பற்றியும் முறைகள் குறித்தும் விரிவாக விளக்கியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

பதிப்புநிலை

கட்டுரைகளின் பொருள் தெளிவுபட விளங்கும் வண்ணம் பொருட் போக்கிற்கு ஏற்புடைய துணைத் தலைப்புகள் தந்திருப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. மேற்கோட் பாடல்கள் நன்கு துலங்கும் வகையில் அவற்றிற்குப் பொருட்பகுதியிலிருந்தும் வேறுபட்ட பெரிய எழுத்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தொகுதியில் மீண்டும் வரும் கருத்துக்களும் மேற்கோள்களும் இயன்றவரை தவிர்க்கப் பட்டுள்ளன. இருப்பினும் ஒரு சில இடங்களில் வெவ்வேறு நோக்கமும் பயனும் பற்றி அவை இடம் பெறு கின்றன என்பதும் கருதற்பாலது. கற்பவர்க்கு நூற் பொருள்களை எளிதிற்காணும் வகையில் 'பொருட் குறிப்பு அகராதி' ஒன்றும் நூலின் இறுதியில் இணைக்கப் பெற்றிருக்கிறது.

நன்றியுரை

பேராசிரியர் நினைவு மன்றத்தின் வெளியீடுகளைப் பதிப்பிக்கப் புரவலராயும், ஆயுள் உறுப்பினராயும், மன்ற உறுப்பினராயும் நிதி உதவிய அன்பர்கள் பலராவர். இவர்கள் யாவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றி தெரி விக்கிறோம். மேலும் மைய அரசு (மனித வள மேம்பாட்டு அமைச்சகம்) கல்வித்துறையும், தமிழக அரசின் தமிழ்

வளர்ச்சித் துறையும், சென்னைப் பல்கலைக் கழகமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் நிதி உதவி ஆதரவு தந்துள்ளன. இவ்வாறு பலவகையாலும் இத்தொகுதிகள் வெளிவரக் காரணமாயிருந்த அனைவருக்கும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் மேலும் உதவி தந்து மன்றத்தை அரவணைப்பார்களாக!

ஆராய்ச்சிப் பேரறிஞராகிய வையாபுரிப் பிள்ளை நூற்றாண்டு நிறைவு நாள் 1991-ல் வருகிறது. அதற்குள் நூற்களஞ்சியத்தின் பிற தொகுதிகளும் அவர் பதிப்பித்த அரிய நூல்களும் வெளி வர இருக்கின்றன. தமது வாழ் நாளில் ஏறத்தாழ 45 ஆண்டுகள் தமிழ் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றிய பேராசிரியரின் பெரும்புகழ் என்றும் நின்று நிலவ இவ் வெளியீடுகள் நினைவுச் சின்னங்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இப்போது வெளிவரும் இரண்டு தொகுதிகளையும், இனி வரவிருக்கும் பிற தொகுதிகளையும் தமிழன்பர்களும் ஆய்வாளர்களும் வரவேற்று மேலும் மேலும் ஊக்கமளிப்பார்களாக.

இத்தொகுதியினை அச்சிடுங் காலத்துப் பல வகையாலும் உதவி, அச்சுத் தாள்களையும் ஒப்புநோக்கிய பேராசிரியரின் புதல்வி திருமதி வை. சரோஜினி அவர்களுக்கும், மருகர் திரு. எஸ். எஸ். இராமசாமி அவர்களுக்கும் மன்றத்தின் நன்றி உரித்தாகிறது.

இரண்டாம் தொகுதியினைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் அச்சியற்றிய 'ரெக்ஸ் பிரிண்டர்ஸ்' (Rex Printers) நிலையத்தாருக்கும் இம்மன்றம் நன்றி தெரிவிக்கிறது.

'வையகம்'
17-2-1989

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை
நினைவு மன்றத்தார்

உள்ளுறை

முதற் பகுதி

எண்			பக்கம்
	தமிழின் மறுமலர்ச்சி		
1.	தமிழின் மறுமலர்ச்சி	..	3
2.	விடுதலை வேண்டும்	..	14
3.	தமிழும் சுதந்திரமும்	..	19
4.	பாரதி யுகம்	..	28
5.	பாரதியும் தமிழும்	..	31
6.	தமிழ்மொழிப் பற்றும் பிறமொழி வெறுப்பும்	..	42
7.	தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி	..	50
8.	தமிழிற் சொல் வளர்ச்சி	..	60
9.	தமிழில் வசனநடை	..	72
10.	வளரும் மொழி: உரைநயம்	..	86
11.	கவிதை	..	95
12.	கதைப்பாட்டு	..	101
13.	சிறுகுழந்தைகளுக்குச் செய்யுட்பாடங்கள்	..	105
14.	தமிழ்ப் பாட்டும் இசையும்	..	111
15.	மறுமலர்ச்சியும் கவிமணியும்	..	118
16.	தமிழும் எதிர்காலமும்	..	128
17.	புத்தாண்டில் புதுமுயற்சி	..	134

இரண்டாம் பகுதி

	சொற்கலை விருந்து		
1.	மொழியின் அதியற்புத இயல்பு	..	141
2.	பேச்சும் மொழியும்	..	146
3.	சொல்லின் ஒலிவடிவும் வரிவடிவும்	..	151
4.	சொல்லும் மொழியும்	..	154
5.	சொல்லின் வளர்ச்சி	..	160
6.	சொல்லும் பொருளும்	..	168
7.	தாய்மொழி	..	176
8.	ஆதார மொழித் திட்டம்	..	184
9.	சொல்வரலாற்று நியதி	..	191
10.	சொல்வரலாற்று விநோதங்கள்	..	204
11.	மொழிநூல் விநோதங்கள்	..	208
12.	சொல்லாக்கம்	..	215

எண்			பக்கம்
13.	தமிழும் பிராகிருதமும்	..	222
14.	தமிழும் வைதிக வார்த்தைகளும்	..	226
15.	பாலிமொழியும் தமிழும்	..	249
16.	தமிழும் மலையாளமும்	..	259

மூன்றாம் பகுதி

சொற்களின் சரிதம்

1.	கழகம்	..	279
2.	களம்	..	283
3.	கண்வட்டம்	.	291
4.	பொழுது	..	293
5.	முன்னிலைப் பெயர்	..	300
6.	தோடு	..	313
7.	விருந்து	..	319
8.	கந்தருவர்	..	327
9.	பஞ்சம்	..	334
10.	சாதுகைமாந்தர்	..	336

நான்காம் பகுதி

நிகண்டுகள்

1.	அரும்பொருள் விளக்க நிகண்டு	..	343
2.	கயாதர நிகண்டு	..	374
3.	நாமதீப நிகண்டு	..	386
4.	பொதிகை நிகண்டு	..	394
5.	நிகண்டு சூடாமணி	..	396

ஐந்தாம் பகுதி

அகராதி

1.	நூதன ஆங்கிலப் பேரகராதி	..	403
2.	தமிழ் அகராதி	..	409
3.	தமிழும் அகராதியும்	..	417
4.	அகராதி நினைவுகள்	..	427
5.	அகராதி அனுபவங்கள்	..	436

பொருட் குறிப்பு அகராதி

(எண் : பக்க எண்)

அக்கசாலை 291
அகநானூறு 165, 294
அகராதி 354
அகராதி-அனுபவங்கள் 436
அகராதி என்ற பெயர் 413
அகராதிக்கு முந்தியகருவி நூல் 410
அகராதி தோன்றிய காரணம் 410
அகராதி நிகண்டு 344, 354, 359, 360
அகராதி-நினைவுகள் 427
அகராதிப் பதங்கள் 99
அகராதியின் அளவு 406
அகராதியின் தோற்றம் 412
அகராதியின் வரலாறு 405
அகராதி வரிசை 433
அகராதி வரிசையில் அபிவிருத்தி 412
அகராதி வேலை— இடர்ப்பாடுகள் 434
அகராதி வேலைக்கு முடிவு இல்லை 426
அகவல் 111
அகில இந்திய உணர்ச்சி 165
அங்குரார்ப்பண காலம் 354
அசோகன் லிபி அடிப்படை 55
அடியார்க்கு நல்லார் 135
அடைமொழி: நியமம் 82
அணிகள் 171
அணிகள் வசனத்திற்கு உரியன அல்ல 82
அணியிலக்கணம் 36
அதங்கோட்டாசான் 269
அதர்வண வேதம் 149
அதர்வ வேதம் 216, 228, 281, 290
அந்தத்துப் பொருள் 348
அந்தாதித்தொடை 351
அநாதித் தொடர்பு 271
அப்பர் 303, 310
அப்பர் தேவாரம் 294, 302, 334
அப்பனையங்கார் 336
அப்புஸ்வாமி அய்யர், பே.நா. 431, 432
அப்ஸரஸ் 331
அமரகோசம் 357
அமரநிகண்டு 281
அர்த்தப் பிரபஞ்சம் 191
அர்த்த மாகதி 220
அரட்டர் 387
அரவானைப் பலியிடுதல் 288
அராபியர்கள் 120
அரிதுணர் சொற்கள் 339
அரியசொற் கருவூலம் 403
அருகர் முதலியோர் கூட்டுறவு 164
அருணாசல நாவலர், நா. 361
அருணாசலம், ரா. ரா. 349
அரும்பொருள் விளக்க நிகண்டு 343, 359, 360, 363, 364
அரும்பொருள் விளக்க நிகண்டு வரலாறு 366
அருமருந்தைய தேசிகர் 366
அலத்தகம் 64
அவதாரிக 273
அவலச்சுவை 100
அவை 289
அவைக்களம் 289
அழகியநடை 74
அழகுச் சிறப்பு 101
அறிவியல்துறைக் கருத்துக்கள் 165
அறிவுச் சூன்யம் 35
அறிவுத்துறைகள் 10, 207
அறிவுத்துறை நூல்கள் 61
அறிவு வளர்ச்சி 17
அன்புநெறி 20
அனவரத விநாயகம் பிள்ளை 427, 428
அனுகரண ஒலிப்பெயர் 78

அஷ்டநாகபந்தம் 37
அக்ஷரமாலை 56, 57
அக்ஷ ஸாலா 291
ஆக்டன் 156
ஆக்டன் முயற்சி 186
ஆக்ஸ்பர்ட் சர்வகலா சங்கம் 404
ஆக்ஸ்பர்ட் சர்வகலா சாலை 413
ஆங்கில-தமிழ் அகராதியும் தமிழ்-ஆங்கில அகராதியும் 422
ஆங்கில மொழி உதவி 66
ஆங்கில மொழியின் கருவூலம் 408
ஆங்கில வாதம் 10
ஆச்சார்யா, பி.ஸ்ரீ. 120
ஆச்ரம நியதிகள் 321
ஆசாரக்கோவை 173
ஆசிரிய நிகண்டு 352
ஆசிரியர் சுந்தரம்பிள்ளை 113
ஆசிரியர் சொற்புத்தகம் 185
ஆசிரியர் ரீட் 83
ஆசிரிய விருத்தம் 112
ஆடம்பரச் சொற்கள் 33
ஆண்டிப்புலவர் 352, 374
ஆத்மசுத்தி 40
ஆதார மொழித் திட்டம் 184, 189
ஆதார மொழியில் பயிற்சி 184
ஆதிமொழி ஆராய்ச்சி 157
ஆதியிற் பொருள் 344
ஆதியிற் பொருள் அந்தத் திற் பொருள் 348
ஆபு ஸிம்பல் 149
ஆயினால் 309, 311
ஆராய்ச்சி நெறி 207
ஆராய்ச்சியாளர் துணிபு 272
ஆராய்ச்சி விநோதங்கள்: சொல் 204
ஆரிய நாகரிகம் 31
ஆரியர் 16, 43
ஆரிய வர்க்கம் 48
ஆவுதி 322
ஆழ்வார்கள் 66
ஆறுமுக நாவலர் 182
ஆன்ம இயல்பு 98
'ஆனால்' 308
இசைக்கலை 112
'இடம்' 289
இடைக்காலத் தமிழ் 259
இத்தாலியர் 44
இந்தத் தலைமுறை 11
இந்தியப் பொதுமொழி 23
இந்திர விழா 21
இந்துஸ்தானிச் சொற்கள் 71
இயற்றுதற் கருத்தா 186
இராகவையங்கார், மு. 15, 79
இராகவையங்கார், ரா 429, 431
இராமலிங்க சுவாமி 18
இராமலிங்க சுவாமிகள் 114, 182
இராமாயணம் 13, 101, 280
இராமேச்சுரக்கோவை 376
இராமையங்கார், ரெ. 337
இருமொழி அகராதி 436
இரேவண சித்தர் 360
இலக்கணத் தத்துவம் 8
இலக்கண வாதம் 7
இலியட், ஆடிஸி 103
இலை 199
இழிவுப்பொருண்மை 282
இளங்கோவடிகள் 270, 310
இறுதியிற் குறை 357
ஈசுர பாரதி 356
ஈடு 291
உசாத்துணைவர்கள் 437
உண்மைக்குத் தடை 155
உண்மை நாட்டம் 207
உண்மையான தமிழ்நிலை 4
உணர்ச்சிப்பகுதி 93
உணர்ச்சியாற்றல் 102
உத்தம அகராதி 413
உதவியாளர்கள்-பேரகராதி 407
உதியன்சேரல் 269
உயர்வுப் பொருண்மை 282
உயிர்த் தத்துவம் 8, 23
உயிர்: பொருள் வேறுபாடுகள் 169
உயிராற்றல் 88
உரிச்சொல் நிகண்டு 349
உரிச்சொற் பனுவல் 386

உரைநயம் 86
உலக வழக்கு 307
உலக வாழ்வு 265
உள்நாட்டு வாணிகம் 166
உவின்ஸ்லோ அகராதி 422, 436
உற்ற நண்பர்கள் 429
உறுதிநலங்கள் 354
எச்சவிகுதிகள் 309
எண்வகை மணங்கள் 328
எதிர்காலத் தமிழ் 128
எதிர்கோடல் 323
எதுகை மோனை நயங்கள் 34
எழுத்தின் தொடக்கம் 148
எழுத்து 204
எழுத்துக் கலையும் அறிவு வளர்ச்சியும் 150
எழுத்துக்கள் வடிவு 54
எனது நட்பு 429
எஸ்பெர்ஸன் 129, 147
எஜமானஸ்தானம் 20
ஏகபாத நிகண்டு 351
ஏறத்தாழப் பன்னீராயிரம் 389
ஐத்ரேயப்பிராம்மணம் 331
ஐரோப்பியர் வரவு 70
ஐரோப்பியர் வருகை 122
ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதி 346
ஒருவந்தம் 221
ஒலி இயல்பு 136
ஒலி இலக்கணம் 50
ஒலிகள் பிறக்கும் வரலாறு 53
ஒலி பற்றிய பெயர்த் தொகுதி 350
ஒலி மாற்றம் 261
ஒலியின் ஒத்திசைப்பு 83
ஒற்றுமை வேண்டும் 19
ஓசை இனிமை 109
ஓசை விகற்பங்கள் 102
ஓலக்கம் 280
ஓலை 199
க்ரையர்ஸன் 275
கட்டுக்கிடைகள் 36
'கண்வட்டம்' 291
கணேசபிள்ளை, டி.எஸ். 214
கதிரியல் முறை 172
கதிரைவேற் பிள்ளை தமிழகராதி 424
கதைகள் சொல்லச் சிறந்த கருவி 103
கதைப்பாட்டு 101, 103
கந்தர்வமணம் 328, 332
'கந்தருவர்' 327
கம்பட்டம் 291
கம்பர் 95, 114, 262, 328
கம்பர் கழகம் 431
கம்பராமாயணம் 105, 113, 313
கம்பன் 18, 28, 32, 66, 79 93, 99, 100, 101, 174 217, 263, 268
கம்பன் காலம் 31
கம்பன் திருநாள் 431
கம்பனுடைய கவிதைகள் 99
கம்மட்டம் 291
கம்மல் 316
கயாகரம் 350, 374
கயாதர நிகண்டு 374
கயாதரம் 381
கயாதரம், கயாகரம் 375
கயாதரர் 375
கருகற் சொற்கள் 339
கருவி நூல்கள்-நிகண்டு 343
கல்லாடனார் 387
கல்லிடைக்குறிச்சி 389
'கல' 290
கலப்பு மணம்: சமுதாய ஒற்றுமை 165
கலப்பெதுகைச் செய்யுள் 348
கலவைச் சொற்கள் 221
கலாநிலையம் 395
கலிங்கத்துப் பரணி 68, 69, 112
கலித்தொகை 63, 171, 220 279, 293, 431
கலிப்பா 112
கலைப்பண்பு 24
கவிதை 95
கவிதை ஒரு கலை 96, 98
கவிதைப் பொருள் 29
கவிமணி 126
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 102, 124
கவிமணி நெறி 116
கவிமணியின் மக்கள்நல— நாட்டம் 125

'கழகம்' 280, 281
களத்தூர் வேதகிரி
முதலியார் 349
'களம்' 283, 288
களவு 328
களவேள்வி 287
'களன்' 284
கற்பு 328
கனகசபைப்பிள்ளை 122
கனகசுந்தரம் பிள்ளை 379
காங்கேயர் 386
காதணிகள் 313, 314
காதம்பரி 109
காந்திஜி 19
கார்டினர், ஏ.எச். 148
கால்டுவெல், டாக்டர் 274
கால அடைவு 229
கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி 409
கிட்டல் ஆசிரியர் 335
கிருஷ்ணசாமி ஐயர்,
கே. வி. 432
கிருஷ்ண தேவராயர் 378
கிரேக்க இலக்கியங்கள் 126
கிரேக்கக் கதைகள் 13
கிரேக்க மொழி 103
கீதை 282
கீழ்க்கணக்கு நூல்கள் 63
கீழைச் சளுக்கியர் 69
குங்குமம் 64
குண்டர்ட், டாக்டர் 274
குப்புஸ்வாமி சாஸ்திரிகள் 427
குமரகுருபர சுவாமிகள் 30
குமரகுருபரர் 313
குமாரசாமிப்பிள்ளை, அ. 349
குலசேகராழ்வார் 270
குலோத்துங்க சோழன் 69
குறள் 170, 302
குறள்வெண் செந்துறை 113
குறிஞ்சிப்பாட்டு 287
குறுந்தொகை 164, 287
கூலவாணிகன் சாத்தனார் 66
கெமிஸ்தம் 182
கெயாதரம் 350, 351
கெயாதரர் 350
கேரள பாணினீயம் 272
கைநீட்டம் 134
கைலாச நிகண்டு 355
கொடுந்தமிழ் 270
கொலைக்களக்காதை 289
கோமூத்திரி 37
கோல்புருக் 123
கோலரிட்ஜ், எஸ்.டி. 76, 95, 405
கௌடில்யம் 328
கௌடில்யர் 281
சகலகலாவல்லிமாலை 30
சங்க இலக்கியங்கள் 21
சங்க காலம் 21, 273
சங்க நூல்கள் 62
சங்கப்புலவர்கள் 66
சங்கர ஐயர், கே.ஜி. 429
சங்கர சுப்ரமணிய
முதலியார், வி.எஸ். 362
சதபத பிராமணம் 332
சதுரகராதி 357, 358, 419
சதுரகராதி வெளியீடு 420
சந்தியமைப்புக்கள் 268
சப்தப் பிரபஞ்சம் 191
சம்பந்தர் தேவாரம் 175
சமயக்கொள்கைகள் 21
சமயக்கோட்பாடுகள் 119
சமயத் தொடர்பு 68
சமய வகுப்பு வேற்றுமை 48
சமய வாதம் 12
சமயாச்சாரியர்கள் 119
சமராத்திரம் 134
சமுதாயத்தில்
தாய்மொழி 176
சமுதாயத்தின் பிரதிநிதி
கள் 177
சமுதாய நிலை 13
சரித்திர கதி 354
சரித்திரச் சான்று 269
சரிதப் பயிற்சி 20
சளுக்க வேந்தர் 387
சஸ்த்ரயஜ்ஞம் 287
சாசனச் சான்று 265
சாண்ட்லெர், ஜெ.எஸ். 427
சாதுகை 339
'சாதுகை மாந்தர்' 336
சார்மட்டிக்கஸ் 148
சாமி கவிராசர் 391
சாமிநாதக் கவிராயர் 358, 394

சாமிநாதம் 390, 394
சாமிநாதையர் 112, 427, 432
சாமிநாதையர், டாக்டர் 315
சாயைகள் 92
சார்ல்ஸ் டிக்கன்ஸ் 127, 188
சாஸ்திர அறிவு 182
சித்திர சேனன் 332
சிதம்பரநாத முதலியார், டி.கே. 72
சிதம்பரம்பிள்ளை, வ.உ. 123
சிதம்பரரேவண சித்தர் 354
சிந்தனா சக்தி 107
சிந்தாமணி 112, 316, 317
சிந்தாமணி, டி.ஆர். 375
சிந்தாமணி நிகண்டு 361
சிலசொற்களை நீக்குதல்-லெக்ஸிகன் 442
சில நியமங்கள் 385
சிலப்பதிகாரம் 63, 173, 201, 202, 262, 270, 303, 308, 310, 316, 323
சிலப்பதிகாரமூலம் 135
சிவகாமி சரிதம் 113
சிவசுப்ரமணியக் கவிராயர் 390, 391
சிவஞானமுனிவர் 121
சிவன்பிள்ளை 345
சிற்பநூலறிவு 165
சிறந்த வாழ்க்கைநெறி 108
சிறப்பகராதிகள் 414
சிறு அகராதிகள் 423
சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள் 105
சிறுபஞ்சமூலம் 173
சிறுபாணாற்றுப்படை 267
சிறுபான்மை மொழிகள் 45
சீதக்காதி வள்ளல் 70
சீதாதேவி 338
சீவகசிந்தாமணி 814
சுதந்திரதாகம் 123
சுதந்திரநெறி 27
சுப்ரமணியதிட்தர் 64
சுப்ரமணிய பாரதியார் 28, 116
சுயார்ஜிதத்தின் தன்மை 182
சுயார்ஜிதம் 180
'சுல்' 209
சுவாமிநாத ஆச்சாரியார், வித்வான், க. 395
சுவாமிநாத தேசிகர் 64
சுவாமிநாதையர், டாக்டர் உ.வே. 378
சூடாமணி 360
சூடாமணி நிகண்டு 343, 346, 347, 348
சூரிய நாராயண சாஸ்திரியார், வி.கோ. 304
சூழ்நிலையின் முக்கியம் 190
சூளாமணி 113
சேக்கிழார் 66
சேரமான் பெருமாள் 270
சேரமான் பெருமாள் நாயனார் 273
சேரன் செங்குட்டுவன் 270
சேனாவரையர் 29
சேஷையர், கே.ஜி. 337, 340
சைவ சித்தாந்த நூற்பயிற்சி 428
சைவ சித்தாந்தி 209
செந்தமிழ்ப் பிரசுரம் 371
செப்பலோசை 111
செம்பாக நடை 113
செய்யுட் டொகை 362
செய்யுட் பாடங்களைக் கற்பதன் பயன் 106
செய்யுள் நயம் 109
செய்யுள் வடிவு 97
செய்யுளின் அமைதி 264
சொல்-அமைதி இடைநிலை 261
சொல் ஒரு குறியீடே 156
சொல் தொகுதி 136
சொல்லமைதி 136
சொல்லாக்கம் 215
சொல்லாராய்ச்சியாளன் 17
சொல்லாராய்ச்சியின் சிறப்பு 207
சொல்லாராய்ச்சியின் தற்காலநிலை 207
சொல்லின் ஒலிவடிவும் வரிவடிவும் 151
சொல்லின் தோற்றம்: ஆராய்ச்சிகள் 209

சொல்லின் நியதிகள் 154
சொல்லின் வளர்ச்சி 160
சொல்லும் பொருளும் 156, 169
சொல்லும் மொழியும் 154
சொல்லுலகு 191
சொல் வடிவங்கள் 260
சொல் வரலாற்று நியதி 191
சொல் வரலாற்று வினோதங்கள் 204
சொல் வரலாறு 267
சொற்கலை விருந்து 138
சொற்கள் வழக்கு வீழ்தல் 160
சொற்களின் அரங்கு 403
சொற்களை ஆளுதல் 80
சொற்களைப் பற்றிய புகார் 438
சொற் சுருக்கம் 102
சொற்பொருள் 137,263
சொற்பொருள் அமைக்கும் முறை 415
சொற்பொருள் பெருக்கம் 353
சொற் பிரபஞ்சம் 206
சொற் பிறப்பு 209
சொற்பிறப்பு-ஒப்பியல்-தமிழகராதி 210
சொற் பெருக்கம் 218
சொற் போராட்டம் 17
சோமசுந்தர தேசிகர், எஸ். 392
சோம மூலிகை 331
ஞாபக சக்தி 107
ஞாபக சக்தியின் குறைகள் 149
ஞானசம்பந்தர் 314
ஞானப்பிரகாசர், அர்ச். 210
டஸார்கள் 46
டி.கே.சி. 85
டிரெஞ்சு 407
டைம்ஸ் பத்திரிகை 404
தக்கயாகப் பரணி 317
தகுதி உணர்ச்சி 35
தண்டியலங்காரம் 29,36
தண்டமிழ்க் கிழவர் 269
தத்துவக் கொள்கை 217
தத்துவ நூல்கள் 37
தந்தை வழிக்கிரமம் 177
தமிழ் அகராதி 409
தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி 50
தமிழ்க்கு விடுதலை 31
தமிழ்ச் சங்க அகராதி 424
தமிழ்ச் சொல் 5
தமிழ் சமுதாயம் 307
தமிழ் நிகண்டுகளை அச்சிட்டு வெளியிடும் முயற்சி 372
தமிழ் நூல்களில் நூற்பொருள் 37
தமிழ்ப் பாட்டும் இசையும் 111
தமிழ்ப் பேரிலக்கியங்கள் 25
தமிழ் பயின்ற நண்பர்கள் 428
தமிழ் புத்துயிர் பெற்றது 32
தமிழ் மொழிச் சரிதம் 259
தமிழ் மொழி-தலைமை 23
தமிழ் மொழிப் பற்றும் பிற மொழி வெறுப்பும் 42
தமிழ் லத்தீன் அகராதி முதலியன 423
தமிழ் லெக்ஸிகன் 416, 426
தமிழ் வருஷப் பிறப்பு 134
தமிழ் விடுதலை 18
தமிழகராதி 357
தமிழ நாகரிகம் 31
தமிழர்களது ஆதி வாழ்க்கை 161
தமிழருக்கு அகராதி புதிது 409
தமிழில் சிறப்பெழுத்துக்கள் 56
தமிழில் பிறந்த முதல் அகராதி 419
தமிழில் வசன நடை 72
தமிழின் குழைவு 126
தமிழின் மறுமலர்ச்சி 3
தமிழின் வேகம் குறைதல் 32
தமிழின் ஜீவ சக்தி 129
தமிழிற் சொல் வளர்ச்சி 60
தமிழுக்கு விடுதலை 14
தமிழுக்கு விலங்கு 15
தமிழும் அகராதியும் 417
தமிழும் எதிர்காலமும் 128,131
தமிழும் சுதந்திரமும் 19
தமிழும் பிராகிருதமும் 222
தமிழும் மலையாளமும் 259

தமிழும் வைதிக
வார்த்தைகளும் 226
தரங்கம்பாடி அகராதி 423
தலையாலங்கானத்துச்
செரு வென்ற
நெடுஞ்செழியன் 271
தற்கால அகராதியாளர்
கொள்கை 441
தற்காலத் தமிழ் 7, 259
தாடங்கம் 318
தாண்டவராய
முதலியார் 398
தாமோதரம் பிள்ளை 122
தாய் மொழி 176
தாய் மொழி மீது அன்பு 3
தாய் வழிக் கிரமம் 178
தாய வுரிமை 180
தாயுமானவர் 38, 122
தார்ன்டைக்
கணக்கு 184,185
தால பத்திரம் 318
தாழிசை 112
திசை 205
திணைமாலை
நூற்றைம்பது 297,303,308
திணைமொழி ஐம்பது 308
திப்பு சுல்தான் 70
திரள் 280
திராவிட கணத்து மொழி 196
திராவிட மொழி
ஆராய்ச்சி 259
திரிகூட ராசப்பக்
கவிராயர் 115
திரிபங்கி 37
திருக்குறள் 63, 105, 169,
174, 273, 279
திருத்தக்க தேவர் 303
திருநாராயண ஐயங்கார் 429
திருப்பணி மாலை 377
திருப்பாவை 314
திருமங்கை மன்னன் 224, 295
திருமேனி இரத்தின
கவிராயர் 346,355
திருவள்ளுவர் 135, 310, 334
திருவாய் மொழி 280
திருவிளையாடற் புராணம் 42
திருவேங்கடபாரதி 352
திவ்யப்பிரபந்தம் 303
திவாகரம் 279, 283, 284,
344, 347, 382
திவாகரர் 280, 320, 344
துத்தென்துரை 349
துரைசாமி முதலியார்
எம்.பி.எஸ். 357, 390, 391
துலாக்காவேரி ஸ்நானம் 135
தூயதமிழ் 5
தூயதமிழ் வாதம் 4, 16
தூயதமிழ் வாதிகள் 61
தெய்வச் சிலையார் 219
தெய்வத் தன்மை 26
தெலுங்கர் 44
தெளிவு 98
தேசாபிமானம் 28, 183
தேசிக விநாயகம்
பிள்ளை 18,116
தேசிய கவி 28
தேசிய கவி பாரதியார் 41
தேசிய வெறுப்பு 47
தேவர்பிரான் கவிராயர் 350
தேவாரம் 63, 112, 303
தொகை நிகண்டு 313,390
தொடை நயம் 353
தொல்காப்பியச் சூத்திரம் 6
தொல்காப்பியப் பாயிரம் 269
தொல்காப்பியம் 175, 219,
262, 281, 315, 343
தொல்காப்பிய முனிவர் 130
தொல்காப்பியர் 7, 55, 62,
205, 268, 300, 301, 305,
307, 309, 319, 322, 327,
333
தொல்காப்பியர் காலம் 333
தொல்காப்பியனார் 6, 53
தோட்டக்காடு இராம
கிருஷ்ணபிள்ளை 427
'தோடு' 313, 315
தோடு, குழை 314
தோத்திரப் பாடல்கள் 40
நக்கீரர் 130
நகர் வருணனை 37
நச்சினார்க்கினியர் 220, 287,
301
நம்மாழ்வார் 312
நமச்சிவாய முதலியார்
சி.ஆர். 358, 391, 432

நளசரிதம் 260
நற்றிணை 219
நன்னூல் 300
நன்னூலார் 301, 307
நாகரிகப் போக்கு 354
நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம் 104
நாட்டுப்பற்று 108
நாடக பாவம் 103
நாநார்த்த தீபிகை 360
நாமதீப நிகண்டு 386, 388
நாயக்கர் 70
நாயக்கர் ஆட்சிக் காலம் 70
நாயன்மார்கள் 66
நாலடியார் 312
நாவுக்கரசர் 314
நான்மணிக்கடிகை 293
நிகண்டின் வகை 397
நிகண்டு 410
நிகண்டுகள் - திவாகரம் 419
நிகண்டுகளிற் சொற்கள் பல்குதல் 362
நிகண்டுகளை எளிதாக்கும் முயற்சி 411
நிகண்டு சூடாமணி 396
நிகண்டு சூளாமணி 378
நிகண்டு நூல் 353
நிலைபேறு 88
நிஷ்காமியம் 20
'நீ', 'உன்', 'நின்' 300
'நீம்', 'நீஇர்' 301
நீயிர் 300
நீரர மகள் 331
நுங்கள், உங்கள் 305
நும் 300
நூதன ஆங்கிலப் பேரகராதி 96, 403
நூதன ஜீவ சக்தி 130
நூல் தோன்றிய காலம் 376
நூலாசிரியர் வரலாறு 375
நூலினுள்ள தொகுதிகள் கயாதரம் 373
நூலிற் காணும் சில மரபுகள்: கயாதரம் 383
நூலின் சிறப்பியல்புகள் : கயாதரம் 380
நூலினால் விளையும் பயன்: கயாதரம் 381
நூற் பெயர், கயாதரம் 374
நெடுநல் வாடை 165, 172
நெற் போர்க்களம் 285
நெறிகாட்டி 186
நேமிநாதம் 285, 297
நோர்டிக் 48
ப்ளேட்டோ 97
பகுப்பு நெறி, தொகுப்பு நெறி 50
பச்சைக்கந்த தேசிகர் 366
பஞ்ச காவ்யம் 303
'பஞ்சம்' 334
பஞ்சமாயக்ஞங்கள் 325
பட்டினத்துப் பிள்ளையார் 314
பண்டித - பொது ஜனப் போர் 87
பண்டைத் தமிழ் 259
பண்பாட்டின் உச்ச நிலை 100
பண்பாடு 219
பத்திரிகை 198, 203
பதங்களைச் சேர்ப்பதில் இடர்ப்பாடு 437
பதிப்பாசிரியர் 345
பதிப்பாசிரியர்கள் - பேரகராதி 407
பதிப்பில் மேற்கொண்ட நியமங்கள் 384
பதிப்பின் முறை 370
பதிற்றுப்பத்து 162, 164, 265, 271, 322
பதினெண்கணம் 333
பரமேசுவர ஐயர் 273
பரிபாடல் 63, 112
பரிபூரண நிலை 26, 27
பரிமேலழகர் 219, 320
பல்பொருட் கூட்டத் தொருமொழி 349
பல்பொருட் சூடாமணி 356, 359
பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி 163
பவணந்தி 96, 300
பழந்தமிழ் வாதம் 6
பள்ளிகளில் கவிதை 106
பன்மொழிப் பயிற்சி 207
பனம்பூ 315
பாடல்களின் தகுதி 108

பாடலுக்கு இசை நயம் 112
பாண்டித்ய
  படாடோபம் 35
பாண்டியன் பல்யாக சாலை
  முதுகுடுமிப் பெருவழுதி 288
பாணி 296
பாணினி 206
பாணினீயத்தில்... 281
'பாதிரிமார் அகராதி
  வேலை 418
பாதிரிமார்களால் விளைந்த
  நன்மைகள் 417
பாபநாசினி 39
பார்பெராய் 44
பாரசீகரது அவஸ்தா... 329
பாரடைஸ் லாஸ்ட் 103
பாரதக் கதை 280
பாரதி 18, 29, 44
பாரதி தீபம் 352
பாரதி நெறி 115
பாரதி பாட்டு 30
பாரதி பாடல்கள் 103
பாரதியார் 32, 84, 118, 123
பாரதியின் ஒளியும்
  இருளும் 104
பாரதி யுகம் 28, 30
பாரதியும் தமிழும் 31
பால் வண்ண முதலியார் 212
பாலி மொழி 229
பாவனா சக்தி 107
பாவனா சக்தி இயல்பு 97
பாவினம் 353
பாவை நோன்பு 135
பாஸ்வெல் 95
பிங்கலந்தை 345, 355
பிங்கல நிகண்டு 160
பிங்கலர் 296, 346
பிதிரார்ஜிதத்தின்
  தன்மை 181
பிதிரார்ஜிதம் 180
பிரகிருதி விசித்திரங்கள் 405
பிரசுர முறை 408
பிரத்தியயம் 339
பிரபந்தங்கள் 40
பிரபந்த வகைகள் 38
பிராசீன மலையாள
  மொழி 259
பிராகிருதச் சொற்கள் 62, 220
பிராகிருத மொழி 229
பிராகிருத மொழி
  உணர்ச்சி ஆராய்ச்சி 225
பிராதேசிக மொழிகள் 45
பிரான்ஸ் 45
பிரிட்டிஷ் தீவுகள் 407
பிரிவினை மனப்பான்மை 22
பிரெட்டன் 45
பிரெஞ்சுக்காரர் 44
பிலிப்பிநோஸ் 47
பிள்ளைப்
  பெருமாளையங்கார் 260
பிற்காலச் சொற்கள் 260
பிற கொள்கை
  பொருந்தாமை 274
பிறநாட்டுச் சொற்கள் 5
பிற மொழிக் கலப்பு 62
பிற மொழி வெறுப்பு 43
புத்தறிவின் தாகம் 124
புத்தாண்டில் புது
  முயற்சி 134
புதியதொரு பாகுபாடு 388
புதிய பொருளுக்குப்
  புதிய சொல் 168
புதுப் பதங்களைச்
  சேர்த்தல் 433
புது முயற்சி 135
புதுமை 320
புராண இதிகாசக்
  கதைகள் 17
புராணங்கள் 39
புறநானூறு 21, 163, 164,
  165, 170, 172, 174, 219,
  226, 275, 279, 281, 284,
  298, 302, 330, 387
புறப்பொருள் வெண்பா
  மாலை 322
புறம் 285
பூதத்தாழ்வார் 311
பூமி சாஸ்திரம் 36
பூர்வ சரித்திர உண்மை 179
பூர்வ மொழி 196
பூர்வ ரூபம் 349
பூர்வார்ஜித இலக்கியம் 181
பூர்வார்ஜிதம் 180
பூர்வீகத் தமிழ் மொழி 196

பெப்ரீஷியஸ்
அகராதி 421, 436, 440
பெயர்க் காரணம் -
தாயம் 177
பெயர்கள் - நகரங்கள் 270
பெரிய திருவடிக் கவிராயர் 398
பெரியாழ்வார் 316
பெரியாழ்வார் திருமொழி 152
பெருங்கதை 105, 315, 325
பெருங்காவியங்கள் 103
பெருந்தேவனார் 304
பெருந்தேவனார்
பாரதம் 287, 288
பெரும்பாணாற்றுப்
படை 161, 166
பேச்சுச் செல்வம் 145
பேச்சு, சொல், மொழி :
வேறுபாடு 154
பேச்சு நடை 8
பேச்சும் மொழியும் 146
பேச்சு வழக்கிலுள்ள
திரிந்த சொற்கள் 414
பேச்சு வழக்கே ஆதாரம் 155
பேச்சின் இயல்பு 143
பேச்சின் சிறப்பு 142
பேச்சின் வரலாறு 146
பேச்சே இல்லாத காலம் 142
பேசுகிற சாயலிலேயே 72
பேராசிரியர் சுந்தரம்
பிள்ளை 43, 122
பொதிகை நிகண்டு 358, 394
பொது அகராதிகள் 413
பொய்கை ஆழ்வார் 297, 310
பொய்கையார் 295
'பொர்து' 293
பொருட் சிறப்பியல் நெறி 173
பொருட் சிறுமை நெறி 174
பொருட் பெருமை
நெறி 174, 175
பொருட் பொதுமை நெறி 173
பொருள் அடைகள் 348
பொருள் செல் நெறி 174
பொருள் விளக்கும்
உதாரணங்கள் 416
பொருளாற்றல் 84
பொருளுலகு 191
'பொழுது' 293, 295, 298
போது 294, 298
போப் பாதிரியார், ஜி.யு. 423
போயினால் 311
போர்க்களம் 283
போழ் 294
போழ்து 293, 294, 298
பௌலர் 80
மக்கள் இயல்பு 98
மக்கள் சொல்லை
இயற்றுவதில்லை 216
மக்கள் பேசும் மொழி 152
மக்டா நல்டு 280
மகன் வழிக்கிரமம் 177
மகாபாரதம் 173, 332
மடசை 356
மண்டலபுருடர் 296, 346,
347, 360
மண்ணின் வகை 355
மணிப்பிரவாள நடை 64
மணிமேகலை 315, 316, 317
மதுரைக் காஞ்சி 161, 163,
302, 316
மதுரைத் தமிழ்ச்சங்கம் 354
மயிலை நாதர் 68, 305
மரபுத் தொடர்கள் 268
மருமக்கள் வழி 178
மருமக்கள் வழி
மான்மியம் 127
மலர் 297
மலையாளத்திற்குத்
தமிழே தாய் 266
மலையாள பாஷா
வியாகரணம் 274
மலையாளம் உப பாஷை 271
மலை வருணனை 37
மறுதலைக் கருத்து 46
மறுபிறவி பற்றிய
கொள்கைகள் 164
மறுமலர்ச்சி 120
மறுமலர்ச்சிக் கவிஞர் 124
மறுமலர்ச்சிக்
கவிஞன் 113, 126
மறுமலர்ச்சிக் கவிதை 118
மறுமலர்ச்சித் தமிழ் 86
மறுமலர்ச்சியும்
கவிமணியும் 118
மறை 333
மனித வரலாறு 205
மனிதனது அற்புதச்
செயல்கள் 141

மனோன்மணீயம் 182
மாக்ஸ் முல்லர் 147
மாக்ஸ் முல்லர் முதலியோர்
ஆராய்ச்சி 147
மாகறல் - கார்த்திகேய
முதலியார் 209, 215
மாண்டெயின் 73
மாணிக்கவாசகர் 82, 121
260, 314
மாத்திரை கற்பிக்கும்
வழக்கு 58
மாலிநௌஸ்கி 156
மாறனலங்காரம் 36, 377
மாறுபடும் வழக்குக்கள் 7
மானியர் உவெல்லியம் 281
மிக விரிந்த நூல் 362
மிகைச் சொற்கள் 371
மிருகங்களின் இயற்கைக்
கூக்குரல்கள் 144
மிருகங்களும்
சொற்பொருளும் 144
முரற்கை 112
முழுமுதல் தன்மை வாதம் 4
முற்பட்ட அகராதிகள் -
குறைபாடுகள் 425
'முன்னிலைப் பெயர்' 300
முன்னோரின்
ஞாபக சக்தி 149
முஸ்ஸோலினி 45
மூலத் திராவிடம் 272
மைக்கேல் வெஸ்ட்,
டாக்டர் 189
மொழி ஆராய்ச்சி 208
மொழி ஆராய்ச்சியில்
ஆய்தம் 211
மொழி இயற்கைப்
பிரேரகமா? 158
மொழிகளின் தத்துவம் 209
மொழித் தொடக்கம் 147
மொழி நடை 263
மொழி நயம் 92
மொழி நூல் 215
மொழி நூல்
வினோதங்கள் 208
மொழி நூலாராய்ச்சி 215
மொழி நூற் கழகம் 406
மொழி நூற் புலவன் 4
மொழி பரம்பரை வரவா? 159
மொழி பேணும் முறை 408
மொழியின் அதியற்புத
இயல்பு 141
மொழியின் இயற்கை 26
மொழியின் சிறப்பு 313
மொழியின் நியதிகள் 157
மொழி வழக்கு 87
மொழி வாதம் 16
மோக்ஷதாயினி 39
யந்திர விசேடங்கள் 405
யம, யமி 331
யாப்பருங்கலக் காரிகை 380
யாப்பருங்கல விருத்தி 69
யாழ்ப்பாண அகராதி 421
யானைக்கட்சேய் மாந்தரஞ்
சேரலிரும் பொறை 271
ரசிகக் கட்டுரை 15
ரசிகமணி, டி.கே.சி. 219
ரஸ்கின் 72
ராட்லர் அகராதி 431, 432
ராப்ராய் 107
ராபர்ட் பர்ட்டன் 97
ராபர்ட்ஸன் 74
ராமசரிதம் 261, 262
ராமசரித விருத்தம் 264
ராமப் பணிக்கர் 266
ராமப்பய்யன்
அம்மானை 295
ராமாயணம் 332
ராமாயணம்
திருவேங்கடமேன் 398
ராஜராஜவர்மா 272, 273
ராஷ்ட்ரகூடர் 387
ரிக் வேதம் 227, 290, 329,
330
ரிச்சர்ட் 156
ரினேஸான்ஸ் 123
ருஷ்யா 46
லகுசித்தாந்த கௌமுதி 430
லாம்பார்ன் 81
லீலா திலகம் 264
லெக்ஸிகன்
பதிப்பாசிரியர் வேலை 443
லோகன்பியர்ஸல் ஸ்மித் 187
வ.உ.சியும் பாரதியும் 123
வகுப்பு - வாதம் 16
வசன நடை வேறுபடுதல் 75
வசனம் நிதானித்து
எழுதப் படுவது 77

வசனம் : புதுநெறி 90
வடசொற்கள் 22, 62
வடமொழிப் பூசல் 67
வடமொழி போற்றுதல் 25
வடமொழி வாதம் 8, 9,
வடுகுச் சொற்கள் 69
வடுவூர் துரைசாமி
ஐயங்கார் 213
வரலாற்றுக்கு ஏற்பச் சொல்
பிரிதல் 414
வ. வெ. சு. அய்யர் 120, 428
வழக்குச் சொற்கள் 15, 7
வழக்கொழிந்த
சொற்கள் 14, 133
வழக்கொழிந்த பொருள் 15
வள்ளுவர் 4, 18, 66, 170,
218, 284, 312, 321, 322,
323, 325
வளரும் மொழி :
உரை நயம் 86
வாக்கிய அமைதி 83, 137
வாக்கியப் பகுப்பு 219
வாளேருழவர் 285
விசுவாவசு 330
விசேஷ உணவு 319
விஞ்ஞான அறிவு 11, 12, 25,
26, 119
விஞ்ஞான சாஸ்திரங்கள் 71
விஞ்ஞான நோக்கு 26
விடுதலை பெற்ற தமிழ் 41
விடுதலை வேண்டும் 14
விண்ணவர் வகை 355
விண்ணின் வகை 355
வித்வான் சிவன் பிள்ளை 349
விபீஷணன் 338
வியாக்யான கர்த்தா 98
வியாக்யானம் 291
வியாச பாரதம் 287, 288
விரிவு நிகண்டு 361
விருந்தினர் 323
'விருந்து' 319
விருந்துக் கோயில் 324
விருந்தோம்புதல் -
ஒரு வேள்வி 323
வில்லிப்புத்தூராழ்வார் 361
வில்லி பாரதம் 288
வில்லேருழவர் 285
விறலி விடுதூது 70
வினையெஞ்சு கிளவி 309
விஜய நகர சாம்ராஜ்யம் 70
வீரசோழியம் 64, 201, 302,
304, 306
வீரசைவர்கள் 68
வீரமாமுனிவர் 409, 419
'வீராகம்', 'வீரயாகம்' 287
வீரை மண்டல புருடர் 378
வெங்கடராமையர், ஸி.பி. 428
வெண்டோடு 315
வெண்பா 111
வெல்ஸ், எச். ஜி. 14
வெள்ளி வெண்டோடு 315
வெளிநாட்டு வாணிகம் 167
வெளியீட்டு வகை 199
வெறியயர் களம் 286
வெறியாட்டு 286
வேத அகராதி 230
வேதகிரி முதலியார் 358, 363
வேதகிரியார் சூடாமணி 348
வேதங்கள் 227
வேதமும் வேள்வியும் 162
வேதமொழி 290
வேதாந்த சாஸ்திர முடிபு 209
வேம்பத்தூரார்
திருவிளையாடல் 71
வேலன் 286
வேற்றுமை விகுதிகள் 262
வேறு சிலர் முயற்சி :
வைத்தியலிங்கம் பிள்ளை 361
வைதிக வார்த்தைகள் 231
வோர்ட்ஸ் வொர்த் 95
ஸ்டாலின் 46
ஸ்பானிஷ் 44
ஸம்ஹிதைகள் 329
ஸமாநார்த்தபதம் 388
ஸர் சிவசாமி ஐயர்,
பி. எஸ். 301
ஸர் வால்டர் ராலே 156
ஸர் சி. வி. ராமன் 25
ஸாத்விக 340
ஜாதிய மொழி 46
ஜான் ரஸ்கின் 96, 187
ஜான்ஸன் 95

ஜீவநதி 27, 32, 308, 323
ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல் 107
ஜைன நூல்கள் 324
ஜைன மதத்தினர் 430
ஜைனர்கள் 68
ஹாரோல்டு பால்மர் 189
ஹாஸ்லிட் 77
ஹிந்தி வாதம் 12
ஹியூமனிஸம் 125
ஹெர்பர்ட் சாம்பியன் 184
ஹெர்பர்ட் ரீட் 65, 74
ஹெர்பர்ட் ரீட் கருத்து 74
ஸ்ரீபுராணம் 67

தமிழின் மறுமலர்ச்சி
முதற் பகுதி

1. தமிழின் மறுமலர்ச்சி

தாய்மொழி மீது அன்பு

ஒவ்வொருவனும் தன் தாய்மொழியின் மீது பேரன்பு கொண்டிருத்தல் முற்றும் இயற்கையே. பேரன்பு கொள்ளுதல் என்பது மொழியின் பெருமையை மட்டும் கூறி அதனோடு அமைந்து விடுவதல்ல. உலகத்தில் வழங்கும் மொழிகளெல்லாம் இடைவிடாது மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் வரும் இயல்புடையன. இவ் வளர்ச்சிக்குத் தடையாக மேற்குறித்த அன்பு இருக்குமானால், அவ்வகை அன்பு நெறிதவறிய அன்பு என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தையைத் தாய் மிகவும் அன்போடுதான் போற்றி வருவாள். அதனோடு, அவளுக்குத் தன் குழந்தை மேன்மேலும் விருத்தியாக வேண்டும் என்ற ஆசையும் இருத்தல் இயல்பல்லவா?

> **ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக்கேட்ட தாய்**

என்ற திருக்குறள் இத் தாயன்பை உட்கொண்டதாகும்.

தனது குழந்தையைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கமுள்ள தாய் அதனை அதன் முன்னிலையிலேயே அதற்கு மிஞ்சிய அழகும் அறிவுமுள்ள குழந்தை கிடையாது என்று புகழ்ந்து பாராட்டினால் போதும்; வேறு வினை வேண்டாம். இது போன்றதுதான், தாய்மொழி மீதுள்ள அன்பு காரணமாக, தமிழுக்கு முழுமுதல்தன்மை கற்பித்து அதைப் போன்ற சிறந்த மொழி உலகத்திலேயே இல்லையென்று சொல்வதும், எல்லா வகையான அம்சங்களிலும் அது பரிபூரண நிலையை அடைந்துவிட்டது என்று சொல்வதும் தாய்மொழிக்குக் கேடு விளைப்பதே யாகும்.

குழந்தைக்கு உணவு கொடுக்காமல், அதன் அழகைப் புகழ்ந்து கொண்டு மட்டும் இருந்தால், அதன் உடலும் அறிவும் வலிவுற்று வளர்ந்துவிட மாட்டா. இங்ஙனமே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவுவனவற்றைச் செய்யாது, அதன் தொன்மையையும் பெருமையையும் பற்றியே நம்மவர் பேசிக் கொண்டிருந்தால், அது முன்னேற்றம் அடைந்துவிட மாட்டாது. அதன் வளர்ச்சியைப் பேணுவதே நமது முதற்கடமையாகும்.

உண்மையான தமிழ் நிலை

எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று வள்ளுவர் நூலுக்கு ஒரு புலவர் சிறப்புப் பாயிரம் கொடுத்துள்ளார். இது போன்ற சிறப்புப் பாயிரம் இக் காலத்து நகையினையே விளைக்கக் கூடியது; இது வள்ளுவருடைய நூலின் பெருமையை எடுத்துக் காட்டுவதாகாது. இவ்வகை மனப்பாங்கு தமிழ் மக்களுக்கு இருத்தலாகாது என்பதே நான் முதன் முதலாகச் சொல்லவேண்டுவது. இம் மனப்பான்மையால் எழுங் கொள்கைக்கு **முழுமுதல் தன்மை வாதம்** என்று பெயரிடலாம். இதனால் விளையும் தீங்குகள் பல. இக்கட்சியோடு போர்புரிந்து உண்மையான தமிழ் நிலையைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துதல் அவசியம்.

இம் முழுமுதல்தன்மை வாதத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது **தூய தமிழ் வாதம்**. தமிழ்ப் பேச்சிலே, தமிழ் நூல்களிலே, தூய தமிழ்ச் சொற்களையே வழங்குதல் வேண்டும் என்று இவ்வாதம் கூறும். ஒருவன் எழுதும்போது தன் கருத்துக்கும் தான் எழுத முற்பட்ட நூலின் தன்மைக்கும் ஏற்ற சொற்களை எடுத்தாளுதல்தான் முறையாகுமேயன்றி, 'இச் சொற்கள் தூய தமிழ்ச் சொற்களா? பிறமொழிச் சொற்களா?' என்ற ஆராய்ச்சியில் தலையிடுதல் எழுத்தாளனுக்குரிய முக்கிய கடமை என்று சொல்லுதல் தகாது. இவ் ஆராய்ச்சி மொழிநூற் புலவன் (Philologist) மேற்கொள்ள வேண்டுவது. தூய தமிழ்ச் சொற்களை ஆளும் இடமும் உண்டு; பிறமொழிச் சொற்களை ஆளும் இடமும் உண்டு; தகுதியறிந்து சொற்களை ஆளுவதுதான் சிறந்த முறையாகும்.

தூய தமிழ் வாதம்

தூய தமிழ் வாதம் பெரும்பாலும் வடமொழியை நோக்கி எழுந்தது. இதனை மேற்கொண்டவர்கள் வட மொழிச் சொற்கள் தவிர ஏனைய எல்லாம் தமிழ்ச் சொற்களே என்று கருதுகிறார்கள். மொழியாராய்ச்சியில் பயின்றவர்கள் அவ்வாறு சொல்லத் துணியமாட்டார்கள். தமிழ் மக்கள் வடநாட்டாரோடு மட்டுந்தான் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. பிறநாட்டாரோடும் தொடர்பு கொண்டிருந்தார்கள். இவ்வகைத் தொடர்பின் ஓர் அறிகுறியாக அப் பிறநாட்டுச் சொற்களும் தமிழில் புகுந்துதான் இருக்கவேண்டும். ஓர் உதாரணம் தருகிறேன்; தமிழிலுள்ள

'ஓரை' என்ற சொல் கிரேக்கச் சொல். இது தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதுபோன்ற பிறநாட்டுச் சொற்கள் பண்டைத் தமிழில் எத்தனையோ இருத்தல் வேண்டும்; அவற்றை வரையறுத்தற்கு இப்பொழுது இயலவில்லை. ஆராய்ச்சி மிகமிக, இவைகள் கால அடைவில் வெளியாகலாம். இவைகளெல்லாம் போக எஞ்சியுள்ள சொற்களைத்தான் தூய தமிழ்ச்சொற்கள் என்று கூறுதல் வேண்டும். அளவில் மிகச் சுருங்கினவாகவே இவைகள் இருத்தல் கூடும். இத் தூய சொற்களைக் கொண்டு எவ்வகையான கருத்துக்களை வெளியிட முடியும்? இதனை நாம் ஊன்றி நோக்குமிடத்து, நாகரிகம் அடைந்த ஒருவன் மிருகப் பிராயமான நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று கூறியதாகவே முடியும். இக் கூற்றிற்கும் தூய தமிழ்க் கட்சிக்கும் வேறுபாடு இல்லை. இக் கட்சியினர் கையாளும் வாத முறைகளில் ஒன்று மிகவும் வியப்புக்கிடமாக உள்ளது. சில சமயங்களில் வடமொழிச் சொற்களையும் தமிழ்ச்சொல் என்று ஆவேசங் கொண்டு கூறுவர். இதற்கு அனுகூலமாக விநோதமான மொழியாராய்ச்சி முறைகளையும் கற்பித்துக் கொள்ளுகின்றனர். காப்பியம் என்ற சொல்லைக் காப்பு-இயம் எனப் பிரித்தும், நாடகம் என்பதனை நாடு-அகம் எனப் பிரித்தும் சொற்பொருள் கண்டு மகிழ்ந்து இவற்றைத் தமிழ்ச்சொற்களாக்கும் முயற்சி போன்றனவே நான் இங்குக் கருதுவன. இம்முறைகளை ஆதரித்து வருகிற தமிழ்க் கழகங்கள் சிலவற்றை நோக்கும்போது, மொழியாராய்ச்சி-உலகில் இக்கழகங்கள் எட்டிப் பார்த்தற்கும் உரிமை யற்றவைகள் என்பது புலனாம். இத்தூய தமிழ்க் கட்சியோடும் போர் புரிந்து எப்பொழுதும் வளர்ச்சியே குறித்து நிற்கும் தமிழின் பெருநலத்தைப் பேணுமாறு தமிழ் மக்கள் முயலுதல் வேண்டும்.

ஒரு சாரார், 'தூய தமிழ் என்பது வேண்டுவதன்று' ஆனால், பிற்காலத்தில் சேர்ந்துள்ள வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் தமிழைக்கெடுத்து விட்டன; இச்சொற்கள் வைசூரி நோயால் தோன்றிய வடுக்கள் போலத் தமிழன் மேனியழகைக் குலைத்துவிட்டன; தமிழ் நடையும் தளர்ந்து வலி குன்றிப் போய்விட்டது; தமிழ் மொழியும் தன்னை மிக எளிமையாக்கிக் கொண்டது. ஆதலால் பழந்தமிழ் நடையிலேயே பழந்தமிழ்ச் சொற்களையே

வழங்கி, அதன் பெருமையையும், செறிவு முதலிய நலன்களையும் காட்டுதல் வேண்டும்' என்று கூறுவர். இவர்கள் கூறுவனவற்றைப் **பழந்தமிழ் வாதம்** என்று சொல்லலாம். இவ்வாதத்தை ஏற்றுக் கொள்வதானால், முதலில் பழந்தமிழ் என்று சொல்லுவது எது என்று தெரிதல் வேண்டும். சங்க நூல்கள் என்று சொல்லப்படும் நூல்களில் வழங்கும் தமிழ்மட்டுந்தானா? அல்லது நாயன்மார்கள் ஆழ்வார்கள் முதலியோர்களது அருளிச் செயல்களையும் பழந்தமிழ் என்பதில் உட்படுத்தலாமா? பின்னர்த் தோன்றிய காவியங்கள், பிரபந்தங்கள் முதலானவற்றையும் பழந்தமிழ் என்று கொள்ளலாமா? இவை முதலாகிய பல கேள்விகள் தோன்றும். இக் கேள்விகளுக்குத் தக்க விடையளிப்பது அரிய செயலாகும். தற்காலத்திற்கு உரிய யாதேனும் ஒரு பொருள் பற்றி இறையனார் களவியல் உரையின் நடையில் எழுதுவது அருமையாயிருக்கும்; ஆனால், விநோதமாகவும் இருக்கும்! சிறுகுழந்தையாயிருக்கிற காலத்தில் தைத்த உடுப்புஒன்றனை வளர்ந்து பெரியவனாகிய காலத்தில் அணிந்தால் அது அளிக்கும் நகைச் சுவையைத்தான் களவியல் உரைநடை இக்காலத்து விளைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்றியும் ஒரு மொழியிலுள்ள சொற்கள் அம் மொழியைப் பேசும் மக்களுடைய அனுபவத்திற்கு அறிகுறியாக உள்ளன என்பதை மறந்துவிடலாகாது. ஏதேனும் ஒரு பழங்காலத் தமிழைக் குறித்தால், அதற்குப் பின் நிகழ்ந்த அனுபவங்களை உணர்த்தும் சொற்களை நாம் புறக்கணித்து விடுதல் கூடுமா? கூடாது. தமிழ்மொழியில் நிலைத்த வழக்காறாகப் புகுந்த பிறமொழிச் சொற்களெல்லாம் எக்காலத்தனவாயினும் தமிழ்ச் சொற்கள் என்றே கொண்டு வழங்குதல் தான் தகுதியாகும். பழந்தமிழ் கட்சியினரது கொள்கை பரவுமாயின், தமிழ் மொழியும் வடமொழியைப்போல் வழக்கொழிந்து போவதற்கும் இடமுண்டு. பழஞ் சொற்களில் வழக்கொழிந்தனவற்றை நீக்கிவிட்டு, உயிருள்ள சொற்களோடு காலத்துக்கேற்ற புதுச் சொற்களும் கலந்து தமிழ் வளம் பெற்று விளங்க வேண்டும் என்பது தான் நமது முன்னோர்களுடைய கருத்து. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்ற தொலகாப்பியச் சூத்திரம் இதனையே வற்புறுத்துகிறது. சொற்களைப் போன்றேமொழி- நடையும் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வரும். இதனையும் அறிந்து தற்காலத்திற்கு உரிய நடையைக் கையாளுதலே தக்கதாகும். ஆகவே இப் பழந்தமிழ்க் கட்சியோடு போர்புரிந்து தமிழ்மொழி என்றும் தனது புதுநலத்தோடு விளங்குமாறு தமிழ் மக்கள் பணிபுரிந்து வரல் வேண்டும்.

இலக்கண வாதம்

இப் பழந்தமிழ் வாதத்தோடு சேர்ந்து ஒன்றாகக் கவனித்தற்குரியது இலக்கணவாதம். இவ் வாதத்தை மேற்கொண்டவர்கள் பல நூற்றாண்டுகட்கு முன்பு அமைந்த இலக்கண வரம்பை இன்றும் நாம் கைவிடுதல் கூடாது என்று மிகமிக வற்புறுத்துவர். சொல்லின்புணர்ச்சி - இலக்கணத்தை எடுத்துக் கொள்வோம். 'கடல் நாவு படலம்' என்பது 'கடறாவு படலம்' என்று புணர்ந்துவரும். இங்குக் காட்டியுள்ள சந்தி, இலக்கணத்திற்கும் பொருளுணர்ச்சிக்கும் அவசியம் என்று முற்காலத்துக் கருதப்பட்டது. 'சொல்லுதல் தவறு' என்பது 'சொல்லுதறவறு' என்று ஒரு சிலரால் எழுதப்பட்டுவருகிறது. 'கெடுத்தறிண்ணம்' முதலியன இப் பகுதியைச் சார்ந்தவையே. இவைகள் வேண்டா இடத்துச் சந்தியாம். இவைகளை, அதாவது வேண்டா இடத்துச் சந்திகளையும் கடறாவு என்ற இடத்துள்ளது போன்ற கடின சந்திகளையும் கைவிடுதல் தகாது என்றுதான் இலக்கண வாதம் கூறும். அன்றியும், ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற உறுப்புக்கள் நிரம்பிச் செவ்வனே அமையவேண்டும் என்றும்,அவ்வமைதியும் முற்காலத்து இலக்கணத்தோடு பொருந்தியிருத்தல் வேண்டும் என்றும் இவ்வாதம் வற்புறுத்தும். தொல்காப்பியரது பேரிலக்கணம் தோன்றி ஏறத்தாழ 1,500 ஆண்டுகள் ஆகிவிட்டன. நன்னூல் தோன்றி ஏறத்தாழ 700 ஆண்டுகள் ஆகிவிட்டன. தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பு புகுந்த வழக்குக்களில் பல நன்னூலில் இடம் பெறவில்லை. இங்ஙனமே நன்னூலுக்குப் பிற்பட்டெழுந்த வழக்குக்களும் பலவாதல் வேண்டும். அவற்றை ஆராய்ந்து தெளிந்து எழுதிய இலக்கண நூலே இல்லை. நாம் நன்னூலைத்தான் இப்போதும் கற்று வருகிறோம். 'உரையிற் கோடல்' முதலிய உத்திவகையாலும் 'மிகை' முதலிய அர்த்தமற்ற காரணங்களாலும் காட்டப்பட்ட வழக்குக்களையும் கடந்து எத்தனையோ புதிய வழக்குக்கள் உள்ளன.

மாறுபடும் வழக்குக்கள்

இடத்திற்கு இடம் மாறுபடும் வழக்குக்களும் உள்ளன. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் வழங்குகிற வழக்குக்களில் பல இந்நாட்டினருக்கு விளங்கமாட்டா. தமிழ் நாட்டிலேயும், தஞ்சாவூர்ப் பிரதேசங்களில் வழங்கும் வழக்குக்களில் சில தென்பாண்டி நாட்டாருக்கு விளங்கமாட்டா. உதாரணமாக 'எண்பழத்தொன்று' என்பதனைக் கூறலாம். உலக வழக்கையும் நூல்வழக்கையும் புலப்படுத்தி அமைத்துக்

கொள்வதல்லவா இலக்கணம்? 'முன்னையோர்கள் ஆண்ட வழக்குக்கள்தாம் வழக்குக்கள், பின்னர்த் தோன்றியன வழக்குக்கள் ஆகா' என்று கூறல் தகுதியாகுமா? ஆதலால் தற்காலத் தமிழுக்குரிய இலக்கணம் செம்மையாக விளக்கி நன்கு எழுதப்படல் வேண்டும். இங்கே நுனித்து நோக்கு தற்குரிய முக்கியமான பொருள் ஒன்று உள்ளது., எவ்வளவு சிறந்த இலக்கண நூலேயாயினும், பிற்காலம் முழுமைக்கும் பொருந்துமாறு அவ் இலக்கணம் அமைந்துள்ளதென்று கூறச் சிறிதும் இயலாது. மேற்கூறியவற்றை நாம் ஊன்றிக் கவனிப்போமானால், இக்கட்சி வலியற்றது என்பதைக் காணலாம்.

முற்காலத்து இலக்கணப்படி வாக்கியங்களைச் செவ்வையாக அமைத்து எழுதுவது ஒருவகையில் திருப்தியாகவே இருக்கும். ஆனால், அவற்றில் உயிர்த் தத்துவம் காண வேண்டுமானால், அவை உலக வழக்கையும் பேச்சு வழக்கையும் ஒட்டி அமையப் பெற்றனவாகவே இருத்தல் வேண்டும். இலக்கணத் தத்துவம் வேறு; உயிர்த் தத்துவம் வேறு. இலக்கணம் எலும்புச் சட்டகமே யாகும். உயிரிருந்தாலன்றி அதற்கு இயக்கமில்லை. இவ்வாறு கூறுவதனால் இலக்கண நியதியே இன்றி வாக்கியங்களை எழுதலாம் என்று கூறும் கொள்கைக்கு உடன்பட்டதாகாது. இலக்கண நியதியும் வேண்டும்; உயிர்த்தத்துவமும் வேண்டும். இலக்கண நியதியின் அளவு எல்லை முதலியன அவ்வக் காலத்துள்ள வழக்கினைப் பொறுத்தன. ஆனால் வழக்குச் சொற்களும் பேச்சு நடையும் தமிழ் மொழியின் நடைக்கு இன்றியமையாதனவாம். தமிழ் ஓர் உயிருடைய மொழியாக நின்று நிலவுவது இவ் இரண்டின் வலியினாலுந்தான். இவ் வழக்குக்களினால் உரம் பெற்று இலக்கணக் கட்சியோடு போராடி, அதனையும் தனக்கு அனுகூல சக்தியாக மாற்றிக் கொள்ளத் தமிழ் முயலுதல் வேண்டும். எப்பொழுதும் காலத்தோடு ஒத்தியைந்து செல்லுமாறு தமிழ் மக்கள் தங்கள் தமிழ் மொழியை நன்கு பேணுதல் வேண்டும்.

இதுவரை, தமிழ்மொழி ஒன்றனையே பற்றித் தோன்றிய வாதங்களை நோக்கினோம். இனி, பிற மொழிகளின் சார்புபற்றித் தோன்றியுள்ள சில வாதங்களை நோக்குவோம்.

வடமொழி வாதம்

வடமொழி வாதம் இவ்வகையில் முதலாவதாகக் கூறத்தக்கது. தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் இரண்டு

பிரிவாக அமைந்துள்ளார்கள். ஒரு பிரிவினர் வடமொழிச் சொற்களை அறவே ஒழிக்க வேண்டுமென்றோ, அல்லது மிகச் சுருங்கிய அளவில் — தமிழ்ச் சொல் இல்லாத இடத்து— வழங்கவேண்டுமென்றோ கூறுவர். பிறிதொரு சாரார் வடமொழிச் சொற்களை வழங்குவதில் யாதொரு கட்டுப்பாடும் கூடாது என்பர். இவ்விரு பிரிவினர்களும் தத்தம் சார்பாகக் கூறுவனவற்றை வடமொழி - வாதம் என்ற பெயரால் அழைக்கலாம். இவ்வாதம் இரண்டு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளது. ஒன்று வகுப்புத் துவேஷம்; மற்றொன்று அரசியல் - கட்சித் துவேஷம். இந்தத் துவேஷங்களை ஒதுக்கிவிட்டு, தமிழ்மொழியின் நலத்தை மட்டும் கருதி, இவ்வாதத்தைச் சீர் தூக்குதல் வேண்டும். வடமொழியை முற்றும் ஒழித்தல் என்பது இயலாத காரியம்; வேண்டற்பாலதும் அன்று. வேண்டுமளவு, தகுதியறிந்து, தமிழ் புகுந்துள்ள வடமொழிச் சொற்களை நாம் ஆளுவதில் எவ்விதமான தடையும் இருத்தல் கூடாது. வடமொழி அந்தண குலத்தார்களுக்கு மட்டும் உரியதென்று கருதுதற்குச் சிறிதும் நியாயமேயில்லை. அந்தண சகோதரர்களும் அவ்வாறு கருதுதல் கூடாது; அந்தணரல்லாதாரும் அவ்வாறு கொள்ளுதல் கூடாது.

இந்திய மக்களாய்ப் பிறந்துள்ள அனைவருக்கும் பொது உடைமையாக உள்ளது வடமொழி. வைதிக சமயத்தாரேயன்றி வேறு சமயத்தினரும் அம்மொழியைப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர். அந்தணர்களேயன்றி ஏனைய வகுப்பினரும் அம்மொழியை வளர்த்துள்ளார்கள். எனவே, ஐரோப்பிய நாடுகளில் லத்தீன் மொழியைப்போல வடமொழியை நாம் கருதிக் கொள்ளுதல் வேண்டும். அது பரந்துபட்ட வழக்கு உடையது; நமது சமய முழுமுதல் நூலாகக் கொள்ளப்படும் வேதத்தைத் தன்பாற் கொண்டது; சமய சாஸ்திரங்களையும் பிற சாஸ்திரங்களையும் தன்கண் உடையது; அதனைத் 'தெய்வமொழி' என்று நம்மவருள் ஒரு சாரார் சொல்லி வருகிறார்கள். லத்தீன் மொழியை ஆங்கில மொழி பயன்படுத்திக் கொண்டதுபோல, இம்மொழியையும் பிற மொழிகளையும் தமிழ்மொழி பயன்படுத்திக் கொண்டு, உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் என்றும் நின்று நிலவிச் சிறந்தொளிர வேண்டுமென்பதே நம் அனைவரது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த இரண்டு வகையான பிரிவினர்களையும் தவிர மூன்றாவது ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள்

தமிழ் மக்களாய்ப் பிறந்தும், தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடையவர்களாய் இருந்தும், தமிழை இகழ்ந்து, வடமொழி ஒன்றினையுமே கற்று, தமது தாய் மொழிக்குக் கேடு தேடுகின்றனர். இவர்களால் வடமொழிக்குச் சிறிதும் பெருமை அதிகரிக்கப் போவதில்லை. அதற்கும் கேடு சூழ்கின்றார்கள் என்றுதான் இவர்களைச் சொல்லவேண்டும். பாரத மக்கள் அனைவர்க்கும் உரிய பொதுமொழியைத் தம் குலத்தினர்க்கு மட்டும் உரிய பிதிரார்ஜிதமாக இப்பிரிவினர் கருதுகிறார்கள்.

இவ்வகையான நினைப்பு இருக்கும்வரை தமிழகத்திற்கே—நமது பாரத தேசத்திற்கே—இவர்கள் கேடு விளைவிப்பவர்கள் என்று தடையின்றிச் சொல்லலாம். எத்தனையோ வகைகளில் நம் முன்னோர்களது கருத்துத் துறைகளினின்று நாம் வேறுபட்டு விட்டோம். எத்தனையோ அறிவுத் துறைகளில் நாம் அபிவிருத்தியடைந்து விட்டோம். சுருங்கிய அளவில் இருந்த கல்வி பாரத தேசமெங்கும் பரவத் தொடங்கியிருக்கிறது. இவைகளை எல்லாம் நாம் ஒதுக்கி விட்டு, நமது வடமொழி நூல்களின் கருத்துலகினும் அறிவுலகினும் மட்டும் சஞ்சரித்துக் கொண்டு வருவோமானால், நமது பாரத தேசத்திற்கு இனிமேல் உய்தியேயில்லை என்றுதான் சொல்லவேண்டும். இவ்வாறான கேட்டிற்கு இன்னோர்கள் காரணமாய் இருக்கக் கூடாது என்பதை இவர்கள் நன்கு உணர வேண்டும். சிற்சில இடங்களில் தாய்மொழியைக் காட்டிலும் வடமொழிக்குச் சிறப்புக் கொடுத்து வடமொழியாட்சியின்கீழ் தமிழ் முதலிய தாய்மொழிகள் அடங்கியமைந்திருக்க வேண்டும் நிலை நேர்ந்திருக்கிறது. இது போன்ற நிலைகளே வடமொழி வாதத்திற்கு இடங்கொடுத்து நாட்டிற்கும் நமது மொழிக்கும் பலவகையான தீங்குகளை விளைத்து வருகின்றன. தமிழ்மொழி இக்கட்சியை நேர்முகமாக எதிர்த்து நின்று தாய்மொழி என்ற நிலையில் தனக்குரிய கௌரவத்தைப் போற்றிக் கொள்ளுதல் இன்றியமையாதது.

ஆங்கில வாதம்

இவ்வடமொழி வாதம் நமது நாட்டுப் புராதன சரித்திரத்தின் விளைவு, நவீன சரித்திரத்தின் விளைவாக உள்ளது ஆங்கில-வாதம். இவ்வாதத்தை மேற்கொண்டுள்ளவர்கள் இந்திய மக்கள். அனைவரும் தம் தாய்மொழிகளின் வளர்ச்சியைப் பேணாதபடி ஆங்கிலத்தையே பயின்று அதன் மூலமாகவே அறிவு வளர்ச்சி பெற்றுக் கொள்ளவேண்டும்

என்று கூறுகிறார்கள். இவருள் ஒரு சாரார் தங்களை ஆங்கிலேயராகவே பாவித்து அம் மொழியையே தங்கள் வீட்டிலுங்கூடப் புகுத்தி வருகிறார்கள். ஒருவனுக்கு இரண்டு ஆங்கிலவார்த்தை தெரிந்துவிட்டால், அவன் நாகரிகத்தின் எல்லையையும் அறிவின் சிகரத்தையும் அடைந்து விட்டது போல் நடிக்கிறான். ஆங்கில நடையுடை பாவனைகளைக் கைக்கொள்கிறான். தான் ஓர் இந்தியன் என்பதை முற்றும் மறந்துவிடுகிறான். தாய்மொழியை வழங்குபவர்களையும் ஏளனத்துடன் நோக்குகிறான்.

ஆனால், ஆங்கிலம் கற்றவர்கள் எல்லாரும் இவனைப் போன்றவர்களல்லர். பெரும்பாலார் தாய்மொழியின் மூலமாகவே அறிவுத் துறைகள் பலவற்றையும் நமது மக்களுக்குப் பயிற்றிவரவேண்டுமென்னும் கொள்கையுடையவர்கள்; தாய்மொழியின் வளர்ச்சி அம்மொழியின் மூலமாகக் கல்வி பயில்வதனால் தான் ஏற்படக்கூடுமென்று நினைப்பவர்கள். என்றாலும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் மிக அதிகமாக உள்ளன. *அரசாங்கம் இவ் விஷயத்தில் உதாசீனமாகத் தான் இருத்தல் கூடும். தற்காலத்துக் கல்வி ஸ்தாபனங்கள் முழுமையும் இவர்களோடு மாறுபட்ட நோக்கம் உடையனவே இந்தத் தலைமுறையில் உள்ள கலாசாலை ஆசிரியர்கள் பலரும் தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பிப்பதை நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எதிர்ப்பவர்களே. பள்ளி மாணவர்களும் அவர்கள் பெற்றோர்களும்கூடத் தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பதற்கு முற்றும் இணங்கி விட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆதலால் தற்காலத்துள்ள கல்வி முறை முழுவதும் மாறித்திருந்தி அமைக்கப்பட்டாலன்றி, இவ் ஆங்கில வாதம் ஏதாவதொரு வடிவில் முளைத்துக் கொண்டேயிருக்கும் என்று தான் தோன்றுகிறது. இவ் வாதத்தை எதிர்ப்பதற்குத் தமிழ்மொழி தற்காலத்து மொழியாக முற்றும் மாறவேண்டும்.

தற்கால விஞ்ஞான அறிவு அனைத்தையும் அது உட்கொள்ளவேண்டும். அவ்வாறு உட்கொண்டு பழமையும் புதுமையுந் தாங்கி நன்றாக வலிமையுற்று வளரவேண்டும். ஆங்கிலக் கட்சியை எதிர்ப்பதற்கு வழி இதுவே. இதனைக் கைக்கொள்ளுதலில் சிறிதும் காலம் நீடித்தலாகாது. ஒன்று மாத்திரம் ஞாபகத்தில் வைத்தல் அவசியம். தமிழ் தற்கால

---

*சுதந்திரம் பெறுவதற்குமுன் நமது தேசத்தை ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கமே இங்கே கருதப்பட்டது. இம் மனப்பான்மை இப்பொழுது பெரிதும் மாறிவிட்டது.

மொழியாக மாறுதற்கும், காலஞ்செல்லச் செல்லக் காலத்தோடு இயைந்து சென்று நிலை தளராது நிற்பதற்கும் ஆங்கில அறிவு மிகப் பயன்படுவதாகும்.

ஹிந்தி வாதம்

ஆங்கில வாதத்தை எதிர்ப்பதற்கு நமது தேசபிமானிகளில் சிலர் புதியதொரு வாதத்தை எழுப்பிவிட்டனர். இவ்வாறு புதிதாகத் தோன்றியதுதான் ஹிந்தி-வாதம் எனப்படுவது. இவ்வாதத்தைத் தோற்றுவித்தவர்கள் அங்கங்கே வழங்கும் தாய்மொழிகள் தவிர, இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு மொழி வேண்டுமென்றும், அந்தப் பொதுமொழியின் நிலையில் தான் ஆங்கிலம் உள்ளதென்றும் முற்றும் அந்நிய தேசத்துக்குரியதான ஆங்கிலத்தைக் காட்டிலும் பாரத தேசத்தில் பெரும்பான்மையோர் வழங்குகின்ற ஹிந்தி மொழி இங்ஙனம் பொது மொழியாகக் கொள்ளத்தக்க உரிமையும் தகுதியும் உடையதென்றும் முற்போக்கு நெறியில் கூறுகின்றனர். தமிழுக்கு இதனால் கெடுதி சிறிதும் வருமென்று தோன்றவில்லை. உண்மையிலே கெடுதி விளைவிக்குமானால் இவ் வாதத்தைத் தமிழ்மொழி எதிர்த்து நிற்க வேண்டியது அவசியம். ஹிந்தி மொழியினாலேயும் தமிழ்மொழி உரம் மிகுந்து வளரும் என்பதுதான் உண்மையெனத் தோன்றுகிறது. தமிழ் மக்கள் பாரத தேசம் முழுமையும் சென்று அனுபவம் பெருகினால், அவ் அனுபவத்தின் மூலமாகத் தமிழ்மொழியும் சிறப்பு எய்தும் என்றுதான் நாம் கொள்ளுதல்வேண்டும். நமது கல்வித் திட்டம் சீர்திருத்தம் எய்தி நன்கு அமைக்கப்படும் பொழுது இக்கட்சி தக்கவாறு தக்கவர்களால் நன்கு ஆராயப்படலாம். அதுவரை நாம் பொறுமையை மேற்கொண்டிருப்பதே நலம்.

சமய வாதம்

இனி, இறுதியாக எடுத்துச் சொல்ல வேண்டுவது சமய-வாதமாகும். இப்பெயரைக் கேட்ட அளவில், சம்பந்தர் முதலியோர் காலத்திற்போல இக்காலத்திலும் சமயங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன என்று நினைத்தல் கூடும். அங்ஙனம் அன்று. சமயங்களும் இவற்றின் சார்பான புராணம் முதலிய நூல்களும் பொய் நிரம்பியன என்றும், மக்களுடைய வாழ்விற்குக் கேடுவிளைப்பன என்றும், ஆதலால் இவை இரண்டனையும் ஒழிக்க வேண்டுவது அவசியமென்றும், இக்கட்சி கூறும். முதற்படியாக, தமிழிலேயுள்ள இதிகாசங்களை ஒழிக்க வேண்டும் என்று இவ்வாதத்தை மேற்கொண்டோர் முயற்சி செய்து வருகின்றனர்.

சமுதாய நிலை

சமயம் பற்றிய வாதத்தை இப்போது ஒதுக்கி வைத்து விடுவோம். புராணம் முதலிய இலக்கியங்கள் பற்றிய வாதத்தை மட்டும் சிறிது நோக்குவோம். முதலாவது, ஒவ்வொரு காலத்துந் தோன்றிய இலக்கியங்கள் அவ்வக் காலத்துள்ள சமுதாய நிலையைப் பொறுத்தன. ஆகவே இவ் இலக்கியங்களை ஒழிப்பதாயின், நமக்கு மொழிப்பற்றிய சரித்திரமும், மக்களின் சரித்திரமும் இல்லாமற் போய்விடும். இரண்டாவதாக, இவ் இலக்கியங்களில் பழங் கதைகள், பழமையான கருத்துக்கள் காணப்படு மாதலால் இவற்றை நாம் ஒதுக்கிவிடுதல் கூடாது. கிரேக்கக் கதைகள் இருக்கின்றன. இக்கதைகள் கிரேக்க மொழியிலுள்ள இலக்கியங்களில் மட்டுமேயன்றி ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் புகுந்திருக்கின்றன. இக்கதைகள் இருத்தல்பற்றி அவ் இலக்கியங்களை ஐரோப்பிய மக்கள் ஒதுக்கிவிடவில்லை. இதுபோன்ற ஒரு மனப்பான்மைதான் நமக்கும் இருத்தல்வேண்டும். இராமாயணத்தில் மக்கள் எளிதில் நம்புதற்கியலாத பல செய்திகள் கூறப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் அவைகள் கதையின் அம்சங்கள் என்றும் காவியக் கலைக்குரிய பொருள்கள் என்றும் கொள்ளுதலே முறையாவது. மூன்றாவதாக, இக்கதைப் பொருள்கள் நமது கவிதைச் செல்வத்தை வளப்படுத்தி, அதன் நயத்தை வளர்த்துள்ளன. ஆதலால் நமது இலக்கியச் செல்வத்தை நாம் இழந்து விடத் துணிந்தாலன்றி மேற்குறித்த வாதத்தை ஒப்புக்கொள்ள இயலாது. பெரும்பாலோர் இராமாயணம் முதலிய இலக்கியங்களைக் காவிய நயங்கருதியே கற்று வருகின்றனர். ஆனால் இக் கட்சி இக் காரணங்களைக் கவனிப்பதாயில்லை. இக் கட்சியோடும் போராடுவது தமிழ் மக்களின் கடமையென்றே தோன்றுகிறது.

தமிழின் மறுமலர்ச்சிக்குத் தடையாயிருப்பன ஒரு சிலவற்றை இங்கே ஆராய்ந்தோம். மொழியின் சிறப்பு அதனைப் பயில்வோர் சிறப்பு. ஆகையால், தமிழுக்கும் அதனைத் தாய்மொழியாக உடைய நம்மவர்களுக்கும் உள்ள மிக நெருங்கிய தொடர்பை நாம் நன்கு உணர்தல் வேண்டும். அதன் பாலுள்ள குறைகள் நமது குறைகளாகும்; அதன் பெருமை நமது பெருமையாகும்; அதற்கு வாழ்வில்லையேல், நமக்கும் வாழ்வில்லை. இப்பொது உண்மையினையும் இதனால் வரும் நலன்களையும் தீங்குகளையும் முற்ற உணர்ந்து, நமது தாய்மொழி மாறாத இளமையோடும் குறையாத வலிமையோடும் என்றென்றும் நிலவுமாறு நாம் அனைவரும் மனம் இயைந்து உழைத்து வரும்படி இறைவன் அருள்புரிக!

2. விடுதலை வேண்டும்!

தமிழுக்கு விடுதலை

எத்தனையோ வகைகளில் விடுதலை வேண்டும் என்று பலரும் பாடுபடுகிறார்கள். தமிழுக்கு விடுதலை வேண்டும் என்ற கூக்குரல் இன்னும் உண்டாகவில்லை. இக்கூக் குரலை எழுப்பி அதற்காக உழைக்க வேண்டியது மிகவும் அவசிய மாகும்.

சிலர் இந்த அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் விடுதலைக்கு இவர்கள் கையாளும் வழி சரியல்ல. இவர்கள் இலக்கண விதிகளிலிருந்து தமிழ் விடுதலை பெற வேண்டும் என்று கூறி, அவ் இலக்கணத்தை ஏளனஞ் செய்வதே போதுமென்று நினைக்கிறார்கள். இலக்கணம் கற்றவர்கள் பொதுவாகக் கடினமாகத் தமிழ் எழுதுகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் கடினமான தமிழ் வேறு; வழக்கொழிந்த தமிழ் வேறு. ஆங்கில உதாரணம் கொடுத்தால்தானே நம்மவர்களுக்கு விளங்கும்! 'வைட்' (Wight) என்று முற்காலத்தில், வழங்கிய சொல்லுக்கு 'ஆள்' என்று பொருள். இக்காலத்தில் 'பெர்ஸன்' (Person) என்ற சொல்லைத்தான் ஆங்கில மக்கள் வழங்கிவரு கிறார்கள். இது போலவே, தமிழில், 'கமம்' என்பது வழக்கொழிந்த சொல்; இக்காலத்து 'நிறைவு' என்பதை வழங்குகிறார்கள். வழக்கொழிந்த சொற்களை ஆளுதல் தவறு.

சொல்லைப் போலவே சொல்லின் பொருளும் வழக்கொழி வது உண்டு. உதாரணமாக, 'மாண்ட' என்ற சொல்லை எடுத் துக் கொள்வோம். அது முற்காலத்தில் 'மாட்சிமைப்பட்ட' என்ற பொருளைக் குறித்தது. தற்காலத்தில் 'இறந்து போன' என்ற பொருளைத்தான் குறிக்கும். பழைய பொருளில் இச்சொல்லை வழங்குவது தவறு. இது வழக் கொழிந்த பொருளுக்கு ஓர் உதாரணமாம்.

கடினமான தமிழ் வேறு. எச். ஜி. வெல்ஸ் முதலியோர்கள் எழுதுகிற ஆங்கில நடை எல்லார்க்கும் விளங்கக் கூடிய

நடையல்ல. ஆனால் ஒருவரும் அந்நடையில் அமைந்த மொழியை வழக்கொழிந்தது என்று சொல்லமாட்டார்கள். இதுபோலவே மு. இராகவையங்கார் முதலியோர்கள் எழுதுகிற தமிழை ஒருவேளை கடினம் என்று சொல்லலாம். ஆனால் வழக்கொழிந்த தமிழ் என்று அதைச் சொன்னால் அது பொருந்தாது.

வழக்கொழிந்த சொற்களையும் பொருள்களையும் ஆளுதல் தமிழுக்கு விலங்குபூட்டிச் சிறையிலிடுவது போலாகும். இப்படிப்பட்ட சொல்லாட்சி ஒரு கொடிய வல்லரசு. இதினின்றும் தமிழ் விடுதலை பெறவேண்டுவது அவசியம்.

மேலே சொன்னது ஒரு கோடி; நேரே மறு கோடியிலுள்ளது தற்காலத்தில் சில தினப் பத்திரிகைகளில் வரும் தமிழ் சொற்களின் உண்மை வடிவம் தெரிந்து கொள்ளச் சிறிதும் முயற்சி செய்யாமலே, மனத்துக்குத் தோன்றியபடி எழுதுவது தவறென்பது யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடியதாம். கொஞ்ச காலத்துக்கு முன் நமது நாட்டில் தாண்டவமாடிய சொற்களில் ஒன்று 'ஒற்றுமையாமை.' வடமொழி பேசத் தொடங்கி, 'ஆஷ்டுக் குஷ்டி வேஷ்டியைத் தின்கிறது; ஓஷ்டு, ஓஷ்டு' என்று ஒருவன் சொன்ன பழங்கதையைப் பலரும் கேட்டிருக்கலாம். இதைப் போலுள்ளதுதான் 'ஒற்றுமையாமை' என்பது. இலக்கணத் தமிழ் பேசுவதாக எண்ணி 'வார்த்தையை' 'வாற்றை' என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படியே ஒத்துமையாமையை 'ஒற்றுமையாமை' என்று போலி இலக்கணமாக்கி எழுதலாயினர். கற்றவர்களுள் சிலர் அதிகமாகப் பழந்தமிழ் நூல்களிற் பழகியதனால் வழக்கொழிந்த சொற்களை உரைநடையில் வழங்கிவருதல் போல, தமிழிலக்கிய வாசனையே அறியாதவர்கள் 'ஒற்றுமையாமை' என எழுதத் தொடங்கினார்கள். இதுபோன்ற அறியா வழக்கு என்ற வல்விலங்கும் முறிபட்டுத் தமிழ் விடுதலை பெறவேண்டும்.

தமிழுக்கு விலங்கு

இவ் இரண்டு வகுப்பினர்க்கும் இடையிலே பல தரத்தினராய்த் தமிழை விலங்குபூட்டி வைப்பவர்கள் இருக்கிறார்கள். தமிழ்ச் சொற்களுக்குத் தமக்கு தோன்றுவதெல்லாம் பொருள்தான் என்று கொண்டு ரசிகக் கட்டுரை எழுதுபவர்கள் ஒரு சிலர் உண்டு. 'அலங்கலம்' என்பது ஒரு வகை நடனம் என்று எண்ணிக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது! இப்படி ஒரு

நடனம் உண்டென்று தமிழ்த் தெய்வத்திற்கே தெரிய மாட்டாது! அலங்கல் என்பது மாலை; 'அம்' என்பது சாரியை. வேறு சிலர், அலங்காரஞ் செய்யக் கருதி எதுகை மோனைகளை மிகவும் கையாண்டு, தமிழன்னையைச் சேற்றில் அழுந்தக் கிடத்தி விடுகிறார்கள், 'வீரன் வெளியே சென்றிருந்த வேளை பார்த்துப் பர்ண சாலையிற் புகுந்து, பதறி நின்ற சீதையைப் பற்றியெடுத்துப் பறக்கலுற்றான்' என்ற அரிய வாக்கியத்தில் எத்தனை மோனைகள்! 'சீற்றத்தினால் ஊற்றமுற்றுக் கூற்றமுட்க ஏற்றெழுந்து ஆர்ப்பரித்தான்'. இதில் வரும் எதுகைத்துள்ளலைக் கண்டு யார்தான் நகையாதிருப்பார்கள்; இது உரைநடை செல்லும் முறை! அருவருக்கத் தக்க இப்படுகுழிச் சேற்றிலிருந்து தமிழ் விடுதலை பெறவேண்டும்.

தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு கிளர்ச்சி தோன்றுமானால் அக் கிளர்ச்சி தமிழ் மொழியில் வந்து பாய்ந்து விடுகிறது. ஓர் இயக்கத்தால் வடமொழி வெறுப்பு நமது நாட்டில் களை போல வளரத் தொடங்கியிருக்கிறது. வடமொழி அந்தணருக்கு மட்டும் உரியதல்ல. அந்தணரல்லாதாரும் பௌத்த ஜைன சமயத்தவர்களும் அதனைப் போஷித்து வளர்த்து வந்திருக்கின்றனர். அது பாரத தேசத்திற் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பொதுவுடைமை என்பதை முந்திய கட்டுரையிலும் கூறியுள்ளேன். இவ்வுண்மையை மறந்துவிட்டு அந்தணர்களுக்கு மட்டும் இம்மொழி உரியதாகச் சொல்லுகிறோம்; இதனோடு நிற்கவில்லை. மற்றவர்களுக்குப் போலவே அந்தணர்களுக்கும் தமிழ் தாய் மொழியாக இருந்தபோதிலும் அவர்களுக்கும் தமிழுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று வாதாடுகிறோம். இவ்வாறு சொல்லுதற்கு அவர்களுள் ஒருசிலர் இடங்கொடுக்கவும் செய்கிறார்கள்; தமிழ் தங்கள் தாய்மொழியல்லாதது போல் ஒதுக்கி விடுகிறார்கள். தங்களை ஆரியரென்றும் மற்றையோர்கள் திராவிடரென்றும் பகுத்துக் கூறுகிறார்கள். ஆரிய திராவிடவாதம் அர்த்தமற்றது. தனிப்பட்ட தூய ஆரியரும் திராவிடரும் இல்லையென்பது சரித்திரம் ஒப்பிய உண்மை. இந்திய தேசத்தவர்களெல்லோரும் ஒரே ஜாதி என்ற இலட்சியத்தைக் கைக்கொள்ள வேண்டும் இந்த நாளில், இந்த வகுப்பு - வாதமும் மொழி - வாதமும் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இக் கிளர்ச்சியானது மொழி வாதத்தோடு அமைந்துவிடவில்லை. தூய தமிழ் வாதத்தில் நம்மைச் செலுத்தி

விட்டது. பேசும்போதும் எழுதும்போதும் வடமொழிப் பதங்களை நீக்கித் தக்க தமிழ்ச் சொற்களைப் பொறுக்கி யெடுத்து வழங்க வேண்டுமாம். இதனால் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவனும் சொல்லாராய்ச்சியாளனாக (Philologist) இருக்க வேண்டுமென்று இவ்வாவாதம் கூறுகிறது. இது நடைமுறையில் வரக் கூடிய காரியமல்ல. வடமொழிச் சொற்களை மிகுதியாக எடுத்தாளுவதைக் கண்டிப்பதற்கு இவ்வாதம் ஒரு நெறியாகலாம். ஆனால் அறிவு வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் பெருந்தீங்கு இழைப்பதாய் முடியும்.

ஆங்கில மக்கள் தாங்கள் எழுதும் போது லத்தீன், கிரீக் முதலிய மொழிகளிலிருந்து வந்துள்ள சொற்களை விலக்குகிறார்களா? சொற் போராட்டம் அவர்களுடைய நோக்கமல்ல; அறிவு வளர்ச்சியே முக்கிய நோக்கமாயுள்ளது. நாமும் அந் நோக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததல்லவா? மேலும் நமது வழக்கிற் புகுந்துவிட்ட சொற்களெல்லாம் தமிழ் மொழிச் சொற்களே. ஒரு கடலில் எத்தனையோ ஆறுகளிலிருந்து நீர் வந்து பெருகலாம். ஏதாவது ஓர் ஆற்றிலிருந்து வந்து கலந்த நீரை நீக்கி விட முடியுமா? மற்றைய நீர்கள் மட்டுந்தான் 'கடல்' ஆகும் என்று சொல்லுவது பொருத்தமாகுமா? தமிழ்மொழியும் ஒரு கடல் போன்றது என்பதை நாம் மறக்கலாகாது.

புராண இதிகாசக் கதைகள்

வேறோர் இயக்கம் வந்துள்ளது. அதுவும் தமிழ் செல்லும் நெறியில் குறுக்கிட்டிருக்கிறது. கிரேக்க மொழியிலுள்ள கதைகளை உண்மையென்று சொல்லுவாரில்லை. என்றாலும், அக்கதைகள் ஐரோப்பிய இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டு, அவைகளுக்கு அழகு தந்து நிற்கின்றன என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இக்கதைகளை அறியாதவர்கள் ஐரோப்பிய இலக்கியங்களை அறிந்து கொள்ள முடியாது. அதுபோலவே தான் நமது புராண இதிகாசக் கதைகள். நமது வாழ்விலே இக்கதைகள் ஊறிவிட்டன. நமது இலக்கியங்களிலே இக்கதைகள் நிரம்பியுள்ளன. எனவே, 'இவைகள் நம் அறிவுக்குப் பொருத்தமற்றன; ஆதலால் இவைகளை நமது மாணவர்கள் படிக்கக் கூடாது' என்று சொல்லுவது சிறிதும் பொருத்தமாக மாட்டாது.

மேலே விவரித்த வகுப்புவாதக் கொள்கைகளிலிருந்தும் தமிழ் விடுதலை பெறவேண்டும். இதற்குச் சுருக்க வழியொன்று தோன்றுகிறது. வள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பன், இராமலிங்க சுவாமி, பாரதி, தேசிக விநாயகம்பிள்ளை என்ற அறுவருடைய நூல்களையும் நமது மாணவர்கள் தினசரி படிக்க வேண்டும். படித்து வந்தால் தமிழ் மொழியின் விடுதலையை மாணவர்களே நிறைவேற்றி விடுவார்கள்.

3. தமிழும் சுதந்திரமும்*

இன்று நமது தேசம் ஒருவாறு சுதந்திரம் அடைந்து விட்டது. ஆனால், அந்நியரது தொடர்பு முற்றும் நீங்க வில்லை. தேசம் முழுமையும் ஒரே ஆட்சிக்குள்ளும் அமைந்து விடவில்லை; பிளவு பட்டிருக்கிறது. எனவே பூர்ண சுதந் திரத்தை நாம் அடைந்து விட்டோமென்று எண்ணுவதற்கு இல்லை. காந்திஜியும் இவ்வாறுதான் கருதுகிறார். நாம் இத்தினத்தைக் கொண்டாடுவதற்குக்கூட நியாயமில்லை என்று சில காலத்திற்கு முன் அவர் எழுதி வெளியிட்டார். ஆனால், பல ஆண்டுகளாக நமது தலைவர்கள் முயற்சி யெடுத்து வந்ததன் பலனை நாம் எதிர்பார்த்திருந்தோம். சிறிதளவேனும் அம்முயற்சி பயன்பட்டு விட்டது என்று மகிழ்ச்சி கொள்வது இயற்கை தானே? நாம் அடைந்துள்ள வெற்றி சிறிதளவு அன்று, பேரளவேயாம். இதனைப் பெரிய தோர் வெற்றியென்றே சொல்லுதல் கூடும். அடிமை வாழ் விலிருந்து நமது தேசம் சுயாட்சி பெற்றுவிட்ட தென்பது சிறு வெற்றியா? அந்நியரது தொடர்பு பூர்வ சரித்திரத்தின் சின்னமென்றே நாம் கருதல் வேண்டும். சுதந்திரத்தின் ஆரம்ப நிலையில் இத்தொடர் சில நன்மைகளை விளை விப்பதுமாகலாம். எனினும், இந்த அளவோடு நில்லாதபடி, காந்திஜியின் கருத்துப்படி பூரண வெற்றி அடைய அருள் புரிய வேண்டுமென்று பாரத மக்களாகிய நாம் அனைவரும் இறைவனை இன்று பிரார்த்தித்துக் கொள்வோம்.

ஒற்றுமை வேண்டும்

பூரண வெற்றி யடையாததற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. அது என்ன என்றால், சகோதரர்களாக வாழவேண்டிய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அன்பு - உணர்ச் சியின்றிப் பகைமை-உணர்ச்சி கொண்டிருப்பதேயாகும். இத னாலேயே நமது தேசம் பிளவுபட்ட ஆட்சிக்குள்ளே இன்று அமைந்திருக்கிறது. தனிப்பட்ட சாதியாரின் நன்மையை

*15—8—47 சுதந்திர தினத்தன்று வெளிவந்த கட்டுரை

முதலாவதாகக் கொண்டு, தேசத்தின் நன்மையை இரண்டாவதாகக் கருதி வருகிறோம். இதனால் ஏற்பட்டுள்ள கேடு சொல்லுந் தரத்த தன்று. முதலாவது, பிற தேசத்தவர்கள் நம் தேசத்தை நன்கு மதியாமல் போகிறார்கள். சில தேசத்தவர்கள் நம்மவர்களை அடிமைகள்போல் நடத்தி வருகிறார்கள். சில தேசத்தவர்கள் நம்மவர்களைத் தங்கள் தேசத்தில் இறங்கிச் சில தினங்கள் இருப்பதற்குங்கூட அனுமதிப்பதில்லை. அந்நிய தேசத்திலிருந்து இங்கே வருபவர்கள் நமக்கு எஜமானஸ்தானம் பூண்டு நம்மவர்களை இழிவுபடுத்துகிறார்கள். இரண்டாவது, தனித்தனிச் சாதியார்களின் நன்மையுங்கூட நன்றாக முற்றுப் பெறுவதில்லை. மூன்றாவது, அந்நியர் ஆட்சித் தொடர்பு நமது தேசத்தில் நீடித்திருப்பதற்கு இது ஒரு காரணமாகிறது. இப்படியாகப் பல வகையான கேடுகள் உளவாகின்றன. இவற்றையெல்லாம் எண்ணி நாம் ஒற்றுமைப்பட்டு வாழ வேண்டுமென இன்று உறுதி பூண வேண்டுவது அவசியம்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்ற பாரதியார் வாக்கு எப்பொழுதும் நம்முடைய மனத்திலே குடிகொண்டிருக்க வேண்டும். பலன் விளைவைக் கருதாதபடியே, நிஷ்காமியமாக அன்பு பூண்டு, சகோதரத்வம் பேணி நாம் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று காந்தியடிகள் கூறுகிறார். இந்த அன்பு நெறி, காரணங்காட்டி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலானதாகும். இந்த அன்பு நெறியைப் பேணுதற்குப் பாரத மக்களாகிய நாம் அனைவரும் இன்று முதற்கொண்டாவது முற்படுதல் வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள நம்மவரில் ஒரு பெரும் பகுதியார், அன்பு நெறியையும் கவனியாது, பலாபலன்களையும் கருதாது, ஒற்றுமைப்பட்டு வாழ்தலில் மனம் கொள்ளாமல் தனிப்பட வாழ்தலையே விரும்புகின்றனர். இவ்வகையான தனிப்பட்ட வாழ்வை ஒரு சில தலைவர்கள், நிரம்பிய ஆலோசனையின்றி, ஊக்கி வருகிறார்கள். ஒரு சிலர் தங்கள் சுய நன்மையின் பொருட்டு இதனை ஆதரிக்கின்றனர். வட நாட்டிற்கும் நமது தமிழ் நாட்டிற்கும் யாதொரு தொடர்பும் எப்பொழுதும் இருந்ததில்லை என்ற கருத்தை விஷம்போல் பரப்பி வருகிறார்கள். ஆனால், உண்மை எது என்பதை எளிதில் நாம் அறிந்து கொள்ளலாம். நமது

சமயங்களை எடுத்துக் கொள்வோம். நமது தெய்வங்கள் வடநாட்டிற்கும் உரிய தெய்வங்களே. புறநானூற்றில் கடவுள் வணக்கச் செய்யுளில் சிவபெருமானது நீலகண்டம்,

மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே

என்று குறிக்கப்படுகிறது.

நீல மணிமிடற்றொருவன் போல

எனப் பிற இடங்களிலும் வந்துள்ளது. நற்றிணையில்,

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே

என்று திருமாலைக் குறித்து வணக்கம் கூறப்படுகிறது. இங்ஙனமே இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களும் தமிழ் நாட்டினர்க்கும் உரிய தெய்வங்களாகத் தொல்காப்பியம் கூறுகிறது. உயிர், மறுபிறப்பு, நல்வினை, தீவினை, பந்தம், வீடு பேறு முதலிய நமது சமயக் கொள்கைகள் வடநாட்டினருக்கும் உரியவையேயாகும். பஞ்ச பூதங்கள், அவை தோன்றிய வரலாறு முதலிய பௌதிக சாஸ்திரக் கொள்கைகளும், கிரஹண வரலாறு பற்றிய கொள்கைகளும், நால்வகை வருணம் எண்வகை மணம் முதலிய சமூகக் கொள்கைகளும், இந்திர விழா முதலிய உற்சவங்களும், இன்னும் கலைப் பண்பிற்குரிய பல அம்சங்களும் சங்க காலந்தொட்டே வட நாட்டிலும் தென்னாட்டிலும் ஒன்றாயிருந்தமை சங்க இலக்கியங்களால் அறியலாம். அன்றியும், பாரத தேசம் முழுமையும் ஒன்று என்ற கொள்கையும் பண்டைப் பழங்காலந் தொட்டே இருந்து வந்திருக்கிறது.

புறநானூற்றில் 'பொற்கோட்டி மயமும் பொதியமும் போன்றே' என்று நமது தேசத்தின் வடகோடியையும் தென் கோடியையும் இணைத்துக் கூறுகிறார் ஒரு புலவர். இரு பேரெல்லைக்குள்ளும் அகப்பட்ட நிலம் முழுவதும் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர் ஒரு சிலர் உளரெனச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

குமரியொடு வட இமயத்து
ஒரு மொழி வைத்து உலகு ஆண்ட
சேரலாதற்கு...

என்று வாழ்த்துக் காதையில் வருகின்றது. ஆகவே வடநாட்டினரும் தென்னாட்டினரும் வெவ்வேறு மனித வர்க்கத்தினர் என்ற (different races) கொள்கை பிற்காலத்ததே என்று அறியப்படும். இலக்கியங்களாலும் சரித்திரங்களா

லும் எட்ட முடியாத பண்டைப் பழங்காலத்தில் இவ் இரு நாட்டினரும் வெவ்வேறு வர்க்கத்தினரா யிருந்திருக் கலாம். ஆனால் இரண்டு வர்க்கங்களும் ஒன்றாய்க் கலந்து பல நூற்றாண்டுகளாகிவிட்டன. இப்போதுள்ளவர்கள் அனைவரும் கலப்பு வர்க்கத்தினரே. சிலர் தம்மை ஆரிய ரென்று கூறிக் கொள்வதும், சிலர் திராவிடரென்று கூறிக் கொள்வதும் பொருளற்ற வெறுங்கூற்றுக்களே. இங்ஙனம் கூறிக் கொண்டு, தென்னாட்டினர்க்குத் தனிப்பட்ட ஒரு ஸ்தானம் வேண்டுமென்று வாதிப்பது சரித்திர விரோதமும், மனித வர்க்க சாஸ்திர விரோதமுமாம்; எல்லையற்ற கேடும் பயப்பதாகும். ஆனால் மொழி பற்றிய மாகாணப் பிரிவினை அவசியமேயாகும். அது வேறு விஷயம்.

பிரிவினை மனப்பான்மை

பிரிவினை மனப்பான்மை நமது தாய்மொழியாகிய தமிழ் விஷயத்திலும் புகுந்து விட்டது. நம்மவருள் ஒரு சாரார் தேசப் பிரிவினைக்கு இணங்கவில்லை. ஆனால் வடமொழிக் கலப்பின்றித் தமிழ் தூய நிலையில் வழங்க வேண்டுமென்று இவர்கள் வற்புறுத்துகிறார்கள். சிலர் இயன்றவரை தமிழ்ச் சொற்களை வழங்க வேண்டும் என்று கூறிக் கொண்டே வடமொழியை வெறுக்கிறார்கள். இவ்வெறுப்பு பலதரத் திலுமுள்ளது; பல காரணங்களாலும் அதிகரிக்கின்றது; வலிமையுறுகின்றது. இந்தக் காரணங்களையெல்லாம் ஊன்றி நோக்கவேண்டிய அவசிய மில்லை. பன்னூறு ஆண்டு களாகத் தமிழ் சென்று கொண்டிருந்த நெறியைக் கட்டுப் படுத்தும் இம் முயற்சி நமது தாய் மொழியின் சுதந்திரத் தைக் கட்டுப்படுத்துவதாகும். இதை மட்டும் நாம் கருத் தில் வைத்திருக்க வேண்டும்.

வட சொற்கள் தொடக்கத்தில் சிறிய அளவில் தமி ழில் புகுந்து காலஞ் செல்லச் செல்ல மிகுந்து கொண்டே வந் திருக்கின்றன. இச் சொற்கள் மேற் குலத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களிடையிலும், கற்று வல்லவர்களிடை யிலும், நூல்களிலும் மட்டும்தான் வழங்கி வந்திருக்கின்றன என்று எண்ணுதல் தவறு. நம் மக்களில் எல்லாப் பகுதியின ரிடையிலும் பல வடசொற்கள் வழங்கி வந்து, இன்றும் நிலைத்துள்ளன. சில உதாரணங்கள் தருகின்றேன்: அச்சு, அதிகாரம், அதிட்டம், அன்னம், ஆதி, இட்டம், இயக்கி, இந்திரன், ஈயம், ஈனசாதி, உத்தரவு, உருவம், உட்டணம்,

ஊசி, எசமான், எமன், எந்திரம், ஏலம், ஒட்டகம், கலியாணம், காரியம், குடும்பம், சந்திரன், சனி, சாதி, சூரியன், தண்டம், தந்திரம், நகம், நாயன், பக்கம், பாவம், புதன், மந்திரம், மாசம், முகம், முக்கியம், முழுத்தம், யமன், ரத்தம் ராசா, லச்சை, லாபம், வசியம், வஞ்சனை முதலிய சொற்கள் இழிந்த சாதியினரென்று கருதப்படுவோர்களிடையிலும் காணப்படுகின்றன. இவைகள் தமிழோடு தமிழாய் ஊறி வளர்ந்து பரவிவிட்டன.

இப்படியே சமயம், தத்துவம், சாஸ்திரம், கலை, சரித்திரம் முதலிய பல துறைகள் பற்றியும் வடசொற்கள் தமிழில் புகுந்து விட்டன. இச்சொற்கள் கற்றறிந்த மேற்குலத்தவரிடையே மிகவாய்ப் பரந்துள்ளன. இவற்றையெல்லாம் தமிழினின்றும் நீக்கிவிடுதல் இயலாது. வடமொழிச் சாஸ்திரம் கலை முதலியவற்றை அந்தணகுலத்தவர் மாத்திரம் இயற்றினரென்று கருதுவதும் பிழை. பிற சமயத்தினரும், அந்தணரல்லாதாரும், இந்திய தேசத்தில் தமிழ் நாட்டினர் உள்படப் பல நாட்டினரும் வடமொழிச் சாஸ்திரங்களையும் கலைகளையும் இயற்றியுள்ளார்கள். வடமொழி அந்தணர்க்கு மட்டும் உரிமையுள்ள மொழியன்று. எனவே, அந்தணர் மீது கொண்டுள்ள வெறுப்பை வடமொழியின் மீது செலுத்துதல் தவறாம். இம்மொழி இந்தியப் பொது மொழியாகும். இதனைத் தமிழ் மக்கள் இழப்பது தங்கள் பூர்வார்ஜிதத்தை இழப்பது போலாம். சமுதாய உலகத்தில் தமிழ் மக்களாகிய நாம் எப்படித் தனித்து வாழ்தல் இயலாதோ, அப்படியே மொழியுலகில் தமிழ் தனித்து வாழ்தல் இயலாது. வடமொழியை நன்றாகப் பயன்படுத்துவதற்குத் தமிழுக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

தமிழ்மொழி தலைமை

இவ்வாறு கூறிய அளவில் வடமொழிக்கு நாமும் நமது தமிழும் அடிமையாக வேண்டுமென்பது எனது கருத்தன்று. உயிர்த் தத்துவத்தோடு வழங்கி வரும் நமது தமிழ்தான் நமது தென்னாட்டில் தலைமை வகிக்க வேண்டும். வடமொழி தலைமை பூணுதல் தகாது. ஏனெனில், முதலாவது, அது இயற்கைக்கு முற்றும் விரோதம். வடமொழி வழக்கொழிந்த மொழி. அதன் வாழ்வு முடிந்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இவ் வழக்கொழிந்த மொழியை வழக்கத்தில் நின்று உயிர்த் தத்துவத்தோடு இருக்கும் தமிழ்மொழியைக் காட்டிலும் முதன்மையுடையதாகக் கொள்வது இயற்கையோடு சிறிதும் பொருந்தாதல்லவா?

இரண்டாவது, பிற நாடுகளை நோக்குவோம். ஆங்கில நாட்டில் ஆங்கிலந்தான் முதன்மை பெறுகின்றதேயன்றி லத்தீனும் கிரேக்க மொழியும் அல்ல. இங்ஙனமே பிறநாடுகள் அனைத்திலும் அவ்வத்தேசத்து வழங்கும் மொழியே முதன்மை பெறுவதாயுள்ளது. தமிழும் இம்முறையைத்தான் மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, வடமொழியை மட்டும் கற்பதனால், புராணக் கதைகளையும், தற்கால விஞ்ஞான சாஸ்திரத்திற்கு முரணான கருத்துக்களையும் கொள்கைகளையும் மட்டுமே நாம் அறிதல் கூடும். இவற்றால் அஞ்ஞான இருள் அதிகரிக்குமேயன்றி உண்மை யறிவு வளர்ச்சியுற மாட்டாது. ஆதலால் உண்மையறிவு வளர்வதற்கு அது உதவமாட்டாது. எனவே அதற்கு முதலிடம் கொடுப்பதும் தகாது.

நான்காவதாக, வடமொழியை மாத்திரம் கற்றவர்கள் அதன் பேரழகில் மயங்கி அதற்கு அடிமையாகி, அம் மொழியிலுள்ள அபத்தக் கொள்கைகளையும் கருத்துக்களையும் உண்மை என்று நம்பியவர்களாய், அறிவின் எல்லைப்பரப்பு முழுவதும் அம்மொழியிலுள்ள சாஸ்திரங்களாலும் பிற நூல்களாலும் அறிந்து அளவிடப்பட்டுப் போயின என்னும் கருத்துடையவர்களாய், அறிவு வளர்ச்சியே இனி இல்லை என்னும் கொள்கையினராய், இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் தமிழ் மக்களாயிருந்தும் இவ்வாறு கருதுவது பெரிதும் இரங்கத் தக்கது. கேடு விளைவிக்கும் இப்பொய் யுணர்ச்சியை மக்கள் மனத்தில் விதைக்கும் மொழி தலைமையிடம் வகித்தல் கூடாது.

ஐந்தாவது, வடமொழியை அதன் கலைப்பண்பிற்காகவே இப்பொழுதும் நாம் பெரிதும் போற்றிவருகிறோம். தற்காலத்திற்குரிய உண்மையறிவு வளர்ச்சியின் பொருட்டு அதனைப் பேணுவாரில்லை. தற்கால அறிவை உதவுதற்குரிய மொழி உயிருடன் இருக்கும் தமிழ்மொழியேயாகும். அதுவே முதன்மை பெறத்தக்கது.

ஆறாவதாக, நாம் அறிவில் முன்னேற்றமடைய வேண்டுமாயின், அது வழக்கில் நிலைத்து நின்று நமது உயிரோடு உயிராய்க் கலந்து ஒன்றிவிட்ட தமிழ் மொழியின் மூலமாகத்தான் அடைய இயலும்.

இவைபோன்ற காரணங்களால் தமிழ்மொழியே நமது நாட்டில் தலைமை பெறுதற்கு உரியதாகும் என்பது தெளிவாய் விளங்கும். இவ் இரு மொழிகளுக்குமுள்ள வேறுபாடு வாழ்வு முடிந்து உயிர் நீங்கிய ஒருவனுக்கும், உயிருடன் வாழ்ந்து வரும் ஒருவனுக்குமுள்ள வேறுபாடு என்பதை நாம் நன்றாய் உணர்தல் வேண்டும்.

வடமொழி போற்றுதல்

ஆகவே, நமது முதற்கடமை தாய்மொழி பற்றியதே. எனினும், அதனையடுத்து நாம் அன்பு பூண்டு பேண வேண்டுவது வடமொழியாகும். இம்மொழி பன்னூறு ஆண்டுகளாக நமது மொழியோடு உறவு பூண்டு உதவி வந்திருக்கிறது. நமது வாழ்க்கையையும் நமது மொழியின் வாழ்க்கையையும் இது நெறிப்படுத்தி வந்துள்ளது. நமது நாட்டின் பூர்வ சரித்திரத்தை உணர்வதற்கும் இது பெரிதும் உதவுகிறது. இதனால் விளங்கும் கலைப் பண்பாடு என்றும் நம்மாற் போற்றற்குரியது. இதிலுள்ள இலக்கியங்கள் கற்கக் கற்கப் பேரின்பம் தரவல்லன. இதன் சொல்லினம் நமது மொழிக்குப் பல துறைகளிலும் பயன்படுவது, இவற்றையெல்லாம் மனத்துக் கொண்டு வடமொழியை, வெறுப்பின்றி, உவப்போடு நாம் கற்றுப் போற்றுதல் வேண்டும். இதுவும் நமது கடமையாம் என்பதை வற்புறுத்துகிறேன்.

எனவே, சுதந்திர உலகில், தமிழ் சுதந்திரமாய் இயங்கும் நிலையில், வடமொழிக்கு அடிமை என்னும் நிலையில்லாது உண்மையான அறிவு வளர்ச்சி, கலைப்பண்பின் மேம்பாடு என்பனவற்றையே முக்கியமாகக் கொண்டு, வடமொழியின் உதவியும்பெற்று, தமிழ்மொழி நன்கு இயங்குதற்குரிய ஆற்றல் பெறுதல் வேண்டும். இனி நமது தமிழ் மேற்கூறிய ஆற்றல் பெறுதற்குரிய நெறிகளில் மிகவும் முக்கியமானவற்றைச் சிறிது நோக்குவோம்.

தமிழ்ப் பேரிலக்கியங்கள்

தமிழ்ப் பேரிலக்கியங்கள் நிலைத்த மதிப்புடையன. அவை ஒழிந்துள்ள பிறநூல்கள் பெரும்பாலும் வடமொழியைப் பின்பற்றியனவே. ஆதலால் விஞ்ஞான அறிவு பரவுவதற்கு இவை பயன்படமாட்டா. இது உறுதியே. இக்காரணத்தால்தான் ஸர் ஸி.வி. ராமன் நமது இந்திய தேசத்து நூல் நிலையங்களிலுள்ள நூல்களில் பெரும்பாலனவற்றை

எரித்து அழித்துவிட வேண்டும் என்று ஒரு சமயத்தில் கூறினார். அவர் கூறியபடி நாம் செய்வதானால், அது பிழையாகும். ஆனால் அவரது உட்கருத்து போற்றத்தக்கதாகும். விஞ்ஞான அறிவுதான் சிறந்த அறிவு, அதுதான் அறிவு என்று சொல்லுதற்குரிய தகுதி வாய்ந்தது. அவ் அறிவைத் தமிழ் மக்களிடையே பரப்புவதற்கும் அதனை மேன்மேலும் வளர்ப்பதற்கும் நமது தமிழ்மொழி வல்லதாதல் வேண்டும். அறிவுத் துறைகள் அனைத்தினும் தமிழில் நூல்கள் பிறத்தல் வேண்டும். நமது தமிழ் மக்களுக்கு விஞ்ஞான நோக்கு (Scientific outlook) ஏற்படத் தமிழ் உதவுதல் வேண்டும். மேன்மேலும் அறிவை வளர்ப்பதற்குத் தக்க கருவியாக நமது மொழி அமைதல் வேண்டும்.

அறிவுத் துறைகள் பலவற்றிலும் தினம் தினம் உலகு முன்னேறி வருவதை அப்போதைக்கப்போது நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அறிவுத்துறை வளர்ச்சியில் நாமும் முயன்று பங்கு கொள்ளுதல் வேண்டும். இவற்றிற்கு எல்லாம் மேலை நாட்டு மொழிகளின் துணை இன்றியமையாதது. இலக்கிய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்குங்கூட இவற்றின் துணை வேண்டியதாகும். இத்துணையை முற்றும் பெறுவதற்கும் இனி எக்காலத்தும் பெற்று வருவதற்கும் பூரணமான சுதந்திரம் நமது தமிழ்மொழிக்கு வேண்டும். நமது தேசத்தைப் பெருமையுறச் செய்வதற்குச் சுதந்திரம் உதவுவதுபோல, அறிவு நூல்கள் நிரம்பி, தமிழ் மொழி பெருமை பெறுவதற்கு இவ்வகைப் பூரண சுதந்திரம் என்றும் அதற்குரியதாதல் வேண்டும்.

மொழியின் இயற்கை

ஆங்கிலமொழியின் துணையை விரும்பாது, நமது தமிழ்மொழி தெய்வத்தன்மை யுடையதென்றும், இம்மொழியில் எல்லாவகையான அறிவு நூல்களும் நிரம்பியுள்ளன என்றும், இதற்கு இனி வளர்ச்சியே வேண்டுவதில்லை என்றும், இது பூரணத்தின் எல்லையை அடைந்து விட்டதென்றும் தமிழர்களுள் ஒரு சாரார் கூறிவருகின்றனர். இக் கொள்கையைப் போலக் கேடு விளைவிப்பது வேறு ஒன்றும் இல்லை. இதை எத்தனை முறை வற்புறுத்திக் கூறினாலும் தகும். என்று நமது மொழி பரிபூரண நிலையை அடைகிறதோ அன்று அதனுடைய இறப்பு திண்ணம். ஆனால் பரிபூரண நிலையை அது என்றும் அடைய முடியாது.

மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு எல்லையில்லை. அது போன்றதே மொழியின் வளர்ச்சியும். அறிவை வளர்த்தும், அறிவினால் வளர்க்கப்பட்டும் செல்வது மொழி. இந்த உண்மையை மனத்திற் கொண்டு நமது தமிழ்மொழியைச் சுதந்திர நெறியிற் செல்லவிடுவதே அறிவுடையோர்கள் தம் கடமையாகும். மொழியின் இயற்கை மாறிக்கொண்டே செல்வதாகும். அதனை ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு ஜீவநதிக்கு ஒப்பிடுதல் தகும். ஜீவநதியை அணையிட்டுத் தடுக்கலாமா? நதியின் இயற்கை ஓடிக்கொண்டே யிருப்பதல்லவா? பரிபூரண நிலையை நமது தமிழ்மொழி அடைந்து விட்டது என்று கூறுவது அவ்வாறு அணையிட்டுத் தடுப்பதாகும். அதன் இயற்கையான சுதந்திர வாழ்க்கையைத் தடுத்து விலங்கிட்டுச் சிறையிலடைத்து, உண்டியும் உதவாது அதனைக்கொல்ல முயல்வதே இந்தப் பரிபூரண நிலைக் கொள்கை.

நமது தேசத்தின் சுதந்திரத்தைப் புறத்தே வெளியுலகில் காணப்படும் ஆட்சி முறைகளால் எளிதில் அறியலாம். ஆனால் நம் மொழியின் சுதந்திரம் அப்படி எளிதில் அறியப் படுவதன்று. அதற்கு உரியதான ஆற்றலைக் கொண்டுதான் அதன் சுதந்திரத்தை நாம் ஊகித்துணர்தல் கூடும். அவ் ஆற்றல் அறிவு வளர்ச்சியிலே புலப்படுவது. யாதோர் இடையூறுமின்றி, நேரிடும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது, அறிவு வளர்ச்சிக்கு உரிய நெறிகளையெல்லாம் கையாளுதற்குத் தக்க சுதந்திரமே நமது தமிழ்மொழிக்கு வேண்டுவது. தேசம் சுதந்திரம் அடைந்தது போலவே, நமது மொழியும் சுதந்திர நெறியிற் செல்வதற்குத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒத்துழைப்போமாக!

4

பாரதி யுகம்

தேசீய கவி

நமது தமிழ் நாட்டிலே தேசாபிமானத்தை விதைத்துச் செழித்து வளரச் செய்தவர்களுள் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார். பல பெரியோர்கள் இத்துறையில் உழைத்து வந்தார்கள். ஒரு சிலர் அங்கங்கே அதன் அவசியத்தைப் பிரசங்க வாயிலாக நமது மக்களுக்கு அறிவுறுத்தி வந்தனர். சிலர் தேச சேவையில் ஈடுபட்டு, அதன் மூலமாக அவ்வுணர்ச்சியை வளர்த்தனர். சிலர் பத்திரிகை வாயிலாக நாட்டுப் பற்றுத் ததும்பும் அரிய கட்டுரையை எழுதி, அதன் வழியாக நம்மவருக்குப் புது நெறியைக் கற்பித்து வந்தனர். சிலர் சமுதாய சேவையில் ஈடுபட்டு நின்று, அதன் மூலமாகத் தேசாபிமானத்தைப் பரவச் செய்தனர். பாரதி தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொண்டார். உணர்ச்சி ததும்பும் செய்யுளைப் போல அனைவரையும் - கற்றார் கல்லாதவர், செல்வர், வறிஞர், முதியர் இளைஞர், ஆண் பெண் முதலிய அனைவரையும் - வசீகரிக்கத் தக்கது வேறு யாதும் இல்லை. இவ்வகைச் செய்யுள்கள் மூலமாக நம்மவர்க்குத் தேசாபிமானத்தைப் புகட்டியவர் பாரதி. ஆகவே இவரைத் தேசீய கவியென நம்மவர் முடிசூட்டியது மிகப் பொருத்தம் என்றே கருதுகிறேன்.

தேசீய கவியின் கனவுகள் சில கைகூடும் காலம் வந்து விட்டது. நமது நாட்டவர்களே ராஜ்யபாரம் ஏற்று நடத்தத் தொடங்கிவிட்டார்கள். நாட்டைப் பீடித்திருக்கும் வறுமையைப் போக்க வழிதேட முயலுகிறார்கள். கல்வி செழித்தோங்க வேண்டுமென்று கங்கணம் கட்டி, வேலை செய்து வருகிறார்கள். பொது மக்களது நன்மை ஒன்றே அரசாங்கம் போற்ற வேண்டியது என்ற கொள்கை வேரூன்றி விட்டது.

வையம் மன்னுயி
ராக அவ் வையகம்
உய்யத் தாங்கும்
உடலன்ன மன்னவன்

என்ற கம்பன் வாக்கு உண்மையாய்ப் பலித்துவிட்டது.

அரசியல் - உலகில் மட்டுமின்றி, இலக்கிய - உலகிலும் பாரதியின் கனவு நனவாகிறது. முன்பெல்லாம் பெரும்பாலும் தெய்வத்தின் மீதும், அரசர், சிற்றரசர்கள், பிரபுக்கள் முதலானோர் மீதும் கவிதைகள் புனைந்து வந்தனர். சொற்கள் பொருளற்று, கவிதைகள் உயிரற்றுக் கிடந்தன. சம்மானம் பெறுதலொன்றையே கவிஞர்கள் தமது முதற் பெரு நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். கலையுணர்ச்சி, கவிதையுணர்ச்சி முதலியன இரண்டாம் நோக்கமாகவே புறக்கணிக்கப்பட்டன. இந்தக் குறைகள் நீங்குவதற்குப் பாரதி மிகப்பெரிதும் முயன்றார். முயற்சியில் வெற்றியும் அடைந்துவிட்டார். யாசகத்தின் பொருட்டுப் பாடும் கவிஞர்கள் இக்காலத்துப் பெரும்பாலும் இல்லை.

கவிதைப் பொருள்

கவிதைக்குரிய பொருள்ாகப் புதுவிஷயங்களைப் பாரதி கொண்டனர். பழம்பொருள்களைக் கூறுமிடத்தும், புதிய முறையில் கலைநயம் தோன்ற, கவித்துவ ஆற்றலோடும் உணர்ச்சி வேகத்தோடும் பாடியுள்ளார். ஸரஸ்வதி ஸ்தோத்திரத்தை எடுத்துக்கொள்வோம். இவ்வகையான ஸ்தோத்திரத்துக்குப் பழம் பெருமையும் உண்டு:

சொல்லின் கிழத்தி
மெல்லியல் இணையடி
சிந்தை வைத்து இயம்புவல்
செய்யுட்கு அணியே

என்று தண்டியலங்காரம் தொடங்குகிறது.

தவளத் தாமரை
தாதார் கோயில்
அவளைப் போற்றுதும்
அருந்தமிழ் குறித்தே

எனச் சேனாவரையர் தம் உரையைத் தொடங்குகின்றனர். கம்பராமாயணத் தனியன்களில் 'பொத்தகம் படிக மாலை' என்று தொடங்குஞ் செய்யுளொன்று உளது. கம்பர் ஸரஸ்வதியந்தாதி யொன்று பாடின ரென்றும் கட்டுரைப்பர். அதில்,

ஆய கலைகள்
அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும்
என்னம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு
வாராது இடர்

என்பதும் உள்ளது. குமரகுருபர சுவாமிகளும் சகலகலா வல்லி மாலை ஒன்று பாடினர். இத் தேவியைக் குறித்துப் பல தனிப்பாடல்களும் உள்ளன. அவற்றுள் ஒன்று:

கடிமலர்கள் கொய்திட்டுக் கையிரண்டும் கூப்பி
அடிபணிய வேண்டிற் றளிக்கும்—நொடிவரையின்
வண்டார் கருங் கூந்தல் வஞ்சியிடைக் கிஞ்சுகவாய்
வெண்டா மரைமேல் விளக்கு

இவற்றில் உயிரும் ஆற்றலும் காண்பது அரிது.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்று ஒளிர்வாள்;
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்து உட்பொருள் ஆவாள்

என்ற பாரதி பாட்டின் இனிமையும், புதுமையும், கருத்து நயமும், உண்மை உணர்ச்சியும், கவித்துவப் பெருமையும், முற்காலத்து ஸரஸ்வதி ஸ்தோத்திரங்களில் சிறிதும் இல்லை. இத் தேவியின் மனம் இது போன்ற கவிதைகளா லன்றிக் கனியுமா?

இவ்வகைப் பாட்டல்களைப் பாடிய பாரதி கவிதை-உலகில் ஒரு நூதன யுகத்தைத் தொடங்கிவிட்டனர். ‘பாரதி யுகம்’ என்று இதனை வழங்கலாம். அவர் கனவும் கவிதையும் கவிஞர்கள் உள்ளத்தில் தூண்டா விளக்காக நின்று ஒளிர்க!

5. பாரதியும் தமிழும்

பாரதி நாட்டு - விடுதலைப் பாடல்களைப் பாடினார்: விடுதலை உணர்ச்சியை நமது தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊன்றிச் செழித்து வளரச் செய்தனர். பெண்களின் விடுதலைக் கும்மி பாடினார், நமது பெண்கள் உள்ளத்திலும் கல்வி விருப்பத்தையும், சுதந்திர உணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் தழைத்தோங்கச் செய்தனர். இக்காலத்துப் பெண்கள்,

காத லொருவனைக் கைப்பிடித்தே—அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் – அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வம் அடி

என்று எக்களிப்போடு பாடி மகிழ்கிறார்கள். இவ் இரண்டு வகை விடுதலையோடு பாரதியின் முயற்சி நின்று விடவில்லை மூன்றாவதொரு விடுதலைக்காகவும் அவர் முயன்று உழைத்து வந்திருக்கிறார். அதுதான் 'தமிழ்க்கு விடுதலை' யாகும். இவ்விடுதலையைப் பற்றி அவர் பாடவில்லை என்பது உண்மை. ஆனால் அவர் பாடல்கள் எல்லாவற்றிலும் இவ் வகை விடுதலையை நாம் எளிதிற் காணலாம்.

பல நூற்றாண்டுகளாய் வளர்ந்து பெருகிக் கொண்டே வந்த தமிழ்மொழி கம்பன் காலத்தில் அதன் உச்ச நிலையை அடைந்தது. சங்க காலத்தும் அதன் பிற்காலத்தும் தோன்றிய இலக்கியங்களினின்றும் எவ்வளவு வளம் பெற முடியுமோ அவ்வளவு வளமும் தமிழ்மொழி பெற்றது. அன்றியும் மிகப் பூர்வகாலந் தொட்டு அகில பாரத மொழியாய் வழங்கிய வட மொழியின் இலக்கியங்களாலும் தமிழ் வளம்பெற்றுச் செழித்தது. ஆரிய நாகரிகமும், தமிழ நாகரிகமும் ஒன்று கூடித் தென்னாட்டில் பரவிய கலப்பு நாகரிகத்தின் பேரெல்லையை அறிவுறுத்துவதாக, நமது தமிழும் செழிப்புற்றோங்கியது. காவிரிப் பேராறு இருகரையும் நிரம்பிப் பெருக்கெடுத்து ஓடி ஜீவராசிகளை ஊட்டிச் செல்வது போல, தமிழ்மொழி என்னும் ஜீவ நதியும் பெருகிப் பரந்து தமிழ் மக்களுக்கு அறிவு வளம் ஊட்டிச் சென்றது.

தமிழின் வேகம் குறைதல்

ஆனால் கம்பன் காலத்திற்குப் பின்பு, இத்தமிழ்ப் பேராறு பல கால்வாய்களாகப் பிரிந்துவிட்டது. சிற்றரசர்களைப் பற்றிய புகழ்ச்சிப் பாடல்களும், காதற் பிரபந்தங்களும், புராணங்களும், பலவகைப் பிரபந்தங்களும் தமிழில் நிரம்பலாயின. இவற்றால் தமிழின் வன்மையும் வேகமும் சிறிது சிறிதாகக் குறைவுபடலாயின. இவ்வகை இலக்கியங்களுங்கூட நாளடைவிற் குறைந்துவிட்டன. தமிழ் மக்களது அறிவு வளர்ச்சியும், அனுபவ வளர்ச்சியும் தடையுற்று நின்றன. தமிழும் தனது இயற்கை வலிமையையும், ஜீவ வேகத்தையும் இழந்து விட்டது. பேராறாகவும், சிற்றாறுகளாகவும் கால்வாய்களாகவும் நாடு செழிக்கப் பரந்தோடி வந்த நீரோட்டம் முடிவில் சேற்றுப் பள்ளங்களில் ஆழ்ந்து தேங்கிக் கட்டுக்கிடையாய் நிற்பது போல, தமிழும் கட்டுக்கிடையாய் நின்று விட்டது. தமிழுக்கு விமோசனம் இல்லையென்றுகூடச் சிற்சிலர் கருதத் தொடங்கிவிட்டனர் இந்நிலையைத்தான்,

> **புத்தம் புதிய கலைகள்—பஞ்ச**
> **பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
> **மெத்த வளருது மேற்கே—அந்த**
> **மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.**
> **சொல்லவுங் கூடுவதில்லை—அவை**
> **சொல்லுந் திறமை தாய் மொழிக் கில்லை;**
> **மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த**
> **மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்**

என்று ஒரு 'பேதை' கூறியதாகப் பாரதியார் பாடியுள்ளார்.

தமிழ் புத்துயிர் பெற்றது

இவ்வாறு கட்டுக்கிடையாகக் கிடந்த தமிழ்மொழியை விடுதலை செய்து அதற்குரிய இயற்கை வலிமையோடு மீண்டும் ஜீவநதியாகப் பெருகிப் பாயும் படிச் செய்தவர் கவி பாரதியாரே. அவர் பாடல்களிலும் வசனங்களிலும் குற்றுயிராய் மரணாவஸ்தையிலிருந்த தமிழ் புத்துயிர் பெற்று ஜீவவேகத்துடன் நடனமிட்டுக் களித்தாடுகிறது.

இச் செயற்கரிய காரியத்தைப் பாரதியார் எவ்வாறு செய்து முடித்தனர்? இதற்கு விடை தமிழ்ச் சொற்கள், தமிழ் நடை, நூற்பொருள் என்ற மூவகையிலும் தமிழ் இருந்த நிலையை நோக்கினால் எளிதில் அறியலாம்.

வழக்கொழிந்த சொற்கள்

புலவர்கள் தங்கள் நூல்களில் வழங்கி வந்த சொற்களில் செம்பாதி வழக்கொழிந்தவையாயிருந்தன. தற்கால வழக்கிலுள்ள சொற்களைக் கூடியவரை நீக்கி விடுதலே தங்கள் கடமையெனக் கருதினார்கள். வழக்கற்ற, கரடுமுரடான, அருஞ்சொற்களைக் கையாளுவதில் மிக்க ஊக்கங் காட்டி வந்தனர். சில பொருள் கருகலான சொற்களாயிருந்தன. சில ஆடம்பரமிக்க சொற்களாயிருந்தன. கீழ் வருகின்ற உதாரணத்தை நோக்குங்கள்:

> ஆயிடைச் செல்வோர், உடுத்தன வெள்ளுடையாய், உருநிறம் வெண்ணிறமாய்த் திகழ்தலின், பானிறக் கலிங்கம் உடுத்து மாலைக் காலத்திற் கூலத்தில் உலா வரும் வெண்ணிற மக்களை நிகர்த்தனர். அம்மறுகையடுத்துக் கொடிகள் துயல்வரப் பன்னிறக் கண்ணாடிச் சாளரம் அமைத்து நாற்றிசையுங் காண்வர ஏற்றிய விளக்கொடு நின்ற மாடங்கள், கலங்கரை விளக்கமென இலங்குற்றன.

இதில் எத்தனை அருஞ் சொற்களும் வழக்கொழிந்து மாண்டுவிட்ட சொற்களும் உள்ளன என்று பாருங்கள்! இவ்வகை நூல்களைக் கற்பது என்பது கையில் அகராதியை வைத்துக் கொண்டுதான் முடியும்.

ஆடம்பரச் சொற்கள்

ஆடம்பரச் சொற்களைக் கையாளுவோர் உயிரற்ற பிணத்தை அலங்கரிப்பதுபோல், பொருளற்ற தம் வாக்கியத்தைப் பகட்டு மொழிகளால் நிரப்பி விடுகின்றனர். மேலே காட்டிய வாக்கியங்களில் தமிழ்ப் பகட்டு மொழிகளும் நிரம்பியுள்ளன. வடமொழிப் பகட்டு மொழிகளை வழங்குவதிலும் நம் தமிழ்மக்கள் ஊக்கங் காட்டியுள்ளார்கள்.

> மஹாராஜாவே, நின்னுடைய ஆஜ்ஞாலங்கள் பயத்தால் அவர்களைக் கொண்டு வனம்புக்கு, கிரிதுர்க்கா த்வாரத்துள் உறையும் முநீவரன் என நிர்ப்பய விவிக்த விஹாரியாகி நிர்மலமாகிய லேச்யை யுடையதொரு மஹாபல கேஸரி ஸந்நிஹித மாயினவாறே அதன்முன் அவரை உய்த்தேன்.

இனி இப்புலவர்கள் கையாண்ட தமிழ் நடையை நோக்குவோம். நாம் கற்ற பண்டை நூல்களிலிருந்து பல தொடர்

களையும், செய்யுட்களையும் வசனமாக அமைத்துவிடுதலே 'உயரிய' செந்தமிழ் நடையெனக் கொள்ளப்பட்டது. இதுவே வழக்கமாகவும் முடிந்தது. இன்றும் அவ்வாறே ஒரு சிலர் எழுதி வருகின்றனர்:

> கல்வியுடையவரே கண்ணுடையவர். கல்லாதார் முகத் திரண்டு புண்ணுடையவரே. கல்லாதார் மக்கள் உடம் பிற் பிறந்திருந்தும் விலங்கினை ஒப்பாவார்; அன்றியும் மக்களுட் பதடியுமாவார். கேடில் விழுச்செல்வ மாகிய கல்வியைப் பெற்றவர் நீரால், நெருப்பால், கள்வரால், தாயத்தாரால், பிறரால் அழிவுறும் ஏனைச் செல் வத்தைச் செல்வமென மனங் கொள்ளார்...கற்றவர் குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழ கையும் மதித்திடார்.

இதுபோன்ற தமிழ் வசன நடையினால், ஆசிரியரது கல்விப் பெருக்கமும், ஞாபக சக்தியும் நமக்குப் புலனாகின்றன. இவற்றை நாம் வியக்கலாம். ஆனால் இந்நடையை நாம் வியக்க முடியாது. பழஞ் சுண்டற் கறியை ஆசிரியர் வாச கர்களுக்கு விருந்து செய்ய முயன்றிருக்கிறார். நமது அறிவு வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் இந்நடை பெரியதொரு தடையாக உள்ளது. மேலும், சோலையை நினைத்த அளவில் 'நாண்மலர்ச்சோலை' என்றும், சந் திரனை நினைத்த அளவில் 'பன்மீன் நடுவட் பான்மதி' என்றும், உலகத்தை நினைத்த அளவில் 'கடல் புடை சூழ்ந்த மலர் தலையுலகம்' என்றும் இவ்வாறாக எழுது வதில் கருத்தின் வளர்ச்சிக்குச் சிறிதும் இடமில்லை. இவைபோன்ற தொடர்களைக் கிளிப் பிள்ளைபோலத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதால், இவைகளுக்குப் பொருளே இல்லாமற் போய்விட்டது. இப் பரம்பரை-அடைமொழிகளால் வசன நடை அர்த்தமற்று, உயிரற்றுப் போய்விடுகிறது.

ஒரு சிலர் எதுகை நயங்களையும் மோனை நயங்களையும் எதுகை - மோனை நயங்களையும் வசன நடையில் அமைத்துத் தம்முள்ளே மகிழ்ந்து வாசகர்களுக்கு நகைப்பு ஊட்டி வந்தனர்:

> இடியொலி கேட்ட பாம்பெனத் துடிதுடித்து அடியற்ற மரமெனப் படிமிசைத் திடீரென வீழ்ந்து...
>
> ஆராயாமற் காரியஞ்செய்து அரும்பழி பூண்டமைக்கு நெஞ்சு அயர்ந்து, அரியணை மீது வீழ்ந்து அன்றே உயிர் அகற்றினான்.

> கண்ணைப் பறிக்கின்ற இவ்வுரு விண்ணின்றும் இறங்கிய மின்கொடியோ! மின்னலெனின், விண்ணில் இயங்குவதல்லது மண்ணிடை இயங்காதே! வானிலும் கண்டபொழுதே மறைவதன்றே! கண்ணைவிட்டகலாத இவ்வுரு விண்ணுறை அணங்கோ! விஞ்சையர் மகளோ! வரைவளர் தெய்வமோ! நிரை மலர்த் தடத்துறை நீரரமகளோ!

இங்ஙனம் எழுதுபவர்களும் தங்கள் அறிவுச் சூன்யத்தைச் செய்யுட்குரிய இந்த நயங்களால் மறைக்க முயலு கின்றனர்.

இன்னும் சிலர் 'மலை கல்லி எலி பிடிப்பவர் போல சில அற்பக் கருத்துக்களை வெளியிடப் படாடோபமான பெரிய சொற்களை வழங்கி வந்தனர்:

> இழிதகவ! இஞ்ஞான்று ஈதென்னை? வறுமைக் காலத்தில் முதுமைத் துறவி உறழ ஸாஸா என்னக்கடையு யிர்ப் பெறுகின்றனை?

இவ்வாக்கியத்தைக் கேட்டதும் சிரிக்காமல் யாராவது இருக்க முடியுமா? சிறு கைக் குழந்தைக்கு ராக்ஷஸன் அணியத்தக்க பெரிய உடுப்புக்களை அணிவது போல, இவர்கள் எழுதுகிறார்கள். கருத்துக்கேற்ற நடையில் எழுத வேண்டுமென்ற தகுதி யுணர்ச்சியே இவர்களுக்கு இல்லை.

வேறு சிலர் பழைய நூல்களில் விளங்காத பகுதிகளைத் தமது வசனத்தில் அமைத்துத் தமது பெரும் புலமையை விளம்பரப்படுத்தி வந்தனர்.

> இன்னிசையாழை இடவயின் தழீஇக் கொண்டு மாடகந் திரித்து, வாரியும், வடித்தும், உந்தியும், உறழ்ந்தும் பாடிமகிழும் இளமகளிர் மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி, முருகவேளை வழிபடும் வரையர மகளிரை ஒத்தனர்.

இதனைப் போன்றதொரு பாண்டித்திய படாடோபமே கீழே தரப்படுவதும்:

> விழுச் சுடர்ச் செம்பொன் மேருமால் வரையைத் தலைப் படலுறுவாராய் நாவலந் தீவிற் பாரத வருடத்தினையெய்தி, ஆண்டு நின்று நெறி வினாவினார்க்கு அஃதறிந் துள்ளார் ஆண்டுக் காட்டிய நெறியே செந்நெறியாயினும், அந்நெறி இமயத்தை இடையிட்டுக் கிம்புருட

> வருடத்திற் செலுத்த, அஃது ஏம கூடத்தை இடையிட்டு அரிவருடத்திற் கொண்டு செலுத்த, அது நிடதத்தையிடையிட்டு இளாவிருத வருடத்திற் கொண்டு செலுத்த இவ்வாறு நாற்றிசையுள் யாண்டு நின்றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு இளாவிருத வருடத்திற்கொண்டு செலுத்துதலும், அஃது இடையீடின்றி மேருமால் வரைக்கே செலுத்துதலும் போல, புறச் சமய, அகச் சமயங்களினின்றும் மேற்சென்றுசென் றேறிச் சைவத்தை யெய்தப் பெற்றோர்.

எத்தனை அருமையான பூமிசாஸ்திரம் இது? ஆசிரியர் கருதிய கருத்துத்தான் எத்தனை விளக்கமாக இப்பூமிசாஸ்திர உதாரணத்தால் தெரிவிக்கப்படுகிறது!

மேலே காட்டிய பூமிசாஸ்திர விஷயங்கள் வடமொழிக் கட்டுக் கிடைச் சரக்குக்கள். தமிழை நசிப்பதற்குத் தமிழ்க் கட்டுக் கிடைகள் போதா என்று வடமொழியினின்றுங் கட்டுக் கிடைகளைத் தேடிக் கொண்டு வந்து, தமிழின் தலையிலேற்றி அதனை அழுத்திக் குறுகச் செய்து, தரையோடு தரையாகத் தேய்த்து விடுவதற்குச் சில புலவர்கள் முயன்றார்கள். எத்தனையோ அரிய இலக்கியச் செல்வம் படைத்தது வடமொழி. அதனை ஒதுக்கி விட்டு ஒன்றுக்கும் உதவாத பொருள்களில் இப் புலவர்களின் கவனம் செல்வதற்குக் காரணம் தெரியவில்லை. வடமொழியின் கூட்டுறவினால் தமிழ் எத்தனையோ நன்மைகளைப் பெற்றிருக்கிறது. இது உண்மை. இது போலவே, இக்கூட்டுறவைத் தக்கபடி பயன்படுத்தாமையால், எத்தனையோ தீங்குகளும் தமிழிற் புகுந்துவிட்டன.

அணியிலக்கணம் என்ற பெயரால்

அணியிலக்கணம் என்ற பெயரால் தமிழிற்கு விளைந்த துன்பங்களைச் சொல்லி முடியாது. இவ் இலக்கணம் தான் தமிழ் நடையை இயல்பிற்கு மாறாக விலங்கிட்டுத் தடைசெய்து, முற்றும் கெடுத்துவிட்டது. வடமொழி ஆசிரியர்களைப் பின்பற்றி வசனமும், செய்யுளும், எழுதத் தொடங்கி, தாம் கையாளுவது தமிழ் தானோ என்று ஐயுறும்படியாகச் செய்துவிட்டது. மாறனலங்காரம், தண்டியலங்காரசாரம் முதலியவற்றில் வரும் உதாரணச் செய்யுட்களை நோக்கினால் மேற்கூறியதன் உண்மை புலப்படும்.

கற்பகப் பாவடி வாரணம் பாற்கடக் தோன் செந்தமிழ்க்
கற்பகப் பாவடி வாரணங் கண்டவர் கோனருள்வி
கற்பகப் பாவடி வாரணங் கார்மலர்க் காமொய்தில்லைக்
கற்பகப் பாவடி வாரணம் யான்பெறக் காட்டிடுமே

வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாகாவா நீயாயா வா

என்பன போன்ற செய்யுட்கள் தமிழணங்கு குற்றுயிராகக் கிடக்கிறாள் என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

புலவர் தம் காவியங்களில் நகர் வருணனை, மலை வருணனை முதலியன செய்ய வேண்டுமென்று அலங்கார நூல்கள் வற்புறுத்தின. அவ்வாறே செய்ய அப்புலவர்களும் முற்பட்டனர். ஆனால் பாவனாசக்தி வாய்ந்திருந்தால் தானே இவ்வருணனைகள் செய்ய இயலும்? சிறிது முயன்று சில வருணனைச் செய்யுட்களை இயற்றுவார்கள். இதற்குள் இவர்களது பாவனா சக்தி வறண்டு மாய்ந்து விடுகிறது. உடனே திரிபு, இரண்டடிப் பாடகமடக்கு, ஏகபாதம், ஓரெழுத்து விகற்பத்தான் வந்த மடக்கு, திரிபங்கி, கோமூத்திரி, முரசபந்தம், அஷ்டநாகபந்தம் முதலியவற்றில் இறங்கிப் பொருளற்ற கிருத்திரிம அலங்காரங்களில் தங்கள் அறிவாற்றலைப் பாழாக்குவர். இவ்வாறு வதையுண்ட தமிழுக்கு என்றேனும் விடுதலை ஏற்படுமா என்று யாவரும் கவலையுறுதல் இயல்புதானே?

தமிழ் நூல்களில் நூற் பொருள்

இனி, தமிழ் நூல்களில் அமைந்துள்ள நூற்பொருள்களை நோக்குவோம். பொதுவாக, இவைகள் தெய்வங்களைக் குறித்த தோத்திரங்களாகவும், பிரபந்தங்களாகவும் புராணங்களாகவும் இருந்தன. தோத்திரங்களெல்லாம் பெரும்பாலும் ஒரே தன்மையன. தாமோ, பிறரோ, சொல்லியவற்றையே திரும்பத் திரும்பத் சொல்லுவதில் சுவை ஏதேனும் காணமுடியுமா? முடியாது. இவற்றிலே ஆழ்ந்த தத்துவங்களை நாம் எதிர் பார்க்கலாம்; ஆனால் இவ்விஷயத்திலுங்கூட நாம் ஏமாற வேண்டியதுதான். தமது தத்துவ நூல்களிலுள்ள சங்கேதபதங்களைக் காணலாம். ஆனால் கருத்து வளர்ச்சி, உண்மையறிவு, கவிதை உணர்ச்சி, இவற்றிற்கு இப்பதங்களின் அடுக்குக்களால் சிறிதும் பயனில்லை.

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்கள வசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த
தற்பர விச்வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகாலமும் நினைவனோ
அற்புத வகோசர நிவிர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
அனுபூதி யனுகூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணூடிருந்த குருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே

இத் தாயுமானார் பாடலில் வாய் நிரம்பிய சொற்கள் உள்ளன. தத்துவ-எலும்புச் சட்டகம் தோன்றுகிறது. ஆனால் ஆழ்ந்த தத்துவ உணர்ச்சியை எழுப்புவதற்கு இது வன்மையுடையதல்ல. கவிதை உணர்ச்சியோ, இப் பாட்டினுள் தங்கி நிற்க மறுத்துப் பறந்தோடி விட்டது. இதிலே வடமொழி யென்னும் நாகபாசத்தால் கட்டுண்டு தமிழ்மொழி உயிர் குறைந்து மரணாவஸ்தை யெய்தி யுள்ளது.

பிரபந்த வகைகள்

தெய்வம் பற்றித் தோன்றியுள்ள பிரபந்த வகைகளும் வேறுபாடுகள் சிறிதும் இன்றி ஒரே அச்சில் வார்த்தனபோல உள்ளன. உதாரணமாக, கோவை, உலா முதலிய பிரபந்தங்களைக் கூறலாம். இவைகளில் உலாப் பிரபந்த வகையிலாவது சில வேற்றுமைகள் உண்டு; கோவையில் அதுவும் இல்லை. கோவையிலே காட்சி முதல் கார்ப்பருவம் கண்டு இரங்கல் வரையுள்ள பல துறைகளும் அழகு யாதுமின்றி, கவித்துவச் சிறப்பின்றிப் பாடப்பட்டுள்ளன. ஸ்தலம் பற்றியுள்ள சரித்திரக் குறிப்புக்கள்கூட இவற்றில் கிடைத்தல் அருமை. ஆகவே, இவற்றில் ஒரு சில தவிர, ஏனைய எல்லாம் ஒருவகைப் பயனும் தரத்தக்கன அல்ல இவற்றில் காணும் தமிழும் ஒரு படித்தாய், சிறந்த நயம் யாதுமின்றி உள்ளது. ஏதேனும் ஒரு ஸ்தலத்தையோ

மூர்த்தியையோ எடுத்துக் கொண்டு எல்லா வகையான பிரபந்தங்களையும் பாடி முடிக்க வேண்டும் என்பதே வழக்கமாக ஏற்பட்டுவிட்டது. இவ்வகைப் பிரபந்தங்களே நம் நாட்டில் மலிந்து விட்டன. தமிழ்க் கவிதைப் பயிரை வேரோடு அழித்துவிட்ட விஷப்பூண்டுகள் என்று இவற்றைச் சொல்லலாம்.

புராணங்கள்

இனி, புராணங்களை நாம் எடுத்துக் கொண்டால் அவற்றாலும் தமிழும், தமிழ் நாட்டு மக்களும் சீர்கேடுற்ற நிலைமைதான் நமக்குத் தெரிகின்றது. வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களின் மொழி பெயர்ப்புக்கள் சில தமிழில் உள்ளன. இவை போதா என்று தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் புராணம் எழுதத் தொடங்கி விட்டனர். இப்புராணங்களைக் காவிய லக்ஷணமுள்ளன போல இயற்றி இவற்றில் பல வகையான பொய் வரலாறுகளையும் புனைந்துரைத்து எழுதி வந்தனர். சூரியன், சந்திரன், இந்திரன், மஹரிஷிகள் பிரம விஷ்ணு ருத்ரர்கள், உமா தேவியார், அரசர்கள் முதலானவர்களுக் கெல்லாம் ஒரே கடமை ஏற்பட்டுவிட்டது! அவர்கள் தினந்தோறும் பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பூசித்து தங்களுக்கு முன்பு ஏற்பட்டுள்ள சாபத்தினின்றும் விமோசனம் பெறுதலே அவர்கள் வேலை. இவ்வகையான கதைகளை எழுதிவைத்துச் சமயத்தின் பேரிலேயே அருவருப்பு உண்டாகும் படியாகச் செய்து விட்டனர் இப்புராண ஆசிரியர்கள்.

இவர்கள் சில இடங்களிலுள்ள கட்டுக்கிடை நீரைத் தீர்த்தமெனக் கொண்டு, மோக்ஷதாயினி, பாபநாசினி என்பன முதலாகப் பேரிட்டு மகிழ்ந்து, தங்களுடைய பக்தியை வெளியிட்டிருக்கிறார்கள். இக்கட்டுக்கிடை நீர் நாற்றம் எடுப்பது போலுள்ளதுதான் இப்புலவர்களது தமிழும் உண்மையான தெய்வப் பற்றும், உண்மையான தமிழ்ப் பற்றும், உண்மையான நாட்டுப் பற்றும் நமக்கு உண்டாகாதபடி செய்துவிட்டது இவ்வகைப் புராணம் என்றே சொல்லலாம். நேர்மாறாக இவர்கள் செய்துள்ள கட்டுக்கதைகளின் மீது அருவருப்பும், இவர்கள் எழுதியுள்ள தமிழின் மீது அருவருப்பும், உண்டாகும்படி செய்து விட்டனர்.

இனி மக்களைக் குறித்துப் புலவர்களிற் சிலர் எழுதியுள்ள பாடல்களை நோக்குவோம். புராணங்கள் தோன்றுவதற்கு இங்கே இடமில்லை. ஆகவே, தோத்திரப் பாடல்களும், பிரபந்தங்களுமே, மக்களைப் பற்றியுள்ளன. பொய்யின் பேரெல்லையை இவ்வகை நூல்களிலே நாம் காணலாம். உண்மை என்பது மருந்துக்கும் இவற்றில் காணக் கிடையாது. உயர்வு நவிற்சியையே எப்பொழுதும் கையாண்டு உண்மையின் இயல்பையே இவர்கள் மறந்து விட்டார்கள். கூறுவனவற்றை ஆத்ம சுத்தியோடு கூற வேண்டும் என்ற நினைப்பும் இவர்களுக்கு இல்லை. 'மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறு' என்று கூறியபடி இவர்களுடைய இயற்கை அமைந்து விட்டது. ஒருபுலவர்,

கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லையென்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே

என்று தாம் செய்த பாபத்திற்காக இரங்குகிறார். தமிழ் நாட்டுப் புலவர்களுள் இவர் ஒருவர்தான் தாம் செய்தது பாபம் என்று இரங்கிப் பாடியவர். இவர் போன்ற புலவர்கள் பாடிய புகழ்ச்சிகளால் தமிழிற்கே உண்மையை உணர்த்தும் ஆற்றல் இல்லையோ என்று சிலர் ஐயுறும் படியாக நேர்ந்துவிட்டது.

இங்ஙனமாக, சொல், நடை கருத்துப் பொருள், நூற்பொருள் முதலிய பல விஷயங்களிலும் தமிழ் மிகச் சீர்கேடுற்ற நிலையிலே இருந்தது. இதனை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வருவது, அறிவும் ஆற்றலும் கல்வியும் பெரிதும் நிரம்பிய ஒரு பெருங் கவிஞனால் அல்லது, இயலாததாய் முடிந்தது. இவனும் புத்துணர்ச்சிகள் பலவும் பொருந்தியவனாய், பிற நாட்டு இலக்கியங்களை உணர்ந்தவனாய், தன் நாடு மேம்பட வேண்டும் என்ற நிலைத்த நோக்கம் உடையவனாய் உண்மை உரைப்பதிலே பெரு நாட்டம் உடையவனாய், அஞ்சாமையே தனக்கு அரணாக உடையவனாய் இருக்க வேண்டுவது அவசியமாயிற்று.

இவ் இயல்புகளுக்கெல்லாம் இலட்சியமாகத் தோன்றியவர் நமது தேசியகவி பாரதியார். பொய்யாக மக்களைப் பாடும் பொய்வாழ்வின் பெரும் பகைவரென்று இவரைக் கூறலாம். அடிமை வாழ்வு அழிய வேண்டுமென்று இரவும் பகலும் சிந்தித்து முயன்று வந்தவர். அதற்குரிய ஆத்ம சக்தி தம் நாட்டினர்க்கு வேண்டுமென்று பராசக்தியை வணங்கிப் போற்றியவர். நாடு முழுவதிலும் ஒற்றுமை-மனப்பான்மை நிரம்ப வேண்டுமென்று சங்க நாதம் செய்தவர். சாதி வேற்றுமை அறவே ஒழிய வேண்டும் என்றும் தீண்டாமைப் பேய் அணுகக்கூடாது என்றும் பறை முழக்கியவர். நாட்டுப் பற்று இவர் இதயத்திலே சுரந்து பொங்கி வழிந்தது. உண்மை ஒளியானது இவரது வாக்கினிலே சுடர்விட்டு இலங்கியது. இவருடைய பாடலிலேயும் இவ் உண்மையொளி காணப்படுகிறது.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்

என்று அருமையாகப் பாடிய புலவர் இவரே.

விடுதலை பெற்ற தமிழில்

விடுதலை பெற்ற தமிழில் தமது அரிய பாடல்களை இயற்றினார். இவருடைய தமிழ் கட்டுக்கிடை அன்று தினந்தோறும் வழங்கிவரும் மொழி. பேச்சு - வழக்கிற்கு ஒத்தநடை. இது, வருணனைகள், அலங்காரங்கள் எல்லாவற்றையும் நீக்கி, தனக்கு இயல்பாகவுள்ள பேரழகோடு விளங்குவது; இயல்பாகவுள்ள ஆற்றலோடும் சிறப்போடும் செல்லுவது. இவரது தமிழ் இவருடைய கருத்துக்களை வெளிப்படாமல் மறைப்பதற்கு இட்ட திரையல்ல. பாடல்களைப் பாடிய மாத்திரையில் பொருள் உணர்த்த வேண்டும் அவசியம் இன்றி, கருத்துக்கள் நம் மனத்தில் நேரே பாய்கின்றன. பாட்டிற்குரிய பொருள்கள் நம்முடைய அறிவை முற்றும் கவர்ந்துவிடுகின்றன. பாட்டினுடைய வடிவும் அழகும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. இங்ஙனம் தமிழ் விடுதலை செய்த இப் பெருங் கவிஞரைத் தமிழ் நாடு என்றும் மறவாது.

6. தமிழ்மொழிப் பற்றும் பிற மொழி வெறுப்பும்

நமது தேசத்தில் மொழிப் பிரச்னைகள் நாளுக்கு நாள் வலுவடைந்து பலராலும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரச்னைகளுக்கெல்லாம் ஆதாரமாய் நிற்பது தாய்மொழிப் பற்று. காலம், இடம் முதலிய எல்லைகளின்றி எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இம்மொழிப் பற்று வெளியாகி வந்துள்ளது. இது புலப்படும் நெறிகளும் எத்தனையோ வகையாகும்.

ஒவ்வொருவனும் தனது தாய்மொழியே உலகிற் சிறந்தது என்று நினைக்கிறான். வடமொழி தனக்கு உரியதாகும் எனக் கருதும் ஓர் இனத்தவன், அதனைத் ‘தேவபாஷை’ என அழைக்கிறான். தான் இங்ஙனம் அழைப்பது மட்டுமின்றி, அம்மொழியின் இயல்போடு யாதொரு தொடர்புமற்ற ‘தமிழ்மொழியைப் பேசும் இனத்தவனும் அதனை ஒப்புக் கொள்ள வேண்டும்’ என்கிறான். தமிழனும் தனது தாய் மொழி ‘வடமொழி’ யோடு ஒத்த பெருமையுடையதாக இறைவனால் படைக்கப்பட்டதெனக் கூறுகிறான்.

விடை யுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வட மொழிக்குரைத் தாங்கியல் மலயமா முனிக்குத்
திட முறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்

என்பது திருவிளையாடற் புராணம். வடமொழியோடு ஒப்பிடுதலை விரும்பாத தற்காலத்தே இறைவனைப் போல எக்காலமும் அழிவின்றியுள்ளது கன்னித் தமிழ் என்ற கருத்துப் பிறந்தது.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என்றனர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. சிலர் தமிழ் தான் இயற்கை மொழி என்பர். கருத்தளவில் நிற்கும் இந் நிலைமை மாறித் தற்பொழுது காரிய அளவிற்கு வந்து விட்டது. 'தமிழனாய்ப் பிறந்தவனுக்குத் தமிழ்தான் மூச்சு: அவன் உயிர்ப்பது தமிழ்; அவன் நினைப்பது தமிழில்; எழுதுவது தமிழில். தமிழ் பேசும் இனத்தவ ரிடையேதான் எளிதாக மூச்சு விட்டு வாழமுடியும்' என்று இவ்வாறான உணர்ச்சியோடு செயலில் இறங்கவும் தமிழ் மக்கள் முற்பட்டுள்ளனர்.

பிற மொழி வெறுப்பு

இச்செயல் பெரும்பாலும் பிறமொழி மீதும் பிற மொழி பேசுவோர் மீதும் வெறுப்பாக முற்றிவிட்டது. தமிழ்மொழி இலக்கண வரம்புடையது; பிற மொழிகளிற் சில இலக்கண வரம்பு அற்றவையெனத் திருவிளையாடற் புராண ஆசிரியர் கூறினர். ஆரியர்கள் பிற மொழி பேசும் மக்களை 'மிலேச்சர்' என்று இகழ்ந்தனர். இந்தச் சொல்லுக்குத் 'திருந்தாத மொழியைப் பேசுபவர்' என்று பொருள். வடமொழி திருந்துவதற்கு முன்னிருந்த மூல மொழிக்குப் 'பிராகிருதம்' என்று பெயரிட்டனர். இதற்கு அநாகரிக மொழி என்று பொருள். ஒரு பிராகிருத மொழியைப் பைசாச மொழி என்ற பெயரால் வழங்கினர். தமிழையும் சிறிது இகழ்ச்சியோடு வழங்கியும் குறிப் பிட்டும் வந்தனர் என்று கருத இடம் உண்டு. தமிழ் மக்களும் பின்வாங்கவில்லை. 'ஆரியர்'* என்ற சொல்லுக்கே மிலேச்சர் என்று தமிழ் நிகண்டுகள் பொருள் கூறுகின்றன.

தெலுங்கர் தமது மொழியைத் 'தெளிந்த தேன்' (தேட) என்றும், தமிழ்மொழியை அரவம் (பொருள் அற்ற ஒலி) என்றதனோடு அமையாது நீர்ப்பசையற்ற பாலைநிலம் (அத்வாநமு) என்றும் குறிப்பித்தனர். வடுகர் முதலியோரை நெருங்குதல் கூடாதென்று ஒரு பழைய செய்யுள் கூறுகிறது:

---

*ஆரியரை அவ்வாறு கூறுதல் தகாதென்று கருதி, சூடாமணி நிகண்டினைப் பிரதி செய்தோர் ஆரியர் என்ற தனை அநாரியர் என்று திருத்தி விட்டனர். திவாகர நிகண்டைப் பதிப்பித்தவர் இச் சூத்திரத்தையே ஒழித்து விட்டார். மிகப் பழைய ஏட்டுச் சுவடிகளில் இது காணப் படுகிறது. நகைச்சுவைக்கு உதாரணமாக 'ஆரியர் கூறும்' தமிழ்ப் பேச்சைச் செயிற்றியனார் என்ற ஆசிரியர் தந்துள்ளனர்.

வடுக ருருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயருமை என்றிவை யாரும்
குறுகார் அறிவுடையார்

பிற தேசங்களிலும் இது போன்ற சுயமொழிப் பற்றும் அந்நிய மொழி வெறுப்பும் காணப்படுகின்றன. கிரேக்கர்கள் பிற மொழி பேசும் மக்களைப் *'பார்பெராய்' (Barbaroi) என்று குறித்தனர். சீன மக்கள் தெற்குச் சீனத்தில் வாழ்ந்துவந்த சில வகையினரைத் 'தென் மிலேச்சர்கள்' 'அப்பாவிகள்' என்று பொருள்படும் சொற்களால் வழங்கினர்.

மேலே கூறிய விருப்பு வெறுப்புக்களின் காரணமாக மொழி பற்றிய ஜாதீயமும், தேசீயமும் விளைகின்றன. ஆனால் இது குறித்து நாம் அதிகமாக வெட்கப்பட அவசியமில்லை. உலகில் தேசீய இனத்தவர் எல்லாரிடத்திலும் இது காணப்படுவதே.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்றார் பாரதி. ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் மொழி தான் உலகிற் சிறந்தது என்று எண்ணுதல் முற்றும் இயல்பே. பிரெஞ்சுக்காரர் தங்களுடைய அழகிய பிரெஞ்சு மொழியொன்றே உலகில் கற்கத் தகுந்தது என்று கருதுகிறார்கள். உலகிலே இனிய மொழியாவது தமிழ் ஒன்றே என்பார் தமிழ்மக்கள். தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்று பொருள் கொண்டனர். ஸங்கீதத்திற்கு ஏற்ற மொழி தெலுங்கு ஒன்றே என்பர் தெலுங்கரும் பிறரும். இத்தாலியரும் தமது மொழியைக் குறித்து இவ்வாறே கூறுவர். ஸ்பானிஷ் மொழி பேசுவோர், உலகிலுள்ள பல ஜாதியாருங் கலந்த கலவை ஜாதியார். இக்கலவை உற்பத்தியை முற்றும் மறந்து, தாம் பேசிவரும் மொழியினையே ஆதாரமாகக் கொண்டு தாம் தனிப்பட்ட ஒரு வகுப்பினரென்று கருதிவிட்டனர்.

மொழி பற்றிய ஜாதீய உணர்ச்சி பலவகையாக வெளிப்படுகிறது. தூய மொழிக் கிளர்ச்சி இவ்வகைகளுள் ஒன்று. இது பெரும்பாலும் மொழி நூற் பயிற்சி இல்லாதவரால் தொடங்கப்படுகிறது. ஆனால் அடிக்கடி மொழி

*Babblers - உளறுபவர்.

மாற்றத்திற்குக் காரணமாகிறது. தமிழில் வடசொல் முதலிய பிற மொழிச் சொற்கள் கலத்தல் கூடாதென நம்மவர்களில் சிலர் விலக்கிவருகின்றனர். ஐரேனியர் தமது பாரஸீக மொழியினின்றும் துருக்கி, அராபியச் சொற்களை விலக்க முற்பட்டு வருகின்றனர். ஜெர்மானியர் அந்நிய மொழிப் பதங்களைக் கடன் கொள்ளாது அவற்றை மொழி பெயர்த்து வழங்குதலை விரும்புகின்றனர். நெருப்பின் பெயராகிய 'ஆஸ்ரயாஸ' என்றதனைச் 'சேர்ந்தாரைக் கொல்லி' என வள்ளுவர் வழங்கியது இங்கே ஒப்பிடற்குரியது. ஒரு சில தமிழ் அறிஞர்கள் தமது பெயர்களிற்கூட வடசொல் இருத்தல் கூடாது என்று எண்ணி, அவற்றையும் மொழிபெயர்த்து வருகின்றனர். மணவழகு (கல்யாணசுந்தரம்) மதியழகன் (சோமசுந்தரம்) முதலியன உதாரணங்கள்.

ஒரு தேசீய மொழியே ஒரு நாடு முழுவதிலும் பரந்து வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தினர் முயற்சி செய்வதும் இவ்வகையைச் சார்ந்ததே. ஒரு நாட்டில் அங்கங்கே வழங்கும் பிராதேசிக மொழிகளையும் (Dialects) சிறுபான்மை மொழிகளையும் (Minority Languages) ஒழித்துவிட வேண்டுமென்று இவர்கள் முயல்கின்றனர். நமது நாட்டில் இப்போது அரசாங்கத்தினர் ஹிந்தியைத் தேசீய மொழியாக்க அரும்பாடு படுகின்றனர். இது போன்ற முயற்சிகள் பல தேசங்களில் நடைபெற்று வந்திருக்கின்றன. அவற்றின் வரலாறுகள் ஓரளவு பயன்படலாம். முஸ்ஸோலினி தமது நாட்டில் அங்கங்கேயுள்ள பிராதேசிக சபைகளை ஒழிய வைத்தனர். மொழி விளக்க-ஐரோப்பா படமொன்று (Linguistic map of Europe) வரைய ஆணையிட்டு அதில் மற்றைத் தேசங்களிலுள்ள பிராதேசிக மொழிப் பகுதிகளை விடாமற் குறிப்பிட்டு, இத்தாலி தேசத்தில் மட்டும் மொழிப் பிரிவினை யாதும் இல்லாததுபோல் ஒரே மொழி வழங்கும் நாடாகக் காட்டச் செய்தனர்.

பிரான்ஸ் தேசம் பொதுப்பட விரிந்த மனப்பான்மை உடையது. ஆனாலும் அதன் உட்பகுதியான பிரிட்டானியிலுள்ள கலாசாலைகளில் 'பிரெட்டன்' (Breton) மொழியைக் கற்பிக்கக் கூடாதென ஆணை பிறப்பித்தது. பிரெட்டன் மொழியில் விலாசம் எழுதிய கடிதங்களைக் கூடப் 'பிரிட்டன் மொழியில் விலாசம் தயாரிக்கப்பட்டுள்ளது' என்று முத்திரை குத்தி, பிரெஞ்சு தபால் இலாகாவினர் திருப்பிவிடுகின்றனராம். மொழி யடக்குமுறை ஐரோப்பா

வில் வெகு காலமாக நிகழ்ந்து வருகிறது. பிரெஞ்சுப் புரட்சியின் பிற்பாடு 1790இல் இதன் அரசாங்க ஆணை அந்நாட்டிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அம்மொழிகள் அபிவிருத்தி அடைவதற்கு அனுகூலங்களும் செய்யப்பட்டன. ஆனால் சிறிது காலம் கழித்து 'விடுதலை தந்த மொழி பிரெஞ்சுதான்; அதனால் அம்மொழியே உலக மொழி ஆதற்குரியது. அப்படி ஆவதற்கு முன் பிரான்ஸ் தேச முழுவதற்கும் அது தேசிய மொழியாகுக' என்ற மறுதலைக் கருத்துத் தோன்றிவிட்டது.

நூறாண்டு யுத்தத்திற்குப் பின், அதன் விளைவால் எழுந்த தேசீயவுணர்ச்சியால் இங்கிலாந்தில் பார்லிமெண்டு நடவடிக்கைகள் முதலியன ஆங்கில மொழியில் எழுதப்பட்டன. அக்காலம் வரையிலும் அவைகள் நார்மன்-பிரெஞ்சில் எழுதப்பெற்று வந்தன.

ருஷ்யா தேசத்தில் ட்ஸார்கள் காலத்தில் போலிஷ், லேட்டிஷ், லிதுவேனியன் முதலிய சிறுபான்மை மொழிகள் ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டன. சோவியத் ஆட்சியில் இதற்கு எதிரான முறை கையாளப்பட்டது. ஸ்டாலின் சோவியத் எல்லைக்கு அப்பாலும் வழங்கிய சிறுபான்மை மொழிகளை ஆதரித்து வந்தனர். தமது கொள்கை பிற இடங்களிலும் பரவுவதற்கு இது அனுகூலமாயிருந்தது. ஆனால் இச் சிறுபான்மை மொழிகளில் ஏதேனும் ஒன்று தேசீய மொழியாக முற்றிவிடும் நிலமை நேர்ந்தால் அல்லது அது வழங்கிவரும் பிரதேசங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுத் தனிப்பட்ட தேசமாவதற்கு முயலும் நிலை ஏற்பட்டால் உடனே அடக்குமுறையைக் கையாண்டு அம்மொழி ஒதுக்கப்பட்டது. மலையாள தேசத்தில் தமிழ் படும்பாடு இத்தகையதுதான்.

ஒரு ஜாதிய மொழி பிறிதொரு ஜாதீய மொழியோடு போட்டியிடுங் காலத்தில், அவ்விரண்டு ஜாதியினருக்கும் மொழி பற்றிய தற்பெருமை உண்டாகிறது. 'ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க' முதலிய கூக்குரல்கள் இத் தற்பெருமையின், விளைவே. இது வளர்ந்து முதிருமாயின் பெருங் கேடுகள் உண்டாதல் கூடும். அரசாங்கத்தினர் இதில் தலையிடுவதில் மிக்க விழிப்புடையராயிருத்தல் வேண்டும். அவர்கள் தலையிட்டால், இயற்கையிலே கால அடைவில் மாய்ந்து போகக் கூடிய சில்லறை மொழிகள் பெரிதும் வலுவடைந்து ஜாதீய உணர்ச்சியை மிதமிஞ்சி வளரவிட்டுத்

தேசிய ஒற்றுமையைக் கெடுத்துவிடும். பிலிப்பிநோஸ் (Filipinos) நாட்டில் முதலில் ஸ்பேனிஷ் மொழியும் பிற்பாடு ஆங்கில மொழியும் பரவியிருந்தன. அது விடுதலை அடைந்தவுடன், இவ்விரு மொழிகளையும் நீக்கிவிட்டு, அந்நாட்டுக்குரிய பூர்வ மொழிகளில் ஒன்றைத் தேசியப் பொது மொழியாய்க் கொள்ளத் தீர்மானித்தது. ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, ஹிந்தியைத் தேசிய மொழியாக்குவதற்கு நமது நாட்டினர் எடுக்கும் முயற்சியோடு இது ஒப்பிடுதற்குரியது.

அந்நிய மொழி வெறுப்பிலிருந்து அந்நிய தேசிய வெறுப்பு எளிதில் விளைந்துவிடுகிறது. இத்தேசிய வெறுப்பினால் தேசியச் சொல்லுக்குப் புதுப் பொருள் ஏற்பட்டு விடுகிறது. (Dutch Courage) என்ற தொடர் இயற்கைத் தைரியமின்றி, சாராயம் குடித்து, வெறிகொண்டு போரிற் காட்டும் தைரியத்தைக் குறிக்கும். இதனோடு 'கேரளாசாரம்' என்பது ஒப்பிடற்குரியது. 'கேரளம் வானராசாரம் என்பதனைப் பின்பற்றி ஆசாரமின்மை அல்லது மிருக வொழுக்கம் என்று இத்தொடர் பொருள்படும். இவ்வாறே ஊணன், அவுநன் என்பவை ஜாதிப் பொருள் போய் அசுரத் தன்மையன் எனப் பொருள்பட்டுவிட்டது. வர்க்க வேற்றுமை (Racial discrimination) காட்டுதல் சமீப காலத்திலேதான் தோன்றியது. இது ஒரு போலி விஞ்ஞான சாஸ்திரக் கொள்கையை மேற்கொண்டது. நோர்டிக் அல்லது ஆரிய வர்க்கத்தினர் பழுப்புக் கலந்த பொன்னிறத் தலையும், வெண்ணிற மேனியும், நெடுமையும், நீண்ட தலையோடும் உடையவர்கள். இவர்கள் பால்டிக் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்களாம். அங்கிருந்து கீழே வந்து ஆல்பைன் அல்லது மத்தியதரைக் கடல் வர்க்கத்தினரை வென்று அவர்களோடு கலந்துவிட்டனராம். பின்கூறிய வர்க்கத்தினர் கறுப்பு நிறத்தவர், குட்டை மேனியர், அகன்ற தலையோடு உடையவர். இக்கொள்கை சென்ற நூற்றாண்டில் கோபிநோ (Gobineau) என்ற பிரெஞ்சுக் காரரால் முதல் முதல் வெளியிடப்பட்டது. பின்னர் மாடிஸன் கிராண்ட் (Madison Grant) என்ற அமெரிக்கரால் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீண்டும் வலியுறுத்தி வெளியிடப்பட்டது. இவ் வர்க்கக் கொள்கை யினரின் கருத்துப்படி, தெற்கு ஐரோப்பாவின் அனைத்து வகைப் பெருமைகளுக்கும் இவ்வர்க்கப் கலப்பே காரணமாம். கிரேக்கர், ரோமர், எபிரேயர், இடைக்காலப் பிரெஞ்சுக் காரர்,

ஸ்பேனியர், மறுமலர்ச்சி இத்தாலியர் இவர்கள் நாகரிக வளர்ச்சிக்குச் செய்த நற்செயல்கள் யாவற்றிற்கும் இந்த நோர்டிக் வர்க்கக் கலப்பே விளைநிலமாயிருந்ததாம்.

இந்த நோர்டிக் வர்க்கத்தினரை இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசும் வகுப்பினரோடு இணைக்க முயற்சி நடைபெற்று வந்தது. இந்தோ-ஐரோப்பிய மொழி, அதன் ஆதி நிலையில் நோர்டிக் வர்க்கத்தினரின் ஆதி மக்களுக்குரியதாக இருந்ததாம். இவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் வெற்றி கிடைத்துவந்தமையினாலே, தமது மொழியைத் தோல்வியுற்றவர்கள் மீது சுமத்திவிட்டார்களாம். தோல்வி யுற்றவர்களில் அங்கங்கே சில வகுப்பினர் இம்மொழியை ஏற்றுக் கொள்ளவில்லை. இங்ஙனம் ஏற்றுக் கொள்ளாதவர்கள், முற்காலத்திற் பெருவழக்காயிருந்த ஐபீரியன் மொழிகளையோ அல்லது திராவிட மொழிகளையோ பேசிவந்த ஆதிமக்களாம்.

ஆரிய வர்க்கம், மூல இந்தோ-ஐரோப்பிய மொழி என்ற இரண்டு கொள்கைகளையும் கலந்து, தமது அதிகார வரம்பு பரந்து நீடிக்க வேண்டும் என்ற கருத்துடன், தாமே உலகில் உயர்ந்தவர்களென்றும், பிறரெல்லாம் கீழானவர்கள் என்றும் ஜெர்மன் மக்கள் கருதி வந்தனர். எனவே உலக மக்கள் ஆளுதற்குரியோர். ஆளப்படுதலுக்குரியோர் என இரண்டு பகுதியினராயினர். ஆனால் மேற்கூறிய இரண்டு கொள்கைகளும் பொய்க்கால்களேயாம். இவற்றின் மீது நின்று யாரும் நடனமாட முடியாது. மொழிக்கும் வர்க்கத்திற்கும் இன்றியமையாத தொடர்பு யாதுமில்லை. ஏதேனும் ஒரு தேசிய மக்கள் மேலோரென்றும், பிறர் கீழோர் என்றும் கொள்வது சரித்திரத்திற்கு ஒவ்வாதது.

சமய வகுப்பு வேற்றுமை

இங்ஙனமே சமய வேற்றுமையினாலும் வகுப்பு வேற்றுமையினாலும் விளைந்த மொழி மாற்றங்களும் மிகப் பலவாம். ஆனால் இவையெல்லாம் ஒரே முடிவினைத்தான் தெரிவிக்கின்றன. போர்தான் இவற்றின் விளைவு. இப்போர்களும் பலவகைப்படும். சில தேசீயப் போர்; உதாரணம் நெப்போலியன் போர்கள், வகுப்புப் போர்; உதாரணம் ஹிட்லரது போர்கள் சில சமயப் போராக இருக்கலாம்; உதாரணம் முஸ்லீம்களுடைய ஜீஹாத்,

கிறிஸ்தவர்களுடைய குருஸேட். சில வர்க்கப் போரா யிருக்கலாம்; உதாரணம் ருஷ்யப் புரட்சிப் போர்கள்.

இப்போர்களில் மொழி மிகவும் அதிகமாக உதவு கிறது. அந்நிய மொழிப் படிப்பு அவசியம் என்பதையும் அவை காட்டுகின்றன. போர்களினால் மொழிகளில் சொற் களும் பெருகுகின்றன. ஆகவே, மொழி நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுகிறது என்று அறியலாம். இது மொழியின் குறையன்று. எந்தக் கருவியையும் தீமை விளைவிக்கவும் உபயோகித்தல் கூடும் அல்லவா! ஆதலால் அதனை ஆளும் மனிதனே தீமைக்குப் பொறுப்பாளி.

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

7. தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி

பகுப்பு நெறி, தொகுப்பு நெறி

ஒரு வீடு கட்ட வேண்டுமானால் செங்கற்களை அடுக்கி சுவர்களை முறைப்பட எழுப்பி அதை இயற்றி விடுகிறோம். இதுபோலவே, எழுத்துக்களை அடுக்கிச் சொற்களை முறைப்பட நிறுத்தி, வாக்கியங்கள் அமைக்கிறோம். வீட்டிற்குச் செங்கல் எப்படியோ, அப்படியே வாக்கியத்திற்கு எழுத்துக்கள். ஆனால், இரண்டிற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. சுவர்களை இடித்துச் செங்கற்களை முதல் முதலில் அமைத்துக் கொள்ளவில்லை. இதற்கு மாறாக, வாக்கியங்களைத் துண்டித்து, சொற்களைத் தனித்தனி கண்டு, பின் ஒலிகளை நிர்ணயித்து, பின் எழுத்துக்களை முதன் முதலில் அமைத்திருக்கிறோம். இதுவே வரலாற்று முறை. பகுப்பு நெறி, (analysis), தொகுப்பு நெறி (synthesis) என்று நெறிகள் இரண்டு. பகுப்பு நெறியால் வந்தது எழுத்து; பின் தொகுப்பு நெறிக்குப் பயன்பட்டது. பகுப்பு நெறியேயின்றி, தொகுப்பு நெறிக்குப் பயன்படுவது செங்கல். 'எழுத்துக்களால் ஆகியது சொல். சொற்களால் ஆகியது வாக்கியம்' என முறையை மாற்றி நீண்டகாலமாக நாம் மனப்பயிற்சி செய்து வந்திருப்பதால், உண்மை வரலாற்றை உணர்ந்து கொள்வது கூட நமக்கு அருமையாய்ப் போய்விட்டது.

ஒலி இலக்கணம்

இதைப் போலவே வேறோர் உண்மையும் நம் மனத்தை விட்டு நழுவி விட்டது. ஒவ்வோர் எழுத்தும் ஓர் ஒலியின் பிரதிநிதியே என்பது தான் இவ்வுண்மை. இதனை மறந்து விட்டதனால், பிற மொழிகளைப் போலத் தமிழ் மொழியையும் முற்றும் ஆட்சி கொள்ளும் ஒலியிலக்கணத்தை உணராது, தமிழின் ஜீவிய சரிதத்தையும், அதன் வளர்ச்சி நெறியையும், அதன் ரூபாந்தரங்களையும், அதன் கிளை மொழிகள் தோன்றிய வரலாற்றையும் தெரிந்து கொள்ளாமல் இன்றும் இருக்கிறோம். ஒலியானது ஆளுக்கு ஆள்,

இனத்திற்கு இனம், பிரதேசத்திற்குப் பிரதேசம், காலத்திற்குக் காலம் மாறி விடுவது. மாறிக் கொண்டே செல்வது தான் அதன் வாழ்க்கை நெறி. நிரந்தரமாக ஓடிக்கொண்டே இருக்கும் ஜீவ நதிக்கு ஒப்பாக இதனைக் கூடறலாம். எழுத்து அங்ஙனமன்று. இது ஒலியை நோக்க நிலையாயுள்ளது. இக்காரணத்தால் அக்ஷரம் (அழிவில்லாதது) என்று அதற்குப் பெயர் வந்தது. எளிதில் பரவிச் செல்லத் தகுவது. இதனால் ஓரளவில் கால தேச நியதியின்றிப் பரந்து வழங்கும் தன்மை பெற்றுள்ளது. கண்ணால் பார்க்கத் தகுவது. இதனால் பேசுவோனின்றியும் கருத்துக்களை உணர்த்தும் தன்மை உடையது. நமது அறிவு வளர்வதற்கு இவ்வெழுத்தே காரணமாயுள்ளது. 'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பது மிக ஆழ்ந்ததோர் உண்மை.

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் அதிலுள்ள ஒலிகள் அனைத்தையும் முற்ற உணர்த்துவன அல்ல. மக்களது கண்டத்தினின்றும் தோன்றக் கூடிய தனியொலிகள் கணக்கிட்டு முடியா. வீணை முதலிய வாத்தியங்கள் எதனாலும், அத்தனை ஒலிகளையும் உண்டுபண்ண இயலாது. இத் தனியொலிகளில் சிலவே மொழிக்கு உரியனவாகும். இவ் ஒலிகளின் எண் மொழிதோறும் வேறுபடும். அதிகமாகப் போனால், அறுபது தனியொலிகளுக்கு மேல் ஒரு மொழியிலும் இல்லை, பெரும்பாலும் இதற்கு மிகக்குறைவு பட்டே மொழியொலிகள் காணப் படுகின்றன. இம்மொழி ஒலிகளைக் கூடத் தனித்தனி உணர்த்துவதற்கு எழுத்துக்கள் அமைதல் இல்லை.

ஆகவே ஒவ்வொரு மொழியிலும், அதிலுள்ள எழுத்துக்களைக் காட்டிலும், அதன் ஒலிகள் மிகுதியாகவே காணப்படும். தமிழ் மொழியிலும் இவ்வாறே. உதாரணமாக, 'ஏன்' என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுவோம். இதன் முதலாவதாகிய ஏகார ஒலியை 'man' என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள உயிரொலியைப் போன்று நம்மிற் சிலர் உச்சரிக்கிறார்கள். இவ் ஒலியை உணர்த்துதற்குத் தமிழில் எழுத்தே இல்லை. மகன் என்ற சொல்லை 'மஹன்' என்றே பலரும் சொல்லுகிறார்கள். இடையிலுள்ள மெய் ஒலிக்குத் தமிழில் எழுத்தே இல்லை. இங்ஙனம் பல.

இக்குறைபாடுகளை நீக்குவதற்கு மூன்று உபாயங்கள் கையாளப்பட்டன. முதலாவது, நெருங்கிய தொடர்

புடைய பிற ஒலிகளின் எழுத்துக்களைக் கொண்டு, இடத்தின் ஆற்றலால் சில ஒலிகள் உணர்த்தப்பட்டன. உதாரணமாக, பங்கு, பஞ்சு, பண்டு, பந்து, பண்பு என்பனவற்றைக் காட்டலாம். இச்சொற்களிலுள்ள பகரத்தைக் காட்டிலும், இவற்றிலுள்ள கு, சு, டு, து, பு என்பன மெலிந்து உச்சரிக்கப்படுதல் காண்க. தமிழறிஞர் வகுத்துள்ள மெல்லினங்களை நோக்க, இந்தக் கு, சு, டு, து, பு, வல்லினமாதல் எளிதில் அறியலாம். இதனால் 'King' என்ற ஆங்கிலச் சொல்லிலும் காவ்யம் என்ற வட சொல்லிலும் காணப்படும் ககர ஒலியே முற்காலத்தில் இருந்ததெனல் தவறாகும். 'go' என்ற ஆங்கிலச் சொல்லிலும் 'குரு' என்ற வட சொல்லிலும் உள்ள மிருதுவான ககர ஒலியும் முற்காலத்தில் இருந்தது. இது போன்ற பிற வல்லின எழுத்துக்களுக்கும் மிருதுவான ஒலிகள் உண்டு. இரண்டாவது, வடமொழியிலுள்ள சில ஒலிகள், அவற்றிற்கு இனமான தமிழொலிகளாக மாற்றி உணர்த்தப்பட்டன. உதாரணமாக, வேஷம், வேடம் என்பதைக் காண்க. மூன்றாவதாக, வட மொழி ஒலிகள் அம்மொழிக்கு உரிய எழுத்துக்களையே கையாண்டு உணர்த்தப்பட்டன. உதாரணமாக, 'வேஷம்' என்ற வட சொல்லை 'வேஷம்' எனவே தமிழில் ஷகரமிட்டு எழுதுதல் காணலாம். இம்முறைதான் இப்போழுது பெரு வழக்கமாக உள்ளது. எனினும் மணிப்பிரவாள நடை தோன்றிய 9-ம் நூற்றாண்டு முதலே, இம்முறையும் கொள்ளப்பட்டதெனக் கூறலாம்.

இக் குறைபாடுகளே யன்றி, சில ஒலிகளைக் குறித்ததற்கு இரண்டு குறியீடுகள் வழங்கவும் இடம் இருந்தது. உதாரணமாக, ஐகாரத்தை அகரமும் யகரமும் இட்டு எழுதலாம்.

ஒவ்வொரு மொழியைப் பேசிவரும் ஒவ்வோர் இனத்தவரும் தனிப்பட்ட இயல்புகளுடைய ஒலிக் கணத்தையே வழங்குவர். ஆரிய மக்கள் ஒலிக்கணம் வேறு; தமிழ் மக்கள் ஒலிக்கணம் வேறு; ஜெர்மானியர் ஒலிக்கணம் வேறு; பிரெஞ்சுக்காரர் ஒலிக்கணம் வேறு; ஆங்கில மக்கள் ஒலிக் கணம் வேறு; இக்கணத்தின் இயல்பு சொற்களில் ஒலி தொடர்ந்து வரும் முறையில் நன்கு புலப்படும். ஹார்ஸ் (horse) என்ற ஆங்கிலச் சொல்லின் ஒலிக்கணம் தமிழில் வருதலில்லை. இங்ஙனமே 'குதிரை' என்று பொருள்படும் ப்வெர்ட் (pfred) என்ற ஜெர்மானியச் சொல்லின்

ஒலிக்கணம் ஆங்கிலம், பிரெஞ்ச் முதலிய மொழிகளிற்கூட வருதலில்லை. ஒலிக்கணத்தின் இயல்பு இவ் உதாரணங்களால் தெளிவாய் விளங்கும். தமிழிலுள்ள ஒலிக்கணத்தின் இயல்பு நமது மூதாதையரின் பேச்சு வழக்கத்தைப் (Speech habit) பொறுத்துள்ளது, இங்ஙனமே பிற மொழிகளின் ஒலிக்கணங்களின் இயல்பு, அவ்வம்மொழிக்கு உரியாரின் பேச்சு வழக்கங்களை பொறுத்ததாம். இவ்வழக்கங்களை நுட்பமாய் ஆராய்ந்து இன்ன இன்ன ஒலிகள் சொற்களை தொடங்குவன, இன்ன ஒலிகள் இறுதியில் வருவன, இன்ன ஒலிக்குப்பின் இன்ன ஒலிதான் வரும் என்ற நியதியை அறிந்து இலக்கணம் வகுத்த பெருமை முற்காலத்து ஆசிரியர்களுள் தொல்காப்பியனார் ஒருவருக்கே உரியது. மொழி மரபு முதலிய இயல்புகளில் இவ்விஷயம் கூறப்படுகிறது. இலக்கண உலகில் சக்கரவர்த்தி என்று கூறத்தகும் பாணினியாசிரியர் கூட இங்ஙனம் ஆராய்ந்தாரில்லை.

ஒலிகள் பிறக்கும் வரலாறு

ஒலிகள் பிறக்கும் வரலாறு தனியான ஒரு சாஸ்திரமாய் இப்பொழுது அமைந்து விட்டது. தமிழொலிகளின் பிறப்பைத் தொல்காப்பியர் பிறப்பியலில் கூறியுள்ளார். உந்தியிலிருந்து *வாயு புறப்பட்டெழும் என்றும் அது தலை, மிடறு, நெஞ்சு என்ற மூன்று இடங்களில் நின்று பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருந்தி அமைதியுற ஒலிகள் பிறக்குமென்றும் பொதுப்படக் கூறினர். இவ்வாறு வடமொழி நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இங்கே வடமொழி நூல்களையே பின்பற்றுகிறாரென்பது இப்பிறப்பியலின் கடைசிச் சூத்திரத்தில் உள்ள 'அந்தணர் மறைத்தே, என்பதனால் விளங்கும். இங்ஙனம் பின் பற்றினாலும் தலையினின்றும் பிறந்த எழுத்து 'மூர்த்தன்யம்' என்பது போன்று அவர் விவரித்துக் கூறாமை பெரிதும் பாராட்டத்தக்கது. ஏனெனில் தற்காலத்து ஒலிநூல் ஆராய்ச்சியின்படி, தலையினின்று பிறக்கும் எழுத்தொலியொன்று இல்லை என்பது சித்தாந்தம். (Elements of phonetics P.14 Dent 1910)

---

*இவ்வாறு உந்தியிற் பிறக்கும் வளியை மூலமாக முதன் முதற் கூறியவர் பூர்வமீமாம்சைக்குப் பாஷ்யம் இயற்றிய சபரர் (Linguistic Speculations of the Hindus P-87) இவர் காலத்திற்குப் பின்னெல்லை கி.பி. 300 என்பர் ஆசிரியர் காணே (P.V.Kane).

இவ் ஒலிகளை எழுத்துக்களாக அமைத்துள்ள முறை இனி நோக்கத் தக்கது. எழுத்துக்களைத் தனி-யொலி எழுத்து என்றும். அசை-எழுத்து என்றும் பிரிக்கலாம். தனியொலி-எழுத்துக்கு உதாரணமாக ஆங்கில மொழியின் எழுத்துக்களை இங்கே கூறலாம். 'J' என்ற எழுத்து 'ஜ்' என்ற ஓர் ஒலியைக் குறிக்கிறது. இங்ஙனமே பிற எழுத்துக்களும், அசை-எழுத்துக்கு (syllabic script) உதாரணமாக வடமொழி எழுத்துக்களையெல்லாம் கூறலாம். 'ஜ'என்ற எழுத்து ஜ் + அ என்ற ஈரொலிகளால் ஆகிய ஓர் அசையைக் குறிக்கிறது. பிற எழுத்துக்களும் இவ்வாறே. மெய் எழுத்தைக் குறிக்க வேண்டின் அசையாகிய உயிர் மெய்யெழுத்தில் ஓர் அடையாளமிட்டுக் குறிப்பது வழக்கம் இவ்வடையாளத்தை உயிர்மெய் எழுத்தோடு சேர்த்துப் பிற்பட எழுதுதலினாலே, அவ் உயிர்மெய் எழுத்தே முதலில் தோன்றியது என்பது புலனாம். இவ் இருவகை எழுத்துக்களுள் தமிழெழுத்துக்கள் அசை - எழுத்து வகையைச் சார்ந்தன என்று எளிதில் உணரலாம். எழுத்து வகையினும், வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை இங்கே கவனிக்கத்தக்கது.

எழுத்துக்கள் ஒரே வடிவில் வழங்கி வரவில்லை

தமிழெழுத்துக்கள் தாமும் அவை தோன்றிய காலந் தொட்டு ஒரே வடிவில் வழங்கி வந்துள்ளன அல்ல. இக் காலத்திலே ஈகாரத்தை இருவகையாக (இ, ஈ) எழுதுதல் காணலாம். அச்சிலுங்கூட, இருவகையும் காணப்படுகிறது ஏகாரத்தையும் ஓகாரத்தையும் நாம் எழுதும் முறைவேறு. முன்பு எகர ஒகரங்களே நெடில்களாகக் கருதப்பட்டன. அவற்றின்மேல் புள்ளியிட்டுக் குறில்களை உணர்த்தி வந்தனர். குற்றியலுகரம் முதலிய சில ஒலிகளையும் புள்ளியிட்டே எழுதிவந்தனர். இவையெல்லாம் இப்பொழுது மறைந்து விட்டன. கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றைக் காலமுறையில் வரிசைபடுத்தி நோக்கினால், தற்காலத்து வழங்கும் எழுத்துக்களின் மூதாதைகளைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டே இன்னகாலத்து இந்தக் கல்வெட்டுத் தோன்றியிருத்தல் வேண்டும் என்று, அறுதியிடுதல் கூடும். நாம் வழங்கும் எழுத்துக்களினின்று பெரிதும் வேறுபட்டுக் காணுவது 'வட்டெழுத்து' எனப்படுவதாம்.

அசோகன் லிபி அடிப்படை

ஆனால் இந்த எழுத்துக்களெல்லாம் அசோகன் லிபியை அடிப்படையாகக் கொண்டு பிறந்தன என்பர் ஆராய்ச்சியாளர். வடமொழியில் கேள்வி மூலமாக நெடுங்காலம் நூல்கள் வழங்கின. நூல்கள் எழுதப் பெறத் தொடங்கிய காலம் கி.மு. 5-ம் நூற்றாண்டாகலாம் என்பர் மக்டானல் ஆசிரியர். தமிழில் சிறிது பிற்பட்ட காலத்தில் நூல்கள் எழுதப்பெறத் தொடங்கியிருக்கலாம். இப்பொழுதுள்ள தமிழிலக்கியங்களிற் பழமையானவை கி.பி. 2-ம் நூற்றாண்டில் தோன்றியன. இவைகளெல்லாம் எழுத்து வழக்கு தமிழ்நாட்டிற் புகுந்த பின்னர் இயற்றப்பட்டனவே. இவற்றிற் காணும் தமிழ், சுவை முற்றிக் கனிந்த தமிழ். பாடல்களும், இனிமையும் அழகும் நிரம்பியுள்ளன. எனவே பல நூற்றாண்டுகளாகப் பயின்றுவந்த கவித்துவ முயற்சியினாலே இம்முதிர்வும் கனிவும் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இம்முயற்சி நான்கு, ஐந்து நூற்றாண்டுகளேனும் நிகழ்ந்திருக்கலாம். ஆகவே செய்யுட்கள் எழுத்தில் எழுதப்பெற்ற காலம் கி.மு. 3 அல்லது 4-ம் நூற்றாண்டாக இருக்கலாம்.

தமிழ் மொழியில் உயிர் 12-ம் மெய் 18-ம் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற சார்பெழுத்துக்கள் மூன்றும் ஆக 33 எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்தன. இவற்றுள் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் தற்காலத்து எழுத்து வழக்கில் இல்லை. ஆய்தமும் பண்டிதர் வழக்கில் மட்டும் காணப்படுகிறது. விரைவில் இது மறைந்து வருகிறதென்றே சொல்லலாம். ஆகவே முப்பது எழுத்துக்கள் தாம் உள்ளன. ஆனால் உயிர் மெய் 216 எழுத்துக்கள் உள்ளன; இவையே நமது அக்ஷர மாலையைக் கடினமாக்குகின்றன. அச்சுக் கோப்பதற்கும், 'டைப்' அடிப்பதற்கும் வடிவங்கள் எளியனவாயும், நேரியனவாயும், எழுத்துக்கள் சுருங்கியனவாயும் இருத்தல் வேண்டும். இதற்கு ஏற்ற முறைகளைக் கையாள வேண்டியது அவசியம். ஒரு சிலர் முயற்சி செய்து வருகிறார்கள். ஓர் உயிருக்கு ஓர் அடையாளமே இருத்தல் வேண்டும். இப்பொழுது உகரத்திற்கு மூன்று அடையாளங்கள் உள்ளன. உதாரணமாக, க, ச, ண என்றவற்றோடு உகரம் சேர்ந்த கு, சு, ணு என்ற எழுத்துக்களைக் காண்க. இக்குறைபாடுகளும் ஒழிதல் வேண்டும்.

தமிழில் சிறப்பெழுத்துக்கள்

தமிழ் அக்ஷர மாலையில் தமிழுக்கே சிறப்பாக உள்ளவை என்று கருதப்படும் சில எழுத்துக்கள் இருக்கின்றன. இவை ற,ன,ழ,எ,ஒ என்பனவாம். வடமொழியிலுள்ள அக்ஷரத் தொகுதியை எடுத்துக்கொண்டு, அவற்றில் காணப் பெறாமையால் இவற்றைச் சிறப்பெழுத்து என்பர். எ,ஒ, என்ற இரண்டு உயிர்களும் பிராகிருத மொழிகளில் உள்ளன. குறிலின்றி நெடில் மாத்திரம் வடமொழியில் காணப்படுவது ஒரு வியப்பே. பிராகிருதத்தோடொப்ப, தமிழில் எ,ஒ காணப்படுதலால் இத்தமிழ் மொழி இயற்கையோடு ஒட்டியது என்பது புலனாம். இவற்றைப் புள்ளியிட்டு எழுதுதல் முற்கால வழக்கமென முன்பு கூறப்பட்டது. இது வடமொழி அக்ஷரங்களையொட்டித் தமிழில் எ, ஒ என்ற எழுத்துக்களை அமைத்துப் பின்னர் அவற்றின் குறில்களை உணர்த்துதற்குப் புள்ளியிட்டனர் என்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது. சிறப்பெழுத்தாகிய ழகரம் வடமொழியில் ஷகர டகரங்களுக்குப் பதிலாக வருவது கூர்ந்து கவனிக்கத்தக்கது. சீர்ஷக என்பது சிகழிகை எனவும், கலுஷி என்பது கலுழி எனவும், விஷமம் என்பது விழுமம் எனவும், சேஷம் என்பது சேளம்,சேடம் எனவும், மிருகசீர்ஷம் மார்கழி எனவும் வருதல் இதனை விளக்கும். மலையாளத்திலும் இத்திரிபு காணப்படுகிறது. அனுஷம் அனிழம் எனவும், கஷாயம் கழாயம் எனவும் அம்மொழியில் வழங்குவர். பீடா என்பது பீழை, அமிர்தம் என்பது அமிழ்தம். இங்ஙனம் திரிதல் காரணமாக 'ழகரம்' ஒரு சொல்லில் வருமாயின். அது வடசொல் அல்லது பிற சொல் என்பது நிச்சயம் என்று ஒரு சாரார் கூறுவர். ஆனால் ஒலி நூலின் நியமங்களை அனுசரித்து இக்கருத்து இன்னும் துணியப்படவில்லை. ழகரத்தையும் ளகரத்தையும் பேதமின்றி உச்சரிப்பது வழக்கம்.

புதுக் கன்னடத்தில் ழகரம் மறைந்துவிட்டது. தமிழிலும் பிற்காலத்தில் இது மறைந்துவிடலாம். னகாரமாகிய சிறப்பெழுத்து 'றன்னகரம் என்று சாதாரணமாகக் கூறப்படும். ஒலியில் பெரிதும் வேற்றுமை இல்லாத 'தந்நகரம்' ஒன்றும் தமிழில் உண்டு. இரண்டிற்கும் உரிய வேற்றுமையை நாம் கவனிப்பதில்லை.! ஆனால் மலையாள மக்கள் போற்றி வருகிறார்கள். எழுத்திலுங் கூட நாம் இவ்வேற்றுமையைப் பல இடங்களில் கொள்வதில்லை. அந்நம் என்ற வடசொல்லை 'அன்னம்'

என்று றன்னகரம் இட்டு எழுதுகிறோம். இவ்வாறே 'அநந்த' என்ற வடசொல்லை அனந்தன் என்று எழுதுவது வழக்கம். என்றாலும் சந்தி முதலியவற்றை நோக்கும் போது இருவகை எழுத்தும் அவசியம் என்றே தோன்று கிறது. பந்து, மந்தி என்பதை றன்னகரமிட்டு எழுதினால் வேடிக்கையாக இருக்கும். ஒலியிலும், றன்னகரமும் தந்நகரமும் இழைந்து செல்வதில்லை. தந்நகரமிட்ட 'முந் நால்' என்பதற்கும், றன்னகரமிட்ட 'முன்னால்' என்ப தற்கும் பொருளில் வேறுபாடு உண்டு. முன்னது மூன்றி னால் பெருக்கிய நான்கு என்றும், பின்னது முற்பட்டு என்றும் பொருள் படும். சந்தியைச் சீர்திருத்தம் செய் தாலன்றி, இது போன்ற மயக்கங்களை நீக்குதல் முடியாது.

கடைசியாக வல்லின றகரமாகிய சிறப்பெழுத்தை நோக்குவோம். இடையின ரகர மொன்றும் தமிழில் உண்டு. இரண்டிற்கும் ஒலியினும் சிறிது வேற்றுமை உண்டு. வல்லினத்தை அழுத்தி உச்சரிக்க வேண்டும். அவ்வளவே. முற்காலத்தில் வடமொழி ரகரத்தை வல்லின றகரமாகத் தமிழில் எழுதி வந்தனர். பர்வதம் என்பதைப் 'பறுவதம்' என்றும், கர்வம் என்பதைக் கறுவம் என்றும் எழுதினர். இவ்வழக்கம் இப்போது நின்று வருகிறது. இவ் வல்லின றகரமும் சந்தி முதலியவற்றின் பொருட்டு அவசியமாகலாம். 'கர்ப்பம்' என்பதற்கும் 'கற்பம்' என் பதற்கும்' வேறுபாடு உண்டு. இங்ஙனமே செரு என்ப தற்கும், செறு என்பதற்கும் மரு என்பதற்கும் மறு என்ப தற்கும், பரி என்பதற்கும் பறி என்பதற்கும்.

எழுத்துச் சுருக்கம் பேணி முற்போக்கில் தமிழ் மக்கள் ஈடுபட்டாலன்றி, மேற்காட்டிய குறைபாடுகளை நீக்குதல் சிறிதும் ஏலாது. ஆங்கில எழுத்துக்களைக் (ரோமன் லிபி) கைக்கொண்டால், பல குறைபாடுகளும் நீங்கி விடலாம். ஆனால் புதுக் குறைபாடுகள் ஏற்படலாம். நமது மனப் பான்மையும் இடந்தரமாட்டாது.

அக்ஷரமாலை (Alphabet) களிற் பெரும்பாலான முன்னை யோர் மரபு என்ற ஒன்றைத் தவிர, வேறொரு காரணமு மின்றி, ஏதாவதொரு முறையில் அமைந்துள்ளன. உதாரண மாக ஆங்கில நெடுங்கணக்கை எடுத்துக் கொள்வோம். இதில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் ஒரு நெறியுமின்றி விரவிக் கிடக்கின்றன. மெய் எழுத்துக் களுள் ஓரினத்தனவே சார்ந்தவை பல இடங்களில் சிதறிக்

கிடக்கின்றன. C ஓர் இடத்திலும், G வேறோர் இடத்திலும் உள்ளன. B ஓரிடத்திலும், P பிறிதோர் இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. D ஓர் இடத்திலும், T மற்றோர் இடத்திலும் அமைந்துள்ளன. தமிழ் நெடுங்கணக்கு அங்ஙனமன்று. ஒரு நெறிப்பட்டு அமைந்துள்ளது. ஆனால் அது வடமொழி அக்ஷரமாலையை ஒத்திருத்தல் காணலாம். வடமொழி அக்ஷர மாலையை அடிப்படையாகக்கொண்டு தமிழ் நெடுங்கணக்கு முறைபடுத்தப்பட்டது என்பது மறுக்க முடியாததாயுள்ள ஓர் உண்மையாம்.

சில அக்ஷர மாலைகளின் ஒவ்வோர் எழுத்திற்கும் தனித் தனியாக பெயர் உண்டு. கிரேக்க மொழியிலுள்ள alpha, beta, gamma முதலியவற்றால் இதை, அறியலாம் ஆங்கிலத்தின் அக்ஷர மாலையே ப்ரெஞ்சு மொழிக்கும் உரியது. ஆனால் பெயர்கள் வேறு. b என்பது bay என்றும் h என்பது ahsh என்றும், y என்பது ecgrek என்றும் இம்மொழியில் வழங்குவர். உருது மொழியில் அலிப் முதலியவாகப் பெயர்கள் சொல்லுவர். தமிழில் ஓர் எழுத்தைக் குறிக்க வேண்டும் பொழுது, அவ் எழுத்தைத் தனித்தே கூறலாம். அ, இ, உ அம் மூன்றுஞ் சுட்டு என்பது உதாரணம். 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' என்பதில் கரம் என்ற ஒரு சாரியை சேர்க்கப்படுகிறது. காரம், கான் என்ற வேறிரண்டு எழுத்துச் சாரியைகளும் உண்டு. எழுத்திற்கும் பெயர் *என்பது கிடையாது. ஆனால் எல்லா மொழிகளிலும் காணப்படுவது போல் சில எழுத்துக்களைத் தொகுத்து இவை வல்லினம், இவை மெல்லினம் என்று பெயரிடுதல் தமிழிலும் உள்ளதே.

மாத்திரை கற்பிக்கும் வழக்கு

ஆங்கிலம், ப்ரெஞ்சு முதலிய மேல்நாட்டு மொழிகளிலுள்ள எழுத்தொலிகளுக்கு மாத்திரை கற்பிக்கும் வழக்குக் கிடையாது. தமிழ் மொழியிலே அங்ஙனமன்று. குறில் எழுத்துக்கு ஒரு மாத்திரை என்றும் நெடிலுக்கு இரண்டு மாத்திரைகளென்றும், மெய்க்கு அரை மாத்திரை என்றும், இங்ஙனமாகக் கணக்கிட்டு உரைப்பர். ஆனால்

---

*தற்காலத்தார் 'ஆனா ஆவென்னா' என்று அக்ஷர மாலையைச் சொல்லி வருகிறார்கள். ஆய்த எழுத்தை 'அஃகேனம்' என அவிநயர் என்ற ஆசிரியர் வழங்கியுள்ளார் (யாப்பருங்கல விருத்தி பக்.28) தற்காலத்தில் 'அஃகென்னா' என்பர்.

இக்கணக்கு வடமொழியினின்றும் கொள்ளப்பட்டது. ஆதலால் இம்மாத்திரை தமிழ் மொழிக்கு வேண்டாததாம். செய்யுள் இயற்றுவதற்கு இது பயன்படலாம். ஒலியியல் நூல்கள் எழுதப்பெறும் போதும் இது பயன்படுவதாகலாம்.

இங்குக் கூறிய எழுத்து முதலியன சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கண சூத்திரங்களில் உள்ளன. தற்காலத்துத் தமிழை அறிதற்கு இவை போதியவை அல்ல. நம்மில் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது தற்காலத்து வழங்கும் தமிழ். அதனையே முற்பட நாம் கற்றல் வேண்டும். அதற்குரிய எழுத்திலக்கணம் முதலியன இயற்றுவதற்கு நாம் முயலுதல் வேண்டும். அதனை விளக்கும் எழுத்து, சொல் முதலிய இலக்கணப் பகுதிகளைக் கற்பிக்கும் முறையும் முற்றும் மாற வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களும் பொதுமக்களும் சுவையோடு தமிழைக் கற்பார்கள்.

8. தமிழிற் சொல் வளர்ச்சி

நாம் சுதந்திரம் அடைந்ததோடு, நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயமாகக் கற்றுத் தீரவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டுவிட்டது. சில ஆண்டுகளுக்கு முன்வரை, தமிழ் மக்களுள் ஒருசிலர் தான் தமிழைக் கற்று வந்தார்கள். கல்வி கற்பதற்கு வேண்டும் வசதி வாய்த்தவர்களில் பெரும்பாலாரும், தமிழ் வாசக புஸ்தகங்களை வாசிக்கும் அளவு கற்று, தமது கல்விக் காலம் முழுவதையும் ஆங்கிலத்தின் பொருட்டே செலவு செய்து வந்தார்கள். சில தமிழர்கள் தமிழ் எழுத்துக்களையே அறியாதவர்களாயும் இருந்தார்கள். ஆங்கிலங் கற்ற ஒரு சில தமிழ் மக்கள் 'தமிழ்' என்று கேட்டவுடனேயே வெறுப்புக் கொண்டு தமிழ் நூல்களைத் தொடுவது கூடத் தமது கௌரவத்திற்கு இழிவு என்று கருதி வந்தார்கள். ஏக தேசமாய்த் தமிழ்ப் புஸ்தகங்களை வாசிக்கவோ அல்லது தமிழில் பேசவோ நேர்ந்துவிட்டால், தமிழ்ச் சொற்களை ஆங்கில தோரணையில் உச்சரித்துத் தம்மை ஆங்கிலேயன் என்று பிறர் கருதுமாறு நடித்துவந்தனர். சில தமிழ்ப் பேராசிரியர்களும் தமிழை 'டாமில்' என்று உச்சரிப்பதைப் பலரும் கேட்டிருக்கலாம்.

ஆனால், இம்மனப்பான்மை இப்பொழுது அடியோடு மாறிவிட்டது. இதற்கு முக்கிய காரணங்கள் தேசாபிமானமும் சுதந்திர உணர்ச்சியுமேயாகும். இந்நாட்டில் இவ்வுணர்ச்சிபற்றி யெழுந்த கிளர்ச்சி அதிவேகத்தில் எங்கும் பரந்து யாவராலும் தடுக்க முடியாதபடி முற்றிவிட்டது. அன்றியும் நமது கல்வித்துறையில் சீர்திருத்த முறைகளைக் கையாளவேண்டும் என்ற அபிவிருத்தி நோக்கமும் மேற்கூடிய கிளர்ச்சியோடு கலந்துவிட்டது. பிற நாடுகளில் கையாண்டு வரும் முறைகளை நம்மவர்கள் கற்று வரலாயினர். மேலை நாடுகளிலே அந்த அந்த நாட்டுக்குரிய மொழிகளிலே கல்வி பயிற்றி வருவதைக் கண்டார்கள்.

நமது நாட்டில் தாய் மொழியைக் கைவிட்டு, அந்நிய மொழியாகிய ஆங்கில மொழியிற் கல்வி போதித்துவரும்

மடமையும் நன்றாகப் புலப்பட்டது. இவ்வகையிற் சீர் திருத்தம் அவசியம் என்பதைக் கல்வித் துறையிலுள்ள அறிஞர்களும், பொதுமக்களும் தெளிவாய் உணர்ந்தார்கள். தாய்மொழி மூலமாகத்தான் எல்லா வகைக் கல்வியையும் போதிக்க வேண்டும் என்ற மனவுறுதி நம்மவர்களி டையே பிறந்தது. கல்வித் துறையில் நமது தமிழ்மொழி தனக்கு இயல்பாகவுரிய நிலையை அடையும் சமயம் வந்தது. தமிழ் அதன் அடிமை வாழ்வு நீங்கிச் சுதந்திர மாகிய தலைமை வாழ்வை அடைவதாயிற்று.

அறிவுத்துறை நூல்கள்

ஆனால், சுதந்திர வாழ்வு என்பது வறுமையில் துன் புறும் வாழ்வு அல்ல. தற்கால அறிவுத் துறைகள் எல்லா வற்றிலும் நூல்கள் நிரம்பி நமது மொழி சிறந்தோங்க வேண்டும். நமது மொழிச் செல்வம் பெருகுதல் வேண்டும். அதன் செல்வாக்கும் மிகுதல் வேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டில் அறிவு வளர்ந்தோங்குவதாகும். எல்லாவற் றிலும் முற்பட்டு, விஞ்ஞான உணர்ச்சி நமக்கு வேண்டிய தாயுள்ளது. இதற்கு ஆங்கில மொழியைக் கற்பது இன்றியமையாதது. ஆங்கில மொழியைத் துணை மொழி யாக நமது கலாசாலைகளில் போற்றுவதும் அவசியமே. மேனாட்டு விஞ்ஞான சாஸ்திர பதங்கள் பலவற்றிற்குத் தக்க தமிழ்ச் சொற்கள் காணுதல் அருமை. வேண்டும் இடங்களில் ஆங்கிலச் சொற்களை எடுத்துக் கொள்ளுதல் பொருத்தமேயாம். இவ்வாறு செய்வது நமக்கு நன்மை தரும் என்றே நான் கருதுகிறேன். ஆனால் வேறு சிலர் இவ்வாறு கருதாது ஆங்கிலமே தலைமை பூணவேண்டு மென்று விவாதிக்கிறார்கள். தமிழின் தலைமைக்கு இவர் கள் இடையூறாக நிற்பவர்கள். இவர்கள் கருத்துக்குத் தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் இணங்குதல் கூடாது.

வேறு சிலர் ஆங்கிலம் வடமொழி முதலிய எந்த அந்நிய மொழிச் சொல்லும் தமிழில் கலத்தல் கூடாது என்பர். இவர்கள் தாம் தூயதமிழ் வாதிகள். இவர்கள் நமது தமி ழன்னைக்கு உணவளியாது கைகால்களைக் கட்டிச் சிறைச் சாலையிலிட்டு வதைக்க முயலுகின்றனர். சாதி வெறுப் பையும் அரசியல் வெறுப்பையும் கருவிகளாகக் கொண்டு தம்து பகைமையைச் சாதித்து மொழி வளர்ச்சியைத் தடுத்து, நம் தாய் மொழியைத் துன்புறுத்துகின்றனர். உலகில் ஒரு மொழியேனும் தூய மொழியாயிருப்பதுண்டோ?

ஒவ்வொரு மொழியிலும் எத்தனை எத்தனையோ வேற்று மொழிகளிலிருந்து சொற்கள் கலந்துள்ளன. அவ்வக்காலத்திலுள்ள அவசியத்திற்கேற்ப, பிற மொழிச் சொற்கள் ஒவ்வொரு மொழியிலும் கலப்பது இயல்பே. இவ்வாறு கலப்பதற்கு இடங்கொடாமற் போனால், அறிவு வளர்ச்சிக்கே தடை ஏற்பட்டு விடும். இன்னும் ஒன்று, பிற மொழிச் சொற்களின் கலவையை எவராலும் தடுக்கவும் முடியாது.

பிறமொழிக் கலப்பு

தமிழ் மொழியின் சரிதத்தை எடுத்துக் கொண்டால் பிறமொழிக் கலப்பு பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை நிகழ்ந்து வந்துள்ளது என்பது நன்றாகப் புலப்படும்.

ஆசிரியர் தொல்காப்பியர்,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. (சொல்-397)

என்றனர். அவர் காலத்துக்கு முன்புதானே இந் நால் வகைச் சொற்களும் செய்யுளில் கலந்துவிட்டமையால் இவ்வாறு சூத்திரம் செய்து இவை எக்காலத்தும் செய்யுட்கு உரியன என்றும் கருத்துக் கொண்டனர். அவரது பேரிலக்கணத்திலே பல வடசொற்களையும் எடுத்தாண்டனர். உதாரணமாக, அந்தம், மாத்திரை, காயம், கருமம் ஏது, அம்போதரங்கம், குஞ்சரம், வைசியன், வாணிகம், என்பனவற்றைப் பிரயோக விவேக நூலார் காட்டினர். இவற்றோடு காலம், உலகம், பூதம் (சொல்-58) மண்டிலம் (பொருள் 421) சூத்திரம் (640) படலம் (474) பிண்டம் (475) முதலியவும் காட்டலாம். மேலும் சுண்ணம், வண்ணம், படிமை, பண்ணத்தி முதலிய பிராகிருதச் சொற்களையும் அவர் வழங்கியுள்ளார். இங்ஙனமே சங்க நூல்களிலும்* வடசொற்களும் பிராகிருதச் சொற்களும்

---

*தெய்வம் (9), வெதிரம் (62), வஞ்சம் (150) என நற்றிணையிலும், காமம் (2) திலகம் (48) மணி (239) யாமம் (302) எனக் குறுந்தொகையிலும், இந்திரன் (62) முண்டகம் (108) நகர் (247) குரவர் (357) என ஐங்குறு நூற்றிலும் மனாலம் (11) ஆனியம் (69) உவமம் (73) பருகி (74) சந்தம் (87) எனப் பதிற்றுப் பத்திலும், புங்கவம், ஆதிரை, நாதர் என 8-ம் பரிபாடலிலும், கடிகை, வல்லிகை, சாமரை,

தமிழோடு கலந்துள்ளன. ஆனால், கலித்தொகையிலும் பரிபாடலிலும் வடசொற்கள் மிகுதியாகவுள்ளன. பிற சங்க நூல்களில் அத்துணையளவாகக் காணப்படவில்லை. இவற்றின் பின்தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களிலும் தேவாரம் முதலிய அருளிச் செயல்களிலும் வடசொற்கள் பரிபாடலின் அளவிலேனும் வழங்கியுள்ளன.

திருக்குறளிற்கூட நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் வடமொழிக்கு உரியன. இவைகளுக்குப் பின்பு பிறந்த சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் வட சொற் கலப்பு

மத்திகை, உத்தரியம், கண்டிகை, தமனிய-மேகலை, நூபுரம் சுதை, கிண்கிணி, வியமம், வாதம் என 90-ம் கலித்தொகைச் செய்யுளிலும், நிதி (66) அரணம் (158) அமர் (214) பலி (282) மதி (400) நேமி (400) கோவலர் (299) சாத்து (167) முரசம் (251) தூது (251) அரவம் (188) மதம்(295) அரமியம் (124) என அகத்திலும், யூபம் (15) வேதம் (2) கண்டம் (10) நாகம் (367) எனப் புறத்திலும், வாரணம் (முருகு 219), தாயம் (பொருந. 132), கோவம் (சிறுபாண் 71) சாபம் (பெரும்பாண் (121,) மிலேச்சர் (முல்லை, 66) பதாகை, (மதுரை 373) தசம், உரோகிணி (நெடுநல் 115, 163), குடசம், வகுளம். தகரம், மாயம் (குறிஞ்சி, 67, 70, 108, 246) அமரர், ஆவுதி (பட்டினப் 200) அமயம் (மலைபடு. (375) எனப் பத்துப் பாட்டிலும் வருகின்றன.

அகரம் (1), அங்கணம் (720), அச்சு (475) அதி (636) அந்தம் (563), அமர் (814), அமரர் (121), அமிழ்தம் (11), அமைச்சு (381) அரங்கு (401) அரசர் (381) அரண் (331) அவம் (266), அவலம் (1072), அவி(259), அவை(332), ஆகுலம் (34), ஆசாரம் (1075), ஆசை (266), ஆணி (667), ஆதி (1), ஆயிரம் (259), இசை(231) இந்திரன் (25) இமை (775) இரா (1168), இலக்கம் (627), உரு (261), உருவு (667), உலகம் (11), உலகு (1), உல்கு (756), உவமை (7), உறு (498), ஏமம் (306) ஏர் (14), கஃசு (1037), கணம் (29), கணிச்சி (1251), கதம் (130), கந்து (507) கலுழும் (1173) கவரி (969) கடவுள் (678), கழகம் (935), களம் (1224), களன் (730), கனம்(1081), காமம் (360), காமன் (1197), காரணம் (270), காரிகை (571), காலம் (102), கானம் (772), குடங்கர் (890), குடி (171), குடும்பம் (1029), குணம் (29), குலம் (956), குவளை (1114), கூர் (599), கொக்கு (490), கோடி (337), கோட்டம் (119), கோட்டி (401), சமன் (118), சலம் (660), சிவிகை (37), சுதை (714), சூதர் (932), சூது (931) தகர் (486), தவம் (16), தாமரை (1103) திண்மை (54) திரு (168) துகில் (1087), துலை (986), தூது (681), தெய்வம் (43) தேயம் (753), தேவர் (1073), தொடி (911), தோட்டி (24), தோணி 1068), தோள் (149) நத்தம் (235), நயம் (860), நாகம் (763) நாகரிகம் (580), நாமம் (360), நாவாய் (496), நிச்சம் (532), நீர் (3), நுதுப்

சங்க நூல்கள், திருக்குறள் முதலியவற்றிற் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமென்றே சொல்லவேண்டும். குங்குமம், அலத்தகம் என்பவற்றைக் காவியச் சொற்களென்றே கூறலாம்.

மணிப்பிரவாள நடை

பின்னர், சமயசாஸ்திரங்களும் இவற்றின் வியாக்கியானங்களும் தோன்றின. இவற்றில் வடசொற்கள் எல்லை கடந்து வழங்கப்பட்டன. வடமொழியிலக்கணமும் தமிழிலக்கணமும் ஒன்றேயென்னும் கொள்கை கூடப்பிறந்துவிட்டது. வீரசோழியம் இதற்குச் சான்று, வடமொழிச் சொற்களை வடமொழியுருவோடும் உச்சரிப்போடும் மிகுதியாய்க் கலந்த மணிப்பிரவாள நடையும் புகுந்தது. ஆனால் இந்நடையை விரும்பாது. தமிழை வடமொழி விழுங்கிவிடாதபடி பாதுகாத்து, தமிழின் சுதந்திரத்தைத் தமிழ் மக்கள் பேணினார்கள். எனினும், வடமொழிக்கலப்பு காலஞ் செல்லச் செல்ல மிகுந்துகொண்டே வந்தது. மொழிநூலின் உணர்ச்சி தோன்றாத காலத்து வாழ்ந்த சுவாமிநாத தேசிகர் தமிழுக்குச் சிறப்பாகவுரிய எ,ஒ,ழ,ற,ன என்ற எழுத்துக்களால் ஒரு மொழி இருக்க முடியுமா என்று கேள்வி கேட்கவும் துணிந்தனர்.

> **ஐந்தெழுத் தால் ஒரு பாடையும் உண்டென்று**
> **அறையவும் நாணுவர் அறிவுடை யோரே**

என்று கூறி நமக்கு வியப்பையும் வருத்தத்தையும் உண்டு பண்ணுகிறார். பிரயோகவிவேகம் இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர், 'வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பேதம் கோடி கூறிட்டு ஒரு கூறுண்டோ?'' என வினவுவராயினர். இலக்கண ஆசிரியர்கள் இவ்வாறாக, யாழ்ப்பாண அகராதி, மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி முதலியன

பேம் (1148), பக்கம் 620, பகுதி (III), (படாம்(1087), படிவத்தர் (586), பண்டம்(475), பதம் (548), பயன் (2), பரத்தன் (1311), பளிங்கு (706), பள்ளி (840), பாகம் (1092), பாக்கியம் (1141), பாவம் (146), பீழிக்கும் (843), பீழை, (658), புருவம் (1086), பூசனை (18), பூதங்கள் (271), (பேடி (614), பேய் (565), மங்கலம் (60), மடமை (89), மதலை (449), மதி (636), மந்திரி (639), மயிர் (964), மயில் (1081), மனம் (7), மணி (1273), மா (68), மாடு (400), மானம் (384), மீன்(931), முகம் (90), யாமம் (1136), வஞ்சம்(271), வண்ணம் (561), வளை (1157), வள்ளி (1304), வித்தகர் (235), வேலை (1221).

இயற்றியவர்கள் வடமொழி அகராதிச் சொற்களெல்லாம் தமிழிற்கும் உரியன என்ற கருத்துக் கொண்டு நூல்வழக்கு உலகவழக்கு முதலியவற்றை நோக்காது வடமொழிச் சொற்களை வரம்பின்றித் தம் அகராதிகளிற் புகுத்தி விட்டனர். இவையெல்லாம் தமிழ்மொழியுலகில் வடமொழி கொடுங்கோலாட்சி புரிந்துவந்தது என்பதற்குத் தக்க சான்றாகும். இக்கொடுங்கோலாட்சியை எதிர்க்கத் தூய தமிழ்க் கிளர்ச்சி தோன்றியதாயின் அது நியாயமே. ஆனால், இது அன்று அதன் நோக்கம்; வடமொழி முதலிய எம்மொழிச் சொல்லும் தமிழில் வருதல் கூடாது என எதிர்த்தற்கே தலைப்பட்டது. வடசொற்களை எடுத்துக் கொள்வோம். அவற்றை நீக்கிவிட்டால், தனித் தமிழ்ச் சொற்கள் நமது தினசரி வாழ்க்கைக்குக் கூடப் போதியன அல்ல; நீக்குதலும் இயலாத காரியம். தூய தமிழ்க் கிளர்ச்சியில் அபிமானமுள்ள ஒரு நண்பர் அதுபற்றி எழுந்த ஒரு விவாதத்தில், 'இரண்டாயிரம் ஆண்டுகளாக இத்தமிழ் வடமொழிப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. என்று அப்போராட்டத்திற்கு முடிவு காணப்போகிறோம். வடமொழிச் சொற்களை நிர்த்தாட்சண்யமாய் ஒழித்து விட்டுத்தான் மறுவேலை' என்றனர். அவர் கூறுவதிலிருந்தே எவ்வளவு தூரம் வடசொற்களை ஒழிக்க முடியும் என்பது விளங்குகிறதல்லவா? நமது சமுதாய வாழ்க்கையோடும், கல்வியோடும், சமயங்களோடும், சாஸ்திர உணர்ச்சியோடும், நாகரிகத்தோடும் வடமொழிச் சொற்கள் பின்னிக் கலந்துவிட்டன. நம்முடைய வாழ்க்கையோடு இச்சொற்கள் ஒன்றித்துவிட்டன. ஆதலால், இவற்றை நீக்குதல் யாவராலும் இயலக்கூடிய காரியம் அன்று. மேலும் இவற்றை நீக்கும் முயற்சி பெருங்கேட்டையும் விளைவிக்கும். நமது கல்வி வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், நமது பொது அபிவிருத்திக்கும், சொல்வளம் நிரம்ப வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்கு இச்சொல்வளம் பெரிதும் வேண்டப்படும்.

'சிறந்த எழுத்தாளன் எவனும் சொற்களின் உற்பத்தி நோக்கிச் சொற்களைத் தெரிந்தெடுத்து ஆளமாட்டான்' என்றனர் ஹெர்பர்ட் ரீட் (Herbert Read : English Prose style. pp.5-6) தூய தனித் தமிழ்ச் சொல்லடியாக இச் சொல்வளத்தை நாம் பெருக்கிக் கொள்ளுதல் முடியாது. எனவே, வட சொற்களை நாம் கையாளாமற் போனால், அறிவு வளர்ச்சி

யின்றி, மக்களினத்தாரின் கடைப்பட்டவர்களாய், கிணற்றுத் தவளையை ஒத்தவர்களாய், நம்மினத்தவர் ஒதுங்கி விடுவார்கள் என்பதை நாம் நன்றாக மனதிற் பதியவைத்தல் வேண்டும். எனவே தூய தமிழ்க் கிளர்ச்சியென்பது அறிவின் பகை; கல்வியின் பகை; ஒற்றுமையின் பகை; நாணயத்தின் பகை; தேசிய முன்னேற்றத்தின் பகை. இதனை அறிவுடையோர் ஆதரித்தல் சிறிதும் தகாது; அன்றியும் சங்கப்புலவர்கள், வள்ளுவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், கம்பன், சேக்கிழார் முதலியோர்கள் வழங்கிய சொற் கருவூலங்கள் நமக்குப் பிதிரார்ஜிதமல்லவா? அவர்களெல்லாரும் தமிழுக்குக் கேடுவிளைவித்தவர்கள் என்று நாம் கருதுதல் தகுதியாகுமா? நமது தமிழில் வந்து கலந்து நூலாட்சியிலும் பேச்சு வழக்கிலும் புகுந்த வட சொற்களெல்லாம் தமிழ்தானே? தமிழ்மகன் ஒவ்வொருவனும் இதனை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

ஆங்கில மொழி உதவி வருதல்

முற்காலத்தில் வடமொழி எவ்வாறு நமது மொழிக்கு உதவி வந்ததோ, அதுவே போல, ஆங்கில மொழி தற்காலத்தில் உதவி வருகிறது. ஆதலால் இன்றியமையாது வேண்டும் ஆங்கிலமொழிச் சொற்களைத் தமிழிற் கொள்ளத்தான் வேண்டும். அவற்றிற்குத் தடையுத்தரவு விதித்தல் கூடாது.

இன்னும் சிலர் 'ஆங்கிலமொழி நமது தேசத்து மொழியன்று. அந்த அந்நிய மொழியினின்றும் சொற்களை கொள்ளுதல் அடிமை வாழ்வின் சின்னமாகும். ஆகவே கொள்ளக்கூடாது' என்பர். இன்னோர்கள் பெரும்பாலும் வடமொழி யொன்றையே கற்கும் வடமொழி வாதிகள். இந்தியப் பொது மொழியாக இம்மொழியை ஆக்கவேண்டும் என்றும் இவர்கள் முயலுகிறார்கள். இவர்கள் தங்களது தாய்மொழியாகிய தமிழைப் பேணாது, அதனைக் கற்றலும் செய்யாது அநாதரவு காட்டி வருவது பெரிதும் வருந்தத்தக்கது. இவர்களில் ஒரு சிலர் தம் கடமையை உணர்ந்து தமிழுக்குப் பெருந்தொண்டாற்றுவது பெரிதும் பாராட்டத்தக்கதே. எனினும் பெரும்பான்மையோர் வடமொழியே தங்கள் தாய்மொழி எனத் தவறாகக் கருதி, வழக்காறு அற்றுப்போன அம்மொழி இன்னும் உயிர் வாழ்ந்திருப்பது போலக் கற்பித்துக்கொண்டு, அம்

மொழியிலுள்ள பண்டை நூல்களைக் கற்றுக் கற்று அறிவு வளர்ச்சியின்றி யிருக்கிறார்கள்.

இலக்கணம் முதலிய ஒரு சில துறைகளில் அந்நூற்கள் மனித அறிவின் எல்லையைத் தொட்டுவிட்டன என்பது உண்மையே. ஆனால் அதனை உணரக் கூடியவர்கள் இப்பெரும்பான்மையோரல்லர்; மிகச் சிறுபான்மையோரே யாவர். லௌகிக நடைக்கு இம்மொழி பயன்படுவதன்று ஆராய்ச்சிக்கும் தேச சரித்திரத்திற்கும், மொழி நூற்பயிற்சிக்கும் மாத்திரம் தான் இம்மொழி பயன்படத்தக்கது. இவ் உண்மையை இவ்வடமொழி வாதிகள் எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் உணருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நமது நாட்டிற்கும் மொழிக்கும் நன்மை விளையும். இவர்கள் ஆங்கிலம் முதலிய மேல் நாட்டு மொழிகளை ஒதுக்கவேண்டுமென்பது அஞ்ஞான இருளில் நம்மை மீட்டும் புகுத்தும் செயலேயாகும்.

வடமொழிப் பூசல்

வடமொழிப் பூசல் நமது மக்கள் மனத்தைப் பெரிதும் இப்போது கவர்ந்து, அவர்கள் காலத்தையும் முயற்சியையும் பாழாக்குதலினாலே. சிறிது விரிவாக இங்கே கூறினேன். தமிழில் வந்து கலந்தது வடமொழி மட்டும் அன்று. பிராகிருத மொழிச் சொற்கள் கலந்துள்ளமைக்குச் சில உதாரணங்கள் மேலே காட்டினேன். ஆணை, வட்டம், நட்டம், கண்ணன் முதலிய சொற்களும் பிராகிருதமே. இச்சொற்கள் பௌத்த, ஜைன மதத் தொடர்பினால் நமக்குக் கிடைத்தவை. இம்மதங்கள் உயிராற்றலுடன் நமது நாட்டில் உலவி வந்த காலமுழுதும் இவ்வகைச் சொற்கள் தமிழில் இடம் பெற்றன. இவை க்ஷீணம் அடைந்ததும் இவ்வகையான சொற்களின் புது வரவு நின்று போயிற்று. கி.பி. 10-ம் நூற்றாண்டிற்குப் பின் எழுந்த பொது நூல்களில் பிராகிருதச் சொற்கள் காணுதல் அருமை. ஸ்ரீபுராணம் முதலிய பிற்பட்ட ஜைன நூல்களில் பிராகிருதம் காணப்படுதல் வியப்பன்று.

ஜைன சமயத்தவர்களால் பெரிதும் பேணப்பட்ட மொழிகளில் ஒன்று கன்னட மொழி. இம்மொழியினின்றும் தமிழில் பல சொற்கள் ஜைனத் தமிழர்களால் கொள்ளப் பட்டன. உதாரணமாக, சிக்குதல், குளிர்தல், (தங்குதல்) ஒள்ளியன் (நல்லவன்), நீம் முதலிய சொற்கள் கன்னடத்

திலிருந்து வந்தனவாம். இவை காவிய காலத்தில், அதாவது 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் தமிழில் இடம் பெற்றன. ஜைனர்களைப் போலவே வீர சைவர்களும் கன்னடச் சொற்களைத் தமது தமிழ் நூல்களில் எடுத்தாண்டுள்ளனர். ஓது (பூனே), இட்டளம், குலுக்குதல், முதலிய சொற்கள் உதாரணமாம்.

சமயத் தொடர்பினால் நாம் பெற்றுக் கொண்டவை மேற்காட்டிய பதங்கள். சோழ அரசர்கள் முதலியோர்கள் பல தேசங்களிலும் கொண்ட பெரு வெற்றியால், பல நாட்டு மக்களும் தமிழ் மக்களோடு கூட்டுறவு கொள்ள லாயினர்.

மழலைத் தரு மொழியிற் சிலவடுகும் சிலதமிழும்
குழறித் தரு கருநாடியர் குறுகிக் கடைதிறமின்

என்ற கலிங்கத்துப் பரணியின் அடிகள் நினைவுக்கு வரலாம். இங்கே தமிழ்நாட்டில் வாழ்ந்த கருநட தேசத்துப் பெண்கள் சில வடுகுச் சொற்களையும் சில தமிழ்ச் சொற்களையும் திருந்தாத வடிவில் வழங்கினர் என்ற கருத்துக் காணப்படுகிறது. எனவே, தமிழில் கன்னடம், வடுகு, என்ற மொழிகள் கலப்பதற்குரிய சமுதாய நிலை சோழரது வெற்றியால் விளைந்தமை அறியலாம். பல திசைச் சொற்கள் தமிழில் வந்துள்ளனவாகப் பழைய உரைகாரர்கள் குறித்துள்ளனர். மயிலைநாதர் (நன்னூல் 272, உரை) காட்டியுள்ள சொற்கள் நோக்கத்தக்கன.*

இவர் எழுதிய உரை மொழியுணர்ச்சிக்கு மிகப் பயன்படுவதாம். இவரது நெறியைக் கடைப்பிடித்துச் சொல்லாராய்ச்சி நிகழ்ந்திருக்குமாயின் தமிழுணர்ச்சியும் சிறந்து நிற்கும்; பிராதேசிகச் சொல்லகராதியும் (regional

*தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும் சோற்றினைச் சொன்றி என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும் பூமி நாட்டார் சிறு குளத்தைப் பாழி என்றும், பன்றி நாட்டார் செறுவைச் செய் என்றும், அருவாணாட்டார் சிறு குளத்தைக் கேணி என்றும், அருவாள் வடதலையார் புளியை எகினம் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், மலாடர் தோழியை இகுளை என்றும், புன்னாட்டார் தாயை ஆய் என்றும் வழங்குவர்.

dictionaries) இயற்றப் பெற்றிருக்கும். வீரசோழிய உரைகாரர் முருங்கை என்று நாம் வழங்கும் சொல் 'முருங்கா' என்னும் சிங்களச் சொல்லின் வேற்று வடிவம் என்றனர். இச் சொல்லும் சோழரது ஈழ வெற்றியால் கிடைத்ததென்றே கருதத்தக்கது.

வடுகுச் சொற்கள்

வடுகுச் சொற்களும் தமிழ்நாட்டிற் கேட்கப்பட்டன என்பது முன் காட்டிய கலிங்கத்துப் பரணிச் செய்யுளால் அறியலாகும். வடுகு என்பது தெலுங்கு மொழி. இச் சொற்கள் சோழர்களுடைய வெற்றியால் மட்டும் நமக்குக் கிடைத்தனவல்ல. வெற்றியின் விளைவாக, தமிழரசர், தெலுங்க அரசர் என்ற இருபெருங் குடும்பத்தினர்க்குள்ளும் கலப்பு மணவினைகள் நிகழ்ந்தன.

வடுகருள் ஒரு சாரார் கீழைச் சளுக்கியவர்; இவர்கள் சந்திரகுலத்தவர்கள். சோழர்கள் சூரிய குலத்தவர்கள். தன் தந்தை வழியால் சந்திர குலத்திற்கும் தாய்வழியால் சூரிய குலத்திற்கும் உரிமையுடையவனாக விளங்கிய முதற் குலோத்துங்க சோழனை அறியாதார் இல்லை. இங்ஙனமே தமிழரும் தெலுங்கரும் கலப்புமணம் செய்து கொண்டனர். ஒருவர் இலக்கிய இலக்கணங்களை மற்றவர் விரும்பிக் கற்றனர். யாப்பருங்கல விருத்தியுரையில் 'குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தம் வாஞ்சியார் செய்த வடுகச் சந்தம் ஆகியவற்றுள்ளும்... தகுதியுடையார்வாய்க் கேட்டுக் கொள்க' என வருகின்றது. இது இருபெரு மொழியினரும் கல்வியில் தொடர்புடையவராயிருந்தனர் என்பதை மிக நன்றாகத் தெளிவிக்கின்றது.*

இங்ஙனம் ஏற்பட்ட பலவகைத் தொடர்புகளால் பல வடுகச் சொற்கள் தமிழில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், ஒரு சிலவே இலக்கியங்களில் காணப்படுகின்றன. அருவர், (கலிங்.பரணி, 38), மசரதம் (கம்ப ராமாயணம், திருவவ 22), தம்மி (ஷை30), கிச்சு (கம்ப.பிணி விட்டு 3) அக்கட (யுத்த மந்திரஷை32) என்ற சொற்களை இங்கே குறிப்பிடலாம். சோழரது வீழ்ச்சிக்குப் பின்பு, தமிழ் நாட்டிற்கும் தெலுங்கு நாட்டிற்கும் உள்ள தொடர்பு நாளடைவில்

---

*தமிழரும் ஆந்திரரும்: மு. இராகவையங்கார்: ஆராய்ச்சித் தொகுதி பக். 311-348.

பெருகிக் கொண்டே வந்திருக்கிறது. விஜயநகர ஸாம்ராஜ்யத்திற்குப் பின்பு இத்தொடர்பு மிகவும் வலியுற்றது. தெலுங்க அரசர்கள் தமிழ் நாட்டினை ஆளத் தொடங்கினர். விஜயநகரத்தின் வீழ்ச்சியின் பின்பும், நாயக்கர்களுடைய ஆட்சிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் ஏற்பட்டன. அரசியல், பெருமித வாழ்வு, ஆடையாபரணாதிகள் பற்றிய பல தெலுங்குச் சொற்கள் தமிழுக்குக் கிடைத்தன*

விஜயநகர ஸாம்ராஜ்யம் அழிவதற்குக் காரணமாயிருந்தவர்கள் மகமதியர்கள். இவர்களிடமிருந்து பல சொற்கள் தெலுங்கில் புகுந்தன. தெலுங்கின் வழியாகப் பல உருதுச் சொற்களும் அராபிச் சொற்களும் தமிழிலும் வந்துள்ளன. மகமதியர்களில் சிலர் ஒரு சில இடங்களில் குடியேறியிருந்து பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள். சீதக்காதி வள்ளல் இவர்களுள் ஒருவர். மகமதியர் தொடர்பும் திப்பு சுல்தான் முதலியோரது ஆதிக்கியத்தினால் தமிழுக்கு ஏற்பட்டதுண்டு. ஆகவே, தெலுங்கு வழியாகவும் நேரடியாகவும், பல உருதுச் சொற்கள், துருக்கிச் சொற்கள், அராபிச் சொற்கள் முதலியன தமிழில் இடம் பெறலாயின.

ஐரோப்பியர் வரவு

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பியர்களது வரவு ஏற்பட்டது. இவர்களுள் போர்த்துகீயர்கள் ஏலம், பீரங்கி, ஜன்னல், கடுதாசி, சாவி முதலிய சொற்களைத் தமது மொழியினின்றும் நமது மொழிக்குத் தந்துள்ளார்கள். ஹாலந்து தேசத்தவரான டச்சுக்காரர்கள் உலாந்தா, துட்டு முதலிய சொற்களைத் தமது மொழியினின்றும், கப்பல் என்பதை மலேய மொழியினின்றும் நமக்கு அளித்துள்ளார்கள். பிரஞ்சுக்காரர்கள் பட்டாளம், துருப்பு, குசினி, போத்தல் பரங்கி முதலிய சொற்களைத் தமிழுக்குத் தந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியிலும் பல ஆங்கிலச் சொற்களும் தமிழ் மக்களது பேச்சு வழக்கில் புகுந்துவிட்டன. பேனா, பென்சில் வில்லடி, கிடங்கு, முதலியனவாகப் பல வாழ்க்கைத் துறை

*ராணு, ராணுவம், ஒயில், உத்தரித்தல், சந்தடி, கொலு, தலைப்பாகை, தளகர்த்தர், மனு, தத்தரம், ஆயக்கம் ஒப்ப, மிடுதல், மிண்டு, தண்டு, பராக்கு, கட்டியர், பவிசு, விருது, கடுக்கன், சாலுவை, தாஷ்டிகன், கொலுசு, அங்கி, சொக்காய் பாசிபந்து, துப்பட்டி, டால், சுருட்டி, உம்பளிக்கை - இச்சொற்களனைத்தும் விறலிவிடு தூதின் ஒரு பகுதியில் காணப்படுகின்றன. இவற்றுள் பல இன்றும் தமிழ் வழக்கிலுள்ளவை.

களிலும் ஆங்கிலச் சொற்கள் பல வந்துள்ளன. இவர்கள் பல இந்துஸ்தானிச் சொற்கள்* புகுவதற்கும் காரணமாயுள்ளார்கள். நமது நாட்டை ஆளுவதற்கு என்று ஏற்படுத்திய உத்தியோகஸ்தர்கள் கட்டாயமாய் இந்துஸ்தானியைக் கற்க வேண்டும் என்று நியமித்ததால் இது நேர்ந்தது.

இவ்வாறாக, சங்ககாலந் தொட்டு இந்நாள்வரை தமிழ் மொழி, பிறமொழிச் சொற்களைத் தாராளமாகப் பெற்று வந்துள்ளது. நமது மொழி, அறிவு வளர்ச்சியின் காரணத்தாலும் பிற காரணங்களாலும், அந்நிய மொழிகளை எடுத்துக்கொள்வதில் எப்பொழுதும் பின் வாங்கியதில்லை. சரித்திரபூர்வமாக இது உண்மை என்பது மேலே கண்டோம். சுதந்திரமடைந்திருக்கும் இந்நாளில் நமது மொழிச் செல்வத்தை அபிவிருத்தி செய்வதில் பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

ஆனால் ஓர் உண்மையை மனத்தில் நன்றாகப் பதிய வைத்தல் அவசியம். இலக்கியம் எப்பொழுதும் புதுச் சொற்களை ஏற்றுக்கொள்வதற்குச் சிறிது தயங்கியே நிற்கும். செய்யுளால் அமைந்த இலக்கியங்கள் இவ்வாறு தயங்கி நிற்பினும், வசனத்தால் அமைந்த இலக்கியங்கள் முற்போக்கினைத் தழுவுதல் வேண்டும். வசன இலக்கியங்களைக் காட்டிலும் பேச்சுவழக்கில் நாம் விரிந்த மனப்பான்மையையே கொள்ளுதல் வேண்டும். மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரங்கள் பற்றிய அளவில் நமது கல்வித் துறையில் இருப்பவர்கள் அறிவு வளர்ச்சி ஒன்றனையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆங்கிலம் முதலிய அந்நிய மொழிக் கலைச் சொற்களை எடுத்தாளுதலில் மிகமிக விரிந்த மனப்பான்மையைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பிறநாட்டு மக்களோடு ஒப்ப விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றில் நாம் மேம்பாடு அடைய முடியும்.

---

*சலாம், தூராய், கபாய், கபாத்து, சரிகை, சவ்வாது, சகலாத்து, அனாமத்து, சராசரி, மாரிபம், ஜல்தி, வர்க்கத்து, அத்து, மாசூல், மராமத்து, அசல், நகல், ஐவேஜ், கறார் ரஸ்தா, தகரார், தண்டோரா, தரப்பு, திவால், தரியாபத்து, தாவா, மிராசுதார், முனிசிப், ரத்து, வசூல், வாய்தா, வாரிசு ஜப்தி, ஜவாப்தா, டாறு, பந்தோபஸ்து, லஞ்சம், ஆஜர், அமுல் கசாப்பு, கச்சேரி, ராவுத்தன் என்பவை உதாரணங்கள். (வேம்பத்தூரார் திருவிளையாடல் 28:83:86:46:28)

9. தமிழில் வசன நடை

பேசுகிற சாயலிலேயே...

தமிழில் வசன நடை எப்படியிருக்க வேண்டும்? இக் கேள்விக்குப் 'பேசுகிற சாயலிலேயே, மக்கள் பேசும் எளிய நேரான பாஷையிலேயே, வசனம் இருக்க வேண்டும்' என்று திருவாளர் டி.கே. சிதம்பரநாத முதலியார் முதலிய நண்பர்கள் கூறுகிறார்கள்.

இவர்கள் சொல்லுவது பெரும்பாலும் மறுக்கத்தக்கது. தங்கள் கொள்கைக்கு ஆதாரமாக, இவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு முதலியவற்றிலுள்ள வசன நடையை ஆராய்ந்த சில அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார்கள். இந்த ஆசிரியர்களில் பெரும்பாலோர் சிறந்த கல்வியாளர்கள்; நல்ல இலக்கியப் பயிற்சி உடையவர்கள்; அழகுணர்ச்சி மிகுதியாக உடையவர்கள்; வசனம் எழுதியெழுதிக் கைதேர்ந்தவர்கள்; வசன நடை எப்படியிருக்க வேண்டும் என்று பலபடியாக ஆராய்ந்தவர்கள். ஆகவே, நமது தமிழிலுள்ள வசன நடையும் இவர்களுடைய கருத்துக்களைப் பின்பற்றி அமைந்தால் நலமாகும் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், ஏதோ ஒரு சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்களை மாத்திரம் மனத்தில் கொண்டு ஒரு முடிவுக்கு வருதல் கூடாது. வசன நடை என்பதனை நன்கு ஆராய்ந்து, பலருடைய கருத்துக்களையும் எடுத்து விவகரித்து, தக்க காரணங்களால் முடிவுக்கு வந்துள்ள அறிஞர்களின் கருத்துக்களையே நாம் கொள்ள வேண்டும்.

> ரஸ்கின் (Ruskin) என்ற பேராசிரியர் (தமது) வயசு காலத்தில், 'என்னுடைய இளம்பருவத்தில் எந்தச் சிறிய விஷயத்தைப் பற்றியும் நீண்ட நீண்ட வார்த்தைகளைக்கொண்டு இல்லாத வளைவெல்லாம் வளைத்து எழுதிவந்தேன். ஜனங்கள் அதை வியக்கக்கூடச் செய்தார்கள். ஆனால் இப்பொழுதோ [விஷயத்தை நேர் நேராக அப்படி அப்படியே சொல்லுவதுதான் சரியான முறை என்று எனக்குத் தெரிகிறது' என்றார்.

---

*திருச்சி அகில இந்திய ரேடியோவில் டி.கே.சி அவர்களும் நானும் நிகழ்த்திய விவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.

எனப்படுகிறது. இப்படி நேர் முகமாக எழுத ஆரம்பித்த பிறகுதான் ஆங்கிலமொழியின் நயம், சக்தி, வளம் எல்லாம் அவருக்குத் தெரியவந்தனவாம்.

இந்தக் கருத்தை, 'பேசுகிற சாயலின்படி வசனம் அமைய வேண்டும்' என்பதற்கு ஆதாரமாகச் சிலர் காட்டு கிறார்கள். ஆனால் மேலே உள்ள வாக்கியங்களில் இக் கருத்துக் காணப்படவேயில்லை; சொல்லக் கருதிய விஷ யத்தை நேர் நேராக எழுதிவிட வேண்டும் என்ற ஒரு கருத்துத் தான் காணப்படுகிறது. தங்கள் கருத்துக்கு ரஸ்கின் எவ்வாறு ஆதரவளிக்கிறார் என்று நமக்குத் தெரியவில்லை.

ஆசிரியர் ரஸ்கினைக் காட்டிலும் மாண்டெயின் (Montaigne) என்ற ப்ரெஞ்சு ஆசிரியர் டி.கே.சி.யின் கருத்துக்கு ஆதரவு அளிக்கிறார் என்று சொல்லலாம்.

> 'இயற்கையான எளிய, நடிப்பற்ற பேச்சைத் தான் நான் விரும்புகிறேன். பேசுவது போலவே எழுத வேண்டும்; வாயில் வழங்குவது போலவே கடுதாசி யிலும் அமைதல் வேண்டும். செறிவுள்ளதாயும், கட் டமைந்ததாயும், ஆற்றலுடையதாயும், கருத்து நிரம்பி யதாயும், சுருக்கமானதாயும், பயனுடையதாயும் வசனம் அமைதல் வேண்டும். வேகத்தோடு நம் முடைய மனத்தில் கூர்ந்து பாய்வதாயிருக்க வேண் டுமேதவிர, தளுக்கும் நடிப்பும் இருத்தல் கூடாது. நடிப்பு என்பதே கூடாது; கடினமாயிருந்தாலும் நமது பொறுமையைச் சோதிப்பதாக இருத்தல் கூடாது. சுதந்திரத்தோடும், தைரியத்தோடும் லாவகத்தோடும் செல்வதாயிருக்க வேண்டும். நடையிலுள்ள ஒவ்வோர் அங்கமும் ஒன்றோடொன்று அழகாக, சரீரத்திலுள்ள உறுப்புக்கள் போல் நன்றாகப் பொருந்தியிருத்தல் வேண்டும். பண்டிதர்கள் முறையையோ, துறவிகள் முறையையோ, வழக்கறிஞர் முறையையோ வசன நடை பின்பற்றுதல் கூடாது. யுத்த வீரனது முறை யில் நேராகப் பொருள் குறித்துச் செல்லுதல் வேண் டும்'.

என்றார் மாண்டெயின்.

ஆனால், இவரும் அக்கருத்தைப் பலவகையான நிபந் தனைகளுக்கு உட்படுத்தி விடுகிறார். இனி, வசன நடைகளை

ஆராய்வதையே தமது முதல் நோக்கமாகக் கொண்டு எழுதியவர்களின் கருத்தை நோக்குவோம். உதாரணமாக, ராபர்ட்ஸன் (Robertson) என்ற ஆசிரியர் கூறுவதாவது;

> ஆங்கிலத்தில் இரண்டு வகையான வசன நடைகள் உண்டு. ஒன்றில் சிறிய எளிய ஆங்கிலச் சொற்களும் மற்றொன்றில் பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கப் பட்டுக் கல்வியாளர்களுக்கு மட்டும் விளங்கும் நெடிய சொற்களும் காணப்படும். முதல்வகை நடையில் நேர்மையும், சுருக்கமும், தெளிவும் உள்ளன. இரண்டாவது வகை நடையில் சொல்-அலங்காரமும், கம்பீரியமும், ஓசை நயமும் உள்ளன. ஆங்கில மொழி ஒற்றைத் தந்தியால் அமைந்த இசைக் கருவியாய் இல்லாமை பற்றி நாம் நன்றி பாராட்டுகிறோம். இரண்டு நடைகளும் வெவ்வேறு நோக்கமும் பயனும் உடையன. ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்தது என்று சொல்வது பேதமை; ஒருவகை நடையினால் ஏற்படும் பயன் மற்றொரு நடையினாலும் விளையக்கூடும் என்று சொல்லுதல் பேதமையினும் பேதமை ஆகும்.

ஹெர்பர்ட் ரீட் கருத்து

ஆங்கில வசன நடையைக் குறித்து மிக விரிவாக ஆராய்ந்த ஹெர்பர்ட் ரீட் (Herbert Read)

> வசனநடைக் கலையின் இயல்பை இரண்டு நிலைகளினின்று நோக்கி நாம் கற்கலாம். ஒருநில மொழியைப் புறத்தே நின்று வழங்குவதைப் பற்றியது (objective use of language). இதன் நோக்கம் பிழையற்ற திருந்திய நடை (Composition) என்று கொள்ளலாம். மற்றொரு நிலை மொழியை அகத்தே நின்று வழங்குவதாம். இதன் நோக்கம் பிறரை வசீகரித்தல் முதலியன ஆகும். இதனை அழகிய நடை (Rhetoric) என்று சொல்லலாம், சொல்லமைப்பை மாத்திரம் ஆராய்ந்தால் திருந்திய ஒரு நடையே நமக்குக் கிடைக்கும். இது சாதாரண மக்களுடைய பேச்சில் இருக்கும் குறைபாடுகளை எங்கும் முறைப்பட நீக்குதலால் விளைவதாகும். ஆனால் இவ்வாறு திருத்தமுற்ற நடையிலும் மேம்பட்டு, அழகுடைத்தாக வசனம் அமைய வேண்டுமாயின், அப்பொழுது முன்னே குறித்த குற்றங்கள்

---

*ப்ளோரியோ (Florio) மொழி பெயர்ப்பைத் தழுவியது.

> நீங்குவதுடன் ஆசிரியனுக்குரிய ஆத்ம குணங்கள் சிலவும் பொருந்தியிருத்தல் வேண்டும். இக் குணங்கள் நடையின் அழகிற்கு உதவுவனவாகும்.

என்று எழுதியுள்ளார்.

மேற்காட்டியவற்றிலிருந்து, ஆங்கில ஆசிரியர்கள் எல்லோரும் ஏகோபித்து, 'வசனமெல்லாம் மக்கள் பேசும் எளிய நேரான நடையிலேதான் அமைய வேண்டும்' என்று சொல்லவில்லை என்பது தெளிவாம். இவ்வாறு கக்ஷிபேசுபவர்கள் இக்காலத்துப் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம்.

வசன நடை வேறுபடுதல்

மேலும் டி.கே.சி.யின் கருத்தை நாம் ஒப்புக் கொள்வதாயிருந்தால், ஒரே வகையான வசன நடை தான் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. அவ்வாறு பெரும்பாலும் இருக்கமுடியாது. இருக்கவும் கூடாதென்றே சொல்லுவேன். ஒவ்வோர் ஆசிரியனும் தனது நூலை ஒரு சில வகுப்பாரை மனதில் வைத்தே எழுதுகிறான். யாரைக் குறித்து எழுதுகிறானோ அவர்களுக்குத் தக்கபடி வசன நடை வேறுபடுதல் இயல்பு. குழந்தைகளுக்குக் கதைகள் சொல்லும்போது ஓர் ஆசிரியன் கையாளும் நடைவேறு; கற்றறிந்தோர்க்குத் தன் கருத்தை வெளியிடும்போது கையாளும் நடைவேறு; வழங்கும் சொற்களும் வேறு. இப்படியாக வாசகர்களுக்குத் தக்கபடி நடை வேறுபடுகிறது. இனி, சொல்லக் கருதும் விஷயங்களுக்குத் தக்கபடியும் நடை வேறுபடும். சரித்திர நூல் எழுதும் போது கையாளுவது ஒரு நடை; விஞ்ஞான நூற்கருத்துக்களை வெளியிடும்போது கையாளுவது வேறு ஒரு வகை நடை; முறையும் வேறு; இதுவுமல்லாமல், கருதிய நோக்கத்துக்குத் தக்கபடியும் நடை வேறுபடுதல் இயல்பு. தன் சொல்வன்மையால் வாசிப்போரை வசீகரித்து அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடை வேறு. ஏதேனும் ஒன்றை விளக்கஞ் செய்வதற்கு ஆளும் நடை வேறு. இதற்கு மேலும், சொல்லும் முறைக்கு ஏற்றபடியும் வசன நடை வேறுபடும். சம்பாஷணை ரூபத்தில் எழுதும் நடையும், கடித ரூபத்தில் எழுதும் நடையும் வேறுவேறாகும். கடைசியாக, ஆசிரியர்களது பண்பு, மன நிலைகளுக்கு ஏற்றபடியாயும் நடை வேறுபடுவதுண்டு. அறிவாற்றல் மிக்க ஆசிரியனது நடை ஒரு வண்ணமாயிருக்கும்; உணர்ச்சி வசத்தனாய் நிற்பவனது நடை வேறொரு வண்ணமாயிருக்கும்.

> ஒவ்வொருவனது மொழியும் மூன்று வகையான இயல்புகளுடையன. ஒருவகை இயல்பு அவனது கல்வி, அறிவு ஆற்றல் முதலிய தனிப்பண்புகளைச் சார்ந்தது. இரண்டாவது வகை இயல்பு அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாயுள்ளானோ அந்த இனத்திற்குரிய இயல்புகளைச் சார்ந்தது. மூன்றாம் வகை இயல்பு பொது மக்கள் பொதுப்பட வழங்கும் சொல், தொடர் முதலியவைகளைப் பற்றியது.

என்று எஸ். டி. கோலரிட்ஜ் (S. T. Coleridge)* எழுதியுள்ளார். இவ்வாறாக, வாசகர்களுக்கும், விஷயங்களுக்கும், நோக்கங்களுக்கும், முறைகளுக்கும், ஆசிரியர் மன நிலைகளுக்கும் ஏற்றபடி வசன நடை வேறுபடும். இயற்கைத் தோற்றங்கள் ஒருபடியாகக் காணுதல் இல்லை. அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் தோன்றுகின்றன. வசன நடைகளும் அத்தகையனவே.

இனி, எளிய நேரான பாஷை நடையிலே என்ன விஷயங்களைக் கூறிவிட முடியும்? இந்நடையின் நோக்கமும் பயனும் வேறு என ராபர்ட்ஸன் கூறியதை மேலே கொடுத்துள்ளேன். எல்லா வகை நோக்கங்களும் பயன்களும் இந்நடையால் முற்றுப்பெற மாட்டா என்பது திண்ணம். சாதாரண விஷயங்களையே இந்நடையில் எழுத முடியும். சிறந்த விஷயங்களை அவைகளுக்கு ஏற்ற முறையில் இந்நடையில் எழுதுதல் முடியாத காரியம். நாளுக்கு நாள் விரிந்து கொண்டே வரும் அறிவு உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் பற்றி இந்நடையில் எழுதுவது அசாத்தியம்.

ஆனால், மக்கள் பேசும் எளிய நேரான பாஷை ஓரளவு ஒரு சில விஷயங்களுக்குச் சிறந்த உரைநடைக் கருவியாயிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளலாம். எல்லா விஷயங்களுக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் இந்த ஒரு வகை நடையே போதும் என்றாவது, இதைத் தவிர வேறு வகை வசன நடை இருக்கக்கூடாது என்றாவது சொல்லுதல் ஒப்பத்தக்கதல்ல.

பேசுகிற சாயலிலேயே வசனநடை இருக்க வேண்டும் என்பதை ஊன்றிக் கவனிப்போம். பேசுகிற சாயல் என்றால் என்ன? சாதாரணமாய்ப் பேசும்போது வார்த்தைகளை அத்தனை நிறுத்துப் பேசுவதில்லை; அவைகளைக் காரிய காரணத் தொடர்புபட நல்ல முறையில் அமைப்பதும்

இல்லை. ஓய்ந்துபோன கையுங் காலும் மூட்டு அறுபட்டுத் தொங்குவது போல வாக்கியங்கள் நிற்கும். வழங்கும் வார்த்தைகளில் பலவும் கிராமியமாய் இருக்கும். வார்த்தைகளைப் பலவாறாகச் சிதைத்து விரூபமாகவும் வழங்குவோம். இப்படியெல்லாம் வசன நடையில் இருக்கலாகமா?

மேலும், பேசும் விஷயங்களைக் கேட்பவன் நன்கு அறிந்து கொண்டானா என்பதை முகக்குறியால் தெரிந்து வேண்டுமானால், சொல்லியவைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லியும், திரும்பத்திரும்ப விளக்கியும் பேசுவது மிகச் சாதாரணம். இப்படியெல்லாம் வசன நடையில் இருக்கலாமா? இருக்கவே கூடாது.

வசனம் நிதானித்து எழுதப்படுவது

வசனம் என்பது நிதானித்து எழுதப் படுவது; வேண்டும் அவசரத்துடன் எழுதப்படுவது. பேசும்போது இருக்கும் சௌகரியங்களும் அசௌகரியங்களும் வசனம் எழுதும் போது இல்லை. ஆதலால், பேசுகிறசாயல் என்பதன் அர்த்தம் முழுமையும் நாம் மனத்திற் கொள்வோமானால், பேசுகிற சாயலில் வசனம் இருக்கமுடியாது, இருக்கவும் கூடாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்.

மேலும், பேசுகிற சாயலை வற்புறுத்துவோர் ஒரு முக்கியமான வேறுபாட்டை மறந்து விடுகிறார்கள் என்று தோன்றுகிறது. பழகிய இயற்கை நடை (Familiar) வேறு; கிராமிய நடை (Vulgar) வேறு. இரண்டிற்கும் உரிய வேறுபாட்டை ஹாஸ்லிட் (W.Hozlitt)நன்றாக விளக்கியிருக்கிறார்.

> நடிப்பின்றி இயற்கையாக எழுதுவது என்றால் மனந் தோன்றியபடி எழுதுவது என்று நினைக்கிறார்கள். ஆனால், சொல்லின் திட்பமும் உரையின் தூய்மையும் இயற்கை நடையில் வேண்டும் அளவு வேறொன்றிற்கும் வேண்டியன அல்ல. பொருளற்ற ஆடம்பரச் சொற்களை இயற்கைநடை அறவே ஒழித்துவிடும். இதற்கும் மேலாக, கீழ்மையான இயல்புள்ள தொடர்களையும், பொருத்தமற்று நெகிழ்ந்து செல்லும் வாசகங்களையும், குழூஉக் குறிகள் என்று சொல்லத்தகும் சொற்களையும் முற்றும் இந்நடை நீக்கிவிடும். கைக்கு எட்டிய முதல் வார்த்தையை இது எடுத்துக் கொள்வதில்லை. பொது ஜன வழக்கில் உள்ளவற்றில் சிறந்த

வார்த்தைகளையே இது பொறுக்கி எடுத்துக் கொள்ளும். சொற்களை மனம் போன போக்குப்படி வாக்கியத்தல் தொடர்ந்து செல்லுமாறு விடுவதில்லை. மொழியின் உண்மையான மரபினைத் தெரிந்து, அம் மரபோடு ஒத்து, சொற்களை வாக்கியத்தில் தொடர்ச்சியுறச் செய்யும். உண்மையான இயற்கைநடை என்பது சாதாரணமான சம்பாஷணையில் சொல்வன்மையுடைய ஒருவன் வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து லாவகத்துடனும் ஆற்றலுடனும் தெளிவுடனும் பேசுதல்போல எழுதுவதாகும். இவன் பாண்டித்திய படாடோபங்களையும் பிரசங்கப் பெருவீச்சுக்களையும் அறவே நீக்கிவிடுவான்.

பிழையற்ற நடையைக் குறித்து ஆசிரியர் ரீட் (Read) கூறியதை மேலை உணர்த்தினேன். இன்றைக்கு எவ்வகையான சொற்களை ஆளுதல் வேண்டும்? எவ்வகையான சொற்களை நீக்குதல் வேண்டும்?

சொற்கள் பொருளை விளக்கமுறச் செய்ய வல்லவையாக இருத்தல் வேண்டும். இதுவே சொல்லினால் விளைய வேண்டும் முதற்பயன். சொல்லின் பொருள் ஆசிரியர் கருத்துக்கு முற்றும் ஒத்ததாக இருக்க வேண்டும். இதைத் தவிர, அதன் ஒலி, பொருளின் சாயையை மனத்திலே தோற்றுவிக்க வல்லதாதல் வேண்டும். இவ்வல்லமை பல தரத்தவாம். காக்கை என்ற பறவைப் பெயரை நோக்குவோம். இப்பறவையின் பெயர் 'கா' 'கா' எனக்கரைவது பற்றித் தோன்றிய பெயராகும். இங்ஙனமே கிளுகிளுத்தல், ரீங்காரம் முதலிய சொற்களும் இவ்வகையைச் சார்ந்தன. இவற்றை அனுகரண ஒலிப்பெயர் என்று கூறுவார்கள். இவற்றைக் கூறிய அளவிலே இவற்றால் உணர்த்தப்படும் பொருள்கள் நம் மனக்கண் முன்னே தோன்றுகின்றன. இது முதற்படி. இதற்கு மேலாக உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் இவற்றின் ஓசை அளவினால் பொருளை உணர்த்தும் சொற்களைக் கூறலாம். இவற்றைத் தெரிந்து ஆளுதல் வேண்டும் இது வசன நடையில் முக்கியமாகக் கவனித்தற்குரியது. ஓர் உதாரணம் தருகிறேன். நீண்டகாலப் பகுதியை உணர்த்துவதற்குத் தமிழில் சாதாரணமாக இரண்டு சொற்கள் வழங்கும்; ஒன்று ஊழி, மற்றொன்று யுகம். இவ் இரண்டிலும் ஊழி என்ற சொல்லே ஓசையின் நீட்சியால் இக் காலப்பகுதியை நன்கு உணர்த்துதல் காணலாம்.

ஆயிர வெள்ள ஊழி
வாழி ஆத வாழிய பலவே (பதிற்றுப்பத்து. 63)

என்ற அடிகளில் ஊழி என்பதனோடு மற்ற நெடிலோசை களும் மிகுந்து, கருதிய பொருளுக்கு ஏற்ப வந்துள்ளன. 'நீடூழி வாழ்க' என நாம் வாழ்த்தும் தொடரிலும் இவ் ஓசை நயம் இருத்தல் காணலாம்.

இதன் காரணம் அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் மாட்சிமையே யாம்*.

என்ற தொடரிலும் பொருளுக்கு ஏற்றபடி உயிரெழுத் துக்கள் அமைந்திருத்தல் காணலாம்.

இவை போன்ற சொற்களினும் மேம்பட்ட வேறொரு வகைச் சொற்கள் இருக்கின்றன. இவற்றின் ஒலிகள் கரு திய பொருளுக்கு இசைய அமைந்தன அல்ல. எனினும், அப் பொருளைக் குறிப்பால் உணர்த்த வல்லனவாயிருக்கும். உதாரணமாக, மிடைதல், மிளிர்தல், அமைதி, அமர்வு, இரங்குதல் முதலிய சொற்களைக் காட்டலாம். ஏகதேச மாக இவ்வகை ஒலியழகு மு. இராகவையங்கார் எழுதிய கட்டுரைகளில் காணுதல் கூடும்.

தனிப்பட்ட சொற்களின் ஓசை நயத்திற்கு மேலாக, சொற்கள் தொடர்ந்து வருகிற நிலையிலே தோன்றும் ஒலித் தொடர்ச்சியின் மூலமாய்க் கருத்து விளக்கம் அடைதலும் உண்டு. இங்ஙனம் தொடர்ந்து வருதல் இப்போதுள்ள தமிழ் வசனங்களில் மிக அருகியே காணப்படுகின்றது. ஆனால், கம்பன் இவ்வகைச் சொற் களை நன்கு தெரிந்து உணர்ந்து பாடுகிறான். கீழ்வரும் உதாரணம் காண்க;

மானினம் வருவ போன்றும்,
மயிலினம் திரிவ போன்றும்,
மீனினம் மிளிர்வ போன்றும்
மின்னினம் மிடைவ போன்றும்,
தேனினம் சிலம்பி யார்ப்ப,
சிலம்பினம் புலம்ப எங்கும்
பூநனை கோதை மாதர்
பொம்மெனப் புகுந்து மொய்த்தார். (உலாவியல்)

---

*மு. இராகவையங்கார்; ஆராய்ச்சித் தொகுதி. பக். 177

இனி, சில சொற்களுக்கு அவற்றின் வழக்காறுகளின் மூலமாய்ப் பொருட்சிறப்பு ஏற்படுதல் உண்டு. உதாரணமாக, காமம், காதல் என்ற இரண்டு சொற்களை எடுத்துக் கொள்வோம். இரண்டும் ஒரு பொருளையே ஆதியில் உணர்த்தின. என்றாலும், காமம் என்பதற்கு இழிந்த குறிப்பும், காதல் என்பதற்கு உயர்ந்த குறிப்பும் நாளடைவில் ஏற்பட்டுவிட்டன. இந்த வழக்கினைத் தெரிந்து சொற்களை ஆளுதல் வேண்டும். இங்கே, நெஞ்சு, இதயம் என்ற சொற்களையும் உதாரணமாகக் காட்டலாம். இதய ஒலி, நெஞ்சின் ஒலி என்பனவற்றைச் சொல்லி நோக்கி எது உசிதமானது என்று தெரிந்து கொள்ளலாம். இதயம் வடசொல் என்று இங்கே நீக்கிவிட முடியுமா?

சொற்களை ஆளுதல்

இனி, தற்காலத்து வழக்கிலுள்ள சொற்களையே நாம் தெரிந்து ஆளுதல் வேண்டும். இவையே உயிர்த்தத்துவத்துடன் கூடியிருப்பவை. இவற்றிற்கு இருக்கும் ஆற்றல் பழங்காலச் சொற்களுக்கு ஏற்படமாட்டாது. ஒரு சிலர் தவறான மொழிப்பற்றுக் கொண்டு பழங்காலச் சொற்களையும் வழங்குகிறார்கள். பண்டைக் காலத்துச் சொற்களைப் (archaism) பற்றி பௌலர் (Fowler) கொண்டுள்ள கருத்தை நாம் நினைவில் வைத்தல் வேண்டும். அவர் இச் சொற்களைப் பற்றி மிக எச்சரிக்கையாகவே எழுதியிருக்கிறார். அரைகுறையாகக் கற்றவர்கள் இச் சொற்களை வேண்டும் என்றே பொறுக்கிப் பொருத்தமற்ற இடங்களில் புகுத்துவதை மட்டுமே அவர் கண்டிக்கிறார். கற்றறிந்தோர்கள் இச்சொல்லின் ஆட்சியை உணர்ந்து தக்க இடத்தில் தகுதி பெற வழங்குவதை அவர் கண்டிக்கவே இல்லை.

எனினும் 'இது வழக்கிலுள்ளது' 'இது வழக்கொழிந்தது என்ற உணர்ச்சி வசனம் எழுதுவோர் ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். ஆனால், இவ்வுணர்ச்சி நன்கு நிரம்பிப் பயன் அளிக்க வேண்டுமாயின், பழங்காலத்திலும், மத்திய காலத்திலும் இக்காலத்திலும் உள்ள சொல் வழக்காறுகளை எல்லாம் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இலக்கணம் என்பது இவ்வழக்காறுகளைத் தொகுத்து அவற்றை ஆளும் நியதிகளைத் தெரிவிக்கும் நூலேயாகும். இதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கணம் வழக்குணர்ச்சிக்கு அவசியமேயாம். தற்காலத் தமிழ் மக்களுடைய சொல் வழக்கினைப் புலப்படுத்துதல் தற்காலத்துத் தமிழ் இலக்

கணத்தின் கடமையாகும். எனவே, சிறந்த வசன நடை எழுதுவதற்கு இலக்கணம் பயன்பட மாட்டாது என ஒதுக்குதல் தவறு. வசன நடையும், இலக்கணத்திற்கு உட்பட்டதேயாகும்.

ஆனால், இலக்கியங்களில் பயிற்சி பெற்ற பின்னரே இலக்கணம் தெரிந்து கொள்ளுதல் நலமாகும். இலக்கணம் மட்டும் கற்றவர்கள் பொதுவாக நல்ல வசன நடை எழுத முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்பது அனுபவத்தால் நாம் அறிகிறோம். இவ்விஷயத்தைக் குறித்து, லாம்பார்ன் (E.A.G. Lamborn) என்ற ஆசிரியர் நான் கூறிய முடிவிற்கே வந்திருக்கின்றனர்.*

பழங்காலத் தமிழ்ச் சொற்களை வழங்குதல் ஒரு புறமிருக்க, வடமொழிச் சொற்களை மிகுதியாக வழங்கியுள்ள ஆசிரியர்களும் உளர்.

> இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யங்களாகிற குண விசேஷங்கள் நேராக ப்ரகாசிக்கின்றது.

இதிற் காண்பது போல வடமொழிச் சொற்களை மிகுதியாய் ஆளுதலும் நீக்கத்தக்கதாம்.

இவையேயன்றி, கருதியதை நேரே சொல்லாது சில வசன ஆசிரியர்கள் வளைத்து வளைத்து எழுதுகிறார்கள்.

> நூறுபத்தடுக்கியொன்று கடைநிறுத்தவெண்பொற்காசு.
> அலையாழி மிசைத்துயில்கூர் பண்ணவன்.

என்பன உதாரணங்கள். இவைகளையும் வசனத்தில் நீக்குதல் வேண்டும்.

> எம்பெருமாட்டி கவல்கின்றது என்னைகொல்?

என்பது போன்ற நடிப்புச் சொற்களையும் விலக்குதல் வேண்டும்.

இக்காலத்தில் ஆங்கிலம் கற்ற தமிழ் மக்களில் சிலர் ஆங்கில மரபுத் தொடர்களை நேரடியாக மொழிபெயர்த்துத் தமிழ் வசனத்தில் அமைத்து விடுகிறார்கள்.

---

*Expression in Speech and Writing, pp. 40—43

> தமது அகன்ற கல்விக்கு அஸ்திவாரம் போட்டார். அவர் ஒளி விளங்கும் விவேகம் நிறைந்துள்ளவராயிருந்தார்.
> மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றாண்டில் கிளம்பினார். ஒவ்வொருவனும் சேனாபதிக்குரிய அதிகாரக்கோல் தன் தன் பயணப் பொதிக்குள் வைத்திருந்தாலும் இருக்குமென்று எண்ணுவது இயற்கை.

இவ்வாறான மொழி பெயர்ப்புக்களும் நாம் ஒழிக்கத் தக்கனவே.

அடைமொழிகளை வழங்குவதில் நியமம்

இதுவரை, கொள்ள வேண்டும் சொற்களையும், நீக்க வேண்டும் சொல்வகைகளையும் நோக்கினோம். இனி, அடை மொழிகளை வழங்குவதில் கையாள வேண்டும் நியமங்களை நோக்குவோம். அவசியமில்லாத அடைமொழிகளைப் பலரும் எழுதி வருகிறார்கள்.

> கடல்புடை சூழ்ந்த மலர்தலை யுலகத்துள்ள உயிரினங்களெல்லாம்

என்ற இத்தொடரிலுள்ள அடைமொழி சிறிதும் பயனற்றது; சிறிதும் அவசியமில்லாதது, இது போன்றவற்றை நீக்குவதில் நாம் மிக்க மனவுறுதியோடு இருக்க வேண்டும். வேறொரு வகையான அடைமொழியும் உண்டு. இதனை அநாவசியம் என்று சொல்ல முடியாது; ஆனால் தகுதி நோக்காமல் குருட்டுப் போக்காக வழங்கியிருக்கக் காண்போம். உதாரணமாக, அமைதியாயிருக்கிற கடலை 'பொங்கிரும் புணரி' என்றல் சிறிதும் பொருத்தமின்மை காணலாம். இவ்வகையான அடைமொழிகளையும் ஒழித்து விடுதல் வேண்டும். இந்த அடைமொழி பற்றிய அளவில் ஒரே ஒரு நியதியைப் பின்பற்றினால் போதுமானது. இயற்கையில் ஊகிக்கக்கூடிய அடைமொழிகளை நீக்கி விடலாம். பொருளின் அல்லது செயலின் தன்மையை வேறுபடுத்தக் கருதுதினால், அதற்குரிய அடைமொழிகளைச் சேர்க்க வேண்டும். இந்நியதியைத் தவறாமல் நாம் கையாண்டால், தமிழ் வசன நடை எவ்வளவோ திருந்திவிடும்.

அணிகள் வசனத்துக்கு உரியன அல்ல

சொற்களைப் பற்றிய குறிப்பை முடிப்பதற்கு முன்னால், அணிகளைக் குறித்துச் சில சொல்ல விரும்புகிறேன். பொதுப்பட அணிகள் எல்லாம் செய்யுளுக்கு உரியனவே

யன்றி, வசனத்துக்கு உரியன அல்ல. எனினும், ஒரு சில சந்தர்ப்பங்களிலே உவமானம், உருவகம் என்ற அணிகளைக் கையாள நேரிடலாம். உருவகம் சில இடங்களில் பொருளை விளக்குவதன் பொருட்டு வரலாம்; சில இடங்களில் கேவலம் அணியின் பொருட்டும் வருவதாகலாம். இவற்றை முறையே 'விளக்க-உருவகம்' என்றும் 'அணி-உருவகம்' என்றும் பெயரிடலாம். இரண்டும் செய்யுட்கு உரியனவே. எனினும் விளக்க-உருவகம் மட்டும் வசன நடையிலும் ஏகதேசமாக வருதல் குற்றமாகாது. 'கல்வி மக்களுக்குக் கண்' என்ற இடத்தில், பொருளை விளக்குவதற்கே உருவகம் வந்துள்ளது. இது போன்ற உருவகங்களை வசன நடையிலும் கையாளலாம்.

வாக்கிய அமைதி

சொற்கள், தொடர்களுக்கு அடுத்தபடியாக, இனி வாக்கிய அமைதியை எடுத்துக் கொள்வோம். சிலர் எழுவாய் பயனிலை, செயப்படுபொருள் முதலிய எல்லா உறுப்புக்களும் பொருந்தியே வாக்கியங்கள் அமைதல் வேண்டும் என்பர். வாக்கியத்தின் பல உறுப்புக்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ளல் அவசியம் என்பதற்காக, முற்குறித்தபடி சொல்லுகிறார்கள் என்று தான் நாம் கருதுதல் தக்கது. பொருளின் விளக்கத்திற்கு எல்லா உறுப்புக்களும் வாக்கியத்தில் இருத்தல் வேண்டா. எல்லா உறுப்புக்களும் வாக்கியந்தோறும் அமைவதாயின், அதன் பொருளாற்றலும் குறைந்துவிடும். அன்றியும் பயனற்ற சொற்கள் மிகுதலால் பொருளின் தொடர்ச்சியும் கெட்டுவிடும். ஆகவே பல வாக்கியங்கள் தொடர்ந்த ஒரு வசனப் பகுதியை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு வாக்கியத்திலும் எல்லா உறுப்புக்களும் இருத்தல் வேண்டும் என்ற நியதி கொள்ளத் தக்கதன்று.

மக்களது ஆதி மொழிகளின் வரலாற்றை ஆராய்ந்து நோக்கினால், வாக்கியம் என்று தற்காலத்தில் சொல்வது பிரிக்க முடியாதபடி ஒன்றோடொன்று பிணைந்து அமைந்த ஒலித் தொகுதியேயாகும். 'இத்தொகுதி ஏகம் என்னும் ஒருமை யுணர்ச்சியை விளைவிக்கும்: ஒருமை உணர்ச்சியினாலே இத்தொகுதியின் நீட்சி, ஒலியின் ஒத்திசைப்பு (rhythm) அமைப்பு என்ற பல இயல்புகளும் கட்டுண்டு நிற்கும்' என்றனர் ஆசிரியர் ரீட். இப்படி அமைந்த வாக்கியத்தில், பலவேறு உறுப்புக்களும், பெயர், வினை

என்ற இரண்டின் வேறுபாடு மக்கள் மனத்தில் பதிந்த பின்னரே அறியப்படுவனவாயின. மக்கள் முதலாவது அறிந்தவை பெயரும் செயலும்தான். இவ்வாறாக, பெயர் மாத்திரம் தனித்து நின்று வாக்கியமாக அமைந்துவிடலாம்; சில இடங்களில் இது மாத்திரமே நிரம்பிய வாக்கியத்தைக் காட்டிலும் ஆற்றல் உடையவதாயிருக்கும். இவ்விடங்களில் வினை தொக்கு நிற்கிறது என்றே நாம் கருதுதல் வேண்டும். இவ்வாறே வினை மாத்திரம் தனித்து நின்று வாக்கியத்தின் பயனைத் தருதலும் உண்டு. ஆனால், முன் வாக்கியமேனும் முன் வாக்கியத்திலுள்ள எழுவாயேனும் எழுவாயாக அமைந்துள்ளதெனக் கொள்ளுதல் வேண்டும். தனித்தும் அடைமொழியோடு சேர்ந்தும் வருகிற பெயர்கள் மாத்திரம் எழுவாயாக நின்று மிக்க ஆற்றலோடு பொருள் உணர்த்துவதற்கு ஓர் உதாரணம்:

> சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்; வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு: கருமையும் வெண்மையும் இவை கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டிற் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன.

இப்படிச் சிட்டுக் குருவியைப் பற்றிப் பாரதியார் எழுதுகிறார். இந்த வசனத்தின் அழகையும் ஆற்றலையும் நாம் உணர்ந்து அனுபவித்தால், வாக்கியங்கள் எப்பொழுதும் உறுப்புக்கள் நிரம்பியே அமைதல் வேண்டும் எனக் கூறமாட்டோம்.

சிலர் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற இலக்கண முறைப்படியே எப்பொழுதும் வாக்கியங்கள் இயல வேண்டும் என்று கூறுவர். உறுப்புக்கள் நிரம்பி அமைதல் வேண்டும் என்ற நியதியைப் போல இதுவும், பெரும்பான்மை நியதியேயாம். சில இடங்களில் இம்முறை மாறிவருதலும் அப்பொழுது பொருளாற்றல் சிறந்து விளங்குவதும் உண்டு. இதனைச் செய்யுளுக்கு மட்டும் உரிய ஒருமுறை என்று கொள்ளுதல் கூடாது. வசனத்திலும் இது உரியதே. ஓர் உதாரணம்:

> பேரண்டத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள் களிலெல்லாம் சிறந்தது மனசு.

இப்படி அழகாக மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார் டி.கே.சி. இது மொழி பெயர்ப்பு ஆயிற்றே; ஒருவேளை ஆங்கில மூலத்திலும் இம்முறை மாற்றம் இருக்கலாம் என்று நாம் நினைக்கக் கூடும். வேறோர் உதாரணத்தைப் பார்ப்போம்.

> 'சரியான அடிமையடா நீ! உன் தாய் பாஷை உனக்கு ஆகவா செய்யும்? மாட்டாது. வேறொரு பாஷைக்குமே நீ அடிமை என்பது தெரிய வேண்டாமா?' என்று கதறுகிறார் கவி.

இவையும் டி.கே.சி.யின் வாக்கியங்களே. இவற்றை யெல்லாம் வாசித்தால் வாக்கியத்தை முறைமாற்றி அமைப்பதில் சில நயம் உண்டாகிறது என்பது தெளிவு.

மேலே தந்துள்ள வாக்கியங்கள் இலக்கண விரோத மானவை என்று சிலர் கூறலாம். அவ்வாறு இருப்பினும் வாக்கியங்களுக்கு உயிர் இருக்க வேண்டுமானால், நான் காட்டியவை போன்ற நெறிகளைப் பின்பற்றத்தான் வேண்டும். இலக்கணம் என்பது காலத்துக்குக் காலம் மாறுவது. ஒரு காலத்துத் தோன்றிய இலக்கணம் பின் வருங்காலம் முழுமைக்கும் ஒரு மொழியை நெறிப்படுத்துதல் இயற்கை விரோதம். இந்த உண்மையை உணர்ந்து, பொருளின் திட்பம், தெளிவு முதலியவற்றையே முக்கியமாகக்கொண்டு ஒருவன் தனது ஆத்ம குணம் தோன்றவும் தனது நோக்கம் நிரம்பவும் வசனத்தை அமைத்தலே தமிழின் மறுமலர்ச்சிக்கு அறிகுறியாகும். வாக்கியங்களால் அமைந்த பத்தியின் (Paragraph) அமைதியும். சொல்லக்கருதிய பொருளைப் பாகுபடுத்தி முறைப்பட விரிக்கும் நெறியும் வசன நூல்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. இவ்வாறு பல வழி யிலும் திருந்திய செம்மையான வசன நூல்களை இயற்றி மறுமலர்ச்சியைப் பேணி வருவோமாக.

10. வளரும் மொழி: உரைநயம்

மறுமலர்ச்சித் தமிழ்

சில காலத்திற்கு முன், எனது நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன். அவர் இலக்கண அறிவிற் சிறந்தவர். எங்கள் சம்பாஷணையினிடையே, அவர் தற்காலத்துத் தமிழ், எழுத்தாளர்கள் தமிழ், மறுமலர்ச்சித் தமிழ் முதலியவைகளைப் பற்றி மிகவும் குறை கூறிக் கொண்டிருந்தார். எழுத்தாளரில் பெரும்பாலோர் இலக்கண-அறிவும் தமிழ் உணர்ச்சியும் இல்லாதவரென்று பழித்தார். தமிழே தொலைந்து போயிற்று என்று நொந்து வருந்தினார். நான் எதிர்க்கட்சியை ஆதரித்து, 'நீங்கள் கூறுவது ஒரு வேளை சரியாயிருக்கலாம். தற்காலத்தில் எழுதிவரும் தமிழ், பண்டிதர்களுக்கு மட்டுமன்றி, எல்லார்க்கும் விளங்குகிறது: எளிமையாயிருக்கிறது. வெளியிடும் கருத்தின் விளக்கத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. புது நெறிகளைக் கொண்டு வசனத்தை அமைத்து, புதுப்புது நயங்களைத் தோற்றுவிக்கிறது; அறிவின் நுட்பங்களை நன்றாகப் புலப்படச் செய்கிறது; கருத்தின் சாயைகளுக்கெல்லாம் நிறம் கொடுத்து வாசிப்போர் மனத்தைக் கவருகிறது. உணர்ச்சியின் வேகங்களுக்கெல்லாம் இடம் தருகிறது; கலை நயம் மிகுந்து இன்புறுத்துகிறது. எழுத்தாளன் ஒவ்வொருவனது தனிப்பண்பும் நன்கு துலங்கச் செய்கிறது. இவ்வாறான தமிழை 'எழுதுதல் அருமை' என்று கூறினேன். எனது நண்பர் சிறிது வியப்புடன் என்னை நோக்கினார். பின்னர் முடிவற்ற இவ்விவகாரத்தை விட்டுவிடு, வேறு சில இலக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசலானோம்.

உரைநயம்

உரைநயம் அடங்கிய பொருள்களைத்தான் உரைநயம் என்ற தொடர் குறிக்கிறது. தமிழ்-நடை விவகாரம் இன்று நேற்று உண்டானதல்ல. கற்றுவல்ல பண்டிதர்கள் மொழியை இலக்கண விதிப்படியே வழங்கவேண்டுமென்று

---

*இதன் சுருக்கம் சென்னை வானொலி நிலையத்தில் 1-11-50-ல் ஒலி பரப்பப்பட்டது.

எப்பொழுதும் வற்புறுத்துவர். பொதுஜனங்கள் தெரிந்தோ தெரியாமலோ இலக்கண விதிகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, தமக்குத் தோன்றியவாறு-ஆனால் பொருள் விளங்கும்படி - மொழிகளை வழங்கி வருவர். இவ்வகை வேறுபாட்டைப் பண்டித - பொதுஜனப் போர் என்று கூறலாம். இப்போர் நிகழாத காலமுமில்லை; இடமுமில்லை. முடிவில் வெற்றி பொதுஜனங்களுக்குத்தான். மொழிகள் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை அப்படியே: இனி மேலும் அப்படியே. பூர்வகாலத்துப் பேராசிரியர்கள் கையாண்ட மொழி-வழக்கினை முழுதும் புறக்கணியாது ஓரளவு பின்பற்றி, தற்காலத்தை எதிர்த்து நோக்கி, அதன் புதுத்தேவைகளை உணர்ந்து, அவற்றைத் தக்கவாறு வாக்கியங்களின் மூலமாய் வெளியிடுவதற்குப் பொதுமக்கள் சிறிதும் தயங்குவதில்லை. அதுதான் அவர்கள் வெற்றியின் ரகசியம். மொழிகளின் வளர்ச்சி எங்கும் பொது ஜனங்களால்தான் இதுவரை நேர்ந்துள்ளது. என்றும் அப்படித்தான். அவர்களால் நேர்ந்த வளர்ச்சியை நம்மில் ஒருசிலர் கேடு என்பார்கள். ஒரு வேளை ஒரு சில இடங்களில் உண்மையிற் கேடாயிருப்பினும், நன்மையின் வித்தும் அதிலே உள்ளது. பொது ஜனங்கள்தான் மொழிகளுக்கு உயிர் கொடுத்து அவை இயங்கும்படி செய்ய வல்லவர்கள். மொழி வளர்ச்சி நெறியை உணராத இலக்கணப் பண்டிதர்களிடத்தில் மட்டும் மொழிகள் அமைந்து விடுமானால், அவைகளைக் காற்றில்லாத அறையில் பூட்டிவைத்துக் கொன்றே விடுவார்கள். மொழிகளுக்கு மரணம் நேர்ந்ததெல்லாம் இவ்வாறே.

ஆனால், பண்டிதர்கள் தேரின் அச்சாணி போன்றவர்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. தேர் ஒரு நிலையில் நிற்கவேண்டுமல்லவா? அதுபோல, மொழிகளும் ஒரு பொது நிலையில் நிற்க வேண்டும். அவ்வாறு நிற்பதற்கு இவர்கள் உதவுகிறார்கள். பண்டித வகுப்பினரின் உறுதி நிலையைப் பெறாது, அவர்களை ஊன்று கோலாய்க் கொள்ளாது, மொழிகள் பொது ஜனங்களின் வசமே முற்றும் அமைந்து விடுமானால் அவற்றை எவ்வகை நியதியுமின்றி வழங்கி வெகுவிரைவில் உருக்குலைத்து விடுவார்கள். ஆகவே மொழிகளுக்குப் பண்டிதர்களால் விளையும் நிலைபேறும் வேண்டும்; பொது மக்களால் விளையும் உயிராற்றலும் வேண்டும்.

உயிராற்றல்

இதனால் வளரும் மொழி நிலைபேறும் உயிராற்றலும் கொண்டே வளர்வதாகும் என்பது வெளிப்படை. நிலைபேறு தொன்றுதொட்டு வரும் இலக்கண மரபையும் தமிழ் மரபையும் காலதேச வர்த்தமானங்களுக்கு இயைய வேண்டுமளவு பின் பற்றுவதனால் உண்டாகும். உயிராற்றல் எவ்வாறு ஊறிச் சுரந்து பாய்கிறது? இதனைக் குறித்துச் சிறிது சிந்தனை செய்வோம்.

முதலாவது, அப்போதைக்கப்போது பிற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன்கொண்டு வழங்குவதனால் இவ்வுயிராற்றல் பெருகுகிறது. புதுப் பொருள்களையும் புதுச் செயல்கள் முதலியவற்றையும் இவ்வகைக் கடன் சொற்களால் எளிதில் உணர்த்துவது கூடும். மேலை நாடுகளில் அறிவுத் துறைகள் பலவற்றிலும் பற்பல நூதன விஷயங்கள் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவைகளையெல்லாம் தமிழ் மக்கள் அறிய வேண்டுமாயின் இங்கே குறித்த கடன் சொற்களாலல்லது ஏலாதாகும். தமிழ் எழுத்தாளருள் ஒரு சிலர் இவ்வாறு கடன் கொள்ளுதலை வெறுத்துரைப்பர். இவ் வெறுப்புரை சிறிதும் தக்கதன்று.

இரண்டாவது, எழுதுவது எல்லார்க்கும் விளங்கும்படி தற்காலத்துப் பொது வழக்கில் உள்ள சொற்களையும் தொடர்களையும் எழுத்தாளன் உபயோகித்தல் வேண்டும். இதற்கு மாறாக எழுதுவது பயன்படமாட்டாது.

> இன்னிசையாழை இடவயின் தழீஇக்கொண்டு மாடகந்
> திரித்து, வாரியும் வடித்தும், உந்தியும் உறழ்ந்தும்
> பாடி மகிழும் இளமகளிர்.

இதில் பெரும்பாலன - நான்கு, ஐந்து சொற்களைத் தவிர மற்றைச் சொற்களெல்லாம் இறந்துவிட்ட ஸங்கேதச் சொற்களே. இவற்றால் ஒரு பயனும் இல்லை. வாக்கியமும் விளங்கமாட்டாது. இறந்துவிட்டதற்குச் சமானந்தான். எனவே இதிலே உயிராற்றல் சிறிதும் இல்லையென்பது சொல்லவும் வேண்டுமா?

> அவனைக் காட்டிலும் நீ எவ்வளவோ உயர்ந்தவன்
> என்பதைத் தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறேன்.

இதில் ஒன்றேனும் வழக்கில் இல்லாத சொல் இல்லை. பொருள் விளக்கமாயிருக்கிறது. எனவே உயிராற்றலும் ஓரளவு இருக்கிறது.

மூன்றாவது, எளிய சொற்களையே பெரும்பாலும் கையாளுதல் வேண்டும். ஒவ்வோர் அவசரம்பற்றி, சற்றுக் கடுமையான சொற்களை எழுத்தாளன் வழங்க நேரலாம். ஆனால் பொதுப்பட நோக்குமிடத்து எளிய சொற்கள் தான் வழங்கப்படுதல் வேண்டும். ஓர் உதாரணம்:

> தமிழ் எழுத்தாளர்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பெருந்திரளாய்க் கண்குளிரப் பார்க்க வேண்டு மென்று முதன் முதலாக இவர் ஆவல் கொண்டார்.

இதில் எளிய சொற்களும் தொடர்களும் உள்ளன. உயி ராற்றல் உடையதாக இது விளங்குவது தெளிவு.

நான்காவது, சொற்களை அள்ளி வீசுவதில் கவனம் செலுத்தாது கருத்தின் விளக்கத்தையே உரைநடை கவ னித்தல் வேண்டும். இதுவும் உயிராற்றல் நிரம்புவதற்கு ஒரு வழியாகும். ஸ்தூலித்துச் சதை வளர்ந்த சரீரம் நோய்க்கு இடம் கொடுக்கக் கூடியது; உயிரின் வலிமைக்குக் குறைவு உண்டாக்குவது. இதுபோல, சொற்களை அடுக்கி நிரப்பினால் கருத்துக்கள் மறையும் அல்லது வலிகுன்றும்; கருத்துக்களின் உயிராற்றலும், தேய்ந்துவிடும். ஆகவே கருத் தின் விளக்கத்திலேயே எழுத்தாளன் கண்ணாக இருக்க வேண்டும். பயனற்ற சொற்கள் வலிமை தரமாட்டாது உதாரணம்:

> வறுமையால் வருந்தியிருக்கும் புலவர்கள் வறுமை காரணமாகத் தன்மானம் என்பதை இழந்து உயிர் வாழார்கள்.

இவ் வாக்கியத்தில் 'வறுமையால் வருந்தியிருக்கும்' என்பது பயனற்றது. இங்ஙனமே 'என்பதை' என்பதும் வேண் டாதது. வேறோர் உதாரணம்:

> அவள் எப்போதும் அல்லும்பகலும் புருஷோத்தமனான கிருஷ்ணனையே மனத்தில் சிந்தித்துக் கொண்டிருந் தாள்.

இதில் 'எப்போதும்' 'மனத்தில்' 'புருஷோத்தமனான' என் பவை வேண்டாச் சொற்கள். இரண்டு வாக்கியங்களிலும்

உள்ள மிகைச் சொற்களை நீக்கிவிட்டால், வாக்கியம் உயிராற்றலில் சிறந்து விளங்குவது காணலாம்.

ஐந்தாவது, புதுநெறிகளைக் கையாண்டு வசனத்தை அமைத்தல் வேண்டும். இந்நெறி பலதிறப்படும் பேச்சு வழக்கோடு ஒத்திருத்தலும் வேண்டும். இதனால் புதுப் புது நயங்கள் தோன்றுதல் உறுதி; அதுமட்டுமன்றி, உயிராற்றலும் நிரம்பி விளங்கும். ஓர் உதாரணம்:

> சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள்; சின்னத்தலை; வெள்ளை கழுத்து; அழகிய மங்கல்; வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவைகலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டில் போர்த்த முதுகு. சிறிய தோகை துளித் துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு என்வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன.

இது ஒரு சிட்டுக் குருவியின் வர்ணனை. சின்னஞ்சிறு அழகிய வாக்கியங்கள்; புதுமுறையில் அமைந்தவை. தொன்று தொட்டு வரும் இலக்கண முறைப்படி இவை அமையவில்லை. 'சிறிய தானியம் போன்ற மூக்கு' என்பதை இலக்கண நியதிப்படி 'இதன் மூக்குச் சிறிய தானியம் போன்றுள்ளது' என்று கூற வேண்டும். இவ்வாறு இலக்கணத்தைத் திருப்திப்படுத்தலாம்; ஆனால் அழகுணர்ச்சியைத் திருப்திப்படுத்தமுடியாது. சிற்பி ஒருவன் நுட்பமான வேலைத்திறன் காட்டி அழகு ததும்ப அமைத்த ஒரு சிற்பத்தை முரட்டு வேலை செய்யும் கல் தச்சன் பெரிய உளியினால் திருத்தியமைக்க முயல்வது போலத்தான் இவ்விலக்கண முயற்சி. இவ்வாக்கியங்களிலே பொருளின் தெளிவு, சொற்களின் எளிமை, கருத்துக்கேற்ற சொற்கள், புதிய நெறி, புதிய நயம், இவையனைத்தும் நன்கு விளங்குகின்றன. இவற்றில் விளங்கும் உயிராற்றல் சொற்களைக் கூடைகூடையாய் வாரியிறைத்துக் கொட்டினாலும் உண்டாக மாட்டாது. எத்தனை உயரிய நடையும் இவற்றின் அழகையும் நயத்தையும் எட்டிப்பிடிக்க முடியாது. இங்குக் காணும் உயிராற்றலோ ஒரு தனி ரகத்தைச் சார்ந்தது. இவ்வாற்றல் நமது உள்ளத்தை அள்ளிப் பிடிக்கிறது; நமது மனக்கண் முன்னே சிறிய அழகிய ஓர் உயிர்ச் சித்திரத்தைத் தீட்டி விடுகிறது. இது, வளரும் தமிழின்

சிகரங்களில் ஒன்றைச் சிறிதும் சிரமமின்றி எளிதிலே பறந்து சென்று அடைந்து விடுகிறது.

ஏன் இவ்வாற்றல் உள்ளத்தை அள்ளிப்பிடிக்கிறது? இக் கேள்வியின் விடைதான் வளரும் தமிழின் ஆறாவது இயல்பாகும். உதட்டின் அளவில் நின்று வெளிவரும் வெற்றுரைகளால் இவ்வகை ஆற்றல் உண்டாவதில்லை. எழுத்தாளனது உள்ளத்திலிருந்து கருத்துக்களும் சொற்களும் புறப்படுகின்றன. இவை இரண்டும் அபேதமாய் நின்று, சொற்கள் தாம் வெளிப்பட்ட மாத்திரத்தில் வாசிப்போர் மனத்திலே கருத்துக்களை நேர்பட உட்செலுத்தி விடுகின்றன. எழுத்தாளனது தனிப்பட்ட உள்ளப்பண்பினைக் காட்டுவதே இவ்வியல்பாகும். இந்த இயல்பினை நன்கு உணர்ந்து கொள்ளுதல் மிக அவசியம். இதனை இனி விளக்க முயல்வோம்:

தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது

என்று ஒரு புலவன் பாடினால், உடனே இச் செய்யுள் அவன் உள்ளத்தினின்றும் தோன்றியதல்ல என்று உணர்கிறோம். ஏதோ நியதிக்கு உட்பட்டு உள்ளத்தைத் தூர எறிந்துவிட்டுப் பாடுகிறானென்று எளிதில் அறியலாம். இது போன்றதுதான் சொல்லணிகள் எல்லாம். இவ்வாறே ஓர் எழுத்தாளன்,

> ஆற்றங்கரையை அடுத்து நின்ற அரசமரக் கிளையை ஆண்குரங்கு ஆட்ட ஆரம்பித்தது

என்று எழுதினால், உடனே இவ் வாக்கியமும் அவன் உள்ளத்திலிருந்து தோன்றவில்லையென்பது எளிதில் புலனாகும். இவ்வாறு சொல்லிய அளவில் சொற் கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டு, நேரே எழுதும் வாக்கியங்களெல்லாம் எழுத்தாளன் உள்ளத்திலிருந்து தோன்றியவை என்று கொள்ளலாமா? அதுவும் முடியாது. அவன் உள்ளம் அவன் சொல்லக் கருதிய பொருளில் ஆழ்ந்து தோய்ந்து நிற்க வேண்டும். மேலே கூறிய சிட்டுக் குருவி வர்ணனையில் இவ்வாறு உள்ளம் தோய்ந்து நிற்பதைக் காணலாம். வேறோர் உதாரணம்:

> குக்கிராமம் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. அங்குள்ள விசித்திர வேலைப்பாடுகளைப் பார்க்கப் பார்க்க அவநம்பிக்கை உண்டாகிறது - நம்மைப் போன்ற மனிதர்கள் செய்திருக்க முடியுமா? என்று

இவ்வாக்கியங்களிலும் எழுத்தாளன் தான் சொல்லக் கருதிய பொருளின் அழகில் ஈடுபட்டு நின்று, உள்ளத்தை வியப்பு-வெள்ளத்தில் முழுகவிட்டு, ஆவேசம் கொண்டு கூறுகிறான். உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் கருத்தோடு ஒன்றிய வசனத்தை இவ்வுதாரணங்களால் ஒருவாறு தெளியலாம். வளரும் தமிழின் உரை நயம் இவ்வாறு விளைதல் வேண்டும்.

ஆனால், 'உள்ளம்' 'கருத்து' என்ற அளவில் அவற்றின் பாகுபாடுகளையெல்லாம் முற்றக் கூறியதாகாது. உள்ளத்திலே அறிவுப் பகுதியும் (intellect) உணர்ச்சிப் பகுதியும் (emotion) உண்டு. இவற்றைத் தனித்தனியே விவரித்தல் அவசியம். எழுத்தாளனது அறிவு பலதிறப்பட்டதாய் இருக்கும். பலதிறப்பட்ட இவ்வறிவின் நுட்பங்களுக்கேற்றபடி கருத்து நுட்பமும் இருக்கும். இக் கருத்து நுட்பங்களுக்கெல்லாம் இடம் தந்து உரைநடை அமைதல் வேண்டும். வாக்கியத்தின் அமைப்பு சிறிதளவு மாறினாலும் பொருள் மாறிவிடும்; அறிவின் நுட்பமும் கருத்தின் நுட்பமும் புலப்படமாட்டா. உதாரணமாக 'அவ்வழியே போந்த எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்யாசி அக் கொடிய செயலைக் கண்டனர்' என்பதற்கும், எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்யாசி அவ்வழியே செல்லுகையில் அக் கொடிய செயலைக் கண்டனர் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, எழுத்தாளன் தனது கருத்துக்கேற்றபடி சொற்களைக் கிரமத்தில் அமைத்தல் வேண்டும். இம் முறையைப் பின்பற்றி அமைக்கும் வாக்கியங்களினால், உரை நடையின் நயம் வரவர முதிர்வதாகும்.

மொழிநயம்

மேலும், கருத்துக்களுக்குச் சாயைகள் இருக்கின்றன என்பதை எழுத்தாளர்கள் அறிவார்கள். இச்சாயைகளை ஆங்கிலத்தில் (nuances) என்று கூறுவார்கள். இச்சாயைகளை எல்லாம் நன்கு தெரிந்து, அவை இனிது புலப்படக்கூடிய சொற்களையும் தொடர்களையும் வாக்கியத்தில் அமைத்து உரை நடையின் நயத்தை எழுத்தாளன் மிகுவிக்க வேண்டும். வளரும் தமிழ் இவ்வகை நயத்தைப் பெரிதும் போற்றுதல் தகும். இதில் மேன்மேலும் முயற்சி எடுப்பதனால் தமிழின் நயமே மேம்படுதற்கு வழியுண்டு. இவ்வாறு ஏற்படும் மொழி நயத்தினால், நமது தமிழ் மக்களது உள்ளப்பண்பும் திருந்தியதோர் நயத்தை அடையும்.

இனி, உணர்ச்சிப் பகுதியை எடுத்துக் கொள்வோம் உணர்ச்சி வகைகள் எண்ணிறந்தன. உவகை, வெகுளி, அச்சம் என்பன முதலாக இலக்கண நூலார் கூறுவனவற்றில் இவை அடங்கிவிடமாட்டா. உணர்ச்சி பேதங்களுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அதன் வேகங்களுக்கும் தக்கபடி வாக்கியங்கள் அமைதல் வேண்டும். இவ்வமைப்பினாலும் உரை நடையின் நயம் சிறந்து விளங்கும். வளரும் தமிழில் இந்நயம் சிறப்பாகக் கையாளுதற்குரியது.

நாம் சாதாரணமாகப் பேசும்போது சொல்லாலும். குரலாலும், செயலாலும் கருத்து நுட்பங்களையும் உணர்ச்சி நுட்பங்களையும் நன்றாகப் புலப்படுத்தி விடுகிறோம். வசன நூல்களில் இவ்வகையான உதவிகள் இல்லை. சொற்களையும் தொடர்களையும் வாக்கிய அமைப்புக்களையும் மட்டுமே நாம் பயன்படுத்துதல் கூடும். இவைகளைத் தக்க முறையில், முற்கூறிய நுட்பங்கள் புலப்படும் வகையில் பயன்படுத்த வேண்டுவது உரை நடையின் முக்கிய கடமையாகும்.

கடைசியாக, எழுத்து ஒரு கலை எழுத்தாளன் ஒரு கலைஞன். அவன் எழுதுவனவற்றில் கலை நயம் காணப்படுதல் வேண்டும். கலை நயத்தின் உயிர்நிலை அழகுணர்ச்சி. சொல்லழகு, ஓசையழகு அவயவ அழகு, ஒற்றுமையழகு, அழகினால் ஏற்படும் இன்பச் சுவை: இவை அனைத்தும் அவன் எழுத்துக்களில் பிரதிபலித்தல் வேண்டும். இக் கலையழகோடு விளங்கும் உரைநயந்தான் எக்காலத்தும் மேம்பட்டதாக நின்று நிலவும். வளரும் தமிழில் இது முக்கியமான ஓர் அம்சமென்று கூறவும் வேண்டுமா?

மேற்கூறிய உரை நயங்களெல்லாம் நமது வளரும் தமிழில் இடம் பெற வேண்டுமானால், அதற்கு இன்றியமையாத ஒரு நியதி உண்டு. அந் நியதி யாது என்றால், உரைநடை பேச்சு - வழக்கு முறையைப் பின்பற்றுதலேயாகும். அப்பொழுதுதான் அது உயிராற்றல் பெற்று இயங்க வல்லதாகும். நமது முன்னோர்கள் கையாண்ட முறை இதுவே. இதை நாம் மறந்துவிடலாகாது. உலக மகா கவிகளில் ஒருவனாகிய கம்பன் இம்முறையைத்தான் பின்பற்றியுள்ளான். அவனது செய்யுட்களின் கதி, பேச்சு வழக்கோடு ஒத்து இயங்குகிறது. ஆதலால் தான் அவனது பாிலக்கியம் தூண்டாத மணி விளக்காய் என்றும் விளங்கி

கொண்டிருக்க வல்லதாகிறது. பேச்சு வழக்குத் தவிர்க்க முடியாதது. அதைத் தவிர்த்துவிட்டுத் தமிழ் செல்லுதல் கூடாது.

பேச்சு வழக்கு முறை என்பதனால் பேசும் ஒரே சாயலில் மட்டுந்தான் உரைநடை அமைய வேண்டும் என்பது கருத்தல்ல. இடம், பொருள், நோக்கம் முதலியன பற்றி உரைநடை வேறுபடும்.

மேலே கூறிய நியதிகளை உறுதியாகக் கைக்கொண்டே வளரும் தமிழ் இனிவளர வேண்டும்.

11. கவிதை

கவிதையின் தோற்றுவாய்

'கம்பன் கவிதை' என வாய் நிரம்பப் பேசுகிறோம். ஆனால் கவிதை என்பது யாது? உலகத்தில் இலக்கியம் தோன்றிய காலந்தொட்டே, இக்கேள்வியும் தோன்றி யுள்ளது. இக் கேள்விக்குரிய விடைகளும் பல படியாய்த் தரப்பட்டுள்ளன. நமது தேசத்தில் கவிதையின் உயிர் நிலையைக் குறித்துப் பல அறிஞர்களும் ஆராய்ந்துள் ளார்கள். சிலர் அது பொருட் சிறப்பே என்றனர். வேறு சிலர் பொருளைப் பொதிந்துள்ள சொற் சிறப்பும், செய்யுள் வகைச் சிறப்பும் என்று கொண்டனர். மற்றும் சிலர் ஒன்பது வகைப்பட்ட சுவையே உயிர் நிலை என் றனர். இன்னும் சிலர் தொனியே உயிர்நிலை யாகும் என்று துணிந்தனர். இவையெல்லாம் கவிதையின் தோற்று வாய், வரலாறு முதலியவற்றைக் கருத்துட் கொள்ளாதன. மேலை நாட்டில் ஜான்ஸனிடத்தில் பாஸ்வெல் இந்தக் கேள்வியைக் கேட்டார். ''ஒளியை நாம் அறிவோம். ஆனால் அது இன்னதென்று சொல்வது எளிதல்ல. இது போலவே தான் கவிதையும். 'கவிதை இது அல்ல, இது அல்ல' என எளிதில் கூறிவிடலாம். ஆனால் இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல'' என்று ஜான்ஸன் பதில் கூறினராம். கோலரிட்ஜ் என்பவர் வசனத்திற்கும் கவிதைக்கும் ஓர் இலக்கணம் வகுத்தனர். 'சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம் என்றும், சிறந்த சொற்களை சிறந்த முறையில் வைப்பது கவிதை' என்றும் இவர் முடிவுசெய்தனர். இவ்விடையும் கொள்ளத் தக்கதன்று. சிறந்த முறையில் சொற்கள் அமையாத போதிலும், அங்கே வசனம் உள்ளது என்று கூறுகிறோம். மேலும் சிறந்த முறை என்பது யாது என்ற கேள்வியும் எழுகின்றது. ஒவ்வொரு நோக்கத்திற்கு ஒவ்வொரு முறை சிறந்ததாக ஏற்படுதல் கூடும். அப்போது சிறந்த முறை என்று கூறுவது பயனற்றதாகும். கோலரிட்ஜின் நண்பர் வோர்ட்ஸ்வொர்த் இதுபற்றி எழுதியுள்ளது உலகப் பிர சித்தம். 'ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது. தான் கவிதை' என்று இவர் துணிந்தார். கோபம்

எப்படி உண்டாகிறது? ஆற்றல் நிரம்பிய உணர்ச்சியால் உந்தப் பட்டுச் சொற்கள் தாமாகப் பொங்கிவருவதனால் இது கவிதையாகுமா? இதனை விளக்கி 'முன்பு கிளர்ந்த ஓர் உணர்ச்சிப்பெருக்கை மீண்டும் சாந்த நிலையிலிருந்து நினைவிற்குக் கொண்டுவரும்போதுதான் கவிதை தோன்று கிறது' என்றனர். வோர்ட்ஸ்வொர்த் கூறியது ஒரு பொதுப் பட்ட வருணனையே யன்றி உண்மையிலக்கணத்தை வரை யறுத்த தாகாது. அன்றியும், கவிதையின் தோற்றம் வோர்ட்ஸ்வொர்த் கொண்டுள்ளபடியே எல்லா இடங் களிலும் நிகழும் என்று கூறவும் முடியாது. ஆகவே, இங் ஙனம் கூறியதும் போதியதன்று; இக்கொள்கையும் பொருந் துவதன்று. கீத்ஸ் என்ற கவிஞர் 'கால்வாய்' இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை என்றனர். 'ஆற்ற லின் சிகரம் என்றும், ஆற்றல் தனது வலது புயத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை' என்றும் கவிதையை இவர் கூறினார். இவையெல்லாம் கவிதையைப் பற்றிய கவிதையே யன்றி அதன் உண்மை இயல்பை அறிந்து கொள்வதற்குப் பயன்படமாட்டா.

கோலரிட்ஜ் முதலானவர்களெல்லாரும் கவிஞர்கள். கவிதையைப் பற்றி விசாரணை செய்த மேனாட்டு ஆராய்ச்சி யாளர்கள் யாது கூறுகிறார்கள்? ஜான் ரஸ்கின் 'கவிதை யாவது யாது?' என்ற கேள்வியைக் கேட்டு, 'சீரிய உணர்ச் சிக்குரிய காரணங்களைப் பாவனாசக்தியால் குறிப்பிடுவதே கவிதையாகும்' என்று விடை தந்தனர். இதுவும் திருப்தி கரமானது என்று சொல்ல முடியாது. உலகத்திலுள்ள சிறந்த இலக்கியங்களிற் பல இந்த இலக்கணத்தோடு மாறுபட்ட இயல்பு உடையன.

இவைகளையெல்லாம் நோக்குமிடத்து, இவை ஒவ் வொன்றிலும் ஒவ்வோர் உண்மையுள்ளதாகத் தோன்று கிறது. இந்த உண்மைகளையெல்லாம் நாம் ஒரு சேரத் திரட்டுவோமானால் கவிதை என்பது இன்னதென்று ஒரு வாறு புலனாகும்.

கவிதை ஒரு கலை

செய்யுள் நெறியில் இயற்றப் படுவதே கவிதை என்று நூதன ஆங்கிலப் பேரகராதி கூறுகிறது. பவணந்தி என்ற ஆசிரியர்,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற் பல
சொல்லால் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

என்று கூறிய இலக்கணம் அகராதி கூறுவதோடு ஒத்திருப்பது காணலாம். ஆகவே கவிதையின் முதலாவது இயல்பு அது செய்யுள் வடிவில் அமைந்திருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக, கவிதை-உலக உண்மைகளைக் காட்டிலும், பாவனா சக்தியின் இயல்புகளையே பெரும்பாலும் மேற்கொள்ள வேண்டும். அது பூமியில் காலை ஒற்றி ஒற்றி நடவாதபடி, மேலாகப் பறந்து செல்லுதல் வேண்டும். பொருளை வியாக்கியானம் செய்யாதபடி தெய்வ ஆவேசத்தால் குறி சொல்வது போல் அமைந்திருத்தல் வேண்டும். பொருள்களை விளக்குவதைக் காட்டிலும், அவற்றின் மீது ஒளி பரவவிட்டு, அவை தாமாகவே விளக்கமுறச் செய்தல் வேண்டும். புற உலகத்தில் வெளிப்படையாக உள்ள பொருள்களோடு அமையாதபடி, ஆன்ம-உலகில் அது சஞ்சரித்தல் வேண்டும். நிலையற்ற பொருள்களோடு நின்றுவிடாதபடி, நிலையாயுள்ள பொருள்களைப் பற்றியும் அது நிகழ்தல் வேண்டும்.

இங்ஙனம் கூறிய அளவில், இதுவும் கவிதையைப் பற்றிய கவிதை யல்லவா என்று தோன்றும். அறிவு நெறியினின்றும் விலகிப் பைத்திய நெறியில் நின்றதின் விளைவு என்றும் இது தோன்றலாம். கம்பன்,

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?

என்று கூறியது நமது நினைவிற்கு வரலாம். மேனாட்டிலும் முற்காலத்தில் ப்ளேட்டோ முதலிய சில அறிஞர்கள் கவிஞர்களைப் புறக்கணித்தும், இகழ்ந்தும், வெறுத்தும் வந்தனர். சமீப காலத்தில் ராபர்ட் பர்ட்டன் என்பவர் எல்லாக் கவிஞர்களும் பைத்தியக்காரர்களே என்ற விநோத முடிவிற்கு வந்தனர். கவிதை இயற்கைக்கு முரணானது என்பதற்கும், சாதாரண அறிவிற்குப் புலப்படாத ஓர் அற்புத சக்தியால் அது விளைவது என்பதற்கும், அறிவை வசீகரித்து மக்களை ஆட்டுவிக்கும் ஆற்றலில் அது இணையற்றது என்பதற்கும் இக்கூற்றுக்கள் முதலியன சான்றாகும்.

கவிதை ஒரு கலை. கலை என்று கூறிய அளவில் இன்பம் விளைத்தலே அதன் தலையாய நோக்கம் என்பது வெளிப்படை. இது மூன்றாவதாக உணரத்தக்கது.

நான்காவது, கவிஞன் தன் உள்ளத்தில் எழும் கவிதைக் கருத்துக்களைச் செய்யுள் வடிவில் வெளியிடுவதிலேயே முனைந்து நிற்பான். இக் கருத்துக்களில் ஒரு சிலவே அவனுடைய ஆன்மாவினது உண்மையியல்பை வெளியிடுவனவாம். இங்ஙனமாக ஆன்மாவின் இயல்புகளை வெளியிடும் கவிதைகளே சிறந்த கவிதைகள் ஆகும். இக் கவிதைகளில் பொதுப்படையான மக்கள் உள்ளத்தில் பொதுப்படத் தோன்றும் உணர்ச்சிகளும் கருத்துக்களும் ஒருபுறம் வெளியாகும் என்பது உறுதி. இதனாலே, தனிப்பட்ட ஆன்ம-இயல்பும் பொதுப்பட்ட மக்கள்- இயல்பும் சிறந்த கவிதைகளில் விளங்கி நிற்கும். இது பற்றியே ஒரு கவிஞன் தன் காலத்து இயற்கையை வெளிப்படுத்தும் வியாக்யான கர்த்தா என்று கூறப்படுகிறான்.

ஆன்ம-இயல்பை வெளியிடுபவன் கவிஞன் என்று கூறுவதனால், கவிதைக்கு வேண்டும் இயல்புகள் சில நமக்குப் புலனாகின்றன. முதற்படியாக அவன் கூறுவனவற்றிலே உண்மையின் முத்திரை பதிந்திருத்தல் வேண்டும். உண்மையில்லாமற் போனால் சிறந்த கவிதை தோன்ற மாட்டாது. ஒருவன் நாடகாசிரியனாக இருக்கலாம். பிற பாத்திரங்களின் குணங்களைத் தானே மேற்கொண்டு அவற்றிற்கேற்பச் சொல்லாடலாம்; தொழில் புரியலாம். அப்பொழுதும் அவன் உண்மையாகவே பாத்திரங்களின் குணங்களில் பிரவேசித்தல் வேண்டும். உண்மையாகவே பாத்திரங்களை அவன் சிருஷ்டித்தல் வேண்டும். போலி என்பது சிறிதும் தகாது. ஒருவன் அழகான சிறுசெய்யுட்களை இயற்றலாம். சுவையுள்ள கருத்துக்களை அவற்றில் அமைக்கலாம். ஆனால், இக்கருத்துக்களின் அடிப்படையில் உண்மையிருத்தல் வேண்டும்; உணர்ச்சியிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இச்செய்யுட்கள் கவிதை என்று சொல்லக்கூடிய தகுதியை அடையும்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே
ஒளியுண்டாகும்

என்று பாரதி கூறியது இதனை உறுதிப்படுத்தும்.

அடுத்து, இங்கே கூறிய உண்மையோடு தெளிவு என்ற இயல்பும் அவன் கவிதைகளிலே காணுதல் வேண்டும்.

மணற்பரப்பில் ஓடுகின்ற நன்னீர் தெளிவாயிருப்பதுபோல கவிதையும் தெளிவாயிருத்தல் வேண்டும். இங்ஙனம் தெளிவின்றிச் சேறு முதலியவற்றால் கலங்கி ஓடும் ஓடைநீர் பருகுவதற்குத் தகுதியற்றது. இது போலவே தெளிவின்றி எங்கும் கருகலாய், எவ்வளவு முயன்றாலும் ஐயப்பாட்டின் நீங்காததாய் உள்ள செய்யுட்கள் நாம் கற்று இன்புறுதற்குரிய கவிதைகள் ஆகமாட்டா.

கவிதைக் குரிய வேறோர் இயல்பும் அடுத்தபடி இங்கு மனங்கொள்ளத்தக்கது. அது எளிமையாகும். எப்பொழுதும் எளிய தோற்றத்தோடு அமைதல் மிக அரியதொரு காரியமாம். கம்பனுடைய கவிதைகள் எளியவாய் வெள்ளையாய் உள்ளன என்று பலரும் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், இவ்வாறிருத்தல் அவன் கவிதையின் சிறப்பை உணர்த்துகிறதேயன்றி உள்ளத்தின் வறுமையை உணர்த்துவதாகாது. கடினமான அகராதிப் பதங்களை எடுத்து வழங்கிச் செய்யுட் பொருளைக் கருகலாக்கி அமைக்கும் கவிஞர்கள் சிறந்த கவிஞர்கள் ஆகமாட்டார்கள்.

கவிதைக்குரிய நல்லியல்புகள் பலவற்றை உணர்ந்து ஓர் அழகிய செய்யுளில் கம்பன் வெளியிட்டிருக்கிறான்;

புவியினுக்கு அணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிஅளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார்

(ஆரணிய, சூர்ப்பணகை. 1)

இங்கே குறிக்கப்பட்ட நல்லியல்புகளோடு செய்யுட் பொருளும் யாப்பும், உடலும் உயிரும்போல ஒன்றியமைதல் வேண்டும். கருத்துக்குப் பொருத்தமற்ற யாப்புக்களை இயற்றுவது சிறிதும் இன்பந்தர மாட்டாது. இன்ன கருத்துக்கு இன்ன செய்யுள்வகைதான் பொருத்தம் என்பது சிறந்த கவிஞர்களிடமிருந்தே நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். திருமணத்தை வருணிக்கும் இடங்களில்

மிடுக்கும், அழகும், இன்ப உணர்ச்சியும் தரக்கூடிய செய்யுள் வகையே கையாளப்படுதல் வேண்டும். இது போன்றே அவலச்சுவையைக் கூறும் இடங்களில் அதற்கேற்ற செய்யுள் வகையைக் கையாளுதல் இன்றியமையாததாம். கம்பனைப் போன்ற பெருங் கவிஞர்களை அடிக்கடி கற்று, நல்ல பயிற்சி பெறுவது, கவிதையின் உண்மை யியல்புகளை நாம் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணை புரிவதாகும்.

கம்பனைக் கற்கக் கற்க, அவனது கவிதை தமிழர்கள் கொண்ட கவிதை லட்சியத்தை உணர்த்தி, அவர்களது பண்பாட்டின் உச்ச நிலையையும் தொட்டு விடுதல் நமக்குப் புலனாகின்றது.

12. கதைப் பாட்டு

உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் கதைகள் இருக்கின்றன. கதைகளுக்குரிய வசீகர சக்தி எங்கும் எல்லாக் காலத்திலும், எல்லாப் பருவத்திலும் மிகுதியாகவே உள்ளது. குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை மக்களைக் கதைகள் இன்புறுத்தி வருகின்றன. இக்கதைகளுள் வசனத்தில் எழுதப்பட்டனவும் மிகப்பல. அவ்வாறே செய்யுட்களில் இயற்றப் பெற்றனவும் மிகப் பலவேயாகும். சாதாரணமாகவுள்ள வசனத்தில் கதைகள் அமைந்தால் போதாதா? பாடல்களில் அவைகளை இயற்றுவதற்குக் காரணம் என்ன?

சொல்லப்படும் பொருளையும் சொல்லும் முறையையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. முறையிலே சிறிதேனும் வேறுபாடு, காணப்படுமாயின், அதற்குத் தக்கபடி பொருளிலும் வேறுபாடிருத்தல் உறுதி. உதாரணமாக போ, போகுக, போகுதி, போவாயாக, நீ பிரிந்து போ, நீ விட்டுப் போ என்பனவற்றைக் காணலாம். இவை ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது பொருள் வேறுபாடிருத்தல் ஊன்றிக் கவனிப்பவர்களுக்குப் புலனாகும். கதை அழகாக அமையவேண்டும் என்று பலரும் விரும்புவர். அழகான முறையில் சொன்னால்தான் கதைப் பொருளும் அழகான முறையில் அமையும். பொதுப்பட அழகாகவுள்ள கதையைச் சொல்லும் முறை செம்மையாக இல்லாததால் அழகற்றதாகச் செய்யவும் கூடும். இராமாயணம் அழகான கதைப் பொருளைக் கொண்டது. கம்பன் கையாண்ட முறை மிகச் செம்மையாக இருந்ததால் கதையும் அழகு பெற்று விளங்குகிறது. இக்கதை அத்யாத்ம ராமாயணத்திலும் சொல்லப்படுகிறது. ஆனால், அதில் கையாண்ட முறை செம்மையாக இல்லாதபடியினால் கதையும் அழகு பெறவில்லை. இங்ஙனமே அழகுச் சிறப்பில்லாத கதையைக்கூட, அதனைச் சொல்லும் முறையின் செம்மையினால் அழகுடைய கதையாகவும் அமைத்தல் கூடும். அகலிகையின் வரலாற்றை அழகுடையது என்று பலரும் கருதமாட்டார்கள். ஆனால், அதனைக் கம்பன், தான் சொல்லும் முறையினால் அழகுபடுத்தி விடுகிறான். ஆகவே, கதை அழகுபெற வேண்டுமாயின், அழகினையே சிறப்பாக வுடைய பாடல்களில் அதனை அமைத்தல் அவசியமாகும்.

வசனத்தில் இவ் அழகு அமைய இடமில்லையா? ஓரளவு இடமுண்டு என்பதனை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், வசனத்திற் காட்டிலும் செய்யுளில்தான் இவ்வழகு சிறந்து விளங்க இடமுண்டு. இதற்குக் காரணம் என்ன வென்று கேட்கலாம். கவிஞன் சொற்களைச் சுவைத்துத் தேர்ந்தெடுத்து அமைக்கும் ஒரு கலைஞன். வசனம் எழுது பவனிடத்து இவ் வியல்பைக் காணுதல் அரிது. கவிஞன் மிகவும் கவனித்து எழுதக் கடமைப் பட்டவன். அவ்வாறு அவன் செய்யாமல் போனால், அவனது செய்யுட்களை ஒருவரும் கற்கமாட்டார்கள். வசனம் பல வகையாலும் எழுதப்படுகின்றது. பல வசன நூல்கள் திருத்தமற்ற நடையிலும் கூட அமைந்திருக்கின்றன. அவற்றையும் ஒருவாறு வாசித்துத் தள்ளிவிடுகிறோம். கவிஞன் சொற் சுருக்கம் பேணுகிறான். அதனால், சொல்லுவனவற்றை மிகத் திறம்பட அமைக்க முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகச் செய்யுட்கள் நமது கவனத்தைக் கவர்கின்றன. நமது உணர்ச்சியாற்றலைப் பெருக்குகின்றன; இதனால் கவிஞன் இம்முறையைக் கையாண்டு வெற்றி பெறுகிறான். அழகில் மேம்பட்ட கதையும் அமைந்து விடுகிறது.

செய்யுட்கள் நமது கவனத்தைக் கவர்கின்றன என்று கூறினேன். செய்யுள் - ஓசைக்கே ஒரு தனி இனிமை உண்டு. அதனால் விளையும் பயனும் மிகப் பெரிதாகும். கதை யின் பொருளை நாம் நேர்பட்டு அனுபவிக்கும் நெறியிலே நம் மனத்தை இவ் வினிய ஓசை திருப்பிவிடுகிறது. கவிதை யின் உயிர்நிலை செய்யுளோசை என்று சொன்னால், அது தவறாக மாட்டாது. இவ்வகைச் செய்யுள்-ஓசைகள் மேற் கொள்ளும் விகற்பங்களும் மிகப் பல. ஒரு சில நம் ஆன்மாவைத் தூண்டிக் கிளர்ந்து செல்லுமாறு செய்கின்றன. வேறு சில நம் மனத்தைத் தாக்கி இடித்துக் தகர்த்து விடு கின்றன. சில மிருதுவாய் நடனமிடுகின்றன. சில மெல் லென விரைவாய்ச் செல்லுகின்றன. சில குதித்துத் துள்ளி வருகின்றன. சில சாவதானமாக அகன்ற நெறியில் கௌரவமாகச் செல்லுகின்றன. இங்கே குறித்தன போல எத்தனையோ வகைகளில் ஓசை விகற்பங்கள் நிகழு கின்றன. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,

சொல்லுக்குச் சொல்அழகும் ஏறுமே, அடா—கவி
துள்ளும் மறியைப் போலே துள்ளுமே, அடா
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா—பசுங்
கன்றும்பால் உண்டிடாது கேட்குமே, அடா
அலைமேலே அலை வந்து மோதுமே அடா—அலை
அழகான முத்தை அள்ளிக்கொட்டுமே, அடா
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே, அடா—அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே, அடா

என்று பாரதி பாடல்களைக் குறித்துப் பாடியிருக்கிறார்கள். இது மிகவும் உண்மையாகும். ஓசை விகற்பங்களால் புதிய புதிய சக்தியைச் செய்யுட்களில் தோற்றுவித்தல் கவிஞனுக்குரிய ஒரு பேரியல்பு என்பது உறுதி.

கதைகள் சொல்லச் சிறந்த கருவி

சிலப்பதிகாரக் கதையை வசனத்தில் எழுதினால் அக் காவியத்தின் அழகுகள் என்னவாய் முடியும்! வழக்குரை காதையிலுள்ள வேகம் வசனத்தில் வருமா? வரிப்பாடல் களிலுள்ள இனிமையும் அழகும் வசனத்தில் தோன்றுமா? கதைகளைச் சொல்லுவதற்குப் பாடல்களே சிறந்த கருவி யாகும்.

இராமாயணம், சிலப்பதிகாரம் முதலியவை கதைப் பாட்டுக்களின் சிகரம் என்று சொல்லத்தக்க பெருங்காவி யங்களாம். இவைகள் ஒரு தலைவன் அல்லது தலை வியினது பெருஞ் செயலை உணர்த்துகின்றன. இவற்றி லுள்ள பல பகுதிகளும் தலைமைப் பொருளோடு பொருத் தமுற்று இசைந்து விளங்கி, அப்பொருளிற்குத் தகுதியான அவயவமாக அமைந்து விடுகின்றன. இவ் உறுப்புக்களில் ஒன்று நீங்கினாலும் கதைப் பொருள் கேடுறுவதாகும். இப்பேர்ப்பட்ட காவியங்கள் உலகம் முழுவதிலும் ஒரு சிலவே உள்ளன. கிரேக்க மொழியில் 'இலியட்' 'ஆடிஸி' என்பவற்றைக் கூற வேண்டும். ஆங்கிலத்தில் 'பாரடைஸ் லாஸ்ட்' (சுவர்க்க நஷ்டம்) என்பதனைக் கூறுதல் வேண் டும். இவை போன்ற காவியங்கள் தவிர, செய்யுளால் இயன்ற ஒவ்வொரு நாடகமும் 'கதைப்பாட்டு' எனவே கூறத்தக்கது. கதைப் பாட்டுக்களில் நாடக பாவம் முக்கிய மானது என்பதும் கருதத்தக்கது. ஒரு சில காவியங்களில் பெருங் காவியங்களுக்கு வேண்டும் அளவு, பெருமை அல்லது கௌரவம், அழகுச் சிரிப்பு முதலியன காணாமற் போதலும்

உண்டு. இவைகளில் சில ஏதேனும் நிகழ்ச்சிகளை வர்ணிப்பனவாகலாம். சில உணர்ச்சி நிலைகளை வர்ணிப்பனவாகலாம். இவைகளையும் நாம் கதைப்பாட்டு என்றே கூறுதல் வேண்டும்.

கதைக்கும் பாட்டிற்கும் மூன்று வகையான தொடர்பு இருத்தல் கூடும். முதல் வகையில் பாடல்கள் தோன்றுதற்குரிய உணர்ச்சிக்கு இக்கதைகளின் வரலாறு நேரே காரணமாக அமைவது. 'நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழிமான்மிய'த்தை இவ்வகைக் கதைக்கு உதாரணமாகக் கூறலாம். இரண்டாவது வகையில் ஏதேனும் ஒரு கருத்து அல்லது உணர்ச்சியை வெளியிடுவதற்குக் கவிஞன் வியாஜமாக ஏதேனுமொன்றை எடுத்துக்கொள்வது. பாரதியின் 'ஒளியும் இருளும்' என்ற பாடல் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். மூன்றாவது வகையில் கவிஞன் தனது கவிதைச் சித்திரத்தை வரைவதற்குரிய திரையாகக் கதை அமைவது. இவ்வாறு கூறுவதனால், அலங்கார நூல்களில் கூறப்படும் அணிகளையெல்லாம் இவ்வகையில் கையாளுகிறான் என்பது எனது கருத்தன்று. சாதாரணக் கருத்துக்களை அலங்கார ஆடைகளினால் கவிஞன் போர்த்து விடுகிறான் என்பதும் எனது கருத்தன்று. அவனுடைய கருத்துக்களும் உணர்ச்சிகளும் பல வகை வண்ணங்களுடனும் அழகுடனும் சோபிப்பதைப் பலப்படுத்துவதே இக்கவிதைச் சித்திரம். சொல்லும் பொருளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிவுபடாதன என்ற உண்மையை இங்கும் காணலாம்.

தமிழ் மொழியில் கதைப்பாட்டுக்கள் மிகச் சிலவே உள்ளன. புராணங்களைக் கதைப்பாட்டுக்களாகக் கருத முடியாது. சிறந்த செவ்விய முறையில் கதைப்பாட்டுக்களை நமது பண்பாடு தோன்ற இயற்றுவது நமது நாட்டுக் கவிஞர்களின் கடமையாகும்.

13. சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள்

சில காலத்திற்கு முன்வரை தமிழ்ச் செய்யுட்கள் என்றால் நம்மில் பலருக்கும் பெரும் பயந்தான். கல்வி வல்லவர்கள் கூட அவற்றைத் தாமே கற்றுப் பயன் பெறுவதில்லை. பிறர் வாசித்துக் கேட்டலே போதும் என்ற கொள்கையுடையராயிருந்தனர். பள்ளி மாணவர் தமிழையும் தமிழ்ச் செய்யுட்களையும் பயத்துடனும் இகழ்ச்சியுடனும் நோக்கி வந்தனர். பி.ஏ. பட்டம் பெற்று ஓர் உயர்ந்த உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர் ஒருவர் 'பெருங்கதை' என்ற காவியம் வசனத்திலுள்ள ஒரு பெரிய கதையாகும் என்று எண்ணினர்; கம்பராமாயணம் வசன நூலென்று கருதியிருந்தனர். செய்யுளிலிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். இவர் பி.ஏ.யில் தமிழ்ப் பாடம் எடுத்துகொண்டவராம்! இப்படியாக இருந்தது செய்யுள் பற்றிய அச்சமும் அறியாமையும். இப்பொழுதுதான் அச்சம் படிப்படியாக நீங்கி வருகின்றது. செய்யுட்களையும் ஒருவாறு கற்றுவிடலாம் என்று துணிவு ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் கல்வித் துறையிலே பலபல சீர்திருத்தங்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. முதல் பாரத்திலிருந்தே மாணவர்கள் திருக்குறளைக் கற்க வேண்டும் என்று கருதி கல்வியிலாகாவிலிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. இந் நீதி நூலைப் பாடமாகக் கற்பது ஒருபுறமிருக்கட்டும். பொதுப்படச் செய்யுட் பாடங்களை இளமாணவர்கள் கற்க வேண்டியது அவசியந்தானா? நமது சிறுவர் சிறுமியர்களுக்குச் செய்யுட் பாடங்கள் வைத்து அவர்களைத் துன்புறுத்தல் தகுதியா? இக் கேள்விகளுக்கு ஆராய்ந்து விடை காணுவது இன்றியமையாததாகும்.

கவிதை உணரப்படவேண்டியதொன்று. அதனைக் குறித்து விவாதம் செய்தல் பயனற்ற தொழிலாகும். நமது அறிவினைக் காட்டிலும் உணர்ச்சியையே அது குறித்துச் செல்லுகிறது. அதன் இயல்புகளை வரையறுக்க முயன்ற லக்ஷணங்களெல்லாம் திருப்திகரமானவையல்ல. கவிதையைக் கற்று அனுபவித்தவன் ஒருவன், எவ்வாறுதான்

அதனால் இன்பமும் பயனும் பெற்றுள்ளான் என்று விளக்க முயல்வானானால் தனது நோக்கத்தை நிறைவேற்றும் வழி இன்னது என்பதை அவன் தெரிந்துகொள்ளுதல் அருமை. எனவே, கவிதையைக் கற்பித்தல் மிகக் கடினமான காரியம் என்று பொதுப்படக் கூறலாம்.

பள்ளிகளில் கவிதை

நமது பள்ளிக்கூடங்களில் கவிதைகள் எவ்வாறு கற்பிக்கப்படுகின்றன என்பதை நாம் சிறிது நோக்குவோம். அதுபற்றித் தோன்றும் கருத்துக்களை வெளியிடுவது மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் இத்தனை செய்யுட்கள் மனனம் செய்யப்படுதல் வேண்டும் என்று குறித்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல முறையேயாகும். ஆனால் மனனம் செய்தற்குரிய பாடலின் அளவு சுருக்கமாகவே இருத்தல் கூடும். மேல் வகுப்புக்களில் அந்த அளவு சுருங்கியிருந்த போதிலும், மனனஞ் செய்யாது பொதுப்பட வாசித்தற்குரிய செய்யுளின் அளவு மிகுதியாக இருத்தல் வேண்டும். பெரும்பாலும், ஆண்டு முடிவில் நிகழும் பரீட்சைகளுக்குச் சற்று முன்புதான் மாணவர்கள் செய்யுட்களைக் கற்பார்கள். மற்றக் காலங்களில் அவற்றைக் குறித்துக் கவலையே கொள்வதில்லை. ஆண்டு முழுவதிலும் செய்யுட் பாடங்களைக் கற்பதாய் இருந்தாலும் ஒரே செய்யுட் பகுதியை அவர்கள் திரும்பத் திரும்பக் கற்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அருவருப்பு உண்டாகி, செய்யுளென்றாலே தொடவும் மறுக்கிறார்கள். எப்படி நோக்கினாலும் செய்யுட் பாடம் வகுத்ததன் பயன் முற்றுப் பெறாமலே போய்விடுகிறது. ஆதலால், ஆண்டு முழுவதிலும் இச்செய்யுட் பாடங்கள் முறையாக நிகழ்தல் வேண்டும். ஒரு பாடத்தை நன்கு கற்ற பின்புதான் அடுத்த பாடத்திற்குச் செல்லுதல் வேண்டும். பழம் பாடங்களைப் போற்றுதலும் அவசியமாகும். குழந்தைகளுடைய மனத்தைக் கவரும்படியான முறையில் இப்பாடங்கள் அமைதல் வேண்டும். கிளிப்பிள்ளைகளைப் போல் பாடங்களைத் திருப்பித்திருப்பி ஒப்பிப்பதனால் பயன் யாதும் இல்லை. கண்டவற்றையெல்லாம் மனனம் செய்யும்படி குழந்தைகளை வற்புறுத்துதல் கூடாது. மேற்கூறிய முறையில் கடினமான இச்செய்யுட் பாடம் நடைபெற்றால்தான் பயனுண்டாகும்.

செய்யுட் பாடங்களைக் கற்பதன் பயன்

செய்யுட் பாடங்களைக் கற்பதனால் விளையும் பயன்களை இனி நோக்குவோம். முதலாவது பாவனா

சக்தியை அவை வளரச் செய்கின்றன. ஞாபக சக்தியை அவை விருத்தி செய்கின்றன என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இவை இரண்டோடு சிந்தனா சக்தியும் (Reflection) இப் பாடங்களால் வளர்கின்றது. நமது குழந்தைகள் பல பொருள்களையும் பற்றிச் சிந்தித்தல் அவசியம். சிந்தித்தல் என்றால் பாவனா சக்தியும் உடன் நிகழ்வதேயாகும். சிந்தித்தலோடு நிகழுகின்ற பாவனா சக்தி தவிர, தனிப்பட்ட நிலையிலேயும் இப் பாவனா சக்தி நேராக வளர்ச்சியுறச் செய்தல் இன்றியமையாததாம். அழகு உணர்ச்சியோடு கூடிய பாவனா சக்தியில் நம் குழந்தைகள் பயிற்சி பெறுவதனால் அவர்கள் வளர்ந்த பிற்பாடு எத்தனையோ வகையான கெடுதிகளினின்றும் விடுதி பெறுவார்கள். அவர்களுடைய நேரம் ஒருபொழுதும் வீணாகக் கழியாது. கிராமாந்திரப் பிரதேசங்களில் உல்லாஸப் பிரயாணம் செய்வதிலும், சித்திரச்சாலை, காட்சிச்சாலை, முதலியவற்றிற்குச் செல்வதிலும், சங்கீதக் கச்சேரிகளை அனுபவிப்பதிலும் அவர்கள் நேரம் இனியதாய்க் கழியும். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல நூல்களைக் கற்று அனுபவிப்பதில் அவர்களது அருமையான காலம் பயன்படுவதாகும். அவர்கள் நோயினாலும், வலி முதலியவற்றினாலும் துன்புறும்பொழுது, பாவனா சக்தியின் உதவியால் அவற்றினின்றும் தப்பி, கற்பனையுலகில் சஞ்சரித்துத் துன்பத்தைப் போக்கிக்கொள்வார்கள். ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல் என்பவர் சாகுந்தறுவாயில் இருந்தார். அவரிடம் ஒருவர் சென்று, அவரது மனநிலை எப்படியிருக்கிறது என்று கேட்டனர். தமக்குச் சரீர உபாதை ஒன்றும் இல்லை என்றும், ராப்ராய்(Rob Roy) என்ற கதையின் நிகழ்ச்சிகளில் தாம் ஆழ்ந்து ஈடுபட்டு வருகிறாரென்றும் அவர் கூறினாராம். ராப் ராய் முதலிய கதைகள் போலவே, கவிதையும் துன்பத்தை மறக்கச் செய்கின்றது. ஒரு கற்பனையுலகில் நாம் சஞ்சரித்து மகிழும்படியாக நம்மைச் செலுத்துகின்றது.

ஆகவே குழந்தைகள் செய்யுட் பாடத்தைக் கற்பதனால் விளையும் முதற்பயன் அவர்களுடைய பாவனா சக்தி வளர்ச்சியுறுவதாகும். இரண்டாவது பயன், பாவனா சக்தியோடு தொடர்ந்து பிணைந்து செல்லும் சிந்தனா சக்தியும் அதனால் வளர்ச்சி எய்துகிறது. குழந்தைகள் தாங்களே விஷயங்களைச் சிந்தித்தற்குரிய அவசியங்கள் பல நேரிடும். ஆசிரியர் கூறியவற்றின் பொருளைச் சிந்திக்கும் அவசியங்களும் பல நேரிடும். இவ்வாறாக அவர்களுடைய சிந்தனா சக்தியும் அறிவாற்றலும் செய்யுட் பாடங்களால்

உரம் பெறுவதற்கு இடமுண்டு. மூன்றாவதாக, ஒரு பயனும் உண்டு. கவிதைகள் நமது அறிவையும் உணர்ச்சியையும் மாத்திரம் வளர்ப்பன என்று கருதுதல் கூடாது. நல்ல நீதிகளையும் சிறந்த வாழ்க்கை நெறிகளையும் அவை குழந்தைகளுக்குப் புகட்டுகின்றன. இயற்கையையும் அதனை இயற்றிய தெய்வத்தையும் அன்போடு போற்றும்படியாகச் செய்கின்றன. நாட்டுப்பற்றை உண்டாக்குகின்றன. தைரியம், அகமலர்ச்சி, சுயநலமின்மை, நியாய உணர்ச்சி, விடாமுயற்சி முதலிய அருங் குணங்களைச் சிறு குழந்தைகளுக்கு அவை உணர்த்துகின்றன. குழந்தைப் பருவத்திலேயே செய்யுட்களைக் கற்று இன்புறும் பழக்கம் ஏற்பட்டால் பிற்காலங்களில் அவர்களை வாழ்விற்குத் தகுதியுடையவராக அவை செய்தல் உறுதி. இங்கே குறித்த விளைவுகளை நோக்கினால் செய்யுட் பாடம் குழந்தைகளுக்கு அவசியம் என்பதை எளிதில் உணரலாம்.

பாடல்களின் தகுதி

மேலே குறித்த பயன்களைத் தரவேண்டுமானால் குழந்தைகள் கற்கும் செய்யுட்கள் எத்தன்மையனவாய் இருத்தல் வேண்டும்? முதலாவது, செய்யுட் பாட விஷயம் குழந்தைகளுடைய அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாயிருத்தல் கூடாது. உதாரணமாக, மிக அழகான கவிதைகள் காதலைப் பற்றியனவாயுள்ளன. ஆனால், காதல் விஷயங்கள் குழந்தைகளின் மனநிலையைக் கடந்தவை. ஆகவே, காதல் பற்றிய பாடல்களைப் பாடங்களில் சேர்த்தல் தக்கதன்று. இன்னுமொன்று; பல அழகிய செய்யுட்கள், வாழ்வு துன்பமயமாயுள்ளது என்பதையே பொருளாகக் கொண்டுள்ளன. இதன் உண்மையை வயது முதிர்ந்தவர்கள் உணர்வார்கள். ஆனால், குழந்தைகள் உணரவே முடியாது. உணர முடியாததும் ஒரு நன்மையேயாகும். வாழ்வில் இன்பவுணர்ச்சியும் உத்ஸாகமும் தரக்கூடிய பாடல்களே அவர்களுக்கு வேண்டும். எனவே துக்கம் பற்றிய பாடல்களும் பள்ளிப் பாடப் புத்தகங்களினின்றும் நீக்கத் தக்கனவே.

இரண்டாவதாக, செய்யுளின் மொழியும் நடையும் எளிமையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். வாக்கிய அமைப்பு குழப்பமின்றி நேர்படச் செல்வதாயிருத்தல் வேண்டும். வழக்கொழிந்த சொற்களும், திசைச் சொற்களும், கொடுந்தமிழ்ச் சொற்களும், திருத்தமற்ற சொற்களும் விரவாத பாடல்களே குழந்தைகளுக்கு ஏற்றன. ஆனால், ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. பொருள்

விளங்காமல் போனாலும் தனிப்பட்ட ஓசையின் இனிமையிலும் அழகிலும் செய்யுளோசையின் நயத்திலும் குழந்தைகள் ஈடுபடுவார்கள். தென்னாட்டில் பலருக்கு வடமொழியுணர்ச்சி கிடையாது என்றாலும் வடமொழிச் சுலோகங்களையும் காதம்பரியின் உரைநடையையும் கேட்டு அவற்றின் ஓசை நயத்தில் ஈடுபடுவோர் பலருண்டு. குழந்தைப் பருவத்தில் பொருள் விளங்காமல் போனாலும் அழகான உயரிய கவிதைகள் மீது அவர்களுக்கு அன்பு ஏற்படும். அக் கவிதைகள் அவர்களது உள்ளத்திலே புகுந்து தாழ்ந்து படிந்துவிடும். அவர்கள் பெரியவர்களான பிற்பாடு, ஓசை இனிமை மட்டும் கருதி அவர்கள் முன்பு கற்ற பாடல்கள் பொருட்பொலிவோடு அவர்கள் வாழ்க்கையில் இன்பம் விளைத்து ஒளி தந்து நிலவும்.

மூன்றாவதாகச் செய்யுட் பாடங்களின் மீது குழந்தைகளுக்கு அவாவுண்டாகும்படி செய்தல் வேண்டும். இது அழகான கதைப் பாட்டுக்களினாலேதான் இயலும். சரித்திர நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்கள் மிகப் பல வேண்டும். சரித்திரம் பற்றிய 'நாவல்களையும்' 'பாடல்களையும்' தொடர்பு படுத்திக் குழந்தைகளைக் கற்கும்படி செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தால் சரித்திரப் பாடத்தைக் குழந்தைகள் மிகவும் விரும்பிக் கற்பார்கள். இப்பாடல்களேயன்றி கடல், மலை, நாட்டு வளம் முதலிய இயற்கை வளங்களைக் குறித்து வரும் பாடல்களையும், பறவை, விலங்கினம் முதலியன பற்றி வரும் பாடல்களையும் குழந்தைகள் விரும்புவர். இவற்றையும் பாடங்களில் பயன்படுத்துதல் வேண்டும். நான்காவதாக, குழந்தைகளின் மன நிலைக்குத் தக்கபடி அவர்கள் பாடி மகிழ்தற்கு உரியனவாய் அவர்களின் பொருட்டு இயற்றிய பாடல்களே பாடப் புத்தகங்களில் இடம் பெறுதல் வேண்டும். இப்படி அவர்களுக்கு உரியவையன்றி, அவர்களைப் பற்றியெழுதிய பாடல்கள் இடம்பெறத் தகாதவை. பிள்ளைத் தமிழ்ப் பாடல்களால் குழந்தைகளை மகிழ்விக்க முடியுமா?

இறுதியாகக் கூறவேண்டுவது, மேற்கூறிய அனைத்திலும் மிக முக்கியமானதாகும். செய்யுள் பாடங்கள் உண்மையிலே பயன்பட வேண்டுமாயின் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரும் செய்யுட்களைப் பேராவல் கொண்டு கற்றவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் தாம் பெற்ற இன்பத்தையும் ஊக்கத்தையும் குழந்தைகளுக்கும் ஊட்ட வல்லவராவர். செய்யுட்களின் நயத்தை உணர்ந்து

அவர் இன்புறாமல், அவற்றைத் திவசமந்திரம் ஓதுவது போல் சொல்லிக்கொண்டு, இங்குமங்குமாகச் சில சொற்களுக்குப் பொருளையும் விளக்கிக்கொண்டு செய்யுட் பாடங்களை அவர் நடத்துவாராயின், குழந்தைகள் செய்யுட் பாடங்களைச் சிறிதும் கவனிக்கமாட்டார்கள். அவர்களுக்குச் செய்யுட்களின் மீது அவா எழுவதற்குப் பதிலாக அருவருப்புத்தான் உண்டாகும். கற்பிக்கும் ஆசிரியர், மாணவர்களின் ஆவலைத் தூண்டினால் மட்டும் போதாது: செய்யுட்களின் நயத்தை அவர்கள் சுவைத்தறியும்படியாகவும் செய்தல் வேண்டும். அழகானது இது, சாதாரணமானது இது என்று பகுத்தறியும்படியாக மாணவர்களுக்குப் போதித்தல் வேண்டும். செய்யுட்களைச் சுவைத்து அறிந்தால்தான் சிறந்த கவிதையை உண்மையாக மதிப்பிட முடியும். இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டெனத் தோன்றுகிறது. உயர்ந்த தரத்திலுள்ள செய்யுட்களைத் திரும்பத் திரும்பக் கற்றல் தான் அவ்வழி. இவ்வாறு கற்றால் அச்செய்யுட்கள் நமது ஆன்மாவிலேயே ஊறி நின்று மற்றச் செய்யுட்களை ஒப்பிட்டு மதித்தற்குக் கட்டளையாக உதவும். குழந்தைப் பருவத்திலே இப்பயிற்சியைப் பெறுதல் பெரும் பயன் விளைப்பதாகும்.

14. தமிழ்ப்பாட்டும் இசையும்

பாட்டும் இசையும்

தருக்க நெறிப்படி, அதாவது காரண காரியத் தொடர்போடு பொருள் முழுதும் வெளியிடுவது வசனம். காரண காரியத் தொடர்பை இரண்டாவதாகக் கொண்டு, குறிப்பாற்றலாலும் ஓசையின் நயத்தாலும் பொருளை உணர்த்துவது பாட்டு. இது வசனத்திற்கும் பாட்டிற்குமுள்ள வேறுபாடுகளில் மிக முக்கியமானது. பிறிதொரு வேறுபாடும் உண்டு. பாட்டுக்களைப் பாடினால்தான் அவற்றினுடைய சுவையும் பொருளின் சிறப்பும் நம்மால் அறியமுடியும். பாடாமல் போனால் இவை இரண்டும் விளங்க மாட்டா.

பாடுவதற்கு இசை இன்றியமையாதது. இவ் இசை தமிழ்ப் பாட்டுடன் கலந்துவந்த வரலாற்றை நாம் அறிந்து கொள்ளுதல் நலம். இதற்குத் தமிழ்ப் பாட்டு வடிவங்களின் வரலாறு கூர்ந்து உணரத்தக்கது. முதல் முதலில் அகவல் என்ற பாவினமே தோன்றியதாகும். சங்கச் செய்யுட்களில் பெரும்பாலன இவ்வகைப் பாவினத்தாலே இயன்றவை. இப்பாவினத்திற்கு தனித்து உரிய ஓசை நயம் உண்டு. ஆனால் இசையோடு பாடுதற்கு இப்பாவினம் தக்கதன்று. அடிகளுக்கு வரையறையில்லாமை இதற்கு முக்கிய காரணமாகும். சொல்லின் இனிமையாலும், சொல் தொடர்புகளின் நயத்தினாலும், அடிகளின் ஒத்திசைப்பினாலும் (rhythm) பொருளின் நயத்தாலுமே இவ்வகை செய்யுட்கள் சிறந்து விளங்கின. இதற்கு உதாரணம்:

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே (புறம். 107)

அகவலுக்குப் பின்னர்த் தோன்றியது வெண்பா என்று கொள்ளலாம். இது பெரும்பாலும் நான்கு அடி உடையது. இதற்கு உரியது செப்பலோசை. இவ்வோசையோடு தனக்குரிய நியமங்களும் சேர்ந்து இவ்வகைச் செய்யுட்கள் இயலுகின்றன. இவற்றை இசையோடு சேர்த்துப் பாடுதற்குப் பெரிதும் ஏற்புடைமை உண்டு.

என்னை உரையல் என் பேர் உரையல் ஊர் உரையல்
அன்னையும் இன்னள் எனஉரையல் பின்னையும்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்குஎன்
கண்படா வாறே உரை. (புறத்திரட்டு, 1540)

இதனைப் பாடி நோக்குக.

வெண்பாவின் பின் வந்தது கலிப்பாவின் ஒரு பகுப்பாகிய தாழிசை. இது பாடுதற்கெனவே அமைந்தது என்று கூறலாம். தாழிசை என்ற பெயரே இதனை விளக்குகிறது. கலிப்பாவிற்குரிய 'முரற்கை' (தொல். பொருள். 382) என்ற பெயரும் இதனையே வலியுறுத்தும். முரற்கை என்பது ஒலித்தல் என்று பொருள்படும். 'இசை முரலுதல்' என்றல் முற்காலத்து மரபு.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவை தாம் என் செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே. [கலி.9)

பாடலுக்கு இசை நயம்

செய்யுளின் அமைப்பே பாடுதற்கு ஒத்ததாக மேற் கூறிய அகவலொழிந்த ஏனையவற்றில் காணப்படுகிறது. கால அடைவில் இசைக்கலையானது மிகவும் வளம்பெறலாயிற்று. அந்நிலையில் பாடல்களிற் சிலவற்றிற்கு இசை ஊட்டப்பெற்றது; பரிபாடல் இதற்கு உதாரணம். இசைக்கு எனவே இப்பாடல்கள் இயற்றப்பெற்றன. தேவாரம் முதலிய திருப்பாட்டுக்கள் அனைத்தும் இவ்வாறு பண்களுக்கு எனப் பாடப்பெற்றனவே. பிற செய்யுள் வகைகளும் கூட இசையோடு இனிமையாகப் பாடுவதற்கு ஒத்தனவாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கொண்டனர். இதன் விளைவாக ஆசிரியவிருத்தம் முதலிய செய்யுள் வகைகள் தமிழாசிரியர்களால் கையாளப்பட்டன. சிந்தாமணி முதலிய காவியங்களின் விருத்தங்கள் இதற்குச் சான்று, தாழிசையும், பாடுதற்கு அமைந்த தன்மை பற்றியே, தனிப்பட்ட நூலுக்குரிய யாப்பாகக் கொள்ளப்பட்டது. கலிங்கத்துப் பரணி இதற்கு எடுத்துக்காட்டு.

சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயில்எழு மயில்என மயில்என
பரிபுர ஒலிஎழ ஒலிஎழப்
பனிமொழி யவர்கடை திறமினோ.
முருகில் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்
செம்பொற் கபாடம் திறமினோ. (கடைதிறப்பு 3,10)

இங்ஙனமே குறள்வெண் செந்துறையும் இசையோடு பாடுதற்கு ஏற்றதாக ஆசிரியர் சுந்தரம் பிள்ளையால் சிவகாமி சரிதத்தில் கொள்ளப்பட்டது.

இந்திரநற் சாலவிதத்தை ஏதுவோ ஒன்றிழைக்க
இட்டதிரை எனத்திசைகள் எட்டும் இருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தர தாரகைகள்
அரிய ரகசியம் தமக்குள் அறைந்து நகைபுரிய;
என்புருகப் பிணைந்த அன்றில் இணை சிறிது பிரிய
ஏங்கி யுயிர் விடுப்பவர்போல் இடையிடையே கூவ,
அன்புநிலை யார் அறிவர் என்பன போல் மரங்கள்
அலர் மலர்க் கண்ணீர் அருவி அகம் உடைந்து தூவ
(சிவகாமி, 7,8)

சொல்லின் இனிமைக்கும் இசையின் இனிமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பது சூளாமணி.

பொன்னே! நன் மணிக்கொம்பே! பூமிமேல்
ஆரணங்கே! போற்றி போற்றி; உன்றன்
அன்னே ! எம் அரசகுலத் தவிர்விளக்கே!
ஆரமிர்தே! போற்றி; உன்றன்
மின்னேர்நுண் ணிடைநோமால்; மென்மலர்மேல்
மென்மெலவே ஒதுங்காய் என்று
மன்னோர்செய் அயில்நெடுங்கண் மங்கைமார்
போற்றிசைப்ப மாடம் புக்காள். (சுயம்வர. 245)

இசையின் இனிமைக்கும், செய்யுளின் இனிமைக்கும், பொருளின் இனிமைக்கும், பேரெல்லையாக உள்ளது கம்ப ராமாயணம். அதிலே உள்ள விருத்தங்கள் செம்பாக நடையிற்சென்று தமிழ் மக்களுடைய பேச்சில் இயற்கையாயுள்ள ஒத்திசையோடு (rhythm) அமைந்திருக்கின்றன.

அக்காலத்துப் பெரும்பான்மை மக்கள் வழங்கிய சொற்கள் இவ்விருத்தங்களில் மிகுதியாகக் காணலாம். தமிழ் கற்ற பெரும்புலவர்களேயன்றி, சாதாரண மக்களும் ஓதியுணர்ந்து இன்புற வேண்டும் என்பது கம்பர் கருத்து. ஆகவே அதற்கேற்ற பல முறைகளும் கையாளப்பட்டுள்ளன.

கரங்கள் மீச் சுமந்து செல்லும்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களும் உருக நோக்கும்
காதலன் கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும்
இரிநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி யன்ன

தாளிணை வந்து வீழ்ந்தான்.
அழிந்தது பிறவி என்னும்
அகத்து இயல் முகத்தில் காட்ட
வழிந்த கண்ணீரின் மண்ணின்
மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னால்
புல்லினன் என்று தோன்ற
எழுந்து இனிது இருத்தி என்னா
மலர்க்கையால் இருக்கை ஈந்தான்
(வீடணன். 140,141)

இங்ஙனமாக, இயலும் இசையும் ஒன்று சேர்ந்து செய்யுளின் நயங்களைக் கனியும்படிச் செய்தன. பொது மக்களது இலக்கிய நுகர்ச்சிக்குப் பெருங்கருவியாக இசை துணை புரிந்தது.

கம்பர் ஆன்றோராலும் நன்கு மதிக்கப்பட்ட புலமை மரபில் சிறந்து விளங்கியவர். பிற்காலத்து வந்த பெருங் கவிஞர்களுள் இயலையும் இசையையும் ஒருங்கு கையாண்டவர் இராமலிங்க சுவாமிகள்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!

எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!
என் அரசே! யான் புகலும் இசையும் அணிந்தருளே.
(vi. அருள் விளக். 30)

கற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுமக்கள் உள்ளத்திலேயும் இசையின் உணர்ச்சியால் செய்யுட்கள் தோன்றத் தொடங்கின. சிந்து, கும்மி, பள்ளு, குறவஞ்சி முதலியன இதற்கு உதாரணங்களாம். இவற்றைப் பாடினாலன்றிச் சுவை பிறக்கமாட்டாது. பொருளுணர்ச்சியும் பாடுதலிலேயே நிரம்பிக் காணப்படும். இவ்வகைச் செய்யுட்களைப் புலவர்கள் கையாளுவதில் அத்துணை விருப்பம் முதலிற்கொள்ளவில்லை என்று தான் தோன்றுகிறது. நாளடைவிலே அவர்களையும் கூட இச் செய்யுள்வகை வசப்படுத்திவிட்டது. பிற்காலத்தே சிறந்த கவிஞர்களும் இச் செய்யுட்களை இயற்றுவராயினர். உதாரணமாக, திரிகூடராசப்பக் கவிராயர்,

தண் அமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே! — அந்தத்
தண்ணளியை ஏன் மறந்தாய்? வெண்ணிலாவே!
பெண்ணுடன் பிறந்த துண்டே வெண்ணிலாவே! என்றன்
பெண்மை கண்டும் காயலாமோ? வெண்ணிலாவே!
விண்ணிலே பிறந்ததற்கோ? வெண்ணிலாவே! எரு
விட்டு நான் எறிந்ததற்கோ? வெண்ணிலாவே!
கண்ணில்விழியாதவர் போல் வெண்ணிலாவே!—மெத்தக்
காந்தியாட்டம் ஆடுகிறாய், வெண்ணிலாவே!
(குற்றாலக் குறவஞ்சி.23)

எனப் பாடுகிறார்.

பாரதி நெறி

இசையின் கதியை உணர்த்தும் 'மெட்டு' என்று இக் காலத்தில் சொல்லப்படுவதனை அடிப்படையாகக்கொண்டு இச் செய்யுள் வகைகள் இயற்றப்பட்டன. முதன் முதலில் இசை நயம் ஒன்றே பள்ளு முதலிய வற்றின் ஆசிரியர்களைக் கவர்ந்தது. நாளடைவில் உணர்ச்சியின் வேகத்திற்கும் அளவிற்கும் தக்கபடி அடிகளைச் சுருக்கியும் விரித்தும் அமைப்பதற்குக் கூடும் என்ற தன்மையைக் கவிஞர்கள் கண்டு கொண்டனர். இவ்வகைச் செய்யுட்களை அவற்றிற் கேற்றபடி இயற்றத் தொடங்கினர். இராகம், பாவம், வடிவம் என்ற இம்மூன்றும் கலந்து இச்செய்யுள் வகை

அனைவரையும் மோகங்கொள்ளும்படியாகச் செய்தது. கீர்த்தனம் என்று இச் செய்யுள் வகையைக் கூறுவது பொருந்தாது. கீர்த்தனத்தில் இராகமும் தாளமுமே பிரதானம்; இதன் பொருளை அத்துணை விசேஷமாகக் கீர்த்தனாச்சாரியர்கள் கொள்ளவில்லை. ஆனால் சிந்து முதலியவற்றில் பாவமே அதி முக்கியமாகும். இராகமும் தாளமும் இதற்குத் துணைபுரியும் அளவில்தான் சிறப்பு எய்தும். இச் செய்யுள் வகையிற் சில குறிப்பிட்ட ஓர் உணர்ச்சியைச் சாங்கோபாங்கமாக வெளிப்படுத்துவனவாக அமைவன வாயின. இச் செய்யுள் வகைக்குத் தந்தை என்று சொல்லத் தகுந்தவர் சுப்பிரமணிய பாரதியார். இவருடைய தேச பக்தியும், தமிழுணர்ச்சியும், இசையுணர்ச்சியும், பல திறப்பட்ட கல்வியறிவும் இவரது கவிதைகளுக்கு முன்பு ஒரு காலத்தும் இல்லாத புதிய அழகைக் கொடுத்தன. இவரது கவிகளிலே ஆண்மைத் தத்துவம் நிரம்பியுள்ளது என்று கருதலாம். வலிமை, வீரம், பெருமிதம் என்பனவே ஆண்மைக்குச் சிறப்பாக உரிய நலன்கள். இந்நலன்களோடு பொருந்தியதைப் 'பாரதி-நெறி' என்னலாம்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாம்அறி யாமையில்
அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ! (புதுமைப். 7)

என்ற பாட்டில் மேற் சொல்லியதன் உண்மையை அறியலாம்

கவிமணி நெறி

இங்குக் குறித்த அம்சங்களில் பெரும்பாலன கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதைகளிலும் காணப்படுகின்றன. ஆனால், இவரது பாடல்களில் பெண்மைத் தத்துவம் நிரம்பியுள்ளது என்று கருதலாம். அடக்கம், அமைதி, கருணை, பேதையுள்ளத்தில் எழும் களிப்பு முதலியன இப்பெண்மைக்குச் சிறப்பாக உரிய நலன்கள். இந்நலன்களோடு பொருந்தியதைக் கவிமணி—நெறி என்னலாம்.

தேமலர்ச் சோலையிலே— வாசம் எழு
தென்றல் உலாவையிலே
மாமண மங்கையைப் போல் — பெரிதும்
மகிழ்ந்துநீ தங்கினையோ?
மாணிக்க மூக்கழகும் — மரகத
வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான்— இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ!

இங்குக் கூறிய இருதிறப்பட்ட நெறிகளிற் செல்லும்செய்யுள் வகைகள் தற்காலத்துத் தமிழ் மறுமலர்ச்சிக்கும் செய்யுள் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன் படுகின்றன. இந்நெறிகள் செழித்தோங்குக!

15. மறுமலர்ச்சியும் கவிமணியும்

மறுமலர்ச்சிக் கவிஞன்

தற்காலத்தில் 'மறுமலர்ச்சி' பொது மக்களுடைய உள்ளத்தை நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொண்டது. மறுமலர்ச்சியைப் பற்றி ஒருவன் பேசாமற் போனால், அவனது பேச்சையோ, பிரசங்கத்தையோ ஒருவரும் கேட்க வர மாட்டார்கள். அதைப்பற்றி ஒருவன் எழுதாமற் போனால், அவன் எழுதியதை ஒருவரும் விரும்பிப் படிக்க மாட்டார்கள். ஒருவரும் படியாமற் போனால் போகட்டும்: அவனை ஓர் எழுத்தாளன் என்றேனும் சொல்லுவார்களா? அப்படியும் ஒருவரும் சொல்ல மாட்டார்கள். அதுவுமன்றி அவனைப் படித்தவன் என்றுகூட எவரும் நினைக்க மாட்டார்கள். அவன் தற்காலத்துத் தமிழ் உலகில் வாழ்ந்திருப்பவன் என்றும் ஒருவரேனும் கருத மாட்டார்கள். இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். யாரேனும் ஒரு கவிஞனைப் பொது மக்கள் அங்கீகரிக்க வேண்டுமென்றால், அவனை மறுமலர்ச்சிக் கவிஞன் என்றோ அல்லது புரட்சிக் கவிஞன் என்றோ சொல்லியாக வேண்டும். இல்லாமற் போனால் அவனை மதிப்பாரே கிடையாது.

பாரதியார் ஒரு மறுமலர்ச்சிக் கவிஞர் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். தமிழின் மறுமலர்ச்சிக்கு அவரே காரணம் என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஒரு நாட்டிலுள்ள மக்களிற் பெரும்பாலரை இயக்கி வந்த ஓர் ஆழ்ந்த உணர்ச்சி அவர்களைப் பலவாறான செயல்களைச் செய்யும்படித் தூண்டி, நாடு முழுவதும் ஓர் பரபரப்பு உண்டாகும்படி ஊக்கிய காலத்திலே, அவ்வுணர்ச்சியின் விளைவாய் மீண்டும் அவ்வுணர்ச்சிக்கு உரமாவனவாய் அமைந்த கவிதைகளை மறுமலர்ச்சிக் கவிதை என்று சொல்லுவதற்கு என்ன தடை? அக்கவிதைகளைக் கொட்டிச் சொரிந்து மக்கள் உள்ளத்தில் அனலை எழுப்பிப் பொங்கியெழச் செய்த கவிஞனை மறுமலர்ச்சிக் கவிஞன் என்று சொல்வதில் என்ன ஐயம்?

ஆனால், இது மட்டும் தானா அதன் பொருள்? அப்படியென்றால் உணர்ச்சி வேகமுள்ள ஒவ்வொரு கவிஞனையும் மறுமலர்ச்சிக் கவிஞன் என்று கூறிவிடலாமே?

மறுமலர்ச்சி என்று ஆர்வத்துடன் கூறுகிறோம். இதன் பொருள் என்ன? இதன் பொருளைத் தெரிந்து கொள்ள நாம் ஆங்கிலத்திற்குச் செல்ல வேண்டும். அம்மொழியிலே 'ரினேஸான்ஸ்' (Renaissance) என்ற ஒரு பிரெஞ்சுப் பதத்தை ஆங்கில-இலக்கிய நிபுணர்கள் வழங்குகிறார்கள். எவ்விதச் சந்தர்ப்பத்தில் என்றால் சொல்லுகிறேன்:

கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்கு முன், சிலநூற்றாண்டுகளாக, ஐரோப்பியர் வாழ்வு இருள் அடைந்து கிடந்தது. சமயவாதிகளுடைய வியவகாரங்களும், விவாதங்களும், தர்க்க படாடோபங்களும் மக்களைக் கொடுமையாய் ஆண்டு வந்தன. எல்லாவற்றையும் சமயக் கோட்பாடுகளை வைத்துத்தான் மக்கள் அளந்து பார்த்தார்கள். சமய சாஸ்திரங்களுக்கு வியாக்கியானங்களும், வியாக்கியானத்திற்கு வியாக்கியானங்களும், கண்டனங்களும், கண்டனகண்டனங்களும் எழுதுவதிலேயே அறிஞர்கள் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். தமது அறிவையும் கல்வியையும் இவற்றின் பொருட்டே செலவு செய்து வந்தனர். சமய நூல்களும் சமயாச்சாரியர்களும் கூறியவையே உண்மை என்றும், இவ்வுண்மைகளுக்கு மாறாக, புறம்பாக, ஓர் உண்மையும் இருக்க முடியாதென்றும் கருதினார்கள். அறிவைப் பயன்படுத்தி புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவும் இல்லை; புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதும் உலகத்தார்க்கு வெளியிடுவதும் பாவச் செயல் என்றே கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் கற்றவர்கள் கூர்மையான அறிவுள்ளவர்களாய்த்தான் இருந்தார்கள். அறிவிலே தேவாம்சர்கள்போல இருந்தாலும், சிறு குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடுவதுபோல விளையாடி வந்தார்கள். உலகத்தை ஆண்டு வரும் பௌதிக விதிகளைக் குறித்து இவர்களுக்கு ஒன்றும் தெரியாது; ஆனால் தெய்வத்தின் இயல்பு என்ன? தேவதூதர்கள் எவ்வெவ்வளவு வேகமாய்ச் செல்வார்கள்? எதன் மேல் ஏறிச் செல்வார்கள் என்றெல்லாம் மிக நுட்பமாகத் தர்க்கம் பண்ணி வந்தார்கள். புதிய அறிவுத் துறைகளில் புகுந்து உண்மைகளைக் கண்டுபிடிக்க இவர்களுக்கு ஆசைதான். ஆனால், சமயக் கோட்பாடுகளால் இவர்கள் வெளியேற முடியாமற் போய்விட்டது.

விஞ்ஞான அறிவு

இவ்வாறு அஞ்ஞான இருளில் உழன்று கொண்டிருக்கும் பொழுது, இவர்களுக்குக் கைகொடுத்து வெளிச்சத்தில்

அழைத்து வருவதற்கு, சில விஞ்ஞான சாஸ்திரங்களும் புதிய அறிவுகளும் அராபியர்கள் மூலமாகச் சிறிது சிறிதாக, துளித் துளியாக, இவர்களுக்குக் கிடைத்தன. இவற்றால் இயற்கை யுலகைக் காணுவதற்குக் கண் திறந்தது. கிரேக்க இலக்கி யங்களும் இப்போது வெளிவரலாயின. அச்சு யந்திரம் அமைக்கப்பட்டுப் பிரசாரத்திற்கு வந்தபடியால், இந்த இலக்கியங்களும் மற்றை நூல்களும் வெகுவாய்ப் பரந்து பெருகலாயின. சமய பந்தத்தினால் சிறையிடப்படாத புதிய அறிவும் புதிய நோக்கங்களும் தலைப்படலாயின. கிரேக்கக் கவிஞர்கள் நிருமித்த புதிய உலகமும் இவர்கள் கண்முன் தோன்றிற்று. கிரேக்க தத்துவ ஞானிகளின் புதிய அறிவுலகமும் இவர்களுக்கு எதிர்ப்பட்டது. அந்தகாரம் தெளியலாயிற்று. மனிதன் விழித்தான்; தன்னையும் இயற்கையுலகையும் கண்டு கொண்டான். உண்மைதான் பிரமாணமேயல்லாமல், சமய சாஸ்திரங்களல்ல என்பதை உணர்ந்தான். இந்த நிலைகளுக்கு ஏற்ப மாலுமிகள் துணிந்து நீண்டகாலம் கப்பல் யாத்திரை செய்து புது நிலப் பகுதிகளைக் கண்டு பிடித்தனர். புதிய உணர்ச்சிகள் மக்கள் இதயத்தில் தோன்றின. ஒரு புதிய யுகமும் தோன்றி விட்டது. இதைத்தான் 'ரிநேஸான்ஸ்' என்று மேல் – நாட்டு அறிஞர்கள் கூறுவது. இச் சொல்லின் பொருள் மறு பிறப்பு என்பது.

மறுமலர்ச்சி

இந்தப் பிரெஞ்சுப் பதத்தைத் தமிழில் 'மறுமலர்ச்சி' என்று மொழி பெயர்த்திருக்கிறது. அழகான பெயர். மொழி பெயர்த்தவர் இன்னாரென்று தெரியவில்லை. யாராயிருந்தாலும், அவர் கவித்துவ உணர்ச்சியுடையவர். சுமார் 1920 ல் இப்பெயரை எனது நண்பர் பி.ஸ்ரீ. ஆச்சார்யா வழங்கியுள்ளார் என்று தெரிகிறது. பெரும்பாலும் இப் பெயரை அமைத்தவர் காலஞ்சென்ற தேசபக்தர் வ.வெ.சு அய்யராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

மேலே குறித்த இருள் நிலைமைக்கும் சுமார் 60ஆண்டு களுக்கு முன்னால் நமது தமிழ் நாடு இருந்த நிலைமைக்கும் எவ்வளவு ஒற்றுமை! இங்கேயும் சமயப் பூசல்களும் தர்க்கப் பூசல்களும் நிரம்பியிருந்தன. சைவ வைஷ்ணவப் போர் களும், வைதிக கிருஸ்தவப் போர்களும் நிகழ்ந்த வண்ண மாயிருந்தன. அத்வைத சண்ட மாருதங்களும் தர்க்க குடாரங்களும், ஆபாச நிரசனங்களும், அருட்பா மருட்பாப்

போர்களும் அறிவைச் சூறையாடிவந்தன. சிவஞான முனிவர் முதலிய பேரறிஞர்கள் பலர் இவ்வித விநோத விளையாட்டுக்கள் புரிந்தனர். வயிரக் குப்பாயங்கள் அமைத்தனர்; கண்டன கண்டனங்கள் இயற்றினர்; சூறு வளிகள் கிளம்பின. நாடெங்கும் வாதிபசிங்கங்களும், பர சமயகோளரிகளும், தர்க்கப் புலிகளுமாய் நிரம்பி விட்டன. இறைவன் இயல்பும், உயிர்களின் இயல்பும், பூதங்களின் இயல்பும் துருவித் துருவி ஆராயப்பட்டன. முத்தியின் இயல்பு, நீரும் உப்பும் கலந்தது போலவா அல்லது நீரும்பாலும் கலந்தது போலவா என்பது பற்றிப் பெரும் போர்கள் விளைந்தன. அறிவு விஷயங்கள் எல்லா வற்றிலும் சமயந்தான் கொடுங்கோலாட்சி புரிந்து வந்தது. இவ்வாட்சிக்குத் துணைபுரிந்து வந்ததை வடமொழித் தருக்க சாஸ்திரமும் தத்துவ சாஸ்திரங்களும், குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்டது போல, அறிவு வெளிச்சத்தை நாடிச் சென்று அஞ்ஞான இருளில் மக்கள் தத்தளித்து வந்தனர்.

ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;
விரதமே பரமாக வேதியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்;
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்;
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து ஆர்த்து
உலோகா யதம்எனும் ஒண்திறற் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்
(போற்றித்; 44-57)

என்று மாணிக்கவாசகர் கதறி அரற்றுவது மேலே நான் கூறியது உண்மையெனக் காட்டும். வீணான குதர்க்கங்க ளிலே காலங்கழிந்தது.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில் லாத என்
கன்மத்தை என்சொல்வேன் மதியை என் சொல்லுவேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ கர்ம முக்கியமென்று
நாட்டுவேன் கர்மம் ஒருவன்
நாட்டி னாலோ பழைய ஞான முக்கியமென்று
நவிலு வேன் வட மொழியிலே
வல்லான் ஒருத்தன் வரவும் த்ராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனமே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை யென் முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

என்று தாயுமானார் கூறியது அவர் காலத்திலே நிகழ்ந்து வந்த தர்க்க விவகாரங்களை மிக நன்றாக எடுத்துக்காட்டு கிறது. இது போன்றுள்ள தர்க்கங்கள் என்றேனும் உண்மை களை அறிய இடந்தருமா?

ஐரோப்பியர் வருகை

இங்ஙனம் இருக்க, ஐரோப்பியர்கள் நம் நாட்டுக்கு வரத் தொடங்கினார்கள். அவர்கள் கூட்டுறவு வரவர நெருக்க மாகிக் கொண்டே வந்தது. ஒரு புதிய நாகரிகம் நம்மவர் களைத் தாக்கத் தொடங்கிற்று. விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் பரவலாயிற்று. ஒரு புதிய கலைப் பண்பாடும் நம்மவர்கள் மனத்தைக் கவர்ந்தது. அந்தகாரத்திலிருந்து மக்கள் பிழைத்து வெளியேற முயன்றனர். அச்சு எந்தி ரங்களும் நாட்டில் ஸ்தாபிக்கப்பெற்றன. வெகு காலமாகப் புதையுண்டு கிடந்த நமது பண்டை இலக்கியங்கள் அச்சில் வெளிவந்து பலர்க்கும் கிடைத்தன. சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் முதலியோர் பண்டை இலக்கியங்களை வெளியிட்டனர். கனகசபைப் பிள்ளை, பேராசிரியர் சுந்தரம்பிள்ளை: இருவரும் முறையே பண்டைத் தமிழர் நாகரிகச் சிறப்பையும், பண்டை இலக் கிய நயங்களையும் அறிவுறுத்தினர். இவர் அனைவரும் மறுமலர்ச்சியின் தூதுவர்களாய் அமைந்தனர். இங்ஙனமே

வடமொழியிலுள்ள பல புராதன இலக்கியங்களும் மற்றச் சிறந்த நூல்களும் அச்சின் வாயிலாக வெளிவந்து கோல்புருக், மாக்ஸ் முல்லர் முதலிய அறிஞர்களால் பாராட்டப் பெற்று, மறுமலர்ச்சிக்குத் துணைபுரிந்தன. வடமொழியானது உலக மொழிகள் பலவற்றோடும் தொடர்புடையதென்பதும் மொழி நூற்பயிற்சிக்கு அவ்வடமொழி யறிவு அவசியம் என்பதும் உணரப்பட்டன. சமயச் சிறைச்சாலையினின்றும் வெளிவந்து, சுதந்திரத்தைச் சுவாசித்து மக்கள் புதிய அறிவுலகத்திற்குப் புகும் காலம் வந்து சேர்ந்தது. ஆங்கில-இலக்கிய அறிவும், மேல் நாட்டு விஞ்ஞான அறிவும் இப்புத் துணர்ச்சியை நமக்கு அளித்தன. ஆங்கில மொழியில் அறிவு நூல்கள் கற்று மேம்பாடு அடையும்படி நமது நாட்டிலும் இக் காலத்தில் ஸர்வகலாசாலைகள் ஏற்பட்டன. நானாபக்கங்களிலிருந்தும் தமிழ் மக்கள் வந்து இப் புதிய கல்வியையும் அறிவையும் பெறுவதற்குக் கலாசாலைகளில் சேர்ந்தனர். கல்வி பெருகிற்று. ஒரு புதுயுகம் நமது நாட்டிலும் ஆரம்பமாயிற்று. இங்கே கூறிய நிகழ்ச்சிகள் மட்டும் தனித்திருந்தாலும் இந்நிலையை 'ரினேஸான்ஸ்' என்று சொல்லுதற்குத் தடையில்லை. ஆனால், இதற்கு மேலும் ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது. அந் நிலைமையாது?

வாணிகத்தின் பொருட்டு வந்த ஆங்கிலேயர்கள் முடிவில் இங்கே இந்தியாவில் ராஜ்யத்தையே ஸ்தாபித்துவிட்டார்கள். நமது தமிழ் நாடும் இந்த ராஜ்யத்தின் பகுதியாய்அடங்கிற்று. நாமும் ஆங்கிலேயர்களுடைய சேவகர்களாகி விட்டோம்;. அடிமைகளும் ஆகிவிட்டோம். அடிமைத்தனத்தினின்றும் இனி என்றும் நமக்கு மீட்சியில்லை என்ற ஒரு நிலையும் வந்துவிட்டது! மீட்சி வேண்டாம் என்று கூடச் சிலர் சொல்லத் தொடங்கிவிட்டனர். தன்னலத்திற்காகத் தன் மதிப்பு இழந்து அடிமை மோகத்தில் ஆழ்ந்து நீண்ட துயில் கொள்ளத் தொடங்கிவிட்டோம்.

வ.உ.சியும் பாரதியும்

அப்பொழுது தமிழ் நாட்டில் இரண்டு தியாகிகள் தோன்றினார்கள். ஒருவர் வ.உ. சிதம்பரம் பிள்ளை; மற்றொருவர் பாரதி. வ.உ.சி. தமது தீரச்செயல்களினால் தமிழ் மக்களின் உள்ளத்தில் தேசீய உணர்ச்சியை விதைத்தனர். பாரதியார் என்றுமுள தென் தமிழ்ச் சொற்களால் தேசீய உணர்ச்சியை மூட்டி அது நமது உள்ளத்திலே கொழுந்து விட்டு எரியும்படி செய்தனர். சுதந்திரதாகம்

அடங்காத தாகமாயிற்று. அறிவுத் துறைகளில் கீழ்ப்பட்டு பௌராணிக இருளில் விழிகண் குருடர்களாய் நாம் வாழ்ந்து வந்ததனால் அல்லவா நாம் அடிமையாக நேர்ந்தது என்று பாரதியார் கருதினார். நெஞ்சம் புழுங்கிக் குமுறிக் கதறினார். அவர் இரத்தக் கண்ணீர் சிந்தினார். தமிழ்-மக்கள் உள்ளத்தைத் தொட்டுவிட்டார். ஆங்கில துரைத்தனத்தார் கையாண்ட அடக்குமுறைச் சட்டம் தேசியஉணர்ச்சியை வளர்த்தது. புத்தறிவின் தாகத்தாலும் தேச பக்தியாலும் கனிந்தன பாரதியார் பாட்டுக்கள். பழைய யுகத்தைப் போக்கிப் புது யுகத்தை வரச்சொல்லும் இவருடைய வீரத்திருமொழிகளைக் கேளுங்கள்:

இன்று பாரதத்திடை நாய் போலே
ஏற்றமின்றி வாழுவாய் போ, போ, போ

நன்று கூறில் அஞ்சுவாய் போ, போ, போ
நாணிலாது கெஞ்சுவாய் போ, போ, போ

சென்று போன பொய்யெலாம் மெய்யாக
சிந்தை கொண்டு போற்றுவாய் போ, போ, போ

வென்று நிற்க மெய்யெலாம் பொய்யாக
விழி மயங்கி நோக்குவாய் போ, போ, போ

இளைய பாரதத்தினாய் வா, வா, வா
எதிரிலா வலத்தினாய் வா, வா, வா

ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதய ஞாயி றொப்பவே வா, வா, வா

களையிழந்த நாட்டிலே முன்போலே
கலை சிறக்க வந்தனை வா, வா, வா

விளையும் மாண்பு யாவையும் பார்த்தன் போல்
விழியினால் விளக்குவாய் வா, வா, வா

இவரை மறுமலர்ச்சிக் கவிஞர் என்று சொல்லுவது எவ்வளவு பொருத்தம்!

ஆனால், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் வாழ்க்கையோ பாரதியின் வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டது. அவர் சுதேச மன்னர் நாடாகிய திருவிதாங்கூரில் உள்ளவர். இந்தியன் என்ற அளவிலே அவருக்குத் தேசபக்தி உண்டே தவிர, இப்பக்தி அவர் உள்ளத்தில் கனன்று பொங்கி எழுவதற்கு நியாயமே இல்லை. ஆங்கில அரசினர் பாரதியை

விசேஷப் பாதுகாப்பில் வைத்திருப்பதற்குக் காரணம் இருந்தது. தனிப்பட்ட இந்த அருளுக்குக் கவிமணி பாத்திரரானதில்லை. மேலும் இருபெருங் கவிஞர்களது இயல்புகளும் முற்றிலும் வேறுபட்டவை. பாரதியினிடத்திலே வேகம், கோபம், அசாதாரண இரக்கம், அசாதாரண பக்தி, தன்மறதி, பகற்கனவு காணல், ஆவேசம் முதலிய இயல்புகளெல்லாம் இருந்தன. ஆனால், கவிமணியிடத்திலே அமைதி, பொறுமை, அடக்கம், இனிய மனப்பண்பு, இரக்கம் உபகார சிந்தை, முறைமையிலே பிரியம், நினைவாற்றல் முதலியவற்றைக் காணலாம். நீண்ட காலமாகப் பெண்கள் கலாசாலையில் ஆசிரியராயிருந்தமையால் இக்குணங்கள் சிறந்து விளங்குவதற்கும் இடமிருந்தது. ஆவேசம், பரபரப்பு முதலியன சிறிதளவும் கிடையாது. கவிமணியோடு 40 ஆண்டுகளாகப் பழகியுள்ளேன்; என்றாலும் ஒரு முறையாவது யாரோடும் அவர் கோபங்கொண்டதை நான் பார்த்ததேயில்லை.

இவ்வாறு இயற்கையிலும் வாழ்க்கை முறையிலும் இருவருக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. மறுமலர்ச்சிக் கவிஞன் என்று பாரதியைக் கூறினால், கவிமணிக்கு அந்தப் பதவி இருக்கமுடியாது என்றுதான் சொல்லத் தோன்றும். ஆனால் பாரதியிடம் சிறந்து விளங்கும் புதிய அறிவுத் தாகமும் சுதந்திர தாகமும் தவிர, மறுமலர்ச்சியில் (Renaissance) வேறோர் அம்சம் உண்டு. இந்த அம்சத்தில் கவிமணியின் நிலையாதென்று நோக்குவோம்.

கவிமணியின் மக்கள் நல-நாட்டம்

இலக்கிய அறிஞர் கண்ட இந்த அம்சத்திற்கு 'ஹியூமனிஸம்' (Humanism) என்று பெயர். இதனை மக்கள் நல-நாட்டம் என்று கூறலாம். ஐரோப்பாவில் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்புள்ள இருட்காலத்தில் கல்வி என்றால் சமயக் கல்வி ஒன்றைத்தான் குறித்தது. அவ்வாறே கற்றோர்கள் என்றால், சமய சாஸ்திரம், புராணம் முதலியவற்றில் வல்லவர்களைத்தான் குறித்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்புள்ள கிரேக்க இலக்கியங்களை அச்சின் வாயிலாகப் பெற்று அவற்றை வாசித்த அறிஞர்கள் சமயங்களோடு யாதொரு தொடர்பும் இல்லாதபடி, அவ் இலக்கியங்கள், தத்துவ நூல்கள் முதலியன மக்கள் நலத்தை மட்டும் பேணின என்று கருதினார்கள். சமயச் சார்புள்ள நூல்களை நீக்கி, அவ்வகைச் சார்பற்ற இலக்கியங்களே மக்கள்

நலத்தை உண்மையிற் பேணுவன என்றும், அவையே வேண்டத்தெக்கன என்றும் இவர்கள் கொண்டார்கள். இங்ஙனமாக, மக்கள்-நலம் நாடும் கொள்கையும் முயற்சியும் 'ஹ்யூமனிஸம்' என்று ஆங்கிலத்தில் போற்றப்பட்டது.

பூர்வத்தில் இவ்வாறு மக்கள் - நலம் பேணும் செயல்களில் ஈடுபட்டவர் புத்தர்பிரான். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்று இவர் போற்றப்படுகிறார். பல பிறவிகள் எடுத்து மக்களின் நலத்தைப் பேணினரென்றும் இவர் சரித்திரம் கூறும். இவர் ஆத்மா உண்டென்பதில் நம்பிக்கையற்றவர்; கடவுள் உண்டென்ற கொள்கையிலும் அவ்வாறே. எனவே, இவ்விரண்டும் உண்டென்று கொண்ட வைதிக சமயத்தின் கட்டுப்பாட்டினின்றும் நீங்கியவர். கிரேக்க இலக்கியங்கள் மக்கள் நலம் பேணியமை போல புத்த ஞாயிறு தோன்றி அவ் அரிய செயலைச் செய்து ஒளிமிகுந்து சிறந்தது. மனிதன் தனக்குரிய கௌரவ ஸ்தானத்தைப் பெற்றான். 'வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதம்மா' என்று கம்பன் கூறியதுபோல மனிதன் சமயங்களுக்கெல்லாம் மேற்பட்டவன். கற்பிதங்களாயுள்ள தெய்வங்களுக்கெல்லாம் அவன் மேற்பட்டவனே. இதனை உணர்ந்தே புத்தர் மக்கள் நலத்தைப் பேணுதலே தமது கடமை எனக் கொண்டனர். இதனோடும் நிற்கவில்லை. உயிரினங்களை எல்லாம் பேணுதலே தமது வாழ்வின் பெருநோக்கம் எனவும் கருதினர்.

புத்தர்பிரான் கொண்ட இக்கருத்து கவிமணியின் இதயத்தைக் கவர்ந்தது. அவரது சரிதப் பகுதிகளிற் சிலவற்றை அதியற்புதமான தமிழில் பாடியுள்ளார். இப் பகுதிகளை நாம் படித்து நோக்கினால், கவிமணி எவ்வளவு ஆழமாக இச் சரிதத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியும். ஆசிரியரது ஆழ்ந்த உணர்ச்சியும் தமிழின் குழைவும், கவிதையின் அருமைப்பாடும் படிப்போரது உளத்தைக் கனிவிப்பன. இவை மக்கள் நலம் பேணுவது இவரது இயற்கைக் குணமென்பதை விளக்கும். இவரது பிற கவிதைகளும் இக் குணத்தையே வெளிக் காட்டுகின்றன. மக்கள் நல-நாட்டம் இவரது கவித்துவத்தின் ஜீவநாடி என்று கொள்ளலாம். ஆதலால் இவரை மறுமலர்ச்சிக் கவிஞன் என்று கூறுவது பொருந்துவதேயாம்.

புத்தரைப் பற்றிய பாடற் பகுதிகள் மொழி பெயர்ப்புத்தானே என்று சிலர் கூறுவர். பல உயர்ந்த செய்யுட்கள்

ஆங்கிலத்திலிருக்க, இதனைத் தெரிந்து எடுத்துக் கொள்வானேன்? புத்த பகவானது அருட் பாங்கிலே கவிமணி ஈடுபட்டதே காரணம். தாமும் அவ் அருட் கொள்கையைக் கொண்டவர் என்பது காரணம். அன்றியும் இப் பாடல்கள் பெயரளவில்தான் மொழிபெயர்ப்பு. இவற்றை ஒரு நூதன சிருஷ்டி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

கவிமணியின் மற்றைப் பாடல்களும் இவர் மறுமலர்ச்சிக் கவிஞர் என்பதை வற்புறுத்துகின்றன. 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூல் தமிழுக்கு ஒரு நூதன நெறியைத் தந்துள்ளது; ஓரளவில் இவரைப் புரட்சிக்கவிஞர் என்பதையும் தெரிவிக்கிறது. ஆனால், இந் நூலில் இவர் கைக்கொண்டுள்ள முறை பிரகசன முறையாகும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்குத் தக்கமுறை என்பது சார்லஸ் டிக்கென்ஸ் (Charles Dickens) முதலியோரது 'நாவல்' களினால் விளங்கும். மக்களது சமுதாய நிலையில், அவர்களுடைய துன்பங்களைக் கண்டு ஆற்றாது உருகிக் கவிமணி வருந்துவதை இம் மான்மியம் சோகம் நிரம்பிய எளிய பாடல்களால் உணர்த்துகிறது. சிறு குழந்தைகளுக்கு என, கவிமணி பாடிய பாடல்களிலும் மறுமலர்ச்சியின் மக்கள் நல-நாட்டமே கமழ்கின்றது. இங்ஙனமாகப் பல படியாலும் இவர் மறுமலர்ச்சிக் கவிஞரே. மறுமலர்ச்சியின் ஓர் அம்சமாகிய மக்கள் நல-நாட்டப் பகுதிக்கு இவரே பிரதிநிதியாவார்.

16. தமிழும் எதிர்காலமும்

எதிர்காலத் தமிழ்

எதிர்காலத்தில் தமிழ் எவ்வாறாக இருக்கும்? ஜோதிஷத்திலும் ஆரூடத்திலும் இக்காலத்தில் நம்பிக்கை இல்லையே? இக்கேள்வியால் என்ன பயன்? என்றுசிலர் நினைக்கலாம்.

குறிசொல்வதால் பயனில்லை, ஆனால் இக்கேள்விக்கு விடையளிப்பது குறி சொல்வதாகாது. தமிழின் பூர்வ சரித்திரத்தையும் அதன் தற்கால நிலையையும் அடிப்படையாகக்கொண்டு அதன் எதிர்கால நிலையை அநுமானம் செய்யலாம். இந்த அநுமானத்திற்கு மொழிகளைப் பற்றிய பொது அறிவும் துணைபுரியும். இம் முறையில் தமிழ் மொழியின் எதிர் கால நிலையைக் கவனிப்போம்.

தமிழ்மொழி சுமார் 2000 ஆண்டுகளாக வழங்கி வந்துள்ள சரித்திரம் இலக்கிய இலக்கணச் சான்றுகள் மூலமாய் நாம் அறிந்து கொள்ளக்கூடியதே. கிறிஸ்து அப்தத் தொடக்கத்திலிருந்து பூர்வ காலத் தமிழும் சில நூற்றாண்டுகளுக்குப் பின் வழங்கிய பின்-பூர்வ காலத் தமிழும் வடமொழிக் கலப்பு மிகுந்து இசையுணர்ச்சி பெருகி இலக்கியக் கலை வளம்பட்ட முன்இடைக்காலத் தமிழும்-அரசியல் குழப்பங்கள் மிகுந்து கல்வி நிலை தளர்ந்துவிட்ட பின் இடைக்காலத் தமிழும் மேல் நாட்டு நாகரிகக் கலப்பால் தன்மை திரிந்துவிட்ட தற்காலத்தமிழும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இவைகளுக்கு முறையே நற்றிணையாதிய தொகை நூல்களும், திருக்குறள் பரிபாடல் என்பனவும், சிந்தாமணி கம்பராமாயணம் முதலிய காவியங்களும், விறலி விடுதூது குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களும், ஆனந்தரங்கம்பிள்ளை தினசரி, பாரதிபாடல் முதலியவைகளும் சிறந்த உதாரணங்களாம். ஒருண்மை இச்சரித்திரத்தால் புலனாகிறது. தமிழ் மொழியானது தமிழ் மக்களது அறிவு வளர்ச்சிக்கும், தமிழ் சமுதாயத்தின் நிலைமைக்கும், சூழ் நிலைக்கும் தக்கவாறு காலத்துக்குக் காலம் வேறுபட்டுக் கொண்டே வந்திருக்கிறது. தமிழ் மொழி மட்டும் இவ்வாறு வேறுபட்டு வந்திருக்கிறது என்று நினைப்பது சரியல்ல. உலகத்திலுள்ள எல்லா மொழிகளும் இவ்வாறே

வேறுபட்டு வரும் தன்மையனவே. "மொழி யென்பது எல்லாக் காலத்திலும் ஒரு படித்தாய் வழங்குமாறு அமைந்துள்ளது என்று இப்போது கருதுவார் இல்லை. பூர்வத்திலுள்ள விருத்திக்குரிய அம்சங்களின் முடிவாகவும், பின்னிகழும் விருத்திக்குரிய அம்சங்களுக்கு வித்தாகவும் தான் ஒரு மொழியானது இப்பொழுது கருதப்பட்டு வருகிறது" என்று எஸ்பெர்ஸன்* என்ற மொழி நூலறிஞர் கூறுகிறார். "நில்லாமை சால நிலைபெற்றதன்றே" என்ற உண்மை மொழி வரலாற்றிற்கும் ஒத்ததேயாகும். ஆகவே, தமிழ் மொழி இனி வருங்காலத்திலும் மாறுபாடடைதல் உறுதி. இக்காலத்துள்ள சில அறிகுறிகளால் இன்ன முறையில் மொழி மாறுபடும் என்பது நாம் ஊகித்துக் கொள்ளக்கூடியதே. விளையும் பயிர் முளையிலே தெரியும் அல்லவா?

தமிழின் ஜீவசக்தி

தற்காலத்திலே எழுதப்படும் நூல்களில் ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால், நூலிற் கூறும் பொருள்களுக்கும் நமது வாழ்க்கையின் இயல்பிற்கும் மிகநெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. முன்காலத்தில் இவ்வகையான தொடர்பு பெரும்பாலும் இருந்ததில்லையென்றுதான் சொல்லவேண்டும். அக்காலத்திலுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலோர் கவிதையுலகில் வாழ்ந்து வந்தவர்கள். அவர்களது கண்முன்பாக நிகழ்ந்த வாழ்க்கையில் அவர்களுடைய கவித்வ உள்ளம் பற்றவில்லை. பலர் அவ்வாழ்க்கையைத் துச்சமாகவும் கருதி ஒதுக்கி வந்தார்கள். கவிதையுலகிலே வாழ்ந்து, காவிய சிருஷ்டிகளைக் கனவு கண்டு, அந்த சிருஷ்டிகளின் தத்துவங்களிலேயே லயித்து விட்டார்கள். எனினும், அவர்கள் காலத்திலுள்ள வாழ்க்கையின் சாயல் அவர்கள் இயற்றிய நூல்களில் காணப்படாமல் அறவே ஒழிந்துவிடவில்லை. அவர்களது கண்களைத் தப்பி அவர்கள் இயற்றிய நூல்களில் அது மறைவாய்ப் புகுந்து கொண்டது என்றுதான் ஊகிக்க வேண்டும். ஆகவே, சாதாரணமாக உலக வழக்கில் வழங்கி வந்த தமிழ் நடையைக் கையாளுவதற்கே அவர்களால் முடியாமல் போய்விட்டது. உலக வழக்கை இழிசன வழக்கு என்று கூடக் கருதி விட்டார்கள்.

---

* A language is no longer taken as something given once for all, but as a result of previous development and at the same time as the starting point for subsequent development.— Jesperson.

இந்நிலைக்கு நேர்மாறாக, தற்காலத்தே கவிதை - உலக வாழ்க்கையானது அறவே போய்விட்டது. நமது தினசரி வாழ்க்கை நூல்களில் பிரதி பலிக்கத் தொடங்கியிருக்கிறது. நமது தினசரி வாழ்க்கை எழுத்தில் சித்தரிக்கப்பட்டு வருகின்றது. நமது தினசரி வாழ்க்கை நூல்களாகப் பரிணமித்து வெளிப்படையாய் உலவி வருகிறது. இக்காரணத்தால் உலக வழக்கிலுள்ள தமிழ் நடையானது நமது நூல்களில் ஏறத் தொடங்கி விட்டது. தமிழ் மொழிக்கு ஒரு நூதன ஜீவ சக்தி தோன்றியுள்ளது.

இந்த ஜீவசக்தியானது உரம்பெற்று வளரவொட்டாத படி ஒரு சிலர் அங்கங்கே முயற்சிசெய்து வருகிறார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நக்கீரரது உரைநடையைத் தற்காலத்துக்கு உரிய உரைநடையாக வழங்க வேண்டுமென்று ஒருசில தமிழ்ப் புலவர்களும் அவர்கள் சார்பினரான வேறு சிலரும் வற்புறுத்துகிறார்கள். தொல்காப்பிய முனிவரின் ஆணையைக் கடவாமல் சங்க நூல் வழக்கைப் பின் பற்றித் தற்காலத்தே நூல்கள் எழுதப் பெறவேண்டுமென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆறு பெருக்கெடுத்து கரை புரண்டு வரும்போது அதன் போக்கை ஒரு சிறு மண் - அணையால் தடுக்க முடியாது. இது போலவேதான் இவர்களது முயற்சியும் பயனற்றது. தமிழ் மக்களது வாழ்வின் போக்கிற்குத் தக்கபடி மாறிச் செல்லவேண்டும். தமிழ் மொழியை அவ் வாழ்வினின்றும் பிரித்துத் தனிப்பட நிறுத்தி, தூர்ந்து போன ஒரு நெறியிலே செலுத்த முயல்வது இயற்கைக்கு மாறானதாகும். மொழியியல்பை உணராத இவர்களது செய்கை அன்னிய நாட்டினர் நகைப்பதற்கு ஏதுவாகும். மேலே குறிப்பிட்ட ஜீவசக்தியானது இவ் இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தாது, மக்கள் வாழ்விலிருந்து உரம்பெற்று, வளம் மிகுந்து, இனி வருங்காலத்திலே பல வகையாலும் சிறந்ததொரு மொழியாய்த் தமிழை ஆக்கும் என்பதில் தடையில்லை.

தற்கால வாழ்வானது என்ன வகையிலே நமது முன்னோர்களுடைய வாழ்வினின்றும் வேறுபட்டுவிட்டது? இக் கேள்வியெழுதல் முற்றும் இயல்பே. ஐரோப்பிய நாகரிகத்திற்கும் வாழ்விற்கும் அறிவுக்கும் நம்முடைய வாழ்வுக்கும் ஒரு தொடர்பு இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. இத்தொடர்பு தொடங்கிச் சுமார் 300 ஆண்டுகள் ஆகின்றன. வரவர இத்தொடர்பு வலுத்துக்கொண்டே வருகிறது. இதனால் நமது வாழ்வு முற்றிலும் மாறிவிட்டதென்றுதான்

சொல்ல வேண்டும். நமது வளர்ப்புமுறை, கல்விமுறை, ஆசார முறை, தொழில்முறை, அரசியல் முறை, நியாய பரிபாலன முறை, நமது இலட்சியங்கள் முதலியன எல்லாம் மாறிவிட்டன. இது போன்ற மாறுபாடானது மக்களது வாழ்க்கைச் சரித்திரத்தில் முன் ஒரு காலத்திலும் நிகழ்ந்த தில்லை யென்னலாம். இம் மாறுபாடு நமது தமிழ் மொழியைப் பாதிக்காமல் இருக்க முடியுமா?

இத்தொடர்பு வரவர மிகுதியாய் வலிமை பெற்றுக் கொண்டிருக்கிறது' என்று கூறினேன். நமது சகோதரர்களும் சகோதரிகளும் இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று திரும்புகிறார்கள். ஐரோப்பியர்கள் நமது நாட்டிற்கு வந்து நம்மிடையே வசித்து வருகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நமது மக்களிடையே உழைத்து வருகிறார்கள். நமது கல்வித்திட்டம் பல வகையிலே ஐரோப் பியர் கல்வித் திட்டத்தை ஒத்து அமைய முயலுகிறது. நமது கல்வியும் ஒரு சில ஆண்டுகட்கு முன்வரை ஆங்கில மொழியின் மூலமாய்ப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. இது வெட்கக் கேடான காரியமாயிருந்தாலும் ஒருவாறு நன்மைபுரிந்து வந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். ஐரோப்பிய நூல் களை நம்மவர்கள் கற்று அவற்றின் மூலமாய்த் திருந்திய ஒரு மனப்பண்பைப் பெற்று வருகிறார்கள். இம் மனப்பண் பிற்குத் தக்கவாறு தமிழ் மொழியும் வேறுபட்டு வழங்கும் என்பதற்குத் தடையென்ன?

நமது அரசாங்கம் 1947 ஆகஸ்ட் மாதம் வரை ஆங்கி லேயர் கைவசத்தில் இருந்தது. இவ்வரசாங்கத்தின் முக்கிய கதி இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு சபையாரால் தீர்மானிக்கப் பட்டது. அரசாங்கத்தின் நடைமுறைகளில் நம்மவர்கள் மேன்மேலும் பங்கு கொண்டு வந்து இப்பொழுதுதான் அந் நடைமுறை முழுவதையும் தாமே கைக்கொண்டுள்ளார்கள். அரசியல் - தொடர்பு நம் மக்களுக்குப் பெருகிக்கொண்டு வருகிறது. இத் தொடர்பிற்கு இடங்கொடுத்து நமது தமிழ் மொழி மாறுபடாமல் இருக்க முடியுமா? தற்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகளை நமது முன்னோர்கள் கற்று உணர்ந்துகொள்ள மாட்டார்கள். தமிழ்மொழி மாறி வரு கிறதென்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

தமிழும் எதிர்காலமும்

நமது கல்வித் திட்டமும் முறையும் மாறி வருகின்றன என்றேன். இம் மாறுபாடு நமது இளைஞர்களைப் பெரிதும்

பாதித்துவிட்டது. நமது தேசத்தின் எதிர்கால வாழ்வு அவர்களைப் பொறுத்தது. அவர்களுடைய சந்ததியார்களின் வாழ்வு ஓரளவில் அவர்கள் வாழ்வைப் பொறுத்திருக்கிறது. தமிழின் பிற்கால வாழ்வு அவர் அம்மொழியை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்துள்ளது. அவர்கள் கையாளும் முறையும் அவர்களுடைய கல்வித் திட்டத்தைப் பொறுத்தது. கல்வித் திட்டத்திலே ஒரு பெரும் பகுதி ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரங்களாகும். இதனால் நமக்கு அளவற்ற நன்மைகள் விளையக்கூடும். இந்தச் சாஸ்திரங்களெல்லாம் மேன்மேலும் வளர்ந்துகொண்டே செல்லும் இயல்புடையன. இந்தச் சாஸ்திரங்களுக்கு இசைய, நமது அறிவியல் நெறிகளும், கருத்துநெறிகளும், உணர்ச்சி நெறிகளும் மாறுபடும் என்பது சொல்ல வேண்டாம். பரந்து பட்ட நூலுணர்ச்சி, அறிவின் உரம், கருத்துத் தெளிவு, ஆராய்ச்சி நெறியின் நேர்மை முதலிய சிறந்த இயல்புகள் விஞ்ஞான சாஸ்திரங்களால் நமது இளைஞர்களுக்கு உண்டாகத் தக்கன. இவ் இயல்புகளுக்குத் தக்கபடி நமது தமிழ் நடையும் மாறுபடும் என்பது கூறவேண்டுமா?

முற்காலத்தில் நாம் கிணற்றுத் தவளைபோல் இருந்தோம். தெரியவேண்டும் என்று நாம் அவாவிக் கற்றதெல்லாம் வடமொழி ஒன்றே. அக்கல்வியால் நேர்ந்த நன்மைகள் மிகப் பலவாய் இருந்தாலும், அக்கல்விக்கும் நமது வாழ்விற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. கிணற்றுத் தவளைகளாய் வாழ்ந்து வந்த நம்மை மீண்டும் பெருமிதத்தால் ஊதிப் பெருத்துவிட்ட கிணற்றுத் தவளைகளாக அவ் வடமொழிக் கல்வி ஆக்கிவிட்டது. இப்பொழுது ஆங்கிலக் கல்வியும் நீண்ட காலமாய் நிலைத்திருந்த ஆங்கில அரசாட்சியும் பாரத மக்களாகிய நம்மனைவர்க்குள்ளும் ஓர் ஒற்றுமையுணர்ச்சியை - ஐக்கிய பாவத்தை - உண்டுபண்ணி விட்டது. நமது உலகமே விரிந்துவிட்டது என்று சொல்ல வேண்டும். ஆப்பிரிக்கா தேசமும், மலேயா தேசமும், பர்மா தேசமும், நம்மவர்கள் வாழும் நாடுகளாய் விட்டன. இவ்விரிவினால் நமது தமிழ் மொழிக்கு ஒரு பெருநன்மை விளைந்துவிட்டது. அன்னிய இலக்கியங்களும் அன்னிய மொழிகளும் அன்னிய கருத்துக்களும் நமது தமிழுக்கு ஒரு புதிய வேகத்தைக் கொடுத்து விட்டன. இவ்வேகத்தால் நமது தமிழின் நெறி வேறுபட்டு விளங்கும் என்பது சொல்ல வேண்டுமா?

தமிழ் மொழியின் நெறியை மாற்றவல்ல சில முக்கியமான விஷயங்களைக் குறித்து இதுவரை கூறினேன். இனி

வருங்காலத்திலே தமிழ்மொழி, சாமானிய மக்கள் உள்பட தமிழ் மக்கள் அனைவருக்கும் பொது உடைமையாய் அமையும். அவர்கள் வாழ்வோடு கலந்து புத்துயிர் பெற்று புது வாழ்வு வாழும். உலகம் முழுவதையும் அப்போதைக் கப்போது தாக்கி வரும் நூதன சக்திகளுக்குத் தானும் இடம் கொடுத்து, தன் ஆற்றலையும் வேகத்தையும் பல திறப் படுத்தி மேன்மையுற்று வளரும். புதுக் கருத்துக்கள், புது உணர்ச்சி முதலியவற்றால், புதுச் சொற்களும், புதுத்தொடர் களும், புதிய வாக்கிய அமைதிகளும் பெற்று, தன் அடிப்படை யான இயல்பு கெடாதபடி, வளம் பெருகி நிற்கும். விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியால் கருத்துத் தெளிவும் கருத்துவரை யறையும் ஏற்பட்டு, சொற்களுக்குப் பொருள் வரையறையும் உரைநடைக்குத் திட்பமும் ஆற்றலும் உண்டாகும்!

இவ்வியல்புகளெல்லாம் விரைவில் அமையுமாறு தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் முயல்வோமாக!

17. புத்தாண்டில் புது முயற்சி

தமிழ்வருஷப் பிறப்பு

இவ்வருஷப் பிறப்பினை விஷு புண்ணிய காலம் என வழங்குவர். சூரியன் பூமத்திய ரேகையை இரண்டு தினங்களில் கடக்கிறான். ஒன்று மேஷ சங்கிரமணம்; மற்றொன்று துலா சங்கிரமணம். முந்தியது பங்குனிமாதம் இரண்டாம் வாரத்து இறுதியிலும் (மார்ச் 21) பிந்தியது ஐப்பசி மாதம் முதல் தேதியிலும் (அக்டோபர் 16) நிகழ்கின்றது. நமது தெலுங்கு சகோதரர்கள் மார்ச் 21-ம் தேதியை அடுத்துத் தங்கள் புதுவருடப் பிறப்பினைக் கொண்டாடுகிறார்கள். தமிழ் மக்கள் சித்திரை மாதம் முதல் தேதியில் (ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதியை அடுத்து) வருஷப்பிறப்பைக் கொண்டாடுகிறார்கள். இதனால் சித்திரை விஷு என்றும் இதனை வழங்குவர். துலா சங்கிரமணம் பற்றித் தேதி வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

மேற்குறித்த இரண்டு விஷு தினங்களிலும் பகல் நாழிகையும் இரவு நாழிகையும் ஒத்த அளவினவாய் இருக்கும். இதனால் இவை சமராத்திரம் எனச் சொல்லப்படும்.

சித்திரை விஷுவை மலையாள நாட்டினர் கொண்டாடும் அளவு நாம் கொண்டாடுவதில்லை. அந்தத் தினத்தில் தங்களுக்கு வரும் நன்மை தீமைகளும் லாப நஷ்டங்களும், ஓர் ஆண்டு முழுவதும், தங்களைப் பாதிக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இதனால் செல்வத்தாலும் பிற காரணங்களாலும் பெரியோராய் உள்ளவர்களைக் காணிக்கை வைத்துக் காணுதலும் அவர்களிடம் மற்றையோர்கள் கைநீட்டம் பெறுதலும் வழக்கமாம். அன்றியும், அப்புண்ணிய காலத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் விலைமிக்க பொருள்களைத் திரட்டி வைப்பதும் உண்டு. அனைவரும் ஆசார சீலர்களாய் இருப்பர் என்பதும் கூற வேண்டா. தமிழ் நாட்டில் காணிக்கை கொடுத்தல் முதலியன வழக்கத்தில் இல்லை. ஆனால் பொதுப்பட விசேஷ தினங்களுள் ஒன்றாகத் தமிழர்கள் இதைக் கொண்டாடுகின்றனர்.

முற்காலத்தில் தமிழ் மக்களுள் ஜைன சமயத்தவர் சித்திரை விஷுவைக் கொண்டாடி வந்த முறை இங்கே கூறத்

தக்கது. அன்று ஆகாயசாரிகள் வரத்தகும் என்று கருதி சாவகர்கள் எல்லாரும் கூடி சிலாதலம் இட்டு அதனைத் தொழுது வலங்கொள்வர்.' இவ்வழக்கத்தினை அடியார்க்கு நல்லார் குறித்துள்ளார் (சிலப் 15-25 உரை). ஆனால் சிலப்பதிகார மூலத்தில் 'விழு' என்பதற்கு விஷு என்பதுதான் பாடம் என்று உறுதியாகச் சொல்வதிற்கில்லை. எவ்வாறாயினும் சங்க நூல்களில் விழுவைப் பற்றி யாதொரு குறிப்பும் கிடையாது. பெரும்பாலும், அடியார்க்கு நல்லார் காலமாகிய 14-ம் நூற்றாண்டு முதல்தான் சித்திரை விஷுவை புண்ணிய காலமாக தமிழ்நாட்டில் கொண்டாடி வருகின்றனர் எனத் துணியலாம்.

நம்மில் பெரும்பாலோர்க்கு எல்லா நாளும் ஒன்று போலத்தான்; வேறுபாடு இல்லை. திருவள்ளுவரும் 'நாளென ஒன்றுபோற்காட்டி' என்று கூறினார் அல்லவா? விசேஷ நாட்களைப் புரோகிதரோ பிறரோ சொல்லித்தான் தெரிய வேண்டும் அல்லது பஞ்சாங்கத்தைப் பார்க்க வேண்டும்.

முற்காலத்தில் புண்ணிய தினங்களில் நன்மை என்று கருதுகிற சுப காரியங்களைச் செய்து வந்தனர் அல்லது தொடங்கினர். உதாரணமாக துலாக் காவேரி ஸ்நானத்தைக் கூறலாம். இது ஐப்பசி மாதத் தொடக்கத்தில் நிகழும் நீராட்டு. இங்ஙனமே மார்கழி மாதத்தில் நிகழும் பாவை நோன்பும். இவ்வகை விசேஷங்களால் ஜோதிஷத்தின்படி முக்கியமான சில தினங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவரப் பட்டன. சித்திரை விஷுவில் தமிழ் நாட்டில் ஜைனர் களிடையே நிகழ்ந்து வந்த ஒரு விசேஷத்தை முன்பே குறிப் பிட்டேன். இத்தினத்தில் பண்டைக் காலத்தில் அரசர் முதலியோரது நன்மையைக் கருதி விசேஷ பூஜை நிகழ்த்துதல் முதலியன வழக்கமா யிருந்தது.

தற்காலத்தில் இது போன்ற நன்னாட்களை வேறொரு முறையில் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம். நமக்கு உகந்த சில தீர்மானங்களை மனத்தில் கொண்டு, அவற்றைச் செய்து முடிப்பதாக விரதம் பூணுகிறோம். நமது தேச விடுதலை நாளை இவ்வாறு நாம் கொண்டாடுகிறோம் அல்லவா?

புது முயற்சி

இத் தமிழ்ப் புது வருஷத்தில் தமிழின் பொருட்டு யாது செய்வதாக உறுதி கொள்ளலாம்?

தமிழ் மொழியை, மேலை நாட்டு முறைகளைப் பின்பற்றி, அதாவது வரலாற்று முறையில், கற்பவர்கள் தமிழ் நாட்டில் இல்லை எனக் கூறலாம். வரலாற்று முறையே நமக்குப் புதிதாய் உள்ளது. சங்க காலத் தமிழும் இடைக் காலத் தமிழும் தற்காலத் தமிழும் ஒரே தன்மையன என்று கருதுகிறோம். சங்ககாலத் தமிழ்தான் இன்றும் வழங்க வேண்டும் என்றும் தமிழாசிரியர்களில் பெரும் பாலோர் வற்புறுத்துகிறார்கள். தொல்காப்பியரது ஆணைதான் இன்றும் நடைபெற வேண்டும் என்று பறைசாற்றுகிறார்கள். நன்னூல் கூட இரண்டாம் பட்சம்தான். சிறிது ஆலோசித்தால் இக்கருத்துத் தவறு என்பது புலப்படும். ஒலி இயல்பினாலும், சொல் அமைதியினாலும், சொல்-தொகுதியினாலும், சொற்பொருளினாலும், வாக்கிய அமைதியினாலும் மூன்று காலத்துத் தமிழும் பெரிதும் வேறுபடுகின்றன.

ஒலி இயல்பு காலத்துக்குக்காலம் மாறி வந்துள்ளதைக் கீழ் வரும் உதாரணங்களால் காணலாம்:

பெயர் - பேர்
நாடு-நேடு-தேடு-தேண்டு
பொழுது-போழ்து-போது (அப்)போ
சமன்-ஓமன்-நெமன்-நமன்
ஞண்டு-ஞெண்டு-நண்டு
ஆசாரியன்-ஆசிரியன்-ஆசான்
வாழ்த்து-வழுத்து
கர்ப்பம்-கெற்பம்-கருப்பம்
பர்வதம்-பருவதம் - பறுவதம் -பருப்பதம்
நித்தம்-நித்தல்-நிச்சம்-நிச்சல்

சொல்லமைதி மாறி வந்துள்ளதற்கு உதாரணம்:

என்மனார்-என்பர்
பாய்த்துள்-பாய்த்து-பாய்ச்சல்
ஆயிற்று-ஆய்த்து-ஆச்சு
நா-நாக்கு

சொல் தொகுதியினால் வேறுபட்டுள்ளதற்கு (வழக்கு வீழ்ச்சியும், புது வழக்கும் இதில் அடங்கும்) உதாரணம்:

கருப்பை (இல்லெலி), கவ்வை (எள்ளிளங்காய்): இவை சங்க காலத்துச் சொற்கள். ஊராண்மை, பொச்சாத்தல்,

சோகாத்தல்: இவை வள்ளுவர் காலத்துச்சொற்கள். குண்டர், சண்ணித்தல், பஞ்சம்: இவை தேவார காலத்துச் சொற்கள். தாசியர், காழியர், நாத்தூண், கலங்கரை விளக்கம்: இவை சிலப்பதிகார காலத்துச் சொற்களும், தொடரும். நொறில்: இது உரைகாரர் காலத்துச் சொல். சலாம்: இது முகலாயர் காலத்துச் சொல். பாலம் (Bridge), ஜன்னல், துட்டு: இவை ஐரோப்பியர் காலத்துச் சொல். காந்தீயம்: இது தற்காலத்துச் சொல்.

சொற்பொருள் வேறுபட்டு வருதல், உதாரணம்:

எவன் என்பது என்ன எனச் சங்க காலத்தில் பொருள் பட்டது. ஒருமையில் வரும் யார் என்பது தற்காலத்துப் பொருள்.

வாக்கிய அமைதியில் வேறுபாடு, உதாரணம்:

ஆயின், ஆனால் என்பவை அவரானால், கேட்பாராயின், கேட்பாரானால் எனச் சொல் இறுதியிலும் தொடர் இறுதியிலும் வந்து முற்காலத்தில் வழங்கி வந்தன. தற்காலத்திலும் இவ்வழக்கு உண்டு. ஆனால் வேறொரு புதிய வழக்கு நுழைந்துவிட்டது. ஒரு தொடரின் தொடக்கத்தில் வந்து அதற்கு முன்புள்ள தொடரின் கருத்தை எதிர் மறுத்தற் பொருளிலும் விலக்குதல் பொருளிலும் இவை பயில்கின்றன. ஆங்கிலத்தில் 'But' என்ற சொல்வழக்கோடு ஒப்புமை உடையது.

இவ்வாறாக மாறிக் கொண்டே செல்வதுதான் மொழியின் இயல்பு. ''பழையன கழிதலும், புதியன புகுதலும்'' என்பது சொற்பற்றிய வழக்கு என்று மட்டும் கொள்ளுதல் கூடாது. எல்லா வகையிலும் மொழி மாறிக் கொண்டே செல்லும் காலம் பற்றிய வழக்கு வேறுபாடு என்று மட்டும் கொள்ளுவதும் சரியல்ல. பிரதேசம் பற்றியும், சமூகத்தில் ஜாதிபற்றியும், தொழில் பற்றியும் ஒரே காலத்திலே வழக்கு வேறுபடுதல் உண்டு. இந்த உண்மையை நன்கு உணர்ந்து தற்காலத்துக்குரிய தமிழின் இலக்கணத்தையும் சொல் முதலிய வழக்குக்களின் அகராதியையும் இயற்றுதல் இன்றியமையாதது. இதற்கு ஒவ்வொருவரும் தத்தமக்கு இயன்ற நெறியிலும், அளவிலும் முயற்சி செய்ய வேண்டும். இம்முயற்சியில் ஈடுபடுவதாக நாம் அனைவரும் இந்தச் சித்திரை விஷுவில் உறுதி பூணுவோமாக. இது வெற்றிகரமாய் முடிவதற்கு இறைவன் அருள் புரிக.

சொற்கலை விருந்து

இரண்டாம் பகுதி

1. மொழியின் அதியற்புத இயல்பு

மனிதனது அற்புதச் செயல்கள்

மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கிறான். நீர்வளம் நிலவளம் மிகுந்து, நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய பெரிய நகரங்களையும் கண நேரத்தில் உயிரினமே வாழ முடியாத நாசபூமியாக அழிக்கக் கூடிய அணுக் குண்டை இயற்றியிருக்கிறான். எண்ணிறந்த வகைகளில் இக் காலத்தில் பயனளித்து வரும் மின்சாரத்தையும் ரேடியோவையும் கண்டு பிடித்திருக்கிறான். நாம் பிரயாணம் செய்வதற்குத் தக்க ரெயில், மோட்டார்கார் முதலிய தன்னியங்கி ஊர்திகளை அமைத்திருக்கிறான். மணியொன்றுக்கு நூற்றுக் கணக்கான மைல் தூரம் வானவழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாய விமானங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். எஞ்சினியரிங் துறையில் 'பெனாமா' கால்வாய் முதலிய பிரும்மாண்டமான வேலைகளை இயற்றி முற்றுவித்திருக்கிறான். சில மணிக்கூறுகளில் ஆயிரக் கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டு அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சு யந்திரங்களை நிருமித்திருக்கிறான்.

இவையெல்லாம் அதியற்புதமான செயல்களேயாகும். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலான ஓர் அற்புதத்தையும் அவன் இயற்றியிருக்கிறான். அது யாது என்றால், அவன் பேசக் கற்றுக் கொண்டதும், எழுதக் கற்றுக் கொண்டதும் தான். அவன் ஆதி-மக்கள் நிலையிலிருந்து நாகரிக நிலையை அடைவதற்கு இவை இரண்டும் தான் அதி முக்கியமான காரணங்களாகும். இவ் இரண்டையும் அற்புதமென்று நாம் இக்காலத்தில் எண்ணக்கூடமாட்டோம். அத்தனை சாதாரணக் காரியமாக இவை நமக்கு ஆகிவிட்டன. நமக்கு இவை இயற்கையாய் அமைந்தவை என்றுகூட நினைக்கிறோம். நமது தினசரி வாழ்க்கையில் இவை அத்தனை எளிதான சாமானிய விஷயங்கள்.

கைக் குழந்தைப் பருவத்தில் பேச்சே இல்லாதபடி 'ம்மம்,' 'பப்பப்', 'கக்கக்' முதலிய ஒலிகளை உண்டாக்கி வந்ததையும், பின்பு மழலைப் பருவத்தில் உச்சரிப்புத்

திருந்தாதபடி 'பாச்சி', 'சோச்சி' முதலியவாகச் சொல்லிக் கொண்டிருந்ததையும் நாம் மறந்துவிட்டோம். மேலும் இப்பொழுது எத்தனை எத்தனையோ விரைவாகப் புஸ் தகங்களை வாசித்து முடிக்கிறோம். குழந்தையாக இருக் கும்போது 'ப-ட-ம், படம்' என்று கஷ்டப்பட்டுச் சொற் களைக் கற்று வந்தோம் என்பதும் நமக்கு நினைவில் இல்லை.

பேச்சே இல்லாத காலம்

நமது ஆயுளிலேயே இப்படி இருக்கும்போது, மனித இனத்தின் வாழ்வில் இவ் இனம் ஒரு காலத்தே பேச்சே வழங்காதபடி இருந்தமை நம் நினைவில் இல்லை என்பது வியப்பாகுமா? மக்கள்-இனத்தின் மிகப் பூர்வ சரித்திரத் தில் வெளிச்சமற்ற இருட் பகுதி ஒன்றுண்டு. அப்பகுதியை நமது மனக்கண்ணால் உற்று நோக்குவோமேயானால், அங்ஙனம் பேச்சே வழங்காத காலம் உண்டென்பது விளங்கும். அக் காலத்தே, மக்களுக்குக் கருத்தை வெளி யிட இன்றியமையாதது என்று இப்போது தோன்றும் பேச்சு முறை ஆரம்ப நிலையில்தான் இருந்தது.

பேச்சின் சிறப்பு

ஏதோ ஓர் அரிய தெய்வ சக்தியால் இப்போதுள்ள ரேடியோ, தன்னியங்கி ஊர்திகள், ஆகாய விமானங்கள், தூர ஒலிக்கருவிகள், மின்சார விளக்குக்கள், புகைவண்டி கள், புகைக் கப்பல்கள் எல்லாம் திடீரென்று முற்றும் அழிவுபட்டுப் போயின என்று வைத்துக் கொள்வோம். அப் பொழுது என்னவாகும்? மக்களது இன்றைய முன்னேற்ற நிலையிலிருந்து சில நூறு வருஷங்கள் நாம் பின்வீழ்த்தப் படுவோம். இதைத்தவிர வேறுவகையில் நாம் பாதிக்கப் படமாட்டோம். முற்குறித்தபடி இழந்துவிட்ட எல்லாவற் றையும் பழையபடி மனித-அறிவு இயற்றிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், திடீரென்று பேச்சுவழக்கு என்பது மக்களிட மிருந்து முற்றும் நீங்கிவிட்டது என்று வைத்துக் கொள் வோம். அப்பொழுது எந்த நிலையில் இருப்போம் என்பதை நாம் நினைக்கவும் கூடவில்லை. முற்குறித்த ரேடியோ முதலியவைகளுக்குப் பெயர்களே இருக்கமாட்டாது. நம் மிடமுள்ள புஸ்தகங்கள் அர்த்தமற்றவைகளாய்ப் போய் விடும். பணத்தை எண்ண முடியாது. ஒன்றையும் வாங்க வும் முடியாது; விற்கவும் முடியாது. நண்பர்கள் யாரேனும்

வந்தால், 'வாருங்கள்' என்று உபசாரம் கூறமுடியா. ஒரு வயதுக் குழந்தை எந்த நிலையில் இருக்குமோ, அந்த நிலைக்கு மனித-இனம் முழுதும் வந்துவிடும். நமது முன்னேற்றமெல்லாம் தொலைந்துவிடும். உயிரினங்களுள் தலைசிறந்தது மக்களினம் என்பதற்கு மாறாக, அவற்றுள் அறிவுள்ள காட்டு மிருகத்தின் நிலையை நாம் அடைந்து விடுவோம்.

மேற்கூறியவற்றால், பேச்சுத்தான் அவன் இயற்றியவற்றுளெல்லாம் அதியற்புதமானது என்பது எளிதில் விளங்கும். பேச்சு இல்லையானால், மனித இனத்திற்கு முன்னேற்றம் என்பதே இல்லாமற் போய்விடும். பேச்சுப் பிறந்த காலத்தோடு தான் நாகரிகமும் பிறந்தது.

பேச்சின் இயல்பு

பேச்சுத் தெரியாத காலத்திலுங்கூட மனிதன் மனம் ஒருவாறு தொழிற்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அவன் கருத்துக் கோணல் மாணலாய் ஒருவாறு நிகழ்ந்தது. ஒழுங்குபட்டுச் செல்லாமல் தாறுமாறாகச் சென்றது. பொருள் நிச்சயமில்லாதபடி தடுமாறி நடந்தது. பொருள்-தொடர்ச்சி அமைவதற்கும் சிறிதும் இடமில்லாமலிருந்தது. பேச்சிற் சொல்வழங்கத் தொடங்கிய காலத்திலிருந்து, இச் சீர்கேடான நிலை முற்றும் மாறிவிட்டது. மனிதன் மனம் ஒழுங்காகச் சிந்திக்கும் திறமைபெற்றது. அவனிடம் பொருள் நிச்சயத்தோடு ஆழ்ந்த கருத்துக்கள் நிகழலாயின. இதனால் ஏற்பட்ட நன்மை அளவிடற்கரியதல்லவா? கருத்தும் பகுத்துணர்வும் பேச்சுச் சொற்கள் ஆகமாட்டா. என்றாலும் பேச்சுச் சொற்களிலிருந்து அவற்றைப் பிரிக்க முடியாமற் போய்விட்டது. நம்மால் இப்பொழுது சொற்களின் உதவியில்லாமற் சிந்திக்கவே முடியவில்லை. முடியுமா என்று முயற்சி செய்தால் அது வீணான முயற்சியே. அப்படியானால் பேச்சின் இயல்பு யாது? மக்களின் கருத்து ஒழுங்குபெற நிகழ்வதற்கும், அதனை ஒருவர்க்கொருவர் உணர்த்திக் கொள்வதற்கும் உரிய கருவியே 'பேச்சு' ஆகும்.

கீழ்த்தரமான பிராணிகள் எவ்வாறு ஒன்றையொன்று உணர்த்திக் கொள்கின்றன? இந்த மிருகங்களுக்குச் சிந்திக்கும் ஆற்றல் உண்டா? அவை ஒன்றோடொன்று பேசிக் கொள்ளுமா? 'மிருக பாஷை', 'பக்ஷி பாஷை' என்றெல்லாம் கதைகளில் கேள்விப்படுகிறோம் அல்லவா? அப்பாஷைகள் உண்மையாக உண்டா? இவ்வகையான ஆராய்ச்சியை நிகழ்த்துதல் அவசியமே.

மிருகங்களும் சொற்பொருளும்

சில மிருகங்கள் சைகையைத் தெரிந்து கொள்கின்றன. அடிக்கடி சொல்லும் சில வார்த்தைகளைக் கூட அவை புரிந்து கொள்கின்றன. உண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம். ஹான்ஸ் என்று பெயரிட்டு ஒரு நாயை ஒரு ஜெர்மனியக் குடும்பத்தினர் வளர்த்து வந்தனர். அந்தக் குடும்பத் தலைவன் தனது நாய் ஜெர்மன் மொழியைத் தவிர வேற்றுமொழியை புரிந்து கொள்வதில்லை என்று பெருமையோடு பலர்க்கும் காட்டி வந்தான். 'ஸ்ப்ராச்' என்ற ஜெர்மன் மொழிக்குப் 'பேசு' என்று பொருள். இதைச் சொன்னால் தான் இந்த நாய் மகிழ்ந்து குரைக்குமாம். அப்பொருளேயுள்ள 'ஸ்பீக்' என்ற ஆங்கில மொழியைச் சொன்னால், நாய் சும்மா இருந்து விடுமாம். இந்த நாய்க்கு ஜெர்மன் மொழி புரிந்ததா ?

நாம் வளர்த்துவரும் நாயிடத்தில் இம்மாதிரிப் பரீட்சை செய்து பார்க்கலாம். பார்த்தால், நாய் தெரிந்து கொள்வது நமது தொனியையும் கைக்கரணம் முதலியவற்றையும் தான் என்பது நன்றாய் விளங்கும்.

பேச முடியாத காரணத்தால்தான் மாடு முதலிய மிருகங்களை 'வாய்விடாப் பிராணி' என்று வழங்கி வருகிறோம். கிளி முதலிய சில பறவையினங்கள் பேசுகின்றனவே என்று சிலர் கேட்கலாம். உண்மை. ஆனால், இவைகள் நாம் பேசுவதை அனுசரித்துத் திருப்பிச் சொல்கின்றன. சொல்லுவதன் பொருள் இவைகளுக்குத் தெரியமாட்டாது. கிளிக்குப் பால் வேண்டியிருக்கலாம்; பால், பால் என்று அது கத்தவும் செய்யலாம். ஆனால், தான் கத்தும்போது பால் கேட்பதாக அதற்குத் தெரியவே தெரியாது. உளநூல் அறிஞர்கள் இம்முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

மிருகங்களின் இயற்கைக் கூக்குரல்கள்

நாய் தன் எஜமானனது வீட்டினுள்ளே போக விரும்பித் தன் முன்னங்கால்களால் அடைத்திருக்குங் கதவைப் பறாண்டிக் குரைப்பதைச் சாதாரணமாய்க் காணலாம். இதைப்போலத்தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய மூதாதையர்கள் பேசுவதற்குத் தட்டுண்டு தடுமாறி முயன்று வந்தார்கள். பசி வந்தபோது பால்-குப்பிக்காகக் குழந்தை அழுவதைப் பார்த்திருக்கிறோம். இதைப் பேச்சு என்று சொல்லமாட்டோம். இது

போன்றதுதான் கதவைப் பறாண்டி நாய் குரைப்பதும். இப்படிக் குரைக்கும்போது பேச்சு-உலகத்தின் வாசலருகில் அந்நாய் வந்துவிட்டதென்று சிலர் கருதுவது தவறாகும். இவையெல்லாம் இயற்கையான கூக்குரல்கள் ஆகும். இவற்றிற்கும் மக்கள் பேச்சுக்கும் வெகு தூரம்.

மக்களின் பேச்சுச் சொற்கள் அவர்கள் கருத்தை வெளியிடுவதற்கு அமைந்த சங்கேதக் கருவியே. நாம் 'நாற்காலி' என்று குறிக்கிற பொருளை ஆங்கிலேயன் 'செயர்' என்றும், பிரஞ்சுக்காரன் 'ஷெயிஸ்' என்றும், ஜெர்மானியன் 'ஸ்டூல்' என்றும் கூறுவான். இச் சொற்களுக்கும் பொருளுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. எல்லாச் சொற்களும் இப்படியே. சொற்கள் குறியீடுகளேயன்றி வேறொன்றுமல்ல. இக்குறியீடுகளை அமைப்பதற்கு மக்களின் அறிவு துணையாதல் வேண்டும்.

பேச்சுச்செல்வம்

ஆகவே, பேச்சு என்பது மக்களது அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த செல்வமாகும் என்று நாம் எளிதில் துணியலாம். அன்றியும், அது மக்களினத்துக்கு மட்டுமே ஏகவுரிமையாக உள்ளதென்பதும் நாம் நன்குணரலாம். விலை மதிக்க முடியாத இப்பரம்பரை யுரிமைதான் நம் மக்களினத்தவர்க்குச் சிருஷ்டிகளில் தலைமைப் பதவியை அளித்திருக்கிறது.

2. பேச்சும் மொழியும்

பேச்சின் வரலாறு

பேச்சு எப்படி உண்டாயிற்று? இதைக் குறித்துப் பல கொள்கைகள் உள்ளன. அவைகள் எல்லாம் ஊகமே என்பதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். எப்படிப் பேச்சு உண்டாயிற்று என்பதை உறுதியாய்க் கூறுவது இயலாத காரியம். ஆனால், என்ன நெறியிலே அது பெருகி வந்திருக்கிறது என்பதை நாம் ஒருவாறாக அனுமானித்தல் கூடும். மனிதன் எப்போதும் தன் இனத்தோடேயே கூடி வாழ்ந்துவரும் இயல்புடையவன். ஆதலால், அவன் தன் இனத்தாருக்குத் தன் உணர்ச்சியையும், தன் விருப்பத்தையும் தெளிவாகத் தெரிவிப்பதற்கு அடிக்கடி அவசியம் நேரிடும். அங்க சேஷ்டிதங்களாலும், வாய்மூலமான கூக்குரல்களினாலும் தனது விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, ஆமோதிப்பு முதலியவற்றை, சிறு குழந்தைகள் இன்று காட்டுவதுபோல, அவன் காட்டி வந்தான். அவனைச் சூழ்ந்திருப்பவர்கள் அவனுடைய சேஷ்டிதங்களையும் ஒலிகளையும் சந்தர்ப்பம் பற்றிப் பொருள் தெரிந்து கொண்டார்கள். 'ஆம்' என்று பொருள்படும் குரலோசையையும், 'இல்லை' என்று பொருள்படும் குரலோசையையும் அவர்கள் வேறு பிரித்து உணர்ந்து கொள்ள முடிந்தது. நோவினைக் காட்டும் ஒலியோசையையும் அவர்கள் வேறு பிரித்துத் தெரிந்து கொள்ளுதல் எளிதாயிற்று. முதலாவதாக, அங்க சேஷ்டிதங்கள் தான் முக்கியமாகக் கையாளப்பட்டு வந்தன. அவைகள் இன்னும் மறைந்து போய்விடவில்லை. 'வேண்டாம்' என்பதையும், 'வேண்டும்' என்பதையும் தலை - ஆட்டத்தின் பேதத்தால் நாம் இன்றும் உணர்த்தி வருகிறோம். இதற்குமேற்பட்ட நிலை ஒன்றும் சீக்கிரத்தில் வாய்த்தது. சில பொருள்களும் பிராணிகளும் அவற்றிற்கே தனித்து உரிய சில ஒலிகளைக் காட்டுகின்றன. இந்த ஒலிகள் அனுகரிக்கக் கூடியவையாக இருந்தன. இந்த அனுகாரம் அவற்றின் மூல ஒலிகளைத் தோற்றுவிக்கும் பிராணிகள் முதலியவற்றைக் குறிப்பவையாகக் கொள்ளப்பட்டன. உதாரணம் காகம். பல்வேறு அனுகரணச் சொற்கள் இவ்வாறாக உண்டாயின. எல்லா மொழிகளிலும் இவ்வகைச் சொற்கள் உண்டு.

வண்டுகளின் ரீங்காரமும், பாம்புகளின் 'சீத்' என்னும் ஒலியும், நீரின் 'சலசல' ஓசையும் இதற்கு உதாரணங்களாம்.

மாக்ஸ்முல்லர் முதலியோர் ஆராய்ச்சி

மாக்ஸ்முல்லரும் வேறுசில ஆசிரியர்களும் இவ்விரு வகைச் சொற்களால் எழுந்த கொள்கைகளைக் கேலிசெய்து இகழ்ந்தனர். வியப்பிடைச்சொல் முதலியவற்றிலிருந்து பேச்சு உண்டாயிற்று என்பதை அவர்கள் 'பூபூ' கொள்கை என்றும், அனுகரண ஓசையிலிருந்து வார்த்தைகள் உண்டாயின என்ற கொள்கையை 'பௌபௌ' கொள்கை என்றும் அவர்கள் வேடிக்கையாகக் குறித்தனர். இக் கொள்கைக்கு மாறாக ஒவ்வொரு வஸ்துவிற்கும் தனித்துரிய இயற்கை யோசையொன்று உண்டென்று அவர்கள் கூறினர். வெண்கலத்தின் 'கணீர்' என்ற ஓசை முதலியவற்றை உதாரணமாகக் காட்டினார்கள். இதிலிருந்து இவ் இயற்கை ஒலியின் அடியாகவே வார்த்தைகள் தோன்றின என்று ஊகம் செய்தார்கள். முதலிரண்டு கொள்கைகளை ஆதரித்தவர்கள் இப் புதுக் கொள்கையை 'டிங் டாங்' கொள்கை என்று கூறிக் கேலிசெய்து வந்தார்கள், மாக்ஸ்முல்லர் இக்கொள்கையை விரைவில் கைநழுவவிட்டுவிட்டார். ஒரு கொள்கையையும் உறுதியாகத் தெளிவுபடுத்த முடியாது என்ற காரணத்தால் சொற்களின் தோற்றம் பற்றிய இவ் ஆராய்ச்சி பயனற்றது என்ற முடிவுக்கு வந்தனர்.

மேற்குறித்தன போன்ற கொள்கைகளைப் பரிகசிப்பது எளிது. ஆனால் அவைகளை முழுவதும் ஒதுக்கிவிடுவதும் அறிவுடைமையாகாது. எஸ்பெர்சன் கூறுவது போல அவற்றிலெல்லாம் சில உண்மைகள் இருக்கலாம். பேச்சு முதன் முதலில் வந்த பல்வேறு வழிகளில் மேற்குறித்தனவும் ஒரு சில ஆகலாம்.

மொழித் தொடக்கம்

மிகப் புராதன காலத்தில் ஒருவன் மற்றொருவனிடம் தன் கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுதற்கு எடுத்துள்ள முதல் முயற்சிகள் எத்தன்மையவாயினும் சரி; அம் முயற்சிகள் தான் இவ்வுலகில் பேச்சின் தொடக்கமாகும். ஆனால், இப் பேச்சு - முயற்சியை மொழியெனக் கருதிக் கொள்ளுதல் கூடாது. இரண்டும் வெவ்வேறாகும். மொழி மிகமிகப் பிற்பட்ட காலத்தில்தான் உருவாதல் கூடும். பேச்சு வெகு காலமாக வழக்கத்தில் வந்து, சாதாரணக் கருத்துக்களை

யெல்லாம் வெளியிடுவதற்குத் தக்க பேச்சு வடிவங்கள் பலபலவாய் நிரம்பி, இவ் வடிவங்களும் நீண்ட காலமாய் வழங்கிப் பேசியவுடன் பலரும் பொருள்தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டபின்தான், மொழி என்பது தொடங்குதல் இயலும். மழை பெய்கிறபோது நீர்த் துளிகளை நாம் ஆறு என்றோ, ஓடை என்றோ, சொல்ல மாட்டோம். அவைகள் நிலையான இடத்தில் ஒன்றுகூடி நெறிப்பட்டு ஒழுகும்போதுதான் 'ஆறு' என்று சொல்லுகிறோம். இதுபோலவே பேச்சின் வடிவங்கள் நிலைப்பட்ட தன்மையை யடைந்து, அவை கூடித் தொடர்ந்து நிகழும் போதும், தனித்து நிகழும்போதும் குறிப்பிட்ட நியமங்களுக்கு அல்லது விதிகளுக்கு உள்ளடங்கி ஒழுகும் வரையிலும் மொழியென்பது அமையவில்லை. எனவே, 'மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்' என்று பரஞ்சோதி முனிவர் கூறியது உண்மையில் முன்பின் முரணாம். மொழி என்ற அளவில் அது இலக்கண விதிக்கு உட்பட்டுத்தான் இருக்கும். டாக்டர் ஏ.எச். கார்டினர் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை நன்றாகக் குறித்திருக்கின்றார். 'பேச்சின் மூல அளவை சொல்; மொழியின் மூல அளவை வாக்கியம்' என்று இவர் கூறினார். சொற்கள் அமைந்த காலத்துப் பேச்சு நிகழ்தல் இயலும். ஆகவே, பேச்சு என்பது சொற்களால் ஆகியது. இச் சொற்கள் ஒரு நெறிப்பட்டு வாக்கியமாய் அமையும் நிலை வந்த பிற்பாடுதான் மொழி தோன்றுதல் இயலும்.

எழுத்தின் தொடக்கம்

பேச்சிற்குப் பேசுபவன் ஒருவன் வேண்டும்; கேட்பவன் ஒருவன் வேண்டும். இவ் இருவரும் நேருக்கு நேராகப் பன்னூறு ஆண்டுகளாய்ப் பேசிவந்தனர். பிற்பாடு யாரோ ஒருவன் குறியீடுகளால் பேச்சை எழுதி அமைப்பதைக் கண்டுபிடித்தான். இதுமுதல் ஒரு புதுயுகம் ஆரம்பித்து விட்டது. பேச்சு ஒரு நிலையான வடிவத்தை அடைந்தது. பேசுபவன் ஒருவன் வேண்டும் என்ற நியதி இல்லாமற் போய்விட்டது. பேசும் சமயத்தில்தான் அது பொருளுணர்த்த வல்லதாயிருந்த நிலைமையும் மாறிவிட்டது. அதன் ஆயுள் வலுத்துவிட்டது. எப்போது வேண்டுமானாலும் அதனை வழங்கலாம். கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து தேசத்தை ஆட்சி புரிந்து வந்த **சாமட்டிக்கஸ்** என்ற அரசனிடம் கிரேக்கர்கள் சிலர் போர் வீரர்களாய் அமர்ந்திருந்தனர். ஒருகால் அவர்கள்

ஆபு ஸிம்பல் என்ற தெய்வத்தின் மகோன்னதமான கோயிலுக்குச் சென்று, அங்கிருந்த பிரதிமையொன்றின் முட்டுப் பிரதேசத்தில் தாம் வந்ததற்கு அடையாளமாகச் சில வரிகள் கீறி வைத்தனர். இவ் வரிகள் அமைந்து பல நூற்றாண்டுகள் ஆனபோதிலும், அவற்றிலுள்ள எழுத்துக்கள் எழுதிய காலத்து இருந்தன போலவே இப்போதும் தெளிவாய்ப் புலப்படுகின்றன. இதுபோன்ற கல்வெட்டுக்களில், எழுத்துக் கலையின் தொடக்கத்தை நாம் பார்க்கிறோம்.

முன்னோரின் ஞாபகசக்தி

எழுத்தினால் விளைந்துள்ள நன்மையை அளவிட்டுரைக்க முடியாது. இதற்கு முன், ஞாபகத்தைத்தான் நம் மூதாதையர்கள்முற்றும் நம்பவேண்டியிருந்தது. முற்காலத்தாரது ஞாபகசக்தி அதிக ஆச்சரியகரமாயிருந்தது. வடமொழியிலுள்ள வேதம் முழுதும் தலைமுறை தலைமுறையாகப் பன்னூறாண்டுகள் ஞாபகத்தில் போற்றி வந்தது இங்கே குறிக்கத் தக்கது. இக் காரணத்தாலே 'எழுதாக் கிளவி' என இவ்வேதம் நம்மவர்களால் குறிக்கப்படுகிறது.

குறுந்தொகை என்ற சங்க நூலில்,

> படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
> **எழுதாக் கற்பின்** நின்சொ லுள்ளும்
> பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
> மருந்து முண்டோ மயலோ இதுவே (156)

என வருகிறது. இங்கே 'எழுதாக் கற்பு' என்பது வேதமாகும். சிறப்பாக அதர்வண வேதம் உணர்த்தப்படுகிறது. ஞாபகசக்தியின் பேரெல்லையை, அதன் மூலமாக வேதத்தைப் போற்றி வந்த முறையால் நாம் அறியலாம்.

ஞாபக சக்தியின் குறைகள்

ஆனால், ஞாபகசக்தி எத்தனை சிறந்ததாயிருப்பினும், அதை நம்மால் ஓரளவிற்குத்தான் பயன்படுத்த இயலும். முற்றும் அதையே நம்பி வாழ்தல் இயலாது. அறிவுத் துறைகள் பலவாக விரிந்துவிட்டன. தனி மனிதனுடைய ஞாபகமோ சுருங்கிய அளவிலேயே பயன்படத் தக்கது. இந்த சக்தி மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு, ஒரு மனிதன் ஆயுளிலும் பருவத்துக்குப் பருவம் வேறுபடுவது. இதனைப் பலவகையான கோளாறுகள் பீடித்து விடுவதுண்டு. இங்ஙனம் பீடிக்கப்பட்டால், இது சிறிதும் நம்பத் தகாததாய்ப்

போய்விடும். ஒரு காலத்தில் நிகழ்ந்ததை அக்காலத்தவர் அறிவர்; அவர்க்கு அடுத்த காலத்தவர் ஞாபகத்தில் வைப்பர். பிற்காலத்தார் மறந்தே விடுவர். பூர்வ சரித்திர ஆராய்ச்சி செய்துதான் அவர்களால் அறியமுடியும். ஒரு நிகழ்ச்சியை அது நிகழ்ந்த காலத்திலுள்ளவர்கள் குறித்தெழுதி வைப்பாராயின், அந் நிகழ்ச்சி மக்கள் மனத்தினின்றும் நழுவி விடாமலிருப்பதற்கு ஒரு வழி ஏற்பட்டதாகும்.

எழுத்துக் கலையும் அறிவு வளர்ச்சியும்

எழுத்துக் கலை தோன்றிய பின்தான், அறிவு பரவி வரலாயிற்று. இதன் சிறப்பை உணர்ந்தே, 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று நம்மக்கள் போற்றி வரலாயினர். எழுத்துத் தொழிலாளர் நாட்டில் வழங்கிவந்த கர்ணபரம்பரைச் செய்திகளைச் சுறுசுறுப்புடன் தொகுத்து, அவற்றை ஓலை, கடுதாசி முதலியவற்றில் எழுதி வைத்தனர். இதனால், அச் செய்திகளுக்கு அறுதியான வடிவமும் நிலைபேறும் உண்டாயின. இவ்வாறு அமைந்த வடிவங்கள் பிற்காலத்தார்க்கெல்லாம் நீடித்த பயன் அளித்தன. சொற்களின் வடிவங்களும் இதற்கு முன் இல்லாத தனிப்பட்ட ஒரு சிறப்பை அடைந்தன. வாக்கியத்தின் உண்மை வடிவமும் முக்கியமாகக் கருதப்பட்டுப் போற்றப்பட்டது. நிலைபேறான இலக்கியம் தோன்றுவதற்கு இப்பொழுதுதான் இயன்றது.

3. சொல்லின் ஒலி வடிவும் வரி வடிவும்

இது ஒரு இலக்கணப் புதிர் என்று பலரும் கருதலாம். பலரும் நூல்கள் எழுதுகின்றார்கள். ஒரு சிலர் சாதாரணப் பேச்சு வழக்கைக் கைவிட்டு உயரிய செந்தமிழ் நடை என்று கருதி, பொதுப்பட விளங்காத சொற்களை வழங்கி; நூல்களை எழுதுகிறார்கள். மேலெழுந்த கேள்வி இதைப் பற்றியதா?

வேறு சிலர், எழுதுவது ஒரு வடிவாய் இருக்க, சொல்வது வேறு ஒரு வடிவில் சொல்கிறார்கள். உதாரண மாக, 'பத்மநாபன்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இது பதுமநாபன் என்றும், பத்பனாபன் என்றும், பற்ப னாபன் என்றும் பலபடியாகச் சொல்லப்படுகிறது. இங் ஙனமே, பலன் என்ற சொல்லைப் பழம் என்று சொல்கி றோம். இதுபோன்ற வடிவ பேதங்களைக் குறிப்பதா மேல் தந்துள்ள கேள்வி?

நான் இங்கே மனத்திற் கொண்டது இரண்டாவது வகைக் கேள்விகளைப் பற்றியதுதான். பழம் என்பது சரியா, பலன் என்பது சரியா என்றால், இரண்டும் சரிதான். பலன் வடமொழிச் சொல்; பழம் அச் சொல்லின் தமிழ்த் திரிபு.

ஆனால், நாம் இதை நன்றாய் உணர்ந்து கொள்ள வில்லை. நமது நண்பர்களில் ஒரு சாரார் ஃபலம் முதலிய வடமொழி ஒலிகள் தமிழர்கள் உச்சரிக்க முடியாது என் றும், அதனால் பழம் என்று திருத்திக் கொண்டார்கள் என்றும் கூறுவர். இன்னும் சிலர் 'ழ' என்பது தமிழுக்கே உரிய ஒலி, ஆதலால் பழம் என்பதுதான் சரியான மூல வடிவம், பலன் என்பது, இதை வடமொழியாளர்கள் நூதனமாகப் புகுத்திக்கொண்ட புதுமொழி என்று கூறு கிறார்கள். இவ்வகையான மொழிச்சண்டை மிகவாகப் பரவியிருக்கிறது. இது சொற்கடன் பற்றிய வியவகாரம். இதைப் பற்றி நாம் இங்கே சிந்திக்க வேண்டிய அவசிய மில்லை. இரண்டும் சரி என்ற பழைய முடிவே நமக்குப் போதுமானது.

சில தினங்களுக்கு முன்னர், பெரியாழ்வார் திருமொழியில், **'சீரொன்று தூதாய்த் துரியோதனன் பக்கல்'** (176—பெரியாழ்வார்) என்ற அடியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்த அடி எளிதானது. பொருளில் மயக்கம் யாதும் கிடையாது. இருந்தாலும் ஏதோ ஓர் பிழை இருக்கிறது என்று மட்டும் தோன்றிக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று முறை வாசித்த அளவிலே இவ்வடியில் மோனை இல்லை என்பது புலப்பட்டது. மோனையை ஏற்கக் கூடியதாய் உள்ள சொற்களில் துரியோதனன் என்பது ஒன்றுதான் இருந்தது.

ஆகவே, துரியோதனன் என்பது திரியோதனன் என்று கண்டேன். பின்னர், பெரியாழ்வார் திருமொழி ஓலைச் சுவடிகளை ஒத்திட்டுப் பார்த்தபோது, மூன்று பிரதிகளில் 'திரியோதனன்' என்ற பாடமே அகப்பட்டது. இவ்வழக்கு முற்காலத்து நூல்களில் பல இடங்களிலும் காணலாம். தற்காலத்திலும் கூட ஒரு சிலர் திரியோதனன் என்று கூறுகிறார்கள். பெரியாழ்வார் 'திரியோதனன் பக்கல்' என்றுதான் அருளிச் செய்திருக்க வேண்டும். திரியோதனன் என்ற தமிழ்ப் பாடம் பிழை என்று கருதி, வடமொழி வல்லவர்கள் 'துரியோதனன்' என்று திருத்திவிட்டார்கள்.

மக்கள் பேசும் மொழி

இதனால் சாதாரண மக்கள் பேசும் மொழியை அல்லது சொல்லை ஒதுக்கிவிடுதல் கூடாது என்பது நன்றாகப் புலப்படுகிறது. இன்னும் ஓர் உதாரணம்: 'கல்யாணம்' என்ற சொல்லைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இதை நமது சமூகத்தில், பாமர மக்கள் 'கண்ணாலம்' என்று கூறுவார்கள். சென்னை நகரப் பிரதேசங்களில் இச்சொல்லை அடிக்கடி கேட்கலாம். நமது தேசீய கவிபாரதியும், **'பிறன் கண்ணாலம் செய்துவிட்ட பெண்ணை'** என்று பாடியுள்ளார். இந்தச் சொல் பாரதியோடு நிற்கவில்லை. அவர்கட்கு முன்பு பெரியாழ்வாரும் அவருடைய திருமொழியில் (295) **'பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து'** என்று அருளிச் செய்திருக்கிறார். (பெரியாழ்: 252; நாச்சியார்: 615 முதலியன பார்க்க) இவற்றால் ஒரு காலத்தில் இச்சொல் பண்டித பாமரர் என்ற வித்தியாசமின்றி எல்லாராலும் வழங்கப்பட்டது விளங்கும். பெரியாழ்வார் போன்ற பெரியோர்கள் வழங்கிய சொல்லைப் பிழை என்று யாரும் கூறத் துணிய மாட்டார்கள்.

மேற்காட்டிய உதாரணங்களால், ஒரு காலத்து மக்கள் பேச்சு வழக்கில் வழங்கி வரும் சொற்களே அக்காலத்துத் தோன்றிய நூல்களிற் பெரும்பாலும் கொள்ளத்தக்கன என்று அறியலாம்.

ஆனால், சிற்சில நியாயங்களைக் கவனிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். சாதாரணமாக நூல்கள் எழுதுவோர் அறிவாற்றலில் சிறந்தவராகவும், தாம் எடுத்துக் கொண்டதை அல்லது செய்வனவற்றைக் கவனத்துடன் செய்து வருபவர்களாகவும் இருப்பார்கள். அன்றியும், பேசும்போது இருப்பதைக் காட்டிலும், பொதுப்பட எழுதும்போது அதிகக் கவனத்துடன் எழுதுவார்கள். தவிர, சாதாரணமாகப் பேசும் பேச்சைக் காட்டிலும், நூலில் எழுதுபவை மிக உபயோகமானவையாய் இருக்கும்; மக்கள் மனத்தைக் கவரக் கூடியவையாகவும் இருக்கும். பேச்சு வழக்கில் ஒன்றுக்கும் பயன்படாத விஷயங்களைக் குறித்து இலக்கணத்தைப் பொருட்படுத்தாது பேசுவார்கள். ஆனால், மக்கள் எழுதுவதில் பயன் சிறிது அளவாவது இருக்கும். இலக்கணப் பிழை இல்லாதபடி எழுதுவார்கள். இக் காரணங்களால் எழுதுவதை மாதிரியாகக் கொண்டு, பேச்சு வழக்கு நிகழ வேண்டும் என்று யாரும் பொதுப்பட எண்ணுவார்கள். 'பேச்சு வழக்கு சரியா, இல்லையா?' என்பதை மதிப்பிடுவதற்கும் எழுத்து வழக்குத்தான் உதவுவது. இந்தக் கருத்து சாதாரணமாக எல்லோர் உள்ளத்திலும் எழக் கூடியதே. இது ஓர் அளவு உண்மைதான்.

ஆனால், வேறு சில விஷயங்களை நாம் இங்கே கவனிக்க வேண்டும். பொது மக்களுடைய பேச்சு வழக்கின் சரித்திரத்தை நோக்கினாலும், தனி மனிதன் பேச முயலும் சரித்திரத்தை நோக்கினாலும் முதல் முதல் ஏற்படுவது பேச்சு வழக்கில் உள்ள மொழிதான். இதற்குப் பிற்பாடுதான் எழுத்து வழக்கில் உள்ள மொழியானது ஏற்படுவது கூடும். நம்மில் ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு முன்பே பேச்சை உணர்ந்துகொள்ளுகிறோம். அப்படியே எழுதுவதற்கு முன்பே பேசக் கற்றுக் கொள்ளுகின்றோம். நாம் வாசித்துப் பேசுவதைக் காட்டிலும் அதிகமான மொழிகளைக் கேட்கிறோம். நாம் எழுதுவதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமாகப் பேசுகிறோம். எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழி காலத்திற்கும், பருவத்திற்கும், நிலைக்கும் தக்கபடி வளைந்து கொடுத்துச் செல்லும் இயல்பை உடையது. மொழி வளர்ச்சிக்கு அதுவே வழிகாட்டியாய் உள்ளது.

4. சொல்லும் மொழியும்

பேச்சு, சொல், மொழி : வேறுபாடு

சாதாரணமாக நான்கு மாதத்துக் குழந்தை 'கா, கூ' என்று சப்தம் செய்வதைப் பார்க்கிறோம். குழந்தை 'பேச்சு'த் தொடங்குகிறது என்று கூறுகிறோம். ஒருவாறு பேச்சுக்குரிய உறுப்புக்கள் தன் வசப்பட்டுத் தன்னை அடுத்து வரும் தாய் முதலியோர் சொல்லும் சொற்களைப் போலத் தானும் சொல்ல முயல்வதை **மழலை** என்கிறோம். இம் மழலையும் திருந்தித் தெளிவாக வார்த்தைகளைத் தனித்தனி வெளியிடும் வல்லமை வந்து அவற்றை உச்ச ரிக்கும் போது **சொல்** என்கிறோம். தான் நினைத்த ஒரு கருத்தை எவ்வகைக் குறையுமின்றி, பிறர் மயங்க இட மின்றி, சொல்லமைதியோடு வெளியிடும் போது அதனைத் **தொடர்** அல்லது **வாக்கியம்** என்கிறோம். இவ்வாக்கியங் களே மூல அளவையாய் ஓர் இனத்தார் வழங்கும் பேச்சை **பாஷை** அல்லது **மொழி** என்று பெயரிடுகிறோம். உதாரண மாக, தமிழ்ச் சொல், ஆங்கிலச் சொல் என்றால், தமிழ் மக்க ளும் ஆங்கில மக்களும் தங்களுக்குரிய பாஷைகளில் வழங்கும் தனிப்பட்ட வார்த்தைகளைக் குறிக்கும். தமிழ் மொழி, ஆங்கில மொழி என்று சொன்னால் அம்மக்கள் பேசிவரும் மாத்ரு - பாஷை அல்லது தாய்மொழியைக் குறிக்கும். பேச்சு, சொல், மொழி என்ற மூன்றினையும் நெகிழ்ந்து பல பொருள்களில் நாம் வழங்கி வந்தாலும், நான் சுட்டியுள்ள வேறுபாடு பயன்படுவதாயுள்ளது. இவ் வேறுபாட்டினை மனத்திற்கொண்டு உரிய பதத்தை வழங்குதல் அவசியமாகும். அப்பொழுது தான் மொழி-ஆராய்ச்சி நன்றாய்ச் செம்மையாய் நடைபெற இயலும்.

சொல்லின் நியதிகள்

பேச்சு - ஒலிகள் சில சேர்ந்தவுடன் சொல்லாகிவிட மாட்டாது. இவை ஒன்றோடொன்று நன்கு பொருந்தி யனவாய் அமைதல் வேண்டும். நமது சரீரத்திலுள்ள எலும்புச் சட்டகப் பகுதிகள் எப்படி ஒன்றோடொன்று தொடர்புற இசைக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படியே சொற்களின் பல்வேறு ஒலியுறுப்புக்களும் தொடர்புற

இசைக்கப்படுதல் வேண்டும். இவ்வகை இசைப்புக்கு 'ஆர்ட் டிக்குலேஷன்' என்று ஆங்கிலத்தில் பெயர். ஒவ்வொரு மொழிக்குமுரிய ஒலிகளைக் குறிப்பிட்ட நியதிகளின்படி புணர்த்தால்தான் சொல்லாக அமையும். தமிழ்ச் சொற்களை எடுத்துக் கொள்வோம். தமிழிலுள்ள ஒலிகளைச் சொல்லாகப் புணர்ப்பதற்குக் குறிப்பிட்ட சில நியதிகள் உள்ளன. 'ஆர்ட்' என்பதிலுள்ள ஒலிகள் தமிழில் உள்ளனவே; 'ஆறு', 'உயிர்', 'நீட்டு' என்ற சொற்களில் இவ் ஒலிகளைக் காணலாம். ஆயினும், இம் மூன்று தமிழ் ஒலிகளையும் சேர்த்துப் படித்தால், அது தமிழ்ச் சொல்லாக அமைவதில்லை. ஏனென்றால், தமிழ்ச் சொல்லுக்குரிய நியதிகளின்படி இவை புணர்க்கப் பெறவில்லை. டகர-ஒற்றோடு யாதொரு தமிழ்ச் சொல்லும் முடியமாட்டாது. இது ஒரு நியதி. இங்ஙனம் பல நியதிகள் உள்ளன.

பேச்சு வழக்கே ஆதாரம்

இந்நியதிகள் எங்கிருந்து பெறப்பட்டன? மொழியை வழங்கும் மக்களினத்தாரது பேச்சு - வழக்கத்தினின்றே (Speech habit) இவை கொள்ளப்பட்டன. இப் பேச்சு வழக்குக்கள் இனந்தோறும் வேறுபடுகின்றன. உலகத்து வழங்கும் மொழிகளும் மிகப் பலவாயின.

உண்மைக்குத் தடை

மொழிகள் கடவுளாலும் முனிவர்களாலும் படைக்கப் பட்டன என்று கருதுதல் நமது தெய்வ பக்தியைக் காட்டுமே தவிர, உண்மையை உணர்த்துவதாகாது. 'இரு மொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவர்' எனவும், 'அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு' எனவும் தமிழ் மொழியின் தோற்றத்தைப் பற்றி வருவன உபசார வாசகம் என்றே கொள்ளத் தக்கன. இவை போன்ற கூற்றுக்களாலும் கொள்கைகளாலும் விளைந்துள்ள தீமைகள் மிகப் பல. ஹீப்ரு மொழியைத் தான் கடவுள் ஆதியில் படைத்தனர் என்று கொண்டு ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலுமுள்ள சொற்களை ஹீப்ரு மொழிச் சொற்களோடு தொடர்புபடுத்த முயன்றனர் சில மொழி-ஆராய்ச்சியாளர்கள். நமது தேசத்தில் 'தேவ பாஷை' என்று வழங்குகிற வடமொழிதான் ஆதியில் கடவுளால் படைக்கப்பட்டது என்று கொண்டு, உலகத்திலுள்ள அனைத்து மொழிச் சொற்களும் வட சொற்களினின்றும் பிறந்தன என்று காட்டுதற்கு முன்வந்த பேரறிஞர்களும் உளர்! டச்சு மொழியாளர் ஒருவர் ஆதாமும்

ஏவாளும் பேசுவதற்குக் கடவுள் தந்த மொழி டச்சு மொழிதான் என்று நிருபித்தனர். டச்சு மொழி அன்று என்பதை ஸர் வால்டர் ராலே தமது 'உலக சரித்திரம்' என்னும் நூலில் நூற்றுக் கணக்கான பக்கங்களில் கண்டன வுரையால் துணிந்தனர். இவைகளெல்லாம் மொழி ஆராய்ச்சிக்குப் பெருந்தடைகளாய் அமைந்துவிட்டன.

சொல் ஒரு குறியீடே

மேற்கூறிய வண்ணம் அமைந்த சொற்கள் கேவலம் குறியீடுகளே (Symbols) என்பதை நாம் நன்றாக மனத்திற் கொள்ள வேண்டும். நாம் 'பசு' என்ற சொல்லை வழங்கு கிறோம். இச் சொல்லிற்கும் இதனால் உணர்த்தப்படும் பிராணியின் இயல்பிற்கும் யாதொரு தொடர்பும் கிடை யாது. இப்பிராணியைக் குறிக்க வேண்டும் என்னும் எண் ணம், பசு என்னும் வார்த்தை, இவ்வார்த்தை உணர்த்தும் பிராணி: இவை மூன்றினையும் முறையே கருத்து, சொல், பொருள் என்று நாம் அழைக்கலாம். இந்த மூன்றினையும் எடுத்துக் கொண்டு ஒன்றோடொன்றிற்குரிய தொடர்பின் இயல்புகளை ஆக்டன், ரிச்சர்ட், மாலிநௌஸ்கி முதலிய மொழி - அறிஞர்கள் மிகவும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய் திருக்கிறார்கள். இவர்களுள் மாலி நௌஸ்கி கருத்தை வெளியிடுவது சொல் என்பதைக் காட்டினும், சொல்லாவது ஒரு செயல்வகை என்பதே அதன் ஆதி நிலையோடு பொருந் தும் என்பர். இதுவே, ஆராய்ச்சி மிக்க அறிஞர்கள் பல ராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை. மனத்தி லெழுந்த உணர்ச்சியைக் கை முதலிய உறுப்புக்களின் செயல்களால் ஆதிமக்கள் பெரும்பாலும் வெளியிட்டனர். இவ்வுறுப்புச் செயல்களோடு அமையாது, வாயினால் கூக் குரலிட்டும் அவர்கள் தம் உணர்ச்சியை வெளியிட்டனர். இக் கூக்குரற் செயல்தான் சொல்லாகப் பரிணமித்தது.

சொல்லும் பொருளும்

சொற்கள் தனித்த நிலையில் பொருள்களை உணர்த் தும் ஆற்றலுடையன ஆகா. கருத்துத் தொகுதி அல்லது வாக்கியமாக அவை அமைந்த இடத்துத்தான் அவற்றிற் குப் பொருள் நிரம்புவது. வாக்கிய அமைதியின்றி, மிகச் சிறுபான்மையாக, மிகச் சுருங்கிய அளவில், சொற்கள் பொருளை உணர்த்தலாம். உதாரணமாக, குழந்தைகள் 'நான் தலை' என்று சொல்வது 'என் தலை' என்று பொருள்படலாம். பேச்சின் ஆதி நிலையிலும் இங்ஙனமே

யாயிருத்தல் வேண்டும். அந்நிலையில் தான் இவ்வாறு பொருள் வருதல் பொருந்தும்.

மொழியின் நியதிகள்

ஒலிகளைக் கண்டபடி சேர்த்தால் எப்படிச் சொல் அமையமாட்டாதோ, அப்படியே வார்த்தைகளை நியதியின்றிக் கண்டபடி சேர்த்தால் வாக்கியம் அமையமாட்டாது. ஆகவே, 'மொழி' அல்லது 'பாஷை' என்ற கருத்தும் பிரயோகமும் அங்கே இல்லை. உதாரணமாக 'மேஜை புஸ்தகம் அன்றி நாற்காலி போடுவதற்கு விளக்கினால்' என்பதில் பொருளில்லை. இவ்வாறு பொருளற்ற சொற்குவியல்களைக் கூறுவதற்குப் பதில், 'இன்று இரவு மழை வரும் என்று நினைக்கிறேன்' என்றால் மொழிக்குரிய இயல்பை உணர்ந்து பேசுதலாகிய ஒரு செயலைச் செய்ததாகும். நம் கருத்துக்களை வெளியிட்டும், பிறர் கருத்துக்களைக் கேட்டும், அச்சிலும் கையெழுத்திலும் உள்ள கருத்துக்களை வாசித்தும், நமது மனத்திலே பல கருத்துக்களைச் சிந்தித்தும், நமது ஆயுளில் ஆயிரக்கணக்கான பேச்சொலிகளைச் செய்து நாம் வாழ்ந்து வருகிறோம். மொழியைப் போல அடிக்கடி நம்மிடம் நிகழ்வது வேறொன்றுமில்லை.

ஆதிமொழி ஆராய்ச்சி

மனிதன் பூர்வத்தில் பேசிவந்த மொழியைத் தெரிந்து கொள்வதற்கு ஓர் எகிப்து அரசன் செய்த முயற்சியைக் குறித்து ஒரு கதை உளது. அவன் ஒரு குழந்தையை அது பிறந்தவுடனேயே காட்டுக்கு அனுப்பி, ஊமையும் செவிடுமாயுள்ளவர்களைக் கொண்டு அதனைக் காப்பாற்றி வளர்த்து வரும்படியாக ஏற்பாடு செய்தான். அக்குழந்தை முழு மனிதனாக வளரும் வரை மக்கள் பேசும் ஒலியையே அவன் கேட்க முடியாதபடி தூரத்தே தனியே அவனை வைத்திருந்தான். பிற்பாடு சிறிது சித்தமிரங்கி அவனோடு விளையாட ஓர் ஆட்டுக்குட்டியை அவனிடம் அனுப்புவதென்று தீர்மானித்து அவ்வாறே செய்தான். சில ஆண்டுகளுக்குப் பின்பு, தான் செய்து வந்த அரிய முயற்சியின் விளைவைத் தெரிந்து கொள்வதற்கு அரசன் எண்ணினான். இதன் பொருட்டு அரச சபை கூட்டப்பட்டது. அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அவனைப் புடைசூழ்ந்து அவனுடைய மந்திரி பிரதானிகளும், மகா ஜனங்களும், அவன் சபையை அலங்கரித்து வந்த அறிவுடைச்

சான்றோர்களும் அமர்ந்திருந்தார்கள். ஒரு சில அறிஞர்கள் குழந்தை-மனிதன் பேசப்போகும் மூல மொழிக்குரிய வாக்கியங்களை விரைவில் எழுதிக் கொள்வதற்காக எழுது கருவிகளுடன் தயாராய்க் காத்திருந்தார்கள். மூச்சுக்கூட விடாதபடி அனைவரும் எதிர்நோக்கியிருந்தார்கள். அப்பொழுது குழந்தை-மனிதன் தன் வாயைத் திறந்தான். அவன் வாயிலிருந்து 'பாஅ' என்ற ஒரேயொரு பேச்சுத் தான் புறப்பட்டு வந்ததாம்.

மொழி இயற்கைப் பிரேரகமா?

யாதொரு மொழியும் மனிதனுக்கு அவனது இயற்கைப் பிரேரகத்தால் (Instinct) உண்டாவதன்று. மொழியை ஒவ்வொருவனும் தனது சொந்த முயற்சியால் புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டியதே. அப்படியானால் குழந்தைகள் அதி தீவிரத்தில் மொழி பேசத் தெரிந்து கொள்கின்றனவே! அது எப்படியென்று கேட்கலாம். அதியற்புதமான விஷயம்தான். மக்களில் ஒவ்வொருவனும், அவன் அறிவாற்றல்கள் உருப்பெற்று வரும் பருவத்தில் பூர்வ மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெற்று வந்த அனுபவங்களையெல்லாம் மின்னல்-வேகத்தில் அடைந்து விடுகிறான். நாகரிகத்தின் மதிப்பரிய பரம்பரை உரிமைகளும் நமது மொழிகளும் நமது கண்முன்னே பரப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வேண்டும்போது, வேண்டும் அளவில், சௌகரியத்திற்குத் தக்கபடி நாம் பெற்றுக் கொள்ளலாம். வாழ்க்கையென்னும் பரிசோதனைச் சாலையில் உற்பத்தியான மொழியிலுள்ள செல்வங்களை ஒருவனும் முற்ற அளந்து கைக்கொள்ள முடியாது. இங்ஙனமே, உலகிலுள்ள நூல் நிலையங்களில் திரட்டிப் போற்றி வைத்திருக்கும் செல்வங்களையும் அளந்து கைக் கொள்ள முடியாது. ஆனால், ஆண்டுகள் செல்லச் செல்ல, நமது மனமும், அறிவும், உணர்ச்சியும், நோக்கம் முதலியனவும் பெருக்கமடைந்து கொண்டே வரும். நமது ஆயுளில் மூன்று வயசுக்கு முன்புள்ள செய்திகள் ஒன்றேனும் நமது ஞாபகத்திலிருப்பதில்லை. ஆயினும், அக்காலத்தில் தான் நாம் மொழியைக் கற்றுக் கொள்வதில் ஓயாது பெரு முயற்சி எடுத்திருக்கிறோம். அது எப்படி முடிந்தது? ஏதோ ஒரு மந்திர ஜால வித்தையினால் முடிந்தது போலிருக்கிறது. இம் முயற்சியின் விளைவுதான் அதியற்புதமான கருவியாகிய மொழி ஆகும்.

மொழி பரம்பரை வரவா?

நமது தாய்மொழி நம் இனத்தவருள் ஒவ்வொரு தலைமுறையினரும் புதிதாகக் கற்றுக் கொள்வதா? அல்லது ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தாயக்கிரமத்தில் அது சித்திப்பதா? அதாவது யாதொரு முயற்சியுமில்லாமல் தானாகவே கிடைத்து விடுவதா? இக் கேள்விகளுக்கு விடை ஓர் உதாரணத்தால் விளங்கும். தமிழ்ப் பெற்றோர்கள் தெலுங்கு தேசத்தில் வெகு காலம் வாழ்ந்து தங்கள் குழந்தையை அங்குள்ள ஒரு தெலுங்குக் குடும்பத்தினரிடம் ஒப்புவித்து விட்டு இறந்து போனார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் குழந்தை எந்த மொழியைப் பேசும்? தமிழா? அல்லது தெலுங்கா? தெலுங்குதான் அக் குழந்தை பேசுமே தவிர, தமிழைப் பேசமாட்டாது. இதனால் மொழியானது தாயக்கிரமத்தில் பரம்பரை பரம்பரையாய் இறங்கி வருமென்பது முழுவுண்மையன்று. ஒவ்வொரு தலைமுறையினனும் தானும் முயன்று புதிதாகத் தேடிக் கொள்ளும் தேட்டமும் மொழியென்பதில் அமையும்.

5. சொல்லின் வளர்ச்சி

சொற்கள் காலப் போக்கில் பெருகுதல்

சொற்கள் நாளடைவில் பெருகாமல் இன்று இருக்கும் அளவிலேயே எப்பொழுதும் உள்ளனவா? நமது முன்னோர்களில் ஒரு சாரார் ஒருவாறாக இக் கேள்விக்கு ஒரு விடை தந்துள்ளார்கள். 'சப்தம் நித்தியம்' என்று அவர்கள் கூறினர். இக் கொள்கை இயற்கையைக் கடந்தது; அறிவிற்கும் அதீதமானது. இதற்கும் தற்கால ஆராய்ச்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. நாம் நமது முறையிலே இதற்கு விடைதேட முயலுவோம். தமிழ் லெக்ஸிகனில் சுமார் ஒரு லட்சத்துப் பதினாயிரம் சொற்கள் உள்ளன. இவை சங்க காலந்தொட்டே இருந்து வந்தனவா? இல்லை என்று எளிதிற் கூறிவிடலாம். சத்தியாக்கிரகம், நவீனகம், அணுக்குண்டு என்பன தற்காலத்துச் சொற்கள். இங்ஙனமே, பத்திரிகை, மின்சாரம், குண்டூசி, பேனா, காகிதம், நாற்காலி, மேஜை முதலியன சில காலத்திற்கு முன் தோன்றியவை. அகராதி என்ற சொல் 16-ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழில் புகுந்தது. தென்னை* 15ம் நூற்றாண்டிலும், பலிசை 9-ம் நூற்றாண்டிலும், தஞ்சை என்ற சோழ ராஜதானிப் பெயரும், பங்களம் என்னும் நாட்டுப் பெயரும் 8-ம் நூற்றாண்டிலும், நான், உன், புத்தகம், போது (பொழுது) 7-ம் நூற்றாண்டிலும், கழகம் 6-ம் நூற்றாண்டிலும் வழக்கில் வந்தவை என்பது ஆராய்ந்து அறியலாம்.

சொற்கள் வழக்கு வீழ்தல்

ஒரு காலத்தில் வழக்கில் இருந்த சொற்கள் பிற்காலத்தில் வழக்கொழிந்து போனவையும் உண்டு. இதற்கு உதாரணமாக, அழன், புழன், என்பனவற்றை உரைகாரர்கள் காட்டுகிறார்கள். ஆகவே, காலதேச வர்த்தமானங்களுக்குப்

---

*பிங்கலநிகண்டுப் பதிப்பில், 'தாழை யிலாங்கலி தென்னையும் தெங்கே' என்று காணப்படுகிறது. ஆனால், ஏட்டுப் பிரதிகளிற் காணப்படும் பாடம் இதுவன்று. 'தாழை நாளிகேரம் தெங்கு' என்பதே. ஒரு பிரதியில், 'தாழை யிலாங்கலி நாளிகேரம் தெங்கு' என்று உள்ளது. தென்னை காணப்படவில்லை.

பொருந்துமாறு புதுச் சொற்கள் பல மொழிகளிற் புகுத லும், பழைய சொற்கள் கழிந்து விடுதலும் மிகச் சாதார ணமாய்க் காணப்படும் நிகழ்ச்சியே. இதனால், ஒவ்வொரு மொழியிலும் சொற்கள் நாளடைவில் பெருகி வந்தன என்பதுவே உண்மையாதல் வெளிப்படை.

இவ்வாறு பெருகிவரும் சொற்கள் அச்சொற்களைப் பேசும் மக்களினத்தவரது சரித்திர வரலாற்றைப் பிரதி பலிக்கின்றன.

தமிழர்களது ஆதி வாழ்க்கை

தமிழ் மொழியின் வரலாற்றால் இதனை விளக்குவோம். ஆதியிலே தமிழ்மக்கள் உலக இன்பங்களில் பற்றுடையவராய் இருந்தனர். காதல், வீரம் இவ்விரண்டினையுமே லட்சிய மாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தனர். புலவர்க ளின் புகழ்ச்சிப் பாடல்களில் ஈடுபட்டு நுகர்ந்தும், பாணர் முதலியோரது இன்னிசையிலே விருப்புற்றுக் கட்டுண்டும், விறலியர் என்ற ஆடற் பெண்களுடைய ஆடற் காட்சி களைக் கண்டு மகிழ்ந்தும், இயற்கைக் காட்சியில் இன்புற் றும் வந்தனர். இவ்வகை வாழ்க்கைக்கு வேண்டும் சொற்கள் சங்க இலக்கியங்களில் நிரம்பியிருத்தலைக் காணலாம். உதாரணமாக, யாழ் என்னும் இசைக்கருவி பற்றி, பச்சை, துளை, போர்வை, கவைக்கடை, திவவு, மருப்பு, நரம்பு முதலிய சொற்கள் பற்பல பெரும்பாணாற்றுப் படையில் உள்ளன. போர்த்துறை பற்றியும், காதல்-துறை பற்றி யும் தமிழ்ச் சொற்கள் நிரம்பியுள்ளமை பிரசித்தமே. உலக இன்பங்களில் நமது மூதாதையர்கள் ஈடுபட்டவர்கள் என்பது,

**மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்து நீ பெற்ற நல்லூ ழியையே (776-782)**

என்று மதுரைக் காஞ்சியில் வருவதனால் அறியலாம். மேற் குறித்த செய்யுளடிகளில் ஒரு வடமொழி போலும் காணப் பெறாமையால், வடநாட்டினரது கலப்பிற்கு முன்புள்ள தமிழ் மக்களிடம் இவ்வகை வாழ்விற்குரிய சொற்கள் நிரம்பியிருந்தன என்று கொள்ளலாம்.

போரினுல் ஆரியர் கலப்பு

ஆனால், தமிழ்மக்கள் லெளகிகத்திலே நெடுங்காலம் மனமழுந்தி யிருந்தனரென்று நினைக்க இடமில்லை. இவர்கள் போர்வேட்கை மிக மிக உடையவர்கள். ஆதலாலே, வட நாட்டுத் தலைவர்களோடும் மக்களோடும் வெகு சீக்கிரத்தில் கலக்கும்படி நேரிட்டது.

ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே

என்று பதிற்றுப் பத்து (11) இப் போர்களில் ஒன்றைக் குறிக்கிறது. ஆரியம், இமயம், குமரி என்ற சொற்கள் போர்களால் கிடைத்த இலாபம்.

சமயத்தால் ஆரியர் கூட்டுறவு

இவற்றால் விளைந்ததைவிட, வடநாட்டினரோடு நட்புரிமை முதலிய கலப்புக்களாற் கிடைத்த இலாபமே அளவிடற்கரியது. அந்நாட்டிலிருந்து க்ஷத்திரியர்களுக்கு முன்பாகவே அந்தணர்கள் தமிழகத்திற்கு வரத் தொடங்கினர். இவர்களது ஒழுக்கத்தையும் வேள்வி முதலியன பற்றிய கிரியைகளின் வைபவத்தையும் கண்டு தமிழ்மக்கள் பெரிதும் ஈடுபட்டுப் பரவசமாயினர். தமிழ நாகரிகமும் ஆரிய நாகரிமும் கலந்து புதியதொரு கலவை நாகரிகம் தமிழ் நாட்டில் விளைந்த சரித்திரம்தான் தமிழர் சரித்திரமாய் அமைந்து விட்டது. பல்வேறு காலங்களில் தமிழில் புகுந்த சொற்கள் இச் சரித்திரத்தை நன்றாக விளக்குகிறது.

வேதமும் வேள்வியும்

முதன் முதலில் அந்தணரது வேதத்தையும் வேள்வியையும் தமிழ் மக்கள் போற்றத் தொடங்கினர். இவ் வேதம் என்றும் அழியாப் பேருண்மைகளைக் கொண்டதெனக் கருதினர்.

பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேதம் நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ அத்தை
.. ..
அந்தி யந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட் டிமையமும் பொதியமும் போன்றே.
(புறம். 2)

இச் செய்யுள் தலைச் சங்கத்து இருந்தார் என்று நம்பப்படும் முரஞ்சியூர் முடிநாகராயரால் பாடப்பட்டது. இங்கே என்றும் நெறி திரியாத நால்வேதமும், அந்தணரது சந்தியா கால வழிபாடும், அவர்கள் வளர்த்துவரும் ஆகவநீயம், காருகபத்தியம், தாக்ஷிணாக்கினியம் என்ற முத்தீயும் கூறப் படுகின்றன. காஞ்சனசிருங்கம் என்று தற்காலத்து வழங் கும் பொற்சிகரத்தினையுடைய இமயப் பெருமலையும் குறிக்கப்படுகின்றது. தமிழ் மக்கள்உள்ளத்திலே வேத நெறி எவ்வளவு ஆழமாய் வேரூன்றிவிட்ட தென்பதை இது விளக்குகின்றது. இதுபோலவே, வேள்வி வளர்த்தலையும் தமிழ் மக்கள் தங்களுக்கு உரியதாகவே கொண்டு விட்டனர். ஓர் அரசன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி என்று அழைக்கப்படுகின்றான். இப்பெயர்,

> **பல்சாலை முதுகுடுமியின்**
> **நல்வேள்வித் துறைபோகிய**
> **தொல்லாணை நல்லாசிரியர்** (759-761)

என்று மதுரைக் காஞ்சி என்னும் பாட்டிலேயே பயின்று வருகிறது. ஆறு அங்கங்களும், வேதங்களும், இருபத்தொரு வேள்வித் துறைகளும், யாகஞ் செய்வோர் போர்த்துக் கொள்ளும் புல்வாய்த்தோற் போர்வையும், அணியும் பூணுநூலும், யாக பத்தினிகள் அணியும் சாலகமும், ஆரண்யப் பசு, கிராமப் பசு என்னும் இருவகைப் பசுக்களினின்றும் கொள்ளவேண்டும் நெய்யும், வேள்வி முடிவில் பேணவேண்டும் விருந்தும் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றிலே (166) மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதனால் பண்டைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் வேள்வி விருப்பமும் நிலைபெற்று விட்டது என்பது புலனாம். இங்கே வடமொழிப் பெயர்கள் பெரும்பாலும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின் றன. வேறொரு புறப்பாட்டில் (224) யாகத்தூணை நடும் இடம் பருந்து வடிவாக அமைக்கப்படல் வேண்டும் என் பதை 'எருவை நுகர்ச்சி' என்று கூறினர். இது ஊன்றிக் கவனிக்கத் தக்கது. வேள்விபற்றிய வடமொழிப் பதங் களையே வழங்கிய இடங்களும் உண்டு. உதாரணமாக, யூபம் (புறம் 15), ஆவுதி (புறம் 15), தித்தியம் (அகம் 361) என்பவற்றைக் காணலாம். தித்தியம் என்பதற்குரிய வட சொல் 'சித்ய' என்பது. இங்ஙனமாக, மக்களது வைதிக கர்மத்திற்கு ஏற்கப் பல வட சொற்களும் கருத்துக்களும் தமிழிற் கொள்ளப்பட்டன. இச் சொற்களையும் கருத்துக் களையும் ஆட்சியிற் கொண்டு வந்து பாடியவர்கள் அந்தண ராகவே யிருக்கலாம். அங்ஙனமாயினும், ஆரிய மக்கள்

கூட்டுறவு மிக நெருக்கமுற்று அந்நிய சொற்களும் கருத்துக்களும் தமிழில் புகுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்பதில் தடையில்லை.

அருகர் முதலியோர் கூட்டுறவு

வைதிக அந்தணர்கள் தமிழ் நாட்டில் முதன் முதற் புகுந்த காலத்திலேயே அருக சமயத்தவரும் பௌத்த சமயத்தவரும் புகுந்து தங்கள் கொள்கைகளைத் தமிழ் மக்கள் மேற்கொள்ளும்படி செய்தார்கள் என்று நினைக்க இடமுண்டு. இவர்கள் தாங்கள் வழங்கிவந்த பாகத மொழிகளைத் தமிழில் கலந்தனர். அருக சமயத்தவர்களின் புராணக்கதை கூடப் புறநானூற்றில் (175) வருகிறது.

விண்பொரு நெடுங்குடைக் கொடிதேர் ஓரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே

என்றதில் வருவது அருக சமயத்தவர் பௌராணிக வரலாறாகும். இது, 'ஓரியர் ஆவார் சக்கரவாளச் சக்கரவர்த்திகள் ரவிச்சாதரரும் நாகரும் என்ப' என்ற பழைய உரைப் பகுதியால் விளங்கும். போக பூமியை அருக சமயத்தவர் உத்தர குரு என்பர். இதுவும் 'வடபுலம்' எனப் பதிற்றுப் பத்தில் (68) குறிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் அருகர்கள் தந்துள்ள பாகதச் சொற்களுக்கு உதாரணங்களாக 'படிமை' (பதிற். 74), 'பாசி', 'ஊசி' (புறம். 229), ஊனம் (பதிற். 67), மட்டம் (பதிற். 42) என்றவைகளைக் காட்டலாம்.

மறுபிறவி பற்றிய கொள்கைகள்

இச் சமயங்களைத் தழுவிக் கொண்ட தமிழ் மக்கள் இவையனைத்திற்கும் பொதுவான சில தத்துவக் கருத்துக்களையும் மேற் கொண்டனர். வினை, கருமம், பழவினை, உயர்நிலையுலகம், துறக்கம், மாறிப் பிறப்பு, இம்மை, மறுமை முதலிய சொற்கள் இதற்குச் சான்று.

இம்மை மாறி மறுமை யெய்தினும்
நீயாகியர் எங்கணவனை
யானாகியர்நின் நெஞ்சு நேர்பவளே

என்ற குறுந்தொகைப் பகுதி இக் கருத்துக்களை உயர்ந்த கவிதையாகச் செய்திருக்கிறது.

அறிவியல் துறைக் கருத்துக்கள்

இங்கே காட்டியவை போன்ற கருத்துக்களோடு வான நூல் முதலிய அறிவியல் - துறைக் கருத்துக்களும் தமிழுலகில் உலவத் தொடங்கின. ஒரு புறநானூற்றுச் செய்யுளில் (229) மேட இராசி, கார்த்திகை நாள், அனுட நாள், புனர்பூசம், பங்குனி மாதம், உத்தரம், மூலம், மிருகசீரிடம் முதலியன வருதலை நோக்கும்போது அதிவிரைவில் இவ் வான நூலறிவை நம் முன்னோர் தேடிக் கொண்டனர் என்று தோன்றுகிறது. இவ் வான நூலறிவை மனை அமைத்தல் (architecture) முதலியவற்றிற்கும் பயன்படுத்தி வந்தனர். நெடுநல்வாடையில் (வரி, 73 முதல்) அரச மாளிகை, அந்தப்புரம், பள்ளியறை முதலியன அமைத்தல் விரிவாய் உணர்த்தப்படுகிறது. இங்கே, தெய்வம், அமயம், அரமியம், உத்தரம், கம்மியன், கிம்புரி, சுதை, மணி, கர்ப்பக் கிருகம், தசம் முதலிய வடசொற்கள் வந்துள்ளன. தமிழ் மக்கள் பெற்றுக் கொண்ட சிற்ப நூலறிவு இச் சொற்களால் நன்கு புலனாகின்றது.

கலப்பு மணம் : சமுதாய ஒற்றுமை

வட நாட்டினர் மிகுதியாய் மேலும் மேலும் வந்து குடியேறத் தொடங்கினர். பிற்காலத்து இறுகிவிட்ட சாதிக் கட்டுப்பாடு சங்க காலத்தே நெகிழ்ந்தே இருந்தது. இதனால் மணவினையில் கொண்டு கொடுத்து இருபெருங் கூட்டத்தினரும் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தார்கள். வடநாட்டு ஸ்மிருதிக் கருத்துக்களையும் தமிழ் மக்கள் வரவேற்கத் தொடங்கினர். அகநானூற்றில் (86) பண்டைக் காலத்து மணவினை நிகழ்ச்சி, கவிதை நயம் தோன்றக் கூறப்பட்டிருக்கிறது. மனையை மாலைகளால் அலங்கரித்தலும், நன்முகூர்த்தம் பார்த்தலும், பிள்ளைப் பேறுடைய சுமங்கலிகள் மணமகளை நீராட்டுவதும், மணமக்கள் சதுர்த்தியறை புகுதலும் இதில் விளங்குகின்றன. முற்கூறிய வான நூலுணர்ச்சி முகூர்த்தம் நோக்குதல் முதலியவற்றிற்குப் பயன்பட்டிருத்தல் வேண்டும்.

அகில இந்திய உணர்ச்சி

இங்ஙனமாக, ஆரிய மக்கள் கூட்டுறவு பெருகப் பெருக, அகில இந்திய உணர்ச்சி நம் மூதாதையர்களுக்கு ஏற்படுவதாயிற்று. 'பொற்கோட் டிமையமும் பொதியமும் போன்றே' என்று வடக்கெல்லையையும் தெற்கெல்லையையும் ஒருசேரக் கூறி, நமது பாரத தேசம் முழுவதும்

ஒன்றாமென்பதைக் குறிப்பித்தனர். இதனால் வடநாட்டு இதிகாச புராணக் கதைகளும் தமிழ் மக்களுக்கும் உரிமையாயின. கதையிலும் களியிலும் கூத்திலும் மகிழ்ந்து வாழ்ந்த தமிழ் மக்களுக்குப் பாரதம் முதலிய வடநாட்டுக் கதைகள் புதியதோர் பொக்கிஷமாக அமைந்தது. இக் கதைகளைப்புறநானூறு, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு முதலியவற்றில் அங்கங்கே காணலாம். தமிழ்ச்-சொல்-தொகுதிக்கு இவற்றால் விளைந்த பயன் அக்குரன், அருந்ததி, அங்கி, அவுணர், அறுமீன், அஞ்சன உருவன், நேமியோர், மாயவன், ஆனிலை யுலகம், இந்திரர், இயக்கன், இராமன், சீதை, ஈரைம் பதின்மர், உமை, உரோகிணி, உவணம், அரக்கர், ஒரு குழையொருவன், வாலியோன், கங்கை, காமன், காலன், காவெரியூட்டிய புகழோன், சோணை, ஞமன், திருமறுமார்பன், துவரை, நந்தர், பண்டரங்கம், பாம்பணைப்பள்ளி அமர்ந்தோன், மணிமிடற்றோன், மழுவாணெடியோன், முக்கட் செல்வன், வடபால் முனிவன், வயக்குறு மண்டிலம், வடமொழிப்பெயர் பெற்ற முகத்தவன், வளிமகன் முதலிய சிறப்புப் பெயர்களும் தொடர்களுமாம்.

உள் நாட்டு வாணிபம்

இவ்வாறு விளைந்த அகில இந்திய உணர்ச்சி உள் நாட்டு வாணிபத்தாலும் வலிமையுற்றது. வாணிகன் (புறம், 134), வாணிகம் (புறம் 208), சாத்து (பெரும்பாண், 80), உல்கு (பெரும்பாண். 81) முதலிய சொற்கள் இதற்குச் சான்று. சாத்து என்ற சொல் ஊன்றி நோக்கத்தக்கது. இது 'ஸார்த்த' என்ற வடமொழியின் திரிபு. உல்கு என்பது 'சுல்கம்' என்ற வடமொழி; சுங்கவரி என்று பொருள். நெடிய வழிகளில் ஒன்று கூடிச் சென்று வாணிகஞ் செய்யும் வணிகர் திரளுக்குச் 'சாத்து' என்று பெயர். வழியிலே காட்டில் காவல் செய்வோர் இவர்களிடமிருந்து சுங்கவரி வாங்குதல் உண்டெனத் தெரிகிறது. உள்நாட்டு வாணிபம் இங்ஙனம் நடந்து வந்ததென்பதற்கு இச்சொல் சிறந்த சான்று. பெரும்பாணாற்றுப்படையில்,

> **சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்**
> **புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து**
> **அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
> **உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்** (78-81)

என வருகிறது. மிரியல்—மிளகு 'பலாப்பழப் பருமனை வாகக் கட்டிய மிளகுப் பொதிகளைக் கழுதைகளின்

கழுத்திலிடுவித்துச் சாத்தோடு வம்பலர் செல்லும் சுங்கவரி வாங்கும் பெரிய வழிகளிலேயுள்ள கவர்தத வழிகளைக் காவல் புரியும்' என்பது பொருள்.

வெளி நாட்டு வாணிபம்

உள்நாட்டு வாணிபம் இங்ஙனமாக, வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கடல் யாத்திரை செய்து வந்து மிளகு வாங்கி வாணிபம் செய்து வந்தனர். இதுவும் சங்க இலக்கியத்தால் புலப்படுகிறது.

> **யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
> **பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
> **வளங்கெழு முசிறி**

என்ற அகச் செய்யுளை (140) நோக்குக. கறி-மிளகு. இங்ஙனம் வாணிகஞ் செய்து வந்தோர் ரோம் நகரத்தார் என்பது, தமிழகத்தில் மதுரை முதலிய இடங்களில் கண்டெடுக்கப் பெற்ற நாணயங்களால் தெரிய வருகிறது. யவனர், மிலேச்சர், எழினி முதலிய சொற்கள் இவ்வெளி நாட்டு வாணிகத்தால் நமக்குக் கிடைத்தன. எழினி என்பது திரை; யவனிகா என்ற வடசொல் மூலமாய்த் தமிழில் வந்தது.

இவ்வாறாகச் சங்க காலத்தில் சொற்கள் பெருகி வந்த தற்கு அக்காலத்துத் தமிழ் மக்களது வாழ்க்கையே பெருங் காரணமாய் அமைந்தது. வடநாட்டு மக்களது கூட்டுறவினாலும், புதுச் சமயங்களைத் தழுவிக் கொண்டதாலும், நூதன அறிவியல்-துறைகளைக் கற்று மேம்பட்டதாலும், பாரத தேசத்தில் வழங்கிய இதிகாசக் கதைகளில் ஈடுபட்டதாலும், உள்நாட்டு வாணிகத்தாலும், அகில இந்திய உணர்ச்சியாலும், வெளிநாட்டு வாணிகத்தாலும் கருத்துக் களும் சொற்களும் பெருகிக் கொண்டே வந்தன. பிற் காலங்களிலும் இங்ஙனமே பெருகி வரலாயின. எல்லா மொழிகளிலும் இங்குக் கூறியவை போன்ற காரணங் களால் சொற்கள் காலகதியில் பெருகி வந்தன என்று எளிதில் அறியலாம்.

6. சொல்லும் பொருளும்

புதிய பொருளுக்குப் புதிய சொல்

சில மாதங்களுக்கு முன்பு கலைச் சொல்லாக்கத்தைப் பற்றிக் கல்வியுலகில் பெரியதொரு விவாதம் நடந்து கொண்டிருந்தது.* ஒரு சாரார் புதிய அறிவுத்துறைப் பொருளைக் குறிப்பதற்குப் பிறமொழிப் பதங்களை எடுத்தாளுதலில் எவ்வகையான தடையும் இருக்கக் கூடாது என்றனர். வேறொரு சாரார் தூய தமிழ்ச் சொற்களைத் தான் நாம் வழங்குதல் வேண்டும் என்றனர். இவ் விவாதம் இன்றும் முடிந்து விடவில்லை. என்றேனும் முடிந்து விடப் போவதும் இல்லை. இது புதிதாக உண்டான ஒரு விவாதமும் அல்ல. தமிழ் மொழியின் தொடக்க நிலையிலிருந்தே எப்பொழுதும் இது உள்ளதுதான். ஆனால், முன்பெல்லாம் கட்சிப் பிரதி கட்சிகள் இல்லை; வாதப் பிரதிவாதங் களும் இல்லை; 'பிற மொழிக் கலப்பினால் நமது மொழி பாழாய்விடும். அதைப் பாதுகாத்தற்குத் தமிழ்ப் பாது காப்புப் படை ஒன்று வேண்டும்' என்று படை திரட்டியதும் இல்லை. எனினும், உள்ளூர, அடிப்படையில் இந்த விவாதம் அமைதியாய் நடந்து கொண்டுதானிருந்தது. நமது தாய்மொழிக்கு மட்டும் இவ்விவாதம் தனி உரிமை யும் அல்ல. வழக்கிலுள்ள எல்லா மொழிகளிலும் இது காணப் படுவதே.

ஒருவர் வியாபாரத் துறையில் இறங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவரிடம் விடுமுதல் அதிகமா யில்லை. தம்மிடமுள்ள கைப்பொருளுக்கு ஏற்றபடி சுருங்கிய அளவில் வியாபாரம் தொடங்குகிறார். இவரிடத்தில் ஐம்பது சரக்குகள்தான் உள்ளன. இவரைச் சுற்றிவாழும் ஜனங்களுக்குத் தேவையோ இருநூறு சரக்குகள். ஒரு குறிப்பிட்ட சரக்கைச் செட்டியாரிடம் கேட்கிறார்கள். அச் சரக்கு அவரிடம் இல்லை. அதைக் காட்டிலும் தம்மிட முள்ள வேறொரு சரக்கு அதிகப் பயனுடையது என்று சொல்லி இச் சரக்கை இவர் கொடுத்து வருகிறார். ஜனங்கள் திருப்தியடையவில்லை. இதைக் கண்டதும் அவர்கள்

---

* இக் கட்டுரை 10—5—47-ல் 'தினமணி'யில் வெளி வந்தது.

கேட்கும் சரக்கு இதுதான்' என்று தம் கடையிலுள்ள பிறி தொரு சரக்கைக் கொடுத்து வருகிறார். ஜனங்கள் திருப்தி யடையாததோடு செட்டியார் மீது மிகுந்த வெறுப் பும் கொள்ளுகிறார்கள். இவர் கடையில் வாடிக்கை வைத்துக் கொள்ளாது வேறு கடைக்கு ஜனங்கள் செல்லுகிறார்கள். செட்டியார் மற்றக் கடைகளோடு சமமாகப் போட்டி போட்டு ஜனங்கள் வேண்டும் சரக்குகளையும் வாங்கி வைத்து அவர்களையும் திருப்திபண்ணித் தனிகராகிறார்.

இவ் வியாபார நிகழ்ச்சி போன்றதே மொழி வர லாறும், சொற்களே சரக்குகள். ஜனங்களின் தேவைதான் புதிய அறிவுத்துறைகள்.

உயிர் : பொருள் வேறுபாடுகள்

ஓர் உதாரணத்தால் இது விளங்கும். உயிர் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இச் சொல் முதல்முதல் மூச்சு என்று பொருள்பட்டது. இதனடியாகப் பிறந்த வினையாகிய உயிர்த்தல் 'மூச்சு விடுதல்' என்று முதல் முதலில் பொருள் கொண்டிருப்பதால் மேற்குறித்தது தான் முதலாவது பொருள் என்பது விளங்கும். பின் மூச்சு விடுவது போன்ற ஓசைக்கு இச் சொல் பெயராயிற்று. 'வள்ளு யிர்த் தெள்விளி' (குறிஞ்சிப்-100) என்ற பிரயோகத்தால் இதனை அறியலாம். பின்பு, இம் மூச்சுக்கும் ஜீவனோடு இருப்பதற்கும் தொடர்பு கண்டமையினாலே 'பிராணன்' என்ற மூன்றாவது பொருள் ஏற்பட்டது. இப் பொருள்:

> **தன்னுயிர் நீப்பினும் செய்யற்க; தான்பிறிது**
> **இன்னுயிர் நீக்கும் வினை**

என்ற திருக்குறளில் (327) காணலாம். இப் பிராணன் உட லோடு அழிந்து போகிறது. உடல் அழிந்த பிற்பாடும் ஏதோ ஒரு தத்துவம் நிலைத்திருக்கிறது என்ற நம்பிக்கை பண்டைக் காலத்தில் எங்கும் பரவியிருந்தது. இப்படி நிலைத்துநின்று உடலுக்கு ஆதாரமாய் அமையும் தத்து வத்திற்கு உயிர் என்ற பெயர் வழங்கப்பட்டது. இத் தத்து வத்தை வடமொழியில் ஆத்மா என்று வழங்குவர்.

> **அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்**
> **தவாஅப் பிறப்புஈனும் வித்து**

என்ற திருக்குறளில் (361) இப் பொருளைக் காணலாம். பிற்பாடு பிராணன், ஆத்மா என்பவைபோல முக்கிய ஆதாரமாய் இருப்பதை உயிர் என்று கொண்டனர்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

என்ற புறநானூற்றுச் செய்யுள் (186) இதற்குச் சான்று. இதற்குப் பின்பு பிராணனையுடைய பிராணிகள் எனப் பொதுவே 'உயிர்' என்ற சொல் பொருள்படலாயிற்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

என்ற குறளில் (260) இப் பொருள் புலனாகின்றது. பிற்பாடு தனிப்பட்ட நூல்-துறைகளுக்கு உரிய பொருள்கள் இச் சொல்லுக்கு ஏற்பட்டன. யோக நூற்குரிய பொருளை முதலில் காண்போம். மூச்சு காற்றுவடிவமாய் இருப்பதாலும், ஜீவதசையில் இருப்பதற்கும் இக் காற்றிற்கும் தொடர்பு இருத்தல் தெளிவாதலாலும், பிறவகைக் காற்றிற்கும் இந்தக் காற்றிற்கும் வேறுபாடு உண்டு எனக் கண்டதாலும் மூச்சுக்குரிய வாயுவுக்கு உயிர் எனப் பெயர் வந்தது. வடமொழியில் இதனைப் பிராணவாயு என்பர். இங்ஙனமே, உடலை இயங்கச் செய்வதுபோல ஒருசில எழுத்துக்களை ஒலித்து இயங்கச் செய்யும் எழுத்தொலிகளுக்கு இலக்கண நூலில் உயிர் எனப் பெயர் வந்தது. வடமொழியிலும் உயிரெழுத்து 'ஸ்வரம்' என்று கூறப்படும்.

ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப

என்ற தொல்காப்பியச் சூத்திரம் (எழுத்து 8) இப் பொருளைத் தெளிவிக்கின்றது.

இங்ஙனமாக, எட்டுவகைப் பொருள்களில் உயிர் என்ற சொல் கால-அடைவில் வழங்கி வந்துள்ளது. இப்பொருள்களிற் பல, அறிவு பெருகப் பெருக அறிவின் இயல்புக்குத் தக்கபடி அமைந்தன. சொல்லைக் கூறிய அளவில் எப்பொருள் கருதப்பட்டது என்பது தெளிவாக இல்லாமையாலும், புதுக் கருத்துக்களுக்கு இன்றியமையாதனவாய் முடிந்தமையாலும், பிற காரணங்களாலும் சில பொருள்களில் வடமொழிச் சொற்களும் கடனாகக் கொள்ளப்பட்டன. பிராணன், பிராணி என்ற சொற்களைக் கல்வியறிவில்லாத சாதாரண மக்களும் வழங்கி வருகிறார்கள். இச் சொற்கள் இப்பொழுது தமிழுக்குச் சொந்தமாய் விட்டன. 'ஆத்மா' என்ற தத்துவச் சொல்லை நாம் கடன் வாங்காமல் முடியவில்லை. அதற்குப் பதிலாக 'உயிர்' என்றதனை வள்ளுவரே வழங்கினும், அவ் வழக்காறு

நிலைத்து நிற்கும் என்று நாம் எண்ணுதற்கு இல்லை. அவ் வடசொல்லைத் தமிழுக்கேற்றபடி திரித்துவழங்கிவருகிறோம் 'ஆத்துமன்' எனவும், 'ஆத்துமம்' எனவும், 'ஆத்தன்' என வும், 'ஆற்பன்' எனவும், 'ஆன்மா' எனவும் பலவேறு வடி வங்களைக் கொடுத்துள்ளோம். இறுதியில் காட்டிய ஆன்மா என்பதுதான் தமிழில் நிலைத்துவிடும் என்று தோன்றுகிறது. இதுவரை அச்சொல்லே நிலைத்து வந்திருக்கிறது. ஆனால், வருங்காலத் தமிழைப் பற்றி ஒன்றும் உறுதியாய்ச் சொல்ல முடியாது. செட்டியார் தமது சரக்குகளைச் செய்தது போல, தமிழ் மொழியும் உயிர் என்ற சொல்லை எவ்வளவு பயன்படுத்தக் கூடுமோ அவ்வளவும் செய்துவிட்டது. ஆனால், 'நாழி முகவாது நானாழி'. செட்டியார் புதுச் சரக்கு களை வாங்கத்தான் செய்தார். அதுபோல, ஆன்மா என ஒன்று உண்டு என்று நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, சொல்லளவிலாவது அதனைக் கடன் வாங்கவேண்டி யதுதான். கடன் வாங்கின அச்சொல்லைத் தள்ளிவிட முடியாது.

அணிகள்

மேலே காட்டிய பொருள்களில் இரண்டு பொருள்களைக் கவனிப்போம். உயிர் போன்ற முக்கிய ஆதாரம் என்ற பொருள்உவமை அணியால் பெறப்பட்டது. உவமையாதற்குப் பொருத்தமுடைமையை, வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென

என்ற குறுந்தொகையாலும் (135),

ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும்என் உயிர்

என்ற கலித்தொகையாலும் (81) நன்றாக அறிந்து கொள்ள லாம். உயிரெழுத்தை உயிர் என்பதும் உவமையாகவே னும் உருவகமாகவேனும் கருதத் தக்கதே. இவற்றால் சொற் களின் பொருள்கள் உவமை முதலிய அணிகள் காரணமாகப் பெருகி வளரும் என்று உணர்ந்து கொள்ளலாம். இது எல்லா மொழிகளிலும் காணப்படுகிற ஒரு பொருட்பேற்று முறையாம்.

உயிர் என்னும் சொல்லுக்குரிய மற்றைப் பொருள்களில் பெரும்பாலானவை உடனிகழ்வு[1] பற்றித் தோன்றியவை.

1. Association

உதாரணமாக, உயிரோடு கூடியது ஜீவ தசையிலுள்ள பிராணி. இதுபோலவே பிற பொருள்களையும் அமைத்துக் காட்டலாம். இவ்வாறு உடனிகழ்வு மூலமாயும் சொற்களுக்குப் பொருள்கள் பெருகும். முதலாவது ஏற்பட்ட மூச்சு அல்லது உயிர்ப்பு என்ற பொருள் இன்னும் வழக்கில் காணப்படுகிறது. அதிலிருந்து மற்றைப் பொருள்களெல்லாம் சூரியனிடமிருந்து கதிர்கள் நானாபக்கங்களிலும் வெளி வருதல்போல வெளி வருகின்றன. இவ்வாறு வருவதைக் கதிரியல்[1] முறை எனக் கூறலாம்.

இவையே அல்லாமல், சொல்லின் பொருள் வேறுபடும் முறைகள் இன்னும் சில இருக்கின்றன. சில உதாரணங்களை வைத்துக் கொண்டு இம்முறைகளைக் கவனிப்போம். 'இந்தப் பசு எவ்வளவு கறக்கும்?' என்ற கேள்வியை நாம் அடிக்கடி கேட்டுவருகிறோம். கேள்வியின் பொருள் விளங்காதவர் யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நமது மூதாதையர்களுக்கு இக்கேள்வியின் பொருள் சிறிதும் விளங்க மாட்டாது. ஏன்? அக்காலத்தில் பசு இல்லையா? என்று சிலர் கேட்கலாம். பசு என்ற பிராணி இருந்தது. ஆனால், அதற்குப் பெயர் பசு அன்று. ஆ அல்லது ஆன் அல்லது கறவை என்ற பெயர்களே அக்காலத்து வழங்கி வந்தன.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

என்ற புறநானூற்றாலும் (9)

கறவை கன்றுகோள் ஒழிய

என்ற நெடுநல்வாடையாலும் (10) இங்கே கூறியதன் உண்மை உணரலாம். இதனால் பசு என்பது நாம் வடமொழியிலிருந்து கடன் வாங்கிய சொல் என்று ஏற்படுகிறது. இச்சொல் 'கட்டு' என்று பொருள்படும் தாதுவின் அடியாகப் பிறந்து, கட்டி வைத்த நாற்கால் பிராணிக்குப் பொதுப் பெயராய் முதலில் வழங்கிற்று. பின், வீட்டில் பழக்கிய பிராணிகளின் பெயராக அமைந்தது. ஐந்து வகையான பசுக்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன: மக்கள், ஆ, குதிரை, வெள்ளாடு, செம்மறியாடு என்பவை. 'பசு' என்ற கருத்திற்கு மாறாக, 'மிருகம்' என்பது காட்டில் திரியும் நாற்கால் பிராணிகளுக்குப் பெயராக வழங்கப்பட்டது. பின்னர், மிருகங்களுக்குப் 'பசு' என்பது பொதுப் பெயராயிற்று. இகழ்ச்சியாக மனிதனையும் ஜீவாத்மாவையும்

---

1. Radiation

இது குறிப்பதாயிற்று. மகாபாரதத்தில் இச்சொல் ஆடு மாடுகளை உணர்த்துகிறது. வடமொழி நூல்களால் அறியப் படும் வரலாறு இதுவே.

தமிழ் நூல்களில் முதல் முதலில் யாகத்தில் பலியிடும் நாற்கால் பிராணியை இது உணர்த்திற்று.

...பசுவேட்டு எரியோம்பும்
சிறப்பர் வாழ் தில்லை

என்பது சம்பந்தர் தேவாரம். பின்னர், பொதுப்பட மாடு அல்லது எருது என்று பொருள்பட்டது. 'தொக்கீர் பசு' என்ற தொடர்க்கும், 'கூடி ஒரு பாகத்தை இழுக்கும் எருது' என்று சிறுபஞ்ச மூலத்தில் (24) பொருளுரைக்கப்படுகிறது. பிற்பாடு 'ஆ' என்ற பொருள் ஏற்பட்டது. ஆசாரக் கோவையில் (65).

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர்

எனவும், சிலப்பதிகாரத்தில் (21,53)

பார்ப்பார் அறவோர்
பசுப் பத்தினிப் பெண்டிர்

எனவும் வருகின்றன. இவ்விடங்களில் ஆவென்பதுவே பொருள். அறிந்தவரை இவைதாம் இப்பொருளில் முதற் பிரயோகங்கள், கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண் டளவில் 'பசு' என்ற சொல் கடன் கொள்ளப்பட்டு, எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'ஆ' என்ற பொருளை இச்சொல் அடைந்திருக்கலாம். சிலப்பதிகாரம் பிற்பட்டது என்பதற்கு இப்பொருளும் ஒரு சான்று.

பசு என்பதற்குரிய இப்பொருள்கள் பொருள்-வரலாற்று முறைகளிற் சிலவற்றை உணர்த்துகின்றன. 'கட்டி வைத்த நாற்கால் பிராணி' என்பதிலிருந்து பொதுவாக மிருகத்தை வடமொழியில் குறிப்பதை நோக்கினோம். இம்முறையைப் 'பொருட்பொதுமை நெறி[1]' என்று கூறலாம்.

பொதுவாக எருதுக்குப் பெயராய் நின்று பின் ஆவுக் குத் தமிழில் வருவதை நோக்கினோம். இதனைப் 'பொருட் சிறப்பியல் நெறி[2]' என்று கூறலாம். இந்த இரண்டு நெறி களும் எல்லா மொழிகளிலும் காணப்படுவனவே.

1. Generalisation
2. Specialisation

பொருட் சிறுமை நெறி

வேறு இரண்டு சொற்களை இனி எடுத்துக் கொள்வோம். 'நாற்றம்', 'இளையர்' என்ற சொற்களே நான் இங்கே கருதியவை. நாற்றம் என்பது முதன் முதலில் நல்ல வாசனைக்குப் பெயராய் இருந்தது.

நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை

என்ற புறநானூற்று அடி (70) இப் பொருளைத் தெளிவிக்கும். தற்காலத்தில் இச்சொல் துர்நாற்றத்திற்குப் பெயராக வழங்குகிறது.

நாற்றங் கேட்டாலும் தின்ன நயப்பதோர்
கூற்றுண்டோ சொலாய் கூற்றுறழ் வேலினாய்

என்ற கம்பர் வாக்கில் (தாடகை. 64) இத் துர்நாற்றமே பொருள். இளையர் என்ற சொல் இளமைப் பருவத்தில் உள்ளவர் என்று பகுதிப் பொருளாகிப் பின் 'ஏவலாளர்' என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் வழங்கிற்று.

யான்கண் டனையர் என் இளையரும்

என்ற புறநானூற்று அடியில் (91) இதுவே பொருள். இவ் இரண்டு சொற்களின் பொருள்களும் பொருள் செல்-நெறி யொன்றை உணர்த்துகின்றன. நல்ல பொருள்களிலிருந்து தாழ்ந்த பொருள்கள் இச் சொற்களுக்கு ஏற்பட்டு விட்டன. இந்நெறியைப் பொருட் சிறுமை நெறி[1] என்று கூறலாம்.

பொருட் பெருமை நெறி

இன்னும் இரண்டு சொற்களை எடுத்துக் கொள்வோம். கழகம், பிள்ளை என்பனவே அவை. சூதாடு களத்திற்கு, 'கழகம்' முதலில் பெயராய் அமைந்தது. 'கவறுங் கழகமும்' என்ற திருக்குறளின் (935) தொடரில் இதுவே பொருள். இச் சொல் தற்காலத்தில் கல்வியாளர் முதலிய மக்கள் கூடிப் பயிலும் சங்கத்திற்கு வழங்குகிறது. 'பல்கலைக் கழகம்' என்று ஸர்வ கலாசாலையை இப்போது வழங்குகிறோம். இப்புதுப் பொருள் தோன்றிப் பல நூற்றாண்டுகள் சென்றிருத்தல் வேண்டும்.

கந்தனை யனையவர் கலைபயில் கழகம்

என்று கம்பர் (நாட்டுப். 48) கூறுவதனால் இது உணரப்படும்.

---

1. Degeneration

பிள்ளை என்ற சொல்லைக் குழந்தைகளுக்கு இப்பொழுது சர்வ சாதாரணமாய் வழங்குகிறோம். இவ்வழக்கு முற்காலத்தில் இல்லை.

குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் (மரபு. 23) இது விளங்கும். முற்காலத்தில் இச் சொல் கமுகு, தெங்கு முதலிய ஓரறிவுயிர்களுக்கே வழங்கப்பட்டது.

இவ்விரு சொற்களும் நாளடைவில் உயர்ந்த பொருள்களைக் குறிப்பன ஆயின. இவ்வாறு குறிக்கும் நெறியைப் 'பொருட் பெருமை நெறி[1]' என்று கூறலாம்.

இங்ஙனமாகச் சொற்களின் பொருள்கள் நாளடைவில் வேறுபட்டு வரும் நெறிகளை நோக்கினோம். இவை எல்லா மொழிகளிலும் காணப்படும் நெறிகளேயாம். சொற்பொருளைக் கால முறைப்படி கூர்ந்து ஆராய்வது மொழி நூலில் வல்லவர் மேற்கொள்ள வேண்டும் கடமையாகும்.

சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருள் என்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றே மலையாத
தண்தாரான் கூடற் றமிழ்.

---

1. Elevation

7. தாய்மொழி

சமுதாயத்தில் தாய்மொழி

தமிழ்க் குடும்பத்திலுள்ள நண்பர் ஒருவர் ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி உள்ளவர். சதா ஆங்கிலத்தில்தான் பேசுவார். இவருக்கு ஏற்றாற்போல் இவருடைய மனைவியாரும் ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். ஆகவே, தப்பித் தவறிக்கூடத் தமிழ் இவர்கள் பேச்சில் நுழைய இடமில்லை. தங்களுடைய அருமைப் பையனையும் ஆங்கில தர்பாரிலேதான் வளர்த்து வந்தார்கள். அவன் பேசுவதும் ஆங்கிலத்தில் தான். தாங்கள் மிக அருமையாய் வளர்த்து வந்த நாயினிடத்துங்கூட ஆங்கிலத்தில்தான் பேசுவது. நாய்க்கு ஆங்கிலத்தில் குரைக்க முடியவில்லையே என்று தம்பதிகளுக்குச் சிறிது வருத்தந்தான்.

இவர்களுடைய பையனுக்குத் தாய்மொழி எது? பெற்றோர்களுக்கு ஆங்கிலத்தைத் தாய்மொழி எனக் கூறுவதில்தான் திருப்தி. உண்மையில் தாய் சொல்லுவித்த மொழியும் அதுதான். பையனுக்கும் ஆங்கிலம் தவிர வேறு மொழியும் தெரியமாட்டாது. என்றாலும் அவன் தாய்மொழி ஆங்கிலம் என்று சொல்ல யாரும் துணிய மாட்டார்கள்.

இம்மாதிரியான ஆங்கில மோகம் பிடித்த குடும்பம் மிக அருகித் தான் இருக்க முடியும். ஆனால், இக்காலத்தில். சமுதாயங்களே பிறழ்ந்து மாறுபடும் நிலைமையில் உள்ளன. தமிழ்க் குடும்பங்களில் பிறந்தவர்கள் இங்கிலாந்து சென்று ஆங்கில மாதரை மணந்து திரும்புவது அடிக்கடி நிகழ்கிறது. இவர்கள் குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆங்கிலம் பேசுவது இயற்கையே. இவ்வாறு கலப்பு மணங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெரும்பாலும் தாய் பேசும் மொழியே சொந்த மொழியாக அமைந்துவிடுகிறது.

மேலே குறிப்பிட்ட இருவகைக் குடும்பங்களையும் கவனித்தால், ஒன்றில் தாய் புதிதாகக் கற்றுச் சொல்லுவிக்கும் மொழி தாய்மொழியாகாது என்றும், மற்றொன்றில் தாயின் குடும்பத்தார் பரம்பரையாகப் பேசும் மொழி தான் குழந்தைக்குரிய தாய்மொழியாகும் என்றும் தெளிவாகிறது.

தாயோடு மட்டும் குழந்தை பழகும் காலம் பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு மேற்படுவதில்லை. இவ்வாண்டுகளிலே அந்தக் குழந்தை கற்றுக் கொள்வதும் மிகச் சொற்பமேயாகும். கொச்சைப் பேச்சுக் களும் 'பாச்சி' முதலிய மழலைப் பேச்சுக்களும் கற்றுக் கொள்ளும். இதற்குப் பின்பு: குழந்தை தன்னோடு பருவத் தால் ஒத்த மற்றைக் குழந்தைகளோடும் பிறரோடுந்தான் பெரும்பாலும் பழகுவது. பள்ளிக்குச் செல்லும் பருவம் முதற்கொண்டு குழந்தை பிறரோடு பேசுதல், பழகுதல்முதலியவற்றிலே தன் நேரத்தில் பெரும் பகுதியைச் செலவிடுகிறது. ஆகவே, தாயானவள் உண்மையில் சொல்லி கொடுப்பது மிகமிகச் சொற்பமே ஆகும்.

இதனால் ஒருவனது பெற்றோரின் குடும்பத்தினர் தலைமுறை தலைமுறையாகப் பேசிவந்த மொழி எதுவோ அதுதான் அவனது தாய்மொழியாகும். இக்கருத்தையே வேறொரு முகமாக நோக்கினால், ஒருவன் எந்தச் சமுதா யத்தின் அங்கமாகப் பிறக்கிறானோ, அந்தச் சமுதாயம் பேசிவரும் மொழிதான் அவனுடைய தாய் மொழியாகும். பெற்றோர்கள் சமுதாயத்தின் பிரதிநிதிகள் என்ற அளவில் தான் தாய்மொழி பற்றிய இவ் விவகாரத்தில் உதவி புரிகிறார்கள். சமுதாயத்தின் அங்கம் என்ற நிலை ஒன்றே முதல் முதலில் ஒருவனுக்கு ஏற்படுவது. பிற்பாடுதான் சமுதாயத்தினின்றும் வேறுபட்ட தனிநிலையை[1] அவன் அடைகிறான்.

இவ்விஷயத்தை இங்கே வற்புறுத்திக் கூறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. தாய்மொழியானது பூர்விகச் சொத்துக்குச் சமமானது. அது பரம்பரைக் கிரமத்தில் தலைமுறை தலைமுறையாக அநுபவிக்கப்பட்டு வருவது. இந்த உண்மையையும், இதனால் பெறப்படும் அநுமான ஸித்தமான பிற உண்மைகளையும் நாம் தெரிந்து கொண்டால், தாய்மொழியின் அமைப்பு முதலியன நமக்கு எளிதில் வெளியாகும்.

பெயர்க் காரணம்

வேறொரு சிறு விஷயம். தமிழ்ச் சமுதாயத்தினர் பெரும்பாலும் மக்கள்-தாயத்தினர். அதாவது தந்தையின் சொத்து மகனுக்குத் தாயமாக இறங்கிவரும். தந்தை வழிக் கிரமம் என்றேனும் மகன்வழிக் கிரமம் என்றேனும்

1. ஒப்பிடுக: From Status to Contract

சொல்லலாம். நமது மலையாள சகோதரர்கள் மருமக்கள் வழியைச் சார்ந்தவர்கள். அதாவது ஒருவனது சொத்து அவனுடைய சகோதரிகளின் குழந்தைகளுக்குத்தான் செல்லும். இக்கிரமத்தை முடிவாகப் பார்த்தால், தாய் வழிக்கிரமம் என்றுதான் இதைச் சொல்லுதல் வேண்டும். இவ் இரு முறைகளில், தந்தைவழிக் கிரமத்தை நாம் சார்ந்தவர்களாயிருந்தும் நமது மொழியைத் தந்தைமொழி என்னாது தாய்மொழி என்று கூறுவானேன்? ஒரு காலத்தில் நாமும் தாய்வழிக் கிரமத்தைச் சார்ந்தவர்களாயிருக்கலாம் என்று நினைக்கலாம். இது தவறென்பது, தாய்வழிக் கிரமத்திற்கு யாதொரு சம்பந்தமும் இல்லாத ஆங்கிலரும்[1] ஜெர்மானியரும்[2] தம் மொழியைத் தாய்மொழி என்றே அழைத்தலால் புலனாகும்.

மொழிப்பற்று ஒன்றே அதன் காரணமாகும். சில உண்மைகளை அது வெளிப்படுத்துகிறது. தாய்க்கும் குழந்தைக்கும் இருப்பதுபோல் அத்தனை நெருங்கிய தொடர்பு, வேறு யாதொன்றும் கிடையாது. இதனால் தான், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள பரஸ்பர அன்பு இணையற்றது. தாய் தந்தை என்ற இருவருள் தாய், பழைமை போற்றும் சமுதாய ஆற்றலாகவும் தந்தை புதுமை விரும்பும் சமுதாய ஆற்றலாகவும் விளங்குகிறார்கள். இங்குக் குறிப்பிட்ட மூன்று விஷயங்களும் தாய்மொழிக்கும் நமக்கும் இருக்கும் அந்நியோந்ய சம்பந்தத்தையும், தாய்மொழி மீது நாம் கொள்ள வேண்டும் மட்டற்ற பேரன்பையும், தாய்மொழியைப் போற்றி வளர்க்குமிடத்து அதன் பழைய மரபு சிதைதல் கூடாது என்னும் கொள்கையையும் நமக்கு வற்புறுத்திக் காட்டுகின்றன. இவ்வுண்மைகளை யெல்லாம் பொதிந்தே 'தாய்மொழி' என்று வழங்கி வரலாயிற்று என்று எண்ணலாம். தாய்மொழி என்று முதல் முதலில் வழங்கினோர் இவ்வுண்மைகளையெல்லாம் ஆழச் சிந்தித்துப் பெயர் அமைத்தனரென்று கூறுதல் மிகையாகலாம். ஆனால் அவர்கள் உள்ளத்தின் அடிப்படையில், இவ்வுண்மைகள் அவர்களும் அறியாதபடி புதைந்து கிடந்ததன் விளைவாக இப்பெயர் தோன்றியிருக்கலாம்.

1. Mother tongue. 2. die Muttersprache.

பூர்வ சரித்திர உண்மை

பெயர்க் காரணம் எப்படியாயினும் இருக்க, பரம்பரைக் கிரமத்தில் தலைமுறை தலைமுறையாக வழங்கி வருவது தாய்மொழி என்றேன். இவ்வாறு சொல்வதால் புதிதாக என்ன தெரிந்து கொண்டோம் என்று நீங்கள் கேட்கலாம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பல நூறு தலைமுறைகளாக, நம் முன்னோர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வருவது நமது தாய்மொழி. ஆதியில் என்ன நிலையிலே நமது மொழி இருந்தது? பின் எவ்வெக்காலத்தில் என்ன மாறுபாடு அடைந்து வந்திருக்கிறது? இம் மாறுபாடுகள் என்ன என்ன காரணங்களால் நேர்ந்தன? இவை போன்ற கேள்விகள் பற்றி நமது மொழியை நாம் ஆராய்ந்தால் நமது தலைமுறையின் தொடக்கம்வரை அதன் இயல்பும் கதியும் நிலைமையும் விளங்கும். மூலத்திராவிட மொழியோடு பெரிதும் நெருங்கிய தொடர்புடையதாய் அம்மொழியின் சீமந்தபுத்திரி என்னும் நிலையில் தமிழ் இருந்தது. பின்னால் ஆரியக் கலப்பும் நாகரிகமும் முதிரவே, தமிழ் மொழி மிகப் பெரியதோர் அபிவிருத்தியடைந்தது. பின்னர், சமயக் கலப்பு ஏற்படவே, பாகதம் முதலிய வேற்று மொழிக் கலப்பினால் வளர்ச்சி யுற்றது. பின்னர் அரசியற் குழப்பங்கள், தெலுங்கு முதலிய பிற மொழியாளர் தொடர்பு முதலியவற்றாலும் தமிழ் மொழி அடைந்த பேத கதிகள் பல. பின் போர்த்துகீயர், பிரேஞ்சுக்காரர், ஆங்கிலர் முதலிய ஐரோப்பியர் கூட்டுறவு, இக் கூட்டுறவினால் நிகழ்ந்த மொழி அமைதி; இத்தனை சரித்திரமும் நமது தாய்மொழியிலுள்ள சொற்களிலும் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. தலைமுறை தலைமுறையாய் வழங்கி வரும் மொழி என்ற மாத்திரத்தில் இங்குக் கூறிய பூர்வ வரலாறு அனைத்தையும் நாம் ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறோம்.

எவ்வகையான வேறுபாடும் இன்றி, தோன்றிய காலத்தில் இருந்தது போலவே தமிழ்மொழி இருந்து வருகிறது என்று கருதுவோர் தமிழ் வரலாறும், தமிழிலக்கிய வரலாறும் அறியாதார் என்றுதான் கூறவேண்டும். ஆதியில் இருந்த கலப்பற்ற தூய நிலைக்கே நமது மொழி பின்னோக்கிச் செல்வதே தக்கதாகும் என்பது, 'இயற்கைக்கு மாறாகச் செல்வதுதான் உயர் நெறி.' என்பவர் கொள்கையோடு ஒக்கும். யாராலும் எவ்வகைக் கழகத்தாராலும் இது செய்யக் கூடியதன்று. சில நூற்றாண்டுகளுக்கு முன்னே,

'இயற்கை நிலைக்குத் திரும்புக' (Return to nature) என்ற கூக்குரலானது ஐரோப்பிய நாடுகளில் கிளம்பி, பலரையும் தன் எளிமையால் மயக்கி, முடிவில் அதன் பொய்மை வெளியாகவே, பரிகாச ஹேதுவாய் மறைந்தொழிந்தது. அரசியலுலகில் இக்கொள்கை ஏற்பட்டது போலவே, மொழிநூல்-உலகிலும் இக்கொள்கை தமிழ் நாட்டில் அங்கங்கே தோன்றியுள்ளது. கொள்கையின் முடிவு எவ்வாறாகும் என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை. தலைமுறை தலைமுறையாக வழங்கியமொழி என்ற அளவில் மேற்கூறியது போன்ற கொள்கைகளால் பாதிக்கப்படாமல் தன் பூர்வ சரித்திரத்திற்கு ஏற்பவே தமிழ் மொழியின் வருங்காலச் சரித்திரமும் நிகழும் என்ற உண்மையானது நமக்கு வெளியாகிறது.

பூர்வார்ஜிதமாயுள்ளமை

இன்னும் ஓர் உண்மையும் இப்பாரம்பரியஉணர்ச்சியினால் நாம் அநுமானிக்கக் கூடியதாக உள்ளது. இவ் உண்மை 'தாயவுரிமை' பற்றிய உதாரணத்தால் நன்கு விளங்குவதாகும். தாய முறையில் இறங்கும் சொத்தைப் பூர்வார்ஜிதம், பிதிரார்ஜிதம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தந்தையால் சம்பாதிக்கப்பட்டுத் தந்தை வழியாக மகனுக்கு வரும் சொத்து, பிதிரார்ஜிதம் ஆகும். வெகுகாலமாக முன்னோர்களால் சம்பாதிக்கப்பட்டுத் தந்தை வழியாக மகனுக்கு வரும் சொத்து, பூர்வார்ஜிதமாகும். மகன் தானே சம்பாதிக்கும் சொத்து, சுயார்ஜிதமாகும். நமது தாய்மொழியிலும் பூர்வார்ஜிதம்போல நமக்கு வந்தவை ஒரு பெரும் பகுதியாகும்.

இந்தப் பூர்வார்ஜிதத்தைச் சிறிது கூர்ந்து பார்ப்போம். அது முழுமையும் நமக்குக் கிடைத்துவிட்டதென்று சொல்ல முடியாது. ஒரு பெரும் பகுதியை நாம் இழந்து விட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும். நம் முன்னோர்கள் ஈட்டிவைத்த இலக்கிய நிதியில் ஒரு பகுதிதான் இப்பொழுது கிடைத்திருப்பது. எத்தனையோ அரிய நூல்கள், காவியங்கள், இலக்கணங்கள், கலைநூல்கள் இறந்துவிட்டன. இவ்வாறு இறந்துபோனது ஓர் ஆச்சரியமும் அன்று. 'சாதலும் புதுவதன்றே' என்றார் ஒரு தமிழாசிரியர். நமது மொழியில் மாத்திரமன்று, பண்டை மொழிகள் பலவற்றினும் இது கேட்கப்படுவதொன்றே. இதற்குரிய காரணங்களும் மிகப் பலவாம். அரசியற் பிறழ்ச்சி,

சமுதாயத்தில் அமைதியின்மை, நூல்களைப் பாதுகாக்கும் வசதிக் குறை, நம்மவர்களின் அஜாக்கிரதை, மதத்துவேஷம். நெருப்பு, வெள்ளம் முதலியன முக்கிய காரணங்களாகும். இக் காரணங்களால் இறந்து போனவை போக, இப்போது எஞ்சியிருக்கும் நூல்கள் தாமும் நம் முன்னோர்களது பெருமையை நன்கு புலப்படுத்துகின்றன. நல்ல இலக்கிய பரம்பரையிலே வந்துள்ளோம் என்று நாம் கர்வங்கொள்ளுதல் முற்றும் தகுதியுடையதே யாகும். நமது தாய்மொழி தலைமுறை தலைமுறையாகத் தக்க அறிவாளர்களால் போற்றப்பட்டு வந்துள்ளதென்று நாம் இறுமாப்புக் கொள்ளலாம். இவ்வகை உணர்ச்சியினால் உண்டாகும் மனவெழுச்சி நமக்கு நிறைந்த செல்வம் அல்லவா? 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்பதன்றோ தமிழர் கொள்கை? இம் மனவெழுச்சி மாத்திரம் அன்று; இறந்துபடாமல் இன்று காறும் நிலைத்துள்ள நூல்களின் அறிவுச் செல்வம்' கலைச் செல்வம், சொற் செல்வம் இவை யனைத்தும் நமக்கு நிலை பேறான செல்வங்களாம். ஆகவே, பூர்வார்ஜித இலக்கியத்தால் நமது தாய்மொழி பெற்றுள்ள செல்வம் மிகப் பெரிதென்றே சொல்லி அமைவோம்.

ஆனால், பூர்வார்ஜித இலக்கியம் அனைத்தும் திடீரென ஒரு காலத்தில் தோன்றியதா? அல்ல. திடீரென ஒரு தலைமுறையாரால் இயற்றித் தொகுக்கப்பட்டதா? அல்ல, ஒவ்வொரு தலைமுறையாரும் அவ்வவர்க்குக் கிடைத்த இடம், பொருள், ஏவல் முதலிய வசதிகளைக் கொண்டு அவ்வத் தலைமுறையில் மேம்பட்டு விளங்கிய லட்சியங்களுக்கேற்ப, இயற்றிச் சேர்த்துச் சேர்த்துத் தொகுத்த தாகும் இப்பூர்வார்ஜிதம். எனவே, ஒவ்வொரு தலைமுறையும் பூர்வர்ஜிதம் ஈட்டுவதில் ஏதேனும் ஒரு வழியில் உழைத்து வந்திருக்கிறது. இம் முறையிலே, நமது தலைமுறைக்கு முந்திய நமது தந்தையின் தலைமுறையினரும் உழைத்து வந்திருக்கிறார்கள். பிற்பட்டுக் கூறிய இவ்வுழைப்பின் பயனைத்தான் இன்று நாம் பெற்றுள்ள பிதிரார்ஜிதம் என்று கொள்ளலாம். இப் பிதிரார்ஜிதத்தின் தன்மை என்ன?

பிதிரார்ஜிதத்தின் தன்மை

முதலாவது, இப் பிதிரார்ஜித உழைப்பின் காலத்தை வரையறுத்துக் கொள்வது நலமாகும். இவ்விருபதாம் நூற்றாண்டுக்கு முன்புள்ள ஐம்பது ஆண்டுகளைப் பிதிரார்ஜித காலம் என்று கொள்ளுவோம். இக்காலத்திலே தமிழ் மக்களில் சிறந்தவர் பலர் வாழ்ந்து நூதன முறையில்

தமிழ்த் தொண்டுகள் புரிந்து வந்தனர். பழைய முறைகளைப் பின்பற்றி உழைத்து வந்தவர்களுள்ளும் சில பெருமக்கள் இருந்தனர். உதாரணமாக, ஸ்ரீ ஆறுமுக நாவலர், ஸ்ரீராம லிங்க சுவாமிகள், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் களைக் கூறலாம். இவர்கள் தமிழின் தொன்மைத் தன்மைக் கேற்ப, பழைய மரபினைப் பின்பற்றிப் புதிய நூல்கள் பல இயற்றி வந்தார்கள். ஆனால், புதுமுறையில் நூல்கள் இயற்றியவர்கள் ஆங்கிலம் கற்றறிந்தவர்கள். இவர்கள் மேல்நாட்டு இலக்கிய முறைகளையும் விஞ்ஞான சாஸ்திரக் கருத்துக்களையும் தமிழ்நாட்டில் பரப்புதற்பொருட்டு நூல் இயற்றினார்கள். கெமிஸ்தம் (Chemistry) முதலிய விஞ் ஞான நூல்கள் தமிழில் தோன்றின. மனோன்மணீயம் முதலிய நாடகங்கள் புது முறையில் அமைக்கப்பட்டன. நூதனமாய்க் கதைகள் எழுதப்பட்டன. புதுமுறையில் கல்வி பயிலுவதற்கேற்ற பல கருவி நூல்கள் இயற்றப்பட்டன.

இவற்றால் நமது தாய்மொழிக்கு ஏற்பட்ட நன்மைகள் மிகப்பல. உண்மையான சாஸ்திர அறிவு பெருகுவதற் குரிய கருவியாய் நம் மொழி அமைய வேண்டும் என்ற கருத்து எழுந்தது. இக்கருத்துக்கு ஏற்ப, தாய்மொழியும் பக்குவப்பட்டு வரலாயிற்று. புது வாழ்க்கையாலும், புது நாகரிகத்தாலும், புதுச் சொற்களாலும் நமது மொழி வளரலாயிற்று. உதாரணங்கள் தருகிறேன். நாற்காலி என்ற சொல் நான்கு கால்களையுடைய ஆசனவகை வழக் கத்தில் வந்த பிற்பாடு தமிழ் மொழியில் புகுந்தது. மேஜை என்ற சொல் போர்த்துகீசிய மொழியிலிருந்து தமிழில் வந்தது. இங்ஙனமே, சில நூறு சொற்களையேனும் எடுத்துக் காட்டுதல் கூடும்.

சுயார்ஜிதத்தின் தன்மை

கடைசியாக நமது தலைமுறையார் ஈட்டிவரும் சுயார் ஜிதத்தைப் பற்றிக் கூறுவேன். ஐரோப்பியரது விரிந்த கலை ஞானமும், விஞ்ஞானவுணர்ச்சியும், இலக்கிய முறைகளும் நமது மொழியில் வேரூன்றத் தொடங்கிவிட்டன. எல்லா ரிடத்தும் அறிவுத்தாகம் தோன்றி ஒரு நூதனக் கிளர்ச் சியை உண்டுபண்ணிவிட்டது. நமது பாரத தேசத்திலுள்ள பிற மொழிகளோடு போட்டியிட்டு நல்ல இலக்கியக் கதைகளை இயற்றுவதில் நம்மவர்கள் முனைந்திருக்கிறார்கள். அந்நிய மொழியில் உண்டான நல்ல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து அறிவையும் இலக்கிய வுணர்ச்சி

யையும் வளர்ப்பதற்கு முயன்று வருகிறார்கள். விஞ்ஞான நூல்கள் நல்ல முறையில் வெளிவர ஆரம்பித்துவிட்டன. நமது தாய் மொழியைத் தேசாபிமானம் என்கிற புதுக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். இங்ஙன மாகப் பல திறப்பட்ட இலக்கிய முயற்சிகளால் நமது மொழி வளர்ந்து வருகிறது.

இந்தச் சுயார்ஜித முயற்சிகளில் இடையூறுகள் இல்லை என்று சொல்ல முடியாது, நமது தாய்மொழி அவை யனைத்தையும் வெற்றிகொண்டு மேன்மேலும் அபிவிருத்தி யடைந்து, 'என்றுமுள தென் தமிழா'கப் புத்துயிர் கொண்டு வழங்கி வருவதற்கு ஒவ்வொரு 'தமிழ் மகனும் ஓயாது உழைத்து வரல்வேண்டும்.

8. ஆதாரமொழித் திட்டம்*

ஆதாரமொழியில் பயிற்சி

நமது அரசாங்கத்தார் நமது தமிழ்மொழியை மக்கள் எளிதில் நன்கு கற்றுக் கொள்வதற்குண்டான நெறிகளை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். சில காலத்திற்கு முன் கல்வி யிலாக்காவிலிருந்த ஹெர்பர்ட் சாம்பியன் (Herbert Champion) என்பவர் Basic English என்ற ஆதார-ஆங்கிலப் பயிற்சி நெறியைக் கடைப்பிடித்து, ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதி, நமது தமிழ்மொழியையும் எளிதாகக் கற்பிக்க முயன்றனர். இந்நிலையில் அந்நிய நாடுகளில் எவ்வாறு இந்நெறியானது பயன்பட்டு வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

எதற்காக, யார் பொருட்டாக, இந்நெறி அந்நிய நாடுகளில் கையாளப்பட்டு வருகிறது? இந்த வினாவிற்கு நாம் எளிதிலே விடை கூறிவிடலாம். ஆங்கில மொழியை அதனை அறியாத அந்நியன் ஒருவன் எளிதிலே அதிக காலம் செலவிடாமல் கற்றுக் கொள்வதற்காகத் தான் இம்முறை ஏற்பட்டுள்ளது. ஆகவே, ஆங்கில மக்கள் மன நிலையைக் கவனத்திற் கொள்ளாது, அந்நியனுடைய மனநிலையைக் கவனத்திலே கொண்டதுதான் இந்நெறி. இந்த அந்நியன் எந்தச் சொற்களை முதலாவது கற்றுக் கொள்ளுதல் வேண்டும்? மிக மிகச் சாதாரணமாக வழங்கும் சொற்களைத்தான் என்பது தெளிவு.

தார்ன்டைக் கணக்கு

இவ்வாறு கூறுவதனால் சிறு வார்த்தைகள் என்றேனும், எளிய வார்த்தைகள் என்றேனும் நாம் கொள்ளக் கூடாது. அடிக்கடி வழங்கப்படும் சொற்கள்தான் மிக மிகச் சாதாரணமானவை. இச்சொற்கள் யாவை? இவை இன்னவை என்று அகராதியில் தெரிய முடியாது. இலக்கணமும் காட்டுவதில்லை. உண்மையில் சில காலத்திற்கு முன்வரை ஒருவருக்கும் இச்சொற்கள் இன்ன என்று திட்டமாகச் சொல்ல முடியாதிருந்தது. இவற்றைக் கண்டு

---

*P.B. பல்லார்ட் எழுதிய கருத்தும் மொழியும் (Thought and Language) என்ற நூலைத் தழுவி எழுதியது.

பிடிக்க ஒரே வழிதான் உண்டு. அது யாது? அது சொற்களை எண்ணிக் கணக்கிடுவதே. இந்த வழியைப் பற்றி ஒருவரும் சிந்தித்ததே இல்லை. ஜனசங்கியைக் கணக்கு எடுப்பதுபோல் மொழிக் கணக்கும் எடுக்க வேண்டியதாயிருந்தது. இங்கிலாந்தில் இக்கணக்கு எடுத்ததாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் ஒரு முறைக்கு மேலாகவே இச்சொற் கணக்கு எடுக்கப்பட்டது. கொலம்பியா ஸர்வகலாசாலையில் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியரான தார்ன்டைக் (E.L. Thorndike) என்பவர் எடுத்த கணக்குத்தான் மிகவும் திட்டமானது என்று சொல்லப்படுகிறது. ஒரு சிலரை உதவியாகக் கொண்டு, ஐம்பது, அறுபது லக்ஷம் வார்த்தைகளை நாற்பத்தொரு வகையான மூலங்கள் அல்லது துறைகளிலிருந்து எடுத்துப் பாகுபடுத்திக் கணக்கிடுகிற அருஞ்செயலை இவர் செய்து முடித்தனர். முப்பது லக்ஷம் சொற்கள் ஆங்கில விவிலிய நூலிலிருந்தும் ஆங்கில இலக்கியங்களிலிருந்தும் எடுக்கப்பட்டன. மற்றவை, கலாசாலைப் பாடப் புத்தகங்கள், சிறுவர்க்குரிய சிற்றிலக்கியங்கள், தினசரிப் பத்திரிகைகள், கடிதங்கள், வாணிபம், விவசாயம் முதலிய துறைகளுக்குரிய புத்தகங்கள்: இவற்றிலிருந்து கொள்ளப்பட்டன.

ஆசிரியர் சொற்புத்தகம்

இவ்வாறாக, இச்சொற்களின் பரப்பு மிக விரிவுபட்டதாயுள்ளது. இப்பரப்பையும் வழக்கு மிகுதியையும் அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு சொல்லிற்கும் செலாவணி எண் கொடுக்கப்பட்டது. இந்தச் செலாவணி எண் சொல்லின் முக்கியத்தைக் காட்டுதற்கு வேண்டும் அறிகுறியாய் உள்ளது. 'பரப்பு' (Range) என்றது மேலே குறித்த நாற்பத்தொரு வகையில் எத்தனை துறைகளில் ஒரு சொல் வழங்குகிறது என்ற கேள்விக்கு விடையாக உள்ளது. 'வழக்கு மிகுதி' (Frequency) என்பது எவ்வளவு அடிக்கடி ஒரு சொல் வழங்குகிறது என்ற கேள்விக்கு விடையாக உள்ளது. டாக்டர் தார்ன்டைக் எடுத்துள்ள சொற்கணக்கு 1921-ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது. இச்சொற் கணக்கு நூலுக்கு 'ஆசிரியர் சொற்புத்தகம்' (Teacher's Word Book) என்று பெயர். இதில் மிக முக்கியமான பதினாயிரம் ஆங்கிலச் சொற்கள் அகராதி முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லுக்கும் அதனையடுத்துச் செலாவணி எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவுமன்றி, எல்லாவற்றிலும் முக்கியமான 500

சொற்களின் பட்டிகை ஒன்றும், அவற்றிற்கு அடுத்தபடி முக்கியமான 500 சொற்களின் பட்டிகை ஒன்றும், இப்படியாக முறைப் படுத்தப்பட்ட ஐந்து பட்டிகைகளும் இந்த ஆசிரியர் தந்துள்ளார்.

'ஆசிரியர் சொற்புத்தகம்' அமெரிக்காவில் பல இடங்களிலும் கையாளப்பட்டு வருகிறது. அந்த நாட்டிலே அடிக்கடி குடியேறும் அந்நிய மக்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பது ஒரு நித்தியப் பிரச்னையாய் நேர்ந்து விட்டது. இதற்கு, முற்குறித்த சொற்புத்தகம் பெரிதும் பயன்படுகிறது. ஆங்கிலத்தில் மட்டும் அன்றி, பிரஞ்சு முதலிய மற்ற மொழிகளுக்கும் இச் சொற்கணக்கு முறை கொள்ளப்படலாயிற்று. ஆங்கில மொழியைப் பிரஞ்சுப் பையனுக்குக் கற்றுக் கொடுப்பதும் ஆங்கிலப் பையனுக்குப் பிரஞ்சு மொழியைக் கற்றுக் கொடுப்பதும் ஒரே வகையான முயற்சியே என்பது சொல்லவேண்டா.

ஆக்டென் முயற்சி

இங்கிலாந்தில் இச் சொற்கணக்கு முறை இன்னும் கைக் கொள்ளப்படவில்லை. ஆசிரியர் ஸி.கே. ஆக்டென் (C.K. Ogden) என்பவர் தம்முடைய ஆதார ஆங்கிலத்திற்காக (Basic English) ஒரு சொல்தொகுதி அமைத்துள்ளார். இத் தொகுதி சரியான முறை பற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறிக் கொள்ளுகிறார்; ஆனால், விவரங்கள் ஒன்றும் தரப்படவில்லை. இவ் ஆதார-ஆங்கிலத்தை நாம் ஊன்றி நன்றாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், அந்நியர்கள் நன்மைக்காக, ஆங்கில மொழியையே எளிமையாக்க இம்முறை முயலுகிறது. அன்றியும், இதனால் விளையும் நன்மைகள் மிகப் பேரளவிலுள்ளன என்றும் சொல்லப்படுகிறது. இச் சொல்-தொகுதியில் எண்ணூற்றைம்பது வார்த்தைகளே உள்ளன. இச் சொற்களையெல்லாம் ஒரு கடிதத்தின் பின்புறத்தில் எளிதில் எழுதி வைத்துக் கொள்ள முடியுமாம். இவற்றில் அறுநூறு சொற்கள் பெயர்ச் சொற்கள்; பதினெட்டுச் சொற்கள் வினைச் சொற்கள்; இந்த வினைச் சொற்களை ஆக்டென் 'இயற்றுதற் கருத்தா' (operators) என்று குறிக்கிறார். இருபத்தொரு சொற்கள், இடைச் சொற்கள்; இவற்றை 'நெறி காட்டி' (directives) என்பர். எஞ்சியன அடைமொழிகள் அல்லது உரிச் சொற்களாம். இந்தச் சிறிய சொல்-தொகையைக் கொண்டு, ஆங்கில

மொழியின் மரபு கெடாது, சாதாரண விஷயங்களை யெல்லாம் உணர்த்தி விடமுடியும் என்று ஆக்டென் கூறுகிறார். இவர் சொற்களை வடித்தெடுத்த முறைக்கு 'Panoptic Elimination' என்று பெயர்.

மேற்குறித்தபடி இச்சொல்-தொகுதி மிகச் சுருக்கமாயிருப்பதுடன், இலக்கண விதிகளும் மிகமிகச் சுருக்கமாகக் குறுக்கப்பட்டுள்ளது. ஆங்கில இலக்கணம் முழுமையும் ஒன்பது சிறிய பக்கங்களில் அச்சிடப்பட்டுத் தரப்பட்டுள்ளது.

பதினெட்டு வினைச் சொற்களைக் கொண்டு எவ்வாறு சாதாரணக் கருத்துக்களையெல்லாம் வெளியிட முடியும்? இது நாம் வியத்தற்குரியதுதான். இப்பதினெட்டு வினைகளோடு பல சொற்களைச் சேர்ப்பதனால் இது இயலுவதாகிறது. இச் சொற்கள் நெறி காட்டிகளாகவும் பெயர்களாகவும் இருக்கும். ஓர் உதாரணம்: ஆங்கிலத்தில் put என்ற வார்த்தையை எடுத்துக் கொள்வோம். இதனோடு in என்ற நெறி காட்டியைச் சேர்க்க, உள்புகுத்துதல் என்று பொருள் படும். எனவே, அதேபொருளுடைய 'insert' என்ற சொல் அநாவசியமாகின்றது; எனவே, அது நீக்கப்பட்டுள்ளது. இங்ஙனமே, பல வினைச்சொற்களும் நெறி காட்டிகளும் சேர்ந்து பல சொற்களை ஒழித்துவிட உதவுகின்றன.

டாக்டர் ஜான்ஸன் (Dr. Johnson) ஆங்கில அகராதி இயற்றியவர். இவர் இவ் அகராதியின் முன்னுரையில், வினைச் சொற்களோடு இடைச் சொற்களைச் சேர்த்து, வினையின் பொருளை மாற்றுவது மிகச் சாதாரணம் என்றும், இச்சேர்க்கை அந்நியர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதில் பேரிடையூறாக உள்ளது என்றும் எழுதினார். இங்ஙனம் எழுதியது 18-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில். தற்காலத்தில் இச் சேர்க்கை மிகமிக அதிகப்பட்டு விட்டதென்று லோகன் பியர்ஸல் ஸ்மித் (Logan Pearsall Smith) கூறுகிறார். நூதன ஆங்கிலப் பேரகராதியில் 'take up' என்பதற்கு 52 பொருள்களும், 'set up' என்பதற்கு 67 பொருள்களும் காணலாம்.

ஆதாரச் சொல்-தொகுதியிலுள்ள சொற்களின் பொருளைத் தனித்தனியாக ஒருவன் அறிந்து கொண்ட மாத்திரையில், பின்னர் அந்தச் சொற்களின் சேர்க்கையினால்

உண்டாகும் பொருளை அறிந்து கொள்ளுவான் என்று ஆக்டென் கருதியிருக்க வேண்டும். இது சிறிதும் சரியன்று. ஒருவன் put, up, with என்ற வார்த்தைகளின் பொருளைத் தனித்தனியே அறிந்து கொள்ளலாம். ஆனால், put up with என்ற தொடரின் பொருளை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும் என்பது புலப்படவில்லை. இத் தொடரில் அடங்கிய தனித்தனிச் சொற்களுக்கும் தொடரின் பொருளுக்கும் தருக்க முறையான இயல்பு யாதொன்றும் இல்லை. ஜல வாயு, பிராணவாயு என்ற இரண்டும் சேர்ந்து ஜலம் உண்டாகிறது. இவ் வாயுக்களின் தனித்தனி இயல்புகளை உணர்ந்து கொண்டவன் ஒருவன் ஜலத்தின் இயல்பை அறிந்து கொள்வான் என்று சொல்வதை ஒப்புவார்களா? இதுபோலத்தான் உள்ளது ஆக்டென் கூறிய கொள்கை. சேர்க்கைத் தொடரினது இயல்பு அதிலடங்கிய தனித் தனிச் சொற்களினின்றும் ஒருவகையாலும் அறியக் கூடாத தாம். ஆங்கிலத்திலுள்ள 'right away' என்ற தொடர் 'உடனே' என்று பொருள்படும். இது, முதல் முதலில் அமெரிக்காவில் வழங்கிய ஒரு தொடர். சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்ற கதாசிரியர் ஒருமுறை ஓர் அமெரிக்க விடுதிக்குச் சென்றபொழுது, அவரிடம் 'உடனே அவர் சாப்பிடுகிறாரா'? என்று கேட்பதற்கு right away என்ற தொடரை விடுதிக் காரன் உபயோகித்தான். கதாசிரியருக்கு விளங்கவில்லை; திகைத்துவிட்டார். சிறிது நேரம் ஆலோசித்து, தாம் இருக்குமிடத்திலேயே உணவு படைக்க வேண்டுமென்று கூறினாராம். இப்படியிருக்க, சொற்சேர்க்கையின் பொருளை எளிதில் உணர்ந்து கொள்ளலாம் என்பது உண்மையா குமா? ஆழ்ந்து யோசித்தால், புதுச் சொற்களைக் கற் பதைவிட மேற்குறித்தபடி சொற்சேர்க்கையின் பொரு ளைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் கஷ்டமென்றே சொல்லவேண்டும். மிக்க மயக்கத்திற்கும் இடமாக உள்ளது. ஆங்கிலத்தைத் தாய்மொழியாக உடையவர்கள் இச் சொற் சேர்க்கையின் பொருளை, பொது ஜனங்களு டைய வழக்கிலிருந்து தெரிந்து கொள்ளுகிறார்களே அல் லாமல், ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாக உணர்ந்து பின் கூட்டிச் சேர்த்துப் பொருள் பண்ணிக் கொள்வ தில்லை. அந்நியனை இவ்வாறு கூட்டிச் சேர்த்துப் பொருள் பண்ணிக் கொள்ளும்படியாகச் செய்வது அவனைத் தவறான வழியில் செலுத்துவதாகும்.

ஆதாரச் சொல்-தொகுதி எளிமையாயுள்ளது என்றது கருத்துப் பிழையென்பதை இதுவரை காட்டினோம்.

இலக்கண விதிகள் சுருக்கமாக அமையும் என்பதும் பிழையே யாகும். உதாரணமாக 'er' என்ற ஆங்கில விகுதி, செய்பவன் அல்லது செய்வது என்ற பொருளில் வரும் என்று கூறுகிறார். dresser, boiler முதலிய சொற்களில் இந்த விதி பொருந்தாததாகிறது. இங்ஙனமே 'un' என்பது எல்லா இடங்களிலும் வழங்கத்தகும் எதிர்மறை—உபசர்க்கம் என்று ஆக்டென் கூறுகிறார். இதுவும் பிழையாம். uncomplete, unregular என்ற சொற்களை நாம் இதுவரை கேள்விப்பட்டதில்லை. உண்மையில் ஆதார மொழித் திட்டத்தினால் ஒரு மொழி கற்க எளிதாய் விடும் என்று சொல்வதெல்லாம்; அதைப் பெரிதும் பிழைபட உணர்ந்து கொள்வதாய்த்தான் முடிகிறது.

ஆக்டென் செய்துள்ள இம்முயற்சி நன்முயற்சியே. அவருடைய பேராற்றலை நாம் வியக்கத்தான் வேண்டும். ஆனால், இரண்டு விஷயங்களில் அவர் தவறிவிட்டார். ஒரு மொழியைக் கற்பிக்கும் முறையை எளிதாக்குவதும், அம்மொழியையே சுருங்க அமைப்பதும் வெவ்வேறானவை. இது ஒன்று. மற்றொன்று அவருடைய திட்டம் மிக எளிதென்று அவர் கருதிக் கொண்டது. விதிகளையெல்லாம் ஒரு நாளிலும், மொழியை ஒரு வாரத்திலும், பிரதிகூலமான சூழ்நிலை யிருக்குமானால் ஒரு மாதத்திலும், கற்றுக் கொள்ளுமளவு இம் மொழித்திட்டம் எளிதாக்குகிறது என்று எழுதுகிறார். ஒரு வாரத்தில் ஒரு மொழியை ஒருவரும் கற்றுக் கொள்ள முடியாது. ஆதார மொழி என்பதில் ஓர் அமிசத்தை அக்கால வரையறைக்குள் தெரிந்து கொள்ளலாம். ஆனால், மொழியைப்பற்றி ஓர் அம்சத்தையுங்கூட அதற்குள் கற்றுக் கொள்ளவே முடியாது.

வேறு சிலர் முயற்சி

வேறு சிலரும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். டாக்டர் மைக்கேல் வெஸ்ட் (Dr. Michael West) இந்தியாவிலும், ஹாரோல்டு பால்மெர் (Harold Palmer) என்பவர் ஜப்பானிலும் ஆதார மொழித் திட்டம் வகுக்கத் தொடங்கினர். இவர்கள் ஓரளவில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று நாம் சொல்லலாம். ஆனால் இவர்கள் கைக்கொண்டது ஆக்டென் செய்த புரட்சி முறையன்று. யாதொரு புதுமொழியும் இவர்கள் இயற்ற முயலவில்லை. இவர்கள் செய்ததெல்லாம் முக்கியமான அம்சங்கள் இவை,

முக்கியமல்லாத அம்சங்கள் இவை என்று வரையறுத்துக் கொண்டதேயாகும். இவர்கள் முயற்சி அமெரிக்காவில் செய்த முயற்சியைக் காட்டிலும் மிகக் கடுமையானது. அமெரிக்காவில் ஆங்கிலச் சூழ்நிலையில், ஆங்கிலம் அந்நியருக்குக் கற்பிக்கப்படுகிறது. இந்தியா முதலிய அந்நிய நாடுகளில், அந்நிய சூழ்நிலையில், அந்நியருக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. சூழ்நிலை மிகவும் முக்கியம் என்பது சொல்லவேண்டா.

சூழ்நிலையின் முக்கியம்

உண்மையை நோக்குமிடத்து ஒரு மொழியைக் கற்பதற்கு, வேற்று மொழி பேசும் மக்களோடு தொடர்பு சிறிதும் இல்லாமல், அந்த மொழியையே கேட்டு, அந்த மொழியையே பேசி, அந்த மொழியிலே சில காலமேனும் எண்ண முயல்வதுதான் தக்க முறையாகும். மொழியைக் கற்பதற்குச் சிறந்த வழி அந்த மொழியிலே வாழ்வது தான்.

மொழியை எளிதாக்குவதற்கு நாமாக முயற்சி செய்ய வேண்டும் அவசியமில்லை. காலகதியில் இயற்கையே இவ்வேலையைச் செய்துவருகின்றது. ஒருவேளை நாம் இயற்கைக்கு அனுகூலமாக நின்று எளிதாக்குதலை விரைவுபடுத்தல் கூடும். ஆனால், இயற்கைச் சக்திகளுக்கு விரோதமாக யாரும் செல்ல முடியாது. ஆதார மொழித் திட்டத்தை ஆக்டென் முறைப்படி அமைத்தல் இயற்கைச் சக்திக்கு மாறானது. ஒரு கடிகாரத்தை நிறுத்தி விட்டால், காலம் கழியாமல் நின்றுவிடுமா?

9. சொல் வரலாற்று நியதி

பொருளுலகு

நமது கண்ணுக்குத் தோன்றுவது வெளியுலகம். வெளியுலகிலுள்ள பொருள்களையே விஞ்ஞானிகள் ஆராய்ந்த வண்ணமாயிருக்கிறார்கள். இங்கே மறைந்து கிடக்கும் பொருள்களையும் சக்திகளையும் பற்பல நியதிகளையும் கண்டுபிடித்து வருகிறார்கள். புதிய புதிய எந்திரங்களை இயற்றி வருகிறார்கள். புதிய புதிய வசதிகளை அமைத்து வருகிறார்கள். உலகம் மாறிய வண்ணமாயிருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்தவன் ஒருவன், தான் முன் வாழ்ந்த இடத்திலேயே இக்காலத்தில் திடீரென்று தோன்றுவானானால், அவன் அறிவு சுழன்று விடும்; தான் இருந்த இடத்தைத் தெரிந்து கொள்ள மாட்டான். எல்லாம் நூதனமாக இருக்கும். வேறொரு புதிய உலகத்தில் தான் தவறிப் புகுந்து விட்டதாகவே உணர்வான். இது வெளியுலகத்தின் தன்மை. இந்த வெளியுலகத்தை அர்த்தப் பிரபஞ்சம் அல்லது 'பொருளுலகு, என்று நமது சமயவாதிகள் கூறுகிறார்கள்.

சொல்லுலகு

இந்த அர்த்தப் பிரபஞ்சத்தைப் போலவே, வேறொரு பிரபஞ்சம் இருக்கிறது. இதன் பெயர் சப்தப் பிரபஞ்சம்: 'சொல்லுலகு' என்று தமிழில் வழங்கலாம். இங்கேயும் வேறுபாடு நிகழ்ந்தவண்ணமாகவே இருக்கிறது. பழைய சொற்கள் மறைந்து விடுகின்றன; புதுச் சொற்கள் பிறக்கின்றன. பழைய சொற்கள், வடிவில் வேறுபாடுகள் ஏற்பட்டு, புதிய வடிவத்தைப் பெறுகின்றன. பழைய சொற்களுக்குப் புதிய பொருள்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இவ்வேறுபாடுகளால், ஒரு நூற்றாண்டுக்கு முன் உயிர் வாழ்ந்தவன் மீண்டும் இக்காலத்துத் திடீரென்று நம்மிடையில் வருவானானால், அவனுக்குச் சொற்களும் சொல்வடிவங்களும் சொல்லின் பொருள்களும் புதியனவாயிருக்கும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவன் ஒருவன் இக்காலத்து வருவானாயின், தான் பேசிக் கொண்டிருந்த மொழிதானா இப்போது வழங்குவது என்று கூடச் சந்தேகங்கொள்வான். சந்தேகத்தின் முடிவாக, 'தனது மொழி

அல்ல' என்று கூட நினைக்கலாம். அவன் தனது மொழியில் பேசினால் இக் காலத்துள்ளவன் பொருளுணர்ந்து கொள்வான். இதற்கு மாறாக, இக்காலத்து வழக்கின்படி ஒருவன் பேசினால், அவனுக்குப் பெரும்பாலும் பொருளுணர முடியாமலே போய்விடும். தொல்காப்பியருக்குத் திருக்குறளின் பொருள் விளங்காமற் போகும்; ஆனால், திருவள்ளுவருக்குத் தொல்காப்பியம் விளங்கிவிடும். திருவள்ளுவருக்குக் கம்பராமாயணம் விளங்கமாட்டாது; ஆனால், கம்பருக்குத் திருக்குறள் விளங்கிவிடும். தற்காலத்து நாட்டு மக்களின் மொழியிலேயே பாடியுள்ள தேசியகவி பாரதியின் அற்புதமான கவிதைகள் கம்பருக்கு எளிதில் விளங்கமாட்டாத புதை பொருளாக இருக்கும்; ஆனால், பாரதியார்க்குக் கம்பராமாயணம் வெள்ளிடை மலைபோல் நன்றாக விளங்கும். சுருங்கச் சொன்னால், முன் தோன்றியவர்கள் இயற்றிய நூல்கள் பின் தோன்றியவர்களுக்கு விளங்கும்; ஆனால் பின் தோன்றியவர்கள் இயற்றிய நூல்கள் முன் தோன்றியவர்களுக்கு விளங்கமாட்டா; பின்னுள்ளவர்கள் ஆராய்ச்சி செய்து முன் நூல்களின் பொருள்களைத் தெரிந்து கொள்ளலாம்; முன்னுள்ளவர்களுக்கு இதுவும் முடியாத காரியமாகும். சொல்லுலகின் தன்மை இப்படியுள்ளது.

இவ்வாறு பிரசங்கம் செய்தார் மொழி நூல்-அறிஞர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவரது நண்பர்கள் தொல்காப்பியத் தொண்டரும், தமிழ் மறைச் செல்வரும், கம்பதாசரும் கடுங்கோபம் கொண்டார்கள். தொல்காப்பியருக்கும் தெரியாத தமிழ் உண்டென்று சொல்லும் காலம் வந்துவிட்டதே என்று வயிறெரிந்தார் ஒருவர். வள்ளுவர் உணராத தமிழ் மண்ணுலகில் உண்டா என்று கோபங் கொண்டார் மற்றொருவர். கம்பர் அறியாத தமிழ் கருந்தமிழ்தான் என்றார் மூன்றாமவர். பக்கத்தில் இருந்த நண்பர்களின் முகங்களும் எள்ளுங் கொள்ளும் வெடித்தது போலத் தோன்றின. தொல்காப்பியத் தொண்டர் எழுந்து கோபாவேசத்துடன் பேசத் தொடங்கினார்: தமிழின் தொன்மையையும் பெருமையையும் பற்றிப் பேசுவதாயிருக்கும் என்று நாங்கள் வந்தோம். நீர் தொல்காப்பியருக்கு நமது தமிழ் தெரியாது; வள்ளுவர் நமது தமிழ் அறியமாட்டார்; கம்பருக்கு நமது இனிய தமிழ் விளங்காது என்றெல்லாம் பிதற்றுகிறீரே; இவ்வாறு நமது பண்டைப் பெரு மக்களை இகழவேண்டுமென்று உம்முடைய மொழி

கற்பித்து வருகிறதோ? வெகு நன்றாயிருக்கிறது உமது பேச்சு!

மொழி நூலறிஞர்:—கோபித்துக் கொள்ளக் கூடாது; நான் உண்மையை—.

தமிழ்மறைச் செல்வர்.—உண்மையைச் சொல்லுகிற லட்சணமா இது? நன்றாயிருக்கிறது!

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

என்பது நம் தமிழ் வேதம். நீங்கள் கூறிய கூற்று நல்லதென்று எண்ணக் கூடுமா?

கம்பதாசர்:—பெரியோர்களுக்கு அபசாரம் செய்கிறீரென்று கூட உமக்குத் தெரியவில்லை. தெரிந்தால் இப்படிப் பேசமாட்டீர்.

அறிஞர்:—நான் அபசாரமொன்றும் செய்யவும் இல்லை; கருதவும் இல்லை. தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர்: இம்மூவர்களிடத்தும் எனக்குப் பெரும் பக்தி உண்டு. இவர்கள் கடவுளர் அல்லர் என்று சொல்வது அபசாரம் ஆகுமா? நான் சொல்லப்போவதை முழுவதும் கேட்டுவிட்டுப் பின்னால் என் கொள்கை தவறா அல்லவா என்று தீர்மானியுங்கள். அதற்கு முன் கோபித்துக் கொண்டால், நான் என்ன செய்வது?

செல்வர்:—கேட்டுத்தான் பார்ப்போமே. 'நெருப்பு' என்று சொன்னால் வாய் வெந்துவிடுமா?

(தொண்டரும் தாசரும் மௌனமாயிருக்கிறார்கள்)

அறிஞர்:—நான் ஒரு சிறு வாக்கியம் சொல்லுகிறேன் கேளுங்கள்:

'இந்தப் பத்திரிகை நான் வாங்கியது'

இந்த வாக்கியம் உங்களுக்குப் பொருள் விளங்குகிறதல்லவா!

தொண்டர்:—' விளங்குகிறதல்லவா?' என்று நீர் கேட்பதற்கு இதில் என்ன இருக்கிறது?

அறிஞர்:—உங்களுக்கு நன்றாக விளங்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. முற்காலத்துள்ளவர்களுக்கு இது

விளங்குமா என்றுதான் நாம் பார்க்கவேண்டும். ஒவ்வொரு வார்த்தையாக எடுத்துக் கொள்வோம். 'இந்த' என்ற சொல் தொல்காப்பியத்தில் வந்திருக்கிறதா?

தொண்டர்:—வரவில்லை.

அறிஞர்:—திருக்குறளில் வந்திருக்கிறதா?

செல்வர்:—இல்லை.

அறிஞர்:—இதுதான் வரவில்லை. இதன் இனமான 'அந்த', 'எந்த' என்ற சொற்களாவது வந்துள்ளனவா?

தொண்டர், செல்வர்:—அவையும் இல்லை.

தாசர்:—என்ன! வியப்பாயிருக்கிறதே! சுட்டுகிற கருத்துடன் ஒரு பொருளைத் தொல்காப்பியரும், திருவள்ளுவரும் குறிக்கவே இல்லையா? அப்படிக் குறிப்பதற்கு என்ன செய்து வந்தார்கள்?

தொண்டர்:—'அப்பொருள்' 'இவ்வைந்து' என்று சுட்டு எழுத்துக்களைப் பிரயோகித்து வந்தார் தொல்காப்பியர்.

தாசர்:—வள்ளுவர் என்ன செய்தார்?

செல்வர்:—அவரும் இவ்வாறே சுட்டெழுத்துக்களைத் தான் வழங்கியிருக்கிறார்:

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்

எனவும்,

இவ்வுலக மில்லாகி யாங்கு

எனவும், வரும் இடங்களைப் பார்த்தால் தெரியவில்லையா?

அறிஞர்:—கம்பர் 'இந்த' என்பதை வழங்கியிருக்கிறாரல்லவா?

தாசர்:—**இந்த இப் பிறவிக் கிரு மாதரைச்**
சிந்தையாலுந் தொடேன்

அந்த இந்திரனைக் கண்ட அமரர்கள்

என்ற இடங்களிற்போல் அவர் வழங்கித்தானிருக்கிறார்.

அறிஞர்:—சங்கப் புலவர்கள் யாரேனும் 'அந்த' 'இந்த' என்ற சொற்களை ஆண்டிருக்கிறார்களா?

தொண்டர்:—ஆளவில்லை என்றுதான் தோன்றுகிறது.

செல்வர்:—ஏன்? மணிமேகலையில் சீத்தலைச்சாத்தனார் 'காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன்' என்று கூறியுள்ளார் அல்லவா?

அறிஞர்:—உண்மை. ஆனால், மணிமேகலைச் சாத்தனார்,

தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்

எனத் திருக்குறளை எடுத்தாளுகிறார். ஆதலால், இவர் வள்ளுவருக்குப் பிற்பட்டவர். அன்றியும், சங்க காலத்துச் சீத்தலைச் சாத்தனார் பத்துச் செய்யுட்கள் இயற்றியிருக்கிறார். இச் செய்யுட்களின் நடையும் மணிமேகலையின் நடையும் முற்றும் வேறுபட்டுள்ளன. மேலும், இளங்கோ, சேரன் செங்குட்டுவன் முதலானோரைக் குறித்துச் சங்க காலத்துச் சாத்தனார் யாதும் அறிந்ததாக இச் செய்யுட்கள் புலப்படுத்தவில்லை. இச் சாத்தானார் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளாரேயன்றிப் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடவில்லை. மணிமேகலையை இயற்றியவர் கூலவாணிகன் சாத்தனார் என்று சொல்லப் படுகிறதே தவிர, சீத்தலை என்ற அடைமொழி இவர் பெயரில் காணவில்லை. மணிமேகலையோடு உடன் தோன்றிய காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் பஞ்சதந்திரக் கதையொன்றும் அக் கதையில் வரும் வடமொழிச் சுலோகம் ஒன்றும் குறிக்கப்பட்டுள்ளன. பஞ்ச தந்திரத்தின் காலம் கி.பி. 4 அல்லது 5-ம் நூற்றாண்டு. ஆதலால். இவ் இருகாப்பியங்களும் சங்க காலத்துக்கு மிகப் பிற்பட்டனவாம். இக்காரணங்களால் பழைய சங்கநூல் வழக்குக்களைப் பற்றி விவரிக்கும் பொழுது இவ் இரு நூல்களையும் நீக்கி விடுதல் வேண்டும்.

செல்வர்:—அப்படியானால் வேறொரு சங்கப் புலவரும் 'அந்த' 'இந்த' என்ற சொற்களை வழங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அறிஞர்:—தொல்காப்பியத்தில் இல்லை, திருக்குறளில் இல்லை; சங்க இலக்கியங்கள் ஒன்றிலும் இல்லை. இந்தச் சொற்கள் தொல்காப்பியரும், வள்ளுவரும் வாழ்ந்த காலங்களில் இல்லையென்று கொள்ளலாம் அல்லவா?

தொண்டர்:—நூல் வழக்கிற் காணாமற் போனாலும், உலக வழக்கில் இருந்திருக்கலாம்.

அறிஞர்:—இருந்திருக்கலாம். இதைக் கணக்குப் போடுவதுபோல் காட்ட முடியாதுதான். ஆனால், பெரும்பான்மை எப்படியென்று கவனிக்க வேண்டாமா? நமது கேள்வியென்ன? ஒரு சொல் எந்தக் காலத்தில் தோன்றியிருக்கலாம் என்பது. குறித்த ஒரு காலத்துள்ளதாய் நமக்கு அகப்பட்ட இலக்கியத் தொகுதியில் அச் சொல் காணப்படவில்லை. பின்னுள்ள இலக்கியத் தொகுதியில் காலக்கிரமத்தில் வரவர மிகுதியாய் அது காணப்படுகிறது. அப்படியானால் பெரும்பாலும் எந்தத் தொகுதியை அடுத்து அந்தச் சொல் தோன்றியிருக்கலாம்? நீங்களே சொல்லுங்கள்.

செல்வர்:—பெரும்பாலும் பிற்பட்ட தொகுதியைத் தான்.

அறிஞர்:—நீங்கள் சொன்ன முடிவு சரிதான் என்பதற்குச் சில சான்றுகள் தருகிறேன். உலக வழக்குச் சொற்கள் சிலவற்றை எடுத்துக் காட்டும் இலக்கண ஆசிரியர்கள் இச் சொற்களைக் காட்டவில்லை. திராவிட கணத்து மொழிகளில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்ற மூன்றும் தமிழோடு நெருங்கிய தொடர்பு உடையன. இவற்றுள் மலையாளம் சுமார் கி.பி. 10-ம் நூற்றாண்டில் பிரிந்து வேறுபடுவதாயிற்று. அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் தெலுங்கும் கன்னடமும் வேறுபட்டு உருப்பெறலாயின. இவைகள் ஒவ்வொன்றும், உலக வழக்கிலிருந்த பூர்வ மொழியிலிருந்தே காலமிடையிட்டுச் சிறிது சிறிதாக மாறித் தனிமொழியாக உருப்பெற்றன. எனவே, இம் மொழிகள் அனைத்திலும் ஒரு சொல் காணப்படுமாயின் அது பூர்வ மொழியில் உலக வழக்கில் இருந்ததெனக் கருதலாம்; ஒன்றிலும் காணப்படவில்லையாயின், அது பூர்வ மொழியில் உலக வழக்கில் இருந்ததில்லையெனக்கருதலாம்.

இப் பூர்வமொழி தமிழ்மொழியோடு மிகமிக நெருங்கிய தொடர்புடையது; பூர்வமொழியின் வழக்குவடிவினைப் பூர்வீகத் தமிழ்மொழி யென்று கொள்வோமாயின் அது பொருந்துவதேயாகும். இப்போது விளக்கத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மலையாளம், தெலுங்கு, கன்னடம் இம்மூன்றிலும் 'அந்த' 'இந்த' என்ற சுட்டுமொழிகள் இல்லை. இதனால் என்ன ஊகிக்கத்

தக்கது? பூர்வீகத்தில் உலக வழக்குத் தமிழ் மொழியி லும் இச் சொற்கள் இல்லை என்பதுதான். அ, இ என்ற சுட்டெழுத்துக்கள் மாத்திரையில் நீண்டு சுட்டுச் சொற்க ளாக இம் மொழிகளில் வழங்கி வந்திருக்கின்றன.

தொண்டர்:—பண்டைத் தமிழில் நூல் வழக்கிலும், உலக வழக்கிலும் இல்லையென்று வைத்துக் கொள்வோம். இவைகளைப் புத்தம் புதிதாக ஒருவர் அமைத்து விட்ட னர் என்று சொல்கிறீர்களா?

அறிஞர்:—அப்படியன்று. புத்தம் புதிதாக ஒரு சொல்லை அமைத்து விடுதல் எக்காலத்தும் இல்லை. 'இந்த' என்பதனை வேறொரு வகையாக ஆராய்தல் வேண்டும்.

செல்வர்:—எந்த வகையாகவோ?

அறிஞர்:—சரித்திர முறையாக நாம் ஆராய்தல் வேண்டும். சொற்களுக்கும் சரித்திரம் உண்டு; அவைகளும் தாய்ச்சொல்லினிடமிருந்து பிறப்பனவே; சிறிது சிறிதாக உருமாறி வளர்வனவே; வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடு படுவனவே; அப் போராட்டத்தில் வெற்றிகொண்டு வாழ் வுறுதலும், தோல்வியுற்று மாய்தலும் சொற்களுக்கும் உண்டு.

செல்வர்:—இதைப் பற்றி வேறொருநாள் பிரசங்கம் வைத்துக் கொள்வோம். தொல்காப்பியர் காலத்திலும் வள்ளுவர் காலத்திலும் இச்சொற்கள் இல்லையென்று இப் பொழுது ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், அவர்கள் எவ்வளவு ஆராய்ந்தாலும் கண்டுபிடிக்க முடியாது என்றீரே! அது எப்படி?

அறிஞர்:—அதில் சந்தேகம் இல்லை. எதிர்காலத்தில் நிகழப் போவதைக் குறித்து யாருக்கு என்ன தெரியும்? முக்காலங்களையும் உணரவல்ல இறைவனுக்குத்தான் தெரியும்.

தாசர்:—ஒருவனுக்குத் தன் பேரனது பேரனது பேர னைத் தெரிய முடியாது என்று சொல்லுவது போலத் தானே இதுவும்?

அறிஞர்:—அதுபோலவே தான். பேரனைப் பார்த் திருக்கலாம். ஆனால், பேரனது பேரனது பேரன் ஒருவன் தோன்றுவான் என்றாவது, அவன் இப்படிப் பட்டவன்

என்றாவது எவ்வளவு முயற்சி பண்ணினாலும் அறிய முடியாது. அப்படியே தொல்காப்பியருக்கும் வள்ளுவருக்கும் 'இந்த' 'அந்த' என்ற சுட்டுச் சொற்கள் தோன்றும் என்று எவ்வளவு ஆராய்ந்தாலும் ஊகிக்க முடியாது. தங்களுக்கு முன் காலத்திலேயும் சொற்கள் மாய்ந்து புதுச்சொற்கள் வந்துள்ளன என்பதை உணர்ந்து, மொழியின் இயல்பே இதுதான் என்பதையும் உணர்ந்து, 'கடிசொல் இல்லை காலத்துப்படினே' என்று பொதுவாகத் தான் தொல்காப்பியர் கூற முடியும். அவ்வாறு அவர் கூறியது அவர் பெருமைக்குத் தக்க அறிகுறியாக உள்ளது.

தொண்டர்:—இனி, பத்திரிகையைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்?

அறிஞர்:—'இந்த' என்பது சுட்டுப் பொருளை உணர்த்துவது. இவ்வாறு சுட்டிச் சொல்லும் வழக்கம் மக்கட் பிறப்பினர் எல்லோருக்கும் தொன்று தொட்டே உள்ளதெனக் கருதலாம். ஆனால், '**பத்திரிகை**'* என்று இப்பொழுது குறிக்கப்படும் பொருள் நமது நாட்டில் தோன்றி, சுமார் ஒரு நூற்றாண்டுதான் ஆகிறது. முதன் முதல் இதைத் தொடங்கியவர்கள் கிறிஸ்தவப் பாதிரிகளே. நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த நமது தாத்தாக்களுக்குப் பத்திரிகை என்பது என்ன என்று தெரியாது. 1831-ல் 'தமிழ் மகஸீன்' என்ற பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. 1855-ல் 'தின வர்த்தமானி' என்னும் தினசரிப் பத்திரிகை தோன்றிச் சிலகாலம் நடைபெற்று வந்தது. நற்போதகம் (1840), தேசோபகாரி (1861), அருணோதயம் (1863) முதலிய பத்திரிகைகள் வெளிவந்தன. பெண்பாலர்க்கென அமிர்தவசனியும் (1865), சிறுவர்க்கென பாலதீபிகை (1840), சிறு பிள்ளையின் நேசத் தோழன் (1849), பாலியர் நேசன் (1859) முதலிய பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன. நமது வைதிக சமயத்தவர்களால் தத்துவ போதினி (1864), விவேக விளக்கம் (1865) என்பவை பதிப்பிக்கப்பெற்றன. பொதுவகை அறிவைப் பரப்பிய மாதப் பத்திரிகை 'ஜனவிநோதினி.' இது தொடங்கிய காலம் கி.பி. 1870. இப்போது தினசரிப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை, ஆண்டுப் பத்திரிகை, தீபாவளி மலர்கள், பொங்கல் மலர்கள் முதலிய பலவகைப் பத்திரிகைகள் நமது நாட்டில் உள்ளன. ஆனால்

* Journal

இந்த வெளியீட்டுவகை தோன்றத் தொடங்கிய காலத்து (1831), பத்திரிகை என்ற பெயரோடு தோன்றியதாகத் தெரியவில்லை. இப்போது தெரிந்த அளவில் சென்னை லூதர்ன் மிஷனைச் சார்ந்த முன்ஷி சாமுவேல் பிள்ளை 1864-ல் பதிப்பிட்ட 'திருச்சபைப் பத்திரிகை' ஒன்றே இப் பெயரால் வெளிவந்தது.

செல்வர்:—நம் முன்னோர்களுக்குப் பத்திரிகை என்ற பதங்கூடத் தெரியாதென்று சொல்லுகிறீர்களா?

அறிஞர்:—அப்படிச் சொல்ல முடியாது. பத்திரிகை என்பது வடசொல். ஒருவேளை தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர் ஆகிய மூவருக்கும் தெரிந்திருக்கலாம். மூவருக்கும் வடமொழிப் பயிற்சியுண்டு. மாதப் பத்திரிகை என்று சொல்லும்போது நாம் கருதும் பொருளில் அவர்களுக்குத் தெரியாது.

தொண்டர்:—என்ன பொருளில் அவர்கள் அறிந்திருக்கக் கூடும்?

அறிஞர்:—பத்திரிகை என்பதற்கு 'இலை' என்று பொருள். முன்காலத்தில் இலையில் அதாவது பனையோலை முதலியவற்றில் செய்திகள் எழுதிவந்தமையால் அவ்வகை ஓலை முதலியவற்றிற்கு அப்பெயர் வழங்கலாயிற்று. பின்னர் 'திருமணம் முதலிய மங்களச் செய்திகளை அறிவிக்கும் கடிதங்களுக்கும் இப்பெயர் அமைந்தது. தமிழ்ச் சொல்லாகிய ஓலை என்பதும் இப்படித்தான். இப்போது மரணச் செய்தியைத் தெரிவிக்கும் இழவு அறிக்கைக்குத்தான் இப் பெயர் (ஓலை) பெரும்பாலும் வழங்கிவருகிறது. பத்திரிகை என்ற பெயர் திருமண அழைப்புக் கடிதங்களுக்கு வழங்குவதுடன், இப்போது குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட இடத்திலிருந்து, குறிப்பிட்ட வடிவில் செய்திகள், கட்டுரைகள் முதலியன அடங்கிய வெளியீடுகளுக்கும் வழங்கியிருக்கிறது. ஆனால், மாசிகை, சஞ்சிகை என்ற பெயர்களோடு போராடி வெற்றி பெற்று, சென்ற நூற்றாண்டின் கடைசியிலிருந்து தான் இப்பெயர் நிலைத்திருக்கிறது.

தொண்டர்:—இது வடமொழிச் சொல்; எப்படியாவது தொலையட்டும். சில பத்திரிகைகளில் வரும் தமிழைப் பார்த்தால், பத்திரிகை என்பதே தோன்றாமலிருந்தால் நலமென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

செல்வர்:—தொல்காப்பியருக்கு வடமொழியில் வெறுப்புக் கிடையாது, நீர் சொல்வது முறையல்ல.

அறிஞர்:—பத்திரிகைகளில் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் அதிகமாகக் காணுகின்றன. அவ்வகைச் சொற்களை இழிவாகச் சொல்லுவதும், தூய நடையைக் கையாளுவதாகக் கருதி எழுதும் உயரிய நடையைப் புகழ்ந்து சொல்லுதலும் சரியல்ல; அது இருக்கட்டும். காலகதியில் சொற்களின் பொருள் மாறிக் கொண்டேயிருக்கும். அல்லாமலும் மக்களின் நாகரிக வரலாற்றைப் பிரதிபலித்துக் காட்டும் சிறுகண்ணாடி போலவும் சொற்கள் உள்ளன. இந்நியதிகளுக்குரிய உதாரணங்களுள் பத்திரிகையும் ஒன்று.

தொண்டர்:—மீளவும் பிரசங்கத்திற்குத் தொடங்கி விட்டீர். உமது வாக்கியம் இன்னும் முற்றுப்பெற வில்லையே!

அறிஞர்:—அடுத்த சொல் 'நான்' என்பது.

தொண்டர்:—இது தொல்காப்பியர் காலத்திலே வழக்கில் இல்லை. தொல்காப்பியர் 'யான்' என்றே வழங்கினர். 'யான் யாம் நாம் என வருஉம் பெயரும்' என்று ஓரிடத்தில் சொல்லுகிறார். இப்போதுகூட எங்களிற் பலர் 'யான்' என்றே சொல்லுகிறோம்.

செல்வர்:—வள்ளுவரும் 'யான் நோக்குங் காலை நிலனோக்கும்' என்றுதான் கூறினர். சங்க இலக்கிய வழக்கில் எப்படியோ?

அறிஞர்:—சங்க இலக்கிய வழக்கிலும் 'யான்' என்றே உள்ளது.

தாசர்:—ஒருவேளை 'நான்' என உலக வழக்கிலிருந்ததை இலக்கண ஆசிரியர்கள் திருத்தியமைத்துக் கொண்டிருக்கலாம்.

அறிஞர்:—உருபு ஏற்குமிடத்து 'என்னை' 'என்னால்' 'எனக்கு' முதலியனவாகவும், தன்மையொருமை வினைமுற்று 'செய்தனென்' 'செய்தேன்' 'செய்வேன்' முதலியனவாகவும் வருதலால், என் முதலியவற்றோடு மிக நெருங்கிய 'யான்' என்பது திரிந்து இவ்வடிவுகளை ஏற்றதெனல் வேண்டும். ஆகவே, மூலச் சொல் 'யான்' என்பதேயன்றி, 'நான்' என்பதன்று. இதனால் தொல்காப்பியர்

திருத்தியமைத்துக் கொண்டது 'யான்' என்று கூறுதல் தவறாம். பிற்பட்டனவாகிய கன்னடந் தெலுங்கு மொழிகளில் 'நேனு' முதலியவாக வருதலும், இன்னும் பிற்பட்டதாகிய மலையாளத்தில் 'ஞான்' என்று வருதலும் இவற்றோடு நெருங்கிய தொடர்புடைய 'நான்' என்பது பிற்பட்ட வழக்கு என்பதைக் காட்டுகின்றன.

தாசர்:—கம்பர் நான் என்பதைக் வழங்கியிருக்கிறார்.

நாவி னாருரை யின்படி நான் தமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்ப ரோ

என்பது அவர் கூறிய பாயிரச் செய்யுள். இவர்க்கு முன் இச்சொல்லை ஒருவரும் வழங்கவில்லையா?

அறிஞர்:—'நீ நான் தான்' எனக் கூறினர் வீர சோழியத்தில் அதன் ஆசிரியர் புத்த முத்திரர் (கி.பி. 1060). 'நானார் என்னுள்ளமார்' என்றனர் திருவாசக முடையார் (சுமார் கி.பி. 875). 'நான் உகந்துன்னை நாளும் நணுகுமா கருதி' என்றனர் நாவுக்கரசர் (கி.பி. 650). சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில்.

தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

எனவும்,

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினான் நான் அவன் தன்மகள்

எனவும் வந்துள்ளது. ஆனால், இக்காப்பியம்—

செல்வர்:—சங்க காலத்துக் காப்பியம் அன்று என்பது உமது கருத்து என்று சொல்லிவிட்டீரே. அதைத் தானே இப்போ சொல்லப் போகிறீர்?

அறிஞர்:—அப்படித்தான். என்றாலும் ஐயத்திற்கிடமாயுள்ள இக்காப்பியத்தை நீக்கியே நாம் விசாரணை செய்ய வேண்டும் என்று இதற்கு முன் சொன்னது ஞாபகமில்லையா?

தொண்டர்:—ஞாபகந்தான். இந்தச் சொல்லும் தொல்காப்பியர், வள்ளுவர் இருவருக்கும் தெரியாது. 'வாங்கியது' என்பதன் கதி என்ன?

அறிஞர்:—வாங்குதல் என்ற சொல் தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் பயின்று வரவே இல்லை. ஆனால்,

சங்க நூல்களில் இச்சொல் பயின்று வந்திருத்தலால், தொல்காப்பியர் வள்ளுவர் காலத்தில் இச்சொல் இல்லையெனத் துணிய முடியாது. சங்க நூல் வழக்கில் வளைதல் (வாங்கு கதிர் வரகு: முல்லைப். 98), வளைத்தல் (உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினை (குறுந். 10), இழுத்தல் (மத்தம் ஒலிப்ப வாங்கி: பெரும்பாண். 156) முதலிய பல பொருள்களில் வருகின்றது. 'விலைக்குக் கொள்ளுதல், பெற்றுக் கொள்ளுதல்' என்ற தற்காலத்துப் பொருள்கள் சங்க நூல் வழக்கில் இல்லை. இது பிற்காலப் பொருள். இப்பொருள் தொல்காப்பியர், வள்ளுவர் காலங்களில் இல்லை.

தாசர்:—சிலப்பதிகாரத்தில் இப்பொருள் காணப்படுவதுபோல் தோன்றுகிறதே.

செல்வர்:—காணப்படுகிறது.

நூறுபத்து அடுக்கி யெட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதுஇம் மாலை
மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு என
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கி .. .. (III–164, 171)

என்ற பகுதியில் இரண்டு இடங்களில் இப்பொருளைக் காணலாம்.

அறிஞர்:—ஆனால், இதுவும் பிற்கால வழக்குக்களைச் சிலப்பதிகாரம் கையாண்டுள்ளது என்பதற்குப் பிறிதொரு சான்றாய் முடிகின்றது. இக்காப்பியம் சங்க காலத்திற்குப் பிற்பட்டதென்பதனை இதுவும் உறுதிப் படுத்துகிறது. இதிலே வருவது கொண்டு சங்க காலத்து வழக்குக்களை அறுதியிடல் கூடாது.

செல்வர்:—தங்கள் முன் கூறிய வாக்கியத்தில் 'இந்த' 'நான்' என்ற இரண்டு சொற்கள் தொல்காப்பியர், வள்ளுவர் காலங்களில் இல்லை. 'பத்திரிகை'யின் தற்காலப் பொருள் மிகப் பிற்பட்ட கம்பருக்குக் கூடப் புதுமையே. 'வாங்கியது' என்பதன் தற்காலப் பொருள் கம்பர் காலத்து வழங்கியிருக்கலாமாயினும் தொல்காப்பியர், வள்ளுவர் காலங்களில் வழக்கில் இல்லை. இதுதானே தங்கள் கருத்து?

அறிஞர்:—ஆம். இக்காரணங்களால் தொல்காப்பியர், வள்ளுவர் காலத்தினர்க்கு இவ்வாக்கியம் சிறிதும் விளங்காது. வாக்கியச் சொற்களுள் 'பத்திரிகை' தவிர மற்றவற்றின் பொருள் கம்பர் காலத்தினருக்கு விளங்கும். ஒரு சொல் விளங்காவிடினும் வாக்கியம் விளங்கமாட்டாது. சரிதானே?

தொண்டர்:—இதில் என்ன புதுமையிருக்கிறது. பிற்காலச் சரிதங்களை முற்காலத்தவர் அறிய முடியாது தானே?

அறிஞர்:—தாங்கள் இப்போது சொல்வது உண்மை. இதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். நீங்களும் முதலில் கோபித்துக் கொண்டீர்களே! தற்காலத்தில் வழங்கும் 'மறுமலர்ச்சி' சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு உண்டா?

10. சொல் வரலாற்று வினோதங்கள்

ஆராய்ச்சி வினோதங்கள் : சொல்

சொல் வரலாற்றினைக் குறித்து ஆராய்வது இக்காலத்து வெகு சாதாரணமாய்விட்டது. பலரும் இவ் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்கள். இதற்கென்று தனிப்பட்ட வழியுண்டென்றாவது, நியதி யுண்டென்றாவது கருதுவதேயில்லை. விசித்திரம் விசித்திரமாகச் சொல்வரலாறுகள் கிளம்புகின்றன. மயில் என்பது மாயில் என்பதன் குறுக்கம் என்றும், மா என்பது அழகு என்று பொருள்படுமாதலினாலே மயில் என்பது அழகின் இருப்பிடம் என்றும், அப்பெயருடைய பறவைக்கு இப்பொருள் மிகவும் ஏற்றதென்றும் ஓர் ஆராய்ச்சியாளர் எழுதினர். இது வயிறு என்பதற்குச் சிலர் கூறிய சொற் பொருளினை ஞாபகப் படுத்துகிறது. வாயின் ஈறு எனப் பொருள்படும் வாயீறு என்பது குறுகி இப்பெயர் அமைந்ததென்றும், இவ் வுறுப்பிற்கு இது மிகவும் ஏற்ற பெயரென்றும் இவர்கள் வாதித்தனர். இவர்களது வாதத்திற்கும் முற்கூறியதற்கும் ஆராய்ச்சி நெறியில் யாதொரு வேறுபாடும் இல்லை.

எழுத்து

வேறு சிலர், சொற்களை எழுத்தெழுத்தாகப் பிரித்து ஒவ்வோரெழுத்தும் பற்பல பொருட் பண்புகளை உணர்த்துவதாகக் கொண்டு, சொல்லாற் குறிக்கப்பட்ட பொருளுக்கேற்ற பண்புகளை ஒருங்கு கூட்டி அச்சொல் அப்பொருளையுணர்த்துவதாகக் காட்டினர். ஓர் உதாரணம் தருகிறேன். 'மேசை' என்னும் அந்நிய மொழியை எடுத்துக் கொள்வோம். இச்சொல்லை ம் + ஏ + ச் + ஐ என்று பிரிக்க வேண்டும். ம்—மென்மை; ஏ—உயர்ச்சி; ச்—வன்மை; ஐ—அழகு. இப்பண்புகளை ஒருங்கு சேர்த்து உணரவேண்டும். மிருதுவாக இழைத்து, உயரமாக வன்மையுள்ள மரத்தால் அழகாகச் செய்யப்பட்டதாதலால் மேசையென்ற பெயர் ஏற்பட்டதென்பர். இந்த அற்புத வரலாற்று முறையில் ஆராய்ச்சியே வேண்டுவதில்லை. மிக எளிதில் சொற்பொருள் கிடைத்துவிடுகிறது. தாய் தந்தையர்கள் குழந்தைக்கு அதன் குணங்களையெல்லாம் முற்ற ஆராய்ந்து, அக்குணங்களுக்குரிய எழுத்துக்களை ஒருங்கு

கூட்டிப் பெயரிடவேண்டும் என்று ஒரு சட்டம் அமுலுக்குக் கொண்டு வருவார்களானால், அது நலமாயிருக்கும்:

திசை

மற்றுஞ் சிலர், சொற்களுக்குள்ளே நுழைந்து எழுத்துக்களைத் துருவிப் பிடித்துக் கொணர்ந்து பொருளைக் கக்கவைப்பது நேர்மையான முறையன்று எனக் கருதினார்கள். 'திரைகடலோடியுந் திரவியந் தேடு' என்பதற்கேற்ப, திகாந்தங்களுக்குச் சென்று பொருள் தேடினார்கள் சேய்மை, அண்மை, மேல், கீழ் என்ற இட வகைகளினின்று தானே எல்லாப் பொருள்களும், அவற்றுடன் சொற்களும் வரல் கூடும்? ஆதலால் இவற்றை முறையே குறிக்கும் அ, இ, உ, எ என்ற நான்கு குறில்களின் அடியாகவே எல்லாச் சொற்களும் பிறக்கின்றன என்று கொண்டு சொல்லாராய்ச்சியை நிகழ்த்தினர். இத்தனை எளிமையான முறை இன்னாருடைய மனக்கண்ணுக்கு அன்றி, வேறு யாருக்குக் காட்சியளிக்கும்?

மனித வரலாறு

இவ்வாராய்ச்சியாளர்களுடைய சுற்றத்தார் சிலர் எல்லாச் சொற்களும், சொற்களை வழங்கும் மனிதனும் மனுவினிடமிருந்து தோன்றியபடியினாலே 'ம' என்ற எழுத்துத்தான் சொற்களுக்கெல்லாம் மூலமாதல் வேண்டுமென்று துணிந்து மனக் கோட்டை கட்டினர்!

சிறிது எட்டிப்போன சுற்றத்தார்கள் அண்டபிண்ட சராசரங்களுக்கெல்லாம் 'ஓம்' என்ற பிரணவமே மூலமாதலால் அகர முதலிய எழுத்துக்களெல்லாம் 'ஓம்' என்பதன் வடிவு வேறுபாடுகளே என்று துணிந்து, எழுத்துக்களைக் கத்திரிகையினால் மிகச் சிறிய துணுக்குக்களாகக் கண்டித்து, பின், ஓம் என்ற வடிவு தோன்ற அத்துணுக்குக்களைப் பொருத்திக் காட்டித் தமது கொள்கையை நிறுவினர்.

உலக வாழ்வு

கடைசியாக ஒரு சிலர் தமிழ் எழுத்துக்களெல்லாம் 'ஓம்' என்ற ஒரு மூலத்திலிருந்து பிறந்துள்ளன போலவே, தமிழ்ச் சொற்களெல்லாம் ஒரு மூலத்திலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டுமென்று கருதி, அந்த மூலம் எதுவாக இருத்தல் கூடுமென்று கண்டுபிடிப்பதில் தங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தனர். தொல்காப்பியர்

'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (தொல் சொல். சேனா. 394) என்று கூறி மனஞ் சோர்ந்துவிட்டனர். பாணினி இலக்கணங் கூறுஞ் செய்கைகளுக்கு அடிப் படையா யமைந்த சொல் வடிவங்களைத் தாது எனப் பெயரிட்டு, வடமொழிச் சொற்களுக்கு ஆயிரத்தின் மேலாகத் தாதுக்கள் உளவெனப் படித்து முடித்தனர். எனவே தொல்காப்பியர் முயற்சியே செய்யா தொழிந்தனர்! பாணி னியின் முயற்சியோ சிறு முயற்சியாய்ப் பயனன்றி யொழிந் தது! இவ்விருவரும் தவறிய விடத்தே தங்கள் அரிய அறி வாற்றலைக் காட்டுதல் சிறந்ததல்லவா!

மிக நீண்ட காலமாக நனவிலும் கனவிலும் ஆராய்ந்து ஓர் அரிய முடிபினை ஓர் ஆசிரியர், வெளிப்படுத்தினர். ஒரு சொல்லைப் பல சொல்லாகப் பிரித்துப் பொருள் காணுதலும், ஒரு சொல்லைப் பல எழுத்துக்களாகப் பிரித்துப் பொருள் காணுதலும், சொற்களுக்கு வெளியே சென்று மக்கட் பிறப்பின் மூலபுருஷனது பெயரின் முத லெழுத்தே மக்கள் வழங்கும் சொற்களுக்கு மூலமென்று துணிவு கொள்ளுதலும், மக்களுட்பட, அண்டபிண்ட சரா சரங்களுக்கெல்லாம் ஆதி மூலமாகிய பிரணவமே எழுத் துக்களுக்கும் சொற்களுக்கும் ஆதிமூலமென்று துணிவு கொள்ளுதலும் சிறு முயற்சிகளெனவும், பௌராணிகளென வும், நாதப் பிரும்ம ரகசியமெனவும் ஒதுக்கப்பட்டன. மேனாட்டு அறிவியல் நூல் முறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இம் மண்ணுலகி லுள்ள உயிரினமெல்லாம் வாழ்வது எதனால்? ஞாயிற்றின் ஒளியால். உயிரினம் ஆற்றல் பெற்றுத் தழைப்பது எத னால்? வெங்கதிரோன் விளக்கத்தால். பலவகைப்பட்ட ஆற்றல்களுள் வாக்கும் ஒன்றாதலால், அது எங்கிருந்து தோன்றி யிருக்கக்கூடும்? அதுவும் சூரியனது பேரொளியி லிருந்தே தோன்றியதாதல் வேண்டும். ஆகவே, வாக் கின் ஆற்றலும், வாக்கும் முறையே சூரியனிடத்திருந்தும், சூரியன் என்ற பெயரிலிருந்தும் தோன்றின. சூரியன் என்ற வடமொழிப் பெயரின் மூல வடிவம் 'சுல்' என்பது. இது 'Solar' முதலிய சொற்களால் தெரிய வருகின்றது. இந்த 'சுல்' தான் அனைத்துத் தமிழ்ச் சொற்களுக்கும் மூலமாய் உள்ளது. தமிழ்மொழியின் சொற்பிரபஞ்சத்திலும் பாகிஸ் தான் கட்சியொன்று தலையெடுத்துவிட்டது.

சொல்லாராய்ச்சியின் தற்கால நிலை

மேற்குறித்தன போன்ற சொல்லாராய்ச்சிகள் நமது நாட்டில் நிரம்பி விட்டன. ஓர் ஆங்கில ஆசிரியர் தமது நாட்டில் 'சொல்லாராய்ச்சியாளர்' என்பது ஒரு நிந்தைச் சொல் ஆகி விட்டதென வருந்துகிறார். பல துறைகளிலும் அறிவுமிகுந்து, சொல் வரலாற்றுத் துறையிலும் நீண்ட காலப் பயிற்சியுடைய மேனாட்டில் இவ்வாராய்ச்சி இங்ஙனம் கூறப்படுமாயின், நமது நாட்டில் நிகழும் ஆராய்ச்சிகளைக் குறித்து யாது புகல்வது? பல அறிஞர்களும் சொல்லாராய்ச்சி என்றால் எள்ளி நகையாடுகின்றனர். அவ்வாராய்ச்சியில் தலையிடுவோரது தொகுதியில் எண்ணப் படுதற்கும் நாணுகின்றனர். 'அற்றாரைத் தாங்கும் வைவே லசதி' என்றபடி, இவ்வகை ஆராய்ச்சியாளரை ஆதரிப்ப தற்கெனவே சில பத்திரிகைகளும் கழகங்களும் தோன்றி யுள்ளன! இவர்களைப் போற்றிப் புகழ்வதற்கென்றே சில அறிஞர்களும் உள்ளார்கள்!

சொல்லாராய்ச்சியின் சிறப்பு

ஆனால், சொல்லாராய்ச்சி, அறிவுத்துறைகள் பலவற்றுள் மிகச் சிறந்ததொன்றாம். இதனைப் புறக்கணித்தல் தவறாகும். சொற்களின் வரலாறு நாட்டு வரலாற்றினையும், மக்கள் வரலாற்றினையும் உள்ளடக்கி நிற்பது. தத்துவநூல், உளநூல், மக்கள் வரலாற்று நூல், முதலியவற்றிற்கு மொழியாராய்ச்சி இன்றியமையாததாகும். இது மொழியின் சரிதத்திற்கு உடலும் உயிருமாய் நிற்பது. இலக்கிய சரிதத்திற்குங்கூட மிகப் பயன்படுவதாகும். ஆனால் இவ்வாராய்ச்சி செவ்வனே நிகழவேண்டுமாயின், பன்மொழிப் பயிற்சி வேண்டும்; சரிதப் பயிற்சி வேண்டும். ஆராய்ச்சி நெறியை நன்குணர்தல் வேண்டும். விருப்பு வெறுப்பின்றி உண்மை நாட்டம் வேண்டும். இவற்றை யுடையார் இச் சொல்லாராய்ச்சியை மேற்கொள்வாராயின் பெரிதும் பயன் விளைவதாகும்.

11. மொழி-நூல் வினோதங்கள்

மொழி - ஆராய்ச்சி

மொழி-ஆராய்ச்சி எல்லாத் தேசங்களிலும் எல்லா மொழிகளிலும் உள்ள தொன்றே. பல நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த ஓர் எகிப்து அரசன் 'மக்கள் முதன் முதற் பேசிய மொழி யாது?' என்றதைக் குறித்து ஒரு வினோதமான ஆராய்ச்சி செய்தானாம் குழந்தையொன்றை அது பிறந்தவுடன் காட்டிற்கு அனுப்பி, அதை ஊமையும் செவிடுமாயுள்ளவர்களைக் கொண்டு உணவூட்டி வளர்த்தான். வாலிபனாக அக் குழந்தை வளரும்வரை மக்கள் பேச்சொலி யொன்றும் அது கேட்காத வண்ணம் பாதுகாத்து வந்தான். குழந்தையோடு விளையாடுவதற்குக் கூட வெகுகாலமாக எதையும் அனுமதிக்கவில்லை. கடைசியாகச் சிறிது கருணை பிறந்து அதனோடு விளையாட ஓர் ஆட்டுக் குட்டியை அனுப்பினான். இந்த ஆராய்ச்சியின் முடிவைத் தெரிதற்கு ஒருதினம் குறிக்கப்பட்டது. அன்று அரசன் கொலுமண்டபத்திலே வீற்றிருந்தான். அவனைச் சூழ அவனுடைய மந்திரி முதலானவர்கள் எழுது கருவிகளோடு எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். மக்கள் முதன் முதற் பேசிய மொழி இக் குழந்தை-மனிதன் வாயிலிருந்து வெளிவந்தவுடன் குறித்துக் கொள்ள வேண்டாமா! ஆனால், அந்தக் குழந்தை-மனிதன் 'பாஅ' என்று சத்தமிட்டதுடன் நின்றுவிட்டான்! இந்தச் சொல் எந்த மொழியைச் சார்ந்ததென்பதைப் பற்றி மொழி ஆராய்ச்சியாளர்களிடையே நீண்ட காலமாகப் பெரும்போர் நடந்து வந்ததாம்!

இதைப்போல் எத்தனையோ ஆராய்ச்சிகள் மேல் நாடுகளில் பதினெட்டாம் நூற்றாண்டு முடிய நிகழ்ந்து கொண்டிருந்தன. அக்காலத்திற்குப் பின்பு இது போன்ற வழியை விட்டுச் சரியான வழிகளில் இவ் ஆராய்ச்சி பிரவேசிக்கத் தொடங்கிவிட்டது. அதற்கப்புறந் தான் மொழி-ஆராய்ச்சியும் ஒரு கௌரவ ஸ்தானத்தைப் பெற்றது.

மற்றை நாடுகளில் மொழிநூல் ஆராய்ச்சிக்கு ஒரு கௌரவம் ஏற்படவே, நமது நாட்டிலும் இவ்வகை

ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். மொழிகளின் தத்துவம் பற்றிப் பலவகையான ஆராய்ச்சிகள் செய்ய இடமுண்டு. அவற்றுளெல்லாம் சொற் பிறப்பு அல்லது உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சியே ஆனந்தத்தை விளை விக்கக் கூடியதாக உள்ளது. இச் சொல்-ஆராய்ச்சியை நமது நாட்டு அறிஞர்கள் எவ்வாறு நிகழ்த்தி வந்திருக்கி றார்கள் என்பதைப் பார்ப்போம்.

சொல்லின் தோற்றம் ஆராய்ச்சிகள்

முதலில் தமிழ்ச் சொற்களெல்லாம் எங்கிருந்து தோன்றின என்னும் கேள்வி மொழி-ஆராய்ச்சிக்காரர்களுடைய மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. இக் கேள்விக் குரிய விடையைப் பலரும் பலவாறாகக் கண்டனர்.

'உலகத்துக்குச் சூரியனே கண்: சூரியனுக்கு ஒரு பெயர் 'சுல்' என்பது; ஆகவே, எல்லாச் சொற்களுக்கும் சுல் என்பதே கண். எல்லாப் பொருளும் சூரியனாலே உண்டாகின்றன; எல்லாச் சொற்களும் சுல் என்பதனாலே உண்டாகின்றன' என்பது ஒரு கொள்கை. இக்கொள்கை யைத் தமிழ்ப் பண்டிதர் மாகறல்-கார்த்திகேய முதலி யாரவர்கள் தமது 'மொழிநூல்' என்ற புஸ்தகத்தில் (இலக். பக். 63) 1913-ம் ஆண்டில் வெளியிட்டார்கள். 'சுல்' எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதெனின், சூரியனது வெப்பமான கிரணமானது ஒருவன் மேனியிலே படும் போது வெப்பத்தைத் தாங்கமாட்டாது சுரீரெனச் சுடு கிறதே என்கிறான். 'சுல்' என்பது சுரீரெனத் திரிந்தது என்பர். (பக். 61).

இந்த முடிபு வேதாந்த சாஸ்திர முடிபோடு மிகவும் பொருத்தமாயுள்ளதை எளிதிலே உணரலாம். உலகத் துள்ள எல்லாப் பொருள்களும் ஒரே பொருளின் தோற் றங்கள். இதைப் போலவே தமிழ் மொழிச் சொற்களெல் லாம் சுல் என்ற ஒரே தாதுவினின்றும் பிறந்தன என்று கொள்ளுதல் எத்தனை திருப்திகரமாயிருக்கிறது!

ஆனால், சைவசித்தாந்திகளும் பிறரும் வேதாந்த முடிபை ஒப்புக் கொள்வது முடியாதல்லவா? அதுபோல, இந்தச் 'சுல்' முடிபையும் இதன் ஆசிரியரைத் தவிர வேறொருவரும் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை.

மற்றை மொழி-ஆராய்ச்சியாளர்களுள் ஒருவர் - 'தமிழ்ச் சொற்கள் அனைத்தும் அண்மை, செய்மை, கீழுறல், மேலுறல் எனும் இடச் சம்பந்தம் பற்றியே பிறந்தன. இவ் இடச்சார்புகளை முறையே அ, இ, உ, எ என்ற உயிரெழுத்துக்கள் உணர்த்தும்; இவ்வுயிரெழுத்துக்களே தமிழ்ச் சொற்களுக்கு மூலம்' என்பர். இவர் அர்ச். ஞானப்பிரகாசர்.

தமது கொள்கையை விளக்கி, 'தமிழ்ச் சொற் பிறப் பாராய்ச்சி' என்ற ஓர் அரிய நூலை 1932-ல் இவர் வெளியிட்டுள்ளார். குரங்கு என்ற சொல்லை எடுத்துக் கொண்டு அது இடச்சார்பு பற்றித் தோன்றிய வரலாற்றையும் விவரித்திருக்கிறார் (பக். 9). 'குர-ங்கு எனுஞ் சொல் கொடு-கு என்னுஞ் சொல்லின் மரூஉ; கொடுகு-தலே, குடங்கு-தல், குரங்-கு-தல் என வருவன; கொடு-கு என்பது குட-கு என்பதன் மரூஉ; குட்குச் சொற்கு உற்பத்தி குழை யென்பது; குழைதல் உலைதலி னின்றும் தோற்றுவது; உலைதல் உள் விழுந்து விழுந்து வருதலாம். வளைதலும் அது; இவ்வாறாக உள் என்னுஞ் சொல்லே 'குழைதல்' 'குடங்குதல்' 'குரங்குதல்' என நின்று வளைந்து குடங்கிய மேனியையுடைய மிருகத்தைக் குறிக்கும்' என்பர்.

மக்களுக்கு மூலமான குரங்கின் தோற்றத்திற்குச் சமமாகத்தானே தமிழ் மக்கள் பேசும் சொற்களும் இருத்தல் வேண்டும்! இந்த ஆசிரியர் லத்தீன், கிரீக் முதலிய மொழிகளையும் கற்றவர். சமீபத்தில் தமது அரிய ஆராய்ச்சி முடிபுகளை உட்புகுத்தி ஓர் அருமையான 'சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ்-அகராதி' என்ற அகராதி எழுதியிருக்கிறார். அதன் பகுதி யொன்று 1938-ல் வெளியிடப்பெற்றிருக்கிறது.

இன்னொரு ஆராய்ச்சியாளர் சொல்வதைப் பாருங்கள்; 'மனிதனுக்கு பூமியே முக்கியமானது; ஆதலால் பூமியும் அதன் பல பகுதிகளும் அதினின்றும் தோன்றுவனவுமே அவனால் முதன் முதற் பெயரிடப் பட்டன; இப் பெயர்கள் ஓரசைச் சொற்களாகவே இருத்தல் வேண்டும்; இவ் ஓரசைச் சொற்களும் மிகச் சிலவாகவே ஆதியில் இருத்தல் கூடும்; இவையே தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள்; இவ் எழுத்துக்களோடு முன்னும் பின்னும் ஆய்தத்தைச் சேர்த்தும், இவற்றை இவ்விரண்டாகவும் மும் மூன்றாகவும் புணர்க்கும் முறைகளிலெல்லாம் புணர்த்தும், சொற்களைப் பெருக்கினர்' என்றும் இவர் கூறுவர்.

அன்றியும் ஆங்கிலோ-ஸாக்ஸன் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதும் இவர் கொள்கை. இக்கொள்கைகளை விவரித்து ஆங்கிலத்தில், ஒரு நூல்* 1935-ல் வெளியிட்டுள்ளார். அதில் 30-ம் பக்கத்திலே கொடுக்கப்பட்டுள்ள சொல்-உற்பத்தி ஒன்று இங்கே எடுத்துக் காட்டத்தக்கது: 'த' அல்லது 'தஃ' என்பது பூமி அல்லது அதன் பகுதியை யுணர்த்தும்; தஃக அல்லது தக்கன என்பது மக்களை தோற்றுவித்த ஆதி புருஷர்களிலொருவரை உணர்த்தும்; இந்த 'தக்க' என்பதும் ஆங்கிலோ-ஸாக்ஸன் 'த்யூக்', ப்ரெஞ்சு 'துக்', லத்தீன் 'துக்ஸ்', இத்தாலியின் 'தோகெ' (Doge) என்பனவும் தொடர்புடையன என்று எண்ண இடமுண்டு. தக்காணம் என்பது தக்கனது நாடு என்பதாகலாம். தரை (இறுகிய பூமி) என்பதும், ஆங்கிலம் எர்த் (Earth) லத்தீன் தெர்ரா (Terra) என்பவையும் ஒன்று; தரணி = பூமி = நாடு = யமபூமி; இதனோடு துரேனியன் என்பதை ஒப்பிடுக. தரையிடம் = ஒருநாடு = தரவிடம் = திராவிடம், திராவிடர்களுக்குரிய நாடு. தரி அல்லது தரிசு = விளை நிலமில்லாத பூமி; தரிதரம் = சாகுபடி செய்யாத பூமி. தரிதரம் அல்லது தரித்திரம் = பூமி விளைவற்றுப் போவதால் ஏற்படும் வறுமை. தஃ அல்லது தா—கொடு; இது முதலில் பூமி தானத்தைக் குறித்தது; லத்தின் டேட்டம் (datum) என்பதை ஒப்பிடுக. தம் என்ற சொல்லிறுதி = உரிமைப் பூமி என்பதை யுணர்த்தும்; ஆங்கிலத்தில் ட்யூக்டம் (dukedom) என்பதிலுள்ள 'டம்' என்பதனோடு ஒப்பிடுக. இந்த மொழி-ஆராய்ச்சியில் ஆய்தம் பலவாறு பயன்படுவதைக் காணலாம். ஆய்தத்தின் உபயோகத்தை நன்றாக உணர்ந்த பிற்பாடுதான் அது எத்தனை சிறந்த ஆயுதமென்பது நமக்கு விளங்கும்!

மேற்குறித்த ஆராய்ச்சிகளில் தமிழ்ச் சொற்களின் பிறப்பிடம் சூரியன் என ஒருவரும், இடச்சார்பு அல்லது திசை என ஒருவரும், பூமி என ஒருவரும் கூறுதல் காணலாம். இக்கூற்றுக்களுள் எது உண்மை என்பதை ஆராய்தல் இவர்களின் சகோதரர்களான ஏனைய மொழி-ஆராய்ச்சிப் புலவர்களுக்குரிய கடமையாகும். இப்புலவர்கள் ஆராய்ந்து முடிவுகட்டிக் கொள்ளும்படி இவ்விஷயத்தை விட்டுவிட்டு,

---

*Dravidian Researches : Stray Hints on a comparative Study of The Ancient Dravidian Language and People and Their Relation to others : Vaduvur Duraiswamy Iyengar.

வேறொரு வகையான மொழி-ஆராய்ச்சியைக் கவனிப்போம். தமிழ்ச் சொற்கள் அனைத்திற்கும் தாது அல்லது பிறப்பிடம் ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமென்ற கொள்கையை இவ் இரண்டாவது வகை ஆராய்ச்சியாளர் கொள்ளவில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியே பிறப்பிடம் இருக்க வேண்டும் என்ற கொள்கையே இவர்களுக்கு உடன்பாடாவது. ஆனால் ஒரு விஷயத்தில் இருவகை ஆராய்ச்சியாளர்களும் ஒத்துச் சொல்லுகிறார்கள். சொல்லுக்கும் சொல்லால் உணர்த்தப்படும் பொருளின் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது இருவருக்கும் பொதுவான கொள்கை. அதாவது சொல் அதற்குரிய பொருளின் தன்மையை நன்றாக உணர்த்துமாறு அமைந்துள்ளது என்பதேயாகும்.

இவ் இரண்டாவது வகை ஆராய்ச்சியிலும் பலர் உழைத்து வந்திருக்கின்றனர். சில ஆண்டுகட்கு முன் திருநெல்வேலியில் தமிழறிஞராக விளங்கிய திரு. பால்வண்ண முதலியாரைப் பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். முதலியார் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து நூற்றுக் கணக்கான சொற்களுக்கு உற்பத்தி கண்டு வைத்திருந்தார்கள். அவைகளையெல்லாம் தமிழுலகு பெற்று ஆனந்திக்கும்படியான பாக்கியம் இல்லாமற் போயிற்று. இவர்களுடைய நண்பர்கள் வாயிலாக, ஒரு சில சொற்களுக்குரிய உற்பத்தியே இப்போது நமக்குத் தெரிகிறது. அவற்றுள் இரண்டு சொற்களை இங்கே தருகிறேன்.

வயிறு என்கிற சொல் எவ்வாறு பிறந்தது? இதனை வாய் + ஈறு எனப் பிரித்தல் வேண்டும். வாயினுடைய ஈறாக இருத்தலினாலே 'வாயிறு' எனப் பெயர் பெற்றது; வாயிறு என்பது முதல் குறுகி 'வயிறு' என்றாயிற்று. அரும்பு என்ற சொல் எவ்வாறு பிறந்தது? ஆர் + உப்பு எனப் பிரித்தல் வேண்டும். உப்புதலைப் பொருந்தினமையினாலே 'ஆருப்பு' எனப் பெயராயிற்று; இது முதல் குறுகி, மெலித்தல் விகாரம் பெற்று, அரும்பு என ஆயிற்று.

இவ்வாறு தமிழ்ச் சொற்களின் பிறப்பை உணர்த்தினர் முதலியார். ஒரு சிலர் ஆங்கிலச் சொற்களுக்கும் இவ்வகை உற்பத்தி காட்டித் தம்முடைய மொழி-நூல் ஆராய்ச்சி வன்மையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். பார்பேரியன் (barbarian) என்ற ஆங்கில வார்த்தையைப் பலரும் அறிவார்கள். இவ்வார்த்தை பார்ப்பார் + ஐயன்

என்று வழங்கும் இரண்டு தமிழ்ச் சொற்களின் புணர்ப்பினாற் பிறந்ததென்று கொண்டு வடுவூர் துரைசாமி ஐயங்கார் உற்பத்தி காட்டியிருக்கிறார். இவர் எழுதிய 'Missing link' என்ற ஆங்கிலப் புஸ்தகத்தில் இது போன்ற மொழி யாராய்ச்சிகள் எத்தனையோ காணப்படுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியில் ஒரு சொல்லை இரண்டு சொற்களாகப் பகுத்து அவை சொற்பொருளை உணர்த்து மாறு காட்டப்படுகிறது. இதற்கு அப்பாலும் சென்று அடிப்படையைக் காணவேண்டும் என்பது ஓர் அறிஞரது கொள்கை. இவர் கைக்கொண்ட முறை அறிந்து இன்புறத் தக்கது. சொல்லை எழுத்தெழுத்தாகப் பிரித்து, ஒவ்வோர் எழுத்துக்கும் பல பொருள்களைக் கற்பித்து, சொல்லுக் குரிய எழுத்துக்களின் பொருள்களில் தக்கவற்றை ஒருங்கு சேர்த்து, இங்ஙனம் திரண்ட பொருள் சொல்லுக்குரிய பொருளின் தன்மையைச் சுட்டுவதாகக் காட்டுவதே இம் முறை. இவர்கள் கொடுத்துள்ள உதாரணங்களுள் இரண் டினை எடுத்துக்காட்டி விளக்குகிறேன்.

மா = இலக்குமி. ம் + ஆ = மா; மகரம் மனவொப்பு, மன நிறைவு, மனமகிழ்வு, மனத்தினிமை என விருப்பம் எழுப்பத்தகு பொருளைக் குறிக்கும்; ஆ என்பது ஆதல்; எனவே துய்ப்போர்க்கு மனம் ஒப்பு நிலை, மன நிறைவு உண்டாகும்படி 'இன்பம் பயக்கி இம்மைக்குப் புகழ் பெருக்க இன்றியமையாத செல்வப் பொருளை அருள்பவள் மா' என்று பொருள் விரிக்கப்பட்டிருக்கிறது. 'பயக்கி' என்பது இதுவரைத் தமிழ் மக்கள் ஒருவர்க்கும் தெரியாத புதுச் சொல்! அதனால் என்ன?

இங்ஙனமே கா என்பது காவல் செய் என்னும் பொரு ளுடையது. இதனை க் + ஆ எனப் பிரித்தல் வேண்டும். ககரம் தொடவும் படவும் தக்க நிலைமையிலுள்ள வடிவுடைய பொருள். ஆ என்பது 'ஆகுதலைக் கொள்'. எனவே தொடவும் படவும் தக்க நிலைமையிலுள்ள ஓர் வடிவுடைய பொருளில் தன் உள் எண்ணமும் நிறைவேற்றும் தொழிற் பாடும் ஆகுதலைக் கொள் (அதாவது காத்திரு) என அமையு மாம்!

இச் சொற் பொருள்களை யாவரேனும் மறுக்க முடி யுமா? இங்கே காட்டியவை போன்ற விநோத ஆராய்ச்சி களையெல்லாம் செய்தவர் காலஞ்சென்ற திருவனந்தபுரம்

திரு. டி.எஸ். கணேச பிள்ளை. இவர் 'தமிழ்த் தோற்றத் தேற்றம்' என்ற நூலொன்று எழுதியுள்ளார். இந்த நூலைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1937-ல் வெளியிட்டுத் தமிழுலகுக்கு உதவியிருக்கிறார்கள்.

இத்தகைய சொல்-ஆராய்ச்சிகள் ரஸிகர்களை எப்பொழுதும் ஆனந்தக் கடலில் மூழ்கும்படியாகச் செய்யக் கூடியன. மறுமலர்ச்சி யுலகிற்கு இந்த ஆனந்தம் கிட்டாமற் போகலாமா?

12. சொல்லாக்கம்

மொழி நூலாராய்ச்சி

மொழி நூலாராய்ச்சியில் புகப் புக, நாம் சாதாரணமாக நினைத்தறியாத பல பொருள்கள் புலப்படுகின்றன. தற்காலத்தில் நூலாசிரியர்கள், முக்கியமாக விஞ்ஞான சாத்திரம் முதலியவற்றை மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள், பத்திராதிபர்கள் முதலியோர் புதுப் புதுப் பதங்களை இயற்றுகின்றனர் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், உண்மையை ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்கள் புதிய பதங்களைப் புத்தம் புதியவாய் இயற்றுகின்றார்கள் என்று சொல்ல முடியாது.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறித்த 'மொழி நூலாராய்ச்சி' என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். 'மொழி' என்பது நமக்குத் தெரியும். 'நூல்' என்பதும் நமக்குத் தெரியும். 'ஆராய்ச்சி' என்பதை இக்காலத்தில் அறியாதவருண்டோ! மூன்று சொற்களுள் முதலிரண்டு சொற்களும் மிகப் பழமையானவை. ஆராய்ச்சி என்பது பிற்பட்டு வழக்கிற் புகுந்த ஒரு சொல்.

மொழி நூல்

'மொழி நூல்' என்பது ஆங்கிலத்தில் பைலாலஜி (Philology) என்னும் கருத்தை உணர்த்துவதற்குப் பதிலாக அமைக்கப்பட்ட ஒரு தொடர்; தனிப்பதம் அன்று. இதனை அமைத்தவர் இப்பொழுது தெரிந்தவரை மாகறல் கார்த்திகேய முதலியார் என்று தோன்றுகிறது. 'ஆராய்ச்சி' என்பது தொல்காப்பியத்தில் ஓரிடத்தில் (தொல், பொருள். 257) வருகிறது. இவர்தான் இச் சொல்லை முதன் முதல் ஆட்சிக்குக் கொண்டு வந்தார் என்று கொள்ளலாம். உண்மையான சங்க இலக்கியங்களில் - அதாவது நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப் படை நீங்கலாகவுள்ள ஒன்பது பாடல்கள் ஆகியவற்றில் இச்சொல் ஓரிடத்தும் காணப்பெறவில்லை. எனவே இச் சொல் கி.பி. 5-ம் நூற்றாண்டில் வழக்கில் வந்திருக்கலாம். திருவள்ளுவர் இச் சொல்லை அருமை யுணர்ந்து மிகுதியும்

எடுத்தாண்டுள்ளனர். அவர் காலம் முதற்கொண்டு அச்சொல் வரவரப் பெருகிவந்துள்ளது. இப்போது விஞ்ஞானம் முதலிய நூதன விடயங்களுக்கும் இது பொருந்துவதாயுள்ளது. 'ஆய்' என்ற வினையடியோடு பொருந்துதல், நிரம்புதல் என்று பொருள்படும் 'ஆர்' என்ற வினையடியைச் சேர்த்து இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது. வணிகனொருவன் தன்னிடமுள்ள கைப்பொருள் கொண்டு வாணிபம் செய்வதனோடு இது ஒக்கும்.

'விஞ்ஞானம்' என்று கூறினேன். இவ் வடசொல் மிகப் பழமையானது. அதர்வ வேதத்திலேயே இது காணப்படுகிறது. 'வி' என்ற உபசர்க்கம் ஞானம் என்ற சொல்லோடு சேர்ந்து அமைந்தது இது. ஆனால், அங்கே இச்சொல்லுக்குப் பொருள் விவேகித்துப் பகுத்து உணர்தல் என்பதாம். பிற்பட்ட காலங்களில் வடமொழியில் தானே பல வகையாகப் பொருள் விரிந்து விட்டது. தமிழில் மேனாட்டார் வழங்கும் 'சயன்ஸ்' (science) என்றதன் மொழிபெயர்ப்பாக இது தற்காலத்தில் வழங்கி வருகிறது. இது போன்ற பிறமொழிச் சொற்களை வழங்குதல் கடன் கொண்டு பெரிதாகச் செய்யும் வாணிபத்திற்கு ஒப்பாகும்.

மக்கள் சொல்லை இயற்றுவதில்லை

மேலே குறித்த மொழி நூலாராய்ச்சி, விஞ்ஞானம் என்ற சொற்களுள் ஒன்றேனும் புத்தம் புதிதாக ஆக்கப் பெறவில்லை என்பது தெளிவு. எனவே, பொதுப் படப் புத்தம் புதிய சொற்களை மக்கள் இயற்றுவதில்லை என்று நாம் முடிவு கட்டினால் அது பிழையாக மாட்டாது. இதற்கு ஒரு விலக்கு உண்டு. ஓசை பற்றி வரும் இரட்டைக் கிளவிகளை ஒரு வேளை புதிதாக உண்டு பண்ணலாம். 'டபார் டபார் என்று அடித்தான்' என்ற வாக்கியத்தில் இதைக் காணலாம். இது போன்றவை தவிர மக்களது முயற்சியினால் வேறு புத்தம் புதிய சொற்கள் அமைக்கப் பெறுவது அரிது. இரட்டைக் கிளவிகளை நமது நூலாசிரியர்கள் அடிக்கடி எடுத்தாளமாட்டார்கள். ஏக தேசமாக நிர்ப்பந்த வசத்தினாலே தான் வழங்குவர். கம்பன் இவ்வகைத் தொடர்களைப் பொருளுணர்ச்சி தெற்றெனப் புலப்படுதற்குப் பல இடங்களில் வழங்கியிருக்கிறான்.

சளசள வெனமழைத் தாரை கான்றவே

(பால. திருவவதார. 46)

களகள வுதிர்ந்தது கயற்கண் ஆலியே

(பால. உண்டாட்டு. 29)

கெண்டைத் தடங்கண்ணாள்
உள்ளே கிளுகிளுத் தாள்

(யுத்த மாயாசனக. 87)

இரட்டைக் கிளவியையே வினையாகவும் கம்பன் இங்கே வழங்குதல் காணலாம். 'கிளுகிளுத்தாள்' என்பது 'கிளு கிளு' என்ற இரட்டைக் கிளவியின் அடியாகப் பிறந்த வினைச்சொல். 'குதுகுதுத்தல்' என்ற பரிபாடல் - பிரயோகமும் (நாற்றங் குதுகுதுப்ப, பரிபா. 20, 23) இவ்வகையினதே. இவைகளெல்லாம் ஒரு செயலுக்கு உருவமைத்துக் கொடுத்து, ஒரு நிகழ்ச்சியை நமது கண்முன் கொண்டு வருகின்றன.

புத்தம் புதிய சொற்களை இயற்ற இயலாமைக்கும், அவை வழக்கிற் பயிலாமைக்கும் தக்க காரணங்கள் உள்ளன. ஒரு முக்கியமான காரணம் மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை வைத்துக் கொண்டே புதிய தொடர்கள் அமைத்து அவற்றால் மென்மேலும் பெருகி வருகின்ற அவசியத்தை நிரப்ப முயலுகிறான் என்பது வேறொரு காரணம். புத்தம் புதிய சொற்களை அமைத்தால் அவை பிறர்க்கு விளங்கமாட்டா. இயற்றியவன் தனக்குக் கூடப் பிறிதொரு காலத்தில் விளங்குமோ என்பது சந்தேகந் தான். மூன்றாவது ஒரு காரணம் சூனியத்திலிருந்து ஒன்றும் பிறக்கமாட்டாது என்பது. இது கேவலம் தத்துவக் கொள்கை மாத்திரமன்று. உலகத்துள்ள எல்லாவகைத் தோற்றங்களுக்கும் இது ஒக்கும். சொற்களின் தோற்றத் திற்கும் இது பொருந்துவதே. ஒன்று பிறிதொன்றாகத் திரிதல் அல்லது மாறுதல் என்பதை நம்மால் அறிய இயலும். சூனியத்தில் இருந்து ஒன்று பிறப்பதென்பது நம் அறிவுக்கே எட்டாததொன்றாகும். இக் காரணங்களும் பிற காரணங்களும் புத்தம் புதிய சொற்களை அமைப்பது மக்களால் இயலாததென்பதை உணர்த்துகின்றன.

உண்மை இது. ஆனால், பொதுவாக மொழிகளிலும், சிறப்பாக நமது தமிழ் மொழியிலும் சொற்கள் பெருகி வந்திருக்கின்றன. இது எப்படி முடிந்தது? இது ஒரு பெரு வியப்பே.

எவ்வகையில் தமிழில் சொற்கள் பெருகி வருகின்றன என்பதை நோக்குவோம்:

சொற்பெருக்கம்

'மொழிநூல்' என்பது போல இரண்டு தமிழ்ச் சொற்களின் சேர்க்கையினால் புதுப் பொருள்கள் குறிக்கப்படுகின்றன. 'மொழி மரபு' 'நூல் மரபு' என்று தொல்காப்பியர் கூறுவதும் இவ்வகையைச் சார்ந்தவையே. இவ்வாறு வருதலைத் தமிழில் வேற்றுமைத் தொகை என்போம். இங்ஙனமே அல்வழித் தொடரிலும் புதிய பொருள்களைச் சொற்கள் உணர்த்துகின்றமை காணலாம். 'கருங்கண்', 'நன்னுதல்', 'துடியிடை', 'சுடுசோறு' முதலியன இதற்கு உதாரணங்களாம். இந்நெறிகள் பற்றித் தமிழில் பிறந்துள்ள தொடர்கள் மிகப்பல. அடுத்த சொல்லாகிய ஆராய்ச்சி என்பதை எடுத்துக் கொள்வோம். இதிலடங்கிய சொற்கள் இரண்டும் வினையடிகள் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. இவ்வாறு இரண்டு வினையடிகள் வருதல் ஓர் அரிய அமைப்பாம். இவ்வரிய வழக்காறு எவ்வளவு சாதாரணமாக நிலைத்துவிட்டது, பாருங்கள்!

வினையடிகள் தாமேயாய் நின்றும் நீட்டல் முதலிய விகாரங்கள் பெற்றும் புதிய சொற்களாய்ப் புதிய பொருள்களை உணர்த்துகின்றன. 'கெடு' என்பது வினையடியாயிருக்க அது பெயர்ப் பொருளை உணர்த்துதல்,

> **கெடுவாக வையாது உலகம் நடுவாக**
> **நன்றிக்கண் தங்கியான் தாழ்வு** **(குறள் 117)**

என்ற திருக்குறளில் காணலாம். இங்ஙனமே, 'பெறு' என்ற சொல் 'பேறு' என நீண்டு இடம் நோக்கிப் பல்வேறு பொருள்களில் வருதலும் அறியத்தக்கது. வள்ளுவர் தாமே,

> **பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த**
> **மக்கட்பே றல்ல பிற**

என அமைத்துள்ளார்.

இக்கட்டுரையில் 'ஆனால்' என்ற சொல்லோடு சில வாக்கியங்கள் தொடங்குவதாக அமைக்கப்பட்டிருக்கிறது. சங்க காலத்தில் இவ்வாறு வருதல் இல்லை. இச் சொல் தானும் மிகப் பிற்பட்டது. வள்ளுவர் தாம் இதனை முதன் முதல் வழங்குகின்றார் என்று கொள்ளலாம். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' (53) என்பது அவரது திருக்குறள்.

இங்கே எச்சப் பொருளில் வந்துள்ளது. வாக்கியப் பகுப்பினாலே 'ஆனால்' என்பதைத் தனிப்பட எடுத்துக் கொண்டு புதியதாக ஒரு வாக்கியத்தைத் அமைக்கும் முறை தற்காலத்தில் தான் ஏற்பட்டது.

ஒரு சில தமிழ்ச் சொற்கள் விகாரப்பட்டுப் புது வடிவங் கொண்டு, முடிவில் புதுச் சொல்லாக அமைந்ததும் உண்டு. உதாரணமாக, 'வழுத்துதல்' என்ற சொல்லைக் கூறலாம். இது வாழ்த்துதல் என்பதன் திரிபே. 'வழுத்தினாள் தும்மினேனாக' (குறள் 1317) என்ற இடத்துப் பரிமேலழகர் கூறும் உரையும், 'பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள' என வரும் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்திற்கு (தொல் சொல். 377) தெய்வச் சிலையார் எழுதும் உரையும் இதனைத் தெளிவாக்குகின்றன. இது போன்றதே வீழ்ந்தான் - விழுந்தான். ஆழ்த்துதல் - அழுத்துதல் முதலியன.

பண்பாடு

புதிய விகுதிகள் சேர்ந்து புதுச் சொற்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குச் சமீப காலத்தில் தோன்றிய 'பண்பாடு' என்ற சொல் ஓர் உதாரணமாகும். முதன் முதலில் இவ்விகுதி சேர்த்து இச்சொல்லை எடுத்தாண்டவர் காலஞ்சென்ற ரசிகமணி டி.கே.சி. அவர்களாவர். ஆனால் இவ்விகுதி பண்டைக் காலத்தே உள்ளதுதான். மெய்ப்பாடு (தொல். பொருள். 248), கடப்பாடு (குறள் 211), தொடர்ப்பாடு (குறள் 345) முதலிய சொற்களால் இது விளங்கும். 'வாழ்ச்சி' என்றொரு சொல் தொல்காப்பியத்தில் (தொல். சொல். 870) உள்ளது. இக்காலத்தில் இச்சொல் மறைந்துவிட்டது. 'வாழ்வு', வாழ்க்கை என்றே கூறுவோம்.

இவ்வாறு விகுதிகளைச் சேர்ப்பதில் புதிய பொருள்களும் ஏற்படுதல் உண்டு. உதாரணமாக நடக்கை என்பதற்கும், நடப்பு என்பதற்கும், நடவை என்பதற்கும், நடத்தல் என்பதற்கு முள்ள வேறுபாடுகளை நாம் கவனித்தால் இது விளங்கும். 'நடை' என்ற சொல் தற்காலத்தில் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்ற பொருளில் வழங்கும். இப்பொருள் சங்க காலத்தும் பொருந்தும் எனக் கருதி 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்று புறநானூற்றில் (312) பாடங்கொண்டுள்ளனர் பதிப்பாசிரியர். 'நன்னடை' என்ற தொடரே நற்றிணை 32-ம் செய்யுளில் வந்துள்ளது. அங்கேயும் பொருள் இதுவல்ல. 'தண்ணடை' என்பதே புறநானூற்றுச் செய்யுளின் உண்மைப் பாடம்.

இச்சொல்லில் தற்காலப் பொருள் என்று குறித்தேன். இது காலத்துக்குக் காலம் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பொருள் மாறுபட்டு வழங்குதல் உண்டு என்பதை உணர்த்தும். ஒரு காலத்து வழங்கிய பொருள் பிறிதொரு காலத்து இல்லாமற் போதலும் உண்டு. இங்ஙனமே யன்றிப் புதுப் பொருள் தோன்றுதலும் காணலாம். உதாரணமாக, 'கழகம்' என்ற சொல்லிற்கு 'சூதாடு களம்' என்பது பழைய பொருள். தற்காலத்தில் கல்வி பயிலிடம் முதலிய சிறந்த பொருளிலும் இச்சொல் வழங்குகிறது. 'பல்கலைக் கழகம்' என்ற தற்கால வழக்கை நோக்குக. 'நாற்றம்' என்ற சொல்லைக் குறித்துப் பலரும் அறிவார்கள். இப்பொழுது துர்நாற்றம் ஒன்றுக்கே இது வழங்குகிறது. இங்ஙனமாகப் புதிய பொருளில் பழஞ்சொற்கள் வழங்கி வருதலைக் காணலாம்.

பிராகிருதச் சொற்கள்

இவ்வாறு வரும் சொற்கள் அனைத்தும் பெரும்பாலும் வேற்றுதவியை நாடாது தன் ஆற்றலின் விளைவாகவே தோன்றியவை. ஆனால், இவ்வகை ஆற்றலுக்கும் எல்லை உண்டு. புதிய பொருள்களையும் புதிய கருத்துக்களையும் உணர்த்துவதற்கு வேறு உதவியும் அவசியமாய் முடிந்தது. இதற்குத் தமிழ்-ஒலியோடு மிகவும் ஒத்திருக்கும் பிராகிருதச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் மிகப் பூர்வ காலத்திலுள்ள இலக்கியங்கள் கையாண்டு வந்தன. உதாரணமாக, 'பாசிச் செல்லாது ஊசி முன்னாது' (புறம். 229) என்ற இடத்தில் 'பாசி' என்பது 'பிராசி' என்பதன் பிராகிருதமாய்க் கிழக்கு என்று பொருள்படும், 'ஊசி' என்பது 'உதீசி' என்பதன் பிராகிருதமாய் வடக்கு என்று பொருள்படும். இங்ஙனமே, 'ஊராண்மை' என்ற சொல்லும் பிராகிருதத்தின் வழியாய்ப் பிறந்ததே. 'உதாரம்' என்ற சொல் 'ஊராண்மா', 'ஓராண்மா' என்று அர்த்தமாகதியில் வரும். இந்தச் சொல்லே வள்ளுவரால்

> **பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்**
> **ஊராண்மை மற்றதன் எஃகு** (குறள் 773.)

என்ற இடத்தில் ஆளப்பட்டது. இது வள்ளுவர் காலத்துத் தோன்றிய நூல்களிலன்றி அதற்கு முன்புள்ள சங்க இலக்கியங்களில் பயின்று வராதது. நச்சினார்க்கினியர் கலித்தொகையில் ' ஊராண்மைக் கொத்த படிறுடைத்து (கலித் 89) என்ற இடத்து 'ஊரையாளுந் தன்மை' என்று சொற்பொருள் விரித்துள்ளார். ஆனால், இச்சொல் வந்துள்ள ஏனை இடங்களிலெல்லாம் 'உபகாரம்', 'உபகாரியாந்

தன்மை' என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. இப் பொருள் கலித்தொகையில் வரும் பிரயோகத்திற்கும் பொருந்த அமைத்துக் கொள்ளுதல் இயலும். ஊரை யாளுந்தன்மை என்ற பொருள், மேற் காட்டிய திருக் குறளுக்கும் பொருந்தாது. அன்றியும் அதற்கும் உபகாரத் திற்கும் யாதோர் இயைபும் இல்லை. நச்சினார்க்கினியர் தாமாகக் கற்பித்துக் கொண்ட சொற்பொருளே இது எனல் தகும்.

கலவைச் சொற்கள்

இம்முறையில் மாத்திரமேயன்றி தமிழ்ச் சொல்லும் வட சொல்லும் கலந்து வரும் சொற்களும் தமிழில் உண்டு. உதாரணமாக, 'ஒருவந்தம்' என்ற சொல்லைக் கூறலாம். இவ்வகையான கலவைச் சொற்களும், தொடர்களும் பெருகு தலேயன்றி வடமொழிச் சொற்களும் நமது நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. வேதம், யூபம், நித்தியம் (ஓமகுண் டம்) முதலிய சொற்கள் உதாரணங்களாம். 'நித்தியம்' என்பது வடமொழியிலுள்ள 'சித்திய' என்பதன் திரிபு. இவ்வாறுள்ள வடமொழிச் சொற்கள் நமது சமய சாத்தி ரங்களுக்கு இன்றியமையாதனவா யுள்ளன.

வட மொழியேயன்றி, காலந்தோறும் ஏற்பட்டுள்ள பலவேறு தொடர்பாட்டினால் கன்னடச் சொற்களும், தெலுங்குச் சொற்களும், துருக்கச் சொற்களும், அராபிச் சொற்களும், ஸ்பானிஷ் சொற்களும், பிரெஞ்சுச் சொற் களும், போர்த்துகீயச் சொற்களும், டச்சுச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும், தமிழிற் புகுந்துவிட்டன. மலேயாச் சொற்களும் ஒரு சில தமிழில் உள்ளன. இவ்வாறு வந்துள்ள சொற்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம். இவைகளெல்லாம் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் நெறியை உணர்த்துவன.

தன்னாற்றல், பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல் என்ற இரண்டு வகையினால் தமிழ் மொழியில் சொற்கள் பெருகிவிட்டன என்பது மேற்கூறியவற்றால் புலனாகும்.

13. தமிழும் பிராகிருதமும்

தமிழ் உயர் தனிச் செம்மொழி; அதற்கும் வடமொழிக்கும் யாதோர் இயைபும் இல்லை; தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழ் நூல்கள் வடமொழி கலவாதவை; இங்ஙனம் கலவாதபடி பேசுதலும் எழுதுதலுமே இக்காலத்துத் தமிழ் மக்களது தனி நோக்கமாக இருத்தல் வேண்டும்: இவைபோன்ற கொள்கைகள் சில காலமாகத் தமிழ்நாட்டில் உலவிவருகின்றன. இக்கொள்கைகளுள் முதல் மூன்றும் ஆராய்ச்சிக்கு இடந்தருவனவாய், உண்மை இன்னதென்று நிலையிடுதற்குரியனவாய் உள்ளன. நான்காவது கொள்கை நமது விருப்பு வெறுப்புப் பற்றி எழுந்ததாகும்.

வடமொழியோடு நெருங்கிய தொடர்புடையன பிராகிருத மொழிகள்; பிராகிருதத்திற்கும் தமிழுக்கும் தொடர்பு உளதா என்று ஆராய்தலும் அவசியமாகும். இவ்வாராய்ச்சியை இதுவரை ஒருவரும் நிகழ்த்தவில்லையென்றே சொல்லலாம்.

பிராகிருதத்தின் பொது இயல்புகளிற் சிலவற்றை நோக்குவோம்:

1. எகர ஒகரங்கள் உண்டு.

2. ஶ, ஸ, ஷ, விஸர்க்கம் இவை இல்லை.

3. சொல்லின் இறுதியில் மெய்யெழுத்துப் பெரும்பாலும் வரமாட்டாது.

4. குறிலுக்குப் பின் இரண்டு மெய்களுக்கு மேல் வரமாட்டா.

5. ஒரு சொல்லில் வரும் கூட்டு-மெய்கள் பெரும்பாலும் ஓரினமாய் அமைந்துவிடுகின்றன. உதாரணமாக ரக்த என்பது ரத்த என்றும், சப்த என்பது சத்த என்றும் மாறிவிடும்.

6. ஒருமை பன்மையேயன்றி இருமை (dual) இல்லை.

இவைகள் தமிழ்மொழிக்கும் பொருந்துவனவாயிருத்தல் காணலாம். ஒலியியல்பும் இலக்கணமுமேயன்றி, சொற்கள் பலவும் தமிழுக்கும் பிராகிருதத்திற்கும் பொதுவாயுள்ளன. ஒரு சில சொற்களை நோக்குவோம்.

	தமிழ்	பிராகிருதம்
அக்கி	திருவிளையாடல்.சமண38	अग्गि
அத்தம்	பிங்கலந்தை	अत्थ (अर्थ)
இசை	புறம். 158	जस
உவச்சன்	கம்பன், தனியன்	उवज्ज: (उपाध्याय)
ஊராண்மை	குறள், 773	ओरल (उदार)
ஐயர்	தொல், பொருள். 145	अय्य
ஓமாலிகை	சிலப். 6,77	नोमालिय
கப்பம்	சிலப். 11, 154	कप्प
கண்ணன்	திருவாய்மொழி 10,5,1	कण्ह
கலுழன்	கம்பன்	गरुल
காமம்	cf. காமக்கணி	गाम (ग्राम)
கோட்டி	குறள், 401	गोट्ठ
சதுக்கம்	சிலப். 5, 134	चदुक्क
சிட்டன்	திருவாசகம், 10, 28	चिट्ट
சுண்ணம்	தொல். சொல். 406	चुण्ण
தக்கிணம்	தக்கிணன்; சிலப். 23, 95	दक्खिण
தம்பலம்	கலித். 65	तंबोल
தயிர்	குறுந். 167	दहि
தலைவர்	தொல். பொருள். 72	तलवर
தானம்(இடம்)	பெருங்கதை 18, 106	थान
திட்டி	மணிமே. 9, 49	दिट्ठि
துவை	புறம், 4	धुवै
தூசு	சிலப். 5, 18	दुस
தொடி	புறம், 24	तुडिय
நேயம்,நேளம்	புறம். 3	नेह
படிமை	தொல், பொருள். 30	पडिमा
பள்ளி	குறுந். 46	पल्लि
பளிங்கு	குறிஞ்சிப்பாட்டு, 57	पह्लिका
பாயிரம்	நன்னூல், 1	पहिर, बहिरिय
பிசை	குறுந். 167	पिसै
மட்டம்	குறுந். 193	मट्ट (मद्य)
மயானம்	கம்பன் (சுடுமயானத்திடையே)	मसान
முத்து(முத்தம்)	புறம். 218, 377	मोत्त

மையம்.	சூடா.	मय्य
வயிரம்	புறம். 365	वैर
விஞ்சை	பெருங்கதை, மகத.20,56	विञ्ज (विद्या)

இவற்றுள் இசை, உவச்சன், தயிர், தலைவர், தூசு, தொடி, முத்து என்பன தமிழ் மொழியொன்றுக்கே உரியன என்று நம்மிற் பலரும் கருதியிருப்பர். பிராகிருதத்திலும் இவை காணப்படுகின்றமை சிறிது வியப்பாக இருக்கும். மற்றவைகள் பிராகிருதத்திலும் காணக்கூடியவைவையே. இரு மொழிகளுக்கும் பொதுவாகவுள்ள சொற்களுள், மேற்காட்டியன மிகச் சிறியதோர் பகுதியே யாகும். இவற்றிற் பெரும்பாலன தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பயின்றுவந்தன.

இனி, தற்காலத்தில் பெரிதும் வழங்கிவரும் சொல்லொன்றினை நோக்குவோம்.

சித்திரம் என்பதனை வடசொல்லென ஒதுக்கி, அதற்கு மாறாக ஓவியம் என்ற சொல்லை வழங்குகிறோம். இதனைத் தூய தமிழ் என்றே தமிழ் மக்கள் கருதி வருகின்றனர். பண்டை இலக்கியங்களில் ஓவம் (புறம். 251) எனவும், ஓவு (பதிற்றுப். 68, 17) எனவும் இச்சொல் உருவந் தாங்கி நிற்கிறது. ஓவி எனவும் திருமங்கை மன்னர் (பெரியதி. 2,8,7) வழங்கியுள்ளார். இவையெல்லாம் ஓவியம் என்பதின் சிதைவுகளே, பிராகிருதத்தில் ஓவிய என்பது அலங்கரிக்கப்பட்ட என்ற பொருளில் வந்துள்ளது. நியுணோவிய என்ற தொடர்க்கு நிபுணனான ஓவியன் என்று பொருள் (Introduction to Prakrit: A.C. Woolner).

இங்ஙனமே உஜ்ஜோவிய என்ற பிராகிருதச் சொல்லை उद+द्युत என்ற வடசொல்லின் பிரதிரூபமேயென்று இவ் ஆசிரியர் கூறுவர். எனவே, ஓவியம் என்பது ஒளியுடன் திகழ்வது என்று சொற்பொருள் பெற்றுப் பின் அலங்காரம், சித்திரம் எனப் பொருள் கொண்டதாகும். 'ஓவியம்' என்ற சொல்லினையும் இவர் தந்துள்ளார். இவற்றை நோக்கும் போது ஓவியம் என்ற தமிழ்ச் சொல் பிராகிருதத்திலும் உள்ளமை தெளிவாம். இச்சொல் தமிழுக்கு மட்டும் உரியதெனல் பிழையாதல் காணலாம்.

மேற்காட்டியவற்றால் பண்டைத் தமிழ்ச் சொல் பற்றிய ஆராய்ச்சிக்குப் பிராகிருத மொழி உணர்ச்சியும்

ஆராய்ச்சியும் அவசியம் என்பது புலனாம். மொழியினங்களுள் தமிழ் எவ்வினத்தைச் சார்ந்தது என்பதனை வரையறுத்தற்கும் பிராகிருத வுணர்ச்சி இன்றியமையாததாகும். இவ்விஷயம் ஐயத்திற்கிடமின்றி அறுதியாக முடிவு செய்யப்பட்டுவிட்டதென்று நாம் கொள்ளுதற்கில்லை. நமது நாட்டில் ஆழ்ந்த தமிழறிவுடையாரைக் காணுதல் அருமையாகிவிட்டது. அபிமானமும் அகங்காரமுமே தலைவிரித்தாடுகின்றன. வடமொழி, பிராகிருதம் முதலிய மொழிகளைக் கற்றல் தானும் தமிழுக்குத் தீங்கு விளைப்பதாகும் என்று ஒரு சாரார் கூக்குரலிடுகின்றனர். இக் கூக்குரல்களுக்கிடையே தமிழாராய்ச்சி நடைபெற வேண்டுவதாயுள்ளது. உண்மை காணுதலையே தனி நோக்கமாகக் கொண்டு நெறிமுறை பிறழாது ஆராய்ச்சி செய்வதே நமது கடமை.

14. தமிழும் வைதிக வார்த்தைகளும்

தமிழில், மிகப் பூர்வகாலந்தொட்டு வடமொழிச் சொற்கள் வழங்கி வந்துள்ளன என்பதும், அச் சொற்கள் கால அடைவில் பெருகிக் கொண்டே வந்துள்ளன என்பதும் தமிழ் மொழியின் வரலாற்றை உணர்ந்தார் நன்கு அறிந்த உண்மைகளே. இவற்றுள் சில சொற்கள் மிகவும் தொன்மை வாய்ந்தன. வேதங்களிலேயே காணப்படும் சொற்கள் தமிழ்மொழியிலுள்ள பண்டை இலக்கியங்களில் வந்துள்ளன. இவ் இலக்கியங்கள் வேதத்தையே நேர்படக் குறிக்கின்றன. புறநானூற்றில் (2);

நாஅல் வேதம் நெறிதிரியினும்

என வந்துள்ளது.

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே (கடவுள் வாழ்த்து)

என நற்றிணையில் வருகின்றது. குறுந்தொகையில் (156),

படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொல் லுள்ளும்

என வேதமும் அதனை ஓதிவந்த முறையும் குறிக்கப் படுகின்றன.

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாளர் உறைபதி

எனப் பெரும்பாணாற்றுப் படையில் (300-301) வேதம் ஓதுதல் உணர்த்தப்படுகிறது. மதுரைக் காஞ்சியில்,

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய ஒழுக்கமொடு புணர்ந்து (468-469)

எனவும்,

தாதுண் தும்பி போதுமுரன் றாங்கு
ஓதல் அந்தணர் வேதம் பாட (655-655)

எனவும் வருகின்றன. இடைச் சங்கநூல் என்று கர்ணபரம் பரைக் கதைகூறும் தொல்காப்பியத்திலும்,

அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
(தொல். எழுத்து. 102)

எனவும்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

(தொல். செய்யு. 481)

எனவும் வந்துள்ளன.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள். 28)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் (குறள். 560)

எனத் திருவள்ளுவர் திருக்குறளில் வேதமும் வேதமோது வோரும் குறிக்கப்பட்டுள்ளமை காணலாம்.

ஒன்று புரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒரு முதுநூல் (புறம். 166)

எனப் புறநானூற்றில் வேதாங்கங்கள் ஆறும் குறிக்கப்படு கின்றன. பிரமனே வேதமுதல்வன் என்பது,

வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ

எனச் சிலப்பதிகாரம் (XIV, 49-50) தெரிவிக்கிறது. இந்த வேத புருஷனுக்குக் கற்பம் முதலியன இன்ன உறுப்புக்கள் என்பது,

கற்பம் கை; சந்தம்கால்; எண் கண்
தெற்றென் நிருத்தம் செவி; சிக்கை மூக்கு;
உற்ற வியாகரணம் முகம் பெற்றுச்
சார்பில் தோன்று ஆரண வேதக்கு

(மணி. 27, 100-104)

என்ற மணிமேகலையால் அறியலாம்.

வேதம் என்பதன் பரியாயமாகிய சுருதி[1] என்ற சொல்லை

உயர்ந்தோர் ஆய்ந்த கெடுவில் கேள்வி

என மொழி பெயர்த்துப் பரிபாடல் (2,24-15) கூறுகிறது. வேதத்தை உபநிஷதங்களினின்றும் வேறுபிரித்து

வேதத்து மறை நீ

எனவும் பரிபாடல் (3,66) உணர்த்துகிறது. இவ்வாறு வேதம், உபநிடதம் முதலியன இலக்கியங்களில் குறிப் பிடப்பட்டுள்ளமை காணலாம்.

வேதங்கள் ரிக், எஜுர், சாமம், அதர்வணம் என நால் வகைப்படும். இவற்றுள் ரிக் வேதம்தான் முதலில்

1. பிறிதொரு பரியாயமாகிய 'ஓத்து' என்பது சங்க காலத்திற்குப் பிற்பட்டதெனக் கருத இடமுண்டு.

தோன்றியது. அதர்வ வேதம் மிகப் பிற்பட்டது. இவை கி.மு. 2000 முதல் 1500 வரையுள்ள காலப் பகுதியில் தோன்றின என்பர் ஆராய்ச்சியாளர். இவற்றின் காலம் திட்டமாக வரையறை செய்ய இயலாததாயிருப்பினும் நமது பண்டை இலக்கியங்களுக்கு இவை மிகமிக முற்பட்டன என்பது வெளிப்படையாய்த் துலங்குகிறது.

இவ்வேதங்களில் வரும் சொற்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் வரும் சொற்களுக்கு மிகமிக முற்பட்டன என்பது சொல்லாமலே அமையும். ஆனால், இவ் வேதச் சொற்கள், ஆசிரியர்கள் நமது பரத கண்டத்தில் புகுந்த பின்னர், இங்கே வாழ்ந்துவந்த பூர்வ குடிகளிடமிருந்து பெற்றுக் கொண்டனவாக இருப்பினும் இருக்கலாம். அல்லது ஆரியர்களுடைய மொழிவளர்ச்சியிலும் நாகரிக வளர்ச்சியிலும் தோன்றிய சொற்களாகவும் இருக்கலாம். இங்குள்ள அதிபுராதன குடிகளிடமிருந்து கடன்கொண்ட சொற்கள் என்பதற்குத் தக்க சான்றுகள் வேண்டும். முதல் நோக்கில், துணிதற்குரிய தக்க சான்றுகள் இல்லாத வரையில், இவை ஆரியச் சொற்கள் என்று கொள்ளுதல் முறையாகும். வேதம் என்பதில் பிராஹ்மணங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில் வரும் வேதச் சொற்களை நோக்கினால், ஒரு சில சொற்கள் சங்ககால வழக்கில் மட்டும் உள்ளன. சில வேறு, சங்க காலத்தில் புகுந்து இடைப்பட்ட காலத்து இலக்கியங்களிலும், நிலவின மற்றுச் சில சொற்கள் இடைக் காலத்தில் மட்டுமே தமிழில் உலவி வந்தன. அதாவது, இடைக்கால வழக்கில்மட்டிலும் வழங்கி இப்போது வழக்கு வீழ்ந்துவிட்டன. சங்க காலத்திலேயே நமது பண்டை இலக்கியங்களில் புகுந்து இன்று வரையும் இருவகை வழக்கிலொன்றில் வழங்கி வருஞ் சொற்களும் உள்ளன. சில சொற்கள் இடைக்கால வழக்கிலும் தற்கால வழக்கிலும் காணப்படுகின்றன. கடைசியாக, தற்கால வழக்கில் மட்டும் வழங்கும் சொற்களும் உண்டு.

இச் சொற்களின் தன்மைகளை நோக்குதல் வேண்டும். ஒரு சில மிகப்பூர்வ காலத்தில் தமிழரசர்கள் போற்றி வந்த யாகத்திற்குரியனவாயும், சில, சமயங்களுக்குரியனவாயும், சில சோதிடத்திற்குரியனவாயும், வேறு சில 'நாட்டியம்', 'இசை' முதலிய நுண்கலைகளுக்கு உரியனவாயும் அமைந்திருப்பது காணலாம்.

இச் சொற்கள் தமிழ்ச் சொற்களின் உற்பத்தி ஸ்தானங்களைப் புலப்படுத்துகின்றன. சில நேரே வடமொழியி

னின்றும் வந்தன. சில சொற்கள் பிராகிருத வழியாய்த் தமிழில் வந்தன. இன்னும், சில சொற்கள் பாலி மொழி யின் மூலமாகத் தமிழில் வந்தன. இவற்றுள் நேரே வட மொழியினின்றும் வந்தவை பெரும்பாலும் வைதிக சமயத் துக்குரியனவாயும், பிராகிருத மூலமாய் வந்தவை ஜைன சமயத்துக்குரியனவாயும், பாலி மொழியின் மூலமாக வந்தவை பௌத்த சமயத்துக்குரியனவாயும் உள்ளன.

அன்றியும், இவை தமிழில் பிராகிருதச் சொற்கள் பெருகி வந்த வரலாற்றினை விளக்குகின்றன. இன்றையத் தமிழில் சுமார் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு வடமொழிச் சொற்கள் எனலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சுமார் நூற்றுக்குப் பத்து விழுக்காடு வட சொற்கள் உள் ளன. இடைக் காலங்களில் வரவர இவை மிகுந்து கொண்டே வந்துள்ளன.

முடிவாக, இச் சொற்களை வகைப்படுத்தி நோக்கி னால், அவ்வகைபாடு தமிழ்-இலக்கிய வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படும். சொற்களை நோக்கிய அளவில் ஒவ்வொரு சொல்லும் இன்ன காலத்தில் வழக்கில் புகுந் தது என்பது புலப்படுகிறது. உதாரணமாக, கராம், நாவாய், வதுவை முதலியன சங்க-இலக்கியங்களில் முதன் முதலில் வழக்கிற் புகுந்தன. குடி, குலம் என்பனவற்றுள் குடி என் பது சங்க இலக்கியத்திலும் குலம் என்பது இடைக்கால இலக்கியத்திலும் முதன் முதலில் புகுந்துள்ளன. இச்சொல் இடைக்கால இலக்கியம் என்று கருதப்படுவனவற்றுள் எல்லாம் காணுதல் அறியத் தக்கது. இங்ஙனமே நாமம், பாவம், பாதம் முதலிய சொற்களும் முதன்முதல் இடைக் கால இலக்கியத்திற் புகுந்தன. பழுதை, பிதிர், நரன், நாரி முதலியன பிற்கால இலக்கியங்களில் முதலில் புகுந் தனவாம்.

ஒரே சொல் முற்காலத்து ஒரு பொருளிலும் பிற் காலத்து வேறு பொருளிலும் வருவது கால அடைவைக் காட்டவல்லன. நாகம் என்ற சொல்லுக்கு யானை என்ற பொருள் பிற்காலத்து எழுந்ததாம். தோகை என்ற சொல் லுக்குப் பண்டை இலக்கியங்களில் பெரும்பான்மையாய் வரும் பொருள் மயில் என்பது. பிற்கால வழக்கில் தான் அதற்கு மயிற்பீலி என்ற பொருள் ஏற்பட்டது.

இங்ஙனமாக, நமது தமிழ்ச் சொல் உணர்ச்சியை மிகு வித்து, இலக்கியத்தில் கால வரையறைக்கு உதவி, சொற்

களின் உற்பத்தியை விளக்கிப் பலவாறு மேற்குறித்த சொற்கள் பயன்படுகின்றன.

இங்கே குறித்துள்ள வேதச் சொற்கள் மெக்டானல் (Macdonel) இயற்றிய வேத அகராதியி (Vedic Index)னின்றும் தொகுக்கப்பட்டன. இத் தொகுப்பு முற்ற முடிந்ததென்று சொல்ல முடியாது. உதாரணத்தின் பொருட்டே இத் தொகுப்பு இயற்ற நேரிட்டது. இதுபோலவே, பிராகிருதச் சொற்களும், பாலி வார்த்தைகளும் அம்மொழிகளுக்குரிய அகராதியினின்று தெரிந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வகைச் சொல்லாராய்ச்சி மேன்மேலும் நன்கு நடைபெறுவதானால், தமிழ்-இலக்கிய வரலாறும் தமிழ்மொழி வரலாறும் நன்கு அறிதற்கு இடமுண்டு.

வேத அகராதியினின்று:—

உற்கம்	उल्का	திசையிரு நான்கும் உற்கம் உற்கவும் (புறம். 41)
ஊசி	सूचि	பாசிச் செல்லாது ஊசி முன்னாது (புறம். 229)
		ஊசி வெண்டோடு (புறம்.100)
		ஊசி போகிய சூழ்செய் மாலையன் (அகம்.48)
சூதர்	सूत	சூதர் வாழ்த்த மாகதர் நுவல (மதுரைக். 670)
தூணம்	स्थूणा	வேள்வித் தூணத் தசைஇ (பெரும்பாண். 316)
பாசி	प्राच्य	பாசிச் செல்லாது ஊசி முன்னாது (புறம்.229)
மாண்(மான)	मान	எழுமாண் அளக்கும் விழுநிதி பெறினும் (நற். 16,8)
யூபம்(ரிக்)	यूपं	யூபம் நட்ட வியன்களம் பலகொல் (புறம். 15)
அரமியம்	हर्म्य	நிரைநிலை மாடத் தரமியந் தோறும். (மதுரைக். 451)
அவி(ரிக்)	हविस्	அவியுணவினோர் புறங்காப்ப (புறம்.377)
உல்கு(ரிக்)	शुल्क	உல்குசெயக் குறைபடாது (பட்டினப். 125)
உவணம்	सुपर्ण	செவ்வாய் உவணத்து உயர்கொடி (பரிபா.2,60)
ஐயவி	सर्षप	ஐயவி அப்பிய நெய்யணி நெடுவேல் (நெடுநல்.86)
கராம்	ग्राह	ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை (புறம். 104)
		முதலையும் இடங்கரும் கராமும் (குறிஞ்சிப். 257; மணிமே. 28,18)

கூபம்	कूप	கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்தால் ஒவ்வாதே (கம்ப. வீபிடண. 108) ('கூவல்' என்பது இதன் பழைய தமிழ் வடிவம், இன்றும் வழங்கிவருவது. கூவம்-கூவல். cf. பக்கம்-பக்கல்)
கூவல் (கூவம்)	,,	கூவல்அன்ன விடரகம் புகுமின் (மலைபடு. 366) களர்ப்படு கூவற் றோண்டி நாளும் (புறம். 311; சிலப்.29,8)
கோட்டம்	गोष्ठ	அணங்குடை முருகன் கோட்டத்து (புறம்.229)
கோவலர்	गोपाल	மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின் (பெரும்பாண். 166) பல்லான் கோவலர் படலை சூட்ட (புறம்.265)
தகரம்	स्थगर	தண்ணறுந் தகரங் கமழ மண்ணி (குறிஞ்சிப். 108)
தாபதம்(உபநிஷதங்களில் மட்டும்)	तापस	நாலிரு வழக்கில் தாபத பக்கமும் (தொல்.பொருள். புறத்.16) இமையத் தாபதர் எமக்கீங் குணர்த்திய (சிலப். 26,9) தாபதக் கோலம் தாங்கினம் என்ப (மணி. 18,28) தக்கோர் உறையும் தாபதப் பள்ளியும் (பெருங். இலா, 12,5)
தேஎம்(தேயம்)	देश	தெவ்வர் தேஎத்து (புறம்.6)
நாகம்	नाक	நாகத் தன்ன பாகார் மண்டிலம் (புறம். 367)
நாஞ்சில்(ரிக்)	लांगल	யானைத், தூம்புடைத் தடக்கைவாயொடு துமிந்து நாஞ்சிலொப்ப நிலமிசைப் புரள (புறம்.19)

பலாசு	पलाश	பகன்றைப் பலாசம் பல்பூம் பிண்டி (குறிஞ்சிப்.18 பலாசிற் செய்த துடுப்பின் நெய் சொரிந்து வேட்ப (சீவக. 834) தணக்கும் பலாசுங் கணைக்கால் ஞெமையும் (பெருங். உஞ்சைக். 52,42)
முத்தம்	विमुक्ता	கடல்பயந்த கதிர்முத்தும் (புறம். 218)
வையம்(தேர்)	वाह्य	தச்சன் செய்த சிறுமா வையம் (குறுந். 61)
வையம்(வையகம்)	वाह्य	இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ (சிறுபாண். 38)
அச்சு	अक्ष	அச்சொடு தாக்கி (புறம்.90)
அந்தி	सन्धि	அந்தியந்தணர் அருங்கட னிறுக்கும் (புறம்.2)
அமர்	अमर	அரசுபட அமருழக்கி (மதுரைக். 129)
அரவம்(ரிக்)	रव	செவிமுத லிசைக்கும் அரவமொடு (குறுந். 301)
அன்னம்(ரிக்)	हंस	அன்னச் சேவல் அன்னச் சேவல் (புறம். 67)
ஆணி	आणि	இலங்குதுளை ஆணி முடுக்கி (மலைபடு.27) உலகிற்கு ஆணியாக (நற். 139) தேர்க்கு அச்சாணி (குறள். 667)
ஆர்	आर	ஆர்சூழ் குறட்டின் வேர்நிறத் திங்க (புறம். 283)
ஆரம்	आर	அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய (புறம்.256)
ஆரியர்	आर्य	ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் (பதிற். 11,24)
ஆன்	आघ्न्या	ஆன்முலை யறுத்த அறனில் லோர்க்கும் (புறம்.34)

உலகம்(ரிக்)	लोक	மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் (புறம்.165)
எருக்கம்(எருக்கு)	अर्क	புல்லிலை யெருக்கம் (புறம். 106)
எச்சம்	श्लेष	வண்மையும் வளனும் எச்சமும் (பதிற்றுப். 74)
ஏணி(ரிக்)	श्रेणि	நளியிரு முந்நீர் ஏணியாக (புறம். 35)
ஏர்(ரிக்)	सीर	ஏரின் வாழ்நர் (புறம். 375)
ஒட்டகம்	उष्ट्र } उष्ठ	ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன (சிறுபாண். 154)
ஓணம்	श्रवण	மாயோன் மேய ஓண நன்னாள் (மதுரைக். 591)
கலம்(கலசம், கலயம்)	कलश	கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே (புறம். 228)
கவசம், கவயம்	कवच	புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய (புறம். 31)
கவயம்	कवच	பிரிவிணையரிந்த நிறஞ்சிதை கவயத்து (மதுரைக்.740)
களம்	खल	பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி (பெரும்பாண்.233)
கழுத்து(அதர்வ)	गलन्त	ஆடற் றகையள் கழுத்தினும் வாலிது (கலித்.109;15) கழுத்திலிடு கழங்கும் (பெருங். உஞ்சைக். 38, 172) நெடுங்கழுத்துப் பரணர் (சங்கப் புலவர்) உழுந்துடை கழுந்தில் (குறுந். 384)
காடு	काट	மரங்கொல் தச்சன் கைவல் சிறார் மழுவுடைக் காட்டகத் தற்றே (புறம். 206 காடுகொன்று நாடாக்கி (பட்டினப். 283)
காமம்	काम दाम	காமஞ்செப்பாதுகண்டது மொழிமோ (குறுந். 2) இருகாமத் திணையேரி (பட்டினப். 39)

காலம் (ரிக்)	काल	காலனும் காலம் பார்க்கும் (புறம். 41)
		காலம் உலகம் உயிரே உடம்பே (தொல்.சொல்.58)
குடி	कुडि	புல்வேய் குரம்பைக் குடிதொறும் பரந்து (புறம்.120)
		வியன்குடை, வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ (புறம்.35)
குலம்	कुल	குலம்பற்றி வாழ்தும் என்பர் (குறள். 956)
		மலையுறை கடவுள் குலமுதல் வாழ்த்தி (ஐங்குறு. 259)
கூடம்	कूट	கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத் தெறிந்த கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து (பெரும்பாண். 437,438)
கோபம் (இந்திரகோபம் முதற்குறை)	(इन्द्र) कोप	ஓவத்தன்ன கோபச் செந்நிலம் (அகம்.54)
		கொல்லை நெடுவழி கோபம் விரவவும் (சிறுபாண். 168)
கோள் (கிரகம்)	ग्रह	எல்லாக் கோளும் நல்வழி நோக்க (பெருங். இலா. 17,70)
		கோளும் நாளும் அடியாரை வந்து நலியாதவண்ணம் (சம்பந். 2. 85,11)
சக்கரம்	चक्	சக்கரக்கை மன்னுயிர் முதல்வன் (மணி. 13,57)
சகடம்	शकट	சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே. (புறம். 102)
சாகாடு	शकट	காவற் சாகாடுகைப்போன் காணின் (புறம்.185)
சந்திரன் (அதர்வ)	चन्द्र	சந்திரன் கதிரவன் தகுபுக ழயனொடு (சம்பந். 3,31,6)
		சந்திரபாணி (சிலப். 104)
		சந்திர தத்த னெனுமொர் வாணிகன் (மணி. 16,41)

சாதி	जाति	கடுப்புடைப் பறவைச் சாதியன்ன (பெரும்பாண். 229)
		கிட்டிய தேச நாம சாதி (மணி. 27,23)
		குலந்தாங்கு சாதிகள் நாலினும் கீழிழிந்து (திருவாய் மொழி. 3,7,9)
		நீர்வாழ் சாதியுள் (தொல், பொருள். மரபு. 40,61)
சுண்ணம்	चूर्ण	புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின் (பெரும்பாண். 221)
		பலர் தொகுபிடித்த தாதுகு சுண்ணத்தார் (மதுரைக். 221)
		வால்வெண் சுண்ணம் ஆடிய திதுகாண் (மணி, 4,18)
		சுந்தரச் சுண்ணத் துகளொடு மளைஇ (சிலப். 4,42)
தசம்	दश	தசம் நான்கெய்திய பணை மருள் நோன்றாள் (நெடுநல். 115)
தண்டம்	दण्ड	தண்டமும் தணிதிநீ பண்டையிற் பெரிதே (புறம். 10)
தண்டுதல்	दण्ड	பருகெனத் தண்டி (பொருந். 104)
தாயம்	दाय	முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம் (புறம்.73)
		தாயத்தி னடையா வீயச் செல்லா (தொல்.பொருள்.பொருளி. 218)
திசை	दिश	எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே (புறம். 206)
		திசைபெறு தலைஇய இருணிற விசும்பின் (மலைபடு.40)
திரு	श्री	திருமழை தலைஇய இருணிற விசும்பின் (மலைபடு.1)
தூண்(ரிக்)	स्थूणा	சிற்றில் நற்றூண் பற்றி (புறம். 86)

தூது	दूत	வேந்துவிடு விழுத்தூது ஆங்காங் கிசைப்ப (புறம், 284)
தெய்வம்	देव दैव	தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி (நெடுநல்.77) உருகெழு தெய்வமுங் கரந்துறைவின்றே. (நற். 39)
தேவர்	देव दैव	தேவருலகம் எய்தினனாதலின் (புறம். 228) தேவரனையர் கயவர் (குறள். 1073) தேவர்கோன் பூணாரம் (சிலப். கானல்வரி) தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன். (மணி 11.28)
தோட்டி	तोद	பொன்னியற் புனை தோட்டியான் (புறம். 14)
நகர்	नगर	முக்கட் செல்வன் நகர்வலஞ் செயற்கே (புறம். 6)
நாகம்(பாம்பு)	नाग	நீலநாகம் நல்கிய கலிங்கம் (சிறுபாண். 96) எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடும் (குறள். 763) பைவிரி நாகத்து ஐவாய்பெற்ற ஒலிப்புயிர் பெற்ற எரிக்கணம் போல (பெருங். உஞ்சை. 56, 273-274) அருமணி யிழந்த நாகம் போன்றதும் (சிலப். 13, 58)
நாவாய்(ரிக்)	नावा	முந்நீர் வழங்கு நாவாய் போலவும் (புறம். 13)
நிதியம்	विधि	நீர்முதற் கரந்தநிதியங்கொல்லோ (அகம்.265)
நுகம்(ரிக்,அதர்வ)	युग	எழுவர் பூண்ட ஈகைச் செந்துகம் (சிறுபாண். 113)
நேமி	नेमि	நேமியுய்த்த நேஎ நெஞ்சில் (புறம். 3)
பக்கம்	पक्ष	எண்ணாட் பக்கத்து (குறுந். 129) வல்வில் விளையர் பக்கம் போற்ற (குறுந். 275)

பதாகை	पताका	பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇ (மதுரைக். 373) வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி (சிலப். 8,27; திவா. 7,294)
பலகை	फलक	விளங்கு பொன்னெறிந்த நலங்கிளர் பலகையொடு (புறம். 15)
பலி(ரிக்)	बलि	விருந்துவரக் கரைந்த காக்கைதயது பலியே (குறுந். 210)
பிச்சை(அதர்வ)	भिक्षा	ஓரிற் பிச்சை யார மாந்தி (குறுந்.277)
பிண்டம்	पिण्ड	இன்சிறு பிண்டம் யாங்குண்டனன் கொல் (புறம்.234) சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும் (புறம். 28)
பூதம் (ஐம்பெரும்.)	(महा) भूत	ஐம்பெரும் பூதத்தியற்கை போல (புறம். 2)
போற்றி (ரிக்)	पोद्र	தோற்றம் சான்ற சான்றோன் போற்றி (புறம்.217)
மட்டம்(மட்டு)	मद्य	மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன (குறுந்.193)
மட்டு	मद्य	மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும் (புறம்.113)
மயிர்(ரிக்)	श्मश्रु	மயிரேர் பொழுகிய மாமை (குறுந்.147)
மயில் (ரிக்)	मयूर	பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும் (புறம்.116)
மாயம்	माय	மாயப்பொய் பலகூட்டிக் கவவுக் கரந்து (மதுரைக்.570) மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள் (சிலப். கானல். 52)
மாலை(பூமாலை)	माल्य (माला)	அரலை மாலை சூட்டி (குறுந். 214)
மானம்	मान	மான விறல்வேள் (மலைபடு. 164; பதிற்றுப். 42)

மிலேச்சர்	म्लेच्छ	படம்புகு மிலேச்சர் உழையர் ாக (முல்லைப்.66)
முத்து		பொன்னுந் துகிரும் முத்தும் (புறம். 218)
யாமம்	याम	முந்தை யாமம் சென்ற பின்றை (மதுரைக். 620)
வண்ணம்(ரிக்)	वर्ण	வண்ணத் துய்ம்மல ருதிர (குறுந். 110)
வதுவை	वधू	வதுவை யென்றவர் வந்த ஞான்றே (நற். 386)
வாணிகம் (ரிக்)	वाणिज्	வாணிகப் பரிசில னல்லேன் (புறம். 208)
		அறவிலை வாணிகன் ஆயலன் (புறம். 134)
		வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை (தொல். பொருள், மரபு. 73)
வேதம்(அதர்வ)	वेद	நாஅல் வேதம் நெறிதிரியினும் (புறம்.2)
		நற்பனுவல் நால்வேதத்து (புறம். 15)
வையகம்	वाह्य	விரிநீர் வையக வரையள பிறந்த (நற். 180)
அரசுவா	राजाश्व	அரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டு (சிலப். 3, 124)
		அரசுவா வீழ்ந்த களத்து (களவழி. 35, திவா. 12,203)
இந்திரஜாலம் (இந்திர சாலம்)	इन्द्रजाल	இந்திர ஞாலம் காட்டிய இயல்பும் (திருவாச. 2,43)
உரு(ஆடு)	उरा	கொறிதகர் ஒருவுகிடாய் (திவா, விலங், 22 பாடபேதம்)
		கானிடை யுருவைச் சுடுசரந் துரந்து (திவ். பெரிய திரு, 1,4,2)
கவையம்	गवय	ஆமா கவையம் காட்டா வாகும் (திவா. 4,21)
		கவயமா ஆப்போலுமெனக் கருதுதல் (மணி, 27,42)

காதை	गाथा	அரங்கேற்று காதை (சிலப். 3)
கொட்டம்	कुष्ठ	கொட்டமே கமழுங் குழலாளோடு (சம்பந். 3,2,1)
		சந்தனம், கொட்டமொடு அரைத்துக் கொண்ட மார்பினன் (சிலப். 22,28-24)
கோதை	कोष्ठ गोधा	மூரிச் சிலையும் முரட் கோதையுங் காட்டி (பாரதவெண். 776)
		கைப்படை கோதை கைக்கட்டியாகும் (திவா. 3,42)
சாதரூபம்	जातरूप	சாதரூபங் கிளிச்சிறை யாடகம்
		சாம்புநதமென வோங்கிய கொள்கையில் (சிலப். 14, 201)
தீவம்	द्वीप	நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து (மணி, 11,107)
பசு	पशु	பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்பும்
	वसा	(சம்பந். 1,80.2)
பிசிதம்	पिशितं	(திவா. 31—1,116)
மாடை(மாடு, மாழை)	माष	மாடல்ல மற்றையவை (குறள்,400)
வசி(ரிக்)	वसु	வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி (சிலப். 5,73)
		வசித் தொழிலுதவ மாநிலம் கொழுப்பட (மணி.14,57)
அசனி(ரிக்)	अशनि	அடலருங் கடாக்களிற்றசனி வேகமே (சீவக. 973)
அசுவம்(ரிக்)	अश्व	அச்சுவப் பெருமகன் (பெருங், மகத, 16,10)
அத்தி(ரிக்)	अश्वत्थ	(திவா. 4,17)
அவிட்டம்	श्रविष्ठा	......மேவிய அவிட்ட மீனின் பெயர் (திவா. 1,99)

இடபம்	ऋषभ (वृषभ)	எரிகதிர் இடபம் (மணி, 11,40,15,23)
இருது	ऋतु	இருதிள வேனில் எரிகதிர் இடபத்து (மணி, 11,40,15,23)
கம்பளம்(அதர்வ)	कम्बल	பாண்டு கம்பளந்துளங்கிய தாதலிற் (மணி, 14,29) பொன்னி ஞாசி பசுங்கம்பளத்து (மணி, 29.17)
கன்னி	कन्या	கன்னி விடியல் (ஐங்குறு.68) உருவுடைக் கன்னியரைப் போல (நாலடி, 263) கன்னிதன்னைப் புணர்ந்தாலும் (சிலப். 7, ஆற்று வரி, 2) கதிர்த்த முறுவற் கன்னியைத் தழீஇ (பெருங், உஞ்சைக், 46,839)
கிரி	गिरि	கிரிதிகிரி சையம் (திவா, 6,13)
குங்கிலியம்	गुग्गुलु (गुल्गुलु)	கமழ்ந்தகுங் கிலியத் தூபம் (பெரிய குங்குலியக், 6)
கும்பம்	कुम्भ	குழம்பலைக்கும் கும்பத்தை (நாலடி. 47)
குமுதம்	कुमुद	காம்புங் கதிருங் கூம்பு மணிக் குமுதமும் (பெருங். இலாவா், 6,87)
கேட்டை	ज्येष्ठा	...பின்றாக் கேட்டை (திவா, 1,94)
சகம்(அதர்வ)	जगत्	சகமலா தடிமை யில்லை, தாளலால் துணையுமில்லை (அப்பர், 6,40,8)
சந்தம்(வேதாங்கம்)	छन्दस्	கற்பங்கை, சந்தம் கால் (மணி, 27.100) அடிச் சந்த மால்கண் டிலாதன காட்டி (திருக்கோவை, 78)
சந்தம்(சந்தப்பாட்டு)	छन्दस	பண்பாய பகர்சந்தம் (யாப், வி. 94, பக். 447)

சனம்(வீட்டில்வளர்க்கப் பெறும் பிராணிகள்)	जन	வரம்பில் பல்சனம் பரந்த பழனத்து (பெருங். உஞ்சைக். 38,48) சனமித்திரன் (மணி, 25,98)
சாலம்(வலை)	जाल	அளப்பில் சாலம் வீசி நின்றார்த்திடும் (கந்தபு. திருநசரப், 18)
சூது	द्येत	அல்ல லுழப்பிக்கும் சூது (குறள். 938) வட்டும் சூதும் வம்பக் கோட்டியும் (மணி. 14,63) சூதுபொரு கழகத்து (பெருங், இலா, 8,62)
சோதிடம்	योतिष	சத்தமும் சோதிடமும் (நாலடி, 52)
தருப்பை	दर्भ	வசிட்டன் தருப்பையோடினிதி னெய்தினான் (கம்ப, கடிமணப், 84) குசையே தருப்பை (திவா, 5, 224)
தருமம்	धर्म	தருமம் சாற்றும் சாரணர் தம்முள் (சிலப். 15,155)
தனம்	धन	செட்டிதன பாலன் மனையாள் (சீவக. 1791)
தாசன்	दास	தொண்டுஞ் சேடருந் தொத்துந் தாசரும் (திவா, 2,64 பாடபேதம்)
தானம்	दान	தானம் தவமி ரண்டுந் தங்கா வியனுலகம் (குறள்,19) தன்மனை நன்பல தானமும் செய்தனன் (மணி, 16, 127) தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின் (சிலப். 30,190) தானம் ஏற்றல் தகா அ தென்றுதன் (பெருங், மகத, 8,115)

திதி (பிற்பட்ட சூத்திரங்களில் மட்டும்)	तिथि	திதியே பக்கம் (திவா,1,121)
திருணம்	तृण	(பிங்).
தீவு	द्वीप	தென்திசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும் (மணி, 9,57)
துந்துபி	दुन्दुभि	அந்தர மருங்கிற் றுந்துபி கறங்க (பெருங். நர, 1,150)
துலா	तुल	...துலையே கோலெனத் துலாப் பெயர் பெறுமே (திவா. 1,71
தூதன் (பிற்பட்ட வழக்கு)	दूत	வாலிதன் மகனவன்றன் தூதன் வந்தனென் (கம்ப, பிணிவீட்டு, 82)
தூமகேது	धूमकेतु	தூமகேது புவிக்கெனத் தோன்றிய (கம்ப, மந்தரை, 21)
தேயம்	देश	ஊரது சார்பும் செல்லும் தேயமும் (தொல், பொருள், 43)
தேனு (காம-தேனு)	धेनु	சுரபி தேனு (திவா, 7,294)
தைலம் (அதர்வ)	तैल	தைலமாட்டு படலம்
நகம்	नख	உகிர்நக மாகும் (திவா, 2,186)
நகரம்	नगर	நகர நம்பியர் திரிதரு மறுகில் (சிலப். 3,168) நகர நம்பியர் வளையோர் தம்முடன் (மணி, 19,24) நாட்டகம் நணுகி நகரகம் புக்கனன் (பெருங். இலா, 9,265)
நகுலம்	नकुल	பிள்ளை நகுலம் பெரும்பிறிதாக (சிலப். 15,54)

நதி	नदी	நதியாருஞ் சடையானை (அப்பர், 6,69,7) கங்கா நதியொரு புறமாக (கலிங், 358)
நரன்	नर	(திவா, 2, 162)
நவநீதம்	नवनीत	(திவாகரம்)
நாடி	नाडी	நாடியும் இசையும் நரம்புமாகும் (திவா, 2,225)
நாதன்	नाथ	நாதன் நாமம் நமச்சிவாயவே (சம்பந். 3,49,1)
நாமதேயம்	नामधेय	
நாமம்	नाम	நாமம் கெடக்கெடும் நோய் (குறள், 360) என் நாமம் செய்த நன்னாள் (மணி, 7,35) நாம மோதிரம் தாள் முதற் செறித்து (பெருங். மகத 9,70)
நாரதன்	नारद	நாரதன் வீணை நயந்தெரி பாடலும் (சிலப். 6,18)
நாரி	नारी	(திவா, 2,113)
நாவி(நாபி)	नाभि	நாவிக் கமலமுதற் கிழங்கே (திவ். திருவாய், 10,103; திவா. 2, 147)
நாவிதன்	नापित	
நிதி(நெதி)	निधि	நிதியொப் பானை (தேவா, 5,3,6)
பக்கம்	पक्ष	அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் (தொல்.புறத்,74)
பக்குவம்	पक्व	
பசு	पशु	பார்ப்பார் தவரே பசுப் பத்தினிப் பெண்டிர் (சிலப், 21,53)
படலம்	पटल	ஒரு நெறி யின்றி விரவிய பொருளால் பொதுமொழி தொடரினது படலமாகும் (தொல், பொருள், செய், 164)

படாகை	पताका	பாவை விளக்குப் பசும் பொற்படாகை (சிலப். 5,154) மாலையணிந்த மணிக்கால் படாகையோடு (பெருங், உஞ்சை, 38, 7)
பத்தினி	पत्नी	பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில் (சிலப். 21,36) மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை (மணி, 2,55) பத்தினியாகிய பைந்தொடி (பெருங். உஞ்சைக், 48,66)
பதங்கம்	पतङ्ग	(திவா, 3.174)
பதி	पति	பந்தித்த வல்வினை தீர்க்கவல்லானை, பசு பதியை (அப்பர், 4,82,5) (நகரம் என்ற பொருள் வடமொழியிற் காணப்படவில்லை)
பந்தி	पंक्ति	பந்தி பந்தி பட உங்கள் (கலிங்கத், 549)
பருவதம் (பருப்பதம்)	पर्वत	பருப்பதம் பரவுதுமே (சம்பந்த, 1,118,1) பருப்பதவில்லார் போலும் (அப்பர், 4,64,8)
பாசம்	पाश	மனைப்பாசம் கைவிடாய் (நாலடி, 130) பாசத்தைப் பற்றறுக்க லாகும் நெஞ்சே (தேவா, 6,31,9)
பாட்டி(பௌத்திரி)	पौत्री	மடநடைப் பாட்டியர்த் தப்பி (பரிபா. 37)
பாத்திரம்	पात्र	பாத்திரம் சிவமென்று பணிதிரேல் (தேவா. 1070,3)
பாதம்	पाद	பாதத் தணையும் சிலம்பர் போலும் (தேவா, 6,89,6)
பாவம்	पाप	பாவம் பழி பற்றற வேண்டுவீர் (அப்பர், 5,99,1)
பிசாசு	पिशाच	(திவா. 1,35)

பிதா	पिता, पितृ	மாதா பிதாவாகி மக்களாகி (தேவா, 6,94,7)
பிதிர்	पितृ	
பீடம்	पीठ	பீடஞ்செய் தாமரையோன் (திருக்கோ. 129)
புண்டரீகம்	पुण्डरीक	புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே (பெருமாள் திருமொழி, 8,2)
புத்திரன்	पुत्र	புத்திரி புத்திரன் பொய்யில் கிரிதரன் (ஏலாதி. 31)
புரம்	पुर	புரமெரித்த பெற்றியோடும் (சம்பந். 1,47,5)
புராணம்	पुराण	பூதங்களாய்ப் புராணன் தானேயாகி (அப்பர், தேவா, 6,94,10) பூராணன்காண் புண்ணியன்காண் புராணன் காண் (அப்பர். தேவா, 6,8,3)
மந்திரம்	मन्त्र	மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல் பொருள் 481) மந்திரமாவது நீறு (தேவா. சம்பந்த 2,66,1.)
மயானம்	स्मशान	உழையர்தாங் கடவூரின் மயானத்தார் (தேவா. சம்பந்த. 5,38,1)
வாதம் (ரிக்)	वात	வாதராசனை வலிந்துபணி கொண்ட வவனும் (கலிங்கத். 180)
வாரணம்	वारण	முறஞ்செவி வாரணம் சிலப். (10,247; கலித். 42) (கோழி என்ற பொருள் வடமொழியிற் காணப்படவில்லை; தமிழில் இப்பொருளே முற்படத் தோன்றியது. காணவாரணம் ஈனும். (புறம். 52)).

விடம் (ரிக்)	विष	திட்டி விடமுணும் (மணி. 9,49)
வீரன்	वीर	வீரருள் வீரன் (பெருங். உஞ்சைக். 55,144; 56,89)
கிரயம்	क्रय	
கிருகம்	गृह	
கிருமி	कृमि	
கோதுமை	गोधुम	
சக்கரம்	चक्र	
சண்டாளன்	चण्डाल	(திவா. 2,52)
சாண்டில்யன்	चण्डिल्य	
சூரிக்(கத்தி)	क्षुर	
செந்து	जन्तु	[முதலில் குழந்தை, மனிதன் என்று பொருள் பட்டுப் பின் பிராணிகள் என்று வட மொழியில் வழங்கலாயிற்று.]
சென்மம்	जन्मन्	சென்மந்தரங்கம் (அஷ்டப். திருவரங்கத். 46)
தட்சிணை	दक्षिणा	
தானியம்	धान्य	
தீர்க்காயு	दीर्घायुत्व	
துருவம்	ध्रुव	
துவசம்	ध्वज	
தேசம்	देश	கிட்டிய தேச நாம சாதி (மணி. 27,24)
(பிர)தோஷம்	(प्र) दोष	

நட்சத்திரம்	नक्षत्र	
அகஸ்தியர்	अगस्त्य	அமரமுனிவன் அகத்தியன் (மணி. 22,35)
அருந்ததி	अरुन्धती	அருந்ததி யனைய கற்பின் (ஐங்குறு. 442)
ஆத்திரையன்	आत्रेय	கள்ளி லாத்திரையன்(சங்கப் புலவர்)
இமயம்	हिमवन्त	பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே (புறம்.2)
இராமன்	राम	கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையே (புறம். 378) (ரிக் வேதத்தில் ஒருவன் பெயராக வந்துள்ளது.)
உரோகிணி	रोहिणी	உரோகிணி நினைவனள் நோக்கி (நெடுநல். 163)
எமன்	यम	தெரிகோல் ஞமன்போல (புறம். 6)
கங்கை	गङ्गा	கங்கை வாரியும் காவிரிப் பயனும் (பட்டினப். 190)
கண்ணன்	कृष्ण	கடியலூர் உருத்திரங் கண்ணனார் (சங்கப் புலவர்)
கபிலன்	कपिल	வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் (புறம். 53)
காசிபன்	काश्यप	
காப்பியம்	काप्य काव्य	காப்பியாற்றுக் காப்பியனார் (பதிற். 4, பதிகம்) காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து (சிலப். வரந்தரு. 83) தொல்காப்பியர்
கோதமன்	गोतम	பாலைக் கௌதமனார் (சங்கப் புலவர்) தரும புத்திரனைக் கோதமனார் பாடியது (புறம்.366)
கௌசிகன்	कुशिक कौशिक	கட்புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான் (சிலப். புறஞ். 47)
கௌரியர்	कुरु कौर्य	தவிரா வீகைக் கவுரியர் மருக (புறம். 3)
பார்வதி	पार्वती	
பிருகஸ்பதி	बृहस्पति	

15. பாலி மொழியும் தமிழும்

பாலிமொழி புத்தர்பிரான் வழங்கியது என்பர். அவர் உயிர் வாழ்ந்து வந்த பிரதேசத்தில் இம்மொழி பேசப் பட்டது என்று கூறுவர். புத்தர் நேரிடையாகச் சொன்ன தாக நூல்கள் இல்லாததனால், நாம் இதனைத் துணிந்து கூற இயலவில்லை.

அவர் கூறியதாக மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிற் பட்டு வந்த நூல்களில் ஒருசில வசனங்கள் காணப்படுகின் றன. ஆகவே இப்போது புத்தர் வழங்கியவை என்று கூறுபவை எல்லாம் அவரது காலத்துக்கும் மூன்று நூற்றாண்டு களுக்குப் பிற்பட்டவை. அவர் பேசிவந்த மொழி பெரும் பாலும் பாலியாகவே இருக்கலாம்.

புத்தர் காலத்திலேயே அவருடைய புத்திரி, சங்க மித்தா முதலானவர்கள் சிங்களத்திற்குச் சென்று தமது மதத்தைப் பரப்ப முயன்றனர் என்று சரித்திரம் கூறும். இம்முயற்சியில் அவர்கள் வழங்கிய மொழி பாலி மொழி யாம். இந்த மொழி சிங்களத்தில் பரவுவதற்கும் அங்கே வடமொழிபோல் பரவுவதற்கும் தக்க காரணங்கள் இருந்தன. சங்கமித்தையுடன் கூடச் சென்றவர்கள் தமிழகத் தில் தங்கியதனாலோ அல்லது சிங்களத்தில் உள்ள பௌத்தர்கள் தமிழகத்தில் வந்து தங்கியதாலோ தமிழ் மொழியில் பாலி மொழியின் சாயையும் சொற்களும் காணப்படுகின்றன.

இம்மொழி பிராகிருதத்திலிருந்து முற்றிலும் வேறு பட்டது என்று கூற முடியாது; பிராகிருதத்தின் அமைப் புக்கள் சிலவும் காணப்படுகின்றன. பாலி என்ற சொல் தானே ஆராய்ச்சிக்கு இடமாக உள்ளது. சில ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்கள் இச்சொல் 'ப்ரலி' என்ற சொல்லி லிருந்து தோன்றிற்று என்பர். 'ப்ரலி' என்றால் ஓலையில் எழுதும் எழுத்து வரிசை என்று பொருள். இப்பொருளி னின்றும் நூலுக்குப் பெயராகியும் நூல் அமைந்துள்ள மொழிக்குப் பெயராகியும் கொள்ளப்பட்டதாம் என்பர். வேறு சிலர் 'ப்ரக்கடா' என்ற சொல்லின் திரிபு என்று கூறு வார்கள். இதற்குப் பொருள் பொது மக்கள் வழங்கிய

மொழி என்பதாகும். கோசாம்பி என்ற ஒரு பௌத்த அறிஞர் 'பால்' என்ற சொல்லிலிருந்து பாலி வந்தது என்பர். 'பால்' என்பதற்குக் காப்பாற்றுவது என்று பொருள். அதாவது காப்பாற்றிப் போற்றி வைக்கப்பட்ட நூல் என்பதாகும். அட்ட கதையின் உரைகாரராகிய புத்த கோசர் திரிபிடகம் முதலானவற்றைப் பாலி என்றே வழங்குகிறார்.

இம்மொழி பிராகிருதத்தோடு சிறிது இயைபுடையது என்றேன். வைதிக சமஸ்கிருத மொழிக்கு இது வெகு தூரத்தில் உள்ளது. இரண்டுக்கும் பொருத்தம் மிக வலிந்து தான் காணுதல் வேண்டும். வைதிக மொழியோடு பிறிதொரு மொழி வழங்கிய காலத்தில் அதன் அயற் பக்கங்களில் முற்காலத்தில் வழங்கிய ஒரு மொழியினின்றும் பாலி மொழி பிறந்தது எனச் சொல்லுவது தான் பொருத்தம் என ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

இனி சங்ககாலத்தில் வழங்கிய தமிழ்ச் சொற்களோடு பாலி மொழி தொடர்பு பட்டிருந்தது என்பதை பின்வரும் சொல்வரிசையில் காணலாம்:—

அக்கம்	अक्ख	கண்
அக்கரம்	अक्खर	அழிவில்லாதது, எழுத்துக்கள்
அக்கி	अक्खि	கண்
அக்கி	अग्गि	நெருப்பு
அகில்	अगलु	அகில்
அங்குசம்	अङ्कुश	துறட்டி
அங்குலம்	अङ्गुल	விரலளவு
அச்சுத	अच्चुत	அழிவற்ற, நித்ய
அச்சோ	अच्छ	தெளிவான
அட்டாலை	अट्टल	காவற்பரண், மேல்மாடி
அத்தா	अत्तन्,अत्त	வழி
அத்தம்	अद्धा	ஆன்மா
அம்பணம்	अम्मण	அளவை (மரக்கால்)
அம்மணம்	समण	
அமைச்சன்	अमच्च	மந்திரி
அய்ய	अय्य	ஆர்ய
அரம்	आरा	ஊசிவகை
அழகு	लंहु	
அன்னை	अम्मा	தாய்
ஆணத்தி	आणत्ति	கட்டளை

ஆணி	आणि	ஆணி, Linch-pin
ஆணை	आणा	ஆணை, கட்டளை
ஆதிச்ச	आदिच्च	சூரியன்
ஆம்	आम्	உடன்பாடு குறிக்கும் இடைச்சொல்
இலக்கணம்	लक्खण	
இலக்கம்	लक्ख	குறி
இயக்கன்	यक्ख	
உக்கம்	उच्छङ्ग	ஒக்கல், lap (இடை, மடி)
உப்பு	उब्भिद	
உவமம்	ओपम्म	
எட்டு	अट्ठ	எட்டு என்னும் எண்
ஐயா	अय्य	
ஓரம்	ओर	அருகு
கசை	कसा [कश Sanskrit]	(e.g.) கசையடி
கஞ்சி	कञ्जिक, कञ्जिय	
கட்டை	कट्ठम्	மரத்துண்டு
கண்ணன்	कण्ह	கிருஷ்ணன்
கணையம்	कणयो	ஈட்டிவகை
கதலி	कदली	வாழைவகை
கந்தை	कन्था	

கம்பளம்	कम्बल	
கம்மம்	कम्म	
கமுகு	कमुक	
கரகம்	करक	நீர் நிரம்பிய குடம்
கரண்டகம்	करण्डक	பெட்டி
கரவாளம்	करपालिका	மரவாள்
கருளன்	गरुल	கருடன்
(பஞ்ச) கல்யாணம்	कल्याण	கேஸ, மாம்ஸ, அத்தி, சதி, வய.
கலம்(கலசம்,கலயம்)	कलस	
கவி	कवि	
சிந்தாகவி	चिन्ताकवि	Poet of imagination
சூதகவி	सुतकवि	Poet of tradition
அத்தகவி	अत्थकवि	Poet of reality in life
படிபாணகவி	पटिभाणकवि	Poet of improvisation
களம்	खल	நெற்களம்
காமகுணம்		
காமம்	गाम	கிராமம்: காமக்கணி நப்பசலையார் (நற். 243) இருகாமத்திணை யேரி (பட்டினப். 39)
காருகன்	कारुक	தச்சன், நெசவுகாரன், வண்ணான், நாவிதன், செம்மான்
கும்மாயம்	कुम्मास	குழம்பு

கூடம்	कूट	சம்மட்டி
கூவுதல்	हूति	கூப்பிடுதல்
கைதை	केतकी	தாழை
கொட்டு, குட்டு	कोट्ट	குட்டுதல்
கோதுகலம்	कोतूहल	ஆரவாரம்
கோவணம்	कोपीन	
கோள்		
சகதி	जगति	பூமி
சட்டம்	छद्द	மேற்கூறை, உடல்
சட்டம்	सत्थ	சாஸ்திரம்
சட்டர், சட்டாம்பிள்ளை	,,	
சதுக்கம்	चतुक्क	நாற்சந்தி
கவட்டு	चावेति	விரும்படி செய்தல்
சன்ன(சாடை)	सञ्ञा	சம்ஞை
சாடி	चाटि	தேன் முதலியவைக்கும் பாத்திரம்
சாணம், சாணை	साण	
சாய்	सायी	
சிப்பி	सिप्पी	
சுக்கு	सुक्क	
சுங்கம்	सुङ्क	வரி
சுண்ணம்		

சுருங்கை	सुरङ्ग	சுரங்கம்
சுன்னம்	सुन्नं	சூனியம்
சூது	जूत	
செய்ய(செம்மையான)	सेय्य	மேன்மையானது
செழியன்		
சொப்பனம்	सोप्पन	
—த்தி	त्थी	பெண்பால்(விகுதி)
தகரம்	तगर	வாசனைச் சாந்து
தச்சன்	तच्छक	
தபதி	थपति	தச்சன்
தமிழ்	दमिल	
தாகம்	दाह	வருத்தம்
தாலம்	थाल	உண்கலம்
தாழ்	ताळ	திறவுகோல்
தீர்	तीरण	தீர்மானித்தல்
துட்டன்	धुत्त	தூர்த்தன்
தும்பை	तुम्बी	
துன்னம்	तुन्न	தைத்தல்
தூண்	थूण	தூண்
தூம்பு	तुम्ब	மூக்குள்ள பாத்திரவகை

தேயம்	देस, देय्य	தேசம்
தோணி	दोणी	சிறுகப்பல், குடையப்பட்ட மரத்தொட்டி
நட்டம்	नट्ट	நடனம்
நாஞ்சில்	नाङ्गल	உழுபடை
நானம்	नहान	ஸ்நானம்
நிச்சம்	निच्च	நித்தியம்
நியமம்	निगम	சந்தைகூடும் ஊர்
நிரயம்	निरय	நரகம்
நில்	निलीयति	தங்குதல்
நிலயம்	निलय	வசிப்பிடம்
நீளம்	नीळ	கூடு
நேயம்	सिनेह	நட்பு
பக்கம்	पक्ख	
பஞ்சு	पिचु	
பண்டம்	भण्ड	சரக்கு
பண்ணத்தி	पण्णति	வெளிப்படுத்துகை (சட்டம் முதலியவற்றை)
பண்ணவன்	पञ्ञावत् (वन्त्)	அறிஞன்
பண்ணியம்	पणिय	பண்டம்
பதுமம்	पदुम	தாமரை
பல்கு	बाल्ह	மிகுதியான
பவணம்	पवन	
பளிங்கு	फलक	

பாசகன்	पासक	சூதாடுகருவி
பாசண்டம்	पासण्ड	தொண்ணூற்றாறு வகை: அறுபத்திரண்டு விகற்பக் கொள்கைகளையும், குடீசகர் முதலிய முப்பத்து நான்கு வகையினரது கோட்பாடுகளையும் சார்ந்த சமயங்கள், பிரம்ம ஜால சுத்தத்தையும் திட்டியையும் நோக்குக (ditthi & Brahma Jala Sutta)
பாசி	पाची	கிழக்கு
பாணி	फाणि	as in சக்கரைப்பாணி
பாயிரம்	बाहिर	புறத்தேயுள்ளது
பிட்டம், பிட்டி	पिठ्ठ, पिट्ठि	பின்பாகம்
பிள்ளை	पिह्लक	குழந்தை
பீழை	पीला	பீடை
புழு	तुलव	
புனிதம்	पुनाति	
பொத்தகம்	पोत्थक	
பொது	पाथु (ज्जनिक)	(e.g.) Pothujjana; lit, ordinary man. (Pruthu)
மரியாதை	मरियादा	
மள்ளன்	मल्ल	மல்யுத்தம் செய்பவன்
மனம்	मन (स्)	
மனைவி	मानवी	பெண்
முக்கு	(नि) मुग्ग	மூழ்குதல்

முச்சை	मच्छा	மூர்ச்சை போதல்
முத்தம்	मुत्ता	எண்வகை முத்துக்கள்: ஹய முத்தம், கஜமுத்தம், ரத முத்தம், ஆமலகமுத்தம், வலயமுத்தம், அங்குலீ வேடகமுத்தம், கருதபலமுத்தம், பாகடிகா முத்தம்.
மெய்		அளவுபட்டது
லஞ்சம்		
வசனமாலை	वचनमाला	Dictionary, அகராதி,
வசி	वसु	செல்வம், மணி
வட்டி	वड्ढि	வளர்ச்சி
வண்ணம்	वण्ण	தோற்றம், வடிவம், நிறம், வகை, இனம், சாதி, அழகு, புகழ், உயிர், எழுத்து, அசை, குணம் முதலியன.
வந்தி	वञ्झ [Skt. वन्ध्य]	பஞ்சம்
வரகு	वरक	
வழங்கு	वलञ्जेति	(பயன்படுத்தல், செலவிடுதல்)
விண்ணாணம்	विण्णान	விக்ஞாபனம்
வியாகரணம்	वेय्याकरण	விளக்கவுரை
விளங்கம்	विलङ्ग	ஒருபூண்டு
விளம்பனம்	विलम्बन	வேஷம்
வேதாளிகர்	वेतालिक	அரசனைப் பாடித்துயிலெழுமாறு செய்டவர்
வேலை	वेला	நேரம், கரை. எல்லை, கூட்டம்
வேளை	वेला	காலம்

16. தமிழும் மலையாளமும்

திருவிதாங்கூர்-கொச்சி ஐக்கியநாட்டிலே வழங்கி வரும் மொழிகளில் மிக முக்கியமானவை மலையாளமும் தமிழுமாம். இவ்விரு மொழிகளுக்குமுரிய உண்மையான தொடர்புபற்றிப் பல அறிஞர்கள் நெடுங்காலமாக ஆராய்ந்துள்ளார்கள். எனினும் இம்மொழித் தொடர்பு பற்றிய முடிவு ஐயத்திற்கிடமின்றி நன்கு துணியப் பெறாமலே இருக்கிறது. பலரும் பலவேறு முடிவுகளுக்கு வந்திருக்கிறார்க்ள். நடுநிலையினின்று இப்பொருளோடு தொடர்புள்ள எல்லா விஷயங்களையும் கவனித்து ஆராய்ச்சி செய்வது திராவிட மொழி ஆராய்ச்சியாளரது கடமையாம். இக்கடமையை மேற்கொண்டே இம்முயற்சி இங்குச் செய்யப்படுகிறது.

தமிழ்மொழிச் சரிதம்

தமிழ்மொழியின் சரிதத்தை நோக்கினால் அது மூன்று நிலைகளை அடைந்துள்ளதெனத் தெரிகிறது. அவை பண்டைத் தமிழ் நிலை, இடைக்காலத் தமிழ்நிலை, தற்காலத் தமிழ்நிலை என்பன. பண்டைத் தமிழைச் சங்க இலக்கியங்கள் கொண்டும், தொல்காப்பிய இலக்கணங் கொண்டும் அறியலாம். இடைக்காலத் தமிழைத் தேவாரம் திவ்யப்பிரபந்தம், சிந்தாமணி முதலிய இலக்கியங்கள் கொண்டும், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள் கொண்டும் அறியலாம். தற்காலத் தமிழ் நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கொண்டும், பேச்சு வழக்குத் தமிழ் கொண்டும் அறியவேண்டியதாயுள்ளது. இம்மூன்று நிலைகளும் சொற்கள் பற்றியும் (vocabulary), சொல் வடிவம் பற்றியும் (word-forms), ஒலிமாற்றம் பற்றியும் (sound-changes), சொற்களின் அமைதிபற்றியும் (morphology), சொற்பொருள் பற்றியும் (semantics), மொழிநடை பற்றியும் (style), செய்யுள் அமைதிபற்றியும் (metre) தம்முள் பெரிதும் வேறுபடுகின்றன.

இம்மூன்று நிலைகளில் எந்நிலையோடு பிராசீன மலையாள மொழி ஒத்துத் தொடர்புடையதாய் நிற்கிறது? உதாரணங்கள் மூலமாக இதனை ஆராய்தல் வேண்டும்.

பிற்காலச் சொற்கள்

முதலாவது சில சொற்களை நோக்குவோம். பிரான், சிரி, தங்கம் என்ற சொற்கள் பண்டைத் தமிழிற்கிடையா. முதலிரண்டு சொற்கள் இடைக்காலத் தமிழ் - இலக்கியங்களில் அருகித்தோன்றி அக்காலத்தின் இறுதியிலுள்ள இலக்கியங்களில் சற்று மிகுதியாய்க் காணப்படுகின்றன. 'பிரான்' அப்பர் தேவாரத்திலும் (5,20,8) திருவாய்மொழியிலும் (1,7,6,) வருகிறது. 'குமிண்சிரிப்பும்' என அப்பரும் (4,81,4), 'உன்னடியார் குனிப்பார் சிரிப்பார்' என்று மாணிக்கவாசகரும் (495) வழங்கியுள்ளார்கள். இச்சொற்கள் ராமசரிதம் (35-2) முதலிய பிராசீன மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'தங்கம்' மிகமிகப் பிற்பட்ட சொல். 16-ம் நூற்றாண்டில் தோன்றிய சூடாமணி நிகண்டிற்கூட இச்சொல் காணப்பெறவில்லை. 'தங்கத்தனை' என்று பிள்ளைப் பெருமாளையங்கார் பாடுகின்றார். மலையாளத்தில் 'நளசரிதம்' என்ற நூலில் இச்சொல் வருகிறது. பொதுப்படநோக்கினால் மலையாளப் புராதன இலக்கியங்களில் காணும் சொற்களில் பெரும்பாலனவும் இடைக்கால, பிற்காலத் தமிழ்-இலக்கியங்களில் வந்துள்ளனவேயாம்.

சொல்-வடிவங்கள்

இனி, சில சொல்வடிவங்களை நோக்குவோம். 'துணை' என்ற தமிழ்ச்சொல் அளவு, வரை என்று பொருள்படும். 'பொன்றுந்துணையும் புகழ்' என்பது திருக்குறள் (156). இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் இந்த இடைச்சொல் 'தனை' என வடிவுதிரிந்தது. 'இத்தனையும் வேண்டும்' என்றனர் மாணிக்கவாசகர் (திருவெம்பாவை, 3). இவ்வாறு திரிந்தவடிவமே ராமசரித்திரத்தில் (15-2) வருகின்றது. உடலம், இல்லம் என்பனவும் இத்தகைய உதாரணங்களே. 'உடலம்' என்பது சரீரம் என்று பொருள்படும். இச்சொல் 'உடல்' என்பதனோடு 'அம்' விகுதி சேர்ந்து வந்தது. 'உடல்' என்பதற்குத்தானும் சரீரம் என்ற பொருள் சங்க கால வழக்கிற் காணப்பெறவில்லை. எனவே 'உடலம்' பிற்பட்ட சொல்லாதல் தெளிவு. 'சலந்தரன் உடலந் தடிந்த' என்பது தேவாரம். இப்பிற்பட்ட வழக்குச் சொல்லே மலையாளத்தில் ராமசரிதத்தில் உள்ளது. இல்லம் என்ற சொல் இப்போது மலையாளத்தில் பரக்க வழங்குகிறது. ஆனால் தமிழில் இது பிற்கால வழக்கு. சங்க காலத்தில் 'இல்' எனவே உள்ளது.

இல்லடு கள்ளின்' என்பது புறநானூறு(329). இல்லம் என்ற சொல்லை அப்பர் வழங்குகிறார். 'இல்லமே தாம் புகுதா இடுமின் பிச்சை என்றார்க்கு' (6,9,9) என்பது அவர் திருவாக்கு. 'இல்லம் சிறியானைரக் கொண்டு புகலும்' எனத் திரிகடுகத்திலும் (4), 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' எனத் திருவாசகத்திலும் (திருவெம்பாவை, 17) வந்துள்ளமை காணலாம். இவற்றால் 'இல்லம்' என்பது சுமார் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ் வழக்கிற் புகுந்ததெனல் தெளிவாம். இப்பிற்பட்ட சொல் வழக்கே மலையாளத்திற் காணப்படுவது. இங்ஙனமாக, இடைக்காலத்து இறுதியில் தோன்றிய தமிழ்ச் சொல்வடிவங்கள் பிராசீன மலையாள இலக்கியத்தில் காணப் படுகின்றன.

ஒலி மாற்றம்:

மொழிகளில் அதிபுராதனமாகிய சொற்கள் ஸர்வ நாமங்கள் என்று சொல்லப்படுகிற மூவிடப் பெயர்களும், ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களும் ஆம். மூவிடப் பெயர் களில் 'யான்' என்பது தன்மையொருமைக்குரிய பண் டைத் தமிழ். நான் என்பது இடைக்காலத்தே தோன்றி நாளடைவில் வழக்கில் மிகுந்து இன்றைச் சொல்லாகிவிட் டது. இப்படித் திரிந்த தன்மைப்பெயரே மலையாளத்தில் ராமசரிதத்தில் 'ஞான்' என வருகிறது. நான் என்பது ஒலி மாற்றத்தால் திரிந்து ஞான் என வருதல் இங்கு அறியத் தக்கது. நாறு-ஞாறு, நாலுதல்-ஞாலுதல் முதலிய சொற்களை நோக்குக. எண்ணுக்குரிய பெயர்களில் ஒன்று என்பது 'ஒந்நு' என மலையாளத்தில் வரும். இது இடைக் காலத்திறுதியில் பேச்சுவழக்குத் தமிழிலிருந்து தோன்றிய வடிவமாகும். இதுபோன்று பலசொற்கள் உள்ளன. 'மூந்நு' 'கந்நுகாலி' முதலியவற்றைக் காண்க. இவை யாவும் தமிழ்ச் சொற்கள் ஒலிமாறி விளைந்த மலையாளச் சொற்களே.

சொல்-அமைதி இடைநிலை:

மேற்குறித்தவை சொற்கள் பற்றியன. சொற்களின் அமைதியை இனி நோக்குவோம். இவ்வமைதியால் மொழி களின் சம்பந்தமும் கால முற்-பிற்பாடும் நன்கு தெளிவாகும். எனவே இந்த அமைதியை மொழிநூல் அறிஞர் மிகவும் போற்றுவர். ஒரு வினைச்சொல்லை எடுத்துக் கொள் வோம். 'அறிவிக்கின்றேன்' என்ற சொல்லில் 'அறி'

என்ற வினையடியோடு 'வி' என்ற பிறவினை விகுதியும், கின்று என்ற நிகழ்கால இடைநிலையும், 'ஏன்' என்னும் தன்மையொருமை விகுதியும் உள்ளன. இதில் 'கின்று' என்னும் இடைநிலை தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களிலும் காணப்படவில்லை. இடைக்காலத் திறுதியிலுள்ள இலக்கியங்களிலும் 13-ம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலிலும் தரப்பட்டுள்ளது. மலையாளத்தில் இவ்வினைச் சொல் 'அறியிக்கிந்நேன்' என வந்துள்ளது. ஒன்று-ஒந்நு என வருதல்போல '(கின்றேன் என்பது கிந்நேன்') என வந்தமையும் வெளிப்படை. இதனால் இடைக்காலத்து இறுதியிலுள்ள தமிழ் வினைமுற்றின் அமைதியே பிராசீன மலையாளத்தில் காணப்படுகிறது.

வேற்றுமை விகுதிகள்

இனி, பெயர்ச் சொற்கள் உருபுபெற்றுவரும் சொல்லமைதியை நோக்குவோம். தொல்காப்பியத்தில் 'அது' என்பது 6-ம் வேற்றுமை யுருபாக கொடுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி 'உடை' அல்லது உடைய என்னுஞ் சொற்கள் 6-ம் வேற்றுமையின் உருபாகவோ சொல்லுருபாகவோ வழங்கியதில்லை. இடைக்காலத்து இறுதியில் இவ்வுருபுகள் தோன்றத் தொடங்கின. 'செருப்பிடையடியர்' (அகம். 129) என்பனபோன்ற பிரயோகங்கள் சங்க காலத்து உளவேயெனின், ஈண்டெல்லாம் இரண்டாம் வேற்றுமை யுருபு விரிந்து அதற்குரிய உடைமைப்பொருளில் வந்த உடைச் சொல்லாகும். மேற்காட்டியதற்குச் செருப்பினை யுடைய அடியினர்' என்பது பொருளாம். இதன்கணுள்ள 'உடை' ஆறாம் வேற்றுமை யுருபு அன்று. 'தம்முடைய தண்ணளியும்' எனப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் (கானல் வரி, 32) வருகின்றது. கம்பர் 'நம்முடைச் சிலைகள்போல் நலியலாமோ' என்றனர் (யுத்த. மந்திர. 80). ஈரிடத்தும் 'உடைய' 'உடை' என்பன 6-ம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளமை தெளிவு. மலையாள மொழியை நோக்கும் போது, அதில் 6-ம் வேற்றுமையுருபாக 'உடே' என்பது பிராசீன இலக்கியங்களில் காணப்படுகிறது. ராமசரிதத்தில் வரும் 'மைதிலிதன்னுடெ' என்பது, இதற்கு உதாரணம். இது வேண்டுமிடங்களில் இன்சாரியை பெற்று 'ன்றே' என மருவியும் வழங்கலாயிற்று. தமிழிலும் இவ்வுருபு இன்சாரியை பெற்று வருதல் மிகப்பிற்பட்ட வழக்கு. 'குதிரையினுடைய' என்பது உதாரணம். சாரியையின் அம்சமாகிய கைரவொற்றும் 'உடை' என்றதன் அம்சமாகிய

'டெ'யும் சேர 'ன்றே' என மலையாளத்தில் எழுதப் படுகிறது. இதனால் இடைக் காலத்து இறுதியில் தமிழில் வழங்கிய 6-ம் வேற்றுமை யுருபே பிராசீனமலையாளத்தில் திரிந்து வந்தமை தெளிவாகும்.

சொற்பொருள்

இனி, சொற்பொருளை நோக்குவோம். 'எவன்' என்ற சொல் பண்டைத் தமிழில் 'ஏன்' 'என்ன' 'யாது' என்ற பொருள்களிலேதான் வரும். 'சொல்வது எவன்' என்பது சொல்வது ஏன் என்று பொருள்படும். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்களே காணப்படுவன. இடைக் காலத்து இறுதியில் இப்பொருள் களோடு யாவன், யார் என்ற உயர்திணைப்பொருளும் காணப்படுகின்றது. 'உயர்வுற வுயர்நலம் அருளினன் எவன் அவன்' என்பது திருவாய் மொழி. மலையாள மொழியில் அதன் பண்டைநிலை முதற்கொண்டு யார் என்ற பொருளில் மட்டுமே இச்சொல் வழங்கிவருவ தாகும். 'எவன் ஒருத்தன்' என வியவகார மாலையில் வரு கிறது. எனவே இடைக்காலத்திறுதியில் தமிழில் தோன் றிய பொருளிலேதான் மலையாள மொழியில் இச்சொல் வழங்குகிறது.

மொழிநடை

இனி மொழிநடையை எடுத்துக் கொள்வோம். பண் டைக் காலத்துத் தமிழ்நடை, உருபு முதலியன இன்றி மிகச் செறிவுற்றுச் செல்கிறது. இடைக்காலத்து நடை, உருபுகள் முதலியன அங்கங்கே விரிந்து சிறிதளவு நெகிழ்ந்து செல்வதாகும். இதன் இறுதிக் காலத்தில் நெகிழ்ச்சி இன்னும் அதிகப்பட்டு வாக்கியங்களும் பூரணமாய் அமைந்து, பேச்சு வழக்கைப் பெரும்பாலும் ஒட்டிச் செல்கிறது. உதாரணமாக,

> **வாசவன் மலரின் மேலான் மழுவலான் மைந்தன் மற்றக்**
> **கேசவன் சிறுவ ரென்ற தன்மையோர் தம்மைக் கேளாய்**
> **பூசலின் எதிர்ந்தே னென்றாய் போர்க்களம் புக்க போதென்**
> **ஆசையின் கனியைக் கண்ணிற் கண்டிலை போலும் அஞ்சி.**

என்னும் கம்பன் செய்யுளைக் கூறலாம்.

இதனோடு

அரசர்கள் கோனே மேன்மேல் அருந்துயர் விடுத்தீ வண்ணம்
புரிகுழ லாளெ நண்ணிப்போக்கு மதல்ல காலம்;
இருபது கரங்கள் தங்கும் இலங்க வேத்தனெ யொரிக்கால்
கருதுக, களக சோகம், கைக்கொள்க கோப மிப்போழ்[1]

என ராமசரிதத்தில் வரும் பாட்டை ஒப்பிடலாம். இங்ஙனமே,

எனக்கு நீ செய்யத் தக்க கடனெலாம் ஏங்கி யேங்கி
உனக்குநான் செய்வ தானேன் என்னின்யா ருலகத் துள்ளார்.

என்ற கம்பன் செய்யுளையும் (இராவணன் சோகப். 39)

எனிக்குநீ சடங்கி னாலே இயற்றுமொண் கருமமெல்லாம்
நினக்கு ஞான் செய்யுமாறு நிறுத்திவைத் துமிரோடென்ன

என்ற ராமசரித விருத்தத்தையும் (73,10) ஒப்புநோக்கலாம்.

மொழிநடை ஈரிடத்தும் பெரிதும் ஒத்திருக்கின்றது. எனவே இடைக் காலத்தின் இறுதியிலுள்ள எளிய தமிழ் நடையைச் சார்ந்து தோன்றியதே பிராசீன மலையாளப் பாட்டுக்களின் நடையென்பது விளங்கும்.

செய்யுளின் அமைதி

செய்யுளின் இலக்கண அமைதியை இனி நோக்குவோம். ,லீலா திலக'த்தில் தமிழ் எழுத்துக்களால் அமைந்து எதுகை மோனையுடையதாய் வரும் விருத்த வகையே 'பாட்டு' எனப் பாட்டினது இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. மலையாளத்திலுள்ள அதிபிராசீன நூலாகிய ராமசரிதம் 'பாட்டு' என்ற முறையில் அமைந்ததாம். தமிழில் இவ்விலக்கணத்திற்கேற்ப வரும் விருத்தப் பாக்கள் இடைக் காலத்தில் தோன்றத் தொடங்கி அதன் பிற்பகுதியிலும் பிற்காலத்திலும் மிகவும் பிரசாரம் எய்தியுள்ளன. எனவே ராமசரிதப் பாட்டுக்கள் பிற்காலத் தமிழ்-இலக்கியத்தை யொட்டியமைந்தன என்று தடையின்றிக் கூறலாம்.

மேற்காட்டிய ராமசரிதப்பாட்டில், ஈவண்ணம், புரிகுழலாளெ, ஒரிக்கால், களக, இப்போழ் முதலிய மலையாளச் சொற்கள் தமிழினது திரிந்த வடிவங்களே. மற்றச் சொற்கள் தமிழ் வடிவத்திலேயே உள்ளன. ஆகவே ராம

---

1. ஈவண்ணம்-இவ்வண்ணம். புரிகுழலாளெ-புரிகுழலாளை. இலங்க-இலங்கை. வேந்தனெ-வேந்தனை, ஒரிக்கால்-ஒருக்கால், களக-களைக. இப்போழ்-இப்பொழுது.

சரித காலமாகிய 14-ம் நூற்றாண்டளவில்தான் தமிழி லிருந்து வேறுபட்டு மலையாளம் ஒரு தனிமொழியாகப் பரிணமித்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

சாசனச் சான்று

இங்ஙனம் வேறுபடத் தொடங்கிய காலத்தைச் சாச னங்களால் ஒருவாறு வரையறுத்தல் கூடும். மலையாள நாட்டில் இப்போதுள்ள சாசனங்களில் ஐயமின்றி மிகப் பழமையானது கொச்சிராச்சியத்தில் தளியல் என்ற இடத் திற் காணும் சிவன் கோயிற் சாசனமாகும். இது கி.பி. 930-ம் ஆண்டளவில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. வேறொரு பழைய சாசனம் கவியூரில் உள்ளது. அதில் ஒரு பகுதி வருமாறு:—

> **கலியுகந்தொடங்கி நாலாயிரத்து அம்பத்தோரா மாண்டு திருக்**
> **கவியூர்ப் பட்டாரர்க்கு மகிழஞ்சேரித் தேவன்சேந்நன்**
> **திருவிளக்கும் திருவமுதும் திருவக்கமும் திருச்சந்தணமும்**
> **திருப்புகையும் அமைச்சான்.**

இதன் காலம் கி.பி. 950. இதில் பேச்சு வழக்குத் தமிழும் சேந்நன் முதலிய தமிழொலி மாறிய மலையாள வடி வங்களும் காணப்படுகின்றன.

இச்சாசனங்களால் கி.பி. 10ம் நூற்றாண்டின் ஆரம் பத்திலிருந்து தமிழ் திரிந்து மலையாள மொழியாய் அமையத் தொடங்கிற்று என ஐயமின்றித் துணியலாம். இக் காலத்திற்கு முன்பு ஒலிமாற்றம் முதலியன நேர்ந்த மைக்கு யாதொரு சான்றுமில்லை. நேர்மாறாக, இதற்கு முன்புள்ள சேரநாட்டுக் கவிஞர்கள் அனைவரும் நல்ல தமி ழிலேயே பாடியிருக்கின்றனர். குலசேகராழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ வடிகள் முதலியோரை உதாரணமாகக் காட்டலாம். சங்க காலத்திற்குச் செல்வோமானால் 'பதிற்றுப் பத்து' என்ற தொகை நூலைக் காண்கிறோம். இது சேர அரசர்களைப் பற்றியது. சங்கச் செய்யுட்களில் வந்துள்ள ஒருசில சொற்கள் இன்றும் மலையாளநாட்டில் வழங்கிவருகின்றன.

தமிழ்மொழிக்குரிய வட்டெழுத்துக்களே மலையாள நாட்டில் பூர்வகாலத்தில் கையாளப்பட்டு வந்தன. அங் குள்ள புராதன சாசனங்கள் தமிழ் மொழியிலேயே அமைந் துள்ளன. இவை, தமிழ்மொழியே பண்டைக் காலத்தில்

இந்நாட்டில் வழக்கிலிருந்ததென்பதைப் புலப்படுத்தும், பிராசீன மலையாளக் கவிஞர்கள் தமது மொழியைத் தமிழ் என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ர்ாமப்பணிக்கர் தமது பிரம்மாண்ட புராண மொழிபெயர்ப்பைக் குறித்து 'இதா ஞான் தமிழாய்க் கொண்டறியிக்கிந்நேன்' என்று கூறியுள்ளார்.

மலையாளத்திற்குத் தமிழே தாய்

ஆகவே சொற்கள், சொல் வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின்நடை, செய்யுள்-அமைதி, சாசன இலக்கியம், மலையாள நாட்டினர் இயற்றிய பூர்வ - இலக்கியங்கள், எழுத்து வரலாறு, மலையாளக் கவிஞர்களின் கருத்து முதலிய பல நெறிகளால் நோக்கினாலும் இடைக்காலத்திறுதியிலுள்ள தமிழிலிருந்து கி.பி. 10ம் நூற்றாண்டளவிலே பிராசீன மலையாள மொழி தோன்றத் தொடங்கியதென்று ஐயமின்றிக் கூறலாம். இதனால் தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர்புடையன என்பது தெளிவாக விளங்கும். மலையாளம் தமிழைப் போல் மூலத் திராவிட மொழியிலிருந்து நேரடியாய்ப் பிறந்ததென்றும், இரண்டும் சகோதரித் தொடர்புடையனவென்றும், மலையாளம் தோன்றி 2000 ஆண்டுகளுக்குமேல் ஆய்விட்டன என்றும் சிலர் கூறுவதெல்லாம் அபிமானம் பற்றிய கூற்றென்று தள்ள வேண்டுமேயன்றி நேர்மையான ஆராய்ச்சியின் முடிவெனக் கொள்ளுதற்கில்லை.

மேற்கூறியவாறு தோன்றிய மலையாள மொழியின் தொடக்க நிலையில் உருத்திரியாத தமிழ்ச் சொற்கள் பலவும் உருத்திரிந்தன சிலவும் வழங்கிவந்தன. இவ்வுருத்திரிபும் பெரும்பாலும் நாட்டின் இயற்கையமைதிக்கேற்ப மெல்லோசை தருதற்பொருட்டே நிகழ்ந்தது. பின்னர் மலையாளமொழி, தெலுங்கு, கன்னடம் முதலியவற்றைப் போல, வடமொழியோடு நெருங்கிய உறவு கொள்ளத் தொடங்கிற்று. வடமொழிச் சொற்கள் மிகுதியாக மலையாளத்தில் புகுந்தன. மிருது, கோஷம் முதலிய வடமொழியொலிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொடர்பினால் மலையாளம் தனது பூர்வ நிலையிலிருந்து பெரிதும் வேறுபாடு அடைந்தது. ஆயினும் அதற்குத் தமிழ்மொழியின் தொடர்பை முற்றிலும் அறுத்துக் கொள்ள முடியவில்லை. இன்றும் மலையாளமொழி தமிழர்க்கும், தமிழ்

மொழி மலையாளிகட்கும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியனவாகவே உள்ளன. தெலுங்கு, கன்னட மொழிக ளுக்கு இல்லாத இவ்வியல்பு இவ் இருமொழிகளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை நன்கு விளக்குகின்றது.

முந்திய எனது ரேடியோப் பேச்சிலே* இடைக்காலத்தின் இறுதியில் சுமார் 10-ம் நூற்றாண்டில், அக்காலத்தில் கேரளத்தில் வழங்கிய தமிழ்மொழி திரிந்து மலையாள மாகப் பரிணமிக்கத் தொடங்கியதென்று கூறினேன். இது பற்றி முன் காட்டிய பலகாரணங்கள் தவிர, வேறு சில காரணங்களைக் குறித்து இன்று சொல்லலாமென்று நினைக்கிறேன்.

சொல் வரலாறு

பண்டை மலையாளச் சொற்கள் சிலவற்றிற்கு மலை யாள வியாகரண முறையில் சொல்-வரலாறு காணுதல் இயலாது. அவற்றின் பூர்வ ரூபங்களாகிய தமிழ்ச்சொற் களை நோக்கினால்தான் அவ் வரலாற்றை உணரலாம். உதாரணமாக, வாதல் என்ற சொல்லை எடுத்துக் கொள் வோம். இதற்கு மலையாளத்தில் வரலாறு யாதும் இல்லை. இதற்குரிய தமிழ் வடிவம் 'வாசல்' என்பது. சம்மதம் தம்மதம், சங்கடம் தங்கடம் என வருதல்போல, வாசல் என்பது வாதல் எனத்திரிந்தது. வாசல் என்ற தமிழ்ச் சொற்கும் இவ்வடிவில் வரலாறு கூற முடியாது. 11-ம் நூற்றாண்டளவில் தோன்றிய செய்யுட்களில்தான் இச்சொல் காணப்படுகிறது. 'வானே ரபயன் இரவி குலோத்துங்கன் வாசல் வந்தால்' (பெருந்தொகை, 1489) என்பது காண்க. இதனால் இவ்வடிவம் இடைக்காலத்து இறுதியில் சாமானிய வழக்கில் புகுந்த தமிழ் என்பது தெளிவு. இதன் பூர்வரூபம் 'வாயில்' என்பது. 'அடையா வாயில்' எனச் சிறுபாணாற்றுப்படையில் வருகிறது. இதற்குரிய பொருள் 'முகப்பிடம்' அல்லது 'வீட்டின் முகப்பு' என எளிதில் விளங்கும். இதுவே இச்சொல்லின் பிறப்பு வரலாறு. சிலவு, செறுக்கன் முதலியவையும் வேறு உதாரணங்களாம். செலவு, சிறுக்கன் என்பனவே இங்ஙனம் திரிந்தன. 'தாங்குகோடி தனஞ்செலவென்பவே' என்ற சிவரகசிய மும், 'ஆலினிலைவளர்ந்த சிறுக்கன்' என்ற பெரியாழ்வார்

* திருவனந்தபுரம் அகில இந்திய ரேடியோவில் இரு தினங்களில் பேசிய பேச்சினை விரித்து அமைக்கப்பட்டது இக் கட்டுரை.

திருமொழியும் (1,4,7) அறியத்தக்கன. இவ்வுதாரணங்களால் மலையாளச் சொற்கள் பலவற்றின் பூர்வவடிவம் தமிழில் உள்ளதென்பதும், அவ்வடிவம் திரிந்து திரிந்து மலையாள வடிவங் கொண்டதென்பதும், இங்ஙனம் வடிவம் மாறியது சுமார் 10-ம் நூற்றாண்டிலே என்பதும் நன்கு புலப்படுகின்றன.

இந்நெறிக்குமாறாக, தமிழ்ச்சொல் மலையாளமொழியினின்று திரிந்து வந்ததாகவேனும் அதன் பிறப்பு வரலாறு மலையாளத்தில் உள்ளதாகவேனும் காண இயலவில்லை. இதனால் மலையாளமொழி தமிழ்மொழிக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றியதென்பது வெளிப்படை.

மரபுத் தொடர்கள்

தமிழிலே இடைக்காலத்து இறுதியில் தோன்றிய சில மரபுத் தொடர்கள் பண்டை மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, திருவுள்ளம் எனக் கம்பன் வழங்குகிறான் (கங்கை. 67); இது ராமசரிதத்திலும் (2,3) வருகிறது. திருமேனி (திருவாய்மொழி 9,7,3), திருவடி (நான்முகன் திருவந்தாதி, 68) முதலியனவும் பிற உதாரணங்கள். இதனால் தமிழ் தோன்றி வளர்ந்து இடைக்கால நிலைமை அடைந்ததன் பிற்பாடு, அதினின்றும் பிராசீன மலையாளத்திலுள்ள மரபுத் தொடர்கள் கொள்ளப் பட்டமை நன்றாக வெளிப்படுகின்றது.

சந்தியமைப்புக்கள்

தமிழில் பிற்காலத்துத் தோன்றிய சில சந்தி யமைப்புக்கள் பண்டை மலையாளத்தில் உள்ளன. உதாரணமாக 'வெவ்வேறு' என்றதனைக் கூறலாம். வேறு வேறு என்ற இரண்டு சொற்கள் ஒன்றுபட்டுச் சந்தி மருவிவந்தது. முற்காலத்துத் தமிழில் இவ் வழக்குக் காணப்படவில்லை. 'பிறப்பினாக்கம் வேறுவேறியல' என்றனர் தொல்காப்பியர் (பிறப். 1). ஆனால் 'வித்தகமும் விதிவசமும் வெவ் வேறே புறங்கிடப்ப' எனக் கம்பன் பாடுகின்றான். எனவே இடைக் காலத்தின் இறுதியில் புகுந்த இப்பிரயோகமே மலையாள மொழியில் இடம் பெறலாயிற்று. இக்காரணமும் முன்பு கூறிய முடிவை வலியுறுத்துகிறது.

இவ்வாறாக, எந்த நெறியில் நோக்கினும் தமிழின் உட்கிளையே மலையாளம் என்பது தெளிவாகிறது. உட்கிளையாகப் பிரிந்த காலமும் 10-ம் நூற்றாண்டின் அளவிலாகும்.

சரித்திரச் சான்று

இனி, சரித்திர நெறியால் நோக்குவோம். பூர்வ காலத்தில் வடக்கே வேங்கடமலையும், தெற்கே குமரிமுனையும், மற்ற இரண்டு புறத்தும் கடலும் எல்லையாகவுடைய நிலப்பரப்பிலே வாழ்ந்தவர்கள் தமிழ்மக்களே. அவர்கள் பேசிவந்த மொழி தமிழே. இவை தக்க சான்றுகளால் அறியப்படுகின்றன. தொல்காப்பியப் பாயிரத்தில்,

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து

என வருகிறது. இதனையே சிறிது விளக்கி

வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று
அந்நான் கெல்லை யகவயிற் கிடந்த

என வேறோராசிரியரும் கூறுகிறார். ஆகவே தமிழ் ஒன்றே பண்டைக் காலத்தில் வேங்கடமலைக்குத் தெற்கேயுள்ள தென்னாட்டில் வழங்கிவந்ததாம். இப்பகுதியில் அரசாட்சி புரிந்தவர்கள் சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பேரரசர்களுமாவர். இவர்களை,

தண்டமிழ்க் கிழவர்
முரசுகெழுதானை மூவர்

எனப் புறநானூறும் (35),

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்

எனத் தொல்காப்பியமும் (செய்யுளியல் 79) கூறுகின்றன. சேருட்பட இம் மூவரும் தமிழர்கள் என்பதில் ஒருவர்க்கும் சந்தேகமேயில்லை. 'தண்தமிழ்க்கிழவர்' என்று இவர்களைப் புறநானூறு குறித்துள்ளது இதனைத் தெளிவாக்குகிறது. அன்றியும், புறநானூற்றில் வரும் பல செய்யுட்கள் சேரரைத் தமிழரசராகவே கொண்டு பாடியுள்ளன. பதிற்றுப்பத்து என்ற தமிழ்நூல் முழுவதும் உதியன் சேரல் முதலிய சேர அரசர்களைப் பற்றியதே. ஐங்குறுநூறு என்ற தொகைநூலை ஒரு சேர அரசர் தொகுப்பித்தனர். தொல்காப்பியரோடு உடன் கற்ற ஆசிரியர் ஒருவர் விளவங்கோட்டுத் தாலுக்கிலுள்ள அதங்கோடு என்னும் ஊரினர். இதனால் இவருக்கு 'அதங்கோட்டாசான்' என்று பெயர் வழங்கியது. தொல்காப்பியரும் சேரநாட்டினர் என்று கருதுவதற்கு இடமுண்டு. சேரநாட்டு அரசர்கள் பலர்

தமிழ்க்கவிஞர்களாயும் உள்ளனர். உதாரணமாக, குலசேகராழ்வார், சேரமான் பெருமாள், இளங்கோவடிகள் முதலியோரைக் கூறலாம். சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய சேரன் செங்குட்டுவன், 'அருந்தமிழாற்றல் அறிந்திலர் ஆங்கென' (26-161, 185; 27-5) என்று ஆரிய மன்னரைக் குறித்துச் சொல்லித் தமிழரசர்களது தமிழப்பிரதிநிதியாக வடக்கே சென்று போர்புரிந்து வென்றான். இங்ஙனம் கதை அமைத்துள்ளார் சிலப்பதிகாரம் செய்த சேர குலத்து இளங்கோவடிகள்.

பெயர்கள்

சேர நாட்டிலுள்ள பண்டை நகரங்கள் பலவும் தமிழ்ப் பெயர்களையே தாங்கின. உதாரணமாக, கருவூர், தொண்டி, மாந்தை, வெளியம், கழுமலம், தகடூர் முதலியவற்றைக் காணலாம். இங்ஙனமே நதிகளும், மலைகளும்; உதாரணங்கள் பொருநை, பெரியாறு, கொல்லிமலை முதலியன. மக்கட்குரிய இயற்பெயர் முதலியனவும் இத்தன்மையனவே,

ஆய் என்ற பெரும்புகழ்படைத்த அரசனொருவன் சேரநாட்டில் ஆட்சி புரிந்து பெரிய வள்ளலாய் விளங்கினன். இவன் ஆண்ட சேரநாட்டை ஆய்நாடு என முற்காலத்துக் கிரேக்கர்கள் வழங்கினர்.

இங்கே காட்டிய சான்றுகளுக்கு எதிராக வேற்று மொழி இச்சேரநாட்டில் முற்காலத்தே வழங்கியதாக ஒரு சான்றுமில்லை. இது நன்றாக மனங்கொள்ளுதற்குரியது.

கொடுந் தமிழ்

வேங்கட முதற் குமரிவரையுள்ள பெரிய நிலப்பரப்பில் வழங்கிய தமிழ் எங்கும் ஒரே தன்மையதாய் இருந்ததெனல் பொருத்தமாகாது. அங்கங்கே சிற்சில வேறுபாடுகள் இருத்தல் முற்றிலும் இயல்பே. இவ் வேறுபாடுகளைக் குறித்தனவே கொடுந்தமிழ்நாடுகள் என்பன. கொடுந்தமிழ் நாடுகளைப் பன்னிரண்டு என முற்காலத்தார் கணக்கிட்டனர்.

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்' என்றார் தொல்காப்பியர். இவை இன்னவென்பதை

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு — நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்ற பழஞ்செய்யுள் விளக்குகிறது. இவற்றுள் குட்ட நாடு, குடநாடு, வேணாடு, பூழிநாடு என்பன சேரநாட்டுப் பகுதிகளென ஐயமின்றிக் கூறலாம். தாயைத் தள்ளை யென்றும், தந்தையை அச்சன் என்றும் குட்டநாட்டினரும் குடநாட்டினரும் கூறுவரெனச் சொல்லப்படுகிறது (நன்னூல், 272 மயிலை). இவ்வழக்காறு இன்றும் சேரநாட்டில் உள்ளதென்பது நாம் நன்கு அறிந்ததே. இச்சிறு வேறுபாடுகள் இருந்தபோதிலும், இவையனைத்தும் தமிழ்நாட்டுப் பகுதிகளேயென்பதில் ஐயமில்லை. இங்கே வழங்கிய மொழியும் தமிழேயாகும்.

அநாதித் தொடர்பு

சேரநாடு வெகுகாலமாகச் சோழபாண்டியரது ஆட்சியில் அடங்கி யிருந்தமை சரித்திரச் சான்றுகளாலும், கல்வெட்டுக்களாலும் எளிதில் அறியலாம். இந்த ஆக்கிரமணம் எப்போது தொடங்கியது என்று வரையறை செய்ய முடியாது. சங்க காலத்தில், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், சேரனுள்பட எழுவரை வென்ற செய்தி கூறப்படுகிறது (அகம். 36). இவ்வரசனே யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற சேரனை வென்று சிறையில் அடைத்துவைத்தான் என்பதும் தெரிய வருகிறது (புறம். 7). சோழர்கள் வெண்ணி, கழுமலம், கருவூர் முதலிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் சேரர்களை வெற்றிகொண்ட செய்தி சங்கப் பாடல்களால் விளங்குகிறது. ஆகவே சேரர்க்கும் சோழ பாண்டியர்க்கும் போர் வினைகள் சங்க காலந் தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. சேரர் குடும்பத்திற்கும் ஏனைய சோழ பாண்டிய குடும்பங்களுக்கும் மணவினைகள் நிகழ்ந்த செய்தியும் சங்க காலந்தொட்டு அறியப்படுகின்றது. இது பற்றிப் பதிற்றுப்பத்தில் பல குறிப்புக்கள் காணலாம். இவ்வாறு பல நூற்றாண்டுகளாக, சேரர்களும் ஏனையத் தமிழரசர்களும் ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் அடுத்தும் ஊடாடிய செய்திகள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. சோழ பாண்டியர்களை ஒத்து விளங்கிய பழைய தமிழ்க் குடியினர் இச்சேரர்கள் என்பது மேற் கூறியவற்றாலும் நன்கு விளங்கும். இவர்கள் பேசிவந்ததும் போற்றி வந்ததும் தாய் மொழியாகிய தமிழே.

மலையாளம் உபபாஷை

இத் தமிழ் திரிந்து மலையாளமாய்ப் பரிணமிக்கத் தொடங்கியது கி.பி. 10-ம் நூற்றாண்டிலாகும். இக் காலத்

திற்கு முன் பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்த தமிழின் ஓர் உபபாஷையே மலையாளமாம். 10-ம் நூற்றாண்டிற்குமுன் இத்திரிபு காணப்படவில்லை. மலையாள மொழியும் இல்லை. மூலத் திராவிடம் என்ற மலை வீழருவியினின்றும் தோன்றி, காலக் கிரமத்தில் நீர் ஏராளமாக நிறைந்து பெருக்கெடுத்துப் பாய்ந்து வந்த பேராறு தமிழாகும். பிரதேச நிலைமையால் இப்பேராற்றினின்று பிரிந்து பாயும் கிளை நதியே மலையாளமாம்.

ஆராய்ச்சியாளர் துணிபு

நான் இங்கே துணிந்த முடிபுகள் தமிழ்-மலையாளத் தொடர்பு பற்றி ஆராய்ந்த அறிஞர்களில் பெரும்பாலார்க்கு உடம்பாடேயாகும். மலையாள மொழி யாராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர்கள் புரொபஸர், ஏ.ஆர். ராஜராஜவர்மா. இவர்கள் தங்களது கேரள பாணினீயத்தின் பீடிகையில் இம்மொழித் தொடர்பினை விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். அதில் வரும் சில கருத்துக்களை இங்கே நோக்குவோம்.

1. மலநாடாய மலையாளத்திலே ஆதிநிவாசிகள் தமிழரும், அவருடெ பாஷ தமிழுமாயிருந்தது. (பக். 5)

2. மலயாளம் தமிழின்றெ ஒரு உபபாஷ. (பக். 13)

3. கொல்லவர்ஷ ஆரம்ப கட்டமாய கிறிஸ்துவப்தம் 825-நு மேலே மலயாளம் ஒரு ஸ்வதந்தர பாஷயுடெ நிலயில் எத்தியுள்ளு. அதினெ கொல்ல வருஷாரம்பத்திநு முன்புள்ள காலத்தெ மாதாவாய தமிழின்றே கர்ப்பத்தில் வஸிச்சிருந்ந காலமாயி கணிச்சால் மதியாம். (பக். 54)

4. பாலிகயாய கேரளபாஷயுடெ ரக்ஷகர்த்ரு ஸ்தானம் தமிழிநுதந்நே ஆயிருந்நு. (பக். 55)

5. சோழம், கேரளம், பாண்ட்யம் ஈ மூந்நு தேசங்ஙளிலேயும் பாஷ தமிழின்றெ வகபேதங்ஙளாண. (பக். 66)

இவைகளெல்லாம் நான் கூறிவந்த முடிபுகளும் அவற்றினின்றும் பெறப்படுவனவுமே யாகும். இப் பேராசிரியர் கருத்துக்கும் எனது கருத்துக்கும் இரண்டு வேறுபாடுகள் உண்டு. ஒன்று காலம் பற்றியது. கி.பி. 825ல் அதாவது கொல்லம் ஆண்டின் தொடக்கத்தில்தான் மலையாள மொழியின் ஆரம்பம் என்பர் இவர். எனது கருத்தின்படி ஒரு நூற்றாண்டிற்குப்பின், அதாவது 10-ம் நூற்றாண்டிற்குப்பின், இவ் வாரம்பம் நிகழ்ந்ததாம். இதற்கு முக்கிய

காரணம் 9-ம் நூற்றாண்டினரும் கொடுங்கோளூரில் அரசு புரிந்தவருமான சேரமான் பெருமாள் நாயனார் தமிழிலேயே பாடியுள்ளார் என்பதே. இவர் காலத்தில் தமிழ் தான் மலையாள தேசத்தில் வழங்கிவந்தது. எனவே இவர் காலத்திற்குப்பின் 10-ம் நூற்றாண்டளவிலே மலையாள மொழியின் தொடக்கத்தைக் கூறுதல் வேண்டும். கொல்லம் ஆண்டின் ஆரம்பத்திற்கும் மலையாள மொழியின் ஆரம்பத் திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. ராஜராஜ வர்மா அவர்கள் குறித்த காலம் உத்தேசமேயன்றி வேறல்ல.

இரண்டாவது வேறுபாடு ஊன்றி நோக்குதற்குரியது. கி.பி. 10ம் நூற்றாண்டிற்கு முந்தி சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மொழியும் இலக்கியமும் வளர்ந்து பெருகிவந்திருக்கின்றன. சங்க காலம் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் முதல் கட்டம் என்று சொல்லலாம். தேவார காலம் இரண்டாவது கட்டம் என்று கூறலாம். இந்த இரண்டாவது கட்டத்திலே திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியன அடங்கும். இக் கட்டத்தின் இறுதிப் பகுதி 10-ம் நூற்றாண்டு. சோழரது ஆதிக்கியம் உச்ச நிலையை அடைந்தது இக்காலத்தேதான். இக் காலம் வரை வளர்ந்துள்ள தமிழ்மொழியின் நிலையையும் இலக்கிய நிலையையும் நமது பேராசிரியர் மனத்திற் கொள்ளவேயில்லை. மலையாள மொழியின் பல்வேறு கட்டங்களையும் நுணுகி ஆராய்ந்து அறுதியிட்டவர்கள் தமிழ்மொழியின் பல்வேறு கட்டங்களையும் தெரிந்துகொள்ள முயலாதது பெருவியப் பாகும். இதனை நோக்கியிருப்பார்களாயின் இடைக்காலத் தின் இறுதியிலுள்ள தமிழினின்று பிரிந்ததே மலையாளம் என்பதை இனிது கண்டிருப்பர்.

பேராசிரியர் ராஜராஜவர்மா அவர்களை யடுத்து, காலஞ்சென்ற உள்ளூர் பரமேசுவர ஐயரவர்களின் கருத்தை நோக்குவோம்;

> **கேரளத்திலும் அதின்றே கிழக்கன் பிரதேசங்களிலும் பூர்வ காலங்களிலும் ஒரு பாஷயே நடப்புண்டா யிருந்நுள்ளு எந்நும், ஆ பாஷ தமிழாயிருந்து எந்நும், மலயாளத்தே தமிழின்றே கனிஷ்ட ஸகோதரி யெந்நல்ல புத்ரி யெந்நாண பறயேண்ட தெந்நும் இப்போழ் பரக்கே ஸம்மத மாயிட்டுண்டே (பிராசீன மலயாள மாத்ருகள் i அவதாரிக பக். v)**

இக்கருத்து எனது கருத்தோடு முற்றும் ஒத்துள்ளமை கூற வேண்டா. டாக்டர் குண்டர்ட் தமது மலையாள பாஷா வ்யாகரணத்தில் கூறுவது வருமாறு:—

> **மலயாள பாஷ த்ரமிளம் எந்நுள்ள தமிழின்றே ஒரு சாக ஆகுந்து, அதுதெலுங்கு கர்னாடகம், துளு, குடகு முதலாய சாககளெக்காள் அதிகம் தமிழருடே ஸூத்ரங்களோடு ஒத்துவரிகையால் உபபாஷ யத்ரே.**

மேற்சுட்டிய மூவரைப் போன்று அத்தனை சிறப்பும் புகழும் வாய்ந்த பேராசிரியர்கள் மலையாள மொழிபற்றிய அளவில் அரியரென்பது கூறவேண்டா. டாக்டர் கால்டுவல் திராவிட மொழிகளுக்கு ஒப்பு நோக்கு இலக்கணம் வகுத்தவர். இவரும் தமது பெருநூலில் எனது கருத்துக்களையே ஆதரிக்கின்றனர்*.

பிறகொள்கை பொருந்தாமை

ஆனால், தற்காலத்தில் ஒரு சிலர் இக் கருத்துக்களை அங்கீகரிக்கவில்லை. மூலத் திராவிட மொழியிலிருந்து மலையாளம் நேரே பிறந்ததென்பர். பிராசீன மலையாள கவிஞர்கள் தங்கள் மொழியைத் 'தமிழ்' என்று அழைத்ததற்கு ஒருவர் வெகு விநோதமாக விளக்கம் செய்துள்ளார். இச்சொல் மூலத் திராவிடமொழிக்கும் பெயர்; அதினின்றும் கிளைத்த தமிழ் மொழிக்கும் பெயர்; ஏனைத் திராவிட மொழிகளுக்கும் பெயராம் என்றனர்! மூலத் திராவிட மொழி வெறுங் கற்பிதமொழி என்பதை இவர் மறந்து விட்டார். அதற்குத் தமிழ் எனப் பெயருண்டென்பது இவர்க்கு எவ்வாறு தெரிந்தது? இப் போலிக்காரணங்களைக் கூறுதலினாலேயே, இது அபிமானம் பற்றிய கொள்கையென்பது நன்கு விளங்குகிறது. வேறொருவர் கூறுவதும் விநோதமாகவே யுள்ளது. முன்னிலையில் வேற்றுமையுருபேற்கும் சொல் ஒருமைக்கு 'உன்' என்றும் பன்மைக்கு 'உம்' என்றும் கூறி, இவை யிரண்டுமே தான் தமிழில் ஆதிகாலத்தில்

---

* 'The Malayalam language is not distinguished from Tamil by (Sanskrit writer)'— P.17.

'It (Malayalam) might perhaps be regarded rather as a dialect of Tamil than as a distinct member of the Dravidian family'—p.18.

'I consider it (Malayalam) to have been not a sister of Tamil, but a daughter'— p. 19.

இருந்தனவாம் என்றனர். இவற்றின் பூர்வ வடிவங்களாகிய நின், நிம் (நும்) என்பன மலையாளத்தில் மட்டுந்தான் உளவாம். எனவே, மலையாளம் தமிழ்மொழிக்கு முற்படத் தோன்றியதாம்! தொன்றுதொட்டு இன்றுவரை நின், நும் என்பன தமிழில் வழங்கி வந்துள்ளன. 'நின்னும் நின்மலையும் பாடி', 'நும்கோயாரென வினவின்' எனப் புறநானூற்றில் (130, 212) வருகின்றன.

தொல்காப்பியர் இவ்விரு சொற்களையும் குறித்துள்ளார்.

நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றாகும்மே (உருபியல்-7)

நும் என் ஒருபெயர் மெல்லெழுத்துமிகுமே.
(புள்ளிமயங்-30)

என்பனவற்றைக் காண்க. ஆகவே, அடிப்படையையே இந்த அறிஞர் பிறழ உணர்ந்தார். மலையாளத்தில் நிம், நும் என்பன கிடையா. நிங்கள் என்பது பிற்காலத் தமிழ் வடிவமாகிய நீங்கள் என்பதன் திரிபாம். 'நூலவையார் போல் நீங்கள் நோக்குமினே' (சிந்தா. 1045) என்றதனை நோக்குக. வேறொன்று, தங்கள்-தங்ஙள் எனவும் வந்து-வந்நு எனவும் வருதல் போல, கொன்றான் என்பது கொந்நான் என மலையாளத்தில் வரமாட்டாதென்றனர். கொன்று என்பது கொந்நு என மலையாளத்தில் வருதல் மிகச் சாதாரணம். அன்றியும் இவ்வாறு கூறுவதன் பயன் யாது என்பது விளக்கமாயெழுதவில்லை. கடைசியாக, பெயரெச்சவினை அடுக்கிவந்து பெயர் கொள்ளும்போது, அந்த எச்சங்கள் தமிழிற் காணுவதற்கு முந்தியதொரு நிலையைத் தற்காலத்து நாடோடிமலையாளம் காட்டுகின்றதென்று க்ரையர்ஸன் (Grierson) கருதுவதாகவும், அதனால் தமிழ்மொழிக்கு முற்பட்ட நிலையில் மலையாள மொழியுள்ளதாகவும் இவர் கூறுகின்றார். இதனை ஓர் உதாரணங்கொண்டு விளக்கியிருப்பின் பயனுடையதாகும். தமிழில் எத்தனையோ நெறிகளில் பெயரெச்சங்கள் அடுக்கி வருகின்றன. வினையடிகளோடு 'உம்' சேர்ந்தும், 'உம்' 'உந்து' எனத் திரிந்தும், வினையடிகளே அடுக்கி வந்தும், பெயரெச்சங்கள் தாமே அடுக்கிவந்தும், முன்புள்ள பெயரெச்சங்கள் வினையெச்சங்களாய்த் திரிந்து ஈற்றிலுள்ள பெயரெச்சத்தோடு முடிந்து பெயரைத் தழுவியும், பிறவாறாகவும் பெயரெச்சங்கள் அடுக்கி வருவனவாம். இவற்றில்

அடங்காத நெறியொன்று மலையாளத்திலிருப்பதாகத் தெரியவில்லை. இவை போன்ற காரணங்களால் மலையாளம் திராவிட மூலமொழியினின்றும் பிறந்த ஒரு தனி மொழியென நாட்ட முயன்றுள்ளார்!

முடிவு

மலையாள மொழி ஒரு கௌரவமான ஸ்தானத்தை இப்போது பெற்றுள்ளது. அதன் வினைவிகுதிகளும் வேறு சில இலக்கண நியதிகளும் மிகவும் போற்றத்தக்கன. அதன் லளிதமும் இனிமையும் நாடோடித் தமிழின் இயல்பைப் புலப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. தமிழறிஞர்கள் சங்கத் தமிழ் நடையில் எழுதுவதைக் கைவிட்டு மலையாள அறிஞர்களைப்போல் இன்றைய வழக்கிலுள்ள தற்காலத் தமிழைக் கையாண்டு எழுதி நமது மொழிக்கு உயிராற்றல் கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

சொற்களின் சரிதம்

மூன்றாம் பகுதி

1. கழகம்

இக்காலத்தே கல்வியோடு நெருங்கிய தொடர்புள்ளதாகக் 'கழகம் வழங்குகிறது. இச்சொல் திருக்குறளில்,

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார், **(935)**

என வந்துள்ளது.

'கழகமாக ஏகவின்பக் காமக் கவறாடல்
இயைவதன்றே'

எனச் சிந்தாமணியில் (1657) உள்ளது.

ஓதுசாலையும் சூதாடு கழகமும்,

என்பது பெருங்கதை (II, 7, 132).

தவலில்தண் கழகத்துத்
தவிராது வட்டிப்பக்
கவறுற்ற வடுவேய்க்குங்
காமர்பூங் கடற்சேர்ப்ப,

எனக் கலித்தொகையில் (136) பயின்றுள்ளது. இதுவே இச்சொல்லின் முதற் பிரயோகம் என்று தோன்றுகிறது. 'வேதச்சொல்லாகிய 'களம்' என்பது புறநானூறு முதலிய மிகப் பழைய சங்க நூல்களிற் காணப்படாமல், இச்சொல் கலித்தொகை முதலிய பிற்பட்ட இலக்கியங்களில் மாத்திரம் காணப்படுவது அது பிற்பட்ட வழக்கென்பதனை நன்கு புலப்படுத்துகிறது.

இவ்விலக்கியங்களில் சூதாடுமிடத்திற்குப் பெயராக இச்சொல் வழங்கியுள்ளது. இது காலகதியில் வேறு பல இடங்களுக்கும் பெயராயிற்று. திவாகரத்தில்,

செல்லல் தீர்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல் லுநர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும் சூதும் படையும் மற்றும்
கல்விபயில் களமும் கழக மாகும்,

என்று வருவதனால் இதனை உணரலாம்.

இங்ஙனம், பொருள் விரிவுற்றது மிக்க பயனுடையதே. எனினும், பிற பொருள்களுக்கு இலக்கிய வழக்கு

மிக மிகப் பிற்பட்ட காலத்தேதான் உள்ளது. சூதாடுமிடத்தில் கூட்டம் இருத்தல் இயல்பாதலால் 'கூட்டம்' 'திரள்' என்ற பொருள் முதல்முதற் பிறந்ததாதல் வேண்டும். 'கழக மேறேல் நம்பீ' என்ற திருவாய் மொழியில் (6,2,6) 'திரள்' என்பதே பொருள். இப்பொருளை நுணுகி யலங்கரித்து ஈடு என்னும் வியாக்கியானம், 'ஓலக்கம்' என்று பொருள் கூறும். சூது போர் என்பது வழக்காதலால் மற்போர், வாட்போர் முதலிய பிற வகைப் போர்கள் நிகழும் இடத்திற்கும் இச்சொல் வழக்கிற்குரியதெனத் திவாகரர் கருதினர். ஆனால், பண்டை இலக்கியப் பிரயோகம் இல்லை. மலையாள மொழிந்த திராவிட மொழிகளில் இச்சொல் காணப்படவில்லை. பின்னர், நாவலர்கள் கூடி ஆராய்ந்து வாது செய்யும் இடத்திற்கும் இது பெயராய் அமைந்தது. இதற்கும் முற்காலப் பிரயோகம் காண்டல் அரிது. இதன் பின்னர், கல்வி பயிலுமிடத்திற்கு இச்சொல் வழங்கலாயிற்று. 'கந்தனை யனையவர் கலைதெரிகழகம்' என்பது இராமாயணம் (நாட்டுப். 48).

மேற்கூறிய பொருள் வரலாற்றால் கழகம் என்னும் சொல் முதலில் சூதாடுமிடத்திற்குப் பெயராகி, பின் நாளடைவில் பொருளுயர்வு பெற்று இக்காலத்தே நூல் முதலிய ஆராய்ச்சி நிகழுமிடத்திற்குப் பெயராய் அமைந்துவிட்டமை தெளிவாம். செந்தமிழ்க் கழகம், பல்கலைக் கழகம் முதலிய நவீன வழக்குக்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன. வெகுகாலமாக வழக்கற்றுப் போன இச்சொல் உச்சரிப்பதற்கு எளிதாய் இருத்தல் பற்றியும், தமிழுக்கே சிறப்பென்று கருதும் ழகரம் பயின்றிருப்பது பற்றியும், தமிழ்ப்பற்று மிக்க சில அறிஞர்கள், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மீண்டும் இதனை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். பொதுப்படச் சங்கம், சபை என்ற பொருளில் இப்போது வழங்குகிறது.

இச் சொல்லுக்கு எங்கிருந்து, எவ்வாறு சூதாடும் இடம் என்ற பொருள் வந்தது? சூதாடுதல் உலகம் முழுவதும் பரவியிருந்த ஒரு பொழுது போக்காக இருந்தாலும் பாரத நாட்டின் வட பகுதியில் மிகப் புராதன காலத்திலேயே அது வழங்கியதென்று நாம் கருதலாம். 'வேத காலத்து இந்தியர்களுக்குச் சூதும், குதிரைப் பந்தயமும் முக்கியமான பொழுது போக்குகள்' என்றார் மக்டாநல்டு (Vedic Index: Aksa) பாரதக் கதையும் இதற்குச் சான்றாகும். சூதாட்டு ஆதியில் வடநாட்டு வழக்கமே என்பது

'சூது' என்ற தற்பவச் சொல்லினாலும் உணரலாம். 'த்யூத' என்பது இதன் வடமொழி ரூபம்.

சங்க காலத்தில் மக்கள் சூது பொருதார்கள் என்ற வரலாறு, மிக மிக அருகியே காணப்படுகிறது. புறநானூற்றில் இரண்டு இடங்களில் சூதாட்டு குறிக்கப்படுகிறது. ஓரிடத்தில் (43) நலங்கிள்ளி என்ற அரசனும் தாமப்பல் கண்ணன் என்ற அந்தணனும் சூதாடியதாகச் சொல்லப் படுகிறது. பிறிதோர் இடத்தில் (52).

நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லி னல்லகம் நிறையப் பல்பொறிக்
கான வாரணம் ஈனுங்
காடாகி விளியும் நாடுடை யோரே,

என வருகின்றது. இங்கே 'வல்', 'நாய்'* என்பன சூதாடு கருவிகள். இச்செய்யுளில் 'வடபுல மன்னர் வாட' என வருதலாலும், கந்தம், பலி, வாரணம் முதலிய வட சொற்கள் வருதலாலும், தமிழ் நாட்டினரும் வட நாட்டினரும் நெருங்கிப் பழகியதன்பின் இச்செய்யுள் தோன்றியதாகும்.

வட மொழியில் இச்சொல்லோடு தொடர்புடையது யாதேனும் காணப்படுகிறதா? அமர நிகண்டு சூதாட்டத்தில் வைக்கும் பந்தயத்திற்கு 'க்லஹ' என்று பெயர் கூறும். இச் சொல்லும் பொருளும் பாணினீயத்தில் 'அக்ஷேஷு க்லஹ, (III, 3-70), என்று காணப்படுகிறது. '(பிற இடங்களில் கொள்ளப்படும் பொருளை 'க்லஹ எனக் கூறினும்) சூதாட்டத்தில் (கொள்வதை), 'க்லஹ' (என்க)' என்பது பொருள்' அதர்வவேதத்தில் (IV, 28,1) சூது கருவி உருட்டுதலுக்கும் சூதாட்டத்திற்கும் பெயராக வந்துள்ளது. இச் சொல்லின் பொருள் பலபடியாக விரிந்து வந்துள்ளமை மானியர் உவெல் லியம் இயற்றிய அகராதியில் அறியலாகும். இதுவே 'கழகம்' என்பது. உருபு கொண்டும் பொருளில் தொடர்பு கொண்டும் துணியத் தகும்.

---

*இச் சொற்கள் தொல்காப்பியத்திலும் (புள்ளிமயங்கு, 78, 79) காணப்படுகின்றன.

'வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே'

'நாயும் பலகையும் வரூஉங் காலை
ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே
உகரங் கெடுவழி அகரம் நிலையும்.'

ஆனால், தமிழில் சூதாடும் இடத்திற்கே இச்சொல்லை முதல் முதலில் வழங்கலாயினர். 'மாயச் சூது', 'வஞ்சனைச் சூது' என்று இவ்வகை ஆட்டத்தை நம்மவர்கள் குறிப்பிடுவர். 'த்யூதம் சலயதாமஸ்மி' என்பது கீதை (X, 36). இச்சூது நிகழுமிடத்தைக் குறிக்க வந்த இச் சொல்லும் தனித் தமிழ்ச் சொற்போல மாய வேஷம் பூண்டு நம்மை மயக்கிவிட்டது. சூதாட்டத்தை அடியோடு மறந்து சிறந்த பொருளில் இச் சொல்லை நம்மவர்கள் பிற்காலத்தில் வழங்கிவிட்டனர்.

இழிவுப் பொருண்மை (Degradation) யுடைய ஒரு சொல் உயர்வுப் பொருண்மையில் (Elevation) வருதல் சொற்பொருள் வரலாற்றில் நன்கு தெளியப்பட்ட ஒரு நெறியாகும். நைஸ் (Nice) என்ற ஆங்கிலச் சொல் அறியாமை அல்லது மடமை என்ற பொருளில் ஆதியில் வழங்கப்பட்டது. இப்பொழுது 'நேர்த்தி', அல்லது 'சீர்மை' என்ற பொருளுடைய தாய் உயர்ச்சி பெற்றுவிட்டது. இங்ஙனமே பல மொழிகளிலும் இந்நெறி காணப்படுகிறது. 'கழகம்' என்ற சொல் இவ்வகையான உயர்வுப் பொருண்மை நெறிக்குத் தக்க உதாரணமாகும். பிறிதோர் உதாரணமாக, 'களவு' என்ற சொல்லைக் காட்டலாம். இது 'திருட்டு' என்று முதலிற் பொருள்பட்டு, பின்னர் அகம் பற்றிய நூல்களில், 'காந்தருவ மணம்' அல்லது 'அன்பு மணம்' என்று பொருள் பெற்றுச் சிறந்து விட்டது.

சொற்பொருள் வரலாற்றில் வேறு நெறிகளும் உள்ளன. இவற்றுள் பொதுப் பொருண்மை (generalisation), சிறப்புப் பொருண்மை (Specialisation), இழிவுப் பொருண்மை (Degradation, degeneration), சுற்றுநிலைப் பொருண்மை (Radiation), மாற்றுப் பொருண்மை அல்லது எதிர்த்தலைப் பொருண்மை (Transference), மங்கலப் பொருண்மை (Euphemism) முதலியன அறியத் தக்கன. சொற்பொருளாராய்ச்சியை இந்நெறிகள் பற்றி நிகழ்த்துவது பெரும் பயனளிக்க வல்லது.

2. களம்

கல்வியோடு தொடர்புடைய சொற்கள் 'கல்லூரி' 'கழகம்' என்பன. இவ்விரண்டோடு 'களம்' என்பதனையும் சேர்த்துக் கொள்ளலாம். 'கல்வி பயில்களமும் கழகம் எனப்படும்', என்ற திவாகரச் சூத்திரத்தின் பகுதி இத் தொடர்பை யுணர்த்துகின்றது. இச்சொல்லை இப்பொழுது நெற்கதிரடிக்கும் இடத்திற்கு வழங்குகிறோம். இது மிகப் பழமையான பொருளேயாகும்.

"பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்
***   *   ***
பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி
***   *   ***
குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகள்தப
வையுந் துரும்பும் நீக்கிப் பைதற
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா இருக்கை

(பெரும்பாண். 230-242)

என்ற அடிகள் இதற்குச் சான்று. பின்னர், மருத நிலத்தி லுள்ள விளை புலத்திற்கும் இது பெயராயிற்று.

..   ..   ..   களந்தோறும்
.. ..
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ (புறம்-392)

என்ற செய்யுட் பகுதி இதனை உணர்த்தும். இங்கே விதை விதைக்கும் இடம் களமெனப்பட்டது காணலாம்.

போர்க்களம் என்ற பொருளும் பண்டை நூற்களிலே காணப்படுகின்றது. சில நூற்றாண்டுகளாக நமக்கும் போருக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமையினாலே இப்பொருள் இப்போது மறைந்து வருகிறது. ஆனால், ஒரு காலத்தில் இப்பொருளே சிறந்து விளங்கியதென்பது,

'மிடறு பொருநிலம் கருமையிம் மூன்றும்
களம் என்றுரைப்பர் கருதுங் காலே'

என்ற திவாகரத்தால் உணரலாம்.

ஏர்க்களம், போர்க்களம் என்ற பொருள்களில் எது முற்பட்டது? வள்ளுவர்,

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'

என்று உழவுத் தொழிலின் தன்மையை வற்புறுத்தினார். தமிழ் மக்கள் உழவுத் தொழிலில் பண்டைக் காலந் தொட்டே ஈடுபட்டவர்கள் என்பது.

பொருபடை தருஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே

என்ற புறநானூற்றடிகளால் விளங்கும். அரசர் கொள்ளும் போர் வெற்றி உழவுத் தொழிலால் விளைவதாகும் என்பது பொருள்.

இதனால், நெற்களம் என்ற பொருளிலிருந்து போர்க் களம் என்ற பொருள் அடுத்துத் தோன்றியதாதல் வேண் டும். உழவின் தலைமை காரணமாகவும் போரில், வெற்றி அதன் வழிப்படுதல் காரணமாகவும் இப்பொருள் பிறந்தது என்று மாத்திரம் கூறியமைதல் தகாது. பயிர்த்தொழிலில் கடாவிடுங் களத்திற்கும் போர்க்களத்திற்கும் தொழில் நிகழ்ச்சியில் ஓர் ஒற்றுமையுங் காணப்பட்டது. இது,

---

*இந் நிகண்டின் அச்சுப் பிரதியில் 'களம்' என்பதன் திரிபாகிய களன் என்ற சொல்லுக்குரியதாய், பொய்கையுந் தொடர்பும் மருதநிலனோ - டெய்திய களனொடு நான்குங் களனே' என்று பொருள் கூறும் சூத்திரமொன்று தனிப்படக் காணப்படுகிறது. இது ஏட்டுப் பிரதிகளிற் காணப்பட வில்லை. இடைச் செருகல் எனவே கொள்ளுதல் வேண் டும். களன் என்ற வழக்காறு, 'காலங்களனே காரணமென் றிம்-மூவகையேற்றி மொழிநரு முளரே' என்பதில் காண லாம்.

ஒண்படை மாரி வீழ்கனி பெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசைப் பரப்ப
விளைந்த செழுங்குரல் அரிந்துகால் குவித்துப்
படுபிணப் பல்போர்பு அழிய வாங்கி
எருது களிறாக வாள்மடல் ஓச்சி
அதரி திரித்த ஆளுகு கடாவின்
அகன்கண் தடாரி தெளிர்ப்ப ஒற்றி
வெந்திறல் வியன்களம் பொலிகென்று ஏத்தி

(புறம்—370)

என்று வருவதனாற் புலப்படும். கடாவிடு தொழிலாலன்றி, விதை விதைத்தலாலும் பிறிதோர் ஒற்றுமை காணப்பட்டது.

நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதென,

(புறம்—392)

என்ற அடிகள் மேற்கூறியதனை நன்கு வலியுறுத்தும். ஆதலால், இதுபோன்ற தொழில் ஒற்றுமைகளால், ஏர்க்களம் என்ற பொருளினின்றும் போர்க்களம் என்ற பொருள் பெறப்பட்டதெனல் வெளிப்படை. களவழி, களவேள்வி, என்பன இப்பொருளடியாகப் பிறந்த, தொடர்கள். வாளேருழவர் (புறம். 368), வில்லேருழவர் (குறள்-872) என்பனவும் உருவகவகையாற் பிறந்தனவாம். இத்தொடர்களும் உழவுத் தொழிலின் அடியாகப் பிறந்து அத்தொழிலின் முதன்மையையும் பழமையையும் விளக்குகின்றன.

மேற்கூறிய நெறியிலே பொருள் சென்றுள்ளமை, கன்னடம் தெலுங்கு முதலிய மொழிகளில் களம் என்பதற்குரிய பொருள்களை நோக்கினால் விளங்கும். இரு மொழிகளிலும், 'நெற்போர்க்களம்', 'போர்க்களம்' என்ற இரண்டு பொருள்களுங் காணப்படுகின்றன. இவ்விரண்டனுள்ளும், 'நெற்போர்க்களம்' என்ற பொருளே முற்பட்டதாதல், அவ்வம் மொழிகளுக்குரிய சிறந்த அகராதிகளில் பொருள் கொடுக்கப்பட்டுள்ள முறையே விளக்க வல்லதாகும். அன்றியும், களம் என்றதின் அடியாகக் 'களமர்', 'களவன்'* என்ற

*'களவன்' என்பதுதான் சொல்லுருவாகும்; 'கள்வன்' என்பதன்று, இது 'புள்ளிக்களவன் புனல்சேர் பொதுக்கம் போல்' என்ற கலித்தொகை (88) யடியாற் பெறப்படும்.

இரண்டு சொற்கள் பிறந்துள்ளன. இவை முறையே, 'உழவர்' என்றும், 'நண்டு' என்றும் பொருள்படுவன; இரண்டும் மருத நிலத்தோடு தொடர்புடையன. நெற்போர்க்களமே முற்பட்ட பொருள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பிற திராவிட மொழிகளில் முற்குறித்த இரண்டேயன்றித் தமிழிலுள்ள வேறு பொருள்கள் காணப்படவில்லை. ஆதலால், தமிழ் மொழியிற் காணும் பிற பொருள்கள் இவ்விரண்டினின்றும் தோன்றியனவாதல் வேண்டும். பண்டைத் தமிழர்களது வாழ்க்கையோடு தொடர்புடைய மூன்று பொருள்களை முதற்கண் நோக்குவோம். மிகை நவிற்சி, புனைந்துரை, கற்பனாலங்காரம், கவி மரபு முதலிய அனைத்தையும் நீக்கினாலும், பண்டைத் தமிழ் மக்களது மணமுறையில் அடுப்பாருங் கொடுப்பாருமின்றிக் காதலொழுக்கம் இருந்ததென்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாம். இவ்வொழுக்கத்துக்கு இடையூறு நேர்ந்த காலத்து, தலைவி வருந்தி நோயுற்றவள்போல் மெலிதல் இயற்கையே. மெலிவைக் கண்ணுற்ற தாய், தன் மகளை ஏதேனும் தெய்வந் தீண்டியதோவென ஐயங்கொண்டு, முருகக் கடவுளின் கோயிற்குச் சென்று, ஆங்குள்ள பூசாரி மூலம் நோய்க் காரணந்தெரிய முயலுதலும் இயற்கையே. இப் பூசாரிக்கு முற்காலத்து வழங்கிய பெயர், 'வேலன்' என்பது. தெய்வத்திற்குப் பலியிட்டு வணங்கவே, வேலன் மீது ஆவேசித்து வணங்கியவர்கள் கருதிய கேள்விக்கு விடையளித்து நோய் தணியும் முறையும் அத்தெய்வம் உணர்த்துமென்பர். இந்நிகழ்ச்சிக்குப் பண்டைக் காலத்தில் 'வெறியாட்டு' என்று பெயர் வழங்கியது. இது நிகழுகின்ற இடத்துக்கு, 'வெறியயர் களம்', என்று பெயர்.

அதிர்குரல் முதுகலை கறிமுறிமுனைஇ
உயர்சிமை நெடுங்கோட் டுகள வுக்க
கமழித ழலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன் களங்கடுக்கும்
பெருவரை நண்ணிய சாரலானே,

(அகம்—182)

என்ற பகுதியில் இப்பெயர் வருதல் காண்க. நெற்களத்திலும் பலியிட்டு வணங்குதல் உண்டு. 'பலி பெறு வியன் களம் மலிய வேற்றி'' என்பதனால் இது உணரப்படும். இப்பலி முதலியன நிகழுகின்ற வெறியாடு மிடத்திற்கும், 'களம்' என்ற சொல்லை நம் முன்னோர் வழங்கியமை பொருத்தமே. வெறிக் களத்தில் விழா நிகழ்தல் இயல்

பாதலால், இந்நிகழ்ச்சி நடைபெறும் இடமும் 'களம்' என வழங்கலாயிற்று.

சாறுகொ ளாங்கண் விழவுக்களம் நந்தி,

என்பது குறிஞ்சிப் பாட்டு (192). பின்னர் விழவினை யொட்டிக் கூத்தர் முதலியோர் ஆடல் நிகழும் இடத்திற் கும் களம் என்ற சொல்லை வழங்கினர்.

யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே'

என்ற குறுந்தொகை (31) இதற்குச் சான்று.

நெற்களத்தில் பலியிடுதல் மூலமாக அடுத்தடுத்துத் தோன்றிய பொருள்கள் ஒருபுறம் இருப்ப, போர்க்களத் தின் மூலமாகத் தோன்றிய ஒரு பொருளை இப்பொழுது கவனிப்போம். போரை ஒரு வேள்வியாக நம் முன்னோர்கள் கருதினார்கள். 'களவேள்வி' என்றதனை (தொல்- புறத்திணை, 21 உரை).

''நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப்போர் அழித்து அதரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட்பலி கொடுத்துப் பின்னர், பரிசிலர் முகந்துகொள்ள வரிசையி னளிக்குமாறு போல, அரசனும் நாற்படையையுங் கொன்று களத்திற் குவித்து எருது களிறாக வாள் மடலோச்சி அதரிதிரித்துப் பிணக்கு வையை நிணற்சேற் றோடு உதிரப் பேருலைக் கண் ஏற்றி ஈனாவேண்மாள் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலிகொடுத்து, எஞ்சி நின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப் பெற்றன பல வற்றையும் பரிசிலர் முகந்து கொள்ளக் கொடுத்தலாம்.''

என நச்சினார்க்கினியர் விளக்குவதனால் இது புலப்படும். இதனைப் புறநானூற்றுக்குத் திணை, துறை வகுத்தவர் 3-73-ம் புறப்பாட்டில், 'மறக்கள வேள்வி, ஏர்க்கள உருவகமு மாம்' என்றனர். பெருந்தேவனார் தமது பாரதத்தில் இவ்வேள்வியை, 'வீராகம்,' 'வீரயாகம்' என்று குறித்து அதன் அங்கங்களை விரித்துக் கூறியிருக்கிறார (372, உரை). வியாஸ பாரதத்தில் (உத்யோக, அத் 58, 141) ரணயஜ்ஞம்', 'சஸ்த்ர யஜ்ஞம்' என்ற பெயர்கள் இதற்குக் கொடுக் கப்பட்டிருக்கின்றன. 'சஸ்த்ரயஜ்ஞம்' என்று வருமிடத்தில் யாகத்தோடு போர் மிக விரிவாக உருவகப் படுத்தப்பட்டி ருக்கிறது. மேலும், போர் தொடங்கு முன் களப்பலியூட் டுதல் தமிழ்நாட்டு வழக்கமாயிருந்ததென்று ஊகிக்கலாம்.

வில்லி பாரதத்தில் உத்யோக பருவத்தில் களப்பலியூட்டுச் சருக்கம் ஒன்று உளது. பெருந்தேவனார் பாரதத்திலும்,

பகைவன் கருத்தழிக பார்வேந்தன் வெல்க
குருவென்று மாமுகூர்த்தங் கொண்டு மிகவும்
களப்பலியை யூட்டினூர் கார்முரசங் கொட்ட
வளப்புலிகள் போலெங்கும் வந்து (452)

என வருகிறது. ஆனால் வியாஸ பாரதத்தில் இச்செய்தி காணப்படவில்லை. வெற்றியின் பொருட்டுப் பூர்வாங்க மாக உயிர்ப்பலி கொடுத்தல் மரபு. தமிழ்ப் பாரத நூல் களில்* அராவானைப் பலியிட்டமை கூறப்படுகிறது. 'அரா வானைப் பலியிட்டுக் குருக்ஷேத்திரமென்னும் சமரபூமி முழுதும் சுரோணிதமும், மாமிசமும் சிந்தி வீர ஸ்திரீகளுக் குத் துரியோதனனையும் பிராதாக்கள் தொண்ணூற்றொன் பதின்மர்களையும் பலியாக உதகம்பண்ணி, அலகைக்கும் பக்ஷிசாதிகளுக்குஞ் சுரோணிதமும் மாமிசமுந்தானம் பண்ணி தங்கள் படை நிலையுங் குறித்துப் பிரதிக்கினை முற்றும் வரை கருதி ஆர்ப்பரவம் பண்ணி....' என வருவது இதற்குச் சான்று. இப்பலியூட்டுக் கிரியை போர்க்களமும் நெற்களமும் ஒருசார் ஒப்புமையுடைய தென்பதை விளக்கு கிறது. நெற்களத்திலும் பலியூட்டுதல் உண்டென்பது முன் னர்க் காட்டப்பட்டது.

போர் ஒரு வேள்வியாகக் கருதப்பட்டதாகவே, போர் நிகழும் இடத்தைக் களம் என்றது போல வேள்வி நிகழும் யாகசாலையும் களமெனக் கொள்ளப்பட்டது.

'நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலியாவுதி பொங்கப்பன் மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன் களம் பலகொல், (புறம். 15)

எனப் பாண்டியன் பால்யாகசாலை முதுகுடுமிப் பெருவழு தியை ஒரு புலவர் பாடுகின்றார். இங்கே யாகசாலையைக் 'களம்' என அவர் வழங்குகின்றார்.

---

*வியாஸ பாரதத்தில் அராவானைப் பலியிடுதல் காணப்படவில்லை. ஆனால், துர்க்கையின் பிரீதிப் பொருட்டுப் பலியிட்டனரென வில்லி கூறுகின்றார். துர்க்கையை அர்ச்சுனன் தோத்திரம் செய்ததாக வியாஸ பாரதம் (பீஷ் - 23) தெரிவிக்கிறது. இவ்வழிபாட்டையும் பலியையும் 'கொற்றவை நிலை' (தொல், புறத் 3; வெண்பா மாலை 35) எனத் தமிழ் நூலார் வழங்குவர்.

இங்ஙனமாகப் பொருள் விரிந்து கொண்டே செல்லச் செல்ல, இச்சொல்லுக்குப் பொதுப் பொருள் கொடுத்துப் பிரயோகத்தை மிகுதிப் படுத்துவது அவசியமெனத் தோன்றியது. எனவே, 'இடம்' என்ற பொதுப் பொருள், 'களம்' என்ற சொல்லுக்கு வாய்த்தது. தொல்காப்பியத்தில் இப் பொதுப்பொருள் பல சூத்திரங்களில் காணப்படுகிறது. உதாரணமாக,

அவன் வரம்பிறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவியதாகும்
தான்செலற் குரிய வழி ஆகலான

(களவியல்-30)

'என்ற சூத்திரத்தைக் காண்க. இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் இடம் என்றே பொருள் கூறினர். 'கொலைக் களக் காதை' என்ற தொடரிலும் (சிலப்-16) இடம் என்பதே பொருள். இது பொதுப் பொருள் தோன்றிய பின்னரே வந்ததெனக் கருதுதல் தகும். ஒரு வழக்கை இங்கே தனிப்படக் காட்டுதல் அவசியம். அரசனது சபையையும் வேறுவகைச் சபைகளையும் 'அவை' என்றே பண்டைத் தமிழ் நூல்கள் உணர்த்தும். இச்சொல் சபையையும் அது கூடும் இடத்தையும் குறிப்பதாகவே கொண்டனர். 'மறங் கெழு சோழருறந்தை யவையத்து' (நற்றிணை-400). 'நிலந் தரு திருவிற்பாண்டியனவையத்து' (தொல்-பாயிரம்) முதலிய பிரயோகங்கள் இதனை வலியுறுத்தும். பின்னர் சபை கூடும் இடத்திற்குத் தனிப்பெயர் இருத்தல் நலமெனத் தோன்றவே, 'அவைக்களம்' என்ற தொடர்மொழி வழக்கில் வந்தது.

உளரெனினும் இல்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச் சொல்லாதார்,

(குறள்-730)

என்ற குறளிற் போல, இடவாற்றலால் அவையகத்தைக் குறித்துப் பின்னர் அவைக்களம் என்ற தொடரே வழங் கிற்றெனக் கொள்ளுதல் வேண்டும். பரிமேலழகர், நச்சி னார்க்கினியர் (மலைபடு 39-40 உரை) அடியார்க்கு நல்லார் (சிலப் 5, 157 உரை) முதலியோருடைய உரையில் இத் தொடர் பயிலுகின்றது.

இக் களம் என்ற சொல்லின் வரலாறு யாது? இப் போதுள்ள இலக்கியங்களுள் மிகப் பழமையான சங்க நூல்களில் இச்சொல் காணப்படுகிறது. வடமொழி இலக் கியத்தை நோக்கினால் இச்சொல் இன்னும் மிக்க பழமை

19

வாய்ந்ததென்பது விளங்கும். ரிக் வேதத்தில் (X. 48,7) இச் சொல் 'கல' என்ற வடிவில் வழங்கியிருக்கிறது; இதன் பொருள் நெற்கதிரடிக்கும் களம் என்பதாம். அதர்வ வேதத்திலும் இப்பொருளிலேயே காணப்படுகிறது. வேதாங் கங்களில் ஒன்றாகிய நிகண்டுவிலும், யாஸ்கரது நிருக்தத் திலும் 'போர்' என்ற பொருள் ஏற்பட்டுவிட்டது. நெற் களத்தில் பலியிடுவதனை யஜ்ஞும் என்ற பெயரால் ஒரு கற்ப நூல் வழங்குகிறது. ரிக்கு, அதர்வம் என்ற வேதங் களும் யாஸ்கரது நிருக்தமும் சங்க காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டன. ஆகவே, களம் என்ற சொல் வடமொழியினின்று பெறப்பட்டதாதல் வேண்டும். தமிழில் இடம் என்ற பொதுப் பொருள் இச்சொல்லிற்கு அமைந் தது போலவே, வடமொழி நிகண்டுகளிற் சிலவும் இப் பொதுப் பொருளைத் தருகின்றன..

இதுபோன்று பல சொற்கள் வேதத்துள் வழங்கி யனவாயுள்ளன. இவைகளைத் திரட்டி ஆராய்தல் மிக்க பயன் தரும். பல வினாக்களுக்கும் இவை இடந்தரு கின்றன. இச்சொற்கள் வேதமொழிக்கும் தமிழ் மொழிக் கும் பொதுப்பட்டனவா? அங்ஙனமாயின் இருமொழிகளுக்கு முள்ள தொடர்பு யாது? வேதமொழியினின்று தமிழிற் கொள்ளப்பட்டனவா? அங்ஙனமாயின் எக்காலத்துக் கொள்ளப்பட்டன? கடன் கொள்ளுதற்கு முன்பு தமிழ் மொழியின் நிலைமை எவ்வாறிருந்தது? தமிழ் மக்கள் வேதத்தில் வல்லுநராகி இச்சொற்களைக் கொண்டனரா? அல்லது வேதமொழிக்குரியார் தமிழ் நாட்டிற்கு வந்து உறவாடிய பொழுது அவர்கள் கொணர்ந்தனவா? என்ன வகையான கூட்டுறவு இருந்தது? தமிழ் நாகரிகத்திற்கும் ஆரிய நாகரிகத்திற்கு முள்ள தொடர்பு யாது? தமிழ் மக்க ளுக்கும் ஆரிய மக்களுக்கும் உரிய ஆதித் தொடர்புதான் யாது?

இவ்வினாக்களுக்கு விடை தருவது எளிதன்று. மொழி யாராய்ச்சியில் வல்லவர்களும், பழங்கால மக்கள் வர லாற்று-ஆராய்ச்சியில் வல்லவர்களுமே முயன்று விடை காணுதற்குரியர். இவ்விடைக்கும் இப்போதுள்ள ஜாதிச் சச்சரவு, சமயச் சச்சரவு, மொழியுரிமைச் சச்சரவு, அர சியற் சச்சரவு முதலியவற்றிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. காய்தல் உவத்தல் அகற்றி, இவ்வாராய்ச்சியை மேற்கொள்ளுதல் பெரும் பயன் தரவல்லது.

3. கண் வட்டம்

ஈடு முதலிய வியாக்கியானங்களில் தமிழ்நாட்டுச் சரித்திர சம்பந்தமான பல பொருள்கள் உள்ளன. அவற்றைச் சரித்திரக் கண்கொண்டு நோக்கிப் பயன் பெற வேண்டியது தமிழறிஞர் கடமை.

'கண்வட்டம்' என்ற தொடர்மொழி மலையாள மொழியிலும் வழங்கியுள்ளது. 'கம்மட்டம்' என்று நம் மலையாள சகோதரர்கள் வழங்குகிறார்கள். இதற்கு நாணயம் அச்சடிக்கும் இடம் என்றுதான் பொருள். டாக்டர் குண்டர்ட் இம் மலையாளச் சொல்லையும் கொடுத்து, இது மருவி வரும் வேற்று வடிவமொன்றையும் அறிவுறுத்துகின்றார். அன்றியும், 'கம்பட்டம்' என்பது தமிழ் வடிவம் என்றும் உணர்த்துகின்றார். திராவிட மொழிகளில் மிக இளையதான மலையாள மொழியில் மட்டுமின்றி, மிக்க மூப்புடைய கன்னட மொழியிலும் இச்சொல், 'கம்மட' என்ற உருவத்தோடு காணப்படுகிறது. எனவே, 'கண்வட்டம்' என்பது 'கம்பட்டம்' எனப் பிற மொழிகளில் உருவமைந்து நின்றதெனக் கொள்ளலாம்.

இனி, 'கண்வட்டம்' என்பதன் வரலாறு யாதென நோக்குவோம். பொற்பணி செய்யும் இடத்தை 'அக்ஷ ஸாலா' எனக் கௌடில்யர் தமது அர்த்த சாஸ்திரத்தில் (ப்ரகரணம் 2, அத்தியாயம் 13) வழங்கினர். முற்காலத்தில் அரசாங்கத்திற்குப் பொற்பணி செய்வோரது கடமைகளுள் ஒன்று நாணயம் அச்சடித்தலாகும். இது 14-ஆம் அத்தியாயத்தில் விளங்கும். 'அக்ஷஸாலா' என்பது தமிழில் 'அக்கசாலை' என வழங்கும். இன்றும் திருநெல்வேலியில், 'அக்கசாலைப் பிள்ளையார் கோயில் தெரு' என்று ஒரு தெருவிற்குப் பெயர். இத் தெருவில் வசித்து வருபவர்களில் பெரும்பாலார் பொற்பணி செய்யும் வகுப்பினரே. அக்ஷ ஸாலை' என்ற வடமொழிப் பெயரைத் தமிழ்ப் பெயராக்க முயன்றதன் பயனே 'கண்வட்டம்' ஆகும். அக்ஷம் அல்லது அக்கம் என்பது 'கண்' எனப் பொருள்படும். 'ஸாலை' என்பது 'வட்டம்' எனக் கொள்ளப்பட்டது. ஆகவே 'அக்ஷஸாலை' என்பது 'கண்வட்டம்' ஆயிற்று. 'அக்ஷஸாலை'

என்பது, 'ஸ்வர்ணாதி பரிகர்மாவஸ்தானஸ்ய ஸம்ஜ்ஞா' என்று விளக்கப்பட்டுள்ளது. இதனோடொத்து 'பொற்களரி-கண்வட்டஸ்தலம்' என்றார் திருமொழி வியாக்கியானத்தின் (2,10,2) அரும்பதவுரைகாரர். இப்பொருளும், 'அக்ஷஸாலை'யின் மொழிப்பெயர்ப்பே கண்வட்டம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

4. பொழுது*

பொழுது என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். தமிழிலக்கியத்தில் முதன் முதலில் காணப்படும் வடிவம் இதுவேயாகும். புறநானூற்றில்,

கடந்தடு தானைச் சேர லாதானை
யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல் விளங் குதியாற் பல்கதிர் விரித்தே (8)

என வருகின்றது. இச்சொல்லை அழுத்திக் கூற வேண்டும் இடங்களில் 'பொழுது' எனக் கற்றறிந்தோர் அனைத் தொலிகளையும் அழுத்திக் கூறியே வந்தனர். ஆனால் சாதாரண மக்கள், 'போழ்து' என முதலசையை நீட்டி அழுத்தம் பெற வைத்தனர். இந்நிலையில் பழங் கன்னடத்திலுள்ள 'பொழ்து' என்பதும் தெலுங்கிலுள்ள 'பொர்து' என்பதும் தோன்றலாயின. உலக வழக்கில் முதலில் தோன்றிய 'போழ்து', பின் நாளடைவில் இலக்கியங்களிலும் ஏறத் தொடங்கிவிட்டது. கலித்தொகையில் எட்டு இடங்களில் (4,82,93,94,108,117,143,145) இது வருகின்றது. உதாரணமாக.

இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
அக்கடவுள் மற்றக் கடவுள்,

என்ற பகுதியைக் காண்க. திருக்குறளில் ஐந்து இடங்களிலும் (412,539,569,930,1229), நான் மணிக்கடிகையில் மூன்று இடங்களிலும் (45,76,93) இச்சொல் வந்துள்ளது. ஒருதாரணம் தருகின்றேன்:

---

*பழைய தமிழ் நூல்களின் காலத்தைத் துணிவதற்குரிய சரித்திரச் சான்றுகள் ஒரோவழியன்றிக் கிடைப்பன வாகா. இச்சான்றுகள் கிடையாத வழி, நூல்களின் அகச்சான்று கொண்டே காலந்துணிதல் இயலும். இவ்வகைச் சான்றுகளுள் முக்கியமானது சொல்லாராய்ச்சியாம். சொல்லாராய்ச்சி காலந்துணிதற்குரிய கருவியாதலை ஒரு சில உதாரணங்களால் விளக்குகின்றேன்.

பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து குறள், (1229).

வழக்கில் இச்சொல் நிலைத்துவிட்ட பின்னர் அத்துச் சாரியை முதலியன பெற்றும் வரலாயிற்று.

'பூமி நடுக்குறூஉம் போழ்தத்து' (9, 20)

எனவும்,

'போதித் தலைவனோடு பொருந்திய போழ்தத்து' (15, 26)

எனவும், மணிமேகலையில் ஆட்சியுள்ளது.

நாலடியாரிலும் இச்சொல் உருபு பெற்று வந்துள்ளது:

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்;
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்:
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். (115).

காலஞ் செல்லச் செல்ல, 'போழ்து' என்பது இடையிலுள்ள ழகர வொற்று நழுவி யுச்சரிக்கப்பட்டது. சில பிரதேசங்களில் இறுதியிலுள்ள 'து' நழுவியுச்சரிக்கப்பட்டது. எனவே 'போது' என்றொரு வடிவும், 'போழ்' என்றொரு வடிவும் உலக வழக்கில் வரலாயின. இவ்விரண்டனுள் 'போழ்' என்பது பிராந்திய வழக்காகவே நின்று திசைச் சொல்லாய் முடிந்தது. மலையாள மொழியில் 'போழ்' என்றே இன்னும் வழங்குகின்றது. அம்மொழியிலுள்ள இலக்கிய வழக்கிலும் பண்டுதொட்டு உள்ளது. எழுத்தச்சனது இராமாயணத்தில்,

'அப்போழே கங்க கடந்நீடினான் விஸ்வாமித்ரன்'

என வருகின்றது. ஆனால் 'போது' என்பது தமிழ் நாட்டில் உலக வழக்கொடு நில்லாது இலக்கிய வழக்கிலும் புகுந்து விட்டது. அகநானூற்றில் ஒரு செய்யுளில் (259) இவ் வடிவம் அச்சுப் பிரதியில் காணப்படுகிறது. ஆனால், இப் பாடம் தவறென்று தோன்றுகிறது. வழக்குச் சொற்களை மிகுதியாய் ஆண்ட நூல்களின்கண்ணேதான் முதன் முதலில் இச்சொல் புகுந்திருத்தல் கூடும். இவ்வூகத்திற்கேற்ப, பக்தி நூல்களாகிய தேவாரம், நாலாயிரம் முதலியவற்றில் இச்சொல் காணப்படுகின்றது. உதாரணமாக, அப்பர் தேவாரத்தில்,

எப்போதும் இறையும் மறவாது நீர்
முப்போதும் பிரமன் தொழ நின்றவன்
செப்போதும் பொனின் மேனிச் சிவனவன்
அப்போதைக் கஞ்சல் என்னும் ஆரூரனே, (V, 6, 1)

என வருகின்றது. திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில்,

எப்போதும் பொன்மல ரிட்டிமையோர் தொழுது தங்கள்
கைப்போது கொண்டிறைஞ்சிக் கழல்மேல் வணங்க நின்றாய்
இப்போதென் னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போக லொட்டேன்
நாற்பது வண்டு கிண்டும் நறையூர் நின்ற நம்பியோ, (7,2,8)

என முதலடியிலும் மூன்றாமடியிலும் வருகிறது.

உரைமேற்கொண் டென்னுள்ள மோவாதெப் போதும்
வரைமேல் மரகதமே போலத் — திரைமேற்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
இடந்தானை யேத்தி யெழும்,

(இயற். I, 26)

என முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையார் வாக்கிலும் வருகின்றது. பக்தி நூல்களிலன்றி, பிற இலக்கியங்களிலும் இவ்வழக்குக் காணப்படுகிறது. முத்தொள்ளாயிரத்தில்,

நெடுவீதி நேர்பட்ட போது,

(புறத்திட்டு, 1525)

என வந்துள்ளது.

'பொழுது' என்ற சொல், தனிப்பட நின்று காலகதியில் அடைந்த வேற்று வடிவங்கள் மேலே உணர்த்தப்பட்டன. இச்சொல் அகர இகரமாகிய சுட்டெழுத்துக்களோடும், எகரமாகிய வினா வெழுத்தோடும் புணர்ந்து வருங்கால் அடைந்துள்ள வேறுபாடுகள் இனிக் கவனிக்கற்பாலன. அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது என வருதல் சாமானியம். அப்போழ்து, இப்போழ்து, எப்போழ்து என வருதல் பண்டை இலக்கியங்கள் சிலவற்றிற் காணலாம். அப்போது, இப்போது, எப்போது என வருதலும் முன்காட்டிய உதாரணங்கள் கொண்டு தெளியலாம். இவற்றின் மேலாக அப்போ, இப்போ, எப்போ என்ற உருவங்களும் நாளடைவில் வழக்கிற் புகுந்தன; உலக வழக்கிலிருந்து சாமானிய நூல்களிலும் ஏறின.

ஆண்டவனே இப்போ அழைத்த பணிவிடை யேன்!

என்று ராமப்பய்யன் அம்மானையில் (1039) வந்துள்ளது. சில காலத்துக்கு முன் இயற்றப்பெற்ற கீர்த்தனங்களிலும், பதங்களிலும், நாடகங்களிலும், இதுபோன்ற சொற்கள் மிகுதியாய் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக,

எப்போ தான் இரங்குமோ ஏதோ உன் திருவுள்ளம்,

என்ற கீர்த்தனையைக் கூறலாம். இக்காலத்து 'அப்போ' முதலிய சொல்லுருவங்களே உலக வழக்கிற் கற்றாரிடையும் மற்றாரிடையும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒலி முயற்சியின் எளிமை காரணமாக இவ்வழக்கு ஏற்பட்டுள்ளதெனத் தெள்ளிதின் உணரலாம். இச்சொற்கள் தாமும் 'அப்பொ, இப்பொ, எப்பொ' என ஈற்று நெடில் குறுகியும், 'அப்ப, இப்ப, எப்ப' என ஈற்றுயிர் மெய் பகர அகரமாய்த் திரிந்தும், 'அப்பவும், இப்பவும், எப்பவும்' என உம் என்ற இடைச் சொற் பெற்றும் பேச்சு முறையில் வழங்கி வருதல் யாவரும் அறிவர்.

ஆகவே, பொழுது, போழ்து, போது; அப்போ, இப்போ, எப்போ; அப்ப, இப்ப, எப்ப; அப்பவும், இப்பவும் எப்பவும் என்ற சொல்லுருவங்கள் கால அடைவில் முறையே தோன்றியுள்ளன. தொல்காப்பியர்,

முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிவர் இயல்புணர்ந் தோரே

(அகத், 4)

எனப் 'பொழுது' ஒன்றையே எடுத்தாண்டுள்ளார். திவாகரரும் 'பொழுது' என்ற உருவமொன்றனையே காலப்பெயர்களுள் தந்துள்ளார். இதனை,

வேலையும் அமையமும் காலையும் ஏல்வையும்
பதமும் காலமும் பொழுதெனப் படுமே,

(1,108)

என்ற சூத்திரத்தால் அறியலாம். பிங்கலர் தமது நிகண்டில்,

போழ்தும் கொன்னும் பொழுதும் செவ்வியும்
ஏல்வையும் வேலையும் அமையமும் காலையும்
காலும் பதமும் காலம் ஆகும்.

(II, 187)

எனக் கூறியமையால் 'போழ்து' என்ற சொல்லுருவத்தையுங் கொண்டனர். மண்டலபுருடரும் (16-ம் நூற்றாண்டு) மேலைச் சூத்திரத்திலுள்ள 'கால்' என்பதற்கு மாறாகப் 'பாணி' என்ற சொல்லைக் கொண்டு, 'பொழுது' 'போழ்து' என்ற இரண்டனையுமே உடம்பட்டனர். இதனை,

வேலையே அமையஞ் செவ்வி யேல்வையே பொழுது பாணி
காலைகொன் பதமே போழ்து காலப்பேர் ஈரைந்தாமே

(1,80)

என்று அவர் கூறுவதனால் அறியலாம். இங்குக் காட்டிய வற்றால் 'போது' என்பது காலப் பொருளில் வருதல் பிற்பட்ட வழக்கென்பது விளங்கும். 12-ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய நேமிநாதம்,

அன்ன பொழுது போதாம், (35)

என்று கூறுவதனால் 'பொழுது' என்பதே 'போது' எனத் திரிந்த தென்பதும், திரிந்துவந்த புதுச்சொல் வழுவமைதியாகக் கொள்ளற்பால தென்பதும் நேமிநாதமுடையார் கருத்தாகும். இச்சொல் அகநானூற்றில் வந்ததெனல் பொருத்தமின்று. ஆனால் நிகண்டுக் காரர்கள் சுமார் 1000 ஆண்டுகளாக இச்சொல்லை உடன்படவில்லை. 'மலர்' என்ற பொருளுடைய 'போது' என்பதனோடு இதனை மயங்க வைத்தல் கூடாதெனக் கருதியமை ஒரு காரணமாகலாம். இங்ஙன மிருப்ப, 'கூதிர் நின்றன்றாற் போதே மாதிரம்', என நெடுநல்வாடை (72)யிற் பயின்று வருவதாகப் பதிப்பித்து, அகநானூற்றுச் செய்யுளொன்றும் (264) ஒப்புமைப் பகுதியாக மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யரவர்களாற் காட்டப்பட்டுள்ளது. அகநானூற்றில் 'கூதிர் நின்றன்றாற் பொழுதே காதலர்,' எனவே வருகின்றது. ஆதலால், 'போதே' என்ற பாடம் ஆதாரம் யாதுமின்றித் தனித்து நிற்கின்றது. இஃது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையெனவும், 'பொழுதே' என்பதுவே பாடமாதல் வேண்டுமெனவும் கொள்ளத்தக்கன. 'போதே' என்று பாடங்கொள்ளின், ஒரூஉ வெதுகையின் நலங்கெடுதலும் உணரற்பாலது.

மேற்குறித்த பல்வேறு வடிவங்களுள், 'போது' என்பது அப்பர் தேவார முதலியவற்றிலே முதன் முதற்காணுதலால், அச்சொல் காலம் என்னும் பொருளில் வந்துள்ள நூல்களெல்லாம் அவர் வாழ்ந்த 7-வது நூற்றாண்டினை அடுத்துள்ளனவாதல் ஒருதலை. முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையாழ்வார் இச் சொல்லை ஆளுதலால், அவரும் அந்நூற்றாண்டில் வாழ்ந்தவரேயாவர். 7-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராகலாம் இவரைக் கடைச் சங்க காலத்தவர் என்றும், களவழியின் ஆசிரியராவர் என்றும் கூறுதல் சிறிதும் ஏற்புடைத்தன்று. திணைமாலை நூற்றைம்பது என்ற நூலில்,

காணாவெப் போதுமே கண்,

என வருகின்றது. எனவே, இக்கீழ்க்கணக்கு நூல் ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் தோன்றியதாதல் வேண்டும்.

'போது' என்பதற்கு நேரே முற்பட்ட உருவமாக வுள்ளது 'போழ்து.' இது வழங்கியுள்ள நூல்களை இருகூறாகப் பகுக்கலாம். இச்சொல் தனித்த நிலையில் வருவது ஒரு கூறு; சாரியை முதலியன பெற்று வருவது மற்றொரு கூறு. இது தனித்துவரும் நூல்கள் தேவாரம் முதலியவற் றிற்கு நேரே முற்பட்டவையாதல் வேண்டும். எனவே இவைகள் 6-ம், 7-ம் நூற்றாண்டுகளில் எழுந்தனவாகலாம். இந் நூல்களுக்கு எடுத்துக்காட்டாகவுள்ளன கலித்தொகை, திருக்குறள் முதலியன. சாரியை பெற்ற வழக்காறுள்ள நூல்கள் தேவாரகாலத்துக்கும் பிற்பட்டனவாதல் வேண்டும். எனவே இவை 8-ம், அல்லது 9-ம் நூற்றாண்டுகளில் இயற்றப் பெற்றனவாகலாம். இந்நூல்களுக்கு எடுத்துக் காட்டாக வுள்ளன நாலடியார், மணிமேகலை முதலியன.

போழ்து என்பதன் பூர்வ ரூபமாயுள்ளது பொழுது. இவ்வுருவம் மட்டும் காணப்பெறும் நூல்கள் 'போழ்து' தனித்து வந்த காலத்திற்கும் முற்பட்டனவாதல் வேண்டும். எனவே இவைகள் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டு களில் தோன்றியனவாகலாம். இவற்றிற்கு எடுத்துக்காட்டு எனக் கொள்ளத் தக்கது புறநானூறு. ஆனால், இன்றும் இச்சொல் வழக்கிலுள்ளமையால் காலவரையறை செய் வதற்கு இது பயன்படுமாறில்லை.

'அப்போ' முதலியன, ராமப்பய்யன் அம்மானையில் வருதலாலும், முன்னூல்களிற் காணப் பெறாமையாலும், இச்சொற்கள் பயின்று வரும் நூல்களெல்லாம் 17-ம் நூற் றாண்டிற்குப் பிற்பட்டன என்று கொள்ள வேண்டும். 'அப்ப' முதலியனவும், 'அப்பவும்' முதலியனவும் நூல்களில் இன்னும் ஏறவில்லை. ஆனால் பேச்சு வழக்கிலிருந்து-கடி தங்களில் இச்சொற்கள் ஏறிவிட்டன. 'இப்பவும் இவ்விடத் தில் யாவரும் சேமம்' என்று கடிதங்களில் காணலாம்.

'பொழுது' என்ற சொல்லாராய்ச்சியினால் இலக்கி யங்கள் தோன்றிய காலம் வரையறைப்பட்டு, இலக்கிய சரிதம் நமக்குப் புலப்படுகின்ற முறையை மேலே விளக்கினேன். இது முதற்படி. ஒரு மொழியில் மாத்திரம் ஒரு சொல் அடைந்துளள உருவ வேறுபாடுகளைக் காலமுறை யில் நோக்கி ஆராய்வதுடன் இம் முதலாராய்ச்சி நின்று விடுகிறது. இதற்கு மேலாக இம்மொழியின் கிளை மொழி களிலே இச் சொல் வழங்குமாற்றையும் அதன் உருவ வேறு

பாடுகளையும் அறிதல் வேண்டும். இது இரண்டாவது படி. இவ்வாராய்ச்சியில் இச்சொல்லின் பூர்வ சரித்திரம் நுண்ணிதின் விளங்குவதலோடு கிளை மொழிகளின் சரித்திரக் கூறுபாடுகள் சிலவும் புலப்படுவனவாம். இங்ஙனமே இவ்வாராய்ச்சி மேலும் மேலும் செல்ல வேண்டுவதாயுள்ளது. தமிழ்றிஞர்கள் இந் நெறியில் ஆராய்ந்து உண்மை காண முயல்வார்களாயின், தமிழாராய்ச்சி மிக்க பயன் விளைப்பதாகும்.

5. முன்னிலைப் பெயர்

இனி, 'உன்' முதலிய சொற்களை நோக்குவோம். இது 'நீ' என்னும் முன்னிலை யொருமைச்சொல், வேற்றுமை யுருபேற்குமிடத்துத் திரிந்துவரும் வடிவமாகும். தன்மை முதலிய இடப்பெயர்கள் வேற்றுமை கொள்ளுமிடத்துத் திரிந்து வருதல் மொழிகள் பெரும்பாலனவற்றிற்கு ஒத்த வழக்காம். வடமொழியில், அஹம் என எழுவாய் வேற்று மையிலும், மாம்மயா, மஹ்யம் முதலியனவாகப் பிற வேற் றுமைகளிலும் வருகின்றன. லத்தீன் மொழியில் 'ego' என்பது எழுவாய்; me, mei, mihi, me, என்பன பிற வேற்று மைகள். ஜெர்மன் மொழியில், 'ich' என்பது எழுவாய்; mein (er) mir, mich என்பன பிற வேற்றுமைகள். பிரஞ்சு மொழியில் 'je' என்பது எழுவாய்; me, moi, mon என்பன பிற வேற்றுமைகள். ஆங்கிலத்தில் 'I' எழுவாய்; me my என்பன பிற வேற்றுமைகள். திராவிட மொழிகளிலும் இங்ஙனமே வேற்றுமையில் எழுவாய்கள் திரிந்தனவே. இவ் வழக்கினோடு ஒத்துத் தமிழிலும் நீ என்பது நின் எனத் திரிந்து வரும். தொல்காப்பியர்.

நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றாகும்மே (உருபியல். 7)

என்றனர். பவணந்தி முனிவரும் இங்ஙனமே கூறினர்:

யான் யாம், நீ நீர், என் எம், நின் நும் ஆம்பிற (உருபு 8.)

என்பது நன்னூல். இங்குக் கூறிய நின் என்பதுவே பழை மையான வடிவம். பிற திராவிட மொழிகளின் முன்னிலை யொருமைப் பெயர்களை நோக்கி இதனை அறியலாம். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியர் காட்டும் சொல் வழக்கே காணப்படுகிறது. இவ்விலக்கியங்களில் 'நின்' என்பதுவே யாண்டும் வழங்கப்பட்டுள்ளது. சங்க காலத்து இறுதியில் தோன்றிய கலித்தொகை, பரிபாடல் என்ற நூல்களிலும் இவ்வழக்கேயுள்ளது.

நீ என்பதன் பன்மை நீயிர் எனவே தொல்காப்பியர் கூறினர். 'நீயிர் நீயென வரூஉங் கிளவி' (பெயர். 34) என்பது சொல்லதிகாரச் சூத்திரம். ஆனால், இவ்வாசிரியர் கருத்தின்படி நும் என்பது நீயிர் எனத் திரிந்ததெனல் வேண்டும்.

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியோடு புணர்ந்தே

(புள்ளிமயங். 31)

இச்சூத்திரத்தின் கருத்து ஊன்றி நோக்கற்பாலது. நும் என்பது 'நீம்' என்றாகிப் பின் 'நீஇர்' என முடிந்ததெனல் அதன் கருத்து. இதனால் நும் என்பது முற்கால வழக்காயிருந்து அதன் பிற்பாடு நீஇர் என்பது கால அடைவில் தோன்றியதென்று தொல்காப்பியர் கொண்டனர். தொல்காப்பியர் கருத்து அமைதியுடையதென்பது மேற்கூறுவதனானே உணரலாகும். நன்னூலார் இச்சொல் வரலாற்றை நுனித்து நோக்கினாரில்லை. 'எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே' என்னும் பொது நியதியை மனத்துட்கொண்டு; நீயிர் என்பதன் பிற்கால வடிவமாகிய நீர் என்பது, 'நும்' எனத் திரிந்தது என்றனர். கால முற்பிற்பாடுகளை அவர் பொருட்படுத்தவில்லை என்பது இதனால் தெளிவாகின்றது. இந் நுண்பொருளில் அவர் பிழைபட்டனர் என்று தான் கூறவேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் நீம் என நிறுத்தியது வெறுங்கற்பிதமன்று. கன்னடத்திலும் கோத மொழியினும் நீம், நீமெ என்பன முறையே காணப்படுதலால், தமிழிலும் ஒரு காலத்து நீம் வழங்கியிருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம். ஆனால் தொல்காப்பியர் காலத்து அவ்வழக்கு வீழ்ந்து 'நீஇர்' என்பது உலக வழக்கில் புகுந்திருத்தல் வேண்டும். தம் காலத்து வழங்கிய நும் என்ற சொற்கொண்டு வழக்கு வீழ்ந்த சொல்லினைப் புலப்படுத்தி, பிற்கூறிய சொல்லினின்றும் நீஇர் என்பது தோன்றிற்று எனக் காட்டுதலே தொல்காப்பியர் கருத்தாம். கால அடைவை நோக்கி இவர் உண்மை வரலாற்றைக் கூறியுள்ளது பெரிதும் பாராட்டற் பாலதாம். சீவக சிந்தாமணியில் (1932).

'நீமே, வென்றிக் களிற்றானுழைச் செல்வது வேண்டும்
[என்றான்'

என வருகின்றது. இங்கே நச்சினார்க்கினியர் 'நும் என்னும் சொல் நீஇர் என முழுவதுந் திரியாது மகரம் நிற்பத்திரிந்து நீம் என நின்றது' எனக் குறிப்பெழுதினர். செந்தமிழ் வழக்கொழிந்த நீம் கொடுந்தமிழ் நாடொன்றில் திசைச் சொல்லாய் வழங்கலுற்று எஞ்சி நின்றதனை ஆசிரியர் எடுத்தாண்டனர் என்று கொள்ளுவதே நேரிதாகும். இது

பற்றியே இனி 'நீமென்று ஒரு திசைச் சொல்லுமாம்' என்று பக்ஷாந்தரமாக அவர் எழுதியதென்க.

தொல்காப்பியர் அமைத்த நீஇர் என்பதனை ஒழித்து நன்னூலார் (12-ம் நூற்றாண்டினிறுதி) நீயிர், நீர், நீவிர் என்ற மூன்றனையும் முன்னிலைப் பன்மைகளாகத் தந்துள்ளார்:

> **தான்யான் நான் நீ யொருமை; பன்மைதாம்**
> **யாம் நாம் எலாமெலீர் நீயிர் நீர் நீவிர்**
>
> (நன்.பெயரியல்,30)

என்பது சூத்திரம். இவர் நீஇர் என்பதற்குரிய உடம்படுமெய் தோன்றிய வடிவங்களையே (நீயிர், நீவிர்) கொண்டனர். 11-ம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியத்தில், நீர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் உரை, 'நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம்' எனக் கூறுகிறது. 13-ம் நூற்றாண்டினதாகிய நேமிநாதம்,

> **பேராம்பெயர்; பெயர்த்துப் பேர்த்தாம்; ஒடுவோடாம்;**
> **நீராகும் நீயிர்; எவனென்ப—தேருங்கால்**
> **என் என்னை யென்றாகும்: யாமுதற்பேர் ஆமுதலாம்;**
> **அன்ன பொழுது போதாம்.** (35)

எனத் தெரிவிக்கின்றது. நீயிர் என்பது நீர் எனத் திரிந்தது. 'பழையவாய் நடைபெற்று வருஞ் சொற்களில் திரிந்து நடப்பனவற்றை வழுவல்லவென்று அமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று' என்பது பழையவுரை. இதனால் 'நீர்' என்பது வழுவமைதியாதல் தெளியப்படும். முதன் முதல் உலக வழக்கிலே இச்சொல் தோன்றுதல் இயற்கை. ஐயப்பாடின்றிக் காலவரையறை செய்யக்கூடிய இலக்கியங்களை நோக்குவோமானால், கி.பி. 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முன்னிலைப் பன்மையில் நீர்[1] வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்பர் தேவாரத்தில்,

---

1. குன்று முண்டு நீர் பாடினிர் செலினே (110) எனவும், நீரும் மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின் (152) எனவும், புறநானூற்றுப் பதிப்பில் காணப்படுகின்றன. முற் செய்யுளில் 'குன்று முண்டு பாடினிர் செலினே' என்பது பாடமாதல் வேண்டும். பிற்செய்யுளில் நீயிரும் என்றிருத்தல் வேண்டும். மதுரைக் காஞ்சியில், 'நீர்யா ரென்னாது' (738) எனக் காணப்படுகிறது. இதுவும் நியிர்யா ரென்னாது' என்றிருத்தல் வேண்டும். நீர் என்ற பிற்கால வழக்குப் புறநானூறு முதலியவற்றில் வருதல் அசம்பாவிதமாம். 'பிறர்க்கு நீர், இந்நீர ராகுதிர் என்று' எனவும், 'அனைத்து நீர் யாருள்ளி நோக்கினீர் என்று' எனவும் குறளில் வருதல், அவர் காலத்தொடு ஒத்த வழக்கேயாகும்.

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
கரும்பற்றப் படத் தூவித் தொழுமினோ

என வந்துள்ளது. உலக வழக்குச் சொற்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ள தேவாரம், திவ்யப் பிரபந்தம் முதலியவை தவிர ஏனை இலக்கியங்களில் இச்சொல் வருமாயின், இவற்றை அத் தேவாரம் முதலியனவற்றிற்கு மிகப் பிற் பட்டனவென்று கொள்ளுதல் சொல் வழக்காறோடு பொருந்துவதேயாம். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணை மாலை நூற்றைம்பதில்,

வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
எழிலு முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து,

என வருகின்றது. இந்நூலினை 9-ம் நூற்றாண்டினதாக் கொள்ளுதலே நேரிது. சிலப்பதிகாரத்தில் 'அடிகள் நீரே அருளுக' (பதிகம், 62) எனவும், 'அடிகள் நீரே அருளுதி ராயின்' (X, 62), 'இட்ட சித்தி யெய்து விர் நீரே' (XI, 103) 'பெறுதிர் போலு நீர்' (XI, 123) எனவும் வருதல் இங்குக் கருதத் தக்கது. *பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய இதுவும் மேற்குறித்த காலத்ததென்பதற்கு இப்பிரயோகங்களும் சான்றாயமையும். பிற்காலத்து வழக்கு 'நீ' என்பதனோடு அமைந்து விடவில்லை. நீர்கள் என்பதனை.

அக்கும் ஆமையும் பூண்டன லேந்திஇல்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவரால் தொழுவானையே (V, 97, 14)

என அப்பர் வழங்கியுள்ளார். நீங்கள் என்பதனை,

'நூலவையார் போல் நீங்கள்
நோக்குமினே யென்றாள்,' (1045)

எனத் திருத்தக்கதேவரும்,

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்,
(VI, 27, 1)

என அப்பரும் வழங்கினர். ஆகவே முன்னிலைப் பன்மைப் பெயர்களைக் கால அடைவில்,

---

*வடமொழியிலும் 'பஞ்சகாவ்யம்' என்ற வழக்குக் காணப்படுகின்றது. 'பஞ்ச மஹா காவ்யாநி ராமாயண ரகுவம்ச குமாரஸம்பவ மாக கிராதார்ஜுநீய ரூபாணி' (கவிகல்பலதா, 78).

நீம், நீ இர், நீயிர், நீவிர், நீர், நீயிர்கள்,
நீவிர்கள், நீர்கள், நீங்கள்

என நிறுவலாம். இவற்றுள் நீஇர், நீயிர் என்பன சங்க இலக்கிய காலத்தன. நீர், நீங்கள் என்பன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கிற் புகுந்து இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. நீம், நீர்இர், நீயிர், நீவிர், நீர்கள் இவ்வைந்தும் வழக்கொழிந்து விட்டன; நீயிர்கள், நீவிர்கள் என்பன வீரசோழியத்திற்கு உரை வகுத்த பெருந்தேவனாராற் கொள்ளப்பட்டன; இவையும் வழக்கொழிந்தனவே. இவற்றுள் சிலவற்றை மீண்டும் வழக்கில் புகுத்துதற்கு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதலியோர் சில ஆண்டுகட்கு முன்னர் முயன்றனர்.

இனி 'நும்' என்பதை நோக்குவோம். இது சங்க இலக்கியங்களுள் பெருவரவிற்றாயுள்ளது. இதுவே முன்னிலைப் பெயர்களுள் காலத்தால் முற்பட்டதென்பது மேலே குறிக்கப்பட்டது. முதலில் நின்ற நகரவொற்றுக் கெட்டு 'உம்' எனப் பிற்காலத்தாரால் ஆளப்பட்டது.

ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றொற்றியூர் உம்மூரே யுணரக் கூறீர் (அப்பர். VI, 9,8.)

காலவியாப் பொன்விளக்குத் தந்தும்மைக்
கைதொழுவேன் (சீவக. 1045).

இவ்வாறு நகரவொற்றுக் கெடுதற்கு இரண்டு காரணங்கள் கூறுதல் கூடும். முதலாவது, நகரவுகரத்திற்குரிய ஒலியை உச்சரிப்பது சிறிது சிரமமாகும், இவ்வெழுத்தில் தொடங்கும் சொற்களில் பெரும்பாலன உலக வழக்கில் சாதாரணமாய்க் காணப்படுவனவல்ல. காணுமவற்றுள்ளும் ஒருசில நகரவொகரம் முதலியனவாகத் திரித்து உச்சரிக்கப்படும். இதனால் சிரமமுண்மை அறியலாம். இரண்டாவது, சந்தியில் 'உம்' எனப் பிரிக்கத் தக்கபடி 'நும்' அமைந்து விடுதலும் உண்டு. உதாரணமாக, 'நின்னுமாம்பிற' (நன், உருபுபுணர். 8) என்றது. நின் நும் என்றேனும், நின் உம் என்றேனும் பிரிக்க இடங்கொடுக்கும். இது போன்று பிரிந்து நகரவொற்றுக் கெட்டு உகரமாத்திரையாய் நின்று 'உம்' என வருதலும் கூடும். ஆங்கிலத்தில் 'orange' என்ற சொல்லின் சரிதத்தை உணர்ந்தார் இதனை எளிதில் ஒப்புவர்.

உருபேற்றவழி முன்னிலைப் பன்மை வடிவங்கள் மேலை இரண்டனோடு அமைந்துவிடவில்லை. நுங்கள், உங்கள் என்பனவும் தொடர்ந்தன.

நுங்கட்கு யானுரைக்கேன் வம்மின் யான்வளர்த்த
கிளிகாள் (திருவாய் 6,8,5),

எனவும்,

உன்னுருவிற் சுவை யொளியூறோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
(அப்பர் VI, 27, 4)

எனவும்,

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே உலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதேயானேல்
(அப்பர் VI.27,4)

எனவும் வரும் மேற்கோள்களால் இதனை உணரலாம். இங்குக் கவனிக்கத் தக்கது பிறிதொன்றுளது. நீர்கள், நீங்கள், நுங்கள், உங்கள் என்ற சொற்களில், அஃறிணைப் பன்மைக் குரியதாகத் தொல்காப்பியர் கூறிய 'கள்' விகுதி, பன்மைச் சொற்களோடு சார்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே நும், உம் என்பன பன்மை என்ற உணர்ச்சி மறையத் தொடங்கிய காலத்து, இவ் விகுதி புணர்க்கப்பட்டதாகல் வேண்டும். உருபேற்கும் நிலையில் முன்னிலைக்குரிய சொற்கள் நும், உம், நுங்கள், உங்கள் என்ற நான்குமாம். இவற்றுள் *நும் ஒன்றே மிகப் பழமையானது. மற்றைய மூன்று சொற்களும் பெருந்தேவனாரால் வீரசோழிய வுரையில் (காரிகை. 37) காட்டப்பட்டன. மயிலைநாதர் உம் என்ற தனைமட்டும் தம் உரையில் கூறினர். 'உம்' முதலியன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கில் வந்தன வெனக் கொள்ளலாம்.

இனி, முன்னிலை யொருமையில் உருபேற்றுவரும் வடிவினை நோக்குவோம். 'நின்' என இது வருமென்பது முன்பே

* ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே (புறம்-45) எனப் பதிப்பித்துள்ளது பிழையாதல் வேண்டும். உரையில் 'நுங்குடியன்றோ' என வருதலால் 'தோற்பது நுங்குடியே' என்பதே பாடமெனக் கொள்க. இங்ஙனமே நற்றிணையில் 'கோடேந்தல்குல் தழையணிந்தும்மோடு' (368) என்பதும், 'கோடேந்தல்குல் தழையணிந்து நும்மோடு' என்றிருத்தல் வேண்டும்.

குறிக்கப்பட்டது. இதுவே பண்டை இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பயின்று வருவது. ஆனால் இதுவும் நாளடைவில் உன் என உருமாறத் தொடங்கிவிட்டது. உன் என்பது பிற்காலத்துத் தோன்றி இன்றுவரையும் நிலைத்திருக்கிறது.

ஒருவனே எம்பிரானே உன்திருப் பாதங் காண்பான்,
(அப்பர் IV, 26, 10),

அவ்வைக்கு மூத்த மாம னொருமகற் கின்றுன் தாதை
(சீவக. 1046),

என்பனவற்றில் 'உன்'னும்,

பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே யுன்னை
(அப்பர் VI, 95, 7),

என்பதில் 'உன்னை'யும்,

உனையுனு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே (அப்பர் VI, 46, 2),

என்பதில் 'உனை'யும்,

உன்னோடுடனே யொருகடலில் வாழ்வாரை
(நாச்சி. திருமொழி 7, 5),

என்பதில் 'உன்னோடு'ம்.

உன்னை யெப்போது மறந்திட்டுனக்கினி தாயிருக்கும்
(அப்பர் IV, 112, 4)

என்பதில் 'உனக்கு'ம்,

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்
உனதருளால் (அப்பர் IV, 94-6)
வந்துன தடியேன் மனம் புகுந்தாய்
(பெரிய திருமொழி III, 5-1),

உத்தமனுனது நாம மல்ல தொன்றுரைத்தல்தேற்றான்
(சீவக. 1048)

என்பனவற்றில் 'உனது'ம்,

உன்னுடைய விக்கிரம மொன்றொழிய யாமெல்லாம்
(பெரியாழ் V, 4, 6),

என்பதில் 'உன்னுடைய'வும் வருதல் காணலாம்.

மேற்காட்டியவற்றுள் உருபுகள் பலவும் 'உன் என்பதனைச் சார்ந்து வந்தமை நோக்கத்தக்கது. இங்ஙனம் பெருவழக்காக வரும் இச் சொல்லினை வீர சோழியம்தான் முதன் முதற் கூறுகின்றது. நன்னூல் இதனைக் கூறாதே

விடுத்தொழிந்தது. இதற்குரிய காரணம் யாதென்று நோக்குதற்குரியது. இலக்கண ஆசிரியர்கள் வழக்கும் செய்யுளும் என்னும் இரண்டினையும் ஆராய்ந்து நூலியற்றுதல் கடமை. தொல்காப்பியர் இம்முறையில் தமது பேரிலக்கணத்தை இயற்றினார் என அந்நூற்பாயிரம் தெரிவிக்கின்றது. செய்யுள் வழக்கை ஆராய்தல்தானும் எளிதில் இயலுவதன்று. தம் காலம் வரை தமது மொழியில் இயன்றுள்ள நூல்கள் அனைத்தையும் கற்றறிதல் எத்துணை அரியகாரியம் என்பது சொல்லித் தெரியவேண்டா. நூல்கள் கிடைப்பதற்கு இக்காலத்தில் வாய்த்திருக்கும் வசதிகள் முற்காலத்தில் இல்லை. நூற்றுக் கணக்கில், வேண்டுமானால் ஆயிரக் கணக்கில், பிரதிகளை வெளியிடுதற்கு வேண்டும் அச்சு யந்திரம் முற்காலத்தில் கிடையாது. பிரதிகளைப் பல இடங்களிலும் பரவச் செய்வதற்கு வேண்டும் போக்குவரவு வசதிகளும் இல்லை. இவை போன்றன இல்லாத காலத்து நூல் வழக்கை முற்ற அறிதல் என்பது இயலாத காரியமாம். இதுவே இயலாததாயின், உலக வழக்கை வேண்டிய அளவு அறிதல் தானும் கூடாததொன்றாகவே இருக்கும். என்றாலும் ஓராசிரியர் இவ்விரண்டின் இன்றியமையாமையும் உணர்ந்து இவற்றை அறிய ஒருவாறு முற்படுவாராயின், அதுவே நமக்கு வியப்பை விளைக்கவல்லது. தொல்காப்பியர் இங்ஙனம் செய்தவர். நன்னூலார் முதலியோரெல்லாம் முன்னோர் நூலின் வழியே சென்றனரே அன்றிப் புதுவதாகத் தம் காலத்துத் தமிழை வேண்டுமளவு ஆராய்ந்தாரென்று கூறுதற்கு இயலவில்லை.

உலகவழக்கை, முந்து நூலோர்கள் நன்கு ஆராயவில்லையென்பது ஒருபுறமிருக்க, ஆராயவேண்டும் அவசியமில்லை என்ற கருத்தும் கொண்டிருந்தார்கள். 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே', என்ற ஒரு நியதியை மேற்கொண்டு விட்டார்கள். தம் கருத்தின்படி உயர்ந்த நூலாசிரியர்களது வழக்குத்தான் இவர்களால் கொள்ளப்பட்டது. பக்திநூல்களோ இதற்கு முற்றும் மாறான கொள்கையுடையன. தமிழ்சமுதாயத்தில் பல்வேறு திறத்தினரும் எளிதில் உணர்ந்து ஈடுபடும்படி இந்நூல்கள் அமைந்தன; இன்னிசையோடு பாடுதற்கு உரியன. எனவே, சாதாரண மக்களது சொல்வழக்காற்றைப் பெரிதும் பின்பற்றியன. ஆதலால் கல்வியாளர்கள் வழங்காத வழக்குக்கள் இவற்றிற் பெரும்பான்மையாய்க் காணப்படும். இவற்றுள் ஒன்று உன், உன்னை என்ற வரிசை. எனவே இலக்கண நூலோர்

இவற்றைப் புறக்கணித்து வந்தனர். உயர்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இவற்றைக் கையாளாது விடுத்தனர். இவ் வழக்குக்களுக்கு கால அடைவில் தகுதி யேற்பட்டதன் பின்னரே, உயர்ந்த இலக்கிய ஆசிரியர்கள் இவற்றை ஆளத் தொடங்கினர். ஆகவே, சீவக சிந்தாமணி போன்ற ஓர் உயர் தர இலக்கியத்தில் இவை காணப்படுமாயின், அவ்விலக்கியங்கள் தேவாரம் முதலியவற்றிற்கு மிகப் பிற்பட்டன என்று எளிதில் கூறிவிடலாம். இவ்வகைச் சொல்லாராய்ச்சியின்றியே சீவக சிந்தாமணி காலத்தாற் பிற்பட்டதென வேறு சரித்திரக் காரணங்களால் துணியப்பட்டிருப்பது இச் சொல்லாராய்ச்சியையும் முடிபையும் வலியுறுத்துகின்றது. கீழ்க்கணக்கு நூலாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

> **முலையாலும் பூணாலும் உன்கண்தாஞ் சேர்ந்த**
> **இலையாலும் இட்ட குறியை — உலையாது**
> **நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வன் நிற்கும் உனைமுலைப்பால்**
> **தார்சிதைக்கும் வேண்டா தழூஉ (152)**

என்ற செய்யுளில் உன், உனை என்பவை வந்துள்ளன. ஒருகால் இச் செய்யுளில் ஏதேனும் ஐயப்பாடிருப்பின், திணைமொழி யைம்பதில் பின்வரும் செய்யுளைக் காண்க:

> **செந்தா மரைமலரும் செய்வயல் நல்லூர**
> **நொந்தால்மற் றுன்னைச் செயப்படுவ தென்னுண்டாம்**
> **தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்**
> **கொண்டாயும் நீயாயக் கால். [36]**

இங்கே, உன்னை என்ற சொல்லை ஆசிரியர் வழங்கியிருக்கிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கீழ்க் கணக்கைச் சார்ந்தனவாகப் போற்றப்படுதலாலே இவை உயர்ந்த இலக்கியங்களாகும். மேற்கூறிய நெறியே நோக்கின் இவற்றின் காலம் அப்பரது காலத்திற்கு ஒரு நூற்றாண்டளவாவது பிற்பட்டிருக்கலாம். இங்ஙனம் கீழ்க்கணக்கு நூல்களை எடுத்தாண்டுள்ள சிலப்பதிகாரத்தில் 'உன் பெருந் தானத்துறுதி யொழியாது' (XV, 34) என வருகின்றது. இங்ஙனம் வருதல் இக்காவியம் இன்னும் பிற்பட்டதாதலை உணர்த்துகிறது.

காலப்பெயராய் வருவது பொழுது என்னும் சொல். முன்னிலைப் பெயராயுள்ளது உன் முதலியன. இனி வினையெச்சமாய் நின்று இடைச் சொல்லை நிகர்த்து வரும் 'ஆனால்' என்பதனைக் கவனிப்போம். இவ்வடிவில் இதற்குச் சொல்லமைதி கூறுதல் ஏலாது. இது முழுவடிவம்

அன்று என்பது எளிதில் உணரலாம். ஆயினான் என்பது, ஆனான் எனக் குறைந்து நின்றது.

அருமறையோ டாறங்கம் ஆயினானை (அப்பர் VI, 1, 6)
நல்வினையும் தீவினையும் ஆனான்றன்னை
(அப்பர் VI, 11, 2)

என இரண்டு வடிவங்களும் வந்துள்ளன. ஆயினார் என்பது ஆனார் எனக் குறைந்து நின்றது.

ஆயர் மத்தெறி தயிரி னாயினார் (சீவக 421)
முற்றா மதிச்சடையர் மூவ ரானார் (அப்பர் VI, 10, 7)

என இரண்டு வடிவங்களும் வந்துள்ளன. இச்சொல் வடிவங்களின் வாயிலாக நோக்கினால், 'ஆனால்' என்பதன் முழு வடிவம், 'ஆயினால்' என்பதாதல் தெளிவாகும்.

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

என்றவிடத்து ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது என்றனர் நச்சினார்க்கினியர் (தொல்-சொல், 230 உரை). இந்நெறியால் நோக்கினும் ஆயினால் என்பது ஆனால் எனக் குறைந்து நின்றமை வெளிப்படை.

'ஆயினான்' என்றதன் அமைதிக்கும் 'ஆயினால்' என்றதன் அமைதிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. முதலது, 'ஆ' என்ற வினையடியும், 'இன்' என்ற இறந்தகால இடைநிலையும், 'ஆன்' என்ற படர்க்கை ஆண்பாலொருமை விகுதியும் சேர்ந்துள்ளது. இதன் தன்மையை மயிலைநாதர், 'போயினான், 'சொல்லினான்,' எனவரும் சொற்கள் இறந்த காலந்தரும் இன் இடைநிலை பெறாது, போனான் சொன்னான் என வருவனவும் (நன். 256)' எனக் கூறுவது கொண்டு உணரலாம். இரண்டாவது 'ஆ' என்ற வினையடியும் 'இன்' என்ற எச்சவிகுதியும் 'ஆல்' என்ற எச்ச விகுதியும் கூடியமைந்தது. இங்கு இருவேறு எச்சவிகுதிகள் உள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது. 'இன்' என்ற எச்ச விகுதி ஒன்றானே அமைந்து ஆயின் என்பது போன்று வரும் வழக்கு மிகப் பழைமையானது. தொல்காப்பியரும் தாம் கூறும் ஒன்பது வகை வினையெஞ்சுகிளவிகளுள், 'செயின்' என்றதனைக் கொண்டனர் (தொல், சொல். 220). பண்டைக் காலந்தொட்டு இன்று வரையும் இவ்வாய்பாட்டு வினையெச்சங்கள் வழக்கில் உள்ளன.

பாஅல் புளிப்பினும் பகலிருளினும்

என்ற புறநானூற்று அடியில் (62) இவ்வெச்சவீறு உம்மை பெற்று வந்தது.

வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின் (குறள். 2)

என்று வள்ளுவரும் வழங்கினர்.

திருமால் குன்றத்துச் செல்குவி ராயின் (IV, 91)

என்பது சிலப்பதிகாரம். இவ்வழக்குப் பெருவரவிற்றாதலின் மேற்கோள் காட்டும் அவசியம் இல்லை.

'ஆல்' என்னும் எச்சவீறு மட்டும் வந்துள்ள இடங்களும் பலவாம். இது யாண்டும் 'செய்து' என்னும் இறந்தகால வினையெச்சத்தின் மேல் வருவதாகும். உதாரணமாக,

இறுதியில் இன்பம் எனக்கீங் குரைத்தால்
(சிலப். XI, 122)

என இளங்கோவடிகளும்,

உமகாட் செய்து வாழலுற்றால் (XI, 1, 7)

என அப்பர் சுவாமிகளும்,

அற்றால் அளவறிந் துண்க (குறள் 943)

எனத் திருவள்ளுவரும்,

சென்றாற் குடையாம் இருந்தாற்சிங் காசனமாம்
நின்றால் மாவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு (முதல் திருவந்தாதி 53)

எனப் பொய்கை ஆழ்வாரும்,

என் செய்தால் என்படோம் யாம்
(இயற். பெரிய திருவந். 6)

என நம்மாழ்வாரும் வழங்கியுள்ளார்கள். இவ்வாய்பாட்டுச் சொற்கள் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் காணப்படாமையால் பிற்பட்டுத் தோன்றிய வழக்கெனவே கொள்ளற்பாலன. இப்பிற்பட்ட வழக்குத் தோன்றி நிலைத்த பின்னரே, செயின் வாய்பாட்டு எச்சத்தின்மேல் இதனைச் சேர்த்தல் நிகழ்த்தக்கது. இவ்வாறு சேர்ந்து வருவதும் நாயன்மார்கள் காலத்திலும் பின்பும் நல்வழக்காயிருந்ததென நினைக்க இடமுண்டு.

ஆடினாலும் அரனுக்கன் பில்லையேல் (அப்பர் V, 99, 9)
பழகினால் வரும் பண்டுள சுற்றமும் (அப்பர் V, 77, 9)

என அப்பரும்,

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால்
(இரண்டாந் திருவந். 2)

காணக் கழிகாதல் கைமிக்குக் காட்டினால் (ஷை-56)

எனப் பூதத்தாழ்வாரும் இவ்வழக்கை அமைத்தருளியிருக்கிறார்கள். ஈண்டெல்லாம் குற்றுகரவீற்று வினையடி இகரமூர்ந்து இறந்தகால எச்சமாகி, பின் 'இன்' 'ஆல்' என்பன சேர்ந்து வந்துள்ளன. இவ்வெச்சங்களிலன்றி, நக்கு, உண்டு, வந்து, சென்று என்பன போன்று உகரம் கடதறவூர்ந்து, இயல்பான எச்சங்கள் ஒழிந்த பிற எச்சங்களிலும் மேலை விகுதிகள் இணைந்து வருகின்றன.

தமக்கு நல்லது தம்முயிர் போயினால் (அப்பர் V, 43, 4)

என்றதில் வரும் 'போயினால்' இதற்குத்தக்கதோர் உதாரணமாம். இச்சொல் 'போனால்' எனவருதல் பிரசித்தம். இதனோடு முற்றும் ஒத்துள்ளது 'ஆயினால்' என்பது. இரண்டும் நெடிலீற்று முதனிலை முன்னர் *யகரம் வந்து, இறந்தகாலம் பற்றியன; இரண்டும் முறையே 'போயின்' 'ஆயின்' என நின்று காரணம் முதலிய பொருளில் வருவன; இரண்டும் ஆல்விகுதி பெற்றும் வழங்குவன; இரண்டும் இக்காலத்துப் பெருவழக்காயுள்ளன.

இவ்விரண்டு சொற்களிலும் வரும் 'இன்' என்பதனை இறந்த கால இடைநிலையெனக்கொண்டால் வரும் இழுக்கு யாதெனச் சிலர் வினவலாம். முதலாவது, இடைநிலையோடு நிற்பின் எச்சப்பொருள் தருமாறில்லை. இரண்டாவது, எச்சமுணர்த்தும் உறுப்புயாதுமில்லாமலொழியும். மூன்றாவது, இறந்த காலத்தை யுணர்த்திய பின்னரே காரண முதலிய பொருள்களில் வரும் விகுதி சேர்தற்பாலன. 'அற்றால்' முதலியன வாக முன்பு காட்டியனவற்றைக் காண்க. மலையாள மொழியில், 'போயால்' 'ஆயால்' என வருவனவும் ஈண்டு நோக்கற்பாலன.

மேற் கூறியவற்றால் 'போனால்' 'ஆனால்' என்பன சொல் வரலாற்றில் மிகப்பிற்பட்ட வழக்கென்பதும், இலக்கிய வழக்கும் இப் பிற்பாட்டினை நன்கு தெளிவுறுத்து

---

*இவ் யகரம் பற்றிச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் வேறுபட்ட கருத்துடையராய்ச் சில குறிப்புக்கள் எழுதியுள்ளனர் (தொல், சொல், சேனா. 228; நச். 230 உரை,)

கின்றதென்பதும் அறியலாகும். 'ஆயின்,' 'ஆயினால்' என்பன அதன் மூதாதைகள் என்னலாம். இப்பிற்பட்ட வழக்கினை,

தமக்கவர் தாம் சார்வரிய ரானால் (பெரிய திருவந்.9)

என நம்மாழ்வாரும் (சுமார் 9-ம் நூற்றாண்டு),

ஆகி யவரும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்டு
ஏகு மளித்திவ் வுலகு (15)
எத்துணையும் ஆற்றப் பலவானால் (37)

என நாலடியாசிரியரும் (சுமார் 7-ம் நூற்றாண்டு) எடுத்தாண்டுள்ளார்கள். இவ் ஆட்சியும் மிக அருகியே காணப்படுகின்றது. இங்ஙனமிருப்ப, வள்ளுவர்

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (53)

எனத் தம் பொய்யாமொழியிற் கூறுகின்றார். இங்கு வரும் 'ஆனால்', என்னுஞ் சொல் இத் தெய்வப் புலவரது காலம் நாலடியாரின் காலத்தை ஒட்டியதாகலாம் என்று கொள்ள இடந்தருகின்றது; இக்காலத்திற்கு மிக முற்பட்டதாகா தென்பது உறுதி. ஆகவே 6-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வள்ளுவர் வாழ்ந்தனரெனக் கொள்வோமாயின், அது பெரும்பாலும் உண்மையாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. கலித்தொகையிலும் 'ஆயர் எமரானால்' (கலித். 108). 'சான்றவர்க்கெல்லாம் கடனானால்' (கலித். 139) என வந்துள்ளன. இங்ஙனம் வருதலால் இத்தொகை நூலின் காலமும் பிற்பட்டதாதல் தெளிவாம்.

6. தோடு

தோடு என்ற சொல்லுக்குத் தற்காலத் தமிழில் பெண்கள் காதில் அணியும் ஆபரண வகையே பொருளாக உள்ளது. திருநெல்வேலிப் பிரதேசத்தில் மாங்கொட்டை முதலியவற்றின் மேற்புறத்துள்ள ஓடு (Shell) என்ற பொருளும் வழங்குகிறது. திவாகர நிகண்டில்,

> **தோடே தொகுதியும் பனையிதழ் போல்பவும்**
> **பூவின் இதழும் புகலுங் கிளவி,**

எனக் காணப்படுகிறது. எனவே தொகுதி, பனையிதழ், இவ்விதழைப் போன்ற இதழ்கள், பூவின் இதழ் என்ற நான்கு பொருள்கள் முற்காலத்து வழங்கினவாக இந் நிகண்டு கூறுதல் அறியலாம்.

வேறு சில பொருள்களும் அகராதியிற் காணப்படுகின்றன. காதணி வகை என்ற பொருள் எக்காலந்தொட்டு வழங்கிவந்ததெனெ இலக்கிய வாயிலாக அறிதல் பயனுடைத் தாகும்.

17-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த குமர குருபரர்,

> **அழகிய சொக்கற்கு மால்செயத் தோட்டிகல்**
> **அமர்செய் கயற்கட் குமாரியைக் காக்கவே,**

என மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடினர். இங்கே காதணியோடு பொருகின்ற கண்களையுடைய குமாரி என்பது பொருள்.

12-ம் நூற்றாண்டில் கம்ப ராமாயணத்தில்,

> **தோடுண்ட சுருளுந் தூங்குங் குழைகளும் சுருளித்**
> **றோன்றும்**
> **ஏடுண்ட பசும்பொற் பூவும் திலதமும் இலவச் செவ்வாய்**
> **மூடுண்ட முறுவல் முத்து முள்ளுடை முளரிச் செங்கட்**
> **காடுண்டு புகுந்த தென்ன முனிந்தது கறைவெண் டிங்கள்**
> (களியாட்டு. 4)

என வருகின்றது. இங்கே சிலேடை நயந்தோன்ற, பெண்களுடைய முகங்கள் செந்தாமரைக் காட்டிற்கு ஒப்பிடப்படு கின்றன. காதணியாகிய சுருள்கள் குறிக்கப்படுகின்றன.

10-ம் நூற்றாண்டில் சீவக சிந்தாமணியிலே,

நெய்வீலைப் பசும்பொற் றோடு நிழல்மணிக் குழையும் நீ இ
மைவிரி குழலினாளை மங்கலக் கடிப்புச் சேர்த்தி

என்று கோவிந்தையாரது மணக்கோலச் சிறப்பு வருணிக்கப்படுகின்றது. தோடு, குழை என்ற இருவகைக் காதணிகளும் இங்கே கூறப்படுகின்றன.

அக்காலத்தவராகிய பட்டினத்துப் பிள்ளையாரும் இவ் இருவகைக் காதணிகளையும்,

ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்டமேனி எந்தை

(கோயில் நான்மணி.)

எனச் சிவபெருமானது திருக்கோலத்திற் கண்டனர்.

9-ம் நூற்றாண்டினராகிய சுந்தரரும்,

..தாழ் மகரக் குழையும் தோடும் அணிந்த திருக்காதனை,

என்றனர். இவர் காலத்தை அடுத்து வந்த மாணிக்கவாசகரும்,

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ,

எனப் பாடினர். இந்நூற்றாண்டிற்குச் சற்று முன்பு தோன்றிய ஆண்டாளும்,

சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்,

என்று திருப்பாவையில் இசைத்தனர். சேரமான் பெருமாள் நாயனாரும்,

சூளிகையும் பொற்றோடும் மின்விலக,

என்று தமது ஆதியுலாவிற் கூறினர்.

7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த நாவுக்கரசரும்,

கொலைவரி வேங்கை யதளும் குலவோடிலங்கு
பொற்றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்,

என அருளிச் செய்தனர்.

இவ்வாறே ஞானசம்பந்தரும்,

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி,

எனத் தம் திருப்பதிகத்தைத் தொடங்கினர். இக்காலத்திற்கு முற்பட்டனவென்று அறுதியிடக்கூடிய நூல்கள் ஒன்றிலேனும் தோடு என்பது காதோலை அல்லது காதணி என்ற பொருளிற் காணப்படுமாறில்லை. எனவே, இச் சொல்லிற்கு இப்பொருள் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஏற்பட்டிருக்கலாமென்று ஊகித்தல் தகும்.

தோடு என்ற சொல்லிற்குப் பனம்பூ, பனையோலை என்பன பழைய பொருளென்பது,

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை யென்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்,

என்ற தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தாலும் (88),

மடலிவர் போந்தை மதர்வைவெண் தோட்டினும்....
இயன்ற பந்தரும், (பெருங்-I, 38,70-2)

என்ற பெருங்கதை அடிகளாலும் அறியலாம்.

முற்காலத்தில் காதிற்கு அணியாகப் பனம் பூவையும் பனையோலைச் சுருளையும் அணிந்து வந்தனர். இதனாலேயே இக்காதணிக்குத் தோடு என்று பெயர் வழங்கலாயிற்று. பனந்தோட்டினைப் பெண்கள் அணிந்து வந்தனரென்பது,

இனமடர் பெண்ணை யீர்ந்தோடு திருத்திச்
செல்க நங்கை மெல்ல நடந்தென

என்று வரும் பெருங்கதையால் (II, 16,2-3) விளங்கும்.

இங்கு வரும் 'பெண்ணை' என்ற சொல் 'பனை' என்ற பொருளுடையதாம். தற்காலத்தும் நாகரிகம் எட்டாத சிற்றூர்களிற் பெண்கள் இங்ஙனம் பனையோலைச் சுருளையணிதல் காணலாம். கால அடைவில் ஓலைக்கு மாறாகச் சங்கினால் இக்காதணி அமைக்கலாயினர். இதனையும் தோடு என்று வழங்கினர்.

"விரிவெண்டோட்டு வெண்ணகைத் துவர்வாய்"

(சிலப். 27,183) என்ற இடத்து, வெண்டொடு-சங்கினாற் செய்த காதணியாம்' என்று பொருளெழுதினர் அரும்பதவுரைகாரர்; மணிமேகலையிலும்,

ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டு,

என்று வருகிறது. மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையரவர்கள், 'வெள்ளி வெண்தோடு' என்பதற்குச் சங்கினாற்

செய்த காதணி என்று அரும்பதவுரையைப் பின்பற்றிப் பொருளெழுதினர். யானைத் தந்தத்தினாலும் இக்காதணியை அமைத்து வந்தனர். சிந்தாமணியில் (2440).

நாகம் மருப்பி னியன்ற தோடும் நலங்கொள் சுறவுக்
குழையும்,

என வருவதனால் இது தெற்றென விளங்கும்.

பொன்னினாலும் இக்காதணியை இயற்றி இதற்கும் தோடு என்ற பெயரையே சார்த்தி வழங்கினர்.

வெள்ளி வெண்டோடு பொற்றோ டாக

என்ற மணிமேகலையும் (5,121)

அணித் தோட்டுத் திருமுகத் தாயிழை,

என்ற சிலப்பதிகாரமும் (8,111) இவ்வழக்கினைத் தெரிவிக்கின்றன.

பன்மணி முத்தின் பவளம் பதித்தன்ன
என்மணி வண்ணன் இலங்குபொற் றோட்டின் மேல்,

என்றார் பெரியாழ்வாரும்.

நம் காலத்தில் 'பொற்றோடு' அணியும் வழக்கமும் பெரும்பாலும் போய்விட்டதென்று சொல்லலாம். கம்மல் என்னும் காதணி வகையையே இப்போது 'தோடு' என வழங்குகிறோம். சிவப்புக்கல் (இரத்தினம்) வைத்ததோடும் வைரத்தோடும் தான் பெரு வழக்கிலுள்ளன. எதிர் காலத்தில் வைரத்தோடு மட்டுமே 'தோடு' என்று சிறந்து சொல்தற்குரியதாய் விளங்குமெனத் தோன்றுகிறது.

இங்ஙனமாக மென்மேலும் அரிய பொருள்களாற் செய்யப்பெற்றுக் காதிலிடும் துளைக்குத் தக்கபடி வடிவில் வர வரச் சுருங்கிச் சிறப்புற்று வந்த 'தோடு', குழையினின்றும் முற்றும் வேறானது. மேற்காட்டிய சிந்தாமணிச் செய்யுளில் (2440) தோடும் குழையும் தனித் தனி கூறப்பட்டிருத்தல் காணலாம். தோடு அணியும் வழக்கம் ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே குழை அணியப்பட்டு வந்ததாதல் வேண்டும், ஏனெனில், சங்க இலக்கியங்களிலே தோடு காணப்பெறவில்லை; குழை என்னும் காதணியே கூறப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியிலே (709).

'ஒண்குழை புணரிய வண்டாழ் காதின்'

என்பது இதற்குத் தக்க எடுத்துக்காட்டு ஆகும். தோடு வழக்கில் வந்த பின்னர், அதனை இடது காதில் அணிந்து வந்தனர் என்பதும் தமிழ் நூல்களாற் புலனாகின்றது.

வாணுதற் பட்ட மின்ன வார்குழை திருவில் வீசப்
பூண்முலைப் பிறழப் பொற்றோ டிடவயினுடங்க வொல்கி,

என்று சிந்தாமணி (1257) தெரிவிக்கின்றது. குழை ஒரு பக்கத்தும், தோடு ஒரு பக்கத்தும் பூண்டனர் என்பது.

குண்டலம் ஒருபுடை குலாவி வில்லிட
விண்டலர்ந் தொருபுடை தோடு மின்செய

(சிந்தா. 1009)

என்ற செய்யுள் உணர்த்துகின்றது. குண்டலம் என்பது குழைக்கு ஒரு பெயராகும். 'குழையே மஞ்சிகை காதணி குண்டலம்' என்று திவாகரம் கூறும். தோடும் குழையும் ஒன்றேயாமெனக் கொண்டு மயங்கினாரும் ஒரு சிலர் உளர். தக்கயாகப் பரணியில் (714) 'சங்கமெங்கள் குழை' என்ற தாழிசைக்கு உரையெழுதும் போது. 'குழை-காதிலிடும் சங்கத் தோடு' என உரைகாரர் எழுதியுள்ளமையால் இது புலனாகும்.

இத்தோடு என்னுங் காதணியை ஆடவர்களும் அணிந்து வந்தார்கள். இதனை,

காதணிந்த பொற்றோடும் குண்டலமும் நகாகா
வீதைந்த வரைமார்பர் விஞ்சையர்போற்கிடந்தாரே,

என்ற சிந்தாமணிச் செய்யுள் (2241) நன்கு புலப்படுத்தும்.

தேவார காலத்திற்கு முற்பட்ட நூல்களில் காதோலை என்ற பொருளில் 'தோடு' என்ற சொல் வழங்கியதில்லையென்று மேலே கண்டோம். இவ்விஷயம் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. பனையோலைச் சுருளைக் காதணியாக அணிந்த வழக்கமே தேவார காலத்து ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்புதான் தமிழ்நாட்டில் ஏற்பட்டதென நாம் ஊகிக்கலாம். சங்க காலத்தில் இவ்வழக்கம் காணப்படுமாறில்லை; இது சங்க இலக்கியங்களை நோக்கியறியலாம். எனவே சங்க காலத்திற்கும் தேவார காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், சுமார் 4 அல்லது 5-ம் நூற்றாண்டளவில் காதில் தோடணியும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இத்தோடு பொன்னினாற் செய்யப்பட்டுப் பெண்டிர் காதுகளில் அணியாக விளங்கியது கி.பி. 6-ம் நூற்றாண்டளவில் என்று கருதுதலும் தகும். எனவே, பொற்றோடணியும் வழக்கத்தைக் குறிப்பிடும் நூல்களும் 6-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டிருத்தல் கூடாது. இந் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதேயாதல் வேண்டும். ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை பொற்றோட்டினைக் குறிக்கின்றது. ஆதலால்

இக் காவியமும் இதனோடு சம காலத்ததான சிலப்பகாரமும் 6-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவாதல் தெளியப்படும்.

தோடு என்னுங் காதணி வடமொழியில் 'தாடங்கம்' என வழங்கப்பெறும். இவ்வட சொல்லிற்குப் பனையோலையால் குறிக்கப்பெற்ற அணியென்பது பொருள். தால, தாட, தாளி, தாடி என்பன எல்லாம் ஒரே சொல்லின் வேற்று வடிவங்களே. 'தாலபத்திரம்' எனவும் இக்காதணியை வடமொழியில் வழங்கியதுமுண்டு. 'தாட' என்பதற்கும் 'தோடு' என்பதற்கும் யாதேனும் தொடர்பு உளதா? காதோலையணியும் வழக்கம் முதன் முதலில் தென்னாடாகிய தமிழ் நாட்டில் எழுந்ததா? அல்லது வடநாட்டில் முதன் முதலாக உண்டாயிற்றா? இவை ஆராய்ந்து முடிவு காணுதற்குரியன.

7. விருந்து*

இன்று தீபாவளி. ஒவ்வோர் வீட்டிலுள்ளவர்களும் மிகவும் குதூகலமா யிருப்பார்கள். வீட்டு மாப்பிள்ளைகள் எல்லாரையும் வரவழைத்துப் பண்டிகை கொண்டாடுவது வழக்கம். வீடுதோறும் பலகாரங்களின் நறுமணம் வீசி, சிற்றுண்டிகளின் மீது நம்மைப் பேரவாக் கொள்ளும்படி செய்துவிடும். விசேஷமான விருந்துணவுகளும் தயாராயிருக்கும். எட்டு அவுன்ஸ் திட்ட அரிசிப்படி வாங்கியுண்ணும் தற்காலத்துப் பஞ்சத்தில் இந்த விசேஷமும் விருந்தும் நடக்குமா? என்று சிலர் கேட்கலாம். எல்லாருக்கும் இந்த அதிர்ஷ்டம் இருக்கமாட்டாது. ஆனால், சிலருக்கு அதிக சலுகையுண்டு. அவர்கள் வீட்டில் இவ்வாறு நடக்கும். மற்றவர்கள் வீடுகளிலும்கூட சாதாரண நாட்களைவிட இன்று சிறிதாவது விசேஷம் இருக்கத்தான் செய்யும். ஏழைகளோ என்றால் அவர்களைப்பற்றி நினைப்பதற்கு இன்று சாவகாசம் இருக்குமா?

விருந்து என்றால் தற்காலத்தில் உறவினர், நண்பர்களுக்கு நாம் அளிக்கும் விசேஷ உணவுக்கும் பெயராக அமைந்துவிட்டது. பூர்வ சரித்திரத்திலும் இச்சொல்லுக்கு இப்பொருளே இருந்தது.

மாலை நனி விருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரை வாராதே. (குறுந். 155)

என்பதனால் இது விளங்கும். விருந்து உண்ணுவதற்குச் சிறிதும் வசதியில்லாத நம்மவர்கள், அச்சொல்லின் பண்டைப் பொருள்களையும் வரலாற்றையும் நினைத்தாவது ஆவலைத் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா? நமது நாட்டுப் பழமொழி என்ன சொல்லுகிறது? 'பசித்தவன் பழங்கணக்குப் பார்த்ததுபோல்' அல்லவா?

பழங்கணக்கில் என்ன சொல்லியிருக்கிறது? தொல்காப்பியர் ஏழு இடங்களில் இச்சொல்லைப்பற்றிக் கூறுகிறார். ஓரிடத்தில் விருந்து என்றது உண்மையில் உயர்திணையாக இருந்தாலும் அஃறிணையைப் போலச் சொல்லுக (சொல். 57) என்கிறார். 'விருந்து வந்தது என்று சொன்னாலும்

---

*லோகோபகாரி தீபாவளி மலர் (1947).

அதன் பொருள் 'விருந்தினர் வந்தனர்' என்பதாகும். எனவே, விருந்து என்ற சொல்லுக்கு விருந்தாளி என்று பொருள் கொள்ளவேண்டும். வேறோரிடத்தில் 'விருந்து புறந்தருதலும்' (கற்பியல். 11) என்றனர். ஈண்டு விருந்தினர் என்பதே பொருள். இப்பொருளிலேயே புறநானூற்றில் வருகின்றது. விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை (புறம். 266) என்பதற்கு 'விருந்தினரைக் கண்டு வைத்தும் அவர்க்கு விருந்தாற்ற மாட்டாமல் ஒளிக்கும் நன்மையில்லாத இல்வாழ்க்கை' எனப் பழைய உரைகாரர் பொருள் கூறுகின்றார். இங்கெல்லாம் விருந்து என்பதற்குப் புதுமை என்ற பொருட்குறிப்புத் தோன்றவில்லை. பொதுப்பட வரும் விருந்தாளிகளை உபசரித்தலே கருதப்பட்டது. தொல்காப்பியர்,

> **விருந்தே தானே**
> **புதுவது புனைந்த யாப்பின் மேற்றே,**

எனச் செய்யுளியலில் (231) கூறியது இச்சொல்லின்பொருள் வரலாற்றைத் தெளிவுறுத்துவது போலுள்ளது. விருந்து என்ற சொல் புதுவதாகப் புனையப்பட்டது என்று பொருள்படும் எனக்குறிப்பிக்கிறார் ஆசிரியர். இப்பொருளினின்றும் 'புதுமை' என்ற பொருளைத் திவாகரர் கொண்டனர்.

> **புத்தேள் யாணர் புனைபுணர் விருந்து**
> **வைத்த வம்பு கடி நவம் புதுமை,** (XI. 173)

என்பது திவாகரச் சூத்திரம். இப்பொருள் புறநானூற்றின் காலத்திற்குப் பிற்பட்டதெனத் தோன்றுகிறது. தொல்காப்பியர் தந்த குறிப்பினை உட்கொண்டு இப்பொருள் பிறந்ததெனக் நாம் கருதலாம். 14-ம் நூற்றாண்டினரான பரிமேலழகரும், 'விருந்து என்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியதாய் வந்தார் மேல் நின்றது' (குறள். 43, உரை) என்று எழுதினர். இவர் திவாகரத்தைப் பின்பற்றி இப்பொருளைக் கொண்டனர். புதியராய் வந்தோரைக் குறித்த திவாகரச் சூத்திரம், 'அதிதியர் வம்பலர் புதியோராமே' என்றே உள்ளது. இங்கே விருந்து என்ற சொல் காணப் பெறாமை நோக்கத்தக்கது.

இப் புதுமை என்னும் பொருள் விருந்துண்டி ஆக்குவதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும் உளதாகும் புதிய மனவெழுச்சியை அடியாகக்கொண்டு பிறந்ததாகல் வேண்டும். இம் மனவெழுச்சிக்குக் காரணமான கணவனும்

விருந்தினனாகக் கருதப்படுகிறான். 'விருந்துவரக் கரைந்த் காக்கையது பலியே' என்ற குறுந்தொகைச் செய்யுள் (210) இதற்குச் சான்றாகும். இது, 'புதுமை' என்ற பொருள் முதலாகத் தோன்றியது அன்று என்பதையும் ஒருவாறு விளக்குகின்றது.

மேற்கூறியவற்றால் முதலாவது தோன்றிய பொருள் விருந்துண்டி என்பதும், அதனை யடுத்துத் தோன்றியது 'விருந்தினன்' என்பதும், மூன்றாவதாகப் பிறந்தது 'புதுமை' என்பதும் புலனாகும். இம்மூன்றாம் பொருள் முதலில் அருகிலியே காணப்பட்டது. விருந்தே காமம் (குறுந். 204); விருந்திற் பாணி (மலைபடு. 539; சிலப். 10,130); விருந்திறை (மலைபடு. 319); விருந்திற் பாவை (மணிமேகலை. 18,66) என வரும் உருவக வகையினால் இப்பொருள் நிலைத்து விட்டது. பின்பு திவாகரம் முதலிய நிகண்டுகளிலும் புகுந்து கற்றோரது மனத்தைக் கவர்ந்தது. ஆண்டுதோறும் நிகழும் விழா என்ற பொருளும் பிற்காலத்து ஏற்பட்டது. 'விருந் தாட்டயரும் ஓர் விஞ்ஞை வீரன்' (சிலப். 6,4) என்பது உதாரணம். இவற்றுக்கெல்லாம் குதூகலவுணர்ச்சி யுளதா தல் வெளிப்படை. இவ்வுணர்ச்சியில்லாத இடத்தும் இச் சொல் பிற்காலத்து வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 'விருந்திற்றே எம்' (சிலப். 2,5); விருந்தின் மன்னர் (சிலப். 4,12; பெருங்கதை, IV, 4,106) என்பனவற்றைக் காட்ட லாம்.

ஆனால், இதனோடு நிற்கவில்லை. களங்கமற்ற இனிய இல்வாழ்க்கையோடு தமிழ் மக்கள் மனம் அமைதியுற வில்லை. வடநாட்டில் ஆரிய சமுதாயத்தில் வழங்கிய நால்வகை ஆச்சிரம நியதிகள் தமிழ்நாட்டிற் புகுந்தன. இதற்குச் சான்றாக,

> **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
> **நல்லாற்றின் நின்ற துணை.**

என்ற வள்ளுவர் வாய்மொழியைக் கூறலாம். சிலர் இரண்டு ஆச்சிரமங்களோடு திருப்தி அடைந்தனர். இல்லறம், துற வறம் என்ற பாகுபாடு இதனை உணர்த்தும். இந்நிலைகளுள் இல்வாழ்க்கையுட் புகுந்த கற்புடையாட்டிக்குரிய சிறந்த கடமைகளுள் ஒன்றாக விருந்தினரை உபசரித்தல் முதலில் கூறப்பட்டது. இதனை,

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்,

என்ற கற்பியற் சூத்திரத்தால் (11) தொல்காப்பியர் உணர்த்துகிறார்.

வேறொருவகை விருந்து மிகப் பழங்காலத்துத் தானே புண்ணிய வேள்விச் செயல்களுள் ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. பதிற்றுப் பத்தில் (21),

வருநர் வரையார் வார வேண்டி
விருந்துகண் மாறாது உணீஇய பாசவர்
ஊனத்து அழித்த வால்நிணக் கொழுங்குறை
குய்யிடு தோறும் ஆனாது ஆர்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை எழுந்த அடுநெய் ஆவுதி,

என்று வரும் அடிகளும், 'அடுநெய் யாவுதி என்றது அடுசில் நெய்யாகிய, ஆவுதி யென்றவாறு; அடு நெய்யை ஆவுதி யென்றது, விருந்து புறந்தருதலையும் ஒரு வேள்வியாக்கி, 'ஆள்வினை வேள்வி' என்று ஒரு துறையாக நூலுட் கூற லான் என்பது,' என்ற உரையும் இங்கே நோக்குதற்கு உரியன. இங்ஙனம் கூறிய நூல் புறப்பொருள் வெண்பா மாலையாகும்.

நின்ற புகழொடு நீடுவாழ்க இவ்வுலகில்
ஒன்ற உயிர்களிப்ப ஓம்பலால்—வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்
ஆள்வினை வேள்வி யவன். (215)

இங்கே இறுதியடிக்கு 'முயற்சியாற் செய்யும் புண்ணியத்தை யுடைய வேந்தன்' எனப் பொருள் கூறினார் உரைகாரர். இவ் உரைகாரர் ஆவுதி என்ற சொல்லை நோக்கி விருந்தை வேள்வி என உபசரித்துச் செய்யுள் கூறியதன்று என்பதனை நமக்கு விளங்க விவரிக்கிறார்.

பதிற்றுப் பத்துப் போன்று பொதுப்பட விருந்தோம் புதலை ஒரு வேள்வியாகவே சிலர் கொண்டுள்ளார்கள். வள்ளுவர்,

இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் (87)

என்றும்,

பரிந் தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார் (88)

என்றும் விருந்தோம்பலை ஒரு வேள்வியாகவே கூறுதல் அறியத்தக்கது.

இந்நிலையில் சமயாசாரமாக இல்லறத்தார்க்கு நியமஞ் செய்யப்பட்ட வேள்விகளுள் ஒன்றாக இது இடம் பெற்றது. வள்ளுவர்,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (43)

என வேள்விகளை ஐந்து வகையாகக் கொண்டு, அவற்றுள் ஒன்றாக விருந்தோம்புதலைக் கொண்டுள்ளமை காண்க. இங்ஙனம் வேள்வியாகக் கொண்ட அளவிலே, அதனால் உபசரித்தற்குரியாரது தன்மை பெரிதும் வேறுபட்டு விடுகிறது. சாதாரணமாக வரும் விருந்தினரைக் குறித்ததன்று இவ்வேள்வி என்பது எளிதிற்புலனாம். சமய நெறியிலே நின்று மேம்பட்டவர்களே இவ் விருந்தினர் என்பதைச் சிலப்பதிகாரம் தெளிவிக்கின்றது;

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை, (16.71-13)

என்ற வரிகளில் இளங்கோவடிகளால் அறவோர்கள், துறவோர்கள் என்ற பகுதியாரோடொப்ப விருந்தினர்கள் கொள்ளப்பட்டுள்ளார்கள். 'தொல்லோர் சிறப்பின்' எனவும், 'எதிர்கோடல்' எனவும் கூறுவதனை நோக்குமிடத்து, அவ்விரு திறத்தாரினும் சிறந்தார்கள் விருந்தினர்கள் எனக் கொள்ளலும் தகுதியாம். இவ்வகை விருந்தினர் யாவர்? சீவக சிந்தாமணி (2824-7) இவர் இன்னவர் என்பதை உணர்த்துகின்றது:

ஐவகைப் பொறியும் வாட்டி,
ஆமையின் அடங்கி, ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை
விளக்குநின் றெரிய விட்டுப்
பொய்கொலை களவு காமம்
அவாவிருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக்
கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.

வாய்ச்சி வாயுறுத்தி மாந்தர்
மயிர்தொறும் செத்தினாலும்
பூச்சிறு சாந்தம் ஏந்திப்
புகழ்ந்தடி பணிந்த போதும்
தூக்கி இவ் விரண்டும் நோக்கித்
தொல்வினை என்று தேறி
நாச்செறு பராவு கொள்ளார்
நமர்பிறர் என்றும் உள்ளார்.

பாற்கதிர்த் திங்கட் சொட்பிற்
பருமித்த களிறு போல
நூற்கதி கொண்டு கண்ணால்
நுகத்தள வெல்லை நோக்கி
மேற்கதிக் கேணி யாய
விழுத்தவர் மனையில் வந்தால்
காற்கொசி கொம்பு போலக்
கைதொழுது இறைஞ்சி மாதோ.

தொடிக்கையால் தொழுது வாழ்த்தி
தூமணி நிலத்துள் ஏற்றிப்
பொடிப்புனை துகிலின் நீக்கிப்
புகந்தடி கழீ இய பின்றை
அடுத்த சாந்து அகிலி னாவி
ஆய்மலர் அருச்சித்து ஆனார்
கொடுப்பர் நாலமிர்தம் மூன்றிற்
குணம்புரிந் தடங்கி னார்க்கே.

பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, தவத்திலே கூர்ந்து நின்று சாந்த மூர்த்தியாய் மேற்கதிக்கு ஏணியாய் அமைந்த பெரியோர்களாகிய உத்தமர்களே இங்குக் கருதிய விருந்தினர். இவர்களுக்கு ஒன்பது புண்ணியச் செயல்களால் உணவளிக்க வேண்டும் என்று ஜைன நூல்கள் கூறும். அப்புண்ணியங்கள் இவை என்பது,

எதிர்கொளல், இடம் நனி காட்டல், கால்கழீஇ
அதிர்பட அருச்சனை, அடியின் வீழ்தரல்
மதுரநன் மொழியோடு, மன, மெய், தூயராய்
உதிர்கநம் வினையென உண்டி ஏந்தினார்

என்ற செய்யுளால் விளங்கும். இவ்வாறு இன்னோரை வழிபட முற்காலத்தே அரசரது அரண்மனைகளில் தனியாக ஓர் இருப்பிடம் இருந்தது. இதன் பெயர் 'விருந்துக்

கோயில்' என்பதாகும், எனப் பெருங்கதை (IV,7,174) தெரிவிக்கின்றது.

இப்பெரியோர்களை நாள்தோறும் விருந்தாக ஏற்று வழிபாடு புரிபவனுடைய இல்லம் வறுமையினால் வருந்தாது என்பர் வள்ளுவர்.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (83)

என்பது குறள் (83). அன்றியும், தன்பால் வந்த இவ்வகை விருந்தினரைப் பேணி, பின் வரக்கூடும் விருந்தினரை எதிர் பார்த்திருந்து, இவரோடு உண்ண இருப்பவன் மறுபிறப்பில் தேவனாய், வானிலுள்ளவர்களுக்கு நல்ல விருந்தாய் அமைவான் என்றும் வள்ளுவர் கூறுகின்றனர்;

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு, (86)

என்பது அவர் திருவாக்கு.

மேலே பஞ்சமகா யக்ஞங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். தென்புலத்தாரைப் பற்றியது பிதுர்யக்ஞம் என்றும், தெய்வத்தைப் பற்றியது தேவயக்ஞம் என்றும், விருந்தினரைப் பற்றியது மனுஷ்ய யக்ஞம் என்றும் அமைந்திருத்தல் எளிதில் உணரத்தக்கதே. எஞ்சி நிற்கும் யக்ஞங்கள், பூதயக்ஞமும் பிரமயக்ஞமும் ஆகும். பூதயக்ஞம் என்பது உயிரினங்களுக்கு உணவு கொடுத்தலாகும். பிரமயக்ஞம் என்பது வேதம் முதலியவற்றைத் தானே ஓதுதல் என முற்காலத்திலும், ஓதுவித்தல் எனப் பிற்காலத்தும் வழங்கி வந்ததாம். ஆகவே, வள்ளுவர் குறித்துள்ள ஒக்கல் என்பதற்கும், தான் என்பதற்கும் நேராகவுரிய யக்ஞங்கள் வடமொழி வைதிக நூல்களில் காணப்பெறவில்லை. ஒரு கிருஹ்ய சூத்திரத்தில், ஒருவன் தன் சுற்றத்தாரும் விருந்தினரும் உண்ணுதற்கு முன்பு உண்ணக்கூடாது என்று விதித்திருக்கிறது. ஒருகால் பூதயக்ஞம் என்பதன் கீழ் ஒக்கல் அல்லது சுற்றத்தாரை ஓம்புதல் அடங்குதலும் கூடும். தான் என்பதனை ஒரு யக்ஞமாகவும் கூறுதற்கு இல்லை. ஜைன நூல்களுள், தான் என்பதனையும் அடக்கி ஐவகை வேள்விகள் கூறப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

மனுஷ்ய யக்ஞத்தில் அந்தணர்களும், யதிகளும் சிறப்பாகக் கூறப்படுகின்றனர். இதுவும் ஜைன சமயக் கொள்கையும் ஒருவாறு ஒத்துள்ளன. இவர்களை

வடமொழியில் அதிதி என்றும், இவர்களுக்குச் செய்யும் வழி பாட்டினை ஆதித்தியம் என்றும் கூறுகின்றனர். வைதிக சாஸ்திரங்களிலும் மனுஷ்ய யக்ஞத்தை மிக விரிவாகவே கொண்டுள்ளார்கள்.

ஆனால், இவ் ஒழுக்கங்களெல்லாம் அனுஷ்டானத்தி லிருந்து வழுவி வெகுகாலமாய்விட்டன. இப்பொழுது பொதுப்பட உயிர்களுக்கு உண்டியளிக்க வேண்டும் என்ற உயர்ந்த கடமை ஒன்றுதான் எல்லாராலும் ஒப்புக் கொள் ளக்கூடியதாக இருக்கிறது. பெயர் வேண்டுமாயின், இதனைப் பூதயக்ஞம் என்று கூறிக் கொள்ளலாம். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனப் புறநானூறு கூறுவது இங்கு அறியத்தக்கது. இக்கருத்து, 'அன்னம் பிராண: என்று வேதங் கூறுதலால் உயிர்களுக்கு உண்டி கொடுத்தல் வேண்டும்' எனப் பௌதாயண தர்மசூத்தி ரத்திலும் காணப்படுகின்றனது. இப்பழங்கொள்கையே தற் காலத்தில் வற்புறுத்தற்குரியது. ஆனால், தற்காலப் பஞ் சத்தில் இக்கொள்கையை நிறைவேற்ற முடியுமா?

8. கந்தருவர்

சில வருஷங்களுக்கு முன் தமிழ் மக்கள் செய்யுள் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே மிக்க வெறுப்புக் காட்டி வந்தனர். பெரும்பாலும் செய்யுள் நூல்களைக் கற்பவர் இல்லையென்றே சொல்லலாம். ஆதலால் செய்யுள் வளர்ச்சி குன்றியிருந்தது. இவ் வெறுப்பு நீங்கும்படி செய்தது சுப்பிரமணிய பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை முதலியோருடைய அரிய பாட்டுக்களேயாகும். இப் பாட்டுக் களில் நவீனக் கருத்துக்களும் நோக்கங்களும் உள்ளக் கிளர்ச் சிகளும் நிரம்பியுள்ளமை இவற்றை நம் மக்கள் போற்றி வருவதற்குப் பெரும் காரணமாயிருந்தது. பாட்டுக்களைக் காட்டிலும் வசன நூல்களே இக்காலத்தில் அதிகமாக விரும்பிக் கற்கப்பட்டு வருகின்றன.

பண்டைத் தமிழகத்தின் நிலைமை முற்றும் வேறாக இருந்தது. வசனம் என்பதே இக்காலத்துப் பெரும்பாலும் இல்லை. செய்யுள் நூல்களே மிகுதியும் பரவியிருந்தன. நூல்களுக்குரிய விஷயங்கள் காதல், வீரம், ஈகை என்ற மூன்று பெரும்பகுதிகளில் அடங்கும். இப்பகுதிகளைக் குறித்து எழுந்த செய்யுட்களே பண்டைக் காலத்துத் தொகை நூல்களில் காணப்படுவனவாம். செய்யுள் இயற் றும்போது கவிஞர்கள் சில மரபுகளைக் கையாண்டனர். இம் மரபுகளின் இயல்புகளை விளக்குதற்கே தொல்காப் பியர் தமது பொருளதிகாரத்தை அமைத்தனர். அகத் திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப் பாட்டியல், செய்யுளியல் முதலியன காதற் செய்யுள் பற்றிய மரபுகளை உணர்த்துகின்றன. காதற்செய்யுள் நயம்பெற வேண்டுமாயின் அந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுந் தலைவனும் தலைவியும் சுதந்திரர்களாக இருத்தல் வேண்டும். இச் சுதந்திரம் இல்லையெனில் காதல் நிகழ்ச்சிக்குப் பெரும்பாலும் இடமேயில்லை என்று சொல்லலாம். யாதொரு கட்டுப்பாடும் நியமமும் இல்லாதபடி ஒருவரை யொருவர் காதலித்த செய்தியைக் கூறுமிடத்துத்தான் கவிஞன் காதலின் பெருநலத்தை மனக்கண்ணால் நன்கு ணர்ந்து சித்திரிக்க இயலும். ஆகவே, தொல்காப்பியர் முதலிய இலக்கண ஆசிரியர்கள் சுதந்திரத்தோடு கூடிய காதல்

நிகழ்ச்சியைக் 'களவு' எனத் தனிப்படப் பகுத்துக் கூறினார்கள். இக் காதல் நிகழ்ச்சிக்குப் பின் மணம் புரிந்து வாழும் வாழ்க்கை நிலையைக் 'கற்பு' எனப் பகுத்தனர். கற்பொழுக்கம் நிகழுகின்ற இடத்திலும் தலைவன் சுதந்திரனாகவும் தலைவி சுதந்திரமற்றவளாகவும் கொள்ளப்படுகின்றனர். இது நமது நாட்டின் வழக்கத்தோடு பொருந்த அமைந்தது. சுதந்திரத்தோடு நிகழும் காதல் ஒழுக்கம் தெய்வத்தன்மை யுடையதாகக் கவிஞர்கள் கருதினார்கள். தெய்வப் பிறப்பினருள் ஒருவகையாராகிய கந்தருவர்கள் இவ்வகைக் காதல் ஒழுக்கத்தினராக வடமொழி நூல் கூறுதலினாலே, இதனைக் கந்தருவ ஒழுக்கம் என்று தமிழ் மூதறிஞர்கள் பெயரிட்டனர். இதனைத் தொல்காப்பியனாரும் இறையனாரும்.

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே

(யாழ்த்துணைமையோர் கந்தருவர்) எனவும்,

அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தர்வ வழக்கம் என்மனார் புலவர்

எனவும் முறையே கூறினர். கம்பரும்,

காந்தர்ப்பம் என்பதுண்டால்
காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
மறைகளே வகுத்த கூட்டம்

எனப் பாடினர் (சூர்ப்பனகைப். 54) கந்தருவ மணத்தின் இயல்பை,

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப

என்ற சூத்திரம் விளக்குகிறது.

மேற்கூறியன கொண்டு பண்டைத் தமிழ் செய்யுட்களுக்கு உயிர் நிலையாய் உள்ளது இக் கந்தருவ ஒழுக்கம் என்பது விளங்கும். ஆகவே, கந்தருவர்களுடைய வரலாற்றை வடநூல் கொண்டும் தமிழ்நூல் கொண்டும் முறைப்பட அறிதல் மிகவும் அவசியமாகும். கந்தருவ மணம் வட நூலுள்ளும் எண்வகை மணங்களில் ஒன்றாதல் காணலாம். கௌடில்யத்தில் (III, 2) எண்வகை மணங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இச் சாயாங்ய ஸம்யோக:
கன்யா யாஸ்ச வாஸ்யச
காந்தர்வ ஸதுவிக்ஞேயோ
மைதுன்ய: காமஸம்பவ:

என்று இம் மணத்தை மனு விவரித்துள்ளார்.

ரிக்வேதத்தில் இருபது இடங்களில் கந்தருவ என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று இடங்களில் மாத்திரமே பன்மைப் பிரயோகம் உள்ளது. ஏனைய இடங்களிலெல்லாம் இச்சொல் ஒருமையிலேயே வருகின்றது. அதர்வ வேதத்தில் முப்பத்திரண்டு இடங்களில் இச்சொல் வழங்கப்பட்டுள்ளது; இவற்றுள் பதினாறு இடங்கள் பன்மை.

பாரசீகரது அவெஸ்தாவில் சில இடங்களில் 'கந்தரவ' என்று ஒரு பூதத்தின் பெயர் வந்துள்ளது. இவ்விடங்களிலும் ஒருமையாகவே உள்ளது. இவற்றையெல்லாம் நோக்கினால் பூர்வத்தில் ஒருவனாகக் கொள்ளப்பட்ட நிலைமையிலிருந்து ஒரு கணம் அல்லது ஓர் இனமாக இக்கொள்கை வரவர விருத்தியடைந்துள்ளமை தெளியலாம். பிற்பட்டெழுந்த ஸம்ஹிதைகளிலே தேவர்கள், பிதிரர்கள், அசுரர்கள் என்பவர்களையெடுத்து ஒரு தனி இனத்தவராகக் கந்தருவர்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வினத்தில் இருபத்தேழு பேர் அடங்கியுள்ளனர் என்று சில எஜுர்பகுதிகள் தெரிவிக்கின்றன. 'ஆறாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று பேர்கள் உள்ளனர்' என்று அதர்வவேதம் தெரிவிக்கின்றது. அப்பகுதி வருமாறு: 'பிதுர்க்களும் தேவஜனங்களும் தனித்தனியாய் எல்லாத் தேவர்களும் பிரமசாரியை அனுசரித்துச் சூழுகிறார்கள். ஆறாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று கந்தருவர்களும் தேவர்களும் அவனை அனுசரித்துச் சென்றுள்ளனர். அவன் எல்லாத் தேவர்களையும் தவத்தால் பூரணஞ் செய்கிறான் (XI, 5, 2).' கந்தருவர் என்பது இந்தியர்களும் ஐரேனியர்களும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் தோன்றிய கருத்து. ஆதலால், அதன் உண்மையியல்பு அறியக்கூடாதபடி இருளில் புதைந்து கிடக்கிறது. அன்றியும், 'ரிக்வேதத்திலிருந்து கிடைக்கும் சான்று மிக அற்பமாக இருத்தலாலும் இக்கருத்தின் ஆதியியல்பு உறுதியாய் அறிந்து கொள்ள முடியவில்லை. இரண்டு முதல் ஏழாம் மண்டலம் இறுதியாகவுள்ள ரிக்வேதப் பகுதியில் இப்பெயர் ஓரிடத்தில்தான் காணப்படு

கிறது. எட்டாம் மண்டலத்தில் இரண்டிடங்களில் வந்துள்ளது; ஆனால், இந்திரனுக்குப் பகையானவன் என்ற கருத்தில் வருகிறது. ஒருசிலவிடங்களில் இச்சொல் இனத்தைக் குறிக்கும் பொதுப் பெயராக அமைந்துள்ளது. ஏகதேசமாக விசுவாவசு (எல்லாப் பொருளும் உடைய) என்ற அடைமொழியோடு இது வழங்கியுள்ளது. உதாரணமாக, அதர்வ வேதத்தில் 'மேகமயமே! ஒளித்திரளே! நட்சத்திரியமே! விசுவாவசுவான கந்தருவனை நாடுந் தேவர்களே உங்களை நான் போற்றுகிறேன்' (II 2,4) என வந்துள்ளது. இவ் அடைமொழி ஓரிடத்தே தனித்து நின்று கந்தருவனைக் குறிக்கிறது. பிற்பட்டெழுந்த ஸம்ஹிதைகளிலும் பிராஹ்மணங்களிலும், இலக்கியங்களிலும் கந்தருவர்களில் ஒருவனுக்குரிய பெயராக இது வழங்கப்படுகிறது. தமிழ் நூல்களுள் கடைச்சங்க இலக்கியமாகிய புறநானூற்றுக் காப்புச் செய்யுளில்,

'பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'

என வந்துள்ளது. இதன் உரை பதினெண்கணங்கள் இவையென விளக்கி அவற்றுள் ஒன்றாகக் கந்தருவ கணத்தையும் சேர்த்துக் கூறும். ஆனால் இக்கணத்தில் உட்பட்ட கந்தருவர்கள் எத்தனைபேர் என்பதை இவ்வுரை விளக்கவில்லை. திவாகரமும் இப்பதினெட்டுக் கணங்களைப் பன்னிரண்டாவது தொகுதியில் விளக்குகிறது. இவ்விளக்கத்துள் சாரணர், போக பூமியர் முதலிய கணங்கள் சில ஜைன சமயத்துக்குரியவை எனத் தோன்றுகிறது.

ரிக் வேதத்தின்படி வாயு மண்டலத்தின் உச்சியில் கந்தருவன் உள்ளான்; அவனே திசைகளை அளப்பவன் (X,139,5), அளத்தற்கரிய வாயுமண்டலத்தில் அவன் காணப்படுகிறான் (VIII,66,5). அவன் தெய்வப் பிறப்பினன்; வானமண்டலத்தின் மேல் நேராக நிற்கிறான் (X, 123,7); அவன் அப்ஸரஸ்களால் மகிழ்ந்து நோக்கப்படும் காதலனாயுள்ளான் (X,123,5). இனி அதர்வவேதத்தின்படி, அவன் வானுலகத்து உள்ளான் (II, 2,1); வானின் ஒளி வகைகளோடு கந்தருவன் சேர்த்துக் கூறப்படுகிறான். சூரியனோடும், சூரியபக்ஷியோடும், சூரியன் குதிரையோடும், சூரியனுக்கும் சமமான ஸோமரஸத்தோடும், பொன்னிறப் பறவையோடும், வருணனது தூதனோடும், அவன் இணைக்கப்படுகிறான். அன்றியும் இருபத்தேழு நட்சத்திரங்களோடும், முக்கியமாக ரோஹிணியோடும், கூட்டியுரைக்கப்படுகிறான் (XIII,1,23), நற்பேறு பெற்றார் கந்தருவர்களோடு வசிக்கிறார்கள்; (IV 34,3,).

இவன் சோமமூலிகையோடு இயைபுடையவன் என்பது ரிக்வேதம் 9-வது மண்டலத்தால் விளங்கும். சோமமுள்ள இடத்தை இவன் காவல் புரிந்து தேவஜாதியாரை ரக்ஷிக்கிறான் (ரிக்IX, 83,4). இது பெருகி வளரும் வண்ணத்தை நோக்கி வானமண்டலத்தில் இவன் நின்றுகொண்டிருக்கிறான்; (IX,85,12). பர்ஜன்யன், சூர்யபுத்திரி என்னும் இவர்களோடு கந்தருவர்களும் ஸோமத்தை வளர்த்து வருகிறார்கள்; (ரிக்IX,113,3). கந்தருவன் வாயின்வழியாகத் தேவர்கள் தங்கள் சோமபானத்தைப் பருகுகிறார்கள். (அதர்வ VII,77,3) கந்தருவர்கள் தேவர்களுக்காகச் சோமத்தை வைத்திருந்தார்கள். ஆனால் அதனைக் களவாட விட்டுவிட்டமையால் அவர்களுக்குத் தண்டமாக ஸோமபானம் விலக்கப்பட்டது. ஸோம மூலிகையோடு இவ்வகைத் தொடர்பு இருத்தலினால் பொதுவாக மூலிகைகளின் இயல்புகளை அறிந்தவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள் (IV,4,11). யாரும் தொடவிடாதபடி ஸோமத்தைக் கந்தருவன் காத்து வந்தமையால் இந்திரன் இவன் மீது பகைகொள்ள நேரிட்டது. சில தேவர்கள் இவனை வெல்லும்படியாக இந்திரனைப் பிரார்த்திக்கிறார்கள். 'பருந்து வடிவில் வந்த கந்தர்வ விசுவாவசுவின் கைக்ககப்படாது தவிர்ந்துகொள்' என ஸோமம் பிரார்த்திக்கப்படுகிறது. எனினும் கந்தர்வர்களிடையில் வாழ்ந்ததாகவும், கந்தருவ விசுவாசுவினால் களவாடப்பட்டதாகவும் ஸோமம் குறிப்பிடப்படுகிறது. பெண்கள் மீது கந்தருவர்களுக்கு இச்சை மிகுதியாக. உண்டானபடியால், வாக்குத் தேவதையை அனுப்பி, அவள் மூலம் தேவர்கள் ஸோமத்தைப் பெற்றுக் கொண்டதாக ஐத்ரேயப் பிராம்மணம் முதலியன தெரிவிக்கின்றன. ஸோமத்தைக் களவாடிச் சென்ற க்ருஸர்நு (ரிக் IV, 27,3) ஒரு கந்தருவன் என்று கருத இடமுண்டு.

ஒருசில விடங்களில் கந்தருவன் நீரில் வாழ்பவனாகக் குறிக்கப்படுகிறான். நீர்வாழ் கந்தருவனும் நீரர மகள் ஒருத்தியும் யம, யமி என்பவர்களின் பெற்றோர்களாக ரிக்வேதத்தில் (X, 10,4) சொல்லப்பட்டுள்ளார்கள். நீரிலே பெய்த ஸோமரஸம் நீர்வாழ் கந்தருவன் எனச் சொல்லப்பட்டுள்ளது (IX,86,36). விப்ஸரஸுகளோடு சேர்த்துக் கூறப்பெறும் கந்தருவன் நீரில் வாழ்பவன் (அதர்-II,2,3)

கந்தருவனும் நீரர மகளுங் கூடுங்கலவி திருமணத்திற்கு லக்ஷ்யமாகவுள்ளது. ஆதலால் கந்தருவன் திருமணச் சடங்குகளோடு தொடர்புடையவனாகக் கருதப்படுகிறான்.

மணமாகாத கன்னிப் பெண் கந்தருவனுக்கும், ஸோமனுக்கும், அக்னிக்கும் உரியவள் என்பது வடநூல் மரபு. கணவனது எதிராளியாகக் கந்தருவ விசுவாவசு கருதப்படுகிறான். பிற்காலத்து நூல்களிலே கந்தருவர்கள் பெண்களைக் காதல் செய்யும் ஒழுக்கம் பல இடங்களில் வந்துள்ளது. உதாரணமாக ஆதி காவியமாகிய ராமாயணத்தில் (I, 172,19) இவர்கள் ஒழுக்கத்தைக் கருத்துட்கொண்டு ஐந்தாவது வகையாய் நிகழும் காதல் மணம் கந்தருவ மணம் என்று அழைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திக்குரிய தெய்வங்களாக கந்தருவர்களும் அப்ஸரஸ்களும் போற்றப்படுகிறார்கள். மகப்பேறு வேண்டுவோர் இவர்களை வணங்குகிறார்கள்.

கந்தருவர்கள் தெய்வலோகத்து இசைவாணர்கள் என்ற கருத்து பாரதத்திலும் அதற்குப் பிற்பட்டெழுந்த நூல்களிலும் மட்டுமே காணப்படுகின்றது.

சித்திரசேனன் என்ற கந்தருவ அரசன் வீணை முதலிய கருவிகள் மூலமாயும், சாரீர மூலமாயும் அர்ஜுனனுக்கு அமராபதியில் சங்கீதம் கற்றுக் கொடுத்ததாக மகாபாரதம்கூறும். விசுவாவசுவும் நாரதரும் நகுலனது அரண்மனையில் சங்கீதம் பயிற்றுவோராக இருந்தனர் என்பதும் பாரதம் கூறும் செய்தியே. நாரதர் முதலில் கந்தருவர் எனக் கருதப்பட்டுப் பின்னர் ரிஷிகணத்துள் கொள்ளப்பட்டனர். கந்தருவம் என்ற சொல்லுக்கே சங்கீதம் என்பது பொருளாய் முடிந்தது. கந்தருவவேதம் என்பது ராமாயணத்தில் (III, 91,15) இசை நூலுக்குப் பெயராக வந்துள்ளது. ரிக்வேதம் முதலியவற்றில் இவர்கள் இசை வல்லவர் என்ற குறிப்புப் போல்வன காணப்படவில்லை.

கந்தருவர்களுடைய தோற்றத்தைக் குறித்து ஒரு சில குறிப்புக்களே நூல்களில் காணப்படுகின்றன. ஓரிடத்து வாயுவைப் போன்ற தலைமுடியை உடையவர்கள் என்றும் (ரிக் III,38,6), ஒளிபொருந்திய ஆயுதங்களையுடையவன் கந்தருவன் என்றும் (ரிக் X,123,7) ரிக்வேதம் கூறும். அதர்வ வேதத்தில் சடைபற்றிய தலைமுடி யுடையவர்கள் என்றும், பாதி விலங்கு வடிவமுள்ளவர்கள் என்றும், மக்களுக்குத் தீங்கை விளைவிப்பவர்கள் என்றும் கூறப்படுகிறார்கள். அழகுள்ள வடிவுள்ளவர்கள் என்று சதபத பிராமணம் கூறும். நறுமணமுள்ள ஆடையை அணிந்தவர்கள் என்று ரிக் வேதமும் (X,123,7) பூமியின் நறுமணங் கொண்ட சரீரமுடையவர்கள் என்று அதர்வவேதமும்

(XII, 1, 23) கூறுகின்றன. இதனால் நறுமணம் என்று பொருள் படும் கந்த என்ற சொல்லின் அடியாக இவர்கள் பெயர் பிறந்திருக்கலாம் என்று ஊகித்தல் கூடும்.

இதுவரையும் வடநூல்களில் காணப்படும் விஷயங் களை நோக்கினோம். தமிழ் நூல்களில் காணப்படுவன ஒரு. சில உள்ளன. தமிழாசிரியர்களாலும் 'கந்தருவ விவாகம்' கூறப்பட்டுள்ளமை மேலே கூறினோம். கந்தரு வர்கள் பதினெண் கணத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் புறநானூற்றால் அறிந்தோம். இவர்கள் இசையில் வல்ல வர்கள் என்பது ஆசிரியர் தொல்காப்பியரால்[1] குறிக்கப் பட்டுள்ளது. 'துறையமை நல்யாழ்த்துணைமையோர்' (களவியல், 1) என்று அவர் கூறியது இதற்குச் சான்று. கந்தருவ வேதம் என்று வடநூலார் குறிப்பது போலவே தொல்காப்பியரும் இசைநூலை 'மறை' என்று குறிப்பர். 'நரம்பின் மறைய என்மனார் புலவர்' என்று அவர் கூறியது இங்கே தக்க சான்றாவது. இக் குறிப்புக்கள் தமிழி லக்கிய வரலாற்றை உணர்வதற்கு பயன்படவல்லன.

---

1. தொல்காப்பியர் கந்தருவர்களை இசைவாணராகக் குறிப்பிடுதலினாலும் கந்தருவவேதத்தை 'நரம்பின் மறை' (நூன்மரபு, 33) என்று வேதத்திற்குரிய சொல்லாற் கூறு தலினாலும் அவரது காலம் வியாச பாரதமும் வால்மீகி ராமாயணமும் தோன்றிய சாலத்திற்குப் பிற்பட்டதாக லாம் என்று ஊகிக்க இடமுண்டு. பாரதம் கி.மு. 400-க்கும் கி.பி. 400-க்கும் இடைப்பட்ட காலத்தில் வளர்ந்து முற்றி யிருக்க வேண்டுமெனவும் வடநூலாராய்ச்சியாளர் கூறுகின் றனர். (Winternitz: History of Indian Literature Vol. I P.465) இவ்விரண்டு காலத்திற்கும் நடுப்பகுதியாகிய கி.பி. முதல் நூற்றாண்டில் பாரதம் பெரும்பான்மையும் முற்றியிருக்க லாம். ராமாயணம் வளர்ந்து முற்றிய காலம் கி.பி. 2-ம் நூற்றாண்டாகக் கொள்ளலாம் என்பர் (Ibid.P.516) அங் ஙனமாயின் தொல்காப்பியர் காலம் கி.பி. 2-ம் நூற்றாண் டிற்கு முற்பட்டதன்று என ஒருவாறு துணியலாம்.

9. பஞ்சம்

பஞ்சம் என்ற சொல் இப்போது பெருவழக்காகவுள்ளது. இப்பொருளில் வேறொரு சொல் இக்காலத்துத் தமிழில் காட்டுதல் ஏலாது. வற்கடம், சிறுவிலைக்காலம், வறட் காலம், வறங்கூர்தல் என்பன முற்காலத்து வழங்கின. அவை இப்போது வழக்கொழிந்தன. 'அருவிலைக் காலம்' என்ற ஒரு தொடரும், 'கருப்பு' என்ற ஒரு சொல்லும் இப்போது அருகி வழங்குகின்றன. பெருவழக்காக வுள்ள 'பஞ்சம்' சங்க இலக்கியங்களிற் பிற்பட்டனவற்றிற் கூடக் காணப்படவில்லை. அப்பர் தேவாரத்தில்,

கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னெடுஞ் சூளுறும் அஞ்சல் நெஞ்சே இமையாத முக்கண்
பொன்னெடுங் குன்ற மொன் றுண்டு கண்டீர்இப் புகலிடத்தே
(IV, 113, 10)

என ஓரிடத்தில் வருகின்றது. இதனால் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இச்சொல் உலக வழக்கினின்று நூல்களில் அருகி ஏறலாயிற்று என்று கொள்ளலாம். இச்சொல் மலையாளத்திலும் காணப்படுகிறது. ஆனால், தமிழிலிருந்தே அது கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிற திராவிட மொழிகளுள் கன்னடத்தில் 'பஞ்ஜெ' என்ற பதம் உள்ளது; இதன் பொருள் 'மலடி' என்பது. இக்கன்னடச் சொல்லோடு தமிழ்ச் சொல் தொடர்புடையது என்று கருத இடமுண்டு. பூமியை நிலமகள் என்னும் வழக்கு மிக்க தொன்மை வாய்ந்தது. 'நிலமகள் அழுத் காஞ்சியும்' என்பது புறப்பாட்டு (365). திருவள்ளுவரும்,

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் (1040)

என்றனர். பூமி வறங்கூர்ந்ததை, 'நிலமகள் மலடுபட்டாள்' என்று வழங்கியது மிகப் பொருத்தமாயுள்ளது. இங்ஙனம் மலடுபட்ட தன்மையைப் பஞ்சம் என நமது முன்னோர்கள் வழங்கினர். 'பஞ்ஜெதநெ' என்ற கன்னடச் சொல், வறுமை என்று பொருள்படும். மக்களுள் பெண்பாலார்க்குரிய சொல் இருபாலார்க்கும், இயைபுள்ள வறுமைப்

பொருள் பெற்று, பின் இடம் வறங்கூர்ந்த தன்மையை உணர்த்துவதாயிற்று. இது தமிழ் மக்களது மனோபாவனையின் உயர்வை நன்கு காட்டுகின்றது. கன்னடச் சொல்லை 'வந்த்யா' என்ற வடசொல்லோடு தொடர்பு படுப்பர் கிட்டல் ஆசிரியர் (Rev. F. Kittel). 'ஸந்த்யா' என்ற வடசொல் 'ஸஞ்ஜெ' எனக் கன்னடத்திலும், 'விந்த்யா' என்ற வடசொல் 'விஞ்சை' எனத் தமிழிலும் வருதல் போல 'வந்த்யா' என்பது கன்னடத்தில் 'பஞ்ஜெ' என வந்துள்ளது.

10. சாதுகை மாந்தர்

கம்பநாடரது இராமாயணத்திலே அயோத்தியா காண்டத்திற் கைகேசி சூழ்வினைப்படலத்தில் 66-வது செய்யுளிற் பயின்றுவரும் 'சாதுகை மாந்தர்' என்ற தொடரின் பொருளைக் குறித்து, ஒன்றோடொன்று இயைபில்லாத மூன்று அபிப்ராயங்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

(1) 'சாதுகை' யென்பது 'சாதகை' என்றிருத்தல் வேண்டும். பொருள்: 'சாவக்கடவ'; (அஃதாவது), 'மூப்பான் முதிர்ந்து தளர்வெய்தி எழுந்து விழுந்து புரண்டு உருண்டு வருந்தும்' மாந்தர் (டி.என். அப்பனையங்காரவர்கள்.)

(2) 'சாதகை' யென்பதுதான் பாடமாதல் வேண்டும்; அது 'ஸாகேதம்' என்றதன் மரூஉ. பொருள்: அயோத்தியா நகரத்தின் பெயர். அந்நகரிலுள்ள மாந்தர் குறிக்கப்படுகின்றார்கள் (இராமையங்காரவர்கள்)

(3) 'சாதுகை' யென்பது 'ஸாதுக:' என்றதன் திரிபு. ககரம் ஸ்வார்த்திகப் பிரத்யமாக வந்தது. பொருள்: 'சற்குணம்', 'சாந்தம்' (கே. ஜி. சேஷையரவர்கள்).

இம்மூன்று பொருள்களுள் எது அங்கீகாரம் பெறுதற் குரியதென நிச்சயிக்க முயலுவோம்.

முதலாவதாக, அப்பனையங்காரவர்கள் கூறும் பொருளை யெடுத்துக் கொள்வோம். இப் பொருள் சிறப் பின்மையோ டொழியாது கவியின்பத்தினையும் அறவே கெடுத்துவிடுகின்றது. இவ்வாறாதல் இராமையங்காரவர்களால் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது. அன்றியும், அச்சுப் புஸ்தகத்திலும், ஏட்டுப் பிரதிகளிலும் உளதாய பாடத்தினின்று இப்பொருள் பெறப்படுவதன்றாம். 'சாதுகை' யென்ற பாடத்தினைச் 'சாதகை' யென்று ஆதாரமில்லாது திருத்தியமைத்துப் பொருள் காணுதல் சிறிதும் ஏற்புடையதாகாது. தாம் கைக்கொண்ட பாடம் ஏட்டுப் பிரதிகளில் உள்ளதாகக் காட்டப்படவில்லை. முற்படக் கருதிக்கொண்ட

பொருளுக்கேற்பத் திருந்திய பாடமொன்று கற்பித்துக் கொள்ளப்பட்டமை வெளிப்படை. 'கடைசியாய், 'சாதுகை மாந்தர்' என்ற தொடர் கைகேசி சூழ்வினைப் படலத்தில் மாத்திரமேயன்றி யுத்தகாண்டத்தில் மீட்சிப்படலத்தின் கண்ணும் காணப்படுகின்றது. ஐயங்காரவர்களது பொருள் இவ்விரண்டாவது பிரயோகத்திற்குச் சிறிதும் பொருந்துமா றில்லை. இது பின்னர்த் தெளியப்படும்.

இரண்டாவதாக, ரெ. இராமையங்காரவர்கள் எழுதி வெளியிட்ட பொருளை நோக்குவோம். இது மேலைப் பொருள் போன்று கவியின் பத்தினைக் கெடுத்து விடுவதன்று. எனினும், 'சாதகை' யென்று ஆதாரமில்லாது மாற்றிக் கொண்ட பாடத்தினின்றும் இப்பொருள் பிறந்த தாகலின், முற்கூறிய ஆக்ஷேபங்களெல்லாம் ஈண்டும் வலியு டையனவேயாகும். அன்றியும், 'அயோத்தியாபுரியிலுள்ள மாந்தர்' எனக் கூறினாலன்றிப் பொருள் சிறவாதெனக் கொண்டு, 'சாதுகை' யென்பது ஸாகேதம் என்பதன் மரூஉ வாதல் வேண்டுமென்று துணிகின்றார்கள். ஆனால் செய்யு ளின் கண்ணேயே 'அவ்வூர்ச் சாதுகை மாந்தரெல்லாம்' என வருகின்றது. இங்கே 'அவ்வூர்' என்பது அயோத்தியை யன்றிப் பிறிதொன்றினையும் குறிக்கமாட்டாது. 'அவ் வூர்' என வந்ததன்மேலும் நகரத்தின் பெயர் வந்ததெனல் சிறிதும் பொருந்துவதன்று. இராமையங்காரவர்கள் 'அவ்வூர்' எனச் செய்யுளில் வந்திருப்பதனைக் கவனித்தார்களில்லை யென்று எண்ணுகிறேன். 'சாதகை' என்பது 'ஸாகேதம்' என்ற சொல்லின் மரூஉவாகலாம் என்று கொள்ளுவதிலும் பெரியதோர் ஐயப்பாடு நிகழ்கின்றது. கடைசியாய் மீட்சிப் படலத்திற்காணும் பிரயோகத்திற்கு இப்பொருள் ஒருவகை யானும் அமைவுடையதாகாது.

இங்ஙனமாக, டி.என். அப்பனையங்காரவர்களும் இராமையங்காரவர்களும் கூறிய பொருள்கள் பல வகையானும் ஏற்புடையனவாகாமை தெளிவாம். இனி எஞ்சி நிற்பது கே. ஸ்ரீ. சேஷையரவர்கள் தந்துள்ள பொருளொன்றே. அப்பொருள் பொருந்துவதாகுமாவென ஆராய்தற்கு முன்பு, மீட்சிப்படலப் பிரயோகத்தினை நன்கு நோக்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு சொல்லின் பொருள் இன்னதெனத் துணிதற்கு, அச்சொல் பிரயோகிக்கப்படு மிடங்களையெல்லாம் ஒருங்குவைத் தாராய்தல் பெரிதும் பயனுடையதாகும். பிரயோகம் வருமாறு:

**'ஆதலா னரக்கர் கோவே யடுப்பதன் றுனக்கு மின்னே
சாதுகை மாந்தர் தம்மைத் தடுப்பதென் றருளிச் செங்கண்
வேதநா யகன்றா னிற்ப வெய்துயிர்த் தலக்க ணெய்திக்
கோதிலா மனனு மெய்யுங் குலைந்தனன் குணங்கடுயோன்'.**

(மீட்சி. 54)

இச்செய்யுள் விபீஷணனை நோக்கி இராமபிரான் கூறுவதாகவுள்ளது. இராவண வதம் முடிந்ததும் வீபீஷணனது பட்டாபிஷேகம் நிகழ்கின்றது. பின்னர் சீதாதேவியைத் தம்மிடம் அழைத்து வரும்படி இராமபிரான் கட்டளையிடுகின்றார். கட்டளையின்படியே சீதையென்னும்கற்புக்கரசியை ஸ்நானம் செய்வித்து ஆபரணாதிகள் அணிவித்துச் சிவிகையிலேற்றிக் கொண்டு செல்லுகின்றனர். அப்பொழுது காணுதற்கு வந்த தேவர்கள், தேவமாதர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள், வித்தியாதரஸ்திரீகள் முதலானோர் (மீட்சி-49) கும்பலாய்த் திரண்டு நெருங்க, சிவிகை முன் பின் செல்லமாட்டாது தடைபடுகின்றது. சீதையைப் பாதுகாத்து உடன்சென்ற அரக்கர்கள் அவர்களை யகன்று போம்படி வெருட்டுகிறார்கள், இங்ஙனம் நேர்ந்த குழப்பத்தால் கருங்கடல் முழங்கியதுபோல் ஒலியெழுகின்றது; இராமபிரான் ஒலியின் காரணத்தை முனிவர்பால் வினவியறிந்துகொண்டு தம் கருத்தை இச்செய்யுளால் வெளியிடுகின்றார். விருப்ப மிகுதியாற் காணவந்தோரை வெருட்டியோட்டிவிடுதல் தக்கதன்றென விபீஷணனுக்கு அருளிச் செய்யப்படுகின்றது. குணங்களால் தூயோனாகிய விபீஷணனும் தான் செய்த அபசாரத்திற்கு மனம் வருந்திக் குலைவுறுகின்றான்: இதுவே செய்யுளின் கருத்து.

இங்கே தேவர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள், முதலாயினோர் 'சாதுகை மாந்தர்' எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் சாதற்குரிய பருதவத்தினராயிருந்தார்களென்றேனும், அல்லது அயோத்தியா நகரிலுள்ளவர்களென்றேனும் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாமையெளிதின் அறியலாம். இடம், பருவம், வர்க்கம், ஆச்ரமம், லிங்கம், என்பனவற்றுள் யாதானுமொன்றினைச் 'சாதுகை' யென்ற சொல் குறிப்பதுமன்று. ஏனெனின், இவ்வனைத்திற்கும் பொதுவாகவே பிரயோகம் உள்ளது. கைகேசி சூழ்வினைப்படலத்துச் செய்யுளில் தசரத மன்னரோடொத்த மாண்புடைப் பெருமக்கள் உணர்த்தப்படுகின்றனர். ஆகவே, தேவர்கள், முனிவர்கள், ரிஷிபத்தினிகள், மாண்புடைப் பெருமக்கள், என்று

இவ்வனைவர்க்கும் பொதுப் படவுள்ளதொரு குணவிசேஷத்தையே 'சாதுகை' யென்னும் அடைமொழி குறிப்பதாகல் வேண்டும். குணங்களால் தூயராந் தன்மையை நாம் வியவகரிக்குஞ் சொல் உணர்த்துமென்று கொள்ளுதல் மிகப் பொருத்தமானதேயாகும். இப்பொருளொன்றே கொள்ளத்தக்கது.

இதுவே பொருளென்பது வேறொரு வகையானும் தெளியக்கிடக்கின்றது. ஏட்டுப் பிரதிகளிற் பாடபேதங்கள் மலிந்து காணப்படுதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுளொன்று அரிதுணர்சொற்களும் கருகற் சொற்களும் வந்தவிடங்களில் எளிய சொற்களை ஏடெழுதுவோர் பெய்துவிடுதலாம். ஏட்டுப் பிரதிகளை யொப்பு நோக்குவதிற் பழக்கமுடையார்க்கு மேலதன் உண்மை எளிதின் அறியலாகும். இவ்வகையான் நோக்கினால் ஒரு பாடத்தின் பொருளை ஆண்டைக்குரிய பிறிதொரு பாடபேதம் ஒரோர் விடங்களில் விளக்கவல்லதாயிருக்கும். என்னிடமுள்ள இரண்டு இராமாயண ஏட்டுப்பிரதிகளில் ஒன்றின்கண்ணே 'சாதுதை மாந்தரெல்லாம்' எனப் பாடங் காணப்படுகின்றது. 'சாதுதை' என்பது 'ஸாதுதா' என்னும் வடமொழிப் பண்புப் பெயர்ச்சொல்லின் 'ஆ' ஈறு 'ஐ' யாகத் திரிந்த தற்பவமென்பது வெளிப்படை. இச் சொல்லின் பொருள் அகந்தூய்மை. ஆகவே 'சாதுதை' யென்ற பாடபேதம் 'சாதுகை' யென்ற பாடத்தின் பொருளை விளக்குவதோடு அச்சொல்லின் உற்பவத்தையும் தெரிக்கின்றது. இதற்கேற்ப சேஷையரவர்களும் 'ஸாது' என்றதன் அடியாகப் பிறந்ததெனக் கூறியுள்ளார்கள்.

ஆனால் 'ஸாதுக' என்பது வடமொழி ரூபமென்றும், ககாரம் ஸ்வார்த்தத்தில் வந்த பிரத்தியயமென்றும் ஐயரவர்கள் கருதுகின்றார்கள். 'ஸாது' என்பது ஸ்வார்த்திகப் பிரத்தியயம்பெற்று 'ஸாதுக:' என்ற ரூபத்தோடு வடமொழி நூல்களிற் பயின்றுவந்திருப்பதாகத் தெரியவில்லை. 'ஸாதுக:' என்பது தமிழில் 'சாதுகை'யென வரமாட்டாது. இவ்விரு காரணங்களாலும் ஐயரவர்கள் தந்துள்ள சொல் வரலாற்றினை அங்கீகரித்தற்கண் மலைவுண்டாகிறது. ஆகவே 'சாதுதை' என்னும் பாடத்தினைக் கைக்கொள்ளுதலே நேரிதாமெனத் தோன்றுகிறது.

வேறொருமுறையாற் சொல்வரலாறு கூறுதலும் அமைவுடைத்தாகும் 'ஸாதுதா' என்பதனோடு பெரிதும்

பொருளொற்றுமையுடைய 'ஸாத்விக' என்ற சொல் 'சாதுகை' யெனத் தமிழில் மருவி வந்ததெனக் கொள்ளுதலும் தகும். சேஷையரவர்களது முடிபில் 'ஸாதுக:' என்றொரு ரூபம் வடமொழியில் உளதோவெனச் சந்தேகித்தற்கிடமுண்டு. இதுபோன்ற சந்தேகம் இவ் இரண்டாவது சொல்வரலாற்றிற் சிறிதும் இல்லை.

ஆகவே 'சாதுகை' யென்பதனாற் கம்பநாடர் கருதிய பொருள் ஐயப்பாட்டிற் கிடனின்றி விளங்குகிறது. 'குணங்களால் தூயராந்தன்மை' யென்பதே அதன் பொருள். அச்சொல்லின் வரலாற்றினை நோக்குமிடத்து இருவேறு முடிபுகள் வரல்கூடும். 'சாதுகை' யென்பதே சுத்தமான பாடமாயிருப்பின், அப்பொழுது அதனை 'ஸாத்விக' என்றதன் மரூஉவாகக் கொள்ளல் வேண்டும். 'சாதுதை' யென்பது சுத்த பாடமாயின் அப்பொழுது அது 'ஸாதுதா' என்பதன் தற்பவமாதல் கூறாமலே அமையும்.

நிகண்டுகள்

நான்காம் பகுதி

1. அரும்பொருள் விளக்க நிகண்டு

முற்காலத்தே தமிழ் கற்கப்புகுந்தோர் இலக்கணம், நிகண்டு என்ற இருவகைக் கருவி நூல்களைக் கையாண்டு வந்தனர்.

கருவி நூல்கள்; நிகண்டு

நிகண்டுகளில் ஒரு சில ஒவ்வொரு பொருளுக்கு முரிய பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையே கூறிச் செல்வன. அவை ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி எனப்படும். வேறுசில ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பல பொருள்களையும் விரித்துச் சொல்லுவன. அவை ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி எனப் பெயர் பெறும். இன்னும் சில 'இருசுடர்' 'முக்குணம்' என்பனபோன்ற தொகைப் பெயர்கள் இன்னின்ன பொருள்களை யுணர்த்துகின்றன வென்று முறையே விளக்குவன. அவை பல் பொருட்கூட்டத் தொரு பெயர்த் தொகுதியெனப் பெயர்பெறும். இவற்றுள், ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதிக்கு மண்டலபுருடரி யற்றிய சூடாமணி நிகண்டின் 11-ம் தொகுதி சிறந்த தொரு எடுத்துக்காட்டாக உள்ளது. இத் தொகுதியை முன் மாதிரியாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்களுள் ஒன்று அரும்பொருள் விளக்க நிகண்டு.

இத்தொகுதியின் வரலாற்றில் கால-அடைவில் நிகழ்ந்த வேறுபாடுகள் நன்கு ஆராய்ந்துணர்தற்குரியன. தொல்காப்பியப் பெருநூலின் கண்ணேயே இதற்குரிய தோற்றுவாய் இனிது புலப்படுகின்றது. அந்நூலிலே, சொல்லதிகாரத்தில், உரிச் சொல்லியற் சூத்திரங்களிற் சிலவற்றையும் அவை அமைந்துள்ள முறையையும் நோக்கினால் யான் கூறியதன் உண்மை வெளிப்படும். ஓர் உதாரணங் காட்டுகின்றேன்:

செழுமை வளனும் கொழுப்பு மாகும்.
விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.

இவ்வடிகளில், 'செழுமை' 'விழுமம்' என்ற இரண்டு சொற்களுக்குமுரிய பல பொருள்களும் உணர்த்தப்படுகின்றன. அவ்வாறு உணர்த்துதலோ டமையாது எதுகை நயத்தால் இவ்வடிகள் இன்புறுத்துகின்றமையும் நாம் மனங்கொளற்

குரியது. இவைபோன்ற உரிச்சொல் லடிகளின் பொருளமைதியும் எதுகை நயங்களுமே வரவரப் பலவாறாக, விருத்தியடைந்து நிகண்டு நூல்களில் தனியே விளங்குவனவாயின. தொல்காப்பியத்திற்குப் பின்னரே தமிழில் நிகண்டு நூல்கள் தோன்றினவாகும்.

திவாகரம்

அவ்வாறு தோன்றியவற்றுள் திவாகரம், பிங்கலம் என்ற அரிய நிகண்டுகள் இரண்டும் மிக முற்பட்டனவாம். திவாகரத்தில் ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதியாகிய பதினோராந்தொகுதியொன்றே ஈண்டு ஆராய்தற்குரிய இயையுடையது. இத்தொகுதியைப் பதிப்பித்துள்ளோர், திவாகரர் அமைத்துவைத்த முறைப்படி சூத்திரங்களை அமைக்காது 'ஆதியிற்பொருள்' 'அந்தத்துப்பொருள்' என்று இருகூறுபடுத்து, ஒவ்வொன்றன் கண்ணும் உள்ள சூத்திரங்களை அகராதிக் கிரமத்தில் அமைத்து வெளியிட்டனர். பொருளை விளக்குதற்கு எடுத்துக் கொண்ட சொல் சூத்திரத்தின் ஆதியில் வருமாயின், அஃது ஆதியிற் பொருள். உதாரணமாக, 'அங்கதந் தோளணி அரவுமாகும்' என்ற சூத்திரத்தைக் காண்க. அச்சொல் சூத்திரத்தின் இறுதியில் வருமாயின், அஃது அந்தத்துப் பொருள். உதாரணமாக 'கடலு நிலனுஞ் சேறும் அளக்கர்' என்ற சூத்திரத்தினை காண்க. இம்முறை பதிப்பித்தோர் தாமாகவே வகுத்துக் கொண்டதென எண்ணுதற்கும் இடமில்லை. ஏனெனின், கொல்லம் 877-ல், அதாவது கி.பி. 1702-ல் எழுதப்பெற்ற ஏட்டுப் பிரதியில் இம்முறையே காணப்படுகின்றது. அதற்கு எவ்வளவு காலத்துக்கு முன் இப் புதிய முறை யேற்பட்டதென வரையறுத்துக் கூறற்குரிய சான்றுகள் இல்லை. ஆனால் திவாகரர் அமைத்த முறை இதுவன்றென்பது திண்ணம். இத் தொகுதியை அகராதிபோற் பயன்படச் செய்ய வேண்டுமென்ற கருத்துப் பிறந்த பிற்காலத்தே தான், அகராதி நிகண்டு பிரசாரமெய்திய பின்னரே, இம் முறை தோன்றியிருத்தல் கூடும். இம்முறைதானும் பிரதிகள் தோறும் சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளது. சில ஏட்டுப் பிரதிகளில் இவ் அகராதி முறையின்றி ஆசிரியர் வைத்த முறையென்று நாம் கொள்ளக்கூடிய பிறிதொரு முறை காணப்படுகின்றது. இவ் இரண்டாவது முறையில் வேறுபாடுகளும் பிரதிகளிற் காணப்படுமாறில்லை. அம்முறை அடியிற் காண்க:—

280. ஊறே யிடையூறும் உற்றறி புலனும்.
281. நூறே பொடியும் நூறு மாகும்.
282. ஏணி யுலகும் எல்லையு மாகும்.
283. சேணே யுயர்வும் நீளமு மாகும்.
284. ஆலுதல் ஆடலும் ஒலியு மாகும்.
285. நூலே யெண்ணும் பனுவலு மாகும்.

இவ்வடிகளை நோக்கிய அளவில் இவையும் எதுகை நயம் பெற்று அமைந்துள்ளன என்பதும் பல்பொருட் சொற்களே எதுகைச் சொற்களாய் வந்துள்ளன என்பதும் வெளியாம். இத்தொகுதியிலுள்ள சூத்திரங்கள் பெரும்பாலும் இவ்வாறே இயன்றுள்ளன. தொல்காப்பியவுரிச் சொல்லியலிற் சுருங்கிய அளவிற் காணப்படும் முறை இங்கே விரிந்த அளவிற் காணப்படுவது உணரத்தக்கது.

திவாகரத்தில் மற்றைத் தொகுதிகளெல்லாம் அவ்வத் தொகுதிக்குரிய பொருட் பாகுபாட்டினைப் பின்பற்றியமைந் துள்ளன. 11-ம் தொகுதியில் அவ்வகைப் பாகுபாடு இருத் தற்கிடமில்லை. பல்வேறு பொருள்களையுடைய சொற் களே ஈண்டு ஓதுதற்கு உரியன. இச்சொற்கள் ஞாபகத்தில் அழுந்தித் தங்கக்கூடிய ஒரு முறையில் அவற்றை அமைப்பதே தக்கதாகின்றது. இக்காரணம் பற்றியே எதுகை நயத்தோடு இத் தொகுதியிலுள்ள சூத்திரங்கள் வகுக்கப் பட்டன என ஊகித்தல் கூடும். வேண்டுஞ் சொற்களின் பொருள்களை எ்ளிதில் நோக்கியுணர்ந்து கோடற்கும் இவ் எதுகைநயம் உதவுகின்றமை வெளிப்படை.

பிங்கலந்தை

பிங்கலந்தையிற் பல்பொருளொருசொல்லைக் கூறுவது 10-வது தொகுதியாம். இதனை அச்சியற்றிய சிவன் பிள்ளையவர்கள் பிங்கலர் கொண்ட முறையைக் கைவிட்டு, அகராதிக்கிரமத்திற் சொற்களை நிறுத்தி அவற்றிற்குரிய சூத்திரங்களை முறையே வைத்து வெளியிட்டுள்ளார்கள். எனக்குக் கிடைத்த பிரதிகளில் ஒன்றிலேனும் அகராதி முறை காணப்பெறவில்லை. சூத்திரங்களின் வைப்பு முறையை மாற்றப் பதிப்பாசிரியர்க்கு எவ்வகை ஆதாரம் கிடைத் ததோ அறியக்கூடவில்லை. யாவரும் எளிதில் நோக்கியறி தற்குரிய அகராதிக் கிரமத்திலிருந்தாலன்றி இத்தொகுதி பயன்படுத லரிதென்று கருதிப் பதிப்பாசிரியர் தாமாகவே ஏட்டுப் பிரதிகளிற் காணப்படும் முறையை மாற்றியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. பிங்கலர் வைத்துள்ள

முறையும் உணர்ந்துகோடற்கு எளிதன்று. கொல்லம் 981-ம் ஞு தைமீ 19வ குருவாரத்தன்று எழுதி முற்றியதும், ஆழ்வார் திருநகரித் திருமேனி இரத்தினகவிராயர் வமிச பரம்பரையினரிடமிருந்து எனது நண்பர் பெரியன் ஸ்ரீநிவாச ஐயங்காரவர்களது பேருதவியாற் கிடைத்ததுமாகிய ஏட்டுப் பிரதியிற் கண்ட முறைப்படி முதன் மூன்று சூத்திரங்களைத் தருகின்றேன்.

1. **துங்கம் மலையும் நிலையும் தாணுஞ்**
   சங்கரன் பெயரும் தாணு வாகும்.
2. **இரவியும் எனையாள் ஈசன் பெயரும்**
   ஒருநாண் மீனும் ஒளியுஞ் சோதி.
3. **ஆதி பழைமையும் அரனது நாமமும்**
   முதலுநே ரோட்டமும் மொழியப்படுமே

இங்கே ஒரு நுண்ணிய விஷயம் நன்கு விளங்குகிறது. தாணு, சோதி, ஆதி முதலிய சொற்கள் பிங்கலந்தையிலுள்ள வானவர் தொகுதியில் சிவனுக்குரிய பெயர்களாக ஓதப்பட்டுள்ளன. இவற்றை நோக்கிய அளவில், 10-வது தொகுதிக்குரிய சொற்களைத் தாம் இயற்றியுள்ள முதல் ஒன்பது தொகுதிகளினின்றும் குறித்த ஒருமுறைபற்றித் தெரிந்தெடுத்து நிறுத்து, நிறுத்த முறைகளில் அவற்றின் பொருள்களைச் சூத்திரித்துப் பிங்கலர் இத் தொகுதியை அமைத்துள்ளாராதல் வேண்டும். நாம் இங்கே குறித்துணர வேண்டுவது பிங்கலந்தையில் 10-வது தொகுதிக்கண் உள்ள சூத்திரங்கள் எதுகை நயம் பெற அமைந்துள்ளனவேனும், பொருள் விளக்கப்படவேண்டும் பல்பொருட் சொற்கள் எதுகை நெறியில் அமையவில்லையென்பதேயாம். இதனால், பிங்கலர் முறை பயனுடையதாயில்லை. அவர் முறையைப் பின் பற்றுவோரும் இலராயினர்.

சூடாமணி நிகண்டு

வரன் முறையே நூல் முழுதுங் கற்றுணரவேண்டும் ஆவசியகமின்றி, வேண்டும்போது எளிதிலே நோக்கியுணருதற்குரிய ஒரு கருவியாய் நிகண்டுகளை அமைக்கும் கருத்தே பிற்காலத்திற் பெரிதும் போற்றப்பட்டு வந்தது. 11-ம் தொகுதியாகிய ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதியே இவ்வகையில் அமைவதற்கு மிக்க தகுதியுடையதாயிருந்தது. முதன் முதலில் **சூடாமணி**[1] நிகண்டுடையாரே

---

1. மண்டல புருடர் தமது நூலுக்கு இட்ட பெயர் 'நிகண்டு சூளாமணி' யென்பர் மு. இராகவையங்கார்.

எளிதில் நோக்கியுணருங் கருவியாயும் எளிதில் ஞாபகத்தில் வைக்கத்தகும் கருவியாயும் இத்தொகுதியை யாக்குதற்கு முயன்றவர். அந்நோக்கத்தினை முற்றுவித்தற்கு அவர் கைக்கொண்ட முறை ஊன்றி யுணரத்தக்கது. திவாகரத்தி லிருந்து மேலே காட்டிய சூத்திரங்களை ஒரு முறை நோக்குக. அங்கே 280-வது முதல் 285-வது முடிய 6 சூத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இச் சூத்திரங்கள் ஆறனுள், 3 எதுகைகள் காணப்படுகின்றன. இவ் எதுகைகள் இத் தொகு தியில் வேறு பல இடங்களிலும் மயங்கிக் கிடக்கின்றன. இங்ஙனமே மற்றையெதுகைச் சொற்களும் பல இடத்துஞ் சிதறிக் காணப்படுகின்றன. ஒரே எதுகையிலுள்ள சொற்க ளனைத்தையும் தொகுத்து ஒரே இடத்தில் தரவேண்டியது மிக்க அவசியமாயிற்று. இதனை மண்டல புருடர் தம் கூரிய நுண்மதியா லுணர்ந்து 11-ம் தொகுதி முழுவதையும் ககர எதுகை முதல் னகர எதுகையீறாக் எதுகைமுறையிற் பாகுபாடு செய்தனர். 'நடைபெறு ககர மாதி னகரவீ றெதுகை யாகப், படியிலோர் சொற்பொ ருட்பல் விதத் தொகை பகர லுற்றாம்' என்றனர். இசையோடு கற்கக் கூடியதாயும் அதிகச் சொற்களடங்குதற்குரிய பாவினத் தால் இயன்றதாயும் இத்தொகுதி இருக்குமாயின், ஞாப கத்தில் வைத்தற்குப் பெருந்துணையா யுதவுமென்பது கூறவேண்டா. இதனையுட் கொண்டு தம்காலத்துப் பெரு வழக்கில் இருந்து வந்த விருத்தயாப்பினால் மண்டல புருடர் தமது சிறந்த நூலையியற்றினர்.

ஆனால் இந்நெறியில் 'சூடாமணி நிகண்டு' முதன் முதல் தோன்றிய நூலாதலின், அதன்கண் ஒருசில குறைபாடுகள் நேர்ந்தன. 11-ம் தொகுதி இன்னநெறியிற் செல்ல வேண்டு மென்று ஆசிரியர் உய்த்துணர்ந்து எதுகை முறையிற் பாகு படுத்தினரேனும், ஒரெதுகையிற் பிறவெதுகைச் சொற்கள் விரவுதலின்றிச் செய்யுட்கள் அமையவில்லை. உதாரணமாக ககரவெதுகையில் முதற்செய்யுளில் மூன்றாவது அடி பின் வருமாறு உள்ளது;

'மகரமே சுறுப்பூந் தாதாம் வசிகூர்மை வசியம் வாளே.'

இதன்கண் சகரவெதுகைச் சொல்லாகிய 'வசி' என்பதன் பொருளும் விரித்துணர்த்தப்படுகின்றது. பல இடங்களிலும் இவ்வாறே எதுகை விரவிக் கிடக்கின்றது. விருத்தத்தின் ஒவ்வோரடியினும் பயின்றுவரும் மோனையுறுப்பு எதுகையின் கலப்பிற்கு ஒரு முக்கிய காரணமாயேற்பட்டிருக்க வேண்டும். குறைபாடுகள் அனைத்தினும் இதுவே நூலின்பயனைமுற்று

வித்தற்கண் மிகப் பெரியதோர் இடையூறாக நிற்பது. ஒரு செய்யுளுக்கும் அதனையடுத்து வருஞ்செய்யுளுக்கும் யாதோர் இயைபுமின்றியிருப்பது பிறிதொரு குறையென்று சிலர் கருதுதலும் தகும். இதனால் மிக்க நினைவாற்றலுடையார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதற்கு அரியதாயுள்ளது. அடைச் சொற் புணர்த்திப் பெயர்களைப் படித்திருப்பது பிறிதொரு குறைபாடாகும். இதனால், பொருள் அடைகளைப் பிரித்துணர்தற்கண் மயக்கம் உண்டாகின்றது. 310 செய்யுட்கள் அடங்கிய ஒரு சிறு தொகுதியாயிருப்பதனாலே நாநார்த்த பதங்கள் அனைத்தும் கூறப்பெறாமை மற்றொரு குறை. நோக்கியுணர் கருவிநூலாய் அமைந்ததன்கண்ணும் பற்பல குறைபாடுகள் உளவாயின. இக்குறைகள் பிற்காலத்தே பற்பல நிகண்டு நூல்கள் தோன்றுதற்குரிய அவசியத்தைப் பெரிதும் விளக்குகின்றன. சூடாமணி நிகண்டினைச் செப்பஞ்செய்யும் முறையின் கண்ணேயே ஆசிரியர் பலர் முனைந்து நின்றனர்.

முதற்கண் சூடாமணி நிகண்டிலே 11-ம் தொகுதியைப் பலவாறாகச் செப்பஞ் செய்த முயற்சிகளைக் கவனிப்போம். இத்தொகுதி யொன்றே நம் தமிழ் மக்களிடையிற் பெரிதும் பயிலப்பட்டு வந்தது. பாடங் கற்பித்த தமிழாசிரியர்கள் தாம் கற்பிக்கும் பிரதிகளில் தத்தமக்குத் தோற்றிய சிற்சில திருத்த முறைகளைக் கையாளத் தொடங்கினர். இதன் உண்மை சூடாமணி நிகண்டின் ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதிப்பதனால் விளங்கும். என்னிடமுள்ள ஓரேட்டுப் பிரதியிற் கலப்பெதுகைச் செய்யுட்கள் தனிப்பட்டும், பிற செய்யுட்கள் ஆதியிற்பொருள் அந்தத்திற்பொருள் எனப் பிரிக்கப்பட்டும் உள்ளன. இவ்விரு வகைப் பாகுபாட்டினும் எதுகைமுறை கையாளப்பட்டும் உள்ளது. இங்ஙனமே பல தமிழாசிரியரும் பற்பல முறையிற் செப்பஞ் செய்தற்கு முயன்றிருப்பர் என்று ஊகித்தல் தவறாகாது.

வேதகிரியார் சூடாமணி

மேலே குறித்த முயற்சி 11-ம் தொகுதிச் செய்யுட்களின் முறையைப் பற்றியது. அது மிகச் சுருங்கிய நூற்றொகுதியா மென்பது முன்னரே குறிக்கப்பட்டது. அதன்கண் கூறப்படாத ஒருசொற்பல்பொருட் பெயர்களையெல்லாம் தொகுத்து எதுகை-முறை பற்றிச் செய்யுட்கள்

இயற்றி அச்செய்யுட்களை அந்நூலின் இடையிடையே கோத்து 11-ம் தொகுதியை நிரம்பிய நூலாக அமைத்து விடுதற்கும் பல ஆசிரியர்கள் முயன்றிருத்தல் வேண்டும். இவ்வகை முயற்சிகளுள் ஒன்று நமது கைக்கு எட்டியிருக்கின்றது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவரும், சிறந்த வித்வானும், தமிழ் நூல்கள் பலவற்றை அச்சுவாயிலாக வெளியிட்டவரும் ஆகிய களத்தூர் வேதகிரி முதலியா ரென்பவர் சூடாமணியிற் பதினோராம் நிகண்டினைப் புதுக்கிச் சுமார் 600 செய்யுட்களுள்ள தனி நூலாக அமைத்து உரையும் வகுத்து யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தார் வாயிலாக 1842-ல் வெளியிட்டனர்.

இனி, சூடாமணியைக் காட்டிலும் சிறந்த நிகண்டு நூல்களை இயற்ற வேண்டுமென்று துணிந்த தமிழாசிரியர்களுடைய முயற்சிகளைக் கவனிப்போம். அவருள்ளே சிலர் 12 தொகுதியும் பூரணமாகவுள்ள நிகண்டுகளை இயற்றி, 11-ம் தொகுதியிற் சிற்சில செப்பங்கள் செய்தனர்.

உரிச்சொல் நிகண்டு

இவ்வகை நிகண்டுகளுள் முதலாவதாக எழுந்தது உரிச்சொல் நிகண்டு. இது வெண்பாவால் இயன்றது. சுன்னாகம் வித்வான் அ. குமாரசாமிப் பிள்ளையவர்கள் விசுவாவசு-ௐ 1905-ல் வெளியிட்ட பதிப்பில் 12 தொகுதிகள் உள்ளன. இதற்கு முன் வித்வான் சிவன் பிள்ளை யவர்கள் விகுர்தி ௵, 1890-ல் பிரசுரித்த பதிப்பிலும் 12 தொகுதிகளே உள்ளன. ஆனால் இப்பதிப்பின் முன்னுரையில் ஒலி பற்றிய தொகுதியும் பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதியும் வழங்காதொழிந்தன என்று எழுதப்பட்டுள்ளது. சிவன்பிள்ளையவர்கள் வெளியிடுவதற்கு முன்பு கி.பி. 1858-ம் ௵-ல் யாழ்ப்பாணம் ரா.ரா, அருணாசலம் சதாசிவம் பிள்ளையின் பதிப்பொன்றும், கி.பி. 1840-௵-ல் புதுவை குவெர்னமா அச்சுக்கூடத்தில் துத்தென் துரை வெளியிட்ட பதிப்பொன்றும் இருந்தன. இவ்விரு பதிப்புக்களிலும் எத்தனை தொகுதிகள் உள்ளனவென்று நிச்சயமாய் அறியக் கூடவில்லை.

இரண்டு தொகுதிகள் மட்டும் வழங்காதொழிந்தமைக்குத் தக்க காரணம் வேண்டும். நிகண்டு நூல்களின் பூர்வரூபத்தைத் திரித்துத் தமிழாசிரியர்கள் வழங்கி வந்துள்ளார்கள் என்பதை நோக்கும்போது இவ்விரு தொகுதிகளையும்

நூல் நிரம்புதல் வேண்டிப் பிற்காலத்தாசிரியர் ஒருவர் தாமே நூதனமாகச் சேர்த்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருக்கும் உரிச்சொற் பிரதியில் ஒலிபற்றிய பெயர்த்தொகுதி காணப்படுகின்றது; ஆனால் 12-வது தொகுதி காணப்பெறவில்லை. இது, 12-வது தொகுதி மிகப் பிற்படச் சேர்க்கப்பட்டதென்பதை உணர்த்துகின்றது போலும். எனக்குக் கிடைத்துள்ள ஏட்டுப் பிரதிகளில் 10 தொகுதிகளேயுள்ளன. இதனாலும் ஆழ்வார் திருநகரித் தேவர்பிரான் கவிராயர் பிரதியிற் காணப்படும் 'உத்தமசீலத்துக் காங்கேயன் சொன்ன வுரிச்சொல்தன்னை, வைத்துமனத்து..... பராக்ரம பாண்டிய தேவன் கண்டீர்—'பத்துத் தொகுதியிற் சேர்த்தான் எவரும் படித்திடவே' (நாமதீப நிகண்டு முன்னுரை பார்க்க) என்று வரும் கலித்துறையாலும் உரிச்சொல் 10 தொகுதிகளால் இயன்ற நூலென்பது வலியுறுகின்றதாகக் கொள்ளலாம்.

இஃதெவ்வாறாயினும், ஒரு சொற்பல பொருட்பெயர்த் தொகுதி உரிச்சொல் லாசிரியர்தாமே இயற்றியதென்றலில் ஐயமின்று. இத்தொகுதியில் 36 வெண்பாக்கள் உள்ளன; சுமார் 150 சொற்கள் பொருள் விளக்கப்படுகின்றன. எளிதின் மனனஞ்செய்தற்குத் தக்கபடி மிகவும் சுருக்கமாக இத்தொகுதி அமைந்துள்ளது. ஆனால், பல்பொருட் சொற்கள் இடத்திற்குத்தக வெண்பாவில் அமைய வேண்டும் நியதியொன்றனையே கொண்டன. வேறு யாதொரு நியதி பற்றியும் அவை நிறுவப்பெறவில்லை.

கெயாதரம்

இராமேசுவரம் என்று வழங்கும் தேவைப்பதியில் இற்றைக்குச் சுமார் 250 வருடங்கட்கு முன் வாழ்ந்தவராகிய 'கெயாதரர்' என்ற அந்தணர் 'கெயாதரம்' என்ற நிகண்டு நூலொன்று இயற்றியுள்ளார். இதனை,

தளர்ந்தன நீக்கி யுரித்தாய சொல்லைத் தமிழ்ப்படுத்தான்,
கிளர்ந்த பெரும்புகழ்ச் சோமீசன் றேவைக் கெயாதரனே.

வடக்குங்கு மக்கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக்கீழ்க்
கிடக்குந் தனிநெஞ் சுடையோ னுரிச்சொற் கிளர்பனுவல்
குடக்குங் குணக்கும் வடக்குந்தென் பாலுங் குவலயத்து
நடக்கும்படியாகக் கெயாதர [1]மென்றுபேர் நாட்டினனே.

---

1. இதனைக் 'கயாகரம்' என்றும் வழங்குவர். வேதகிரி முதலியார் வெளியிட்ட இலக்கியக் களஞ்சியத்தில் 'கயாகர நிகண்டு' என்ற தலைப்பின் கீழ் அடியில் வருஞ் செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது.

பரிதியா தித்த னிமகரன் பதங்கன்
பனிப்பகை விண்மணி யென்றாழ்
அருணன்மார்த் தாண்டன் பாற்கரன் கதிரோன்
ஆயிரங் கதிரினன் தபனன்

என்ற செய்யுட்களால் அறியலாகும். இந்நூலின் கண் 11 தொகுதிகளே யுள்ளன. இது கட்டளைக் கலித்துறையில் அந்தாதியாக அமைந்துள்ளது. 11-ம் தொகுதியும் இங்ஙனமே அமையப் பெற்றிருக்கின்றது. உதாரணமாகக் கீழ் வரும் இரண்டு செய்யுட்களைக் காண்க.

அரிகடல் மால்பன்றி யாயுதம் பச்சை யளியருக்கன்
எரிபுகை கிண்கிணி பெய்பர லைம்மை எமன்கிளிகள்
வரிவலி யிந்திரன் மாருத நேமி மடங்கல்மது
பரிபகை செந்நெற் கதிர்தேரை வானரம் பாம்புபொன்னே,
பொன்னே ரிரும்பு சுரர்குரு மாடை பொலிவுதிரு
வென்னேரழகும் முழுப்பெற் றமுமெல் லொளிபகலாம்
தென்னே வனப்பு மிசைபா டலுந்தென் றிசையுமென்ப
கொன்னே பெருமை பயனிலி யச்சங் கொளும்பொழுதே

இவ்வாறாக அந்தாதித்தொடையில் அமைந்திருப்பது ஞாபகத்தில் வைத்துக் கோடற்குப் பெரியதொரு துணையாகும். இம்முறையாலும் வேறு பல நயங்களாலும் இந்நூல் சூடாமணி நிகண்டினும் சிறந்ததென்று கொள்ளுவார் மிகப் பலர்.

இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன்
எல்லியம் போருக நண்பன்
தருமொளி வேந்தன் சூரனே சவிதா
தரணிகண் சுடரவ னென்பார்.

கெயாதரம் கலித்துறையாலியன்ற நூலென்பது எனக்குக் கிடைத்துள்ள ஏட்டுப் பிரதிகளால் உணரக் கிடக்கின்றது. சென்னைப் பிராசீன கிரந்தசாலையின் கண்ணுள்ள நூல்களின் பட்டிகையொன்றில் ஆசிரியர் பெயரறியப் படாத நிகண்டொன்றினைப் பற்றி வரைந்துள்ள குறிப்பும் இதனையே வற்புறுத்துகின்றது. வேதகிரி முதலியார் காட்டுஞ் செய்யுள் எதன்கண் உள்ளதோ அறியக்கூடவில்லை. இங்ஙனமே ஏகபாத நிகண்டென வொன்றைக்காட்டி அதினின்றும் பின்வருஞ் செய்யுளைக் கொடுத்துள்ளார்:

அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையுமாகுமென்பர்
அத்திரி மாவும் வரையுங் கழுதையுமாகுங் கண்டாய்
அத்திரி திக்கயந் தன்னுடனே மிக்க வஞ்சனமாம்
அத்திரி தானுங் கறுப்புமென் றோதுவ ரான்றவரே.

இவ்வகைச் செய்யுளடங்கிய நூலை ஏகபாத நிகண்டெனக் கூறுதல் ஏற்புடைத்தன்றெனல் வெளிப்படை. இந்நூலைக் குறித்தும் யாவும் அறியக்கூடவில்லை.

பாரதிதீபம்

கெயாதரத்தைப் போலவே கட்டளைக் கலித் துறையில் அமைந்த பிறிதொரு நிகண்டு நூல் 'பாரதி தீபம்'. ஆனால் இது அந்தாதித் தொடையில் அமைந்ததன்று. இதனை யியற்றியவர் தென்கடம்பை நகரினராகிய திருவேங்கட பாரதி யென்பது,

மீன்றாவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்றாதல் கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த்
தேன்றாழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்றா வதுவிலங் கின்பேர்த் தொகுதி முடிந்ததுவே

என்ற செய்யுளால் அறியலாகும். ஆசிரியர்காலம் 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாயிருக்கலாமென்று தோன்றுகிறது. இந்நூலிலுள்ள செய்யுட்களின் பெயர்கள் பெரும் பாலும் அடைமொழியின்றிக் காணப்படுகின்றன. உதாரணமாக,

அரனிறை வன்சிவன் சங்கர னித்த னமலன்கங்கா
தரனுமை பங்கன் மலைவில்லி தற்பரன் றாணுச்சம்பு
புரதக னன்புனி தன்பிறை சூடி புலியதளோன்
பரசுத ரன்கயி லாயன் கபாலி பசுபதியே

என்ற செய்யுளைக் காண்க. அடைமொழி யின்றிப் பெயர் களை யமைத்தும் பொருட் பெயர்களை மிகுதியாகத் திரட்டியும் செப்பமிக இந்நூல் இயன்றுள்ளது.

ஆசிரிய நிகண்டு

அடிமிக்கதொரு பாவினத்தால் பொருட்பெயர்களை மிகுதியாக வுட்கொண்டு, எளியநடையால் இயன்று இக் காரணங்களாற் சூடாமணியினுஞ் சிறப்பெய்தி விளங்கும் பிறிதொரு நூல் 'ஆசிரிய நிகண்டாகும். கெயாதரத்தைப் போலவே இதன் கண்ணும் 11 தொகுதிகளேயுள்ளன. இதனை யியற்றியவர் தொண்டைநாட்டு ஊற்றங்காலெனும் ஊரின ரும், வளையறுப்போர் குலத்தினரும், பாவாடை வாத்தி யாரின் புத்திரரும், ஞானப்பிரகாசகுருவின் சீடருமாகிய ஆண்டிப் புலவர். நக்கீரனென்பதும் சாதிபற்றியிவர்க்கு வழங்கிய பெயர், இது,

"மன்னுசெஞ் சிச்சீமை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்த 'ஊற் றங்காலில்வாழ்

---

1. 'ஊற் றங்காலெனு, மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார் மைந்தனாண் டிப்புலவனே' என்று மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரதிகளிற் காணப்படுகிறது.

வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே'
'மண்ணுளோ ரறியப்பகுத்தனன் கயிலையான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரவுப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமல ரடிசூடுவோன்'

என்று வருவனவற்றால் உணரலாம். இதன்கண் 11-ம் தொகுதி செவ்வையாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும் சொல்லின் பொருள்கள் பெரும்பாலும் எண்களால் வரையறுத் துணர்த்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக,

கஞ்சமிகு தீபமோர் தகழிவட் டம்படைக்
கலமேறு தாளமுடனே
கட்டிலெட் டும்பாண்டி லென்பர்செல் வம்பெருமை
கருமைமண் டிலம்விலங்கு
கஞ்சரிக மிகவெறுப்பொடுகமலை வரவழைத்
தல்பிண்டி பத்துமாவென்
றாகும்வெறி யாட்டுநாற் றங்கலக் கத்துடன்
சாறுவெம் பேய்வெருவுதல்
எஞ்சல்பெறு வட்டமொடு துருவையிரு நாலும்வெறி
யெழுமோசை பற்றுநாடூர்
ஏற்றகர தலநெடும் போதுபுனல் சோலைபல்
லியம்பண்ட மிவைபாணியாம்
செஞ்சொலா வணங்கோட ரம்புனற் கரைபாகல்
திகழ்விலங் கின்வால்பச்சு
செய்வரம் பிவைகூல மென்று [1]முத் தமிழ்முனி
செப்புமிப் பொருளாகுமே

என்ற செய்யுளைக் காண்க.

மேற்குறித்த நூல்களெல்லாம் நிகண்டு நூலென்ற ஓரளவில் அமைந்து நின்று சொற்பொருட் பெருக்கத்தாலும் ஞாபகத்திற்குதவும் தொடை நயத்தாலும் அடி நிமிர்ந்து செல்லும் பாவினத்தாலும் பலவாறு செப்பமுற்று விளங்குவன. நிகண்டுகட்கும் தற்காலத்து வழங்கும் அகராதிகளுக்குமுரிய நெருங்கிய தொடர்பினை யுணர்ந்து, அகராதி முறையே இனிப் பிற்காலத்து வேண்டப்படுவதென்பதனை நன்கு தெளிந்து, அம்முறையில் நூலியற்றிய ஆசிரியர்களுடைய முயற்சிகளைக் குறித்து இனி விசாரிப்போம்.

---

1. 'முத் தமிழ்வலோர் செப்புமிப் பெயராகுமே', 'முத் தமிழோர்கள் செப்புமிப் பெயராகுமே' என்று மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரதிகளிற் காணப்படுகிறது.

அகராதி நிகண்டு

நிகண்டுநூலை அகராதியாக விரித்து இயற்ற முயன்ற ஆசிரியர்கள் 16-ம் நூற்றாண்டின் இறுதியிலே தோன்றுவாராயினர். இவர்களுள்ளே காலத்தானும் பெருமையானும் முற்பட்டு விளங்குபவர் சிதம்பரரேவணசித்தர் ஆவர். இவர் உபகரித்த நிகண்டு கி.பி. 1594-ல் இயற்றப் பெற்றதென அதன் பாயிரத்தால் அறியக்கிடக்கின்றது. இந்திய தேச சரித்திரத்தில் 16-ம் நூற்றாண்டினிறுதி மேனாட்டார் வரவுக் காலமாய்ச் சரித்திர கதியையும் நாகரிகப் போக்கினையும் மாற்றிப் பலவகை யுறுதி நலங்களையும் விளைத்தற்குரிய அங்குரார்ப்பண காலமாய் அமைந்து நின்றது போலவே, தமிழ்மொழி வரலாற்றின் கண்ணும் அஃது அத்துணைச் சிறப்புடையதாயமைந்திருப்பது உய்த்துணரத் தக்கது. இரேவணசித்தர் எழுதிய நிகண்டுநூலின் பெயர் அகராதி நிகண்டென்பது. பெயருக்கேற்ப இந்நிகண்டு அகராதிக்கிரமத்தில் அமைந்திருக்கின்றது. தமிழ்க் கருவி நூல்களுள் இந்நிகண்டுதான் முதன் முதலாக இவ்வாறு அமைந்துள்ளது. எளிதிலே நோக்கியுணர்தற்குற்ற இம்முறை 11-ம் நிகண்டின் விருத்திப்ம்சமே யென்பது தெளிவாம். இம்முறையைத் தமிழிற் கொணர்ந்ததுதானும் யாவரானும் போற்றத்தகும் ஓர் அரிய செயலாம். இதன்மேலும் அகராதியென்று தற்காலத்திற் பிரசித்தமாய் வழங்கும் பெயரினை முதன்முதல் ஆக்குவித்து ஆட்சியிற் கொணர்ந்த பெருமையும் இரேவணசித்தர்க்கே உரியது. அகராதி என்ற புதுச் சொல்லினையும் நிகண்டு என்ற பழஞ் சொல்லினையும் ஒன்றாக இயைத்து அருசி தோன்றா வண்ணம் அமைத்த நயமும் பாராட்டத்தக்கது. வடமொழியில் 'அகராதி நிகண்டு' என்னும் நூலொன்று உளதாகப் பெயர் மாத்திரையிற் கேட்கப்படுகின்றது. இதன் காலம் முதலிய விவரங்களொன்றும் அறிதற்கில்லை. தமிழில் இயன்ற இந் நிகண்டு நூல் முதன்முதல் பல வருடங்கட்குமுன் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்ததாகும். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் 1921-ல் வெளியிடப்பட்டது. இரண்டு பதிப்பிலும் திருத்தமடையாத இடங்கள் பலவுள்ளன.

நூல் இயன்றுள்ள முறையை,

> " ....அகர முதலாய்
> மதித்தெழு வகார வர்க்க மீருய்
> மொழிமுத லெழுத்துநூற் றொருநா லடைவே
> மொழிதரு சூத்திர முதற்பதந் தோறும்
> வருபெய ராதிப் பொருளா யெடுத்தே
> ஒருபெயர் முதனாற் பத்தா றீறாய்
> நிகழ்தர வுரைக்குந் தொகை தனக்கு"

என்று வரும் பாயிரத்தால் அறியலாகும்.

அகராதிமுறை யென்று கூறியவளவிற் பொருள் விளக்குதற் கெடுத்துக்கொண்ட சொற்கள் யாவும் தற்காலத்துள்ள அகராதியிற் காணும் கிரமத்தை முற்றுங்கைக் கொண்டு நூல் அமைந்துள்ளதென்று எண்ணுதல் தவறு. சொற்களின் முதலெழுத்துக்கள் மாத்திரம் அங்ஙனம் அமைந்தனவே யன்றி இரண்டாமெழுத்து முதலியன அந்நியமத்திற்குட் பட்டு வந்தனவல்ல. அன்றியும், அகரவர்க்கப் பெயர்கள் முதலியன அம் முதலொரு பெயர், அம் முதலீரு பெயர், அம் முதன் முப்பெயர்; என்றிங்ஙனமாக வகுக்கப் பெற்று நூல் முடிகின்றது.

கைலாச நிகண்டு

நிகண்டுப் பொருள்களைப் பன்னிரு தொகுதிகளாக வகுத்துத் திவாகரரும் மண்டலபுருடரும் பிரசாரத்திற்குக் கொணர்ந்த முறையை விடுத்துப் பிங்கலந்தையிலுள்ள முறையை மேற்கொண்டு சிறந்த கருவி நூலாக விளங்குவது 'கைலாசநிகண்டு' என்பதாம். இந்நிகண்டின் பிரதி யொன்று தொன்னூற் கருவூலமென்று சொல்லத்தகும் திருமேனி இரத்தின கவிராயர் பரம்பரையினர் வீட்டிலிருந்து கிடைத்தது. இதனை இயற்றியோர் வரலாறும் காலமும் சிறிதும் அறியக்கூடவில்லை. நூற்பெயரை நோக்கும்போது மண்டலபுருடரியற்றிய சூடாமணி நிகண்டுக்குப் பிற்பட்ட தாயிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. 'கைலாச' என்ற அடைமொழியால் இதனை இயற்றியவர் சைவரென்பதும் 'கைலாசம்' என்ற பெயரினரென்பதும் ஊகித்தல் கூடும். ஏட்டுப் பிரதியின் நிலைமையினின்று அப்பிரதி சுமார் இரு நூறு வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கலாமென்று கொள்ளலாம். சுமார் 300 வருடங்கட்கு முன்னர் இந்நிகண்டு இயற்றப்பட்டிருக்கலாமென்று கொள்ளுதல் உண்மையி னின்றும் இழுக்காது.

இது பிங்கலந்தையின் வழிப்பட்டதென்பது விண்ணவர் வகை, விண்ணின்வகை, மண்ணின்வகை யெனத் தொடங் கிச் சென்று ஊர்வன இறுதியாக வரும் 49 பகுப்புக்க ளாலும், இறுதியில் ஒரு சொற் பல்பொருட் பெயர்களை ஃவத்திருக்கும் முறைமையாலும் அறியப்படும். ஆனால் இறுதிப்பகுதி பிங்கலந்தையின் முறையைத் தழுவியதன்று; ஓரெழுத்தொருமொழி, ஓரெழுத்தொற்றொருமொழி, ஈரெ ழுத்தொருமொழி, ஈரெழுத்தொற்றொருமொழி, மூவெழுத் தொரு மொழி, மூவெழுத்தொற்றொருமொழி, நாலெழுத்

தொற்றொருமொழி என்ற ஏழு பகுப்புக்களையுடையதாய்க் காணப்படுகின்றது. ஓரெழுத்தொருமொழியிற் றவிரப் பிற பகுப்புக்களில், அகராதிமுறை காணப்படவில்லை. சூத்திரங்களும் பிங்கலந்தைச் சூத்திரங்களை அடியொற்றியே யுள்ளன. உதாரணமாக, அடியில்வரும் ஓரெழுத்தொற் றொருமொழிச் சூத்திரங்களைக் காண்க:

27. **ஓரிடைச் சொல்லு முரைக்குங் காலமும்**
பேசில் வறிதும் பெருமையுங் கொன்னே
அச்சமு மாங்கதற் காகு மென்ப.

28. **காற்றும் வழியுங் காலும் பொழுதும்**
கூற்றும் அளவையும் குவிதே ருருளையும்
காம்புந் தறியுங் கண்ணெ னுருபும்
வான்கொடிப் படரு மரமும் புதல்வரும்
சரிபுன லோடைத் தாழ்ந்த வதியும்
உரியதோ ரிலக்கமு முரைக்குங் காவே.

29. **அருக்கன் முதலா வாய்ந்த வொன்பதும்**
வலியுங் கொள்கையும் வல்லிடை யூறும்
கொலையும் பிசினமுங் கோளெனத் தகுமே.

இப்பகுதி யமைந்துள்ள முறை பயன்றருவதன்றெனல் வெளிப் படை.

பல்பொருட் சூளாமணி நிகண்டு

இந்நூல் தோன்றி ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர், மிகவும் எளிதான முறையொன்றைக் கைப்பற்றிப் பல்பொருட் சூளாமணி யென்ற நிகண்டகராதியொன்று இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் 'மடசை' என்றவூரினரும், சிதம்பர பாரதி என்றவரின் புத்திரருமாகிய ஈசுரபாரதியாவர். 'மடசை' என்பது ஸ்ரீவில்லிபுத்தூரையடுத்துள்ள மடவார்வளாக மென்ற ஊராக இருக்கலாமென்று தோன்றுகிறது. இவர் நூல் செய்த காலம் கி.பி. 1700. இவ் விவரங்கள்,

கொல்லமெண்ணூற் றெழுபத்தா றெனக்கணிதப் பாவாணர்
குறித்த வாண்டின்
மல்குபுகழ் விக்கிரம வருடத்தா வணிமூல
வளஞ்சேர் நாளில்
நெல்லைநகர் வடிவுவந்த வேய்முத்தைப் பணிந்துலகி
னெடுநா ணிற்கப்
பல்பொருட்சூ ளாமணியை யீசுரபா ரதிதமிழாற்
பாடி னானே.
சிதம்பரபா ரதிபாலன் புகழ்மடசை யுடையவளாந் தேவி
செம்பொற்
பதம்பணிசெங் கைத்தலத்தா னீசுரபா ரதியெனுநூற்
பாவ லோனே

என்ற பாயிரச் செய்யுட்களால் உணரலாம். அமரகோச மென்னும் வடநூலைப் பின்பற்றி இவரும் தமது நூலை மூன்று காண்டங்களாகப் பகுத்து முதற்காண்டம் ஒரு சொல்லொருபெயர்த் தொகுதியாகவும், இரண்டாங் காண்டம் ஒருசொற் பல்பொருட்டொகுதியாகவும், மூன்றாங் காண்டம் பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த் தொகுதியாகவும் அமைத்திருக்கின்றனர். இது,

தோன்றுகாண் டச்சடையான் றொல்சீர்சேர் நாமநூன்
மூன்றுகாண் டத்தான் மொழிகின்றேன்—ஆன்ற
குமரசிங்கத் தின்கருணை கொண்டுவட நூல்சேர்
அமரசிங்கத் தின்சிறப்பி னால்

நாவுவந்த பல்பொருட்கு ளாமணியைப் பாரில்
நாட்டியசீர் முதற்காண்ட மென்னும் பேர்தான்
பூவுவந்த வொருபெயரோர் பொருளே யாகும்
போற்றிரண்டாங் காண்டம்பல் பொருளி னோர்சொல்
சேவுவந்த நெல்வேலிப் பெருமானீன்ற
செவ்வேளின் றிருவருளாற் றேர்ந்து நான்சொல்
பாவுவந்த பெயர்மூன்றாங் காண்ட மாகும்
பலபெயர்க்கூட் டத்தொருபேர் பலவுந் தானே.

என்ற செய்யுட்களால் உணரலாகும். முதலிரண்டு காண்டங்களும் அகராதி முறையிலேயே அமைந்துள்ளன; மூன்றாங் காண்டமும் அவ்வாறே அமைந்திருத்தல் வேண்டும். உரிமையிற் சிறந்த நண்பர் எம்.பி.எஸ். துரைசாமி முதலியாரவர்கள் ஆழ்வார்குறிச்சியில் தங்கள் வீட்டிலிருந்த இந்நூற் பிரதியை மிக்க அன்போடு உதவினார்கள். இப்பிரதி இறுதியிற் குறைவுடையதா யிருத்தல் வருந்தத் தக்கது.

சதுரகராதி

இந்நூல் தோன்றி 32 வருடங்கட்குப் பின்னர் மேனாட்டுப் புலவரான வீரமாமுனிவர் சதுரகராதி இயற்றினார். இதன் கண்ணுள்ள முதன்மூன்று அகராதிகளும் பல்பொருட் சூளாமணியின் மூன்று காண்டங்களையும் ஒருவாறு ஒத்திருத்தல் நோக்கத்தக்கது. இவ்வகராதி, இயற்றப்பெற்ற சில வருடங்களுக்குள்ளே மிகவும் பிரபலமெய்திற்று. தமிழ் நாட்டில் தமிழ் வித்வான்கள் வீடுகளிலெல்லாம் இதன் ஏட்டுப் பிரதிகள் காணப்படுகின்றன. தமிழகராதியின் சரித்தில் இந்நூல் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்று விளங்குகின்றதென்றுமட்டுங் கூறி ஈண்டு அமைகின்றேன்.

பொதிகை நிகண்டு

சதுரகராதி மிக்க உபயோகமுள்ள கருவிநூலாயமைந்தாலும், தமிழறிஞர்கள் அதன் பெருமையை முற்ற உணர்ந்து போற்றி வந்தார்களென்று கூறமுடியவில்லை. தமிழாசிரியர்கள் நிகண்டு கற்றலையே பெரிதும் மேற்கொண்டு வந்தார்கள். ஆதலால் அகராதி முறையையும் அதில் அடங்குதற்குரிய பல பகுதிகளையும் செம்மை செய்தலில் அவர்களுடைய முயற்சி செல்லவில்லை. மீண்டும் நிகண்டுகளை அகராதிக்கிரமத்தில் இயற்றுதலிலேயே மனமூன்றி நின்றார்கள். இதற்குச் சான்றாக, சதுரகராதி வெளிவந்து சுமார் 40 அல்லது 50 வருடங்கட்குப் பின்னர்த் தோன்றிய **பொதிகை நிகண்டினைக்**[1] கூறலாம். இந் நிகண்டின் பிரதியொன்று நண்பர் சி. ஆர். நமச்சிவாய முதலியாரவர்கள் அன்புடன் உதவினார்கள். இதனை இயற்றிய ஆசிரியர் கல்லிடை நகரினரான சாமிநாத கவிராயராவர். இவர் 'நாமதீப நிகண்டு' இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயரின் தந்தையாரென்பது,

> **"எந்தை பொதிகைநிகண் டென்றோர் சொற் பல்பெயரே**
> **தந்தனன் காண்"**

---

1. வேதகிரி முதலியார் தமது இலக்கியக் களஞ்சியத்துள் 'பொதியநிகண்டு' எனவொரு நூலைக் கூறி அதினின்றும் பின்வருஞ் செய்யுளைக் காட்டுவர்:

> தட்டுநீட் டுக்குற் றணலினின் றுருகல் தன்னெடை குறைதலில் லாமை
> கொட்டு(கிற்) கடின மின்மையா ணிக்குக் கூறுமாற் றறிவித்தல் சோதி
> விட்டுவிட் டொளிர்தல் மிகுபுடத் திருத்தல் வெவ்வழல் வென்றியைக் கொள்ளல்
> கட்டிசாய்த் திடுகிற் பள்ளங்கொண் டதிக கனக்கொளல் கனகலக் கணமே.

பொதிகை நிகண்டு நூற்பாவகவலால் அமைந்திருந்தலின், இந்நிகண்டு பிறிதொரு நூலாயிருத்தல் வேண்டும். கனகலக்கண முதலிய பொருள்களும் பொதிகை நிகண்டு கைக்கொண்டுள்ள முறையில் வரத்தக்கனவல்ல. இங்ஙனமே ஔவை நிகண்டு என ஒன்றைக்கூறி அதினின்றும் கீழ்வருஞ் செய்யுளைக் காட்டுவர்:

பதினாறுவகை வாசப்பொருள்

> ஏலந்தக் கோலஞ் சூட னிலவங்கஞ் சாம்பிராணி
> காலஞ்செல் லகில்சந் தோங்கு கத்தூரி புழுகு மௌவல்
> கோலமார் மருக்கொ ழுந்து குங்கும மிலாமிச் சம்வேர்
> சாலுஞ்சண் பகஞ்சவ் வாது சாற்றுஞ்சோ டச வாசப்பேர்

என்று அந்நூலிற் பயின்றுவரும்பாயிரவடிகளால்அறியலாகும் அகராதிநிகண்டு முதலியவற்றைக் காட்டிலும் ஒரு சில அம்சங்களில் இந்நிகண்டு செம்மை யெய்தியது. இவ்வகை நூல்களிற் பல்பொருட் சூளாமணியிலுள்ளதுபோல் ஒருசொல் லொரு பொருள், பல்பொருளொரு சொல் முதலிய பாகுபாடுகளும், அகராதி நிகண்டிலுள்ளதுபோல் அம்முதலொரு பெயர், அம்முதலிருபெயர் முதலிய பாகுபாடுகளும் வேண்டாதனவாம். இந்தப் பாகுபாடுகள் இந்நிகண்டில் அறவே யொழிக்கப்பட்டன. அன்றியும், அகராதிநிகண்டு முதலியன மொழிமுதலெழுத்தின் முறையைக் கவனித்தனவேயன்றி இரண்டாவ தெழுத்து முதலியனவற்றின் முறையைச் சிறிதுங் கவனித்தில. உதாரணமாகப் பின்வருவனவற்றைக் காண்க.

1. அரனென் பதுவே சங்கர னாகும்.
2. அம்பிகை யென்ப துமையவள் பெயரே.
3. அயனே வேத னாமென நுவல்வர்.

இவை அகராதிநிகண்டின் முதல் மூன்று சூத்திரங்களாம். பொதிகை நிகண்டிலே மொழிமுதலெழுத்தின் கிரமம் அனுசரிக்கப் பெற்றிருப்பதோடு, இரண்டாமெழுத்துக்களும் ஒரே மெய் அல்லது உயிர்மெய்யெழுத்தின் சார்பினவாயிருக்க வேண்டுமென்ற நியதி கையாளப் பெற்றிருக்கிறது. உதாரணமாக,

1. அகந் தருவுங் குறையும் வெற்பு மனையும்
அகமு முள்ளு மான்மாவு மகப்பொருளும்
இடமும் பாவமு மல்லவு மாகும்.
2. அகைத்த லறுத்திடலு மொடித்திடலு மீர்தலும்
வேதனை யும்மென விளம்பினர் புலவர்.
3. அகப்பா வுண்மதில் மேடையு மதிலும்.

என்று வரும் முதன்மூன்று சூத்திரங்களை நோக்குக. இவ்வாறாக, நிகண்டுநூலினை அகராதியோடு ஒத்தநிலையிற் கொண்டுவருதற்கு வேண்டும் செயற்பாடுகளெல்லாம் கடைபோக முடிந்தன.

அரும்பொருள் விளக்க நிகண்டு

அகராதி நிகண்டின் மரபிலேவந்த இந்நூல்கள் அங்கங்கே பயிலப் பெற்றுவந்தனவாகத் தெரிகின்றதேயன்றிப் புலவர்குழாத்துட் பெரிதும் போற்றப் பெற்றனவாகத் தெரியவில்லை. அகராதி நிகண்டின் ஏட்டுப் பிரதிகள் தமிழ்

நாட்டிற் சென்னை முதல் நெல்லையீறாகப் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இதனால் இந்நூல் மிக்க பிரசாரமெய்தி யிருந்ததென்பது விளங்கும். எனினும் வீரை மண்டலபுருடர் ஏற்றிய சூடாமணி யென்னும் வாடாத நிகண்டு விளக்கின் முன் இரேவணசித்தர் முதலியோர் இயற்றிய நூல்கள் ஒளியின்றி மங்கிப்போயின என்றே கூற வேண்டும். தமிழ் கற்பாரிடையே சூடாமணியிற் பதினோராந் தொகுதியளவு வேறு எவ்வகை நிகண்டும் ஆதரிக்கப் படவில்லை யென்பது திண்ணம். தமிழ் மக்கள் தங்கள் முன்னோர் முறையைக் கைவிடுத்து ஆங்கில முறையிற் கல்வி பயிலத் தொடங்கிய காலம் வரை இந்நிகண்டே ஓதிவரப் பெற்றதாகும். இத்துணையாகப் போற்றப் பெறுதற்கு ஒரு முக்கிய காரணம் அனுகூலியாயிருந்திருக்கலாமென்று தோன்றுகிறது. அகராதிநிகண்டு முதலியன நூற்பாவாலியன்று பரந்து கிடத்தலினாலே மனனம் பண்ணுதற்கு எளியவல்ல. மனனம்பண்ணி ஞாபகத்திற் சேமித்து வைத்தலே நன்றெனக்கொண்ட நம்முன்னோர்க்குச் சூடாமணி நிகண்டு போன்றனவே நல்ல கருவிநூலாகப் புலப்பட்டன. திவாகரம், பிங்கலம் முதலியன புலவர் பெருமக்களாலன்றிச் சாமானியரால் போற்றப் பெறாமைக்கு இதுவும் ஒரு காரணம். ஆகவே அகராதி நிகண்டின் மரபில் நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கும்பொழுதே சூடாமணியிற் பதினோராந் தொகுதியின் மரபினும் நூல்கள் தோன்றிக்கொண்டிருந்தன. இவ்வகையிலே இயற்றப்பெற்ற நூல்களுள், காலத்தால் மிக முந்தியது அரும்பொருள் விளக்க நிகண்டு. அதன் சிறப்பியல்புகளைக் குறித்துப் பின்னர் கூறுவோம்.

நாநார்த்த தீபிகை

இந்நூல் தோன்றிச் சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின் அஃதாவது சுமார் கி.பி. 1850-ல் பதினோராந் தொகுதியின், நெறியையே பின்பற்றி நாநார்த்த தீபிகை என்ற ஓரிய நூல் இயற்றப்பெற்றது. இந்நிகண்டு வடமொழிச் சொற்களைப் பெரிதும் மேற்கொண்டுள்ளது. தமிழ் மொழிக்கும் வடமொழிச்கும் உள்ள தொடர்பு அனாதி; இத்தொடர்பு காலகதியை யொட்டிப் பலவகையானும் விரிந்து கொண்டே வந்திருக்கிறது. தமிழிற் புலமைமிக்க பெருமக்களனைவரும் வடமொழியையும் நன்கு பயின்றிருந்தனர். பரம்பரைத் தமிழ்ப் புலவர்கள் இல்லங்களில் வடமொழி நூற் பிரதிகளும் காணப்படுதல் இதற்குத் தக்க சான்றெனக்

கூறலாம். கல்வியறிவுமிக்கில்லாத தமிழ் மக்களும் வட மொழிப் பதங்களை மிகுதியாகக் கையாளத் தொடங்கினர். வில்லிபுத்தூராழ்வார் போன்ற புலவர்களும் வடமொழியைப் பெரிதும் கலந்து நூலியற்றி வந்தனர். தர்க்கம், ஜோதிஷம் முதலிய சாஸ்திரப் பயிற்சிக்கும் வடமொழி யுணர்ச்சி அத்தியாவசியமா யிருந்தது. இக் காரணங்களால் வடமொழிப் பதங்களின் பொருளுணர்ச்சியும் இன்றியமை யாததாமென்பதை யுணர்ந்து அப்பதங்களை மிகுதியாகச் சேர்த்துச் சுமார் 1100 விருத்தங்களால் அமைத்த பெரு நூலாகும் இந்த நாநார்த்த தீபிகை. இதன்கண் பயின் றுள்ள வடசொற்களிற் பல, வடநூல்களினும் அருகியே வருவனவாம். அடைமொழி புணராது பொருள்களைப் படித்திருப்பது இந்நூலின் பிறிதொரு நயமாம். இதனை இயற்றியவர் முன்பு சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ் ரீடரா யிருந்த அநவரத விநாயகம் பிள்ளையவர்களின் பிதாமகராகிய முத்துசாமிப் பிள்ளையவர்களாவர். நண்பர் அநவரத விநாயகம் பிள்ளையவர்களின் அன்பினால் இந்நூல்* முழுமையும் யான் பார்க்க நேரிட்டது.

சிந்தாமணி நிகண்டு

நாநார்த்த தீபிகை தோன்றிச் சுமார் 25 வருடங்கட்குப் பின்னர், 1874-ல், யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம் பிள்ளை யென்பவர் சிந்தாமணி நிகண்டு எனப் பெயரிய நூலொன்று இயற்றி அச்சிடுவித்தனர். இதுவும் பதினோராந் தொகுதி முறையில், தீபிகையைப் போல வடமொழிச் சொற்களை மிகுதியாகச் சேர்த்து அமைத்த சிறியதொரு நூலாம்.

நேர்செறி இளைஞரோர்சொற் கொருபொருணோரா யோரப்
பார்செறி நிகண்டு சிந்தா மணியெனப் பகர்வ னொன்றே

என்று ஆசிரியர் கூறுதலால், இஃது ஒருசொல்லொருபொருள் கூறும் நூலென்றறியலாம். இது 400 விருத்தங்களாலாகியது. ஆசிரியர் தாமே ஓர் உரையும் வகுத்திருக்கின்றனர்.

விரிவு நிகண்டு

இன்றைக்குச் சுமார் 12 வருடங்கட்கு முன்னர் வீர ராகவபுரத்திற் பிரபல வக்கீலாயிருந்த பூமிநாத முதலியாரவர்களின் தந்தையாரும், வீரவநல்லூர் வாசியு மாகிய நா. அருணாசல நாவலரவர்கள் பதினோராவது

* இந் நிகண்டு சென்னை ஸர்வகலாசாலையினின்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

'விரிவு நிகண்டு' எனப் பெயரிய நூலொன்று விருத்தப் பாவால் இயற்றி உரையும் வகுத்திருக்கின்றார்கள். குறித்த நாவலரவர்கள் காலஞ் சென்று இப்பொழுது சுமார் 25 வருடங்கள் இருக்கலாம். இந்நூற் பிரதி, திருநெல்வேலி வக்கீல் வி.எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியாரவர்களால் அன்புடன் உதவப்பட்டது. விரிவுநிகண்டு, சூடாமணி நிகண்டினை யாதாரமாகக் கொண்டு அதன் முறையையே பின்பற்றிப் பல வழக்குச் சொற்களும் பொருள்களும் கூட்டப்பெற்றுத் தன் பெயருக்கேற்ப மிக விரிவாக அமைந்துள்ளது. இது பின்வரும் காப்புச் செய்யுளால் அறியலாம்.

பொன்பொலி வீரை வேணிப் பூமிநா தன்றன் றாசன்
முன்புறு நிகண்டோ டேனை முதுமொழிப் பொருள னேகம்
இன்புறு மெதுகையாக வியற்றுமிந் நிகண்டை மேலோர்
அன்பமை கருத்துட்கொள்ள வருள்செ யைங்கரமா தேவே.

இந் நூலின் இறுதிப் பகுதி பலவாறாகச் சிதைந்து காணப் படுதலினாலே செய்யுட்டொகை நிச்சயிக்கக்கூடவில்லை. தெளிவாக அறிவது 1036 செய்யுட்கள்; பல செய்யுட்கள் எண்ணிடப் பெறாதுள்ளன. ஆகவே, 1100 செய்யுள்கட்கு மேற்பட இந்நூலில் உள்ளனவென்று கொள்ளலாம். வழக்குச் சொற்கள் புக்கு இது மிக விரிந்த நூலாதலைக் கீழ்வருஞ் செய்யுட்களால் அறிக:

அகமிடம் பாம்பு தானி யம்புவி பள்ள முள்ளோ
டகலியப் பொதுவே தண்ட மாகாய மாழ மான்மா
பகலனே ழுருபு துக்கம் பாவமுள் ளிடமோர் தாரு
தகுதியில் குணம்வீ டோடு சாருபத் திரவம் நெஞ்சாம்

கம்மலே யிரும லோர்வ கைக்கடுக் கன்கா தோலை
பம்மல்மா சோடு மங்கல் குரலடைப் பென்பர் பாரோர்
பம்மல்மந் திப்பு முடல் பொருத்திக்கட் டுகைமந் தாரஞ்
செம்முத லைம்பே ரென்பர் சீமாட்டி தலைவி செல்வி.

திருநெல்வேலிப் பிரதேசத்துள்ள வழக்குச் சொற்கள் இதன்கண் மிகுதியாயுள்ளமை இந்நூலின் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

நிகண்டுகளிற் சொற்கள் பல்குதல்

இதுகாறும் கூறிய ஒருசொற் பல பொருள் நிகண்டுகளிலே சொற்களுள் செய்யுட்டொகையும் வரவரப் பெருகிக் கொண்டே போவது எளிதிலே காணத்தக்கது. சூடாமணி

நிகண்டிற் பதினோராந் தொகுதியில் 310 செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. வேதகிரி முதலியாருடைய நூதன சூடாமணியில் 583 செய்யுட்கள் இருக்கின்றன. அரும்பொருள் விளக்க நிகண்டினை நோக்கினால் ஒரு பிரதியில் 700 செய்யுட்களும் பிறிதொரு பிரதியில் 740 செய்யுட்களும் உள்ளன. நாநார்த்ததீபிகையில் 1100 செய்யுட்கள் காணப்படுகின்றன. விரிவு நிகண்டின்கண்ணும் இவ்வெண்ணிற்கு மேலாகவே செய்யுட்கள் உள்ளன. இவ்விரிவிற்குக் காரணம் யாது? மேலைநாடுகளிலே சமீபத்தில் நிகழ்ந்த கோர யுத்தத்தின் பயனாக நூற்றுக் கணக்கான புதிய சொற்கள் அந்நாட்டு மொழிகளிற் புகுந்தனவென்றறிகின்றோம். பிற மொழி பேசும் மக்களோடு பல்வேறு காரணங்களால் நெருங்கி யூடாடுவதனாலும், புதிய சொற்கள் மீளாக் கடனாக வாங்கப்பெற்று அம்மொழிகளில் வழங்குகின்றன. பிரகிருதி தத்துவ ஆராய்ச்சி நாடோறும் பெருகப் பெருக ஆயிரக்கணக்கான சொற்கள் ஆங்கில முதலிய மொழிகளிற் புகுந்து நிலவுவதும் கண்கூடே. பிருகிருதியை மேன்மேலும் வெற்றி கொள்ளுவதாலும் நூதன யந்திரங்கள் மேன்மேலும் இயற்றுவதாலும் பொதுஜனங்களின் அனுபவம் முதிர, அதன் வாயிலாக அம்மொழிகளிற் புகுந்து பயிலுஞ் சொற்கள் வரம்பின்றியுள்ளன. ஒரு மொழியைப் பேசும் மக்களது அறிவும் அனுபவமும் நாகரிகமும் வியாபகத் தன்மையும் பெருக பெருக, அம்மொழியிலுள்ள சொற்களும் பெருகிக் கொண்டே செல்வனவாம். இவ்வகையான காரணங்களாலே சூடாமணிக்குப்பின் சொற்கள் பெருகியதெனப்பெரும்பாலும் கூறமுடியவில்லை. இதன் காலமாகிய 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அரசியல் மாறுபாடுகள் பற்பல ஏற்பட்டன வென்பது உண்மையே, பிறமொழி பேசும் மக்களோடு தமிழ் மக்கள் ஊடாடிவந்தனரென்பதும்மெய்யே. என்னும், இவற்றால் நிகண்டுகளுட் புகுந்த சொற்கள் மிகச் சிலவே, தமிழ் மக்களில் ஒரு சிலரை வரம்புகடந்து ஆட்டிவந்த வடமொழிப் பேராசையே இம்மொழிப் பெருக்கிற்கு முக்கிய காரணமெனத் தோன்றுகிறது. தமிழில் நூல்-வழக்கினும் உலக-வழக்கினும் புகுந்து தமிழ் மயமாய் மாறிவிட்ட வடசொற்கள் இந்நிகண்டுகளில் இடம் பெறுதல் அத்தியாவசியகமே. இவையேயன்றி இருவகை வழக்கினும் பயிலாத சொற்களும் வடமொழியிற்றானும் மிக அருகியே வரக் கூடும் மொழிகளும் இவற்றிற்காணப்படுகின்றன. அனுபவ வாயிலாக வந்த சொற்கள் ஒரு மொழியில் நிலைபெறுவனவே யன்றி, மேற்கூறியவாறு புகுத்தப்பெற்ற கடன்சொற்கள்

வழக்கிற் புகுதல் தானும் அரிதாம். கீழ்வரும் உதாரணங்களைக் காண்க:

பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
பகலோநா ளொருமு கூர்த்தம் பகலவ னடுவே தேசு
மகரமே சுருப் பூந்தாதாம் வசிகூர்மை வசியம் வாளே
அகமன மனையே பாவ மகலிட முள்ளு மாமே.

இது சூடாமணியிலே ககரவெதுகைச் செய்யுள். இதன் கண் வடமொழிப் பதங்களும் தமிழ்ப் பதங்களும் விரவிவந்துள்ளமை காணலாம். கூறப்பெற்ற வடசொற்கள் பாவுந் தமிழ் நூல் வழக்கிற் சாதாரணமாய்க் காணக்கூடுஞ் சொற்களேயாம்.

நீபமே கடைய யற்சொனாளும் நீர்க்கடம்பு மாகும்;
சாபமே யங்க தச்சொற் றனுவரை யாடே முப்பேர்;
கோபமே சீற்ற மீதல் குறிக்குமிந் திரகோ பப்பேர்
யூபமே வேள்வித் தம்ப முறுபடை வகுப்பே மட்டை

இஃது அரும்பொருள் விளக்க நிகண்டினுள் பகர வெதுகைச் செய்யுள். இதன்கண் வந்துள்ள எதுகைச் சொற்கள் முழுவதும் வடமொழிச் சொற்களே. எனினும் இவை நூல் வழக்கினும் உலக வழக்கினும் பயின்று வருவனவேயாம்.

சூநிர்த மினியமெய்ச் சொல்லு மங்களம்
பேஙில மிலந்தைக்காய் வநமு ருங்கைப்பேர்
தேநுகை யிளங்கற்றா மாதங் கப்பிடி
சூநைநந் தனியண்ணம் வதைக்குஞ் சூழலே

இது நாநார்த்த தீபிகைச் செய்யுள்; நகர வெதுகையைச் சார்ந்தது. இதன்கண் வந்துள்ளன அனைத்தும் வடமொழிச் சொற்களாம். ஆனால் இவை தமிழில் நூல் வழக்கில் இதுவரை பயின்றறியாதன; ஒருசில வடமொழி நூல்களினும் மிக அருகியே காணப்படுவன.

ஒரு சொற் பல்பொருளைக் கூறும் இந் நிகண்டுகளிற் சொற்களும் பொருள்களும் பெருகி அதிகரிக்கும் முறை கூர்ந்து நோக்குதற்குரியது. ஒரு மொழிக்கே தனித்துரிய சொற்களுக்குப் பலபொருளிருத்தல் அசம்பாவிதமன்று; பொருள்கள் குறைதலும் பலவாதலும் நெருங்கிய ஆட்சித் தொடர்புபற்றியேயாம். உதாரணமாக, 'அகழ்' என்ற சொல்லை எடுத்துக் கொள்க. இதன் பொருளை 'அகழென்ப அகழி தொட்டல்' என்று அரும்பொருள் விளக்கம் விரிக்கின்றது. தோண்டுதல் (தொட்டல்) என்ற வினையையுணர்த்துஞ் சொல்லாய்த் தோன்றிப் பின்னர்த் தோண்டப்

டப்பெற்ற அகழ்க்கிடங்கையும் ஆட்சிமுறையான் உணர்த்திற்று. இக்காலத்தில் 'தோண்டுதல்' என்ற பொருளில் உலக வழக்காறற்று, அகழ்க்கிடங்கு ஒன்றனையே அஃது உணர்த்துகின்றது. இச்சொல் 'பொருட்கேடு' உற்றதாம். இதற்கு மாறாக, ஆட்சிமுறைபற்றிப் பொருள்கள் விரிந்து பலவாகி நிற்குஞ் சொற்களும் மிகப் பலவாகவே இருத்தல் வேண்டும். இவற்றிற்கு மேலாகப் பிறிதொரு வகையாற் பொருள் பெருகிய சொற்களும் உள. தமிழ் மக்கள் பிற மொழி மக்களோடு உறவாடிக் கலந்து பல திறப்பட்ட வாழ்வுடையராய் மேன்மேலாக விருத்தியடைய, பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலத்தல் இயல்பே. அவ்வாறு வந்து கலந்த சொற்களுள் வடமொழிச் சொற்கள் மிக முக்கியமானவையென்று கருதத்தக்கன. அவை செய்யுள் வழக்கில் முதன் முதலாகத் தோன்றினவென்று கொள்ளுதற்கும் தக்க ஆதாரமுள்ளது. செய்யுளீட்டச் சொற்களையுணர்த்துமிடத்து ஆசிரியர் தொல்காப்பியனார் 'இயற்சொற் றிரிசொல் திசைச்சொல் வடசொலென் றனைத்தே செய்யுளீட்டச் சொல்லே' என்று கூறுகின்றார். இவ்வடசொற்களுள் பெரும்பாலன உச்சாரணபேத முதலியவற்றால் எளிதிலுணரத்தகும் பல்வேறு தனிச் சொற்களாயிருந்த போதிலும், தமிழில்வரும்போது ஒரேவடிவு பெற்றுச்சொல் ஒன்றாய் முடிந்து பொருள்கள் பலவாயமைகின்றன. உதாரணமாக 'அகம்' என்ற சொல்லை யெடுத்துக்கொள்க. இதன் பொருள் 'அகமான் மாமனையுள் ளுள்ள மகலம்வெற் புடன்பா வப்பேர்' (அரும்பொருள் 13) என விரிக்கப்படுகிறது. 'ஆன்மா' 'உள்' 'உள்ளம்' என்ற பொருள்களை நேராகவும் இலக்கணையாகவும் உணர்த்தும் வடசொல் 'अहम्' என்பது. வெற்பு (மலை) என்ற பொருளுக்குரிய வடசொல் 'अग:' என்பது. பாவம் என்ற பொருளுக்குரிய வடசொல் 'अघम्' என்பது. இச்சொற்களெல்லாம் தமிழில் 'அகம்' என்ற ஒரே வடிவந்தாங்கிப் பொருள்கள் பல பெற்று வழங்குகின்றன. இந்நெறியை மேற்கொண்டு தமிழ்மொழியில் வழங்கும் வட சொற்களால் பல்பொருட் சொற்கள் அதிகரித்தன. பிற மொழிச் சொற்களும் இவ்வகையில் உதவியிருக்குமென்றே தோன்றுகிறது. வடமொழிச் சொற்களில் உச்சாரண பேத முதலிய வேறுபாடுகளை யொழித்தது போலவே தமிழ் மொழிச் சொற்களிலும் சிறு வேறுபாடுகளை யொழித்துச் சொற்கியையப் பொருள்களை விருத்தி செய்து கொண்டனர். தகுதியற்ற சில இடங்களிலும்கூட இம்முறையைக் கைக் கொண்டுவிட்டனர். உதாரணமாகக்

'கேவணம்' என்ற சொல் ஆபரணங்களில் மணிகள் அழுத்துங்குழியென்று பொருள்படும். இதற்கும் 'கோவணம்' என்ற சொல்லிற்கும் உள்ள வேறுபாட்டினையழித்துக் 'கோவணம்' என்ற சொல்லுக்கே 'கல்லழுத்துங்குழி' யெனவொரு பொருளும் அரும்பொருள் விளக்க நிகண்டுட் கூறப்பட்டிருக்கிறது. ஏதோ ஒருசில இடங்களில் 'கேவணம்' என்பதனைக் 'கோவணம்' என்று பாமரர் கூறும் வழக்குப் பற்றி இங்ஙனம் பொருளுரைக்கப்பட்டதெனச் சமாதானம் கூறலாம். எனினும் நிகண்டாசிரியர் சொற்பொருள்களை இருவகை வழக்குகளையும் முற்றநோக்கி வேறுபாடுகளை நன்கறிந்து நூலியற்றவேண்டுங் கடப்பாடுடையர். இம்முறையிற் பிழைத்தமையினாலே தமிழ் நிகண்டுகளுட் புகுந்த சொல்வழுக்களும் பொருள்வழுக்களும் மிகப் பலவாம். இவ்வாறு பல்வேறு காரணங்களாற் சொற்களும் பொருள்களும் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றன.

அரும்பொருள் விளக்க நிகண்டு: வரலாறு

சூடாமணி நிகண்டு 11-ம் தொகுதியின் மரபிலே வந்த நூல்களிற் காலத்தான் முந்தியது இப்போது என்னால் வெளியிடப்பெறும் அரும்பொருள் விளக்க நிகண்டென்பது முன்னரே கூறினேன். இந்நிகண்டினை யியற்றிய அருமருந்தைய தேசிகர் வீரசைவ மரபினர்; சிவப்பிரகாசரென்பவரின் புதல்வர்: திருச்செந்தூரில் வாழ்ந்தவர். தமது ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைக்கந்த தேசிகருடைய ஆணையைத் தம் தலைமேற்கொண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு என்பனவற்றிலுள்ள ஒரு சொல் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து, எதுகைமுறையிலமைத்து 700 விருத்தங்களால் இந்நூலினை யியற்றினர். இஃது அரங்கேற்றப்பெற்ற காலம் சாலிவாகன சகம் 1685-ம் ஆண்டு சித்திரபானு, மாசி மாசம், சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமையாகும். எனவே கி.பி. 1763-ல் இந்நூல் இயற்றி முடிந்தது.

நூலாசிரியரைக் குறித்து வேறு யாதும் அறியக்கூடவில்லை. பச்சைக்கந்த தேசிகரைப் பற்றிய செய்திகளும் தெரிதற்கியலவில்லை. பச்சைக் கந்த தேசிகர் மடமொன்று சிதம்பரத்தின் கண் இன்றும் உள்ளது. இந்த மடத்தின் ஸ்தாபனாசாரியாராகிய ஆதிப் பச்சைக்கந்த தேசிகரைக் குறித்துச் சிறியதொரு வரலாறு 'சித்தாந்த சிகாமணி' என்னும் நூலின் முகவுரையில் அதன் பதிப்பாசிரியராகிய

நாகிசெட்டியாரவர்களால் தரப்பட்டுள்ளது. அது வருமாறு:-

'இவ்வாசிரியர் கன்னடதேயத்திலே யவதரித்து, மல்லிகார்ச்சுன பர்வதத்திலே சிலகாலந் தவம்புரிந்து, சிவானுக்கிரகம் பெற்று, பின்னர்த் தென்திசை நோக்கி வருங்கால் வழியிலே சோமேசர் கட்டமுது அளிக்கவுண்டு, மலையனூரையடைந்து, அங்கே சலத்திற் பதிந்து கிடந்த மரகதக் கடகமானது தானே வந்து தமது திருமேனியிலே பச்சையொளி பரப்பிப் பிரகாசிக்கும்படி அற்புதங் காட்டியருளி, அது கண்ட அரசனால் யானை முதலிய பல விருதுகளுந் தந்து உபசரிக்கப்பெற்று, சிதம்பரத்தை யடைந்து, தெய்வீகமுற்று, விளங்கியிருந்தவர் பச்சைக்கந்தவுடையார் என்பதும் வழக்கம்.'

கி.பி. 1763-ல் இருந்த பச்சைக்கந்த தேசிகருக்கு எத்தனை காலத்துக்கு முன் இம்மடம் ஸ்தாபிக்கப்பெற்றதென அறிதற்கில்லை. ஆனால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் ஞானாசிரியராகிய சிவஞான பாலைய தேசிகர்[1] பச்சைக்கந்த தேசிகருடைய மரபினரென்று கூறப்படுதலினாலே அவர் காலத்தில் (அஃதாவது கி.பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில்) இம் மடம் இருந்ததென்று தெரிகின்றது.

இந் நூலாசிரியர் ஆதார நூல்களாகக் கொண்டவற்றுள் அகராதி நிகண்டு மொன்றென்பது கூர்ந்துணரத் தக்கது. இந்நிகண்டு இயற்றியவர் இரேவண சித்தரென்று முன்னரே விளக்கப்பட்டது. வீர சைவர்களுடைய மூலாசாரியருளொருவர் ரேவணாராத்ரியர் என்பது பிரசித்தம். எனவே அகராதி நிகண்டின் ஆசிரியர் வீர சைவராவர். சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இவர் ஒரு தலைமுறை முற்பட்டவர். வீரசைவர் பெரும்பாலுங் கன்னடதேசத்தொடர்புடையராதலினாலே, இவர் தம் நிகண்டுள்ளே கன்னடச் சொற்கள் பலவற்றைச் சேர்த்திருக்கிறாரென்று எண்ண இடமுண்டு. அகராதி நிகண்டினை அரும்பொருள் விளக்க நிகண்டு பலவிடங்களில் அடியொற்றிச் செல்வது காணலாம். அருமருந்தைய தேசிகரும் வீரசைவராதல் பற்றி அந்நூலை விசேடித்துப் போற்றி யிருப்பரென்பது கூறவேண்டா.

---

1. சிவஞானபாலையர் சித்தரென்றும் வீரசைவமரபினரல்லரென்றும் ஒரு சாரார் கூறுவர்.

இவ்வாசிரியர் வாழ்ந்த இடம் திருச்செந்தூர் என்பது முன்னமே குறிக்கப்பட்டது. இந்த நகரம் வீர சைவர் மிக்கு விளங்கிய இடமாகும். சிவப்பிரகாச சுவாமிகள் இந்நகரத்திற்குச் சென்று 'நிரோட்டக யமக வந்தாதி' பாடிய வரலாறும் அது வீர சைவத் தொடர்புடையது என்பதை விளக்கும்.

இந்நூல் ஒரெதுகை வருக்கத்தில் பிறவெதுகைச் சொற்கள் கலவாதபடி இயற்றப் பெற்றதொரு நிகண்டாகும். செய்யுட்களெல்லாம் இனிய ஓசையுடன் ஒழுகுகின்றன. இதன் கண் மூவாயிரத்திருநூறு சொற்களுக்கு மேலாக பொருள் விளக்கப்பட்டுள்ளது.

அரும்பொருள் விளக்கத்தின் ஏட்டுப் பிரதிகள்

இந்நூலைப் பதிப்பித்தற்கு இரண்டு ஏட்டுப் பிரதிகளும் ஒரு காகிதப் பிரதியும் கிடைத்தன. ஏட்டுப் பிரதிகளுள் ஒன்றும் காகிதப் பிரதியும் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ளன. காகிதப் பிரதி ஆண்டுள்ள ஏட்டுப் பிரதியைப் பார்த்துப் பெயர்த்தெழுதியதே யாகும். இவ் வேட்டுப் பிரதியின் இறுதியில் 'தெட்சிணாமூர்த்தி திருவடி வாழ்க. கச்சியப்பதேசிகன் திருவடி வாழ்க. சிவஞான தேசிகன் திருவடி வாழ்க. மாத்தூர் சரவண முதலியார் குமாரன் மணியப்பன் அரும்பொருள் விளக்க நிகண்டு எழுதி நிறைந்தது. எடுத்தவன் படித்துக் கொடுக்கவேணும்' என்று காணப்படுகிறது. சிவஞான தேசிகர் என்ற திராவிட மகாபாஷ்யகர்த்தரும் இற்றைக்குச் சுமார் 150 வருடங்கட்கு முன்னிருந்தவருமாகிய சிவஞான சுவாமிகள் தாமென்று தோன்றுகிறது. இவர் முத்தி பெற்றது கி.பி. 1785-ல். சுவாமிகளது சீடருளொருவராகிய கச்சியப்பமுனிவரே கச்சியப்ப தேசிகரெனக் குறிக்கப்பெற்றவர். இம் முனிவர் கி.பி. 1790-ல் சிவபதமடைந்தாரென்பது 'ஏர்தருசாலிவாகன சகாத்தமாயிரத் தெழுசதத் தொருபத்திரண்டின் மேல்' என்று வருஞ் செய்யுளால் அறியலாகும். இவருடைய காலத்துள்ள ஒருவரால் இப் பிரதியெழுதப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே இப் பிரதிதோன்றியது சுமார் கி.பி. 1775-ம் ஆண்டாக இருக்கலாம். பிரதியின் கையெழுத்துக்கள் திருந்திய வடிவிலமைந்தனவல்ல; பிழைகளும் பல காணப்படுகின்றன. இவ் வேட்டுப் பிரதியிற் காட்டினும் இதன் கடிதப் பிரதியிற் பிழைகள் மிகமிக மலிந்துள்ளன.

இவ்விரண்டு பிரதிகளை மாத்திரங்கொண்டு நூலையச் சிடுதல் தகுதியன்றென வெண்ணி வேறு பிரதிகள் பெறு தற்குப் பல அன்பர்கள் மூலமாக முயன்றேன். சிறிதும் பயன் படவில்லை. ஒருமுறை இந்நிகண்டினைக் குறித்துத் தாக்ஷி ணாத்திய கலாநிதி மகாமகோபாத்தியாய சாமிநாதை யரவர்களிடம் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. அவர்கள் தங்களி டம் ஒரு பிரதியிருப்பதாகத் தெரிவித்தார்கள். பிறிதொரு பிரதியிருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டேன். ஐயரவர்களும் தங்கள் பிரதியை மிக்க அன்போடு உதவி னார்கள். இப்பிரதி மிகவும் செவ்வையானது; நன்றாகப் போற்றிவைக்கப் பெற்றதாயுள்ளது. இதன் கண் 93 இதழ்கள் உள்ளன. இதழின் பக்கம் ஒவ்வொன்றும் நான்கு செய்யுட்களுக்குரிய எட்டு வரிகள் கொண்டன. ஏட்டுப் பலகைக்கு வெளியிற் கோத்திருக்கும் ஓலைநறுக்கில் 'முத்துக் குமாரசாமி முதலியார் அரும்பொருள் விளக்கம்' என்று காணப்படுகிறது. ஏட்டினிறுதியில் 'விரோதிகிருது ஞ ஐப்பசி கஅ-உயில் அரும்பொருள் விளக்க நிகண்டு எழுதி நிறைவேறியது. இஃது எழுதியது பச்சையப்ப முதலியார். பொய்கைப்பாக்கம் பச்சையப்பவாத்தியார்' என்று எழுதப் பட்டுள்ளது. எனவே இப்பிரதி கி.பி. 1852-ல் எழுதப் பெற்றதென விளங்குகிறது.

ஆனால் ஐயரவர்களுடைய பிரதி எதிர்பாராதவிதத் திற் கலக்க முண்டுபண்ணுவதாயிற்று. இதன்கண். அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியிற் காட்டிலும் 40 செய்யுட்கள் அதிகமாயிருந்தன. இரண்டிற்கு முள்ளவேறுபாடு இவ்வளவில் அமைந்துவிடவில்லை. மற்றை 700 செய்யுட் களுள்ளும் சில செய்யுட்கள் தவிர பெரும்பாலன ஒன்றி லுள்ளபடி மற்றொன்றிற் காணுதற்கரிய வாயிருந்தன. இந்நிகண்டின் அனுபந்தமொன்றில் ககரவெதுகைப் பகு தியை ஐயரவர்கள் ஏட்டுப் பிரதியிலுள்ளவாறு கொடுத் துள்ளேன். இதனையும் நூலின்கண் உள்ள ககரவெதுகைச் செய்யுட்களையும் ஒப்பு நோக்கி யான் கூறியதன் உண்மை தெளியலாம்.

இவ்விரண்டனுள் எப்பிரதி ஆசிரியரியற்றிய மூலப் பிரதியோடொத்ததாயிருத்தல் கூடுமென்று நிச்சயிப்பது அவசியமாயிற்று. இதற்கு ஏட்டுப் பிரதிகளின் நிலைமையைச் சிறிது ஊன்றி நோக்குதல் வேண்டும். அரசாங்கப் பிரதியில் எழுத்துக்கள் திருந்திய வடிவில் அமைந்தன

வல்லவென்று மேலே கூறினேன். அதனை யெழுதியோர் பிழையற எழுதுதற்குப் போதிய வன்மையுடையாரல்லர். எனவே இவர் தமக்குக் கிடைத்த மூலத்தை ஒருவாறாகப் பிரதி செய்து வைத்தனரென்றே கொள்ளற்பாலது. ஐயர வர்களுடைய பிரதி தமிழறிவு மிக்குடைய கல்வியாளரொரு வரால் எழுதப்பெற்றதென அப்பிரதியைத் திறந்து பார்த்த வளவில் ஊகிக்கக் கூடியதாம். எனவே, இவர்தம் மூலப் பிரதியின் குற்றங்குறைகளை நிரப்பிச் செம்மைப்படுத்தும் ஆற்றலுடையவராவர். ஆதலால் இவ்விரண்டு பிரதிகளுள்ளும் ஐயரவர்களுடைய பிரதி மூலப் பிரதியினின்றும் வேறுபட்ட பிரதியாயிருக்கலாமென்று ஒருவாறு ஊகித்தல் கூடும். இவ்வூகம் பிறிதொரு காரணத்தால் வலியுறுகின் றது. ஐயரவர்கள் பிரதியில் 'சுவைதிகழ் சொல்விருத்தத் தொகை மூவொன் பானூற் றேழாய்' என நூலின் செய் யுட்டொகை அறுதியிடப்படுகின்றன. ஆனால் பிரதியின்கட் காணுஞ் செய்யுட்டொகை 740. இந்த வேறுபாடு மூலப் பிரதியைப் புதுக்க முயன்றதன் பயனாக ஏற்பட்டதெனக் கொள்ள வேண்டுமேயன்றிப் பிறிதொரு காரணத்தால் அதனை விளக்குதல் ஏலாது. நூலை யிங்ஙனம் புதுக்கி விரிக்க வேண்டும் நோக்கமும் காணுதற்கெளிதாகவே யுள் ளது. தமிழ் மாணவர்கட்குப் பாடங் கற்பிக்கும் ஆசிரியர் கள் தாம் அறிவுறுத்தும் ஒருசொல்-பல்பொருள் நிகண்டு இயன்றவரை நிரம்பியதாயிருக்க வேண்டுமென்று கருதினர். இக்கருத்துப் பற்றியே பற்பல ஒருசொற் பல்பொருள் நிகண்டுகள் தோன்றின. புதுவதாக நூல் இயற்றுதலினும் முன்புள்ள நூலினைச் செப்பஞ்செய்தல் எளிதில் இயலுவ தொன்றாகும். இதுபோன்றதொரு நோக்கம் பற்றியே ஐயரவர்கள் பிரதி விரித்துச் செய்யப் பெற்றதாமெனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகின்றது. பிரதிகளிரண்டினும், ஐயரவர்கள் பிரதி காலத்தாற் பிந்தியதாதலும் எனது கருத்தை ஆதரிக்குங் காரணங்களுள் ஒன்றாகும். ஆகவே இப்பிரதியைக் காட்டினும் அரசாங்கக் கையெழுத்துப் புத்த தகசாலைப் பிரதி மூலத்தோடு பெரிதும் ஒத்ததாயிருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது, பிற்குறித்த பிரதி யையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு அரும்பொருள் விளக்க நிகண்டு இப்பொழுது அச்சயற்றி வெளியிடப் படுகின்றது.

பதிப்பின் முறை

ஆனால், இப்பதிப்பிற்கு ஐயரவர்களுடைய பிரதி இன்றி யமையாததாய் முடிந்தது. அதனை யான் பயன்படுத்திய

முறையை இங்கே அறிவிக்குங் கடப்பாடுடையேன். அச்சியற்றிய நூற்கண்ணே பொருள் விளக்குஞ் செய்துள்ள சொற்களுக்கெல்லம் ஓர் அகராதியைத் தொகுத்தேன். இவ்வகராதியில் மூவாயிரத்து இருநூற்றுச் சொச்சம் வார்த்தைகள் உள்ளன. இச்சொற்களனைத்தும் ஐயரவர்கள் பிரதியிற் பல்வேறிடங்களிற் காணப்பட்டன. ஒவ்வொரு சொல்லும் இரண்டு பிரதிகளிலும் வந்துள்ள இடங்களை ஒப்பு நோக்கிப் பாட பேதங்கள் குறிக்கப்பட்டன. இதனால், பாடபேதமென்று குறிக்கப்பெற்றதனைச் சொல்லுக்குரிய பொருள் பிறிதோரிடத்திற் பிறவாறு காணப்படுகின்றதென்னுமளவில் மாத்திரமே கொள்ள வேண்டும். இங்ஙனமன்றிப் பிறவகையான வேறுபடாத ஒரே செய்யுட்பாடத்திற் குறித்த சொல்லினது பொருள் விளக்கும் பகுதி மாத்திரம் பாடாந்தரமாகக் காணப்படுகின்றதெனக் கொள்ளுதல் கூடாது. நூல் முழுவதினும் பாட பேதங்கள் கொடுத்திருக்கும் முறை இதுவேயென்பது நன்றாக மனங் கொள்ளுதற்குரியது. பாட பேதங்கள் இவ்வாறாக, ஒவ்வொரெதுகையிலும் அச்சியற்றிய பிரதியின்கண் காணப் பெறாத பல சொற்கள் ஐயரவர்கள் பிரதியிற் பொருள் விளக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றை அவ்வவ்வெதுகையின் இறுதியிலே 'மிகை' என்று சுட்டி முறையேயெண்களிட்டுக் கொடுத்திருக்கிறேன். மிகைச் சொற்களுக்கு ஓர் அகராதியும் தனிப்படத் தரப்பட்டுள்ளது. அச்சுப் பிரதியிற் பொருள் விளக்கப்பெற்ற சொற்கள் சிலவற்றிற்கு ரூபபேதங்கள் காணப்படுகின்றன. அவற்றையும் 'மிகை' அகராதியிற் சேர்த்துள்ளேன்.

மேலே குறித்துள்ளபடி ஐயரவர்களுடைய பிரதியால் இந்நூற்பதிப்பு அடைந்த திருத்தங்கள் மிகப் பல. பாடங்கள் நிச்சயப்படுதற்கும் ஐயங்கள் நீங்குதற்கும், பொருள்கள் விளக்கமெய்தற்கும் அதுவே பேருதவியாயிருந்தது. அரிதிற் பெற்று வைத்திருக்கும் பிரதியை மிக்க தாராள சிந்தையுடன் உதவிய ஐயரவர்களுக்கு யான் பெரிதுங் கடப்பட்டுள்ளேன்.

சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலிருந்து யான் வேண்டும்போதெல்லாம் பிரதிகள் கொடுத்துதவிவரும் அந்தப் புத்தகசாலை யதிபரவர்களுக்கு எனது நன்றியுரித்தாகின்றது. இந்நிகண்டினைச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டுதவியவர்களும் தமிழ்ப் பரிபாலனஞ்செய்தல் தமது வாணாளின் முக்கிய நோக்கங்களு ளொன்றாகக்

கொண்டு உழைத்து வருபவர்களும் ஆகியபிரும்ம ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. அவர்கள் பால் எனது அன்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நிகண்டுகளை அச்சிட்டு வெளியிடும் முயற்சி

இந்நூலின் இரண்டாவது அனுபந்தமாகச் சேர்க்கப் பெற்றுள்ள பலபொருளொருசொல் லகராதியை எழுதும் போது உடனிருந்துதவிய எனது நண்பர் பி.ஆர். மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களுடைய உதவி பெரிதும் பாராட்டத்தக்கது. இஃது அச்சாகுங் காலத்துப் பல்வகை யுதவிகள் புரிந்த 'செந்தமிழ்'ப் பத்திராசிரியரவர்களுக்கு எனது நன்றி யுரித்தாகின்றது. இப்போது வெளியிடப் படும் அரும்பொருள் விளக்க நிகண்டு தவிர, இன்னும் பல நிகண்டுகள் வெளிவரவேண்டியனவாயுள்ளன. நிகண்டுக ளனைத்தையும் பயன்படுத்தித் தொகுக்கப்பெற்ற அகராதி இதுவரை வெளிவரவில்லை. பல வகையானும் நிரம்பிய பேரகராதி வெளிவருதற்குரிய பெருமுயற்சியைத் தமிழ் நாடு முழுவதும் ஒருமுகப்பட்ட உள்ளத்துடன் மேற்கொள் ளும்படி இறைவன் அருள்புரிவாராக.

நூதன ஆங்கிலப் பேரகராதியைக் குறித்துத் தமிழன் பர்கள் அறிவார்கள். இச்சீரிய பெருநூல் காலகதியிற் பற் பல கோலஞ்சமைந்து சொற்செல்வி நடனஞ் செய்யும் அரங்கமாக விளங்குகின்றது. நாடோறும் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவுந் திகழ்கின்றது. இவ்வகராதியின் சரித முழுமையும் இடை விடாத உழைப்பினாலும் சலிப்பறியாத மனவொருமையி னாலும் நிரம்பியுள்ளது. இதன் பொருட்டுத் தம்மையே தத்தஞ்செய்து முயன்றுவந்தோர் ஒருவர் இருவரல்லர்; பல அறிஞர்கள் தங்களாயுட்காலத்தையும் ஆத்ம சக்தி யையும் இவ் வகராதியொன்றற்கே யுரிமையாக்கினர். இவ் அறிஞர்களும் ஒரு தலைமுறையினரல்லர்; அடுத்தடுத்து வந்த நான்கு தலைமுறையினர் அகராதிக்கென உழைத்து வந்தனர். இங்கிலாந்து தேசத்தினர் மட்டுமன்று இங்ஙு னம் உழைத்து வந்தவர்; ஆங்கிலம் பேசும் மக்களுள்ளதேசப் பகுதிகளனைத்தும் இயன்றவரை கூட்டுறவு செய்துவந்தன. இந்நூதன ஆங்கிலப் பேரகராதியோடு எவ்வகையால் நோக்கினும் ஒத்து நிற்கக்கூடிய அகராதிப் பொருள்கள் நமது தமிழன்னையிடத்தே உள்ளன. அவற்றையறிந்து

பயன்படுத்தும் மக்களை அவள் பெற்றிலளென்று உலகம் பழியாமைப் பொருட்டுத் தமிழ் மக்களாயுள்ளோர் அனைவரும் ஒருமுகமாக உழைத்தல் வேண்டும். இப்பெரு முயற்சியில், எனது ஆற்றலுக்கேற்றபடி உழைத்து வருகிறேன். தமிழ் அகராதிக்குரிய மூல நூல்களை யொவ்வொன்றாக வெளியிடக் கருதுகிறேன். இறைவன் திருவருள் முன்னிற்க.

என்னை யுணர்ந்த இளம்பருவ முற்கொண்டே
உன்னை யுயிரெனக்கொண் டோம்பினேன்—மன்னுபுகழ்த்
தெய்வத் தமிழணங்கே நின் சேவடிக்கே யாளாக்கி
உய்விக்கக் கொள்வா யுளம்.

2. கயாதர நிகண்டு

நூற்பெயர்

கயாகரம் என்ற பெயரால் இந்நூலைப் பற்றிப் பலரும் கேள்வியுற்றிருக்கக்கூடும். வேதகிரி முதலியார் தாம் வெளியிட்ட இலக்கியக் களஞ்சியத்திலே 'கயாகர நிகண்டு' என்ற பெயருள்ள நூலொன்றைக் காட்டியிருக்கின்றனர்[1]. செந்தமிழ்ப் பத்திரிகை 5-ம் தொகுதியில் (பக். 121) 'கயா கர நிகண்டு' என்பதுபற்றி ஒரு குறிப்பு வெளிவந்துள்ளது. அரும்பொருள் விளக்க நிகண்டின் பாயிரத்திலே (செய்.6) 'செஞ்சொற் கயாகர னிவராற் சொற்ற பாவியல் நூல்' என ஆசிரியர் பெயர் வருகின்றது.

ஆண்டிப் புலவர் இயற்றிய ஆசிரிய நிகண்டுப் பதிப்பில்[2]

முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கயனுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமக ராதி யிவை
முற்று மொன்ருய்த் திரட்டி

என்று இந்நூற் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. மாறனலங் காரவுரைப் பதிப்பிலும் (பாயி. 27, உரை) 'கயாகர நிகண்டு' எனவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

---

1. தமிழ்ப் புலவர் சரித்திரம் (அ. குமாரசாமிப் புலவர்) பக்கம் 187; 'கயாகர நிகண்டு' என்றதன் கீழ்,

பரிதி யாதித்தன் இமகரன் பதங்கன் பனிப்பகை விண்மணி யென்றாழ்
அருணன் மார்த்தாண்டன் பாற்கரன் கதிரோ னாயிரங் கதிரினன் தபனன்
இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன் எல்லியம் போருக நண்பன்
தருமொளி வேந்தன் சூரனே சவிதா தரணிகண் சுடரவ னென்பார்

என்ற செய்யுளும் காட்டப்பட்டுள்ளது. இச்செய்யுள் 'சாதக சிந்தாமணி'யில் காலநிகண்டு' என்னும் பகுதியிற் காணப் படுகின்றது.

2. முதலிரண்டு தொகுதிகளே 1861-ல் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

ஆனால் செந்தமிழில் 'கயாகர நிகண்டு' என்று தலைப்புக் காணப்பட்ட போதிலும், அதன்கீழ் வந்துள்ள செய்யுட்களில் கெயாதரம் என்றே கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஏட்டுப் பிரதிகளில் 'கயாதரம்', 'கயாகரம்' என்ற இரண்டு வடிவங்களும் காணப்படுகின்றன. அரும்பொருள் விளக்க நிகண்டுப் பாயிரத்திலும் நூலாசிரியன் பெயர் வருமிடத்து கயாதரன் என்ற பாடபேதங் காணப்படுகின்றது.

இவ்விரண்டு ரூபங்களில் எதனை நூற்பெயராகக் கொள்ளுதல் வேண்டும்? செந்தமிழ்ப் பத்திராசிரியரவர்கள் 'கயாகரர்-சொற்கிருப்பிடமானவர்: கை-சொல்' என வியுத்பத்தி காட்டியிருக்கிறார்கள்.

இவ் வியுத்பத்தியும் பொருளும் வடமொழியிலக்கணத்தின்படி கொள்ளத்தக்கன வல்லவென்று[1] தெரிகின்றது. எனவே 'கயாதரம்' என்பதனையே நூற்பெயராகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. தொல்காப்பியர் இயற்றியது தொல்காப்பியம் ஆதல் போல, கயாதரர் இயற்றிய நூல் கயாதரம் ஆகும். 'கயாதரர்' என்பது கஜாதர் என்ற வடமொழியின் திரிபாதல் வெளிப்படை. இங்ஙனம் ஒரு பெயர்[2] வடமொழியிற் கேட்கப்படுகின்றது. இதனால் 'கயாதரம்' என்பதே நூற்பெயரென்பது நன்கு வலியுறுகின்றது.

நூலாசிரியர் வரலாறு

கயாதரரைக் குறித்து நாம் அறியலாவன ஒரு சிலவே. இவர் 'தேவை' என்னும் இராமேச்சுரத்தில் வாழ்ந்தவர்; தம்மைத் 'தேவைக்கெயாதரன்' என்றும் (செய். 2,3), 'தேவையதிபன்' என்றும் (147), 'தேவை நன்னாடன்' என்றும் (223) கூறிக் கொள்கின்றார். அந்தணர் மரபில் உதித்தவர்; தம்மை 'தொல்வேதியன்' எனவும் (2), 'மறையவர் வேந்தன்' எனவும் (147), 'மறைபயில் நாவினன்' எனவும் (187) குறிக்கின்றார். இவர் காசிப கோத்திரத்தைச் சார்ந்தவர் (223). சிவபக்தர்; 'இடபகேதனன் பற்று மறவாதவன்'

1. இவ்விஷயத்தை ஆராய்ந்து தெரிவித்தவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்து வடமொழித் துறையில், ஸீனியர் லெக்சரராக இருந்த டாக்டர் டி.ஆர். சிந்தாமணியவர்கள்.

2. குந்த குந்தாசாரியரது ப்ரவசனஸாரம்; ஆங்கில மொழி பெயர்ப்பு, 1935 முன்னுரை பக். XII.

என்றும் (2), 'வடக்குங்குமக் கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக் கீழ்க்-கிடக்குந் தனி நெஞ்சுடையோன்' (4) என்றும் இந்நூல் கூறும். வடமொழியிலும் (47), தென் மொழியிலும் (187, 23) வல்லவர். தமிழில் ஓர் அந்தாதி இவர் பாடியுள்ளாரெனத் தெரிகின்றது.

மேவு மரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய கோன் (402)

என இவர் கூறப்படுகின்றார். 'இராமேச்சுரக் கோவை' என்ற ஒரு கோவைப் பிரபந்தமும் இவர் இயற்றியுள்ளார்.

......தமிழ்த் தேவை மன்னுங்
கோவை யிராமீசுரக் கோவைசொன்ன குருபரன்

என்று இவரை இந்நூல் (402) கூறும். நூலின் இறுதியில்,

அரும்பொரு ளந்தாதி சூடிய சீதர ணம் பிகையைத்
தரும்பொருள் செய்த பரம்பரை யான் (566)

என்று வரும் செய்யுட் பகுதியினின்று கயாதரரின் பரம்பரையைக் குறித்து ஓர் அரிய செய்தி கூறப்படுவதாகத் தெரிகின்றது. திருமால் தமது தங்கையைச் சிவபெருமான் மணம் புரிதற்குக் கொடுக்கும்படி இடை நின்று பேசி முடித்த பரம்பரையை இவர் சார்ந்தவர் என்பதே அச்செய்தி. இச்செய்யுளின் 8, 9 சீர்கள் 'பராபரையாநந' என்று ஏட்டுப் பிரதியிற் காணப்படுகின்றன. 'பரம்பரை யான் (ற்ன)ந்' என்பது உண்மைப் பாடமாக இருத்தல் கூடுமெனத் தோன்றுகிறது.

நூல் தோன்றிய காலம்

இந்நூலின் காலத்தைத் திட்டமாக வரையறுத்தற்குரிய சான்றுகள் இல்லை. அரும்பொருள் விளக்க நிகண்டு சாலிவாகனசகம் 1865-ல் (அதாவது கி.பி. 1763) இயற்றப்பட்டது. அந்நிகண்டிலே கயாதரரையும் அவருடைய நிகண்டையும் பற்றிக் கூறப்படுகின்றது. எனவே கி.பி. 1763-ல் கயாதர நிகண்டு மிகப் பிரசித்தமாய் வழங்கி வந்தமை தெளிவாம். இக்கயாதரம் இன்னும் மிகப் பழமையானதென்பது வேறொரு நூலால் விளங்குகின்றது. மாறனலங்காரவுரையில்[1] 'இலக்கண நூல்களை அகவலின் வெள்ளையின் அறைகவென்று முந்து நூல் விதித்தமையுளவாகவும், விதியாது நீக்கிய கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் என்னும் பாவினத்தாற் பின்பு இலக்கண நூல் செய்தோர் இலக்கணங்களைக் கூறியதும், கற்றோரா லெடுக்கப்பட்டு

1. பாயிரம், 27 உரை

உலகின்கண் வழங்குதலுக்கு, உதாரணமாக யாப்பருங்கலக் காரிகை, கயாதரம், நிகண்டு சூளாமணி யென்ற நூல்கள் தரப்பட்டுள்ளன. மாறனலங்கார நூலின் ஆசிரியர் திருக் குருகா மான்மியத்தைக் கொல்லம் 723ல் அரங்கேற்றின ரென்பது,

அறந்திகழாண்டவை யெழுநூற் றிருபான் மூன்றில்
அணிகிளர் கார்த் திகைமாத மெட்டில் வாழ்வு
சிறந்திடு திங் களினாளுத் தரத்தி லேகா
தேசியின் மகரமுகூர்த் தந் திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ் மாறர் திருமுன் னாதிச்
சுருதியுடன் மிருதியுஞ் சொற் றமிழின் வாய்மை
பிறந்த பெருங் காப்பியமும் தெரிந்தோர் கேட்கும்
பெற்றியுட னரங்கேற்றப் பெற்றதன்றே.

என்று வருஞ் செய்யுளால் அறியக் கிடக்கின்றது. மாற னலங்காரத்திற்கு உரையிட்ட[1] காரிரத்ந கவிராயர் இத் திருக்குருகைப் பெருமாள் கவிராயருடைய சிஷ்யராவர். இவ்வுரையில் திருக்குருகா மான்மியத்தினின்றும் செய்யுட்கள் உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. எனவே இவ் வுரை சுமார் கொல்லம் 750-ல் (அதாவது கி.பி. 1575) தோன்றியிருக்கலாம். காரிரத்ந கவிராயர் தென்திருப் பேரை-சுவாமி மகர நெடுங்குழைக்காதர் திருப்பணி மாலையை யியற்றியவரும் மதுரைத் திருமலைநாயக்கர் (கி.பி. 1623-1629) காவை வடமலையப்ப பிள்ளையன் முதலானோரது காலத்தவருமாகிய திருமேனிக் கவிராயரின் தந்தையாராவர்.

கல்விக் கடலைக் கரைகண்ட ரத்னகவி
செல்வக் குமாரன் திருமேனி–நல்ல
திருப்பணி மாலையிந்தத் தேசமெல்லாம் வாழ்த்த
விருப்பமுடன் செய்தான் விரைந்து

என்பது திருப்பணிமாலைச் செய்யுள்.

மேற்கூறியவற்றினின்று கயாதரம் சுமாராக கி.பி. 1575-ல் கல்வியாளர்கள் அங்கீகரித்து எடுத்தாண்ட நிகண் டென்பது விளங்கும். இதற்கு எவ்வளவு காலத்துக்கு முன் இந்நூல் தோன்றிய தென்பது விளங்கவில்லை. ஆனால் 'காரிகை யேரு மொருநூலும் பெண்ணுங் கலித்துறையும்' (412) என்று இந்நூலில் வந்துள்ளது. ஒரு நூல் என்றது

1. மாறனலங்கார வரலாறு பக். 28

யாப்பருங்கலக் காரிகையை. எனவே காரிகை தோன்றிய 11-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டு இந்நூல் தோன்றியதாதல் வேண்டும். காரிகையென்னும் நூல் நீண்ட காலமாக வழக்கிலிருந்த பிற்பாடுதான், அதன்கண் பயின்றுவரும் கலித்துறைக்குக் காரிகை யென்னும் பெயர் வந்திருத்தல் கூடும். 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்புது வழக்கு ஏற்பட்டதெனக் கொள்ளலாம். இவ்வழக்கு, நூலில் எடுத்தாளப் படுதற்கு இது தோன்றி ஐம்பது வருஷ காலமேனும் ஆகியிருக்க வேண்டுமெனக் கொள்ளுதல் தகும். ஆதலால் உத்தேசம்[1] கி.பி. 1450-ல் கயாதரம் இயற்றப்பட்டிருக்கலாமென வரையறுத்தல் தக்கதெனத் தோன்றுகிறது. இக் காலத்திற்கும் கற்றோர்கள் இந்நூலை எடுத்து வழங்கிய காலமெனக் குறித்த கி.பி. 1575-க்கும் 125 வருஷங்கள் இடைப்பட்டிருத்தல் பொருத்தமாதலுங் காணலாம். மாறனலங்காரவுரையில் நிகண்டு சூளாமணிக்கு முன்பாகக் கயாதரத்தை அமைத்துக் கூறுவதும் இங்கே அறுதியிட்ட காலத்தோடு பொருந்துகின்றது. நிகண்டு சூளாமணியென்பது வீரை மண்டல புருடரால் கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509-1529) இயற்றப்பட்ட ஒரு நூலென்பது நன்கு அறியப்பட்டதே.

நூலின் பிரதிகள்

கயாதரத்தைப் பதிப்பிடுதற்குக் கிடைத்த பிரதிகள் நான்கு. இவற்றுள் மூன்று ஓலைப் பிரதிகள்; மற்றது கடிதப்பிரதி. ஓலைப் பிரதிகளுள் ஒன்றும், கடிதப் பிரதியும் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் உதவியன. கடிதப் பிரதி ஐயரவர்களின் ஓலைப் பிரதியைப் பார்த்தெழுதியதே.

மற்றை இரண்டு ஓலைப் பிரதிகளுள் ஒன்று[2] மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குரியது; பிறிதொன்று காலஞ்சென்ற

1. யான் பதிப்பித்த அரும்பொருள் விளக்க நிகண்டின் முன்னுரையிலும், யான் ஆங்கிலத்தில் எழுதிய தமிழகராதியின் சரித்திரம் (History of Tamil Lexicography) என்ற வியாசத்திலும் கயாதரத்தின் கால முதலியன பற்றிச் சில வேறுபாடுகள் காணப்படும். பிற்பட நிகழ்ந்த ஆராய்ச்சியின் பயனாய் மேலை முடிபு கொள்ளப்பட்டது.

2. இப்பிரதி ரா. ராகவையங்காரவர்கள் சங்கத்திற்கு உதவியதெனத் தெரிகிறது.

த. கனகசுந்தரம் பிள்ளையவர்களுக்குரியது. சங்கத்துப் பிரதியும் ஐயரவர்களுடைய ஓலைப் பிரதியும் ஆழ்வார் திருநகரிப் பிரதிகளே. இரண்டும் தம்முட் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஒன்றில் ஓரிடத்தில் எழுதாது விடப்பட்டுள்ளதாயின், பிறிதொன்றிலும் அவ்வாறேயுள்ளது. இவ்விரண்டு பிரதிகளிலும் முதற்பத்துத் தொகுதிகளே யுள்ளன. சங்கத்துப் பிரதியில் 'கெயாதர நிகண்டு தொகுதி 10 மூன்றாவதெழுத வேண்டியது; [1]தெய்வநாயப் பெட்டியில் இருப்பு: திருநகரி—கள்ளபிரான் கவிராயர் ஏடு' என்ற குறிப்புக் காணப்படுகிறது. ஐயரவர்கள் பிரதி கொல்லம் 961-ல் (கி.பி. 1786) எழுதப்பட்டது. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் பிரதியில் 11 தொகுதிகள் உள்ளன. அஃது எழுதப் பெற்ற காலம் இடம் முதலியனவற்றை யுணர்த்துங் குறிப்பு யாதும் அதன்கண் காணப்பெறவில்லை.

நூலிலுள்ள தொகுதிகள்

இப்பிரதிகளால் ஓர் ஐயம் ஏற்பட இடமுண்டு. கயாதரம் பத்துத் தொகுதிகளையுடையதா? அல்லது பதினொரு தொகுதிகளையும் உடையதா? பத்துத் தொகுதிகளும் அமைந்துள்ள அந்தாதித் தொடையைப் பின்பற்றியே பதினோராவது தொகுதியும் அமைந்துள்ளது. பிற தொகுதிகளிற்போல, இத்தொகுதியினிடையேயும் 'கெயாதரத்துள்' (செய். 464) என வந்துள்ளது. அன்றியும் இத் தொகுதியின் இறுதிச் செய்யுள்.

> **அரும்பொரு ளந்தாதி சூடிய சீதர னம்பிகையைத்**
> **தரும் பொருள் செய்த பரம்பரையான் [றின]ந் தண்டமி**
> **ழோர்**
> **விரும்பிய கோவை யுரிச்சொற் பனுவல் விரித்துரைத்தான்**
> **பெரும்பொருள் கண்ட கெயா தரன் றேவைப் பெருந்தகையே**

என்பது. இச்செய்யுளால் இத்தொகுதி கயாதரர் இயற்றியதே என்பது முடிவாக விளங்குகின்றது. அரும்பொருள் விளக்க நிகண்டு இயற்றிய அருமந்தைய தேசிகரும்,

> **ரேவண சித்தன் செஞ் சொற் கயாதர னிவராற் சொற்ற**
> **பாவியல் நூற்கூ றோர் சொற் பல்பொருட்டொகையெலாஞ்**
> **சேர்த்து**

எனக் கூறுகின்றார். கயாதரர் சொற்றதாக இவர் குறிப்பிடும் ஒரு சொற் பல்பொருட்டொகை கயாதரத்திலுள்ள பதினொராம் தொகுதியென்பது வெளிப்படை.

---

2. ஏடுகளை வைத்துப் போற்றும் பெட்டிகளுக்குப் பெயரிடுதல் பரமாயிருந்ததென்பது இதனால் விளங்குகிறது.

நூலின் சிறப்பியல்புகள்

இக் கயாதர நிகண்டு அகராதியின் வரலாற்றில் ஒரு முக்கியமான நிலையைக் குறிப்பிக்கின்றது. திவாகரமும், பிங்கலந்தையும் நூற்பாவினால் இயன்றன. இவற்றில் ஒரு சூத்திரத்திற்கும் அடுத்துவரும் சூத்திரத்திற்கும் பொருள் பற்றிய தொடர்பன்றி, வேறு வகையான தொடர்பு யாதும் இல்லை. ஒரு சூத்திரத்தின் கண்ணேயும் ஓர் அடிக்கும் அதனை அடுத்துவரும் அடிக்கும் உள்ள தொடர்பும் இவ்வாறே. இதனால் சூத்திரங்களை முறையே ஞாபகத்தில் வைத்தல் அருமுயற்சியா லன்றிக் கூடாதாம். எளிதிலே ஞாபகத்தில் வைக்கும்படி சொற்பற்றிய ஒரு தொடர்பிருக்குமாயின், அது மிகுதியும் சௌகரியமாயிருக்கு மென்பது கூறவேண்டா. இவ்வகையான தொடர்பினை அமைத்த நூல்களுள் கயாதரம் மிகமுந்தியதாகும்.

கயாதரத்தின் அமைப்பில் முதலாவது நோக்கத்தக்கது அது கட்டளைக் கலித்துறையில் இயன்றுள்ளமை. இவ்வகைப் பாவினம் தமிழுலகில் முற்காலத்தில் பெருவழக்காக இருந்தது. யாப்பருங்கலக்காரிகை முதலிய நூல்களும், எண்ணிறந்த கோவைகளும் இதற்குச் சான்று பகர்வன. இனிய ஓசையும், எண்ணினால் வரையறைப்பட்ட எழுத்தமைதியும், எதுகை மோனை முதலியவற்றின் நயமும் இவ்வகைச் செய்யுட்களைக் கற்போர்க்குப் பெருவிருந்தாய் அமைந்தன. இந்நயங்களையெல்லாம் உட்கொண்டு, ஞாபகத்தில் வைத்தற்குத் தக்கதொரு செய்யுளினமெனக் கருதி, கட்டளைக் கலித்துறையால் மகடூஉ முன்னிலையாகக் கயாதரர் தமது நிகண்டு நூலினை இயற்றினார்.

கற்பவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதலையே பிரதானமாகக் கருதி வேறோர் உபாயத்தையும் இந்நூலாசிரியர் கையாண்டனர். இவ்வுபாயமாவது நூல் முழுவதையும் அந்தாதித் தொடையாக அமைத்தமையே. தனித் தனியே செய்யுளை ஞாபகம் வைத்தலுக்கு மேலாக, ஏதேனும் ஒரு பொருள் பற்றிய பல செய்யுட்களையும், ஓர் இயல் முழுதுமுள்ள செய்யுட்களையும் ஒன்றன்பின் னொன்றாக நினைப்பூட்டுதற்கு அந்தாதித் தொடை மிகச் சிறந்தது. நிகண்டுச் சொற்களை ஞாபகத்தில் நிறுத்துவதற்குப் பொருளியைபினைக் கொள்ளாது சொல்லியைபினைச் சங்கிலித் தொடர்போன்று அமைத்துக் கொண்டது அகராதி வரலாற்றில் ஒரு முக்கியமான மேல்-நிலையென்பது எளிதில் உணரலாம்.

நூலினுல் விளையும் பயன்

இச்சிறப்பு ஒருபாலிருக்க, அரியவான பெயர்கள் ஒரு சிலவற்றின் உண்மை வடிவங்கள் இன்னவெனக் கயாதரம் உணர்த்துகின்றது. திவாகர நிகண்டில் புத்தனுக்குரிய பெயர்களுள் 'பாரின் மிசையோன்' என்பதொன்றும் அச்சுப் புத்தகத்தில் காணப்படுகின்றது. புத்தனுக்கு இப்பெயர் வழங்குதற்கு யாதொரு காரணமும் தோன்றவில்லை. பிரதி செய்தோரால் நேர்ந்த பிழை நெடுங்காலமாக உண்மை வடிவத்தை மறைத்து அச்சிற்புகுந்திருந்தல் வேண்டும். கயாதரத்தில் (செய். 14). இப்பெயர் 'பாரமிதையவன்' என்று காணப்படுகின்றது. இது புத்தனுக்குரிய பெயரென்பது கற்றோரெல்லோரும் அறிவர்.

இங்ஙனம் ஒரு சில பெயர்களின் உண்மை வடிவத்தைத் துலக்குவதோடு, ஒரு சில பெயர்கட்குப் பொருள் வரையறை செய்தற்கண்ணும் கயாதரம் பயன்படுகிறது. 'பைம்மையுங் கௌந்தியும் அருந்தவப் பெண் பெயர்' என்பது திவாகரம் அச்சுப் பிரதியிற் கண்ட பாடம். 'கவுந்தி' என்ற பெயர் சிலப்பதிகாரத்திற் பலவிடங்களிலும் தருகின்றமை ஞாபகத்திற்கு வரலாம். ஆண்டெல்லாம் அச்சொல் அருக சமயத்து மாதவத்தாட்டியின் பெயராக வருகின்றது. எனவே திவாகர அச்சுப் பிரதியில் யாதோரடையுமின்றித் தனிப்பட 'அருந்தவப் பெண்பெயர்' எனக் காணுதல் பிழையாதல் வேண்டும். கயாதரத்திலே 'கவுந்தியும் பம்மையு மாருகதத் தவப்பெண்' (செய். 118) எனக் காணப்படுகின்றது. இது பிழையை நீக்கி, இரண்டு சொற்களின் பொருளையும் வரையறை செய்து உணர்த்துகின்றது.

இங்ஙனம் உதவுதலோடு வேறொரு வகையாகவும் கயாதரம் பயன்படக் கூடியதாய் உள்ளது. நிகண்டுகள் அனைத்தினும் காலத்தால் முந்தியது திவாகரமாகும். இந்நூல் இன்றுகாறும் திருத்தமாகப் பதிப்பிக்கப் பெறவில்லை. பிரதி செய்தோரால் நேர்ந்த பிழைகள் ஒருபுற மிருக்க பல சூத்திரங்கள் பிற்காலத்து ஆசிரியர்களாற் சேர்க்கப் பட்டும், சூத்திர வைப்புமுறை மாற்றப்பட்டும் இருத்தலின் திவாகரத்தின் மூல வடிவம் இன்னதென்றுணர்வது அரிதினு மரிதாய் முடிந்தது. இந்நூலை[1] முதன் முதற்

1. இப்பதிப்பின் தலைப்பக்கம் வருமாறு: 'புத்தகங்கடோறு மொன்றற்கொன் றொவ்வாது வழுஉக்களாற் பொதி வுற்றுக் கிடந்தமையா லவ்வழுஉக்களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும், வேண்டுமிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறியிட்டுச் சேர்த்தும், பெயர் பிரித்தும்....அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.'

பதிப்பித்த (கி.பி. 1835) வித்வான் தாண்டவராய முதலியாரவர்களும் தாமே பல சூத்திரங்களைப் புதியனவாக இயற்றிச் சேர்த்து அச்சிடுவித்தார்கள். இவ்வாறு புதுக்கிய திவாகரமே இப்போது வழங்குவது. ஆகவே ஆராய்ச்சியாளர்க்குச் சிறிதேனும் பயன்படக்கூடிய நிலைமையில் இந் நூல் இல்லை.

ஏட்டுப் பிரதிகளிற் பலவாறாகப் பாடங்கள் மாறுபட்டுள்ளன. ஆனால், திவாகரத்தைப் பின்பற்றியே பெரும் பாலும் கயாதரஞ்[1] செல்கின்றது. 'பொங்கிய முன்னூற் பொருள் தெரிந்து...கெயாதரன் செய்தமைத்தான்' (செய். 285) என்பதில் 'முன்னூல்' என்று குறித்தது திவாகரத் தையேயாதல் வேண்டும். உதாரணத்தாலும் இவ்வுண்மை தெளியலாம்.

நல்லிசை யம்பர்ச் செல்வச் சேந்தனில்
வல்லிற் கல்வியிற் படையிற் கொடையில்
வெல்லுந ரணிவாகை வெற்றிப் பூவே[2]

என்பது திவாகரம்.

....படையிற் கொடையினிற் சூதில் வென்றோர்
யாண்டும் புனைவது வாகையம் போ தென் றியம்பினனே

என்பது கயாதரம் (செய். 220). இங்ஙனம் திவாகர சூத்திரத்தின் பொருளை விடாதுரைத்துச் செல்வதோடு, தொகுதி தோறும் அதன் சூத்திரப் பொருள்-வைப்பு முறையையும் பெரும்பாலும் பின்பற்றிச் செல்கின்றது. எனவே ஓரிடத்தில் சில சூத்திரங்களுக்குரிய பொருள்கள் கயாதரத்திற் காணப்பெற வில்லையெனின், இச்சூத்திரங்கள் திவாகரத்தில் இடைச் செருகலெனக் கொள்ளுவது தகுதியாய் முடிகின்றது. இதற்கேற்ப, திவாகரத்தின் பழம் பிரதிகளில் இச் சூத்திரங்கள் காணட்பெறமாட்டா. இப்பழம் பிரதிகளில் அச்சுப் பிரதியிற் காணட்பெறாத சூத்திரமொன்று இருக்குமாயின், இச்சூத்திரப் பொருள் கயாதரத்துங் காணப்படுதல் ஒரு தலை. இரண்டு நூல்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருத்தலினாலே, பாட நிச்சயஞ்செய்து திவாகரத்தைத் திருத்தமுறப் பதிப்பிடுதற்குக் கயாதரம் பெரிதும் பயன்படுவதாம். திவாகரம் சுமார் 10-ம் நூற்றாண்டில்

---

1. திவாகரத்தில் ஐந்தாவதாகக் காணப்படும் இடப் பெயர்த் தொகுதி கயாதரத்தில் இரண்டாவதாக உள்ளது; காரணம் புலப்படவில்லை.

2. இச் சூத்திரம் அச்சுப் பிரதியில் காணப்படவில்லை.

இயற்றப் பெற்றதொரு நூலாதலின், அக்காலத்துத் தமிழ் நூல்களில் வழங்கிய சொற்களை ஆராய்தற்கும், தமிழ் மக்களுடைய அறிவின் அளவினை ஆராய்தற்கும் அந்நூல் ஒரு சிறந்த கருவியாகும்.

நூலிற் காணும் சில மரபுகள்

இனி, கயாதரத்திற் காணும் சில விசேடங்களைக் குறித்துச் சொல்ல வேண்டுவனவுள. ரகரத்தையடுத்து வல்லினம் வரும் வட சொற்களையெடுத்தாளும்பொழுது, வல்லினத்திற் கியைய றகரங் கொடுத்தே ஆசிரியர் யாண்டும் ஆளுகின்றனர். உதாரணமாக: இரணிய கெற்பன்(13) கந்தற்பன் (21), காற்பாசம் (195,276), சற்கரை (517,548), சுவற்கம், (32,417,420,437,443), சொற்கம் (136), துற்கம் (54,77), துற்கை (27,455), மற்கடம் (161), மாற்கணம் (246), மாற்கம் (68,533), மாற்சாரம் (160) என்பன காண்க.

இவ்வாறெழுதுதல்[1] முற்காலத்து மரபு என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். இச்சொற்களை இக்காலத்து முறைக்கேற்பத் திருத்தி அச்சிடுதல் தக்கதன்றாம். இவ்வெழுத்தமைப்பு முறையை வடமொழியில் ரகரம் வருதற்கு இயைபில்லாத ஒரு சில்லிடங்களிலும் கயாதரர் பின்பற்றுகின்றனர். உதாரணமாக பற்மம் (217, 225), சொற்பனம் (347) என்பனவற்றைக் காண்க.

ஒரு சில தமிழ்ச் சொற்கள் தமக்குரிய நேரிய வடிவத்திலன்றிச் சிறிது உருவம் பிறழ்ந்து காணப்படுகின்றன. உதாரணம் ஈன்றணுமை (334), சிலாகை (225), துடை (134), நாகரீகம் (316), பவுறி (531), மகிட்சி (561), மகுணன் (124) என்பன. இவற்றையும் ஒருசார் வழக்குப் பற்றியனவென்றே கொள்ளுதல் வேண்டும். ஒரு சொல்லால் இதனை விளக்குகின்றேன். மகிழ்நன் என்ற சொல் 'மகிணன்' (இறையனார் களவியல் 1, பக். 18) என்றும், 'மவுணன்' (சிலப்பதிகாரம் 6,37) உரை, மேற்கோள்) என்றும் வந்துள்ளது. இவ்விரண்டு வடிவங்களையும் நோக்கும் பொழுது 'மகுணன்' என்பதும் வழக்கிற் புகுந்திருத்தல் கூடுமெனவே தோன்றுகின்றது. அணுமை என்பது பிரதிகளிற் காணப்படுகின்றமையை டாக்டர் சாமிநாதையரவர்களும் குறித்திருக்கிறார்கள். (ஐங்குறுநூறு, முகவுரை பக். 6.) ஆதலால் மேலே குறித்த சொற்களையெல்லாம் பிரதிகளிற் காணப்பட்டவாறே தந்துள்ளேன்.

---

1. வடசொற்களில் உள்ள ரகரத்தைத் தமிழில் வல்லின றகரமாக வழங்குவது பசுந் தமிழென்பர். (தக்கயாகப். 35 உரை)

ஒரு சில வடசொற்களின் ரூபங்களை நிகண்டாசிரியர்கள் சிலர் திரியவுணர்ந்து, அவற்றைத் தம் திரிபுணர்ச்சிக் குத்தக மாற்றி வழங்கியுள்ளார்கள். இங்ஙனம் மாற்றிய வடிவங்களைக் கயாதரர் எடுத்தாண்டுள்ளார். உதாரணமாக தாசோகம், ஆர்கூடம் என்பன காண்க. தாசோகம் என்பது தாஸோக என்பதன் திரிபு; ஆர்கூடம் என்பது ஆரகூட என்பதன் திரிபு. இச் சொற்கள் அரும்பொருள் விளக்க நிகண்டு முதலியவற்றிலும் காணப்படுகின்றன. பரிசாரம் என்று மற்றை நிகண்டுகளில் வழங்கிய சொல்லைக் கயாதரர் 'பரிசார்' (143) என்று படித்து வழங்குகின்றனர்.

'குலீனன்' (113) என்ற சொல்லை 'குல ஈனன்' என்று பிரித்துக்கொண்டு அதன் பொருளைப் பிறழவுணர்ந்து 'குலீனன் குலமில்லவன்' என்று கயாதரர் செய்யுளியற்றியமை வியப்பினை விளைக்கின்றது. இந்த இடத்தில் பிரதி செய்தோரால் பிழை நேர்ந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. இங்ஙனமே 'இராமேச்சுரக்கோவை' எனவரற்பாலது 'இராமீசுரக் கோவை' (402) எனப் பிரதியிற் காணப்படுவதும் எழுதுவோரால் நேர்ந்த பிழையாதல் வேண்டும்.

கடைசியாக, இக்காலத்துப் பொருள் விளங்காத சில அடைமொழிகளைக் கயாதரர் வழங்குகின்றனர். குலித்த (207), திவரும் (444), துயிரில் (517) முதலியன உதாரணங்களாம்.

பதிப்பில் மேற்கொண்ட நியமங்கள்

மேல் விவரித்தவாறு பல திறத்தானும் போற்றுதற்குரிய இக்கயாதர நிகண்டு தமிழ்நாட்டில் இப்பொழுது கிடைப்பதரிதாகிவிட்டது. இதனைப் பரிசோதித்தற்குக் கிடைத்த ஓலைப் பிரதிகள் மூன்றேயெனக் கூறினேன். இப் பிரதிகளாற் கிடைத்த பாட பேதங்களை அடிக் குறிப்பாகக் காட்டியிருக்கிறேன். அடிக் குறிப்பிற் காணும் தடித்த எண்கள் நூலின் செய்யுளெண்களாம்; மற்றையெண்கள் செய்யுளின் சீர்க்குரிய எண்களாம். பிரதிகளிற் காணுதலின்றி என்னால் ஊகிக்கப்பட்டன இருதலைப் பகரத்துள் [ ] கொடுக்கப்பட்டுள்ளன.

பதினொராந் தொகுதி ஒரு பிரதியில் மாத்திரம் இருந்தமையாலும், பலவிடங்களில் எழுத்துக்களும் தொடர்களும் பிறழ்ந்தும் மறைந்தும் போயினமையாலும்,இத்தொகுதியைச்

செப்பம் செய்தலில் மிக்க சிரமம் ஏற்பட்டது. உதாரணமாக,

துயிரிலமவலி சொறமாயின க ங க ஙறறா செ னனல
கொமபு (செய்.517)

என்ற அடியின் உண்மை வடிவங் கண்டுபிடிப்பது எத்தனை அருமைப்பாடென்பது கண்டுபிடிக்க முயன்று தெரிந்து கொள்ளலாம். செய்யுட்கள் பெரும்பாலனவற்றிலும் இத்தனை பிறழ்ச்சி இருக்குமாயின், இதனால் நேர்ந்த அல்லற்பாடு சொல்லுந்தரத்ததாகுமோ? பெரிதும் முயன்று மூன்று செய்யுட்களைத் (468,477,496) திருத்தியமைக்க இயல வில்லை. நான்கு செய்யுட்கள் (479,494,503,519) அடி நிரம்பாமலுள்ளன; இவைபற்றி யான் செய்தற்கு யாது மில்லை.

இப்பதினொராந் தொகுதியைப் பதிப்பித்தலிற் சில நியமங்களை மேற்கொண்டேன். பலபொருளொரு சொல் தடித்தவெழுத்திற் காட்டப்பட்டுள்ளது. அச்சொல்லின் பொருள்கள் முடியுமிடத்தில் அரைப்புள்ளி(;) இடப்பட்டுள்ளது. அச் சொல் தெளிவாக விளங்கும்படி சந்தி பிரித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக,

குருகு இளமைமகை வளையுலை மூக்குக் குருக்கத்திபுள், (419)

என்ற அடியில் குருகிளமை என்று சந்தி புணர்த்தாது பிரித்திருத்தலும் 'குருகு' என்பது தடித்த எழுத்தில் அச்சிட்டிருத்தலும், இறுதியில் அரைப்புள்ளி கொடுத்திருத்தலும் காணலாம்.

கடின சந்திகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணம் நரல்தல் (398) முதலியன.

இந்நியமங்களை ஏனைத் தொகுதிகளிலும் கையாண்டிருப்பின் நலமேயாகும். ஆனால், இரண்டாவது அனுபந்தத்தில் இத்தொகுதிகளிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கியிருக்கும் பொருள்களை விடாது காட்டியிருத்தலினாலே, இந்நியமங்கள் அத்துணை ஆவசியகமில்லையெனக் கருதப்பட்டது. மூன்றாவது அனுபந்தத்தில் பல்பொருளொருசொல்லின் அகராதி தரப்பட்டிருக்கிறது.

3. நாம தீப நிகண்டு

'நிகண்டு' என்பது முதன் முதலில் வடமொழி வேதத்திற்கு அங்கமாய் அதன் கண்ணே பயின்றுவரும் சொற்களின் பொருளுணர்த்துங் கருவிநூலொன்றனுக்கே சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர், சொற்பொருளுணர்த்தும் நூல்கட்கெல்லாம் இப்பெயர் ஏற்புடையதாய்க் கொள்ளப் பட்டது. இம்மொழிப் பொருட் காரணம் இன்னும் ஒரு தலையாய்த் துணிந்து கூறுதற்கு இயலாதவாறு மயக்கத் திற்கிடனாயுள்ளமை பலரும் அறிந்ததே. இதனாற் போலும் 'இடுகுறியாற் பெற்றன; நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு என இவை' என்று களவியலுரைகாரர் முதலி யோர் கூறி முடித்தனர். நிகண்டு நூலினை 'உரிச்சொற் பனுவல்' என்பது தமிழ் வழக்கு.[1],

---

1. இது பலபடியானும் உணரக்கிடக்கின்றது. பிங் கலந்தையை 'உரிச்சொற் கிளவி'யென அதன் பாயிரம் உரைக்கின்றது. பவணந்தி முனிவர் 'பிங்கல முதலா-நல் லோருரிச்சொலுள் நயந்தனர் கொளலே' எனச் சூத்திர மியற்றினர். மயிலைநாதர், பிங்கல முதலான புலவர்க ளாற் சொல்லப்பட்ட உரிச்சொற் பனுவல்களுள் என உரை வகுத்தனர். இவரே பிறிதோரிடத்து (நன். 387) 'இவ் விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற்பனுவல்களுள் ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக' எனக் கூறினர். கெயாதரர் இயற்றிய 'கெயாதரம்' என்னும் நிகண்டு நூலுள் 'ஓங்கிடப-கேதனன்பற்று மறவாத தேவைக் கெயாதரன்றொல்-வேதியன் சொற்ற வுரிச்சொற்பனுவலு மேம்படுமே' என வருகின்றது. உண்மையிதுவாகலின், 'உரிச்சொல் நிகண்டு' என்பது மேற்சுட்டிய சொல்வழக் கினை மறந்தொழிந்த இக்காலத்துப் பிறந்த புதுப்பெய ரென்றே கொள்ளற்பாலது. 'உரிச்சொல்' என்பதே காங் கேயர் நூலுக்கு உரிய பெயரென்பது,

உத்தமசீலத்துக் காங்கேயன் சொன்ன வுரிச்சொ றன்னை
வைத்து மனத்துத் திருக்கானை வாழும்வணிகன்கற்றோர்
சித்தமகிழப் பராக்ரம பாண்டிய தேவன் கண்டீர்
பத்துத் தொகுதியிற் சேர்த்தானெவரும் படித்திடவே

என்று வரும் அரிய செய்யுளாலும் '950-ம் ஸு புரட்டாசிமீ 14உ ஆழ்வார் திருநகரி மாசித்தெரு தேவர் பிரான் கவி ராயர் உரிச்சொல் நீடூழி வாழ்க. பெரிய திருவடி திரு மேனி கவிராயகுரு புத்திரரான இரத்தின கவிராய குரு பாத தாமரைகளே சரணம். ஆசாரியனே தெய்வம்' என்று இந்நிகண்டின் ஏட்டுப் பிரதியொன்றிற்காணும் இறுதிக் குறிப் பினாலும் அறியத்தகும்.

தமிழிலுள்ள நிகண்டுகளில் மிகப் பழமையானது சேந்தன் திவாகரம். அந்நூல் தோன்றிய காலம் இன்னும் நிச்சயிக்கப் பெறவில்லை. அதன்கண் மிகுதியாய்க் காணப் படும் வடநூற் பொருள்கள் அது சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட தென்றுணர்த்துகின்றன. அதனைச் செய்வித்த அம்பர் கிழான் அருவந்தை புறநானூற்றுள் கல்லாடனார் பாடிய அம்பர் கிழான் அருவந்தையின் வழியில் பிற் காலத்து விளங்கிய ஒருவனாயிருத்தல் கூடும். தமிழ் நாட்டுப் பெருவேந்தர் மூவர் பெயர்களும், அவர்களை யடுத்து 'வேள்புல வரசர்களுக்கு வேந்தர்' என வேள்புலவரசர் பெயரும், பின்னர்க் குறுநில வேந்தர்கள் பெயர்களும் முறையே அந்நிகண்டில் கூறப்படுகின்றன; தமிழ்வேந் தர்கள் கொடியோடொப்பச் சளுக்க - அரசர்க்குரிய கேழற் கொடியும் விதந்து ஓதப்படுகின்றது; சளுக்க வேந்தர்க்கு வேறு பெயர்களில்லாதிருப்பவும். அவர்கள் இன்னரென ஆட்சிபுரிந்த நிலம்பற்றி வலிந்து உணர்த்தப்படுகின்றார்கள். இக்காரணங்களால் சளுக்கிய மரபினர் பிரபல மன்னராய் விளங்கிய காலத்து அஃது இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுதல் தகும். இக்காலம் கி.பி. 6-8-ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதாகவேனும், 10-12-ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதாகவேனும் இருத்தல் வேண்டும் என்பது தென்தேச சரித்தால் உணரலாகும். பிற்கூறிய காலத்தின் இறுதியில் வாழ்ந்தாராகக் கொள் ளத் தகும் இளம்பூரணர் அந்நிகண்டினை யெடுத்தாளுத லின் (தொ.சொல்.390), அஃது அவர் காலத்துக்கு முற் பட்டதென்பது தேற்றம். குறுநில வேந்தர் பெயராக 'அரட்டர்' என்பது திவாகரப் பிரதி சிலவற்றில் காணப் படுகின்றது. ராஷ்ட்ரகூடர் (அரட்டர்) குறுநில வேந்தரா யிருந்த காலத்து இப்பெயர் தோன்றியிருக்கலாமென்று ஊகித்தற்கிடமுண்டு. ராஷ்ட்ரகூடர் பிரபலராய் விளங்கியது கி.பி. 750 முதல் 950 வரையாம். இக்காலத்திற்குப் பின் நூல் தோன்றியதாதல் பெறப்படும். ஆகவே 11-ம் நூற் றாண்டின் முற்பகுதி திவாகரம் இயற்றப்பெற்ற கால மெனக் கொள்ளுவது பொருந்துமெனத் தோன்றுகிறது. நூலிற் கூறப்பட்ட விஷயங்களும் இம் முடிவையே வலியுறுத் துகின்றன.

இக்காலந்தொட்டுத் தமிழ்நாட்டின் அரசியல் நிலை பெரிதும் மாறுதலடையத் தொடங்கிற்று. சோழ மன்னர்கள் தங்கள் அரசுரிமையைப் பலவாறாக விருத்தி செய்யத்

தலைப்பட்டனர். பல நாடுகளை வென்று அடிப்படுத்தார்கள். இச் சோழர் முதலிய தமிழ - அரசராதிக்கியம் குறைவுற்ற பின்னர், மகமதியர்களும், தெலுங்கவரசர்களும், இவர்கட்குப் பின் மீண்டும் மகமதிய அரசர்களும் தமிழ் நாட்டில் வலி மிக்கு விளங்கினார்கள். தமிழ்நாட்டின் இருதய ஸ்தானம் என்று சொல்லத்தக்க மதுரையிலுங் கூட மகமதிய-அரசாட்சி சிறிது காலம் இருந்தது. பிறமொழி பேசும் மக்கள் தமிழ் மக்களோடு பெரிதுங் கலந்து உறவாடத் தொடங்கினர். இதனால் பிறமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் மிகப் பயின்று வரலாயின. அன்றியும், ஏராளமான வடமொழிச் சொற்களும் இம்மொழியோடு கலந்து புத்துயிர் பெற்று நிலவத் தொடங்கின. இக்காரணங்களால் சொற்பொருளுணர்த்தும் நூல்கள் அடிக்கடி தோன்றவேண்டும் அவசியம் ஏற்பட்டது. இவ்வவசியத்திற்கேற்பப் பல நிகண்டுகள் பல்வேறு காலத்தில் இயற்றப் பெற்றுப் பிரசாரமெய்தியிருந்தன.

இந்நிகண்டுகளுள்ளே கடைசியாகத் தோன்றிய பெருநூலாகும் இப்போது வெளியிடப்பெறும் நாமதீப நிகண்டு. ஒருபொருட் பல்பெயர்த் தொகுதி, ஒருசொற்பல் பொருட் பெயர்த் தொகுதி, பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதியென முத்திறப்படும் நிகண்டு நூல்களுள் இஃது ஒருபொருட் பல்பெயர்த் தொகுதியாய் விளங்குவது. ஒருபொருட் பல்பெயரை 'ஸமாநார்த்தபதம்' என்பர் வடமொழியாளர். நிகண்டுகளுள் பெரும்பாலன திவாகரத்தில் காணும் தொகுதி முறையையே பின்பற்றிச் செல்கின்றன. ஆனால் இந்நூல் அவ்வாறு செல்லாது புதியதொரு பாகுபாடு அமைத்துக் கொண்டு இனிது நடைபெறுகின்றது. அம்முறை வருமாறு:



நூல் முழுவதும் 808 வெண்பாக்களால் இயன்றுள்ளது. இவற்றுள் பாயிரம் 8 செய்யுள்; எஞ்சிய 800 செய்யுட்களும் பொருட் பெயர்களையே வியவகரிப்பன. 'வெண்பா வொரு காலிற் கல்லானை' என்று வருஞ் செய்யுள் அவ்வகைப்பா, மனனஞ் செய்தற்கு எளிதாயுளதெனப் பண்டையோர் கொண்டனரென்பதை யுணர்த்துகின்றது. இக் கருத்துப் பற்றிப்போலும் வெண்பாவினால் இந்நூல் செய்யப் பெற்றது. பண்டை நிகண்டுகளில் 'உரிச்சொல்' ஒன்றே வெண்பாவினால் அமைந்துள்ளது. ஆனால் அது மிகச் சுருங்கிய நூல். இந்நூல் மிகவிரிந்த நூலாதலோடு செய்யுட்களும் பல இடங்களில் நயம்பெற அமைந்துள்ளது. பிறிதொரு நூல்-நயமும் இங்கே சிறப்பாகக் கூறிக் கொள்ளுதற்குரியது. தெய்வ மானிட வர்க்கங்களிற் பெயர் கூறப்பட்டாருடைய சரிதங்கள் அவர்க்குரிய பெயர்கள் கொண்டே அறியக்கூடியனவாயுள்ளன. உதாரணமாக, விட்டுணுவிற்குரிய பெயர்களை (செய்யுள் 44-51) நோக்கியுணர்ந்து கொள்க.

இந்நூலிற் கூறப்பட்டுள்ள பொருட் பெயர்கள் ஏறத்தாழப் பன்னீராயிரமாகும். இப்பெயர்களுள் சங்க காலந் தொட்டு ஆசிரியரது காலம் வரையும் தமிழிற்பயின்றுள்ள சொற்களைக் காணலாம்.

மலை நாட்டிலிருந்து தமிழிற் புகுந்த சில திசைச் சொற்களும் இதன்கண் உள்ளன. 'தைநாறுகன்று' என இந் நூல் கூறும். மலையாள மொழியில் மரக்கன்று 'தை'யெனச் சாதாரணமாய் வழங்கப்படுகின்றது. 'ஆட்சி' என்பது வாரத்தின் பெயரென இந்நூலுணர்த்தும். மலையாளத்தில் இம் மொழி 'ஆழ்ச்சை' என்ற வடிவம் தாங்கி இப்பொருளில் வழங்குகின்றது. இவைபோன்றனவும் பிறவும் அறிந்தின்புறுதற்குரியன. 'பல்லாயிர நிகண்டிற் பண்டிதர்கள் சொன்ன பொரு'-'ளெல்லா மெளிதாயினி துணர....பன்னு தமிழ் நாப தீபம்' என்று பாயிரத்தில் வந்துள்ள அடிகளை நோக்கும்போது இந்நூலையியற்றுதற் கண் நெடுங்காலமாய் இதன் ஆசிரியர் உழைத்திருத்தல் வேண்டுமென்பது புலனாகின்றது.

இந்நூலாசிரியரது வரலாறாக அறியக்கூடியன மிகச் சிலவேயாம். இவர் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவரென்பது பாயிரத்தால் விளங்குகின்றது. தம் தந்தையாரைக் குறித்து இவர் கூறுவதெல்லாம் அவர் 'பொதிகை நிகண்டு' எனப்

பெயரிய ஒருசொற் பல்பொருள் நிகண்டொன்று இயற்றியுள்ளாரென்பதேயாம். 'தொகை நிகண்டு' எனப் பெயரிய நூலொன்று தாமே செய்திருப்பதாகவும் உணர்த்துகின்றனர். இங்ஙனமாக நிகண்டின் முத்திறத் தொகுதியையும் இவரும் இவர்தம் தந்தையாரும் செய்து முடித்துள்ளார்கள்.

கல்வி கேள்விகளிற் சிறப்புற்று விளங்கிய இத்தந்தை தநயர்களைக் குறித்து எனது நெடுநாளைய நண்பர் எம்.பி.எஸ். துரைசாமி முதலியாரவர்கள் கல்லிடைக்குறிச்சி சென்று விசாரணை செய்ததில் இருவரும் ஆண்டுள்ள தளிச்சேரி மடத்தைச் சார்ந்தவர்களென்று மட்டுந் தெரிந்ததேயன்றி வேறு யாதும் தெரியக்கூடவில்லை. ஆனால், தமிழ்ப் பொழிற் பத்திரிகையொன்றால் (துணர் IV, மலர் 7,8,9) சில முக்கிய விஷயங்கள் விளங்கின. அதன்கண் வெளிவந்த, 'சாமிநாதம்' என்ற இலக்கணநூலொன்றன் பாயிரத்தில்

பூமிசைப் பன்மொழியின் வேங்கடமுக் கடற்குட்
புணர்தமிழைந் தியனி கண்டாய்ந் தாரெளிதினுணரத்
தோமின் முன்னூல் வழியொருநூல் வேண்டுமெனத் துறைசைச்
சுடர்மணி சுப்பிரமணிய குருமணி பார்த்தருள
ஆமிதெனக் குருபதமுந் திருக்குறிப்புந் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்ர மணியனென வீன்ற
சாமிகவி ராசனதி குலத்தோன் கல்லிடையூர்ச்
சம்பனன் செய்தனன் சாமிநாத மென்றிந் நூலே

எனவொரு செய்யுள் காணப்படுகின்றது. இதனால் கல்லிடைக்குறிச்சி யூரினரான சாமி கவிராசருக்குச் சிவசுப்பிரமணிய கவிராசர் என்ற ஒரு புத்திரருண்டென்பதும், இருவரும் திருவாடுதுறையாதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்தவர்களென்பதும், இருவரும் தமிழ்ப் புலமை நிரம்பியவர்களென்பதும், இருவரும் நிகண்டுத் துறையில் சிறந்து விளங்கியவர்களென்பதும் உணரக் கிடக்கின்றன. நாமதீப நூலாசிரியரது வரலாற்றோடு மேற்குறித்தன பெரிதும் ஒத்திருத்தலின், மேலைச் செய்யுளில் வரும் 'சிவசுப்பிரமணியன்' இவரேயாதல் வேண்டும். இந்த நிகண்டின் பாயிரத்தில் 'சாமிகவி ராசனையுந் தான் வணங்கிப் பேருரைப்பன்' என வருதலும் இம்முடிவினையே வற்புறுத்தும். தமது தந்தையும் வித்தியா குருவுமாயிருந்தாரைத் தமது நூற்பாயிரத்து வணங்கினாரென்று கொள்ளுதல் சாலவும் பொருந்துவதாம்.

சாமி கவிராசரின் காலம் 250 வருடங்கட்கு முற்பட்ட தெனத் 'தமிழ்ப் பொழில்' கூறும். எனக்குக் கிடைத்த நாம தீபப் பிரதிகளில் ஒன்றிலேனும் இந்நூலின் காலத்தை யறிதற்குரிய குறிப்புக்கள் இல்லை. விக்கிரமசிங்கபுரத்துக் குருக்களையா அவர்களிடமிருந்து வரப்பெற்ற உரை பாடச் சுவடித் தலைப்பில் 'சிவகுருநாத தேசிகர் ஏடு' என்றும் உள்ளேடொன்றில் '1042-ம் வருடம் கார்த்திகை மாதம் 10, ௨, என்றும் காணப்படுகிறது. இஃது இவ்வேடு எழுதிய காலத்தையுணர்த்துமேயல்லாது நூலாசிரியர் காலத்தையேனும் உரைபாடஞ் செய்தார் காலத்தையேனும் உணர்த்துவதாகக் கொள்ளுதற்கில்லை. சிவசுப்பிரமணி யக் கவிராயர் தாம் இயற்றிய பூவைப்புராணத்தைக் கொல் லம் 985-ம் ௵-ல் (கி.பி.1810) அரங்கேற்றியதாகக் கூறு கிறார். சாமி கவிராசர் இயற்றிய பொதிகை நிகண்டின் பிரதியொன்றில் '984-ம்௵ தைமீ 8௨ பிள்ளையன் தளவாய் வாசித்து வரும் ஏடு முற்றும்' எனக் காணப்படுகின்றது. அக்காலத்துத்தானே பொதிகை நிகண்டு பிரசாரத்தில் வந் துள்ள தாயின், அதற்குப் பலவாண்டுகட்கு முன்னரே அந்நூல் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று துணி யத் தரும். ஆகவே, சாமி கவிராசரும் அவரது நன்மகனா ராகிய இந்நூலாசிரியரும் கொல்லம் 10-ம் நூற்றாண்டின ரென்று கொள்ளலாம்.

இந்நூலைப் பதிப்பித்தற்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகள் தந்துதவிய அன்பர்கள் சென்னை ராஜதானிக் கல்லூரித் தமிழாசிரியர் நண்பர் சி.ஆர். நமசிவாய முதலியாரவர்களும், ஆழ்வார்குறிச்சி மேலைப்பண்ணை அன்பர் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் பி.எ.,பி.எல். அவர்களும் ஆவர். இவ்விருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை யிங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நண் பர்களால் நான்கு மூலப் பிரதிகளும் மூன்று உரைபாடப் பிரதிகளும் கிடைத்தன. மூலப் பிரதிகளுள் இரண்டு பிரதி களில் மாத்திரமே நூல் முற்றுமிருந்தது; மற்றையவை அபூர்த்தி. உரைப் பிரதிகளில் ஒன்றேனும் பூர்த்தியான தன்று. ஒரு பிரதியில் 17-ம் செய்யுளிலிருந்து 282-ம் செய் யுள் வரையுள்ள உரைபாடமே காணப்பட்டது. பிறிதொரு பிரதியில் 116-ம் செய்யுளிலிருந்து 775-ம் செய்யுள் வரை யுள்ள உரைபாடம் அடங்கியிருந்தது; ஆனால் இடையி டையே பலவிதழ்கள் தவறிவிட்டன. மூன்றாம் பிரதியும் இங்ஙனம் குறைபட்ட பிரதியேயாகும். இம்மூன்று உரை

பாடப் பிரதிகளும் பல இடங்களிற் பிழைபட்டிருந்தன. ஆகவே, உரைபாடத்தைத் தழுவிப் புதியதோருரை யெழுதுதலே தகுதியெனக் கருதி அவ்வாறு செய்துள்ளேன்.

மேற்குறித்த பிரதிகளும், நூல் முழுதுமடங்கிய மூலப் பிரதியொன்றும் உரைப்பிரதிகள் இரண்டும், நூலுரைப் பகுதி முற்றும் அச்சியற்றி முடிந்த பின்னரே எனக்குக் கிடைத்தன. ஆதலால் அவைகளை வைத்து ஒப்பு நோக்கிப் பாட பேதங்கள் கொடுப்பதொன்றே இயலுவதாயிற்று.

இந்நிகண்டின் சொல்லகராதி அச்சிலிருந்தபொழுது நிகண்டேடுகள் பார்க்கும் பொருட்டுக் காலஞ்சென்ற தி.த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் வீட்டுக்குச் சென்றேன். பிள்ளையவர்கள் செல்வக் குமாரர்களாகிய இராஜசேகரமும் அவரது சகோதரரும் எனக்குத் தங்களிடமிருந்த பிரதிகளனைத்தையும் காட்டி வேண்டும் பிரதிகளையும் மிக்க அன்போடு உதவினார்கள். இவ்விருவர் பாலும் மிக்க நன்றி புடையவனாயிருக்கின்றேன். நாமதீப நிகண்டு மூலத்தின் கடுதாசிப் பிரதியொன்று இவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றேன். இது நமச்சிவாய முதலியாரவர்களிடமிருந்து கிடைத்த ஏடுகளில் ஒன்றன் பிரதியேயென்பது ஒப்பு நோக்குகையில் தெரியவந்தது.

இந்நூலின் இறுதியிற் சேர்த்திருக்கும் சொல்லகராதியை யெழுதி முடித்தற்கண் உதவி புரிந்தவர்கள் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை, நண்பர் எஸ். சோமசுந்தர தேசிகரவர்களும், பி.ஆர். மீனாட்சிசுந்தர முதலியார் பி.எ.பி.எல், அவர்களுமாவர். இவ்விருவரது அன்புடைமையும் பாராட்டிக் கூறத் தக்கது.

தமிழிலுள்ள பிற நிகண்டுகளையும் இவ்வாறே அச்சிடுவிக்கக் கருதியிருக்கிறேன். சூடாமணி நிகண்டொன்று தவிர அச்சில் வந்துள்ள மற்றைய நிகண்டுகட்கு இதுவரை நல்ல பதிப்புகளே கிடையா. பல நிகண்டுகள் அச்சியற்றப் பெறவே இல்லை. நிகண்டுகள் செவ்வையாய் அச்சியற்றப் பெறாவிடின் தற்காலத்தே அத்தியாவசியமாக வேண்டப்படும் தமிழகராதி திருத்தமெய்திப் பெருநலம் பயப்பதாகாது. வடமொழி நிகண்டுகள் பல ,Sources of Sanskrit Lexicography' என்ற கிரந்த மாலையில் ஐரோப்பிய அறிஞரால் வெளியிடப்பட்டுள்ளமை இங்கே

நினைப்பூட்டத் தக்கது. யான் பதிப்பிக்கும் தமிழ் நிகண்டுகளும் 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி' என்ற மகுடத்துடன் வெளிவரும். இவற்றுள் 'நாமதீப நிகண்டு' முதலாவது நூலாகும். இரண்டாவது நூல் 'அரும்பொருள் விளக்க நிகண்டு'[1] இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் விரைவின் வெளிவரும்.

1. இந்நிகண்டு 1931-ல் பிரசுரிக்கப் பட்டது.

4. பொதிகை நிகண்டு

பொதிகை நிகண்டின் ஆசிரியராகிய சாமிநாத கவிராயரைக் குறித்து ஒரு சில செய்திகளே அறியக் கிடக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த அம்பாசமுத்திரந் தாலுகாவில் கல்லிடை நகரில் இவர் வாழ்ந்தவர். இந் நிகண்டு நூலேயன்றி ஐவகை இலக்கணங்களையும் உணர்த்தும் சாமிநாதம் எனப் பெயரிய நூலொன்றும் இவர் இயற்றியிருக்கின்றனர். இந்நூல் துறைசை-சுப்பிரமணிய தேசிகரின் ஆணைப்படி இயற்றப்பட்டதென இந் நூற்பாயிரம் உணர்த்துகிறது. சாமிநாதத்திற்கு விருத்தியுரையொன்றும் உள்ளது. இவர் தனயராகிய சிவசுப்பிரமணியக் கவிராயர் தாம் இயற்றிய பூவைப் புராணத்தைக் கொல்லம் 985-ம் ஆண்டு (கி.பி. 1810) அரங்கேற்றியதாகக் கூறுகின்றார். பொதிகை நிகண்டின் ஏட்டுப் பிரதியொன்றில் '984-ம் ஆண்டு தைமீ 8உ பிள்ளையன் தளவாய் வாசித்து வரும் ஏடு முற்றும்' எனக் காணப்படுகிறது. அக்காலத்துத்தானே இப் பொதிகை நிகண்டு பிரசாரத்தில் வந்துள்ளமை அறியத் தக்கது. இதனால் இது சுமார் கொல்லம் 950-ல் இயற்றப் பட்டதாகலாமெனத் துணியலாம்.

1930-ல் யான் வெளியிட்ட நாமதீப நிகண்டின் பாயிரத்தினின்றும், அந்நூலாசிரியரின் தந்தையாகிய சாமிநாத கவிராயர் பொதிகை நிகண்டெனப் பெயரிய ஒருசொற்பல் பெயர்த்தொகுதி நூலொன்று இயற்றியுள்ளாரென்று தெளிந்தேன். இந்நிகண்டின் கடிதப் பிரதியொன்றும், ஏட்டுப் பிரதியிரண்டும் எனது நண்பர் அறிஞர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் சில வருடங்களுக்கு முன் அன்புடன் உதவியானார்கள். இந் நிகண்டு நூற்பாவினால் இயன்றது.

பின்னர் ஆழ்வார்குறிச்சி அன்பர் எம்.பி.எஸ். துரைசாமி முதலியாரவர்கள் வேறு இரண்டு பிரதிகளை அனுப்பியுதவினார்கள். இப்பிரதிகள் ஒரு சொற் பல்பெயர்த் தொகுதியேயன்றிப் பிற தொகுதிகளையும் உடையனவாயிருந்தன. சூடாமணி நிகண்டின் முறையே இவற்றில் மேற்கொள்ளப் பட்டது. தொகுதிகளெல்லாம் விருத்தயாப்பினால் இயன்றன. இயற்றியவர் முற்கூறிய சாமிநாத கவிராயரே. இரண்டு பிரதிகளும் மிக்க குறைபாடு உள்ளன. ஒன்றில்

முதலாறு தொகுதிகளும், பிறிதொன்றில் முதலொன்பது தொகுதிகளும் இருந்தன. இந்நூலின் பூரணமான பிரதியொன்று பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பெரிதும் முயன்றேன். வெகுகாலம் வரையில் கிடைக்கவில்லை. முடிவில் நாகர்கோவில் வித்துவான். க. சுவாமிநாத ஆச்சாரியாரவர்கள் அவ்வூர் வாசியான சுப்பிரமணிய பண்டிதரிடமிருந்த ஒரு பிரதியைப் பெற்றுத் திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தமிழாசிரியர் நண்பர் பன்னிருகைப்பெருமாள் முதலியாரவர்களின் மூலமாய் அனுப்பினார்கள். இதன் கண்ணும் பதினோராவது தொகுதியில் முகரவெதுகை வரையே காணப்பட்டது.

அன்பர் சி.ஆர். நமச்சிவாய முதலியாரவர்கள் தந்த கடிதப்பிரதியைப் பெயர்த்தெழுதியுதவிய எனது நண்பர் பி.ஆர். மீனாட்சி சுந்தர முதலியாரவர்கள். பெயர்த்தெழுதிய பிரதியைக் காலஞ் சென்ற த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் வீட்டிலிருந்து கிடைத்த ஒரு கடிதப் பிரதியோடு ஒப்பு நோக்கிக் கொண்டேன்.

சென்னையிலிருந்து பிரசுரிக்கப்படும் கலாநிலயப் பத்திரிகையில் இந்நூல் தொடர்ச்சியாய் வெளியிடப்பெற்றது.

சூடாமணி நிகண்டின் முறையை அனுசரித்து இயற்றிய நூலை முதற்பகுதியாகவும், நூற்பாவினால் இயன்ற ஒரு சொற் பல்பெயர்த் தொகுதியை இரண்டாம் பகுதியாகவும் இப்பிரசுரத்தில் அமைத்துள்ளேன்.

இந்நூலை அச்சியற்றுதற்குப் பிரதிகள் முதலியன கொடுத்தும், பிறவாறும் உதவி புரிந்த அன்பர்களனைவர்க்கும் எனது நன்றியுரியதாகின்றது.

5. நிகண்டு சூடாமணி

ஓர் அனுபந்தம்*

பாயிரம் முற்றும். 943ஞு சறுவதாரி ஸு வைகாசி மீ 31வ. வியாழக்கிழமையின்ன்று திருவேங்கடம் எழுதினான், ஹரி:

உரைத்தவிப் பல்பேர்க் கூட்டத்
தொருபெயர்த் தொகுதி தன்னை
விரித்தமு வைம்ப தின்மேல்
மிகுதிமுன் றவையுஞ் செய்தான்
திருக்கிலாக் குணபத் திரன்றாள்
சென்னியிற் சூடிக் கொண்டான்
மருக்கிளர் பொழில்சூழ் வீரை
மண்டல புருடன் றானே **(154)**

நிகண்டு பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி முற்றும்.

945ஞு விரோதி ஸு பங்குனி மீ 25வ. சவுமிய வாரமும் பூச நட்சத்திரமும் ஶ்ராம நவமியும் சுகர்ம நாம யோகமும் பெற்ற சுபதினத்தில் வீரநாராயண சேரியிலிருந்து இராமாயணங் கிட்கிந்தைப் படலம் வாசிக்கிறபோது முகிந்தது. குருவே துணை. நிகண்டு முதலாவது முதற் பன்னிரண்டுந் தொகை 1204.

குருபாதமே கெதி. திருஞான முத்திரை துணை. ஶ்ராம செயம் வானாசல முனியே நம;

நிகண்டு பாயிரம், கவி	8
முதலாவது, கவி	98
இரண்டாவது, கவி	107
மூன்றாவது, கவி	78
நான்காவது, கவி	68

---

*இக்குறிப்பு என்னிடமுள்ள நிகண்டு சூடாமணிப் பிரதிகள் ஒன்றின் முடிவில் காணப்படுகிறது. பிரதி செய்வோராலும் ஏனைப் புலவர்களாலும் சூடாமணி எவ்வாறெல்லாம் வேற்றுருவம் பெற்றது என்பதை இது விளக்கமாகப் புலப்படுத்துகிறது.

ஐந்தாவது, கவி	70
ஆறாவது, கவி	35
ஏழாவது, கவி	76
எட்டாவது, கவி	82
ஒன்பதாவது, கவி	67
பத்தாவது, கவி	51
பதினொன்றாவது, கவி	310
பன்னிரண்டாவது, கவி	154
ஆகக் கவி	1204

திவாகரம் 6. பிங்கலம் 2. அகராதி 3. உரிச்சொல் 3. கெயாதரம் 1. உள்ளமுடையான் 1.

இது முதலாகச் சோதித்துப் புராணங்கள் அமரசிங் கத்திலும் சங்கையுள்ளதுகள் கேட்டுத் திருத்தின நிகண்டு ராமாயணந் திருவேங்கடம் திருத்தினது. இன்னம் பிழை யுள்ளதுகள் கண்டாற் பெரியவர்கள் திருத்திக் கொள்ளக் கடவர்கள். ஹரி:

இந்த ஏடு எழுதின பேருக்கு வகை:

நிகண்டு 12 தொகுதியும் சுசீந்திரத்து நல்லூரிற் கைக்கொண்ட ராமன் பிள்ளை எழுதினது	1
வீரநாராயண சேரியில் மணியம் நமசிவாயம் பிள்ளை	1
கோட்டாற்றில் சித்திர குத்த மூப்பனார்	1
அருணாசலந் தம்பிரான் எழுதினது	1
தேரூர் நரசிங்க மூர்த்தியா பிள்ளை	1
சேந்தமங்கலம் தாணுமாலயப் பெருமாள் செட்டியார் எழுதினது	1
பதக்கத்து ராமச்சந்திர ரெட்டியார் எழுதினது	1
ஆழ்வார் திருநகரி மீனாக்கிநாத பிள்ளை எழுதிவிச்சது	1

நிகண்டின் வகை

சேந்தன் நிகண்டான திவாகரர்
அவர் மகன் பிங்கலர்
அவர் மகன் மண்டலவன்

கிருட்டினராயர் நாளையிற் பாடினது நிகண்டு. அவர் பாடினது தொகுதி 12-க்கு கவி 1204-ல், 11-வது கவி 250-ல் ஆதியிற்பொருள் 138; அந்தத்துப் பொருள் 112: ஆக 250-ல், அந்தத்துப் பொருள் பயன் சொல்லுகைக்குச் சீக்கிரம் உத வாமையினாலே, கல்லணைக் குறிச்சி வேளாளரில் யோகீசுரர்

என்கிறவர் அந்தத்துப் பொருள் 112 கவியையும் தள்ளி ஆதியிற் பொருளாகச் செய்து அதிகமுள்ள 60-ம் சேர்த்தார். ஆனதால் இந்த 310 கவியே பிரதானம். 892-ம் ௵ 2-ம்௳,யிற் செய்தவர் குறைதீர்த்துஅரங்கேற்று முன்னே அடைந்து போனார். ஆனதால் 992௵ சீவைகுண்டமுந் திருநகரியும் இருப்பான உறங்காவில்லி தாசரான ராமாயண பட்டன் இளையபெருமா ளய்யன் குமாரனான ராமாயணம்திருவேங் கடமேன் அந்தப் பாடத்தையும் வைத்துக் கொ(ண்டு), தாண்டவராய முதலியார் பாடமொன்றும் திருநகரியிற் பெரியதிருவடிக் கவிராயர் பாடமொன்றும் அட்டவணையும் வைத்துக் கொண்டு, சற்று இதனைப் பிசகுகள் இந்த ஏடு களிலிருந்ததை திருத்தி எழுதுவித்தேன். இது சுத்தப் பிரதி.

திருநெல்வேலியில் இசைக்காடும் பொருமாள் பிள்ளை யவர்கள் வளவிலேயிருந்த ஏடு யோகீசுரர் கைப்பட எழு தின நிகண்டிற் பாட்டுக்கு அட்டவணை:

பாயிரம், கவி	8
முதலாவது, கவி	98
இரண்டாவது, கவி	107
மூன்றாவது, கவி	78
நான்காவது, கவி	68
ஐந்தாவது, கவி	70
ஆறாவது, கவி	35
ஏழாவது கவி	76
எட்டாவது, கவி	82
ஒன்பதாவது, கவி	67
பத்தாவது, விருத்தம்	51
பதினொன்றாவது, கவி	310
பன்னிரண்டாவது, கவி	154
ஆகத் தொகுதி பன்னிரண்டுக்கு கவி	1204

நிகண்டின் வகை ஏட்டுக்குறை 2-ம் ஏடு.

திருநகரியிற் சங்கரக்குமாருபிள்ளை வசம் இருக்கிற 11-வது ஒன்று ஒரு எதுகையிற்குள்ளே ஒரு எதுகை வேறே வரலா காதென்று தாறுமாறாகப் பாடியிருக்கிறது. பிரதி 1 பதக் கத்திலே ராமச்சந்திர ரெட்டியார் கிட்ட இருக்கிற பதி னொன்றாவது 356 ஆக ஒருத்தன் பாடினது கொட்டிக் குழறித் தாறுமாறுமாய் ஒரு கவிதையானாலும் ஒரு

சொல்லானாலும் செம்மையில்லாதது பிரதி 1.310 கவி நிகண்டு மாவேலிக்கரை, பழனி, திருச்சிராப்பள்ளி, சோள மண்டலங் கடலங்குடி, காசி, சிதம்பரம், ராமநாதபுரம், சேந்தமங்கலம், தென்றிருப்பேரே, சீவைகுண்டம், திரு நகரி, வள்ளியூர், பணகுடி, சுசீந்திரம், பறக்கை, நல்லூர், கன்னியாகுமரி, ராமநாதபுரம்வரை பின்னும் மற்றுள்ள ஊர்களிலும் இந்தப் பாடமே யெங்கும் பரந்து சென்றது. ஹரி:

அகராதி

ஐந்தாம் பகுதி

1. நூதன ஆங்கிலப் பேரகராதி*

1929, ஏப்பிரல் மாதம் 19-ந் தேதி ஆங்கில மொழி வழங்கும் உலகனைத்தும் பாராட்டுதற்குரிய ஒரு பெரு நாளாகும். மொழி-நூல் ஆராய்ச்சிவல்ல அறிஞர்கள் அனைவரும் இம் மங்கள தினத்தைப் பொன்னே போற் போற்றுவர். இந்தத் திருநாளன்று ஆக்ஸ்பர்ட் ஆங்கில அகராதியின் இறுதிப் பகுதி வெளியிடப் பெறுகின்றது.

தொடக்கமும் முடிவும்

1838-ல் துணை நூலாகத் தொடங்கிய இப்பேரகராதி 1884 ஏப்பிரல் மாதம் பிரசுரமாகத் தலைப்பட்டது. அக் காலம் முதல் 44-வருஷங்களாக இதன் பகுதிகள் வெளி வந்து கொண்டே யிருக்கின்றன. 1897-ம் வருஷத்தில் அகராதியின் 'வயிரவிழா' (Diamond Jubilee) கொண்டாடினர். அப்பொழுது விக்டோரியா மகாராணியாருக்கு இவ் அரிய சொற் கருவூலம் உரிமையாக்கப்பெற்றது. உரிமை உரையிலே 'அம்ம! இது முற்றுதல் கூடுமாயின் பெரிதும் சிறந்ததொரு செயலாக அமையும்' எனப் பொருள்படும் ஷேக்ஸ்பியரது நன்மொழி வரையப் பெறலாயிற்று. பெருமையிற் சிறந்த இவ் அரிய நூல் இன்று இனிது முற்றி ஜியார்ஜ் அரசரின் திருக்கரங்களில் அளிக்கப் பெறுகின்றது.

சொற்களின் அரங்கு

இப்பெருநூல் காலகதியில் பற்பல கோலம் சமைந்து சொற்கள் நடனஞ் செய்யும் அரங்கமாக விளங்குகின்றது. நாள்தோறும் பல துறைகளிற் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பகமாகவும் திகழ்கின்றது. இங்ஙனமாதலின், 44-ஆண்டுகளாகப் பகுதி பகுதி யாக இது வெளியாகிக் கொண்டிருந்தது என்பதில் சிறிதும் வியப்பதற்கில்லை. மக்களின் ஆயுளில் இக்காலம் நீண்ட தாகத் தோன்றினும், ஒரு மொழியின் ஆயுளை நோக்கு மிடத்து மிகச் சிறியதொரு காலம் என்றே இதனைக் கொள்ளல் வேண்டும். எனவே, மிக நீண்டதாகக் கருதும் காலக் கழிவை ஒரு பொருட்டாக எண்ணாது எல்லா

---

*1929 ஏப்பிரல் மாதத்தில் எழுதி வெளியிட்டது.

வகையானும் நிறைவுடையதாய் நூல் முற்றவேண்டும் என்ப தொன்றே மனங்கொள்ளுதற்கு உரியது. நூலின் நிறை வினை வேண்டி அனுபந்தம் ஒன்று வெளியிடப் பெறும். இதன்கண் அதிபாலிய தசையிலுள்ள சொற்களும் இடம் பெறுவனவாகும். இவ் அனுபந்தம் ஆங்கில அகராதிப் பகுதிகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டோர்க்கு இறுதி யில் அளிக்கும் இனிய விருந்தாகும் என்பது கூறவேண்டா.

உழைப்பும் செலவும்

மொழிநூற் கழகத்தின் உறுப்பினர்களும் அதனைச் சார்ந்த உபகார சீலர்களுமே அகராதிக்குரிய விஷயங்களைப் பெரும்பாலும் உதவியவர்களாவர். இங்ஙனம், உதவப் பெற்ற விஷயங்களை யெல்லாம் அகராதி முறையில் தொகுத்து ஒழுங்குபடுத்தற்கும் பிரசுரஞ் செய்தற்குமாக 3 லட்சம் பவுன்கள் செலவாயிருக்கின்றன. இப்பெருஞ் செலவை ஆக்ஸ்பர்ட் சர்வகலா சங்கத்தினர் பொறுத்து வந்தனர். 1905-ம் ஆண்டில் பொற்கொல்லர் கழகத்தினர் அகராதியின் ஆறாவது பகுதிச் செலவிற்கு 5,000 பவுன் உதவினார்கள்.

இவ் அகராதியின் சரிதம் முழுவதும் இடைவிடாத உழைப் பினாலும் சலிப்பறியாத மனவொருமையாலும் நிரம்பி யிருந்தது. இதன் பொருட்டுத் தம்மையே தத்தம் செய்து முயன்று வந்தவர் ஒருவர் இருவரல்லர். பல அறிஞர்கள் தங்கள் ஆயுள்-காலத்தையும் ஆத்ம சக்தியையும் இவ் அகராதி ஒன்றற்கே உரிமையாக்கினர். அகராதியின் சரிதம் அதில் வெகு காலமாய் உழைத்து வந்த ஒருவரால் ஒருவாறு 'டைம்ஸ்' பத்திரிகையில் சென்ற மே மாதம் வெளி யிடப்பட்டது. அவர் எழுதுங்காலத்தில் அகராதி விரைவில் முற்றுப் பெறுந் தருவாயில் இருந்தது. இன்று பல வருஷ காலமாகச் செய்துவந்த உழைப்பின் பலன் முழுதுங் கைகூடி அகராதி முற்றுப் பெறுகின்றது.

உலகிலுள்ள அகராதிகளி லெல்லாம் தலைசிறந்து விளங்கும் இந்நூலின் அச்சுப் பிரசுரம் 1884-ம் ஆண்டில் தொடங்கிய போதிலும், 1879-ம் ஆண்டிலேயே டாக்டர் ஜே.ஏ.எச்.மர்ரே என்னும் நிபுணர் இவ் வேலையை ஆரம் பித்தனர் என்று கூறுவர். ஆனால், உண்மையை நோக்கு மிடத்து 1858-ம் வருஷம், ஜனவரி மீ 7-ம் தேதியன்று அகராதி அச்சு வேலை தொடங்கப் பெற்றது எனக் கூறல் வேண்டும். இத் தேதியில் டீன் ட்ரெஞ்ச் என்பவரது

முன்னிலையில் சம்பூரணமான நூதன அகராதி இயற்றப்படல் வேண்டுமென மொழி நூற் கழகம் தீர்மானித்தது. இத் தீர்மான காலத்திலிருந்து இப்பொழுது 70 வருஷங்கள் ஆகின்றன. நூல் இனிது நிறைவேறுவதற்குமுன் இடையூறுகள் பல காலகதியில் விளைந்தன.

அகராதியின் வரலாறு

டாக்டர் மர்ரே, நூலின் தொடக்கத்தில் பதிப்பாசிரியராய் இருந்த கோலரிட்ஜ் என்ற இருவரையும் இழக்க நேரிட்டது. 1858-ம் ஆண்டில் அகராதி இன்ன வடிவிலே முடிவாக உருப்பெற்றுப் பரிணமிக்கும் என ஒருவராலும் எண்ணுதற்கு அரியதாயிருந்தது. பிரகிருதி விசித்திரங்கள் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்டுவந்தன; எத்தனையோ யுத்தங்கள் குறுக்கிட்டன; யந்திர விசேடங்கள் தோன்றிக் கொண்டேயிருந்தன. இவைகளைக் கனவிலும் நினைத்தறியாத காலத்தில் அகராதி இன்ன அளவாக அமையும் என்று கொண்ட கருத்து உண்மையினின்றும் எத்துணை வழுவியிருக்க வேண்டுமென்பது கூறவும் வேண்டுமா? கோலரிட்ஜ் இரண்டு வருஷ காலத்தில் அகராதியின் முதற்பகுதியை நிச்சயமாய் வெளியிடக்கூடும் என்று எண்ணியிருந்தனர். அன்றியும் அகராதிச் சொற்கள் முழுமைக்கும் 60,000 கடிதத் துண்டுகள் வைப்பதற்குத் தக்க அறைப் பெட்டி ஒன்று போதும் என நினைத்து அவ்வாறே ஒரு பெட்டியும் அமைத்து வைத்திருந்தனர்.

பின்னர், மிகச் சுருங்கிய சொல்லளவுள்ள ஓரெழுத்திற்கே அவ்வகைப் பெட்டி ஒன்று வேண்டியதாயிருந்தது. 1861-ம் வருஷத்தில் கோலரிட்ஜ் மரணமாயினர். அவரோடு உழைத்து வந்த பர்னிவல் என்பவரிடம் அகராதி வேலைப் பொறுப்பு முழுவதும் சார்ந்துவிட்டது. இவர் சொற்கள் திரட்டுவதிலும் கைம்மாறு கருதாது உழைப்பதற்குத் தக்க உதவிப் பதிப்பாசிரியர்களைத் தெரிந்து கூட்டுவதிலும் பெரிதும் முயன்று வந்தனர். பின் சில காலமாக அகராதியைக் குறித்து யாதொன்றும் கேட்கப் படவில்லை. டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராக அமர்ந்த பின்னரே அகராதியின் பெயர் மறுபடியும் தொனிக்கலாயிற்று. அவரது நிரம்பிய கல்வியறிவும் பிறபிற தகுதிகளும் பெரிதும் அனுகூல காரணங்களாய் அமைந்தன. அவர் இவ்வேலையை மேற்கொண்ட காலத்தே, அகராதி இப்போது முடிவாக வெளிவந்திருக்கும் அளவில் சரி நேர்பாதி

யிலே முற்றக்கூடும் எனக் கருதப்பட்டது. ஆனால், நூல் பெரிதும் விரிந்து விடவுங்கூடும் என்றெண்ணி அதற்குத் தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

அகராதியின் அளவு

1882-ம் வருஷத்தில் அகராதி பிரசுரத்திற்குத் தயாராகிவிட்ட தென்றும், 40-பக்கங்கள் அச்சில் உள்ளன என்றும் டாக்டர் மர்ரே பகிரங்கப்படுத்தினர். இதன் பின் இரண்டு வருஷம் கழித்து அகராதியின் முதல் பகுதி வெளியிடப் பெற்றது. பன்னிரண்டு வருஷ காலத்தில் அகராதியின் பிரசுரம் முடியக் கூடும் என டாக்டர் தாமே எண்ணியிருந்தனர். ஆனால், அகராதி ஒருவரது மதிப்பிற்கும் அடங்காது பெருகி வளர்ந்து கொண்டே வந்தது. 'set' என்ற ஒரு சொல்லின் பலவேறு பொருள்களைத் திருப்திகரமாக முறைப்படுத்தி அமைப்பதற்கு நாற்பது மணி நேரம் சென்றதாம். இச் சொல்லுக்கு 51 தனிப் பொருள்கள் இருந்தன; இதனடியாக 'set out' முதலிய 83 சொற்றொடர்கள் வழக்கில் அமைந்துள்ளனவாகக் காணப்பட்டன. இச்சொல்லைக் காட்டினும் மிகக் கடினமானது அகராதியில் இல்லை என்று டாக்டர் மர்ரே கருதினர். வெப்ஸ்டர் அகராதியில் இச் சொல்லின் பொருள் இரண்டு பத்திக்குமேல் காணப்படுகிறது. வெளிவந்திருக்கும் ஆங்கிலப் பேரகராதியில் 18-பக்கங்களுக்கு மேலாக இச் சொல்லின் பொருள் நடைபெறுகின்றது; முக்கியமான பொருட் பகுதியின் அளவு 154 ஆகும். இவ் உதாரணத்தால் அகராதியின் விரிவும் முயற்சியின் கடுமையும் அருமையும் ஒருவாறு விளங்கலாம். ஒரு சிறிய சொல்லின் பொருளால் அகராதியின் வேலை எவ்வளவு தடைப்படும் என்பதும் எளிதில் புலனாகின்றது.

பிரசுரத்திற்கு அகராதி தயாராகி முடிந்தபொழுது மொழி நூற் கழகம் எடுத்துவந்த உழைப்பு நின்றுவிட்டது. எனினும், பிரசுரம் முற்றும் அளவும் அக் கழகம் காட்டி வந்த ஆதரவு அளவிடுந்தரத்தன்று. 1928-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ம் தேதி கூடிய அக்கழகக் கூட்டத்தில் அடியிற் கண்ட விவரத்தை அனியன்ஸ் என்பவர் தெரிவித்தனர்.

1858-ம் வருஷம் ஜனவரி மீ 7-ம் தேதி நிகழ்ந்த கூட்டத்தில் முன் உத்தேசித்தபடி அகராதி அனுபந்தம் ஒன்று வெளியிடுவதற்கு மாறாக, இக்கழகத்தின் சார்பில் 'நூதன

ஆங்கிலப் பேரகராதி' இயற்றி வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மான காலத்திற்கு 70 ஆண்டு களின் பின்னர், 1928-ம் வருஷம் ஜனவரி மீ 5-ம் தேதி யன்று, ஆங்கிலப் பேரகராதியின் இறுதிப்பகுதி அச்சுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டது. கிளாரெண்டன் பிரஸ் அதி காரிகளின் ஆதரவில் டாக்டர் மர்ரே பதிப்பாசிரியராக இருந்த ஐம்பதாவது வருஷத்தில் இப் பேரகராதி முற்றுப் பெறுவதாயிற்று.

உதவியாளர்கள்

இப் பேரகராதியின் பதிப்பாசியர்களுக்கு உதவியா ளர்கள் செய்து வந்த நன்முயற்சியே பெரிதும் துணை நின்று பயன்புரிந்துவந்தது. டிரெஞ்சு என்னும் அறிஞர் 76 உதவியாளர்களைத் திரட்டினர். அந்நிய நாடுகள் பலவற்றி னின்றும் உதவியாளர்கள் பலர் துணைபுரிந்தார்கள். பிரிட் டிஷ் தீவுகளில் மாத்திரம் அங்கங்கேயுள்ள முக்கிய நகரங் கள் ஒவ்வொன்றிலும் உதவியாசிரியர்கள் பற்பலர் இருந்து அகராதி வேலையில் முயன்று வந்தனர். இம் முறையில் கணக்கற்ற கடிதக் கட்டுகள் பதிப்பாசிரியர்களுக்குப் பல இடங்களினின்றும் வந்து கொண்டேயிருந்தன. இவற்றுள் ஒன்று மாத்திரமே தவறிவிட்டது. இதில் 'Pa' என்று தொடங் கும் பகுதி அடங்கியிருந்தது. அயர்லந்து தேசத்துக்கு இந் தக்கட்டு போயிருப்பதாகத் தெரிந்து, அங்கு முயன்று நோக்கியதில், கடிதங்கள் அனைத்தும் தீயெரிப்பதற்குப் பயன்பட்டொழிந்தன என்று அறியவரலாயிற்று. இதைத் தவிர, வேறு இரண்டொரு நஷ்டங்களும் நேர்ந்தன. ஆனால், இவைகள் அத்துணை கவனிக்கத்தக்கன அல்ல.

அச்சுத்திருத்தமும் (Proof reading) அகராதியில் நிய மனம் பெறாத மற்றையோர்களே பெரும்பாலும் செய்து வந்தனர்.

பதிப்பாசிரியர்கள்

அகராதியின் பதிப்பாசிரியர்களில் கோலரிட்ஜ், பர்னிவல் என்ற இருவரையும் குறித்து முன்னரே கூறினோம். ஸர் ஜேம்ஸ் மர்ரே 1915-ம் ஆண்டில் மரணமடைந்தனர். இவரது காலத்தில் அகராதியில் நேர்பாதி இயற்றி முடிந் தது. டாக்டர் ஹென்றி பிராட்லி எட்டு எழுத்துக்களின் சொற்பகுதியை ஆராய்ந்து வெளியிட்டனர். டாக்டர் க்ரெய்கி மூன்று எழுத்துக்களின் சொற் பகுதிகளைப் பதிப் பிடுவதில் உதவி செய்து வந்து, பின் தாமாகவே ஆறு

அல்லது ஏழு எழுத்துக்களின் சொற்களை வெளியிட்டனர். மிஸ்டர் ஸி. டி. அனியன்ஸ் 1895-ம் ஆண்டில் அகராதியின் பதிப்புக் கழகத்தில் சேர்ந்து மர்ரேயுடனும் பிராட்லியுடனும் தொழில் புரிந்து வந்தனர். பின் இவரே நூலின் பல பகுதிகளை இயற்றி வெளியிட்டனர்.

பிரசுர முறை

இப் பெருநூலைப் பிரசுரித்து வந்த முறை பெரிதும் போற்றத்தக்கது. அங்கங்கே படைபோல் திரண்டு வேலை செய்து வந்த உதவியாளர்கள் அளவொத்து அமைந்த கடிதத் துண்டுகளிலே சொற்பிரயோகங்களைக் குறித்து அனுப்புவர். பதிப்புக் கழகத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் இக் கடிதத் துண்டுகளை முறைப்படுத்தி ஒப்புநோக்கி ஆராய்ந்து தொகுத்து வைப்பார்கள். இவ்வித ஆராய்ச்சிக்கு எத்தனையோ ஆதார நூல்களைச் சோதிக்கும்படி நேரிடும். பின்னர் சொல்லும் பொருளுமாகத் தெளிவுபடுத்தி எழுதப் பெற்றுப் பதிப்பாசிரியர்க்கு முன் வருவதாகும். இதன் பின்னர், அங்கீகாரம், பரியாலோசனை, அர்த்த நிச்சயம் முதலியன நிகழும். முடிவில் அச்சிடுதலும் அச்சுத் திருத்தமும் நடைபெறும். இவ்வகை வேலை முறையில் இருந்து வந்த உழைப்பும் அல்லற்பாடும் சொல்லுந் தரத்தன அல்ல.

ஆங்கில மொழியின் கருவூலம்

எவ்வகையால் நோக்கினும் தலைசிறந்து விளங்கும் இந்நூதன ஆங்கிலப் பேரகராதியின் கண்ணே 4,14,825 சொற்களும் 5,00,000 சொற்பொருள் இலக்கணங்களும், 18,27,304 சொற் பிரயோகங்களும் உள்ளன. 12 நூற்றாண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் சரிதம் ஆராயப்பெற்றுள்ளன. 'S' என்ற எழுத்துப் பகுதியே மிகப் பெரிய பகுதியாகும். இதில் 57,428 சொற்கள் உள்ளன. 'X', 'Y', 'Z' என்ற மூன்று எழுத்துக்களும் சேர்ந்த பகுதியில் 4,746 சொற்கள் உள்ளன.

மொழிபேணும் முறை

கல்வி அறிவிலும் நாகரிகத்திலும் முதிர்ந்து விளங்கும் ஒரு நாட்டிலுள்ளார் தங்கள் மொழிச் செல்வத்தை ஒரே சிந்தையாய் அரிதின் முயன்று போற்ற வேண்டும் முறையினை இந்த அகராதியின் சரிதம் நன்கு விளக்குகின்றது.

2. தமிழ் அகராதி*

தமிழருக்கு அகராதி புதிது

அகராதி என்றால் என்னவென்று இப்போது எல்லாருக்கும் தெரியும். சிறுவர்கள்கூட எழுத்துப் போட்டி முதலியவற்றிற்கு விடை எழுதுவதற்காக ஏதேனும் ஓர் அகராதியை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு மூலையைத் தேடிப் பிடித்து உட்கார்ந்து பார்க்கிறார்கள். அகராதி வைத்திருப்பவனும் இக்குழந்தைகளால் பெரும்பாடு படுகிறான். அவனை 'மாமா, மாமா' என்று ஆசைப் பெயரிட்டழைத்து அகராதிப் புஸ்தகத்தை எப்படியாவது வாங்கிக் கொண்டு போய் வைத்திருந்து பல நாள் கழித்து இதழ் இதழாகக் கிழிந்த நிலைமையில் கொண்டு வந்து திரும்பக் கொடுக்கிறார்கள்; அதுவும் கொடுப்பதாயிருந்தால் - கொடுக்கக்கூடிய' நிலைமையில் இருந்தால். இவ்வாறு சிறு குழந்தைகளிலிருந்து பெரிய மனிதர்கள்வரை இப்பொழுது மிக்க ஆசையோடு போற்றி வருகிற அகராதி சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழில் ஏற்படவில்லை என்பது நம்மில் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம்.

முதன் முதலில் அகராதி இயற்றியவர் வீரமா முனிவர்

முதன் முதலில் தமிழில் அகராதியை இயற்றியவர் இத்தாலி தேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்து கிறிஸ்து சமயத்தைப் பரப்புவதற்குப் பெரு முயற்சிகள் செய்த ஒரு பாதிரியார். அவர் பெயர் கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி என்பது. ஆனால், நமது நாட்டில் அவரை வீரமா முனிவர் என்று வழங்கிவந்தார்கள். அவர் சன்னியாசி போலக் காஷாயம் தரித்து இங்கே வாழ்ந்துவந்தார். தமிழ் மொழியிலே கிறிஸ்து சமயம்பற்றி இலக்கியச் சுவையுள்ள சிறந்த நூல்களை இயற்றி அவற்றின் மூலமாகத் தமிழ் மக்களைத் தமது சமயத்திலே சேர்ப்பிக்க எண்ணினார். அந் நோக்கத்தைக் கொண்டு தமிழ்மொழியை நன்கு பயின்று இலக்கணங்களையும் ஒருவாறு கற்றுப் பண்டிதராயினார். நிகண்டுகளை மனப்பாடம் பண்ணி ஞாபகத்தில் வைப்பது சிரமமாக

---

*சென்னை அகில இந்திய ரேடியோவில் 1938 ஸெப்டம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று செய்த பிரசங்கம்.

இருந்ததனாலே அவற்றை அகராதியாகச் செய்து விடுவது நலம் என்று எண்ணி, 'சதுரகராதி' என்று வழங்கும் அகராதியை முதன் முதலில் இயற்றினார். இந்த அகராதியை இயற்றியது கி.பி. 1732-ல்.

அகராதிக்கு முந்திய கருவிநூல்

வீரமா முனிவர் அகராதி இயற்றுவதற்கு முன் தமிழ் மக்களுக்குச் சொற்களின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும் அவசியமே ஏற்படவில்லையா? இக் கேள்வி எழக் கூடியதே. தமிழ் இலக்கிய சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் இந்தவிதமான அவசியம் ஏற்படாத காலமே கிடையாது என்று சொல்லிவிடலாம். இலக்கியம் என்று சொன்னாலே, அது சாமானிய மக்கள் பேசும் வழக்கு-மொழியினின்று சிறிதேனும் வேறுபட்ட நடையில் அமைந் திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே இலக் கியச் சொற்கள் எல்லாம் சாதாரண மக்களுக்குத் தெரிந் தவையாய்த்தான் இருக்கும் என்று கூற முடியாது. தெரி யாத வார்த்தைகளும் அக்கூட்டத்தில் இருக்கத்தான் வேண்டும். இவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்கு ஏவையேனும் நூல்கள் இருந்தனவா!

நிகண்டு

சொற்பொருள் உணர்த்தும் கருவி நூல்கள் இருந்தன என்பதும், அவற்றை 'நிகண்டு' என்ற பெயரால் வழங் கினர் என்பதும் நாம் அனைவரும் அறிந்தனவே. இப் பெயர் வடமொழிப் பெயராயிற்றே; தமிழில் இக் கருவி நூலுக்குப் பெயர் இல்லையா? இப்படிச் சிலர் கேட்கலாம். தமிழ்ப் பெயரும் உண்டு. 'உரிச்சொற்பனுவல்' என்பது அப்பெயர். நெருடான இத்தமிழ்ப் பெயர் நாளடைவில் மறைந்துவிட்டது. நிகண்டு என்ற பெயரே தமிழாகி நிலைத்துவிட்டது.

அகராதி தோன்றிய காரணம்

நிகண்டுகள் இருக்கும்போது அகராதி தோன்றுதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? என்று கேட்கலாம். இவ் இரண்டு வகைப்பட்ட நூல்களும் அமைந்துள்ள முறையின் வேறுபாடே தக்க காரணமாகும். முதலாவது, நிகண்டுகள் செய்யுளில் அமைக்கப்பெற்றிருக்கும்; செய்யுளின் பொருள் விளங்குவது எத்தனை கஷ்டம் என்பது சொல்ல வேண்டுமா? இரண்டாவது இவ்வகை நிகண்டு நூல்களில் தெய்வப்

பெயர்கள், மக்கட் பெயர்கள் முதலாகிய பல தொகுதி களிலே வார்த்தைகள் அமைந்திருக்கும். ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல் இவற்றுள் எந்தத் தொகுதியைச் சார்ந்ததென்று தெரியவேண்டும். அதன் பிற்பாடு அந்தத் தொகுதி முழுவதையும் வாசித்தா லல்லாமல் பொருள் கண்டு பிடிப்பது இயலாது. மூன்றா வதாக, மனப்பாடம் செய்வதற்கென்றே அமைந்தன இந் நிகண்டு நூல்கள். மனப்பாடஞ் செய்வது எவ்வளவு சிரம மான காரியமென்பது நாம் நன்றாக அறிவோம்! அகராதி யிலே என்றால், ஒவ்வொரு சொல்லும் அ,ஆ முதலிய நெடுங் கணக்கின் எழுத்து வரிசையிலே அமைந்திருக்கும். இவ்வரிசை தெரிந்தால் அகராதியில் எந்தச் சொல்லையும் எடுத்துப் பொருள் தெரிந்து கொள்ளலாம். எழுத்துவாசனை யுள்ள வர்களில் இந்த எழுத்து வரிசையைத் தெரியாதவர்கள் உண்டோ? இத்தனை எளிதாக இருப்பதனால்தான் நான் முதலிலே கூறியபடி குழந்தைகள் கூட அகராதிகளை உபயோகப்படுத்துகிறார்கள்.

நிகண்டுகளை எளிதாக்கும் முயற்சிகள்

அகராதியைப் போல எளிதாக நோக்கியுணரக்கூடிய முறையிலே நிகண்டுகளை மாற்ற வேண்டும் என்று நம் முன்னோர்களுக்குத் தோன்றவில்லையா? - என்று நீங்கள் கேட்கலாம். அவர்களும் அவ்வாறு மாற்றுவதற்கு மிகவும் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பது நிகண்டுகளின் சரித் திரத்தை நோக்கினால் விளங்கும். இம்முயற்சி முதன் முத லில் ஒரு சொல்லுக்கு உரிய பல பொருள்களையும் எடுத்துக் கூறும் 11-ஆவது நிகண்டுப் பகுதியிலேதான் நடை பெற்றது. முதற்படியாக இத் தொகுதியிலே செய்யுட் சுவை யின் பொருட்டு ஏகதேசமாகச் சொற்கள் எதுகையிலே வைக்கப்பட்டன. இம் முறையைத் திவாகர நூலின் ஏட்டுப் பிரதிகளிற் காணலாம். அடுத்தபடியாக, இச் சொற்களைக் ககர எதுகை சகர எதுகை முதலிய பகுதிகளாகப் பாகு பாடு செய்து, எதுகையை வைத்துக் கொண்டே சொற்களைச் சிறிது முயன்று எடுக்கக்கூடிய முறை கையாளப் பட்டது. இம்முறையைச் சூடாமணி நிகண்டிலே காண லாம். மூன்றாம்படியாக, சூடாமணி நிகண்டிலே காணப் பட்ட குறைகளை நீக்க முயற்சி செய்தார்கள். ஓர் எதுகை யிலே பிறிதோர் எதுகைச் சொல் வந்து கலத்தல், செய்யு ளுக்கு வேண்டி அநாவசியமான அடைமொழிகளைச் சேர்த்துச் சொல்லின் பொருளைக் கருகவைத்தல் என்றவையே

அக்குறைகள். இக்குறைகள் இல்லாமல் செய்யப்பட்ட நிகண்டுகள் நாநார்த்த தீபிகை முதலியன. இம் முறையும் திருப்திகரமா யில்லாததனாலே, நான்காம் படியாக, அகராதி முறை அரைகுறையாகக் கையாளப்பட்டது. இந்நான்காம் முறையைக் கொண்டெழுந்த முதலாவது நூல் 'அகராதி நிகண்டு'.

அகராதியின் தோற்றம்

இந்த அகராதி நிகண்டைச் செய்தவர் சிதம்பர ரேவண சித்தர் என்ற வீரசைவர். நூல் செய்த காலம் கி.பி. 1594. இந்த ஆண்டிற்குமுன் அகராதி என்ற சொல் தமிழ் மொழியில் இல்லை. நல்ல சுபமுகூர்த்தத்தில் இப்பெயரை இவர் இட்டிருத்தல் வேண்டும்! ஏனென்றால் இப்பெயர் தாம் இப்பொழுது நிலைத்துவிட்டது.

அகராதி வரிசையில் அபிவிருத்தி

அகராதி நிகண்டிலே பல குறைகள் இருந்தன. அகரத்திலே தொடங்கும் சொற்களை ஒரு பொருளுடையன, இரு பொருளுடையன, முப்பொருளுடையன என்பவை முதலாகப் பகுத்து, முதலெழுத்து மாத்திரம் அகராதி வரிசைக்குரியபடி அமைத்து இந்நூல் செய்யப்பட்டது. ஆதலால் அகரத்தில் தொடங்கும் ஒரு சொல்லின் பொருள் தெரிய வேண்டுமானால் அச் சொல்லுக்கு எத்தனை பொருளுண்டென்பது முதலில் தெரியவேண்டும்; பிற்பாடு அத்தனை பொருளுடைய பகுதியில் அச்சொல்லைத் தேடிப் பிடிக்க வேண்டும். இக் குறைகளை நீக்கி, ஒரு பொருள், இரு பொருள் முதலிய பாகுபாடுகளை யொழித்து, அகராதி வரிசையை மேன்மேலும் அபிவிருத்தி செய்த நூல்கள் பல்பொருட் சூளாமணி, பொதிகை நிகண்டு முதலிய நிகண்டுகளாம். காலக் கிரமத்தில் மற்றக் குறைகளெல்லாம் ஒழிந்த போதிலும், அகராதி வரிசையை முழுதும் கையாளாத குறை இருந்தே வந்தது. அகராதி முறைப்படி, அங்கம் என்ற சொல் அரசன் என்பதற்குமுன் வரவேண்டும். இந்நிகண்டுகளில் அரசன் என்பதற்குப்பின் அங்கம் காணப்படும். முதல் எழுத்தில் மாத்திரம் அகர வரிசையைப் பின்பற்றிய நூல்களில் இதுபோன்ற குறைகள் இருக்கும். முதல் இரண்டு எழுத்துக்களில் அகராதி வரிசையைப் பின்பற்றிய நூல்களில், அங்குலி என்பது அங்கம் என்பதற்கு முன் காணப்படும். இவைபோன்ற குறைகளெல்லாம் ஒழிந்த பிற்பாடுதான் அகராதி தோன்றிற்று.

அகராதி என்ற பெயர்

அகராதி நிகண்டு என்பதில் அகராதி என்பது ஓர் அடைமொழி என்பதை நாம் மறந்துவிடலாகாது. அகாரம் ஆதிய வரிசையிலே சொற்களை அமைத்த நிகண்டு என்பதே இதன் பொருள். தற்காலத்தில் அகராதி என்ற நூற்பெயரால் நாம் கொள்ளும் கருத்தை, 'அகராதி மோனைக் ககராதி யெதுகை' என்ற பெயரால் ஒரு தமிழ் நூல் விளக்குகிறது. அகராதி என்ற சொல்லை நூற்பெயராக முதல் முதலில் அமைத்தவர் வீரமா முனிவரே. இந்த அகராதி என்ற பெயரோடு 'ஏபிஸிடேரியம்' (Abecedarium) என்ற ஆங்கில நூற்பெயரை ஒப்பிடலாம்.

பொது அகராதிகள்

அகராதி வரிசையைப்பற்றி இதுவரை கூறினேன். இனி, அகராதியில் சேர்க்க வேண்டிய சொற்களைப் பற்றிக் கவனிப்போம். இலக்கியங்களிலே வருகிற கடினமான சொற்களை மாத்திரம் சேர்க்கவேண்டும் என்ற கருத்து முற்காலத்து இருந்தது. நிகண்டுகளிலே காணப்படும் சொற்களில் பெரும்பாலானவை இவ்வகைக் கடின பதங்களேயாகும். இக்கருத்து இப்போது மாறிவிட்டது. நிரம்பிய, உத்தமமான அகராதியில், ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டும் என்பதே இப்போதுள்ள அகராதியாளர்களுடைய கருத்து. இதனால் அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவிநூல் என்ற கொள்கை மாறி, இந்த இயல்போடு ஒருமொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும் என்ற கொள்கை இப்போது நிலைபெற்றுவிட்டது. ஆனால் இந் நோக்கம் நிறைவேறுதலிலே பலவகையான இடையூறுகள் உண்டு. முதலாவது எல்லாச் சொற்களையும் ஒருவரோ, ஒரு சில கூட்டத்தாரோ தெரிந்து கொள்ளுதல் ஏலாது. ஒரு மொழியிலே பயின்றுவரும் எல்லாப் பிரதேசத்தாரும், இனத்தாரும், சாதியாரும், தொழிலாரும். பருவத்தாரும் அகராதியின் மேன்மையான நோக்கங்களையும் முறைகளையும் உணர்ந்து ஒத்துழைத்தாலன்றி ஓர் உத்தம அகராதி இயற்ற முடியாது. ஆக்ஸ்பர்ட் ஸர்வகலாசாலையிலிருந்து வெளியிடப்பட்ட நூதன ஆங்கில அகராதி (The new English Dictionary) ஒன்றே இங்ஙனம் இயன்ற ஓர் உத்தம அகராதி என்று ஒருவாறாகக் கூறலாம். உத்தம அகராதியின் இயல்பு இவ்வாறிருக்க, நம் நாட்டில் ஒரு சிலர், 'இந்த

அகராதி இலக்கிய அகராதியா? வழக்கியல் அகராதியா? மரபு அகராதியா? குறுநில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றில் கொஞ்சமா?' என்று கேட்கிறார்கள்! இவர்களுக்கு அகராதியின் உண்மை இயல்பு தெரிந்தால் இவ்வாறு கேட்கமாட்டார்கள். இரண்டாவது இடையூறு; அகராதி எல்லையின்றி விரிந்து, விலை அதிகரித்துப் பெரும்பாலாரது கைக்கு எட்டாததாய் முடிந்துவிடும் என்பதே.

சிறப்பகராதிகள்

இக்காரணங்களால், பொது அகராதி தவிர, தொழில் பற்றியும், சாஸ்திரம் பற்றியும், இடம் பற்றியும், காலம் பற்றியும் விரிவான அகராதிகள் பற்பல உண்டாக வேண்டும். இவற்றிலேதான் சொற் பொருளை விரிவாகப் படங்கள் முதலிய உபகரணங்களால் விளக்க முடியும். எனவே ஒவ்வோர் அகராதியும் அது மேற்கொண்டுள்ள நோக்கத்திற்கு இணங்க அமைக்கப் பெறுதல் வேண்டும். சாதாரணமாக வழங்கும் அகராதிகளில் மேற்குறித்த பலவகைச் சொற்களுள் சில மிகுந்தும் சில குறைந்தும் இருத்தல் இயல்பே.

வரலாற்றுக்கு ஏற்பச் சொல் பிரிதல்

இவ்விடத்தில் வேறொரு விஷயமும் கவனிக்கவேண்டும் ஒரு சொல்லானது பார்வைக்கு ஒன்றாகத் தோன்றிய போதிலும் சொல் வரலாற்றினைக் கருதுமிடத்துப் பல சொற்களாக இருக்கும். உதாரணமாக அகம் என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். இச்சொல் अहं, अम, अघ, அகம் என்ற பல சொற்களிலிருந்து வந்த பல பொருள்களையுடையது. இவ் வரலாற்றுக்கு ஏற்க, அகம் என்பதைத் தனித்தனிச் சொல்லாகக் கொள்ளவேண்டும்.

பேச்சு வழக்கிலுள்ள திரிந்த சொற்களைச் சேர்த்தல்

இன்னும் ஒன்று: பேச்சுவழக்கிலே பதங்கள் உச்சாரணம் திரிந்து வழங்குதல் சர்வசாதாரணம். இலக்கியங்களில் வந்துள்ள சொல்லைத் 'திருந்திய' சொல் என்றும், பேச்சில் உச்சாரணம் திரிந்து வழங்கும் சொல்லைக் 'கொச்சைச் சொல்' என்றும் கூறுவது மரபு. இவ்வாறு கொச்சையாய் வழங்கும் சொற்களும் அகராதியில் இடம் பெறுதல் வேண்டும்; இவற்றைத் திருந்திய வடிவம் என்று கொள்ளுதல் கூடாது; இலக்கியங்களில் இவற்றை வழங்கலாமென அகராதி அனுமதிப்பதாகக் கொள்ளுதலும் கூடாது. பேச்சு வழக்கிலுள்ள சொற்களுக்கும் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

சொற்பொருள் அமைக்கும் முறை

இனி அகராதியிற் கொடுக்கப்பட வேண்டும் பொருளைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சதுரகராதி முதலியவற்றில், நிகண்டுப் பொருளை வேறு விளக்கமின்றி அப்படியே கொடுத்துவிடுவது வழக்கம். உதாரணமாக, வேற்றிசைப்பாவின் பொருள் 'சருக்க முடிவினும், இலம்பக முடிவினும், விருத்த நடையது' எனக் காணப்படும். ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்குமானால், அப்பொருள்களையும் அகராதிக்கிரமத்தில் கொடுப்பது வழக்கம். உதாரணமாக, திகிரி என்றசொல்லின் பொருள்கள் உருளை, சக்ராயுதம், தண்டசக்கரம், திரிகை, தேர், பண்டி, மலை, மூங்கில், வட்டம் என அகராதி வரிசையிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொல்லின் வரலாற்றினை உணர்த்தும் இலக்கியங்களில் சொற்பொருள் வந்துள்ள வரலாற்றினை உணர்ந்தும் பொருள்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு சொற்பொருள்களையும் வியுத்பத்தி முதலியனவற்றையும் நன்றாக ஆராய்ந்து செய்யக் கூடுமானால், அது ஒவ்வொரு சொல்லுக்கும் ஜாதகம் கணிப்பதுபோல் ஆய்விடும். இன்ன காலத்தில் இன்ன இடத்தில் ஒரு சொல் பிறந்தது. இன்ன காலத்தில் இன்ன காரணத்தால் இன்ன வகையில் பொருள் மாறுபட்டது, இன்ன காலத்திற்குப் பின் மறைந்துவிட்டது; என ஒரு சொல்லின் ஜீவிய சரித்திர முழுதும் அகராதியிற் காணவேண்டும். நூதன ஆங்கில அகராதியில் இவ்விவரங்கள் யாவும் கொடுக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் அகராதி இயற்றுவதற்குத் தக்க மொழி-ஆராய்ச்சி வேண்டும். நமது நாட்டில் மொழி ஆராய்ச்சி இன்னும் குழந்தைப் பருவத்திலே இருக்கிறது. போலி ஆராய்ச்சிகளே பரவியிருக்கின்றன. இவ் ஆராய்ச்சிகளை விநோதார்த்தமாகக் கொண்டு சுவைத்துக் களிக்கலாமே யன்றி உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. திருந்திய மொழி ஆராய்ச்சியினால் உண்மை காணக்கூடிய இடங்களில் சொற்பொருளைக் காலக்கிரமத்தில் ஒழுங்கு படுத்திக் கொடுப்பது அகராதியாளர் கடமை. இயலாத இடங்களில் இயைபுபற்றிப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இதுவும் இயலாத இடங்களில் பெருவழக்கிலுள்ள பொருள் யாது? அடுத்தபடியாகவுள்ள பொருள் யாது? என்று வழக்கின் பெரும்பான்மை சிறுபான்மை பற்றிப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இப்படியாகப் பலவகைப்பட்ட நியமங்களை மேற்கொண்டு உரிய பொருள்களைக் கிரமப்படுத்துதல் அவசியமாகும்.

பொருள் விளக்கும் உதாரணங்கள்

இப்பொருள்களைத் தெளிவு பெற விளக்க வேண்டுமானால் மேற்கோள்களால் மட்டுமே அது முடியும். காலத்தால் முற்பட்ட மேற்கோள்களின் மூலமாய் விளக்குதலே நேர்மையான முறை. இலக்கியங்களையும் மற்ற நூல்களையும் கால முறைப்படி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொண்டு, முக்கியமான நூல்களுக்கெல்லாம் சொல்லகராதி தயார் செய்தபின், அகராதி வேலையைத் தொடங்குதல் வேண்டும். இவ்வாறு தொடங்கி முடித்தற்கு மிக நீண்ட காலம் செல்லும். உதாரணமாக, நூதன ஆங்கிலப் பேரகராதியைச் செய்து முடிப்பதற்குச் சுமார் 70 வருஷகாலம் வேண்டியதாயிருந்தது. அதற்குப் பல்லாயிரக் கணக்கில் ஆங்கில அறிஞர்கள் உதவி செய்தார்கள். இவ்வாறு பெரிய நோக்கங்கொண்டு செய்யாத வரையில், மேற்கோள்கள் முதலிய விஷயங்களில் குறை இருந்து கொண்டே இருக்கும். அடுத்தபடியாகச் செய்யத் தக்கது யாது? சிறந்த நூல்களிலிருந்து சந்தர்ப்பத்தால் பொருள் விளங்குமாறு உரிய மேற்கோள்களைக் கொடுப்பது ஒன்றே இயலும்.

தமிழ் லெக்ஸிகன்

மேற்குறித்த முறைகளையும் மற்ற நியமங்களையும் இயன்றவரை கைக்கொண்டு தமிழ் லெக்ஸிகன் என்னும் பேரகராதி வெளிவந்துள்ளது. இவ்வகை அகராதி தமிழ் மொழியின் உணர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பெருங்கருவி என்பதை அறிந்து, நேர்ந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாது, ஏராளமான செலவில் அதனை இயற்றுவித்து வெளியிட்ட சென்னை ஸர்வ கலா சாலையாரது பெருஞ்செயல் என்றும் பாராட்டுதற்கு உரியது.

3. தமிழும் அகராதியும்

அகராதி என்ற பெயர்

அகராதி என்ற பெயர் முதன் முதலில் காணப்படுவது கி.பி. 1594-ல் தோன்றிய 'அகராதி நிகண்டு' என்ற நூலின் பெயரிலேதான் என்று முந்திய கட்டுரையில் கூறப்பட்டது. இதன் ஆசிரியர் சிதம்பர ரேவணசித்தர் என்னும் வீர சைவப் புலவர். இவர் இட்ட பெயரே இப்போது 'டிக்ஷனரி' என்று ஆங்கிலத்தில் கூறும் நூலுக்குரிய தமிழ்ப் பெயராய் அமைந்துவிட்டது.

முதன் முதல் கையாண்ட அகராதி முறை

அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படியே சொற்களை அமைப்பதுதான் அகராதி முறை. இது நமக்கு மிக எளிதாகத் தோன்றுகிறது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வந்திருக்கிற தமிழ் இலக்கிய சரித்திரத்தில், இம்முறை 16-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் முதன்முதல் புலப்படுகிறது. அப்பொழுதும் இது அரை குறையாய்த்தான் கையாளப்பட்டது. சொல்லின் முதல் எழுத்து முறையையே ஆசிரியர்கள் நோக்கி வந்தனர். உதாரணமாக அறிவன், அடியான், அருள், அவன், அஃது, அமர் முதலிய சொற்களை முதல் எழுத்தாகிய அகரம் ஒன்றையே கருதி, அவற்றை ஒரு முறையில் நிறுத்தினர்; இரண்டாவது முதலிய எழுத்துக்களைக் கருதினார் களில்லை. இந்த முறையை அகராதி நிகண்டில் காணலாம். இதனால் அகரத்தில் தொடங்கும் ஒரு சொல்லை, குறித்த ஓரிடத்தில் கண்டுபிடிப்பது எளிதாயில்லை. இரண்டாவது எழுத்தையும், நோக்கிச் சொற்களை முறைப்படுத்திய நூல் ஒன்று சுமார் நூறு ஆண்டுகளின் பின் தோன்றியது. இதன் பெயர் 'அகராதி மோனைக் ககராதி எதுகை' என்பதாகும். இம்முறையிலேயும் ஒரு சொல்லைக் குறித்த இடத்தில் கண்டுபிடிப்பதற்கு வழி இல்லாமலிருந்தது. முதன் முதலில் சொற்களின் எழுத்துக்கள் அனைத்தையும் நோக்கி அகராதி அமைத்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிகளே ஆவர்.

பாதிரிமார்களால் விளைந்த நன்மைகள்

17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய வியாபாரிகளும் பாதிரிமார்களும் மிகுதியாகத் தமிழ்நாட்டிற்கு வரத்

தொடங்கினர். தமிழ் மக்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்கு வதற்குப் பெருமுயற்சி செய்தனர். முக்கியமான இடங் களில் பாதிரிமார்கள் கிறிஸ்தவக் கோயில் கட்டி, அங் குள்ள மக்களோடு மக்களாய் வாழ்ந்து, தங்கள் மதத்தைப் பரப்பத் தொடங்கினர். தமிழ் மக்களுக்குக் கிறிஸ்தவமத உண்மைகளைத் தமிழ்மொழியிலே போதிக்க வேண்டு மென்று இவர்கள் கருதினார்கள். ஆகவே இவர்கள் தாமும் தமிழ் கற்கவேண்டுவது மிக அவசியமாய் முடிந்தது. கற்பதற்குக் கருவி நூலாக அகராதி ஒன்று இயற்ற வேண்டுவதும் இன்றியமையாததாயிற்று. எனவே, தமிழில் முதன் முதலில் அகராதி தோன்றுவதற்குக் காரணமாயிருந்த வர்கள் இப்பாதிரிமார்களே ஆவர்.

பாதிரிமார் அகராதி வேலை: ஒரு நல் அதிர்ஷ்டமே

அந்நிய மொழிக்கு உரியோராகிய பாதிரிமார்கள் அக ராதி இயற்றப் புகுந்தது ஒரு நல்ல அதிருஷ்டம் என்று தான் கூறவேண்டும். ஏனெனில், சில நன்மைகள் இதனால் விளைந்துள்ளன. முதலாவது, பிற மொழிகளில் அகராதிகள் செப்பமாக அமைந்துள்ள முறையைத் தமிழ் அகராதியிலும் கையாள முடிந்தது. இரண்டாவது, பாதிரிமார்களுக்குத் தமிழ் புதியமொழி ஆகையினாலே, இம் மொழியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் இவர்கள் பொருளுணர வேண்டிய வர்களாயிருந்தனர். ஆகவே, கடின பதம், எளிய பதம் என்ற வேற்றுமையின்றி, எளிய பதங்களுக்குங் கூடப் பொருள் விளக்க வேண்டுவது அவசியமாயிற்று. உதாரண மாக நான், அது, வீடு முதலிய சொற்களையும் அகராதியில் விளக்க வேண்டியதாயிற்று. மூன்றாவது, நூல் வழக்கி லன்றி, சாதாரண மக்கள் பல பிராந்தியங்களிலும் வழங்கி வந்த சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. தமிழ் கற்ற பண்டிதர்கள் இவ்வழக்குச் சொற்களிற் பலவற்றை, இழிசன வழக்கு என்றேனும், வழூச்சொல் என்றேனும் ஒதுக்கிவிடுவார்கள். ஆனால் அந்நிய நாட்டுப் பாதிரிகள் இவ்வாறு ஒதுக்க முடியாது. அவர்கள் சாதாரண மக்க ளோடு, அதிலும் கல்வி பெறாத கீழ்த்தர மக்களோடு, பழகி வந்தார்கள். அம் மக்கள் பேசுவதை உணர்வதும், அவர்கள் வழங்கும் சொற்களை உணர்வதும் அவசியம். எனவே அவ்வழக்குச் சொற்களும் அகராதியில் இடம்பெற் றன. இவ்வாறாக, தமிழ் மக்களுள் பல இனத்தாரும் வழங்கும் சொற்கள் எல்லாம் அகராதிகளில் அமைவதற்கு இப் பாதிரிகளே வழிகாட்டியாயிருந்தார்கள்.

தமிழில் பிறந்த முதல் அகராதி

கி.பி. 1679-ல் தமிழ்ப் போர்த்துக்கீசிய அகராதி ஒன்று ப்ரொ இன்ஸா என்ற பாதிரியாரால் இயற்றப்பட்டது; ஆனால் இவ்வகராதி இப்போது மறைந்துவிட்டது. இதனை அடுத்துத் தோன்றியது பிரசித்திபெற்ற சதுரகராதியாகும். இதுவே தமிழில் முதன்முதல் பிறந்த அகராதி என்று சொல்லலாம். இதனை இயற்றியவர் தைரியநாதஸ்வாமி என்றும், வீரமாமுனிவர் என்றும் பெயர் வழங்கிய (father Beschi) பெஸ்கியாவர். இவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து, கிறிஸ்துமத போதனை செய்து வாழ்ந்த ஒரு பாதிரியார். கி.பி. 1710-ல் இந்தியாவிற்கு வந்தார்; 1747 முடிய மதபோதனை செய்யும் கடமையில் ஈடுபட்டார்; சில காலம் திருச்சியில் சந்தா ஸாகிபுக்கு மந்திரியாகவும் இருந்தனர். தமிழிலே பேரார்வம் கொண்டு, அதனைச் சுப்பிரதீபக் கவிராயர் முதலிய தமிழ் அறிஞர்களிடத்தே நன்கு கற்று, பல நூல்கள் செய்யுளிலும், வசனத்திலும் இயற்றினர். தமிழ் நாட்டுச் சன்னியாசிகள் போலவே தாமும் வேஷந்தரித்து, தமிழ் மக்கள் போற்ற, வாழ்ந்துவந்தனர். இம் முனிவர் இயற்றிய செய்யுள்-நூல்களில் மிகவும் சிறந்தது 'தேம்பாவணி' என்று கூறுவர். 'ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்', 'கொடுந் தமிழிலக்கணம்' முதலிய இலக்கண நூல்களும் இவர் இயற்றியவை. இவரது சதுரகராதியே நாம் இங்கே கவனித்தற்குரியது.

சதுரகராதி

சதுரகராதி என்றால் நான்கு வகைப்பட்ட அகராதி நூல் என்று பொருள். நான்கு வகையாவன: (1) பெயரகராதி, (2) பொருளகராதி, (3) தொகையகராதி, (4)தொடையகராதி, பெயரகராதியில் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் கொடுக்கப்பட்டிருக்கும். பொருளகராதியில், ஒரு பொருளுக்குரிய பல பெயர்களும் காணப்படும். தொகையகராதியில், இருசுடர், முக்குணம், நாற்பொருள் என்பன போல நூல்களில் தொகையாக வழங்கப்பட்டுள்ளனவற்றிற்கு விளக்கம் காணலாம். தொடையகராதியில் செய்யுட்கு வேண்டும் எதுகைச் சொற்கள் (rhyming words) வரிசையாய் அமைக்கப்பட்டுள்ளன.

நிகண்டுகள்: திவாகரம்

இந்நூலில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது ஒன்று உண்டு. அகராதிகள் தோன்றுவதற்கு முன் அவற்றின்

ஸ்தானத்தில் உதவிய நூல்கள் நிகண்டுகளாகும். இந் நிகண்டுகள் மனப்பாடம் செய்வதற்கு என்று ஏற்பட்டன. சுமார் கி.பி. 8-ம் நூற்றாண்டிலிருந்து இவற்றின் வரலாறு நமக்குத் தெளிவாகியுள்ளது. 'நிகண்டு' என்ற வடசொல் லுக்குத் 'தொகுதி' என்று பொருள். முதன்முதல் தோன்றிய நிகண்டு திவாகரம் ஆகும்.

திவாகரம் முதலிய நிகண்டுகளில் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருல், பண்பு, செயல், ஒலி முதலிய 12 தொகுதிகளாகப் பெயர்கள் வகுத்துக் கூறப் படுகின்றன. இவ்வகை நிகண்டுகளில் முக்கியமானவற்றி லுள்ள சொற்களை யெல்லாம் திரட்டிச் சதுரகராதி தந்துள்ளது. ஆகவே நிகண்டுகளைக் கற்று மனப்பாடஞ் செய்ய வேண்டும் அவசியம் இல்லாமல் ஒழிந்தது.

சதுரகராதி வெளியீடு

இவ் அகராதி இயற்றப்பட்டது கி.பி. 1732-ல். ஏடுகளில் இது பிரதிகள் செய்யப்பெற்றுத் தமிழ்நாடு முழுவதும் பரவியது. ஆங்கிலத்தில் டாக்டர் ஜான்ஸன் தமது அகரா தியை 1755-ல் இயற்றி வெளியிட்டனர். இதற்குச் சுமார் 25 ஆண்டுகட்கு முன்பாகவே, சதுரகராதி தோன்றியதாகும். தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள் விளக்கும் பெயர கராதியில் சுமார் 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் இரண்டாம் தொகுதி (பொருளகராதி) 1819-ல் அச்சிடப்பட்டது. நூல் முழுவதும், 1824-ல் ரிச்சர்டு கிளார்க் என்பவரது உத்திரவின்பேரில், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர் என்ற இரண்டு வித்வான்களாலும் பரிசோதித்துப் புதுக்கப்பெற்று, வெளியிடப்பட்டது; கிழக்கிந்திய கம்பெனியாரின் நிர்வாக சங்கத்திற்கு உரிமை யாக்கப்பட்டது.

துரைத்தனத்தார் ஆதரவு

கடைசியிற் குறிப்பிட்ட செய்தியால், பாதிரிமார்கள் செய்துவந்த இம்முயற்சியில் ஆங்கிலேய துரைத்தனத்தாரும் கலந்து கொண்டு, உதவி புரிந்தார்கள் என்பது புல னாகும். துரைத்தனத்தாருக்கு வியாபாரத்துறையிலும், அரசியல் துறையிலும், பல படியாகத் தமிழ்நாட்டுப் பொது மக்களோடு பழகிவந்த முறையிலும், தமிழ், ஆங்கிலம் இரண்டையும் ஒருசேரக் கற்றவர்கள் தேவையாயிருந்தனர். ஆகவே, இரண்டு மொழியையும் கற்பவர்களுக்குப் பயன்

படும்படியாக இருமொழி யகராதி (Bilingual Dicticnary) தோன்ற வேண்டும் அவசியம் உண்டாயிற்று. பெப்ரீஷியஸ், ப்ரெய்ட் ஹெப்ட் என்ற இரண்டு ஜெர்மன் பாதிரிகள் தமிழ்-ஆங்கில அகராதி யொன்றை 1779-ல் இயற்றினர். இதில் 9,000 சொற்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சொல்லின் கீழும் பல வழக்குத் தொடர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 185 பக்கங்களுள்ள ஒரு சிறு நூலாகச் சென்னையில் இது வெளியிடப்பட்டது. இது 'தமிழும் இங்கிலேசுமா யிருக்கிற அகராதி' என்று இதன் முதற்பக்கம் குறிப்பிடுகின்றது. தமிழ் மொழியை 'மலபார் மொழி' என்று ஐரோப்பியர் வழங்கி வந்தனர் என்றும் இம் முதற் பக்கத்தால் அறிகிறோம். பெப்ரீஷியஸ் தம் நண்பர் ஒருவர் கடன் வாங்கியதற்குப் பிணையாளியாய் நின்றிருந்தார். கடன் தீராமையினாலே, இவர் சிறைவாசம் செய்ய வேண்டியதாயிற்று. தமிழ்-ஆங்கில அகராதியை இயற்றிக் கொடுத்த வருவாய் கொண்டு அந்தக் கடனைக் கொடுத்து, சிறையினின்றும் மீண்டார்.

பெப்ரீஷியஸ் அகராதியால் தோன்றிய அகராதி முயற்சி

பெப்ரீஷியஸ் இயற்றிய அகராதி ஒரு சிறு நூல் என்றேன். எனினும் தமிழ்நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் அகராதி பற்றிய முயற்சி தொடர்ந்து நடப்பதற்கு இது ஒரு தூண்டுகோலாய் உதவியது. சுமார் 1833-ல், யாழ்ப்பாணத்து அமெரிக்கன்-மிஷன் அதிகாரிகள் தமிழ் அகராதி ஒன்றும், தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றும் ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றும் இயற்ற வேண்டும் என்று ஏற்பாடு செய்தனர். திஸ்ஸெரா, பெர்ஸிவல் பாதிரியார் முதலியவர்களின் துணைகொண்டு, ரெவரெண்ட் நைட் என்பவர் இவ் அகராதிகளுக்குரிய சொற்களைத் திரட்டி வந்தனர். நைட்டின் மரணத்தால் 1838-ல் இவ்வேலை நின்றுபோய்விட்டது.

யாழ்ப்பாண அகராதி

ஆனால் இத் தொகுப்பு வேலை வீண்போகவில்லை. இதனை ஆதாரமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் சந்திரசேகர பண்டிதர் ஒரு தமிழ் அகராதி இயற்றி முடித்தனர். இதற்கு, சென்னை களத்தூர் வேதகிரி முதலியார் ஒரு அனுபந்தமும் சேர்த்தனர். ரெவரெண்ட் ஸ்பால்டிங் என்பவரால் 1842-ல் இது வெளியிடப்பட்டது. யாழ்ப்பாண அகராதி என்றும், மானிப்பாய் அகராதி என்றும் வழங்கியது இதுவே. தமிழ் மொழியிலுள்ள எல்லாச் சொற்

களையும் அடக்க முயன்ற அகராதிகளில் இதுவே முதலாவது. இதில் சுமார் 58,500 சொற்கள் அடங்கியுள்ளன. தமிழில் நூல் வழக்கிலாவது, உலக வழக்கிலாவது பயின் றுள்ளனவா என்பதை நோக்காமல், வடமொழி அகராதி களினின்று சொற்களைத் தாராளமாய்ச் சேர்த்துவிட்டனர். இதனை ஒரு பெருங்குறை என்றே சொல்லவேண்டும்.

ஆங்கில-தமிழ் அகராதியும், தமிழ்-ஆங்கில அகராதியும்

அமெரிக்கன் மிஷன் அதிகாரிகள் தொடங்கிய மற்றை அகராதிகளும் வெளிவரலாயின. ஆங்கில-தமிழ் அகராதி வேலை ஹச்சிங்க்ஸ் பாதிரியாரால் மீண்டும் நடைபெற்றது. இவ் அகராதியை 1842-ல் உவின்ஸ்லோ பதிப்பித்தனர். இதற்குச் சில ஆண்டுகட்கு முன்னர், சுமார் 1830-ல் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்று டாக்டர் ராட்லர் என்பவரால் இயற்றப்பட்டது. இதனைத் திருத்தம் செய்வதற்கு இரண்டு தமிழ் முனிஷிகளையும், ஹார்க்நெஸ். ராபர்ட்ஸன் என்பவர்களையும் நியமனம் செய்தனர். முற்பகுதி கவர்னர் ஜெனரல் பெண்டிங்க் பிரபுவிற்கு உரிமையாக்கப்பட்டு 1834-ல் வெளிவந்தது. ராபர்ட்ஸன் இறந்து போகவே டெய்லர் பாதிரியாரும், வேங்கடாசல முதலியாரும் இவ் அகராதி வேலையை மேற்கொண்டனர். இவர்களால் இரண்டாம் பகுதி 1837-லும், மூன்று நான்காம் பகுதிகள் முறையே 1839, 1841-லும் அச்சில் வெளிவந்தன. இவற்றில் 1425 பக்கங்களும், 36,900 சொற்களும் உள்ளன. இவ் அகராதி மிகவும் பயனுடையது. யாழ்ப்பாணத்தில் வழங்கும் பல சொற்கள் இதிற் சேர்க்கப்படவில்லை என் பது ஒரு குறை என்பர்.

உவின்ஸ்லோ அகராதி

ராட்லர் அகராதி வெளிவந்த சில காலத்திற்குப் பின் னர், தமிழ்-ஆங்கில அகராதிக்காக யாழ்ப்பாணத்து அமெ ரிக்கன் மிஷின் சார்பில் தொகுக்கப்பட்ட சொற்களை உவின்ஸ்லோ சென்னையில் 1862-ல் பதிப்பித்தனர். இப் பதிப்பு வேலையில் பல சிறந்த வித்வான்கள் பலவாறு உதவி செய்து வந்தனர். இவர்களில் இராமாநுஜ கவிரா யர், விசாகப் பெருமாளையர், வீராசாமிச் செட்டியார் முதலிய அறிஞர்களை இங்கே குறிப்பிடல் தகும். இவ் அகராதியில் 67,452 சொற்கள் உள. இருவகை வழக்கிலு முள்ள சொற்கள் மிகக் கூட்டப்பட்டன; பல வகையான சாஸ்திரச் சொற்கள் விளக்கப்பட்டன; ஆசிரியர்கள்,

புலவர்கள், வீரபுருஷர்கள், தெய்வங்கள் முதலியோர்களின் பெயர்களும் இதில் சேர்க்கப்பட்டன.

தமிழ்-லத்தீன் அகராதி முதலியன

மேற்குறித்த அகராதிகளே யன்றி, தமிழ்-லத்தீன் அகராதிகளும் தோன்றின. பெஸ்கி தாமும் சுமார் 1742-ல் இவ்வகை அகராதி யொன்று இயற்றினர். 1744-ல் தமிழ்-பிரெஞ்சு அகராதி யொன்றும், போர்த்துகீய-லத்தீன்-தமிழ் அகராதி யொன்றும் இவரே இயற்றி முடித்தனர். பெஸ்கி, ராட்லர், உவின்ஸ்லோ என்ற மூவர் இயற்றியவை களைப் பயன்படுத்தி ஆர்.பி.குரி என்ற பாதிரியார் ஒரு தமிழ்-லத்தீன் அகராதி இயற்றி நாகப்பட்டணத்திலிருந்து 1867-ல் வெளியிட்டனர். இவ்வாறே தமிழ்-பிரெஞ்சு அகராதிகள் வேறு சிலவும் வெளிவந்துள்ளன.

சிறு அகராதிகள்

உவின்ஸ்லோ அகராதி மிகவும் பெரிய நூல்; எல்லோ ருக்கும் உதவக் கூடியதல்ல. ஆகவே அடக்கமான சிறு அகராதிகள் இயற்றுவதில் ஒரு சிலருக்கு நோக்கம் எழுந் தது. ஜி.யு. போப்பாதிரியார் இவ்வகைச் சிற்றகராதி ஒன்றை 1859-ல் இயற்றி வெளியிட்டனர். பொதுக் கல்வி அதிகாரி யின் உத்திரவின்பேரில் ஒரு சிற்றகராதி 1870-ல் தயாரிக்கப் பட்டது. இதனைத் திருந்திய நல்ல பதிப்பாக 1888-ல் மல்லாகம் விசுவநாத பிள்ளை பதிப்பித்தனர்.

தரங்கம்பாடி அகராதி

பேரகராதிகளுக்கும், சிற்றகராதிகளுக்கும் இடைப் பட்டதாய், பொது மக்களது தேவைக்கு உதவுவதாய், ஓர் அகராதி வேண்டப்படுவதாயிற்று. இத் தேவையை நிரப்ப, 1897-ல் தரங்கம்பாடி (Tranquebar) அகராதி தோன்றியது. இது பெப்ரீஷியஸ் அகராதியை ஆதாரமாகக் கொண்டது. ஒரு முக்கியமான முறையையும், இது கையாண்டது, டாக்டர் க்ரால் என்பவர் தமிழில் முக்காலத் தும் வரும் வினைவிகற்பங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து வினையடிகளை 13 வகையாகக் கணக்கிட்டிருந்தனர். இவ் வகையை இவ் அகராதியும் மேற்கொண்டு, ஒவ்வொரு வினையடியையும் அது எவ்வகையைச் சார்ந்தது எனக் குறிப்பிட்டுச் சென்றது. இதனால் வினை விகற்பங்களை யெல்லாம் அகராதியில் கொடுக்கவேண்டும் அவசியம்

இல்லாமற் போயிற்று. இப்படிச் சிறந்த முறையைக் கையாண்டதோடு, வழக்கொழிந்த சொற்கள், அருகிய சொற்கள் முதலியவற்றையும் இவ் அகராதி நீக்கிவிட்டது. இதில் 11,590 சொற்களும், 21,305 தொடர்கள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கதிரைவேற் பிள்ளை தமிழகராதி

இங்ஙனமாக, இருமொழி அகராதிகள் பல படியாய்த் திருத்தமடைந்து பெருகின. ஆனால், ஒருமொழி யகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே வெகுகாலம் நின்றுவிட்டது. யாழ்ப்பாண அகராதி ஒன்றுதான் பயன் பட்டு வந்தது. அதனையும் பதிப்பாளர்களும். பிரசுரகர்த் தர்களும் பாழாக்கி வந்தனர். அச்சுப் பிழைகள்கூடத் திருத்தப்பெறாமல் இன்றும் பதிப்புக்கள் வெளிவந்த வண்ணமாயுள்ளன. இதற்கு ஒரு விலக்காக, நா. கதிரை வேற்பிள்ளை இயற்றி வெளியிட்ட அகராதியைச் சொல்ல லாம். இவர் 40 வருஷங்களுக்கு முன் விளங்கிய ஒரு சிறந்த தமிழ்ப் பண்டிதர்; யாழ்ப்பாண நாட்டினர்; ஆறுமுக நாவலர் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர்; தமிழ்நாட்டில் சைவப் பிரசாரமும், தமிழ்ப் பிரசாரமும் செய்து வந்தவர். இவரும்கூட, தமது பிரசுரகர்த்தர்கள் தம் அனுமதி யின்றிப் பதிப்புக்களை மோசடியாய் வெளியிட்டுப் பிழை களைப் பெருக்கிவந்தனர் என்று முறையிட்டு எழுதி யுள்ளார்.

தமிழ்ச்சங்க அகராதி

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த ஸி. டபிள்யு. கதிர்வேற் பிள்ளை ஒரு சிறந்த பேரகராதி வெளியிட வேண்டி, அதற்குரிய முயற்சிகளைச் செய்தனர். அகராதியிலும் ஒரு பகுதியை இவர் எழுதி முடித்தனர். ஆனால், நூல் முற்றுப்பெறுவதற்கு முன், இவர் மரண மடைந்தனர். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் இவ் அகராதி ஒருவாறாக முற்றுப் பெற்றது. இந்தக் காரணத்தால், தமிழ்ச் சங்க அகராதி என்று இதனை வழங்குவர். இதில் நூற்றுக் கணக்கான வடசொற்கள் புதியனவாகச் சேர்க்கப்பட்டன. பல தமிழ் இலக்கியங்களி னின்றும் தக்க மேற்கோள்கள் கொடுக்கப்பட்டன. சொற் களின் வடமொழி மூலங்களும் காட்டப்பட்டன. வடமொழிச் சொற்கள் அனைத்தையும் சேர்த்தாலன்றி, தமிழகராதி பூர்த்தியாகமாட்டாது என்ற கொள்கையுடையவர் நீதிபதி

கதிர்வேற் பிள்ளை, இதனால், வடமொழிச் சொற்கள் ஏராளமாய் நுழைந்து, இவ் அகராதிக்கு ஒரு குறையை உண்டாக்கிவிட்டது. ஆங்கில அகராதியில் லத்தீன் சொற்கள் அனைத்தையும் புகுத்தினால் அகராதி முறையோடு முரணுமல்லவா?

முற்பட்ட அகராதிகளில் உள்ள குறைபாடுகள்

இத் தமிழ் அகராதி ஒருபுறம் இருக்க, தமிழ் ஆங்கில அகராதி பலவகையில் செப்பமடைய இடமிருந்தது. முதலாவது, சங்க இலக்கியம் முதலிய ஆதார நூல்கள் பல உவின்ஸ்லோவுக்குப் பின்னரே அச்சில் வெளிவந்துள்ளன. அவற்றை நன்கு பயன்படுத்துவது அவசியமாயிற்று. இரண்டாவது, சொற்களுக்குப் பொருள் எழுதுவதில் உவின்ஸ்லோ முதலியோரது அகராதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நயமிருந்தது. இந்நயங்கள் அனைத்தையும் ஒருங்கு கொணர்ந்து அவற்றை . இன்னும் ஒழுங்காக விருத்தி செய்வது அவசியமாயிருந்தது. மூன்றாவது சொற்பொருள்களை அமைப்பதில் சில நியமங்களைக் கையாளுவதும் அவசியமாயிற்று. தமிழ் அகராதி நூல்கள் பலவும் பொருள்களையுங் கூட அகராதிக் கிரமத்தில் அமைத்தன. இது தவறாகும். வரலாற்று முறையிலும், இயலாத இடங்களில் கருத்துத் தொடரும் முறையிலும் இவற்றை அமைக்க வேண்டுவது இன்றியமையாததாகும். நான்காவது, சொல்லுக்குப் பொருளாகப் பரியாயச் சொற்களக் கொடுப்பது போதாது. சொல்லுக்கு உரிய பொருளின் லட்சணத்தையும் வரையறை செய்யவேண்டும். இவ்வாறு செய்யும் வழக்கம் தமிழ் அகராதிகளில் பெரும்பாலும் இல்லாமலிருந்தது; பரியாயச் சொல்லைக் கூறுவதுதான் லட்சணமாகக் கருதப்பட்டது. தமிழ்-ஆங்கில அகராதிகளிற் கொடுக்கப்பட்டுள்ள லட்சணங்களும் ஒவ்வொரு வகையில் பிழைபாடு உடையனவாயிருந்தன. இக் குறைகளெல்லாம் நீங்கவேண்டுவது அவசியமாயிற்று. ஐந்தாவது, சொல்லின் பிறப்பைக் குறித்து அகராதியாளர்கள் பெரும்பாலும் கவனஞ் செலுத்தியதே இல்லை. வடமொழி மூலங்கள் சிலவற்றிற்குத் தரப்பட்டிருந்தன. பிற திராவிட மொழிகளினின்று பிறப்பொத்த சொற்கள் காட்டப் பெறவில்லை. ஆறாவது, மேற்கோள் காட்டுவதில் தகுதியான நியமங்கள் கையாளப்படவில்லை. தக்க நியமங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கோள் கொடுப்பது அவசியமாயிருந்தது.

தமிழ் லெக்ஸிகன்

மேற் குறித்த அமிசங்களிலெல்லாம் திருத்த மெய்தியது சென்னை ஸர்வகலா சங்கத்தார் வெளியிட்டுள்ள 'தமிழ் லெக்ஸிகன்' ஆகும். இதுவும், அரசினர் ஆதரவில் சாண்ட்லெர் என்ற அமெரிக்கன் மிஷின் பாதிரியாரால் தொடங்கப் பெற்று, தமிழ் வித்வான்கள் உதவிகொண்டு, ஆங்கிலமும் தமிழும் கற்ற வித்வான்களால் முற்றுப் பெற்றது. இதில் குறைகளே இல்லை என்றாவது, இதனோடு அகராதி வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று என்றாவது நினைப்பது தவறு. இதிலும் பல குறைகள் உள்ளன. அகராதி வேலை மேலும் மேலும் நடைபெற்றுக் கொண்டே செல்ல வேண்டியதுதான்.

அகராதி வேலைக்கு முடிவு இல்லை

மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியைப் பொறுத்தது. இம் மொழி வளர்ச்சிக்கு சொல்லின் வளர்ச்சி ஓர் சிறந்த அறிகுறியாயுள்ளது. நமது வாழ்க்கை வளமுறுவதானால் சொற்கள் பெருகிக் கொண்டுதான் செல்லும். அகராதி வேலைக்கும் முடிவில்லை. குறைபாடுகளைத் திருத்துவதும், சொற்களுக்கு ஜாதகம் கணிப்பதும், புதுச் சொற்களைச் சேர்ப்பதும், சாஸ்திர சங்கேதமொழி-அகராதிகளையும், கொடுந்தமிழ், திசைச் சொல்பற்றிய அகராதிகளையும், சொல்-உற்பத்தி அகராதிகளையும் இயற்றுவதும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருஞ் செயல்களாகும். இவ்வேலைகள் இடையீடின்றி நடைபெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உள்ளம் இதிலே செல்லுவதாக!

4. அகராதி-நினைவுகள்*

சென்னை, பல்கலைக் கழகத்திலிருந்து 'தமிழ் லெக்ஸி கன்' என்ற பெயரால் வெளியிடப்பெற்ற அகராதியைப் பற்றித்தான் நான் இங்கு பேசுகிறேன். இந்த லெக்ஸிகன் 1913 ஜனவரியில் செந்தமிழ் நாட்டுத் தலைநகர் எனத்தகும் மதுரையில் தொடங்கப்பெற்று, 1915 மே மாஸத்தில் சென்னை நகரில் தொடர்ந்து இயற்றப் பெறுவதாயிற்று. இதற்கு ரெவரெண்ட் ஜே.எஸ்.சாண்ட்லெர் (Rev.J.S.Chandler) தலைமைப் பதிப்பாசிரியராகத் தொடக்கத்தில் அமைந்தார். முதலில் மூன்று பண்டிதர்களும், பின்னர் 1915-ல் நான்காவது பண்டிதரொருவரும் உதவியாளராகக் கொள்ளப்பட்டனர். லெக்ஸிகன் கமிற்றி ஒன்றும் நியமிக்கப்பட்டது. முதலில் லெக்ஸிகன் பற்றிய பொறுப்பு சென்னை அரசாங்கத் தாரிடமிருந்தது. ஆனால், அரசாங்கம் பல்கலைக் கழகத் தின் மூலமாகவே இப்பொறுப்பை நிறைவேற்றி வந்தது. பின்னர் அகராதி வேலையின் பொறுப்பு முழுதும் பல்கலைக் கழகத்தாரே வகிக்கவேண்டும் என்று அரசாங்கம் தீர் மானித்தது. பல்கலைக் கழகமும் இதனை ஏற்று ஸின்டிக்கெட் கமிற்றியொன்றும் நியமித்தது. இதுவரை செய்து வந்த வேலையைப் பரிசீலனை செய்து நோக்கினால் அது ஒருவகையிலும் திருப்தியாகாது என்ற முடிவிற்கு 1917-ல் பல்கலைக் கழகம் வந்தது. பின், மிஸ்டர் மார்க் ஹண்டர் அகராதி இயற்ற வேண்டும் நியமம் பற்றி ஒரு குறிப்பு எழு தினர். இதனை ஒப்புக் கொண்டு, ஒரு புதிய அகராதிக் கமிற்றி நியமிக்கப்பட்டது. அதன் தலைவர் ஸர் பி.எஸ். சிவசாமி ஐயர். மகாமகோபாத்தியாய சாமிநாதையர், அனவரத விநாயகம் பிள்ளை, குப்புஸ்வாமி சாஸ்திரிகள், தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை என்பவர்கள் அதன் உறுப்பினர்கள். அகராதிப் பதிப்புக் கழகத்தில், ரெவ. சாண்ட் லெர் கூட, பல்கலைக் கழகத்து மொழிநூற் பேராசிரியரும், தமிழிலும் வடமொழியிலும் வல்ல ஒரு பி.ஏ. பட்டதாரியும் (Graduate) வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. 1918-ல் பொருட் செலவுப் பொறுப்பும் அகராதியை முற்றுவிக்கும் பொறுப்பும் பல்கலைக் கழகத்தாரே ஏற்றனர். 1919-ல் ஸர் பி.எஸ். சிவசாமி ஐயர் அகராதியின் அமைப்பு முறை யையும் சொற்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும்

*திருவனந்தபுரம் வானொலிப் பேச்சு, 1-3-1954

கண்டித்து, ஒரு கண்டனமும் எழுதி, தமக்குத் தலைவ ராக இருக்க முடியாது என்று கூறி விலகிவிட்டனர். அப்பொழுது நீதிபதி டி.வி. சேஷகிரி ஐயர் தலைமை வகித்த னர்.

1921-ல் சாண்ட்லெர் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கவே, திரு. அனவரத விநாயகம் பிள்ளை அப்பதவியை ஏற்றனர். அவரால்தான் முதன் முறையாக அகராதிப் பகுதிகள் அச்சுக்குக் கொடுக்கப்பட்டன. 1923-ன் முடிவில் 16 பாரங்கள் அச்சியற்றி முடிந்தன. அப்பொழுது திரு. பிள்ளை பதிப்பாசிரியர் பதவியினின்றும் விலகிக் கொண்டனர். 1924 பெப்ருவரியில் திரு. ஸி.பி. வெங்கடராமையர் பதிப்பாசிரிய ராய் அமர்ந்தனர். இரண்டு ஆண்டுகளாக அச்சிட்ட பாரங் களும் பிழை நிரம்பியுள்ளன என்று கொண்டு திருத்தங்கள் செய்துவந்தனர். அகராதி வேலை மிக மந்தமாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. அகராதி வேண்டாம் என்ற அள வுக்குப் பல்கலைக் கழகம் அதிருப்தியுற்றது. ஸி.பி. வெங் கடராமையர் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கி, கல்வி யிலாகாவில் தமது காயமான வேலைக்குச் சென்றனர். ராவ்பஹதூர் கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் 1926 மார்ச்சு மாதம் அகராதிக் கமிற்றித் தலைவராக நியமனம் பெற் றார்.

1926 நவம்பர் இறுதியில் நான் பதிப்பாசிரியர் நிய மனம் பெற்றேன். நான் அப்பதவி பெறுவதற்குமுன் திருநெல்வேலியில் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தேன்.எனது பொழுதெல்லாம் பெரும்பாலும் தமிழ்நூல்களைக் கற்பதி லும், ஆராய்ச்சி செய்வதிலும், கம்பராமாயண பரிசோ தனையிலும் கழிந்தது. எனது தந்தையாரவர்களுடைய வற்புறுத்துதலின்பேரில் சைவசித்தாந்த நூற்பயிற்சி சிறிது பெற்றேன். வீரராகவபுரத்தில் என்னோடு வக்கீல் தொழிலில் இருந்த எம்.எஸ். சுப்பய்யா முதலியார், சக்கரபாணி நம்பி யார், ஆதிமூர்த்தியா பிள்ளை, வண்ணார்பேட்டையில் திரு. வி. வேதநாயகம் பிள்ளை. டி.கே. சிதம்பரநாத முதலி யார், எனது பழைய நண்பர் கே. அனந்தராமையங்கார், ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப் பாண்டியத்திலும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் வல்லவராய், பிற்காலத்தே திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்வானாய் விளங்கிய சிதம்பர ராமலிங்கம் பிள்ளை, சி. வீரபாகு பிள்ளை முதலியோர்என்னோடு தமிழ் பயின்ற நண்பர்கள், எனது கம்பராமாயணப் பயிற்சி வ.வெ.சு. ஐயரவர்களைக் கவர்ந்தது.

அவர்களது ஆயுள் இறுதிவரை எனக்கு மிக நெருங்கிய நண்பராய்விட்டார்கள். எனது நட்பு, பிராமணர், அல்லாதார் என்ற ஜாதி வேறுபாடுகளைக் கடந்தது; வடமொழி, தமிழ் என்ற மொழி வேறுபாடுகளைக் கருதாதது; பண்டிதர்கள், ஆங்கிலம் கற்ற தமிழர்கள் என்ற சிறு வரம்புகளை மதியாதது: சைவம், வைஷ்ணவம் முதலிய மதவேறுபாடுகளைக் கனவிலும் நினையாதது; சங்க காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்றவற்றில் ஏதேனும் ஒன்றில் அபிமானம் வைத்து அதனையே கற்பது என்ற நியதியைக் கொள்ளாதது. அறிவு வளர்ச்சியும், தமிழுணர்வுப் பெருக்கமும், உண்மை நாட்டமும், நடுநிலைமையுமே என்னை ஊக்கி வந்தன.

எனது சொந்த ஊராகிய திருநெல்வேலியில் நான் வக்கீல் தொழிலில் இறங்குவதற்குமுன், எனது மனைவியின் ஊராகிய திருவனந்தபுரத்தில் 1915-ல் அட்வொகேட் ஆக இருந்தேன். அப்போது உற்ற நண்பர்களாக இருந்தவர்கள் திரு. கே. என். சிவராஜ பிள்ளை, தி. இலட்சுமண பிள்ளை, சி. தேசிகவிநாயகம் பிள்ளை, நீதிபதி ஸ்ரீ கே.ஜி. சேஷையரவர்களது மாப்பிள்ளை கே.ஜி. சங்கர ஐயர் முதலினோர். இங்கிருந்துதான் நான் முதலில் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கியது. சேரர் தலைநகராகிய கருவூர் எங்கிருந்து என்ற கேள்வியானது அக்காலத் தமிழ் வித்வான்களிடையே பெரிதும் விவாதிக்கப்பட்டு வந்தது. செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்த திருநாராயண ஐயங்கார் ஒருபுறமும், ஸேது ஸம்ஸ்தான மகாவித்வான் ரா. இராகவையங்கார் எதிர்ப்புறமாகவும் பத்திரிகை மூலமாய்த் தருக்கித்து வந்தனர். எனது நண்பர் கே.ஜி. சங்கர ஐயரும் நானும் இப்பத்திரிகைகளை வாசித்து வந்தோம். ஒருமுறை இராகவையங்கார் புறநானூற்றில் 13-ம் செய்யுள் சேரரது கருவூர் சோழநாட்டினை அடுத்துச் சேரரது உள்நாட்டிலிருந்தது என்பதை ஆதரிப்பதாகக் காட்டினர். இதனை மறுத்து திருநாராயண ஐயங்கார் தமது தர்க்கப் பான்மையெல்லாம் காட்டி இப்புறநானூற்றுச் செய்யுள் தமது கொள்கைக்குச் சாதகமாயிருப்பதுபோல் பொருளுரைத்தனர். இவர்கள் தமது தர்க்கநூற் பயிற்சி கொண்டு எதனையும் நிறுவிவிடலாம் என்று நினைத்தார்கள். நச்சினார்க்கினியரை சாக்ஷிக்கூண்டில் ஏறச் செய்து அவரைக் குறுக்கு மறுக்காய்க் கேள்விகள் கேட்டு, தாம் எழுதியிருப்பதன் பொருள் தமக்குத் தெரியாது என்று சொல்லும்படி திருநாராயண ஐயங்கார் செய்த விநோத

ஆராய்ச்சி என்றும் நகைப்பிற்கு விளைபுலமாயுள்ளது. இக் கருத்தை நான் சங்கர ஐயருக்குக் கூறினேன். அவர் 'அப்படி நீ கூறுவது உண்மையானால் அதைப்பற்றி எழுத வேண்டும்' என்று ஐயவுணர்ச்சி மிகுதியும் தோன்றப் பதில் விடுத்தார்கள். நானும் என் கருத்துப் புலப்பட, இச்செய்யுள் பற்றி மிக விரிந்த கண்டனவுரையொன்று பல பகுதிகளாக எழுதினேன். இவ்வுரைதான் என்னைப் பண்டித உலகிற்கு அறிமுகமாக்கி வைத்தது. கண்டனவுரைப் பகுதிகளைக் கொடுத்து, அவற்றிற்குக் கீழே, தமது மறுப்புக்களையும் திருநாராயண ஐயங்கார் எழுதி வந்தனர். இவற்றால் எனது கண்டனவுரையின் நேர்மையும், தெளிவும், ஆராய்ச்சிவன்மையும்தான் தெள்ளத் தெளிய உணரப்படலாயின. எனக்குத் தமிழ்நாடு, யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களிலிருந்து புகழ்மாலைகள் வந்து குவிந்தன. இக் கண்டனவுரையை அடுத்து, தொல்காப்பியரது சமயம் பற்றிச் சில கட்டுரைகள் எழுதி, அவர் ஜைன மதத்தினர் என்பதை நிறுவினேன். இது ஜைனவுலகில் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது; ஜைனர்களது நன்மதிப்பு எனக்குக் கிடைக்கும்படி செய்தது. ஒருமுறை தி. இலட்சுமண பிள்ளையிடம் இக்கட்டுரை பற்றிப் பேச நேர்ந்தது. அவர் 'சமயம்' என்பதைப் பிறழவுணர்ந்து மிக்க ஆத்திரத்துடன் 'தொல்காப்பியர் எந்தக் காலத்தினர் என்று துணிந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்!

திருவனந்தபுரத்திலிருக்கும்பொழுது மலையாளம் சிறிது கற்றுக் கொண்டேன். நானும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும் அதிகாலையில் எழுந்து வடமொழியிலுள்ள ஸப்த ரூபாவலியை மனப்பாடம் செய்துவந்தோம். லகு சித்தாந்த கௌமுதியை, கோவெல் (Cowell) என்பவர் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பின் உதவிகொண்டு, தமிழில் முழுதும் மொழிபெயர்த்தேன். இம் மொழிபெயர்ப்பு இன்றும் எனது நூல்-நிலையத்தில் உள்ளது. கம்பராமாயணத்தை இங்குள்ள அரண்மனை நூல்நிலையத்திலிருந்து (Palace Library) கிடைத்த மிகப் பழைய ஏட்டுப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பாட பேதங்களைக் குறித்துக் கொண்டு வாசித்து முடித்தேன்.

இவ்வாறு அச்சுப்பிரதிகளை ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிடுதல் நான் முதன்முறையாகச் செய்யத் தொடங்கியதல்ல. எப்.ஏ. (F.A.) வகுப்பு மாணவனாக இருக்கும் காலத்திலேயே

கலித்தொகை முழுவதையும் அங்ஙனம் ஒப்பிட்டுப் படித்துள்ளேன். பி.ஏ. (B·A.) யில் தேர்ச்சிபெற்றவுடன், தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரைச் சுவடியை த. கனகசுந்தரம் பிள்ளை யிடமிருந்து பெற்று உரைமுழுவதும் பிரதி செய்து வைத்துள்ளேன். 1922-ல் மனோன்மணீயத்தை உரை, அரும்பத அகராதி, அனுபந்தங்களுடன் வெளியிட்டேன். இதில் உதவியவர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்.

1923-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் நெல்லை வந்து சேர்ந்தேன். அவ் ஆண்டில் கம்பர் கழகம் ஒன்று நிறுவப் பட்டது; கம்பர் விழா மிக விமரிசையாய்க் கொண்டாடப் பட்டது. சக்கரபாணி நம்பியார் விழா இனிவு நடை பெறுவதற்கு வேண்டும் பொருள் திரட்டுவதில் பெருமுயற்சி யெடுத்துவந்தார்கள். சுப்பய்யா முதலியார் முதலிய அன்பர்களும் பலவழிகளில் உதவிவந்தனர். இம்முயற்சிகள் ஒரு புறம். வேறு சில ருசிகரமான சம்பவங்களும் நிகழ்ந்தன. டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ராராக இருந்த சபாபதிப் பிள்ளை விழாவில் 5 நிமிஷங்கள் பேசவேண்டுமென்று உயிர்ப்பிச்சை கேட்பதுபோல் இரங்கிக்கூறி, பின்பு, அரைமணிக் கூறு கம்பன் பாட்டுக்களை இடைவிடாமற் பொழிந்து தள்ளியதை மறக்கவே முடியாது. இதில் தலைமை தாங்கியவர் ரா. இராகவையங்கார். அவரை நேரிற்கண்டு அளாவளாவும் பேறு இப்பொழுதுதான் கிடைத்தது. இதில் குறிப்பிடத்தக்க சில விஷயங்கள் உண்டு. கே. என். சிவராஜ பிள்ளை கம்பனது கவித்துவத்தைப் பற்றி எழுதிய ஆங்கிலக் கட்டுரை, 'கம்பன் திருநாள்' என்னும் பொருள் பற்றி நான் எழுதிய பாவனைக் கட்டுரை. எனது கட்டுரை 'செந்தமிழில்' வெளியிடுவதற்கு அனுப்பப்பட்டிருந்தது. சில நாட்கள் கழித்து, கலாசாலையில் என்னுடன் கற்ற நண்பரும் எனது தமிழாற்றலை அறிந்தவருமாகிய பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் நெல்லைக்கு வந்தனர். அவர் அக் காலத்தில் 'தமிழர் நேசன்' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினர். என்னைச் சந்தித்துத் தமது பத்திரிகைக்கு அடிக்கடி எழுதிக் கொண்டிருக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். நானும் இசைந்து, 'கம்பர் திருநாள்' என்ற கட்டுரையின் பிரதியொன்றை அவரிடம் கொடுத்தேன். அவர் அதனை வாசித்து மகிழ்ந்து தமது பத்திரிகையிலும் வெளியிட்டனர். என்னைப் பற்றிச் சென்னையிலுள்ள சில அன்பர்களும் தெரிந்துகொள்வதற்கு இக்கட்டுரை காரணமாயிற்று.

1926-ல் ஸி.பி. வெங்கடராமையர் அகராதிப் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கியதும் வேறொரு தக்க பதிப்பாசிரியரை நியமிப்பதில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, அகராதிக் கமிற்றி முயன்றது. என்னைப் பற்றி எனது நண்பர் பெ.நா. அப்புஸ்வாமி அய்யர் பிரஸ்தாபிக்க நேர்ந்ததும், கமிற்றித் தலைவர் கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் மிகவும் திருப்திகொண்டனர். அகராதிக் கழகத்தில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய மு. இராகவையங்காரிடம் விசாரணை செய்தார். என்னை நேரில் அறியாதவராயிருந்தும் எனது கட்டுரைகளை வாசித்துள்ளமையினாலே அவரும் திருப்தியான விடையளித்தனர். ஆகவே, என்னையே அப்பதவிக்குத் தக்கவனென்று உறுதி கொண்டனர். பெ.நா. அப்புஸ்வாமி அய்யர் மூலமாக எனது ஸம்மதமும் தெரிவிக்கப்பட்டது. அகராதிக் குழுவில் ஜைனர்கள் சார்பில் உறுப்பினராயிருந்த சக்கரவர்த்தி நயினாரும் என் பெயரையே ஆமோதித்தனர். குப்புஸ்வாமி சாஸ்திரிகள், ஸி.ஆர். நமச்சிவாய முதலியார் முதலிய அனைவரும் எனது சார்பாக இருந்தனர். மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாதையருக்கு மட்டும் திருப்தியில்லை. இது பலபடியாலும் விளங்கிற்று. ராமரத்ந ஐயருக்கு இப்பதவியை அளிக்கவேண்டும் என்பது அவர்கள் கருத்து. ஆனால், அக்கருத்து நிறைவேற வழியில்லையென்று கண்டதும் ஒதுங்கிவிட்டனர். அகராதிக் கமிற்றியின் தீர்மானத்தைப் பல்கலைக் கழகத்தில் ஸின்டிக்கேற்றும் ஒப்புக்கொண்டு, என்னை நியமனம் செய்தார்கள். நான் தமிழ்-ஆராய்ச்சித் துறைக்கே உரியனவனென்று பள்ளிப் பருவமுதற்கொண்டு என்னை நான் கருதிவிட்டபோதிலும், எனது வாழ்க்கைத் துறையின் முழுப் போக்கும் அவ் ஆராய்ச்சித் துறையில் அமைந்துவிடுமென்று நான் கனவிலும் நம்பியதில்லை. எனக்குரிய துறையில் நான் செல்லுதற்குக் காரணமாயிருந்த பெ.நா. அப்புஸ்வாமி அய்யர், கே.வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸி.ஆர். நமச்சிவாய முதலியார் முதலிய பேரன்பர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

1926 நவம்பர் மாசம் 25-ம் தேதியில் நான் சென்னை சென்று அகராதிப் பதிப்பாசிரியர் பதவியை ஒப்புக்கொண்டேன். அலுவலகத்தில் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் இடைக்காலத் தலைவராயிருந்தார். மு. இராகவையங்கார் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வடமொழியும் தமிழும் வல்ல பண்டிதர்,

ஆ. சிங்காரவேலு முதலியார் சைவ சித்தாந்தப் பண்டிதர், இ.எஸ். வரதராஜ அய்யர், சுந்தரமூர்த்தி என்ற இருவரும் பி.ஏ. பட்டம் பெற்ற உதவியாளர்கள், இராமமூர்த்தி ஸர்மா, கோபாலையர் என்ற இருவரும் பெயர்த்தெழுது வதற்கும் புரூப் (Proof) ஒப்பு நோக்குதற்கும் நியமித்த கிளார்க்குகள், மானேஜர் சாது வரதராஜம் பந்துலு இவர்கள் அங்கிருந்தனர். அனைவரையும் மு. இராகவையங்கார் அறிமுகப்படுத்தினர்.

எனது முதல் வேலை அகராதியின் அமைப்புமுறையை (Plan) நன்கு பயில வேண்டுவதாயிருந்தது. உடன்தானே அகராதிச் சொற்கள் கொண்ட கடுதாசித் துண்டுகளைத் தயாரிப்பது முதல் அச்சியற்றி முடியும் வரையுள்ள எல்லா நிலைகளையும் உணர்ந்து, அனைத்தையும் நானே செய்து கையாளவல்லவனாகவும் ஆயினேன்.

அகராதி வரிசை

கடுதாசித்துண்டுகளில் எழுதுவது பற்றி ஒரு சிறிய வரலாறு உண்டு. லெக்ஸிகனின் ஆரம்பகாலத்தில் (Folio) அளவுள்ள நோட்டுப் புத்தகங்களில் சொற்களை எழுதி வந்தார்கள். மொழி முதலில் வரும் எழுத்துக்களின் கீழாகச் சொற்கள் பல நோட்டுப் புத்தகங்களில், பல இடங்களில், அகராதிக் கிரமமின்றி எழுதப்பட்டு வந்தன. ஏதேனும் ஒரு சொல்லைப் பார்க்க வேண்டுமாயின், பல நோட்டுப் புத்த கங்களையும், ஒவ்வொரு புத்தகத்திலும் பல இடங்களை யும் நோக்கும்படி நேர்ந்தது. இதனால் விளைந்த இடைஞ் சல்கள் பல. சொற்கள் மிகுந்தோறும், நோட்டுப் புத்தகங் களும் மிகுந்தன; கஷ்டப்பாடுகளும் மிகுந்தன. ஒரு சொல்லின் பலபொருள்களையும் தொடர்ச்சியாகவும் பார்க்க முடியாது. சொற்களையும் பொருள்களையும் தேடும் இந்தக் காட்சி சிறிது விநோதமாகவே யிருந்ததாம். பதிப்பாசிரிய ராயிருந்த ரெவ. சாண்ட்லெர் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று அகராதி இயற்றும் முறை யைத் தெரிந்து மீண்ட பிற்பாடுதான், கார்டு அளவிலுள்ள கடுதாசித் துண்டுகளில் சொற்களையும், பொருள்களையும் எழுதி அகராதிக் கிரமத்தில் அடுக்கி வைக்கும் முறை கையாளப்பட்டதாம்!

புதுப் பதங்களைச் சேர்த்தல்

புனர் பரிசோதனைக்குப் (Revision) பின்னர், நூல் களை வாசித்துப் புதுப்பதங்களைச் சேர்க்கப் பெரிதும்

முயன்றேன். இவ்வேலைகள் அனைத்திலும் என்னோடு அகராதி அலுவலகத்திலுள்ள அனைவரும் பூர்ண மனத்துடன் ஒத்துழைத்து வந்தனர். ஆண்டு ஒன்றுக்கு மூன்று பகுதிகளாக வெளியிட்டுவரத் திட்டமிட்டுக் கொண்டு வேலை செய்து வந்தோம். என் மனம் முழுவதிலும் அகராதி வேலைக்குரிய செயல்கள்தான் நிரம்பியிருந்தன. குறித்த கெடுவில் அகராதிப் பகுதிகள் வெளிவரத் தொடங்கியதும், பல்கலைக் கழகத்தார் திருப்தியுற்றனர். இதுவரை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, ஸெனட் கூடும்பொழுதெல்லாம் லெக்ஸிகன் ஆபீசு இதனோடு இறந்துவிடுமென்று எண்ணி வருந்திய நிலைமை மாறி, இப்போது அகராதி வேலை துரிதமாக நடைபெற்றுவருவதைத் தெரிந்து பலரும் உத்ஸாகம் கொள்ளலாயினர். அகராதி வேலையில் முற்றும் முனைந்து நின்ற எனது அலுவலகத்தினர்க்கு யாதொரு கவலையும் ஏற்படாதபடி அகராதிக் கமிற்றியும், இக் கமிற்றித் தலைவரும் நோக்கிக் கொண்டனர்.

நோக்கம் விரிவடைந்து கொண்டு வந்தது. அகராதி வேலையில் எண்ணிறந்த இடர்ப்பாடுகள் இருந்தன. தமிழ் நூல்களிற் பெரும்பாலன, பிரதிகளை நன்கு பரிசோதித்து வெளியிடப் பெற்றன அல்ல. ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் சாமிநாதையர் முதலிய ஒரு சிலரது பதிப்புக்களே கொள்ளத் தக்கனவாயிருந்தன. ஐயருங்கூட ஒருசில இடங்களைத் தவறாக உணர்ந்து புதுச் சொற்களைச் சிருஷ்டித்து விட்டனர். உதாரணமாக, சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் (26) 'பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்' என்று தவறாக வாசித்துக் கொண்டு 'ஆரிக்கும்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று பொருளெழுதி விட்டனர். இவர்கள் எழுதியதனை நம்பி, லெக்ஸிகனும் 'ஆரித்தல்' என்று ஒரு சொல்லைக் கொடுத்து 'ஒலித்தல்' என்று பொருள் கொடுத்துவிட்டது. எனவே 'ஆரித்தல்' என லெக்ஸிகனில் காணும் பதம் தவறானதாகும். இவ்வகைப் போலிச் சொற்களை 'கோஸ்ட் வேர்ட்' (ghost word) என்று ஆங்கிலத்தில் கூறுவர். உண்மையான பாடம் 'ஆரிரக்கும்' என்பது. இதன் பொருள் (சோழர்க்குரிய) ஆத்தி (மாலை)யை இரக்கும் என்பதாகும். ஐயர் பதிப்பிற்கூட இவ்வகைப் பிழை காணப்படுமாயின், பிறரது பதிப்புக்களைப் பற்றி யாது சொல்லக் கிடக்கிறது? எனவே, ஒரு சொல்லைக் கொடுப்பதன்முன், அதன் உண்மை வடிவத்தையும் உண்மைப் பொருளையும் ஆராயவேண்டிய

அவசியமிருந்தது. ஆனால், மேற்காட்டியது போன்ற பிழைகள் மிகச் சிலவே உள்ளன. தமிழிலுள்ள நிகண்டுகள் இன்று காறும் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெறவில்லை. நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டு ஒன்றினைத்தான் ஒருவாறு ஒப்புக்கொள்ள முடியும். திவாகரம், பிங்கலத்தை முதலிய நிகண்டுகளின் பதிப்புக்கள் பிழைகள் மலிந்திருந்தன. இப்பிழைகள் அகராதியிலும் எளிதில் ஏறிவிடுமல்லவா? உதாரணமாக, 'மேடு' என்ற பொருளில் 'குப்பல்' என்றொரு சொல் திவாகரத்தின் அச்சுப் பிரதியில் உள்ளது. ஏட்டுப் பிரதிகளில் 'குப்பை' என்றே உள்ளது. இதுவே சரியான சொல்லாயிருக்கவும் 'குப்பல்' என்பதும் அகராதியிற் கொடுக்கப்பட்டுள்ளது.

சொற்கள் இங்ஙனமாக, சொற்களின் உற்பத்தி குறித்தும் பிழைபோதல் எளிதாம். உதாரணமாக, 'கழகம்' என்பதற்கு மலையாளச் சொல்லைக் காட்டியிருக்கிறது. அதற்குரியது 'க்ளஹ்' என்ற வட சொல்லென்பது பாணினீயத்தால் விளங்கும். இங்ஙனமே, 'கல்லூரி' என்பது கல்லூரிகா என்ற வடசொல்லென்பது மயமதம் முதலிய சிற்பநூலால் தெரியவருகின்றது. இவ் வடமொழியுற்பத்தியும் காட்டப் பெறவில்லை. ஆங்கிலப் பொருள் தமிழப் பொருள்களைத் தருவதிலும் மிகக் கவனத்துடன் இருக்கவேண்டும். பிரயோகங்களையும் சொற்பொருள் நியதிகளையும் நன்கு உணர்ந்தாலன்றி இவற்றைத் தரமுடியாது. பிரயோகங்களைக் கொடுப்பதிலும் கூடியவரை காலத்தால் முற்பட்ட பிரயோகங்களையே காட்டுதல் வேண்டும். இவற்றின் ஆகரங்களையும் தெளிவாய்த் தக்க நியதியை மேற்கொண்டு தருதல் வேண்டும்.

இங்ஙனமாக, சொல்லினையும் பொருளினையும்பற்றிப் பலவகையிலும் நன்கு பரிசோதனை செய்தே அகராதி அமைத்தல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் எவ்வளவு திருத்தமாக அகராதியை இயற்ற முடியுமோ அவ்வளவும் செய்து வந்தோம்.

5. அகராதி - அனுபவங்கள்

அவகாசங் கிடைக்கும்போதெல்லாம் இலக்கிய - இலக்கண ஆராய்ச்சியிலும், சொல்லாராய்ச்சியிலும் மிகவும் ஈடுபட்டிருந்த எனக்கு, இவ்வகை ஆராய்ச்சிகளே எனது வாழ்க்கைத் துறையாக அமைந்துவிட்டதை எண்ணுந்தோறும் அடங்காத பெருமகிழ்ச்சி உண்டாயிற்று.

இருமொழி அகராதி

தமிழ்-லெக்ஸிகன் இருமொழி அகராதி; எனவே, தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் பொருள் கொடுக்கப்பட்டிருக்கும். 1862-ல் வெளிவந்த உவின்ஸ்லோ அகராதியைக் கூடியவரை பூர்த்தியாக்கி, தற்கால அவசியத்திற்கு ஏற்றவாறு பதிப்பிடுதலே தொடக்கத்தில் நோக்கமாயிருந்தது. பூர்த்தியாக்குதற்கு இந்த அகராதியை ரெவ. ஜி.யூ. போப், பக்கம்தோறும் வெற்றுக் கடுதாசிகளை வைத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறித்து வைத்திருந்த நான்கு வால்யூம்களாகப் பைண்ட் செய்த அகராதிப் புத்தகத்தையே பெற்று உபயோகிக்க முதலில் எண்ணினர். இதனோடு 1841-ல் பூர்த்தியாக்கப்பட்ட ராட்லர் அகராதியும், 1779-ல் தோன்றிய பெப்ரீஸியஸ் (Fabricius) அகராதியும் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், போப்பின் குறிப்புக்கள் சிறிதளவே பயன்பட்டன. லெக்ஸிகன் வேலையைப் பார்க்கும் பொருட்டு வந்த சென்னை கவர்னர் முதலினோர்க்குக் காட்டும் காட்சிப் புத்தகமாகவே இது பெரும்பாலும் பயன்பட்டது.

சொற்கள் பற்றிய அளவில் பெருங்குறை இருந்தது. பேரிலக்கியங்கள், பேரிலக்கணங்கள் முதலிய அனைத்தும் உவின்ஸ்லோவின் காலத்திற்கு மிகமிகப் பிற்பட்டுத்தான் பதிப்பிக்கப்பட்டன. எனவே, இவற்றிலுள்ள பண்டைச் சொற்களில் பெரும்பாலன உவின்ஸ்லோ அகராதியில் இடம் பெறவில்லை. சூடாமணி நிகண்டு தவிர ஏனைய நிகண்டுகள் திருந்திய பதிப்பாக வெளிவரவுமில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பிராதேசிகச் சொற்கள் சேர்க்கப்பட்டனவேயன்றி, (இந்தியாவில்) தமிழ்நாட்டில் வழங்கிய பிராதேசிகச் சொற்கள் பெரும்பாலும் சேர்க்கப்படவில்லை. பலவேறு

தொழில் பற்றிய சொற்களும் பற்பல சாஸ்திரங்களுக்குரிய சங்கேதபதங்களும் இதிலே பெரும்பாலும் காணக் கிடையா. இவைபோன்ற குறைகளெல்லாம் நீக்கவேண்டியது அவசியமாயிருந்தது. சிலாசாசன பதங்கள் உவின்ஸ்லோவில் மருந்துக்கும் கிடையா. புத்தகங்கள், கல்வெட்டுக்கள், தொழில் பற்றிய நூல்கள் முதலிய அனைத்தையும் வாசித்துப் புதுப் பதங்களைத் தொகுக்க வேண்டியதாயிற்று. இவற்றைத் தொகுப்பதில் நானும் இராகவையங்கார் முதலிய பண்டித சிரேஷ்டர்களும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டோம். இவ்வாறு முயன்றதேயன்றி, பிரதேசவாரியாகப் பல அறிஞர்கள் கௌரவ உசாத்துணைவர்களாக (Honorary Consultants) உதவும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். இவர்களுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மிக்க சிரமமெடுத்து நாஞ்சில் நாட்டுப் பதங்களைத் தந்ததோடு சிலாசாசனப் பதங்களையும் பொருள்களையும் தெரிவித்து வந்தார்கள். இங்ஙனமே யாழ்ப்பாணம் எஸ்.ஆர். முத்துக்குமாரு முதலியாரும் பேருதவி செய்தனர்.

பதங்களைச் சேர்ப்பதில் இடர்ப்பாடு

இங்ஙனமெல்லாம் பதங்களைச் சேர்ப்பதில் ஒருசில செய்திகள் எனது நினைவில் அழுந்திக் கிடக்கின்றன. இவ்வகை முயற்சியில் சைவ சித்தாந்தப் பதங்களைச் சேர்க்கும் பொழுது குய்ய தராட்டக புவனம் முதலிய முந்நூற்றுச் சொச்சம் புவனங்களும் வரிசையாகக் கார்டுகளில் எழுதப்பெற்றன. இவற்றை நான் பார்த்ததும் திடுக்குற்றேன். ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் சமயத்தினர்க்கெனக் கற்பித்துக் கொண்ட புவனங்களைச் சேர்ப்பதானால், இப் புவனங்ளுக்கே 5 அல்லது 6 அகராதிகள் தேவையாகும். இவற்றை நுட்பமாய் விளக்குதலும் அரிய செயல், பயனும் சிறிதளவும் இல்லை. இராமலிங்க சுவாமிகள் உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன் என்பதில் 'உலகெலாம்' என்பதனை விளக்கப் புகுந்து காரண காரிய தூல சூக்குமவுலகு, காரிய காரண தூல சூக்கும வுலகு என்பன முதலாக எழுதிச் சென்று ராயல் வடிவு (Royal size) 42 பக்கங்களில் மிகவும் சிறிய எழுத்தில் உலகங்களை விவரித்துள்ளனர். இந்தக் கற்பிதங்களுக்குத் தமிழ் லெக்ஸிகனில் இடமில்லை எனக் கூறி நிறுத்தினேன். ஆனால், ஏற்கனவே சில புவனங்கள் லெக்ஸிகன் ஆட்சிக்குள் அமைந்துவிட்டன.

பதிப்பாசிரியரேயன்றி, நூலாசிரியர்களே சொல் வடிவங்களைத் தவறாக உணர்ந்து தவறான சொற்களைத் தந்ததும் உண்டு. 'தாசேரகம்' என்ற வடசொல்லுக்கு ஒட்டகம் என்று பொருள். இச்சொல்லை, 'தாசோகம்' என ஒரு சில நிகண்டாசிரியர்கள் வாசித்துவிட்டனர். 'தேனீ' என்று பொருள் படுவதாகச் சூடாமணி நிகண்டு கூறும் 'சாகம்' என்பதும் இவ்வகையில் அடங்கும்.

லெக்ஸிகன் அலுவலகத்திலேயே எழுத்துக்கள் செவ்வையாய் அமையப் பெறாமையால் நேர்ந்த பிழைகளும் உண்டு. நான் பதிப்பாசிரியனாகப் பொறுப்பேற்றுச் சில வாரங்களே ஆயிருந்தன. ஒருநாள் 'கள்ளாணி' என்ற ஒரு தொடரை திருத்தத்திற்கு வந்த அகராதி அச்சுத்தாளில் கண்டேன். இப்படி ஒரு தொடர் நான் கேள்விப்பட்டதில்லை. என்னை அடுத்திருந்த பண்டிதர்களுக்கும் விளங்காப் புதிராகவே இருந்தது. அதற்கு எழுதியிருக்கும் பொருளை வைத்துக் கொண்டு, 'சுள்ளாணி' என்று இப்பதம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். பின்னர் இதுவே திருத்தம் என்பது இத்தொடரின் ஆகரத்திலிருந்து தெரிந்து, இதனைச் சுள்ளாணி என்று திருத்தி உரிய இடத்தில் சேர்க்கச் செய்தேன். ஏற்கனவே இத்தொடர் அங்கிருந்ததைக் கவனிக்கவில்லை. பின்னர் இதனை அச்சிடுங் காலத்தில், இருமுறை இது காணப்பட்டது. 'சுழியாணியின்' மருஉ எனக் கொண்டனர். ஆனால், பொருளை மாற்றவில்லை. இப்பிழையெல்லாம் 'சு' என்ற எழுத்தைக் 'க' என்று எழுதி விட்டதால் நேர்ந்ததாகும். இங்ஙனமே 'உச்சிவேர்' என்ற ஒரு தொடர் புகுந்து விட்டது; இது 'ஊசி வேர்' என்பதனைத் தவறாக வாசித்துக் கொண்ட பதமாம்.

சொற்களைப் பற்றிய புகார்

சொற்களைப் பற்றிப் பெரும்புகார் வந்து கொண்டிருந்தது. இயன்றவரை இக்குறையைத் தவிர்க்க முயன்று வந்தோம். உவின்ஸ்லோவில் 6755 சொற்கள் உள்ளன. இதில் 1,10,000 சொற்கள். இப் பேரகராதியைத் தொகுத்தற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களின் விவரப்பட்டிகையை நோக்கினால், முயற்சியின் அளவு தெற்றெனப் புலப்படும். ஆனால், ஒருவரும் முற்றுணர்ந்தவரில்லை. நூதன ஆங்கிலப் பேரகராதிக்கு ஆங்கிலவுலகு முழுதும் மனமுவந்து 3,4 தலைமுறைகளாக உதவி வந்தது. இதனை ஞாபகத்தில் வைத்தல் அவசியம். குறைகூறுவோருள் ஒரு சிலர்

தமிழ் வாசனையே இல்லாதவர். ஒருமுறை 'பின்னை' (மரம்) என்ற சொல் உங்கள் அகராதியில் இல்லையே என்று ஒருவர் கூறினார். உடனே 'பின்னை' என்பது சரியான வடிவம் அல்ல; 'புன்னை' என்பதுதான் அச்சொல் என்று கூறி அதனை அகராதியில் எடுத்துக் காட்டினேன். இம்முயற்சி எவ்வளதூரம் நிறைவேறியுள்ளது என்பது என் முன்னுரையின் பின் வைக்கப்பட்டுள்ள அனுபந்தத்தால் அறியலாம். இதில் 'தாரம்' 'வரி' என்ற சொற்களை உதாரணமாக எடுத்துக் காலக்கிரமப்படி நிகண்டுகள், அகராதிகள் முதலியவற்றில் இவற்றிற்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருள்களை முறையே காட்டி, லெக்ஸிகனில் அவற்றின் பொருள்கள் மிகமிக விரிந்துள்ளமை உணர்த்தப்படுகிறது.

ஒருசிலர்க்கு அகராதியைப் பயன்படுத்தவே தெரியவில்லை; இதில் கையாண்டுள்ள முறையைத் தெரிந்து கொள்ளாது இடர்ப்பட்டவர்கள் உண்டு.

'வடசொற்கள்தான் மிகுதியாய்க் காணப்படுகின்றன; தமிழ்ச் சொற்கள் குறைவாகவே உள்ளன' என்று வேறொரு கூக்குரல். ஆங்கிலத்தில் லத்தீன், கிரீக் முதலிய அன்னிய மொழிச் சொற்கள் பாதிக்குமேலுள்ளன. எஞ்சியவற்றிலும் கணிக்கத்தக்க ஒரு பகுதி லத்தீன் முதலியவற்றின் அடியாகப் பிறந்தவை. மேலும் மேலும் சிறந்து விளங்கும் மொழிகளில் இந்த இயல்பு காணக்கூடியதே. இதனைக் குறையாகக் கருதுவார் யாருமில்லை. நமது தாய்மொழி தனித்தியங்கக் கூடியது என்ற உணர்ச்சி தவறான அபிமானத்தால் தோன்றி நம்மிற் பலரையும் கூத்தாட வைக்கிறது. ஆங்கிலத்தில் 'Avoid Latin derivatives; use brief, terse, rugged Anglo-saxon mono syllables' என்று ஓராசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை கூறினாராம். இவ்வாக்கியத்தில் (Anglo-saxon)என்பது மட்டும் (Anglo-saxon) மொழி. இது போன்றதொரு கூத்து ஒரு கூட்டத்தில் நடைபெற்றது. ஒருவர் ஒருமுறை 'வடமொழிப் பதங்களை யெல்லாம் நிர்த்தாட்சண்யமாய் ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம்' என்றனர். இந்த வாக்கியத்திலிருந்தே எவ்வளவுதூரம் வடமொழியை விலக்க முடியுமென்று தெரிகிறதல்லவா?

தமிழ்-மொழியின் பூர்வ சரித்திரத்தையும், அதுவளர்ந்து வந்திருக்கிற நெறியையும் தற்காலப் போக்கையும் யாராலும் மாற்ற முடியுமா? பலமொழிச் சொற்களின் கலப்பு நமது அறிவு வளர்ச்சியையும் நாகரிகத்தையும், பண்பாட்

டையும் புலப்படுத்துவதல்லவா? இவைகளெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். தமிழ்-அகராதி செய்யவேண்டுவ தென்ன? தமிழ்மொழியில் ஆதிகாலந்தொட்டு, இன்றுவரை உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் புகுந்துள்ள எல்லாச் சொற்களையும் தந்து விளக்க வேண்டுமல்லவா? ஆனால், இவ்வாறு கூறுவதெல்லாம் செவிடர்கள் காதில் சங்கு ஊதுவதுபோலத்தான். இக்கூக்குரலை அமர்த்துவ தற்கு லெக்ஸிகன் முயன்ற முறைதான் வெகு வேடிக்கை யானது. பெப்ரீஸியஸ் (Fabricius) அகராதியில் வட சொல் முதலிய அந்நியச் சொற்கள் உடுக்குறியிட்டு (asteric) காட்டப்பட்டன. இம்முறையையே முதலில் லெக்ஸிகன் கைக்கொண்டு, வடமொழி, மூலச் சொல்லையும் கொடுத்து வந்தது. வடமொழி தமிழ்மொழி என்ற வேற்றுணர்ச்சியற்றவர்களும் எளிதில் தெரிந்து கொள்ளு மாறு இவ்வுடுக்குறி செய்துவிட்டமை பெரிய தொந்தர வாய் முடிந்தது. வடமொழி எதிர்ப்புக் கூக்குரல் ஓலமிட்டு அழத் தொடங்கியது. இதற்குப் பரிகாரமாக, லெக்ஸிகன் உடுக்குறியை எகரச் சொற்கள் முதல் ஒழித்துவிட்டது. வடமொழி என்று காட்டுதற்குரிய 'S' முதலிய குறியீ டின்றி, உற்பத்தி மட்டுமே காட்டப்பட்டது. அன்னிய மொழிகளில் எதனைக் குறிப்பதென்று இவ்வுற்பத்தி காட்ட மாட்டாதல்லவா? இதற்காக, வடமொழி யொழிந்த ஏனை மொழிகளை உணர்த்துதற்கு, அம்மொழிகளுக்குரிய குறி யீடுகள் கொடுக்கப்பட்டன. உதாரணமாக 'ஏலம்' என்ற சொல்லுக்கு ஒரு செடி வகை என்றும், கோர்ட்டு முதலிய வற்றில் நிகழும் பகிரங்கப் போட்டி விற்பனை என்றும் இரண்டு முக்கியமான பொருள்கள் உண்டு. செடி வகை யைக் குறிக்குமிடத்து 'S' என்ற அடையாளமின்றி உற் பத்தி மட்டும் தரப்பட்டிருக்கும். போட்டி விற்பனையைக் குறிக்குமிடத்து அதற்குரிய போர்த்துகீய உற்பத்தி 'Port' என்று காட்டப்பட்டிருக்கும். அடையாளம் யாதுமின்றி உற்பத்தி மட்டும் உள்ளவிடத்து, அவ்வுற்பத்திச் சொல் வடமொழிக்குரியதென்பது ஒரு ஸங்கேதம். வடமொழிப் பதங்களை லெக்ஸிகன் ஒழித்துக் கட்டிய விதம் இப்படி!

மற்றொரு புகார் கொச்சைச் சொற்களும் லெக்ஸிக னில் காண்கின்றன என்பது. இதனால் இந்த அகராதியைப் பார்ப்பவர்க்கு எந்தச் சொல் சரி என்ற உணர்ச்சி உண்டாகாதென்றும், நூல்-ஆசிரியர் முதலியவர்களுக்குப் பயன்படாமற் போய்விடுகிறதென்றும் இப்புகாரின் கருத்து.

சில உதாரணங்கள்: '-அக்கரை, ''அக்கறை என்ற இரண்டில் எது சரி? ஆத்துக்காரர் என்று எழுதலாமா? இஞ்சக்கம், இலஞ்சகம் என்ற இரண்டில் 'இஞ்சக்கம்' என்பது அறியாதார் வழங்கிவரும் கொச்சையல்லவா? இவை பற்றிய விஷயங்களில் அகராதி உதவ வேண்டாமா?' என்று கேள்விமேற் கேள்விகள் போட்டுவந்தார்கள். அகராதியின் நோக்கமாகத் தற்கால அகராதியாளர்கள் கொண்டுள்ளதை அறியாத காரணத்தால் இப் புகார் தோன்றியது. உத்தமமான அகராதியில் ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டும். அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவிநூல் என்ற கொள்கை மாறி, இந்த இயல்போடு ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும். கொச்சைச் சொல் முதலிய வற்றை நீக்குதல் கூடாது. இவற்றால் விளையும் நன்மைகள் மிகப்பல. ஒரு மொழியின் ஒலி மரபு (Phonetic system) இவற்றில் நன்றாகப் புலப்படும். ஒரு தாய்மொழியினின்றும் கிளைமொழிகள் தோன்றுதற்கு இவை காரணமாயுள்ளன. ஒருசொல் சரியா, பிழையா என்று நிர்ணயிப்பது அகராதியின் வேலையன்று. இலக்கண ஆசிரியர்களுக்கு உரிய வேலை. திருந்தியது, கொச்சை என்ற வியவகாரமே தற்காலத்தார் நீக்கிவிட்டனர். இன்ன சொல்லை வழங்கலாம் என்று அகராதி அனுமதிப்பதாகக் கொள்ளுதல் தவறாம். (Encylopaedia)வை நோக்கினால் தற்கால அகராதியாளர் கொள்கைகள் நன்கு புலப்படும். ஆகவே, 'இந்த அகராதி இலக்கிய அகராதியா? வழக்கியல் அகராதியா? மரபு அகராதியா? குறுநில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றில் கொஞ்சமா?' என்ற கேள்விகளெல்லாம் அறியாமையால் எழுந்தனவேயாம். லெக்ஸிகன் தொடக்கத்தில் பதிப்பாசிரியரா யிருந்தவரும் இந்த நோக்கத்தை அறிந்து அகராதி வேலையில் ஈடுபட்டனர் என்று சொல்வதற்கில்லை. உவின்ஸ்லோவின் அகராதியைச் செவ்விதாக்குதலே நோக்கமாகக் கொண்டவர்க்கு மேலே விவரித்த தற்கால நோக்கம் புறம்பு என்பது கூறவும் வேண்டுமா? லெக்ஸிகன் 'ஒத்தி' முதலிய ஒருசில சொற்களைக் கொச்சை (Corrupt form) என்றும், சிலவற்றை பேச்சுவழக்கு (Colloquialism) என்றும், வேறு சிலவற்றை பிராதேசிகம் (local) என்றும், இன்னும் சிலவற்றைச் சில வகுப்பினர் வழக்கு

(Brahmin usage) என்றும் இங்ஙனமாக எழுதி இவ்வகைப் புகாரைத் தணித்து வந்தது.

சில சொற்களை நீக்குதல்

லெக்ஸிகன் பதங்களைக் குறித்து ஒருவகைச் செய்திகளை மட்டும் கூறி இப்பொழுது அமைகின்றேன். 'சான்றார்' என்பதற்குக் கள்-இறக்கும் தொழிற்குரியோர் என்பது நூல்களிலும் சிலாசாசனங்களிலும் காணும் வழக்கு. இது 'சான்று' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதி, அச்சொல்லுக்குக் 'கள்' என்று பொருள்கொண்டு, (17-ம் நூற்றாண்டில்) சுமார் 325 ஆண்டுகளுக்கு முன்பிருந்த குமரகுருபர சுவாமி ஒரு செய்யுள் செய்துவிட்டார். அந்த மேற்கோளைக் காட்டி 'சான்று' என்பதற்குக் 'கள்' என லெக்ஸிகன் பொருள் கூறியிருந்தது. குறிப்பிட்ட ஒரு சாதியாரை, இப்பொருள் இழித்துக் கூறுகிறது என்று புகார் வந்தது; இது எளிதில் அடங்குவதாயில்லை. ஜாதிச்சச்சரவு இதனால் ஏற்படும் என்ற அளவுக்குக் காரியம் முற்றிவிட்டது. இறுதியில் இப்பொருள் நீக்கப்பட்டது. இங்ஙனமே, 'அக்கிரகாரம்' என்ற சொல்லுக்குப் 'பார்ப்பனச் சேரி' என லெக்ஸிகன் கொடுத்துள்ளது. இது பிராமண வகுப்பினருள்ளே ஒரு சிறு கலக்கத்தை உண்டுபண்ணிற்று. இடைச்சேரி, பட்சேரி, பறைச்சேரி, என்று சொல்லலாம்; நாற்குலங்களிலும் மேற்குலத்தவராகக் கருதப்படும் பிராமணர்கள் வாழும் இடத்தைப் 'பார்ப்பனச் சேரி' என்று சொல்லுதல் தகுதியாகுமா?- என்று வாதித்தார்கள். ஆனால், இப்பொருளை எழுதியவர் பிராமணகுலத்தினரான ஒரு வித்துவ சிகாமணி என்று தெரிந்தும், இச்சொல்லிற்கு முன்னோர் ஆட்சியுளதென்று அறிந்தும், முன்னோராட்சிக்கு அகராதியாளர் பொறுப்பாளியல்லர் என்று பகுத்துணர்ந்தும் அமைதியுற்றனர். பின்னர், 'பார்ப்பனச் சேரி' என்ற தொடரை லெக்ஸிகனில் வெளியிட்டபோதும் எவ்விதமான அமைதிக் குறைவும் ஏற்படவில்லை. இங்ஙனமே 'முதலி' என்ற ஜாதிப் பெயரைக் குறித்தும் ஒரு கலக்கம் நிகழ்ந்தது. முதலியார் என்ற மரியாதைப் பெயர் லெக்ஸிகனில் இடம் பெற வேண்டுமேயன்றி, 'முதலி' என்பதனைக் கொடுக்கக் கூடாதெனக் கிளர்ச்சி செய்தனர். ஆனால், 'முதலி' என்ற சொல் வேறு பொருள்களிலும் வந்துள்ளது. எனவே, இச்சொல்லை நீக்குதல் கூடாது. சொல் இருக்கும்பொழுது அதற்குரிய ஜாதிப்பொருளும் கொடுக்கத்தான் வேண்டும்.

பம்மல் சம்பந்த முதலியார், வி. ஆர். நமச்சிவாய முதலியார், டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் முதலிய பலரையும் கலந்தேன். லெக்ஸிகனில் முதலி என்பதன்கீழ், சாதிப் பொருளைக் கொடாமல், 'முதலியார் என்பதன் கீழ்க் காண்க' என்று கொடுத்துவிட்டு, பிந்திய இடத்தில் பொருளைத் 'தந்துள்ளேன். இவை போன்றவற்றால் எனக்கு நேர்ந்த தொந்தரவுகள் மிகப் பல.

ஜாதிப் பெயர்களோடு நில்லாமல் இடப் பெயர்களிலும் இவ்வகை அல்லற்பாடு நேர்ந்தது. 'கும்பகோணம்' என்பதற்குப் 'பித்தலாட்டம்' என்ற பொருள் சென்னை முதலிய பிரதேசங்களில் வழக்கிலுள்ளது. இப்பொருள் 'உவின்ஸ்லோ'விலும் காணப்படுகிறது. லெக்ஸிகனில் இப்பொருள் கொடுக்கப்பட்டபொழுது, பெருந் தொந்தரவு ஏற்பட்டது. 'Grretna Green' என்ற ஊரைப் பற்றி இவ்வகையான அபவாதம் இருந்தது என்ற உதாரணங்களையெல்லாம் எடுத்துக் காட்டினேன். ஒன்றும் பயன்பெறவில்லை. இறுதியில் அப்பொருளை நீக்கிவிடும்படி நேர்ந்தது. இப்படியே 'தென்காசி யுபசாரம்' என்ற தொடர் பற்றியும் அவ்வூர் நண்பர் ஒருவர் 'நீங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் வேளாளமரபிலே பிறந்தும் இத்தொடரை லெக்ஸிகனில் புகுத்திவிட்டீர்களே' என்று என்னிடம் முறையிட்டார்.

லெக்ஸிகன் பதிப்பாசிரியர் வேலையில் இரவும் பகலுமாய் உழைத்து வந்தேன். சென்னைப் பல்கலைக் கழகமும் திருப்தியடைந்தது. இடையிடையே மேற்குறித்தன போன்ற நகைச்சுவை-அனுபவம் இல்லாமற் போனால் பதிப்பாளர் வாழ்வு சிறிது சுவை குன்றித்தான் இருக்கும். பதங்களில் மட்டுமேயன்றி, ஆங்கில உச்சாரணம், சொல் வியுற்பத்தி, ஆங்கிலத்தில் பொருள், தமிழிற் பொருள், பிரயோகங்கள் முதலிய அனைத்திலும் சுவை நிரம்பிய பல செய்திகள் உள்ளன.